
# திருவாசகம் சில சிந்தனைகள்

(குலாப்பத்து – அச்சோப்பதிகம்)

பாகம் 5



பேராசிரியர்

அ.ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# திருவாசகம்

## சில சிந்தனைகள்

{குலாப் பத்து—அச்சோப் பதிகம்}

(5)

(நிறைவுப்பகுதி)

பேராசிரியர்

அ. ச. ஞானசம்பந்தன்

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை — 600 017.

முதற் பதிப்பு : மார்ச், 2001
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி, 2007

உரிமை : ஆசிரியருக்கு

**விலை : ரூ.110.00**

| | | |
|---|---|---|
| TITLE | : | **THIRUVASAGAM - SILA SINTHANAIGAL - 5** |
| AUTHOR | : | **Prof. A.S. GNANASAMBANDAN** |
| LANGUAGE | : | TAMIL |
| EDITION | : | Second Edition, February, 2007 |
| NO. OF PAGES | : | viii + 456 = 464 |
| PUBLICATION | : | **GANGAI PUTHAKA NILAYAM**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>CHENNAI - 600 017.<br>Phone : 24342810 / 24310769 |
| PRICE | : | **Rs.110.00** |

---

*Laser Typeset at :* Sivasakthi Laser Prints, Chennai-600 041.
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

# படையல்

என்னைவிடப் பல்லாண்டுகள் மூத்தவர்களாயினும்,
1932ஆம் ஆண்டு முதல் என்னோடு நெருங்கிப் பழகி,
என்னை மகனாகவே பாவித்து,
தேவை ஏற்பட்டபோதெல்லாம்
என் வாழ்க்கையைத் திசை திருப்பியவர்கள் இருவர்.

மனத்திற்பட்டதை
மேடையில் அஞ்சாமல் கூற ஊக்கம் தந்தவரும்,
திருவாசகத்திற்கு என்போக்கில் உரைகாணவேண்டும்
என்று என்னைத் தூண்டியவரும்

தமிழ்த் தென்றல்
**திரு. வி. கலியாணசுந்தரனார்**
அவர்களே ஆவார்.

ஆன்மீகத் துறையில் என்னை உந்திச் செலுத்தி, தம்
பூத உடலை நீத்த பிறகும், இன்றும் அத்
துறையில் என்னை வழிநடத்திச் செல்பவர்

பல்கலைச் செல்வர்
**டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்**
அவர்களே ஆவார்.

இந்த இரு மகான்களுக்கும் மிக்க பணிவன்புடன்
இந் நூலைப் **படையல்** செய்து
அவர்களின் ஆசியை வேண்டி இறைஞ்சுகின்றேன்

**அ. ச. ஞானசம்பந்தன்**

# முன்னுரை

1950ஆம் ஆண்டில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள், திருவாசகத்தை விஞ்ஞானக் கண்கொண்டு பார்த்து நான் ஓர் உரை காணவேண்டுமென்று பலமுறை தூண்டினார்கள். அத்தோடு நில்லாமல் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் என்னைப்பற்றி எழுதிய பகுதியிலும் இக் கருத்தை வெளியிட்டிருந்தார்கள். ஏனைய பக்தி நூல்களினின்றும் 'திருவாசகம்' மாறுபட்டது. இந்நூல் ஓர் இறையன்பரின் 'அனுபவப் பிழிவு' என்ற கருத்தைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருந்தேன். வாலாயமாகக் கூறும் பதவுரை, பொழிப்புரை முதலியன இந்நூலுக்கு ஏற்றதல்ல என்ற கருத்தும் என் மனத்தில் வலுவாக இடம் பெற்றிருந்தது. அன்றியும், திருவாசகத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் ஓர் அச்சஉணர்வு தோன்றியமையால் இம்முயற்சியில் அப்போது ஈடுபடவில்லை.

தமிழ்த் தென்றல் அவர்கள் கூறி நாற்பத்தொன்பது ஆண்டுகள் கழித்து திடீரென்று சில எண்ணங்கள் மனத்தில் தோன்றலாயின. இந்த எண்ணங்களும், அவற்றைத் தோற்று விக்கும் திருவாசக அடிகளும் அடிக்கடி படம்போல் மனத்தில் தோன்றி மறைந்தன. திருவாசக அடிகள் இந்த எண்ணங்களைத் தோற்றுவித்தன என்பது உண்மைதான். ஆனால் அச்சொற்கள், அவை குறிக்கும் பொருள்கள் என்பவை நேரடியாக இவ் எண்ணங்களைத் தோற்றுவிக்க வில்லை. அதன் மறுதலையாக, அச்சொற்கள் குறிப்புப் பொருளாக (suggestion) இவ் எண்ணங்களைத் தோற்று வித்தன. அவ் எண்ணங்களுக்குக் கோவையாக ஒரு வடிவு கொடுக்கும் ஆற்றல் என்பாலில்லை. எனவே, சில அடிகளைப் படித்தவுடன் அத் தொடர்கள் என் மனத்தில் என்ன எண்ணங்களைத் தோற்றுவித்தனவோ அவற்றை

அப்படியே கூறியுள்ளேன். இவ்வாறு சொல்வதற்குத் தொல்காப்பியத்தில் வரும் 'இறைச்சி' என்ற சொல் வலிவு தந்தது.

அனுபவத்திற்கு வடிவு கொடுக்கும் திருவாசகப் பாடல்கள் ஒரு கோவையாக, ஒரு வரன்முறைக்கு உட்பட்டு வருமென்று சொல்வதற்கில்லை. கோவையும், வரன் முறையும் வேண்டுமானால், அங்கே அறிவு தொழிற்பட வேண்டும். அறிவு தொழிற்படத் தொடங்கினால், உணர்வு குறையத் தொடங்கிவிடும்.

இக்கருத்துக்களை மனத்தில் கொண்டு ஒரு அடியையோ, சில அடிகளையோ அவ்வப்பொழுது படிக்கச் சொல்லிக் கேட்கும்போது என்ன சிந்தனைகள் மனத்தில் தோன்றினவோ அவையே இங்கு இடம் பெற்றுள்ளன. இச்சிந்தனைகள் என்னுடைய அறிவின் துணைகொண்டோ, அறுபது வருட இலக்கியப் பயிற்சியின் விளைவாகவோ தோன்றியவை அல்ல.

யாழ்ப்பாணம் திரு. ச. மார்க்கண்டு அவர்கள் இரண்டு அடிகளையோ, நான்கு அடிகளையோ படித்துக் காட்டிய உடன் அந்த விநாடி என் மனத்தில் தோன்றிய சிந்தனைகளே இங்கு இடம்பெற்றுள்ளன. அதனாற்றான், திருவாசகம் – சில சிந்தனைகள் என்று இந் நூலுக்குப் பெயரிடப்பெற்றுள்ளது.

மணிவாசகரின் அருள் துணைகொண்டு 'திருவாசகம்-சில சிந்தனைகள்' பகுதி-1. பகுதி-2. பகுதி-3, பகுதி-4 என்பன முன்னரே வெளிவந்துள்ளன. இப்பொழுது நிறைவுப் பகுதி வெளி வருகிறது.

குலாப் பத்து முதல் அச்சோப் பதிகம் வரையான திருவாசகப் பாடல்கள் இந்த நிறைவுப் பகுதியில் இடம் பெறுகின்றன. வழக்கம்போல பின்னுரை நூலுடன் இணைந்துள்ளது. நூல் முழுவதற்கும் ஆன முடிவுரை இறுதிப்பகுதியாகச் சேர்க்கப்பெற்றுள்ளது.

இந்த நிறைவுப் பகுதியை என் வாய்மொழி மூலம் கேட்டு எழுதியவர்கள் யாழ்ப்பாணம் திரு. ச. மார்க்கண்டு அவர்களும், இந்திய இரயில்வேயில் மின்னியல் தலைமைப் பொறியாளராக இருந்து ஓய்வுபெற்ற திரு. C. P. கௌரிசங்கர், அவர்களும் ஆவர். எழுதி முடித்த பின்னர் ஒவ்வொரு வரியாகப் பார்த்து தடை விடைகளை எழுப்பி ஒரு முழுவடிவம் பெறுமாறு செய்ததுடன், படிகளைத் திருத்தும் பணியையும் மேற்கொண்டவர்கள் இதய மருத்துவ நிபுணர் டாக்டர். ந. சிவராசன், முனைவர் ம. ரா. போ. குருசாமி (கோவை), பொறியாளர் C. P. கௌரிசங்கர், திரு. ச. மார்க்கண்டு என்போர் ஆவர். முனைவர் இந்திராணி மணியம் அவர்களும் படிதிருத்தும் பணியில் பங்கேற்றார். இவர்கள் அனைவருக்கும் மணிவாசகப் பெருமான் இன்னருளைப் பொழிந்து வாழ்த்துமாறு அப்பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இந்த நூலுக்குச் 'சிவனடிக்கீழ் செல்லும் மணிவாசகரை' சிறந்த முறையில் ஓவியமாகத் தீட்டியுள்ளார் திரு. பத்மவாசன் அவர்கள். தெய்வப் படங்கள் தீட்டுவதில் ஈடிணையற்று விளங்கும் ஓவியர் திரு. பத்மவாசனுக்கு மணிவாசகப் பெருமான் திருவருள் பொழிவதாக என அப்பெருமானின் திருவடிகளை இறைஞ்சுகிறேன்.

வழக்கம்போல இதனை நன்முறையில் அச்சுக்கோத்துத் தந்த 'சிவசக்தி ..ணினி அச்சுக்கோப்பாளர்'களுக்கும் மணிவாசகரின் இன்னருள் பாலிப்பதாக.

சிறப்பாக நூலை வெளியிட்ட 'கங்கை புத்தக நிலைய' உரிமையாளர் திரு. திருநாவு. இராமநாதன் அவர்களுக்கும் மணிவாசகரின் நல்லருள் கிட்டுவதாக.

சென்னை–83 **அ. ச. ஞானசம்பந்தன்**
**மார்ச்**, 2001

# பொருளடக்கம்


1. குலாப் பத்து - சில சிந்தனைகள் 1
2. அற்புதப் பத்து - சில சிந்தனைகள் 23
3. சென்னிப் பத்து - சில சிந்தனைகள் 48
4. திருவார்த்தை - சில சிந்தனைகள் 64
5. எண்ணப் பதிகம் - சில சிந்தனைகள் 78
6. யாத்திரைப் பத்து - சில சிந்தனைகள் 87
7. திருப்படை எழுச்சி - சில சிந்தனைகள் 101
8. திருவெண்பா - சில சிந்தனைகள் 109
9. பண்டு ஆய நான்மறை - சில சிந்தனைகள் 118
10. திருப்படை ஆட்சி - சில சிந்தனைகள் 126
11. ஆனந்த மாலை - சில சிந்தனைகள் 147
12. அச்சோப் பதிகம் - சில சிந்தனைகள் 155
13. பின்னுரை 170
14. முடிவுரை 290
15. பதிக வைப்பு முறை 346
16. பாட்டு முதற் குறிப்பு 454

# 40. குலாப் பத்து

## [அனுபவம் இடையீடு படாமை]

இப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலும் 'குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே' என்று முடிவதால், குலாப் பத்து என்று பெயரிட்டனர்.

இதுவரை பல இடங்களிலும் தமக்குக் குருநாதர் அருள்செய்ததாகவும், அவர் வந்து தம்முள்ளே தங்கிவிட்டதாகவும் பாடிவந்துள்ளார் அடிகளார். இம்முறையினின்றும் மாறுபட்டு, பிகண்ட பத்துபீ அமைக்கப் பட்டிருத்தலைக் காணமுடியும். கண்ட பத்தின் ஐந்தாம் பாடல் (479) சாதி, குலம், பிறப்பு என்பவற்றில் சிக்கியிருந்த தம்மை விடுவித்ததோடு யான், எனது என்பவற்றையும் மாய்த்தான் எனப் பேசுகிறது. அத்தகைய ஒருவனைப் பல இடங்களிலும் தேடிவந்து விளக்கம் பொருந்திய (குலாவு) தில்லையில் கண்டேன் என்று கண்ட பத்தில் குறிக்கின்றார்.

காணுதல் ஆகிய செயலுக்கு அடிகளாரே கர்த்தா ஆவார். கண்ட பத்துப் பாடல்களில் காணப்படும் செய்திகள் தில்லைக்கு வருமுன்னரே நடைபெற்றுவிட்டன என்றால், அதன் பொருளென்ன? 'குருநாதர் வடிவிலிருந்து இந்த அற்புதங்களை நிகழ்த்திய ஒருவரை மறுபடியும் காணவேண்டுமென்று அலைந்துகொண்டிருந்தேன். தில்லைக் கூத்தனைக் கண்டபோது எனக்கு இத்தனை நலங்களைச் செய்த அந்தக் குருநாதரைத் தில்லையில் கண்டேன்' என்று கூறுகிறார். அதாவது, தில்லையில் இறைவன், கூத்தன் வடிவில் எழுந்தருளியிருப்பினும், அடிகளாரைப் பொறுத்தமட்டில் தமக்கு அருள்செய்த குருநாதரைத் 'தில்லையில் கண்டேன்' என்று கூறுகிறார். கண்ட பத்துப்

பதிகம் முழுவதிலும் 'கண்டேனே' என்று பாடுகிறாரே தவிர, வேறு என்ன நடந்தது என்று கூறவில்லை.

இந்த ஐயத்திற்கு விடைகூறுவதுபோன்று குலாப் பத்து அமைந்துள்ளது. இதுவும் தில்லையிலேயே பாடப்பெற்றது ஆதலானும் ஒவ்வொரு பாடலும் 'குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே' என்று முடிவதாலும், திருப் பெருந்துறையில் அடிகளாருக்கு நிகழ்ந்த பழைய அற்புதம் தில்லையிலும் நடைபெற்றது என்பதை அறியமுடிகின்றது.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கும் தில்லை நிகழ்ச்சிக்கும் இடையே ஒரு சிறு வேறுபாடு அமைந்திருத்தலைக் காணலாம். திருப்பெருந்துறைக்குச் சென்ற அடிகளார் திருப்பெருந்துறைக்குச் செல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் செல்லவில்லை. அவருடைய நோக்கம் தொண்டிக்குச் சென்று, குதிரைகளை வாங்கவேண்டும் என்பதேயாம்.

ஆனால், நடுவழியில் இவரை எதிர்பார்த்திருந்த குருநாதர், இவரைச் சிக்கெனப் பிடித்துவிட்டார். குருநாதரைக் கண்ட ஒரே விநாடியில் திருவாதவூரர் மணிவாசகராக மாறிவிட்டார். குருநாதரைக் காண வேண்டுமென்பது இவருடைய நோக்கமன்று, ஆதலால் அவரைக் கண்டதுகூட இவருடைய செயலன்று; மணிவாசகராக மாற்றப்பட்டதும் இவருடைய செயலன்று. எது எப்படியிருந்தாலும், குருநாதர் இவரைக் கண்டார்; ஒரே விநாடியில் இவரை ஆட்கொண்டு உளம்புகுந்தார். இந்த நிகழ்ச்சி நடைபெற்றுச் சில நாட்களோ மாதங்களோ ஓடிவிடுகின்றன.

உத்தரகோசமங்கை முதல், ஊரூராகத் தேடிச் சென்ற அடிகளாருக்குக் குருநாதர் எங்கும் சிக்கவில்லை. அப்படித் திரிகின்றபோது குருநாதரின் எதிரே அமர்ந்திருந்த அடியார் கூட்டம் அடிகளாரின் மனத்தைவிட்டு அகலவேயில்லை.

குருநாதர், அடியார் கூட்டம் என்ற எண்ணங்கள் மாறி மாறி அடிகளாரின் மனத்தில் தோன்றி மறைந்தன. கூத்தனைத் தரிசிக்கத்தான் தில்லைக்குச் சென்றார். அப்படிச் செல்லும்போதுகூட, திருப்பெருந்துறையில் கண்ட அடியார் கூட்ட நினைவுதான் அவருடைய மனத்தில் மேலோங்கி நின்றது. அப்பொழுது பாடப்பெற்றதுதான், கோயில் மூத்த திருப்பதிகம். அந்தப் பத்துப் பாடல்களிலும் அடியார் கூட்டத்திடை தம்மை வைக்கவேண்டுமென்றே அடிகளார் கேட்டுக்கொள்கிறார்.

அது நடவாதபோது, தில்லையில் அடிகளார் பல நாட்கள் தங்கியிருத்தல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரு நாள் கூத்தனைத் தரிசிக்கும் நிலையில், திருப்பெருந்துறை நினைவுகள் வருகின்றன. அவற்றைச் செய்தவர் குருநாதர் என்ற நினைவும் அடுத்து வருகின்றது. கூத்தனையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்த அடிகளாருக்குக் கூத்தனே குருநாதராகவும் மாறிக் காட்சி தருகிறான். அந்த நிலையில்தான் 'அணிகொள் தில்லை கண்டேனே' என்ற பகுதி பாடப்பெறுகிறது.

திருப்பெருந்துறையில் என்ன நிகழ்ந்தது? குருநாதர் இவரைக் கண்டார்; அடுத்த விநாடி இவரை ஆட் கொண்டார். அதேதான் தில்லையிலும் நடைபெறுகிறது.

'கண்டேனே' என்று கண்ட பத்தில் பாடியவர் இப் பதிகத்தில் 'குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே' என்று பாடுகிறார். அதாவது, புறத்தே நின்றவனைக் கண்களால் கண்டேன், அடுத்து அவனை என்னுள் ஆவாஹனம் செய்துகொண்டேன் என்ற கருத்தில் அமைகிறது குலாப் பத்து.

திருப்பெருந்துறையில் கண்டவரும் கொண்டவரும் குருநாதர்; தில்லையில் கண்டவரும் கொண்டவரும் அடிகளாரே ஆவார். பலர் இந்த வேற்றுமையைக்

கவனிக்காமல் இருந்திருக்கலாம். ஆழ்ந்து சிந்தித்தால் இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடு புலப்படுவதுடன் ஒரு சிறப்பான உண்மையையும் இவ்வேறுபாடுகள் தெரிவிப்பதைக் காணமுடியும்.

திருப்பெருந்துறையில் குருநாதரைச் சந்திக்கின்ற வரையில், திருவாதவூரருக்கு யாரையும் ஊடுருவிக் காணுகின்ற ஆற்றலோ, அவர் யார் என்ற உண்மையைத் தெரிந்துகொள்ளும் ஆற்றலோ இல்லை. அந்த விநாடி வரையில் அவருடைய பார்வை சராசரி மனிதர்களுடைய பார்வைதான். எதிரேயுள்ள மனிதரையோ விக்கிரகத்தையோ ஊடுருவிப் பார்த்து இந்த உருவ வடிவங்களுக்கு அப்பாலுள்ள உண்மையென்ன என்பதைத் தெரிந்துகொள்ளும் ஆற்றல் அவர்பால் அதுவரை இல்லை.

ஆண்டுகொண்டதன் மூலம் அந்த ஆற்றலைக் குருநாதர் அவருக்கு அருளினார். அந்த விநாடியிலிருந்து அடிகளாரது பார்வை முற்றிலும் மாறிவிட்டது. 'குலாவு தில்லை கண்டேனே' (479) 'அணிகொள்தில்லை கண்டேனே' (477) என்பவற்றிற்கு இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு பொருள் காண வேண்டும். அதாவது, திருவாதவூரராக இருந்தபோது தில்லைக்கூத்தனை ஐம்பொன் சிலையாகத்தான் கண்டிருப்பார்; கூத்தன் நடனத்தில் ஒரு விநாடிநேரம் நிகழ்கின்ற ஒரு பாவத்தைத் (நிலையைத்)தான் ஆனந்த தாண்டவச் சிலை காட்டி நிற்கின்றது.

குலாவுதில்லை கண்டேனே (479) என்று அடிகளார் பாடுகையில் அவர் விக்கிரகத்தைக் காணவில்லை. 'எண்தோள் வீசி நின்றாடும் பிரான்' தன்னுடைய தாண்டவத்தை நேரடியாகக் காணும் வாய்ப்பை அளித்தான்.

தேவார மூவர் முதலிகள் தில்லையில் கண்டது அடிகளார் கண்ட காட்சியைப் போன்றதேயாகும்.

கண்ட பத்தில் பேசப்பெற்றதற்கு அடுத்த நிலை குலாப் பத்தில் பேசப்பெறுகிறது. விக்கிரக வடிவைத் தாண்டி நேரிடையாகப் புறக்கண்ணால் அவனைக் காணும் வாய்ப்பைப் பெற்றதுபோல் இப்பொழுது அவனைத் தம் உள்ளத்துள் ஆவாஹனம் செய்துகொள்ளும் நிலை தோன்றிவிட்டது. ஆதலின், 'குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே' (விளங்குகின்ற தில்லையம்பதியில் ஆடிக் கொண்டிருக்கும் பெருமானை என்னை ஆட்கொண்டவனை, என் உள்ளத்துள் ஆவாஹனம் செய்துகொண்டேன்) என்ற முறையில் பாடிச் செல்கிறார். குலாப் பத்தின் தனிச்சிறப்பு இதுவேயாம்.

'அனுபவம் இடையீடுபடாமை' என்ற உட்தலைப்பு வழக்கம்போல் பொருத்தமில்லாமல் கூறப்பட்ட ஒன்றாகும். திருப்பெருந்துறையில் அடிகளார் பெற்ற அனுபவம் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்ததால்தான் திருவாசகம் வெளிவர முடிந்தது என்பதைத் தொடக்கத்திலிருந்தே வலியுறுத்தி வருகிறோம். அந்நிலையில் இப்பதிகத்தில் அனுபவ இடையீடுபற்றி எங்கும் பேசப்பெற்றதாகத் தெரியவில்லை. எனவே, இந்த உட்தலைப்பின் பொருத்தமின்மையை அறியலாம்.

**559.** **ஓடும் கவந்தியுமே உறவு என்றிட்டு உள் கசிந்து**
**தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து**
**கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்து அடியேன்**
**ஆடும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 1**

'விளங்கும் தில்லைப்பதியின்கண் எப்பொழுதும் ஆடிக் கொண்டிருக்கும் எங்கள் பெருமானை என்னுடைய உள்ளத்தில் முழுவதுமாக இருத்திக்கொண்டதால் என்ன விளைவுகள் நிகழ்ந்தன தெரியுமா?

'அமைச்சராக இருந்தபொழுது பட்டாடை உடுத்தினேன். பொற்கலத்தில் உண்டேன். இப்பொழுது அவை என்னை

விட்டு நீங்க, பிச்சையெடுக்கும் ஓடும், உடுத்துகின்ற ஒரேயொரு கோவணமும், (கவந்தியும்) ஆகிய இரண்டுமே என்னைவிட்டு நீங்காமல் உள்ளன. பட்டுடுத்தியபோது இல்லாத ஒரு புதுமை, கோவணம் அணியும் இப்பொழுது என்பால் வந்து இணைந்துவிட்டது. அது என்ன தெரியுமா? அதுதான் உள்ளம் குழைந்து கசிதல் என்பதாகும்.

'பட்டுடை உடுத்தியிருக்கின்ற காலத்தில் அதிகாரத்தை யும், வெற்றியையும் தேடிச்சென்று கொண்டிருந்தேன். கவந்தி அணிந்த காலத்தில் தேடப்படவேண்டியவை அதிகாரமோ வெற்றியோ அன்று; 'சிவன் கழலே' என்று தெளிந்தேன். அதன் பயனாக என்ன நிகழ்ந்தது தெரியுமா?

'அதிகாரத்தையும், வெற்றியையும் தேடிச்சென்ற காலத்தில் ஓயாத மன உளைச்சல், கவலை, அமைதியின்மை என்பவற்றுடன் ஒரு சிறிய அளவு மகிழ்ச்சியும் ஏற்பட்டது உண்மைதான்.

'ஆனால் இப்பொழுது தில்லைக் கூத்தனை என்னுள் ஏற்றுக்கொண்ட பிறகு என்ன நடந்தது என்பதை இதோ சொல்கிறேன். அடியேன் கூடும் (உடம்பும்) உயிரும் குமண்டையிட (கும்மாளமிட)த் தொடங்கிவிட்டன' என்கிறார்.

**560.** **துடி ஏர் இடுகு இடைத் தூ மொழியார் தோள் நசையால்**
**செடி ஏறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்**
**முடியேன் பிறவேன் எனைத் தன தாள் முயங்குவித்த**
**அடியேன் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 2**

'மகளிர்பால் வைத்த ஈடுபாட்டால் எத்தனையோ பிழைகளைச் செய்திடினும் அவைபற்றிக் கவலைப்படாமல் என்னைத் தன் திருவடிகளோடு இணைத்துக் கொண்டவனை, குலாத் தில்லை ஆண்டானை உள்ளத்துட் கொண்டேன் ஆதலின் எனக்கு இறப்புமில்லை, பிறப்புமில்லை' என்கிறார்.

**561. என்பு உள் உருக்கி இரு வினையை ஈடு அழித்துத்
துன்பம் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்பு உள்ளவற்றை முழுது அழிய உள் புகுந்த
அன்பின் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 3**

*(இரு வினையை ஈடு அழித்து - இருவினைகளின் வலிமையை அடியோடு போக்கி)*

*என் உள்ளன்பு காரணமாகக் குலாத் தில்லை நாயகனை உள்ளே ஆவாஹனம் செய்தபொழுது, அவன் என்ன செய்தான்? எலும்புகளை உள்ளே உருகுமாறு செய்தான். நல்வினை தீவினை என்ற இரண்டும் பிறவிக்கு வித்தாகலின் அவற்றை அழித்தான். பிறவி இருக்கின்ற வரையில் துன்பம் இயல்பாக உண்டு. ஆதலின் அதனையும் களைந்தான். என் வினைகளை அவன் போக்கினானேனும் நான் கொண்டிருந்த ஏனைய உலகத் தொடர்புகள் (துவந்துவம்) என்னைப் பற்றிக் கொள்ளாதபடி தூய்மை செய்தான்.*

*இதுவரையில் கூறப்பெற்றவை தம் மனம் காரணமாக ஏற்பட்ட குற்றங்களாதலின் அவற்றைப் போக்கியதோடு நில்லாமல் முன்புள்ளவற்றை முழுதும் அழித்தான் என்கிறார். அப்படியானால் என்பை உருக்குதல், இருவினை ஈடழித்தல், துன்பம் களைதல், துவந்துவங்கள் தூய்மை செய்தல் என்பவற்றை யெல்லாம் செய்தபிறகு ஒன்றும் எஞ்சியிருக்கவில்லை என்று நினைக்கின்றோம். ஆனால் அடிகளார் 'முன்புள்ளவற்றை முழுதழியச் செய்தான் என்று கூறுகிறாரே! அப்படியானால் முன்புள்ளவை என்று சொல்லப்படுவன யாவை?*

*பிறவிதோறும் தொடர்ந்து வரும் அஞ்ஞானம் என்ற ஒன்றும் இன்னும் செயல்பாட்டிற்கு வராத சஞ்சித வினை என்ற ஒன்றும் 'முன்புள்ளவற்றை' என்ற தொடரால் குறிக்கப்பெற்றன.*

'இருவினையை ஈடழித்து' என்பதிலேயே சஞ்சித வினை அடங்காதோ எனின், இந்தப் பிறவியில் அனுபவிக்கப்படும் பிராரத்துவ வினைபோன்றதன்று சஞ்சிதம். குறிப்பிட்ட காலத்தில் ஏதோ ஒரு பிறவியில் வந்து தொழிற்பட வேண்டும் என்ற நியமத்துடன் வைக்கப்பட்ட வைப்பு நிதியாகும் சஞ்சிதம். இது அவ்வளவு எளிதாகப் போக்கி விடக்கூடிய ஒன்றன்று என்பதைக் கூறவந்த திருமூலர்,

முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்

(திருமந்திரம்:2550)

என்றல்லவா கூறியுள்ளார். பின்னை வினையாகிய பிராரத்துவ, ஆகாமியங்களைப் பிசைந்து எறியக்கூடிய பேராற்றல் பெற்ற மகான்கள்கூடச் சஞ்சிதத்தை உரிய காலத்தில் மெள்ளமெள்ளத்தான் அனுபவித்துக் கழிக்கின்றனர். இந்தக் கருத்தைத்தான் 'முடிச்சை அவிழ்ப்பர்கள்' என்ற தொடரால் திருமூலர் குறிக்கின்றார்.

இந்தச் சஞ்சித வினை போக, அஞ்ஞானம் என்ற ஒன்றும் ஆன்மாவைப் பற்றிக்கொண்டு, பிறவிதோறும் தொடர்கின்றது ஆதலின் அதனையும் குருநாதர் அழித்தார் என்ற கருத்தையே 'முன்புள்ளவற்றை முழுது அழிய' என்ற தொடரால் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

இப்பாட்டில் கூறப்பெற்றவற்றுள் 'இருவினையை ஈடு அழித்து' என்பது தொடங்கி 'முழுது அழிய' என்பது வரையுள்ள செயல்கள் உள்ளே புகுந்த குலாத் தில்லை ஆண்டான் செய்த செயல்களாகும்.

இத்தனை எதிர்மறைச் செயல்களைச் செய்தான் என்றுமட்டும் கூறிவிட்டால் குலாத் தில்லை ஆண்டானின் அருள்திறத்தில் எதிர்மறைப் பகுதியைமட்டும் குறிப்பதாக ஆகிவிடும். அத்தோடுமட்டும் அவன்

விட்டுவிட்டிருப்பானேயானால், அவனால் அழிக்கப்பட்ட இவை மறுபடியும் புறப்பட்ட இடத்தில் புகுந்துவிடும். எனவே, எதிர்மறை முறையில் இவற்றைப் போக்கிய ஆண்டான் இவை மீட்டும் உள்ளே நுழையாதிருக்க, உடன்பாட்டு முகத்தாலும் ஒன்றைச் செய்தான். அதுவே என்பு உள் உருகச் செய்த செயலாகும்.

இருவினையை ஈடு அழித்தல், துன்பம் களைதல், துவந்துவங்கள் தூய்மை செய்தல், முன்பு உள்ளவற்றை முழுது அழித்தல் ஆகிய நான்கு செயல்களை எதிர்மறையாகச் செய்துவிட்டு இதற்கு இணையாக எலும்பு உள்ளுருகுதல் ஒன்றைமட்டும்தானே செய்தான்! இது போதுமா என்ற வினாத் தோன்றுமேயாயின் என்பு உருக்கி என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்றே சொல்ல நேரிடும்.

என்பு 'உருகுதல்' ஒன்று; என்பு 'உள் உருகுதல்' வேறு, இந்த இரண்டாவது நிலை ஏற்படும்போது நம் போன்றவர்கள் அறியமுடியாத ஒன்று நிகழ்ந்துவிட்டது என்பதையே அது குறிக்கும். அது என்னவென்றால். இந்த நான்கையும் செய்தவன் உள்ளே புகுந்து முழுவதுமாக ஒருவரை ஆட்கொண்டுவிட்டான் என்பதையே அது குறிக்கும்.

என்பு உள் உருகுதல் ஆகிய காரியம் நிகழவேண்டுமே யானால், இதனைச் செய்யக்கூடியவன் முன்னரே, உள்ளே புகுந்து நிறைந்துவிட்டான் என்ற காரணத்தை அறிதல் வேண்டும்.

எவ்வளவு முயன்று பற்றை நீக்கினாலும் அது இருந்த இடத்தில் மீண்டும் மீண்டும் தோன்றும். ஆதலின் இதனை அறுதியாக அழிக்கவேண்டுமானால் அது இருந்த இடத்தைத் தூய்மை செய்தல் வேண்டும். இக்காலத்தார் இதனை 'வேரோடு களைதல்' என்று கூறாமல்

'வேரொடும், வேரடி மண்ணோடும்' களைதல் வேண்டும் என்பர்.

**562.** **குறியும் நெறியும் குணமும் இலாக் குழாங்கள் தமைப்**
**பிறியும் மனத்தார் பிறிவு அரிய பெற்றியனைச்**
**செறியும் கருத்தில் உருத்து அமுது ஆம் சிவ பதத்தை**
**அறியும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 4**

முதல் இரண்டு அடிகளில் மனித மனத்தின் மிக இன்றியமையாத இயல்பு ஒன்று பேசப்பெறுகிறது. மனிதனைச் சமுதாயப் பிராணி (social animal) என்று மனவியலார் குறிப்பிடுவர். எந்த நிலையிலும் தம்மையொத்த மனிதர்களோடு கூடியிருத்தலையே ஒவ்வொரு மனிதனும் விரும்புவான். குழந்தைகள்கூடத் தம்மையொத்த குழந்தைகளோடு கூடியிருந்து விளையாடுவதையே பெரிதும் விரும்புகின்றன. அதிக வயதுடையவர்களும் தம்மை ஒத்தவர்களுடன் கூடியிருந்து கதைப்பதையே பெரிதும் விரும்புகின்றனர். சிறைத்தண்டனையில் தனியாக ஓர் அறைக்குள் அடைத்து வைக்கப்படும் தண்டனை மிகக் கொடியது என்று கூறுவர்.

தம்மை ஒத்தவர்களோடு கூடியிருப்பதுதான் மனிதனின் வேட்கையென்றால், எத்தகைய பண்புடையவர்களுடன் கூடியிருக்கவேண்டும் என்ற வினாத் தோன்றுமன்றே! இதனை நன்கு உணர்ந்த அடிகளார் ஒரு வகைப்பட்ட கூட்டத்தாரை மிக விரிவாகப் பேசுகிறார். அவர்கள் யார்?

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள், கடைப்பிடிக்க வேண்டிய தூய்மையான வழி, முக்குணங்களுள் ஒன்றாகிய சத்துவகுணம் ஆகிய இவற்றுள், எதுவும் இல்லாத மக்கள் கூட்டம் உண்டு. இத்தகைய கூட்டத்தார் இறைவன் தம்முள் இருப்பதை உணர்வதில்லை. இக்கூட்டத்திலிருந்து பிரிந்து இவற்றின் மறுதலையான பண்பாடுகளோடு வாழும்

கூட்டத்தாரும் உண்டு. இறைவன் முதலில் சொன்ன கூட்டத்தாரிடம் நெருங்குவதுமில்லை; இரண்டாவது கூட்டத்தாரிடமிருந்து பிரிந்துபோவதுமில்லை. அதனையே அடிகளார் ‘குறியும் நெறியும் குணமும் இலாக் குழாங்கள்தமைப் பிறியும் மனத்தார் பிறிவரிய பெற்றியனை’ என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்துள்ளது ‘செறியும் கருத்தில் உருத்து’ என்பதாகும். உருத்து என்பது வெளிப்பட்டுத் தோன்றுதல் என்ற பொருளைத் தரும். செறிகின்ற கருத்தில் வெளிப் பட்டுத் தோன்றுகிறான் என்றால், அதன் பொருளென்ன?

எண்ணத்தையும் தாண்டி அப்பால் மிக நுண்மையாக இருக்கின்ற இயல்புடையது கருத்து. ஆனால், மனத்தைப் போலவே இந்தக் கருத்துக்கும் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. எந்த ஒன்றிலும் ஒரு விநாடிகூட நிலைபெறாமல் குரங்குபோல் தாவித் திரியும் இயல்புடையது மனம். அதனை ஒட்டியிருக்கின்ற கருத்தும் இதே குணத்தைப் பெற்றுள்ளது. சிதறிச் செல்லும் இயல்புடைய இந்தக் ‘கருத்து’ ஒருமுகப்பட்டுச் செறிந்து தொழிற்படுமேயானால், மிகப் பெரிய செயல்களையும் சாதிக்கவல்லது.

தாவிச் செல்லும் இக்கருத்தை ஒருமுகப்படுத்தினால், அந்த ஒருமித்த நிலையில், இறைவன் வடிவுகொண்டு (உருத்து) தோன்றுவான்.

இதுவரை தாவிக்கொண்டிருந்த கருத்து தாவுதலை நிறுத்திச் செறியத் தொடங்கியது. அந்தச் செறிவு காரணமாக அதனுள் உருப் பெற்றுத் தோன்றுகிறான் இறைவன். அது எப்படித் தெரியும்? கருத்தே நுண்மையானது. அதில் தோன்றும் இறைவன் அதைவிட நுண்மையானவன். நுண்மையில் தோன்றும் நுண்மையாம் இறைவன், கருத்தில் உருப்பெற்றான் என்பதைக் கண், காது, முதலிய பொறிகளால் அறியவோ சுவைக்கவோ முடியாது.

அப்படியானால் உருப் பெற்றான் என்பதை எவ்வாறு அறிவது? அதற்கு விடையாக அடிகளார் ‘அமுதாம் சிவபதத்தை’ என்று கூறுகிறார்.

அமுதத்தை உண்டதுபோன்ற ஒரு நிறைவும், அமைதியும் ஆனந்தமும் ஒருங்கே தோன்றுகின்றன. இவற்றை நாம் அனுபவிக்க முடியும். இந்த அனுபவம் ஏற்படும்போது உள்ளே இறைவன் புகுந்துவிட்டான் என்பதை அனுமானத்தால் அறியமுடியும். அதைக் குறிக்கவே ‘அமுதாம் சிவபதம்’ என்கிறார் அடிகளார்.

**563.** **பேரும் குணமும் பிணிப்பு உறும் இப் பிறவிதனைத்**
**தூரும் பரிசு துரிசு அறுத்துத் தொண்டர் எல்லாம்**
**சேரும் வகையால் சிவன் கருணைத் தேன் பருகி**
**ஆரும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 5**

உடம்பை எடுக்காத உயிர்கள் தனியே ஒரு பெயரைப் பெறுவதில்லை. அதேபோன்று உயிரோடு இருக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட பெயருடன் விளங்கும் இந்த உடம்பு அவ்வுயிர் போனவுடன் இந்தப் பெயரையும் இழந்து, பிணம் என்ற பொதுப்பெயரைப் பெறுகிறது. அதேபோன்று உடம்பில்லாமல் உயிர்கள் தனியே இருக்கும்பொழுது முக்குண வசப்படுதல் இல்லை. உயிரற்ற உடம்பும் முக்குண வசப்படுதல் இல்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட பேரும் முக்குண வசப்படும் இயல்பும் ஒரு பிறவியை எடுத்த பின்னரே உண்டாகின்றன. அப்பிறவி போய்விட்டால் பேரும் குணமும் உடன் மறைந்து விடுகின்றன. இதனைக் கூறவந்த அடிகளார் ‘பேரும் குணமும் பிணிப்பு உறும் இப்பிறவி’ என்று கூறுகின்றார்.

இப்பிறவி ஒரு பள்ளமாகும். பள்ளம் என்று இதனை உருவகிக்க ஒரு முக்கியமான காரணமுண்டு. பள்ளத்தில் வீழ்ந்துவிட்ட ஒன்றுக்குத் தானே கரையேறும் வாய்ப்பு ஏறத்தாழ இல்லையென்றே சொல்லலாம். இப்பள்ளத்தில்

விழுந்து அதன் பயனாகப் பல குற்றங்களையும் (துரிசு) செய்யும் இந்த ஆன்மாவைக் கரையேற்றுவதுடன் மறுபடியும் அப்பள்ளத்தில் வீழ்ந்துவிடாமல் இருக்கப் பள்ளத்தையே தூர்த்துவிடுகிறான் என்ற கருத்தையே 'இப்பிறவிதனைத் தூரும் பரிசு' என்கிறார் அடிகளார்.

பிறவிப் பள்ளத்திலிருந்து எடுக்கப்பெற்ற ஆன்மா 'சிவன் கருணைத் தேன்' பருகுகிறது. தேனைப் பருகியவுடன் முழுநிறைவு பெறுகிறது. அப்படி முழுநிறைவு பெற்ற அடியார் கூட்டம் நிறைந்துள்ள குலாத் தில்லை என்றவாறு.

**564. கொம்பில் அரும்பு ஆய் குவி மலர் ஆய்க் காய் ஆகி**
**வம்பு பழுத்து உடலம் மாண்டு இங்ஙன் போகாமே**
**நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும்**
**அம் பொன் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 6**

இப்பாடலின் முதலிரண்டு அடிகளில் ஓர் உயிர் பிறப்பெடுத்து, வளர்ந்து இறுதியாக உடம்பு பயனின்றிக் கழன்று அழியும் நிலை உருவகமாகப் பேசப்பெறுகிறது.

'கொம்பில் அரும்பு' என்றும் 'குவிமலர்' என்றும் கூறியது குழந்தைப் பருவத்திலும், இளமையிலும் அழகுடன் விளங்குவதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

அடுத்து உள்ளது 'காய்' நிலை. எந்த ஒரு காயும் இன்சுவையில்லாமல், புளிப்பு, கசப்பு முதலிய சுவைகளைப் பெற்றிருப்பதுபோல் இளமைக்கும், முதுமைக்கும் இடைப்பட்ட பருவம் பிறருக்குப் பயன்படாத பருவமாய்க் கழிதலை உணர்த்துகின்றது.

அடுத்துள்ள 'வம்பு பழுத்து உடலம் மாண்டு' என்ற தொடர் பலருடைய .முதுமைப்பருவம் எவ்வித நற்பயனையும் விளையாமல், எட்டிக்காய் பழுத்ததுபோல் பயனின்றிப் பழுத்து மாள்கிறது என்பதைக் குறிக்கிறது.

மேலே கூறப்பெற்ற முறையில் தம்முடைய வாழ்க்கை வீணே பிறந்து வளர்ந்து மாளாமல் செய்தான் என்று கூறவந்த அடிகளார், மாளாமல் இருப்பதற்குரிய புதிய காரணம் ஒன்றையும் மிகச் சிறப்பாக எடுத்துப் பேசுகிறார்.

'நான் அணுகும் குலாத் தில்லை' என்ற தொடரிலுள்ள மூன்று சொற்களில், நான் என்ற சொல் முன்னருள்ள 'நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம்' என்பதனோடு இணைந்து ஒரு புதிய பொருளைத் தருகின்றது. வேறொன்றும் கூறாமல் 'நான்' என்ற சொல்லைத் தனியே பயன்படுத்தினாலும் இந்த நானோடு அந்தக்கரணங்கள் பொறி புலன்கள் முதலியவை சேர்ந்தே நிற்கும்.

அந்தக்கரணங்களில் ஒன்றாகிய சிந்தை அதனைப் பெற்றுள்ள மனிதனின் கட்டுப்பாட்டுக்கு அடங்காத ஒன்றாகும். ஐம்பொறிகளையும் மனத்தையும்கூட நீண்ட பயிற்சியின் மூலம் ஒருவன் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும். இவற்றைக் கட்டுப்படுத்திவிட்ட ஒருவனுக்குக்கூட, பொறிகள், மனம் என்பவைபோல அவனுடைய சிந்தை கட்டுப்பாட்டிற்கு உட்படுவதில்லை. உணர்விற்கு உறைவிடமாகிய சிந்தை அறிவுவழிப்பட்ட முடிவுகளை ஏற்கும் என்று சொல்வதற்கில்லை. உதாரணமாக ஒருவர் இறந்துவிட்டார் என்றால், கேட்பவர் உணர்வில் அதிர்ச்சி உண்டாகி அது அவலமாகப் பரிணமிக்கிறது. பிறப்பதும் சாவதும் இயல்புதான், அதில் வருந்துவதற்கு ஒன்றுமில்லை என்று அறிவு எவ்வளவு எடுத்துக் கூறினாலும் உணர்விற்கு உறைவிடமாகிய சிந்தையில் அவை சென்று தாக்குவதில்லை. எனவே, சித்தம் அல்லது சிந்தை தனித்து இயங்குவதைக் காணவேண்டும்.

உணர்வின் அடிப்படையில் ஏதோ ஒன்றைச் சிந்தை நம்பத் தொடங்கிவிட்டால் அதனைக் கழற்றுவது இயலாத ஒன்று. சிந்தை எளிதாக எதனையும் நம்பிவிடுவதில்லை; நம்பிவிட்டால் அதனை மாற்றுவது கடினம்.

மாபெரும் கல்வியாளராகிய அடிகளார் இந்த நுணுக்கத்தை நன்கு அறிந்துள்ளார்; ஆதலின் குலாத் தில்லையை நோக்கித் தாம் செல்லுகையில் தம்முடைய சிந்தையும் எல்லையற்ற ஈடுபாட்டுடன் மிக வேகமாகத் தம் பின்னே வருகிறது என்று கூறுகிறார்.

இதில் என்ன புதுமை என்று கேட்பவர்களும் உண்டு. ஒருவன் போகின்ற போக்கைச் சிந்தை ஏற்றுக்கொள்ளும் என்றோ, அவன் போக்கிற்கு உறுதுணையாக உடன்வரும் என்றோ சொல்லமுடியாது. சிந்தையின் இயல்பாகும் அது. ஆனால், அடிகளாரைப் பொறுத்தமட்டில் தம் சிந்தை தம்மைப் பின்தொடர்ந்து அணுக்கத்தில் வருகிறது; அதன் பயனாகத் தாம் தில்லையை அணுகியதாகக் கூறுகிறார்.

அவருடைய சிந்தை என்ன காரணத்தால் அவரைப் பின்பற்றி வருகிறது? அந்தக் காரணத்தைச் சொல்வதற்கு மிக அழகான அடைமொழியொன்றைச் சிந்தைக்குத் தருகிறார் அடிகளார். 'நம்பும் என் சிந்தை' என்றதால் இறைவன் உள்ளானா? இல்லையா? உயிர்களாகிய நாம் அவனை அணுக முடியாதா? முடியுமா? -என்ற தேவையற்ற ஆராய்ச்சிகளில் அவருடைய சிந்தை ஈடுபடாமல் பெரு நம்பிக்கை கொண்டு அவர்பின்னே செல்கிறது என்பதைத் தெரிவிக்கிறார்.

சிந்தை இறைவனிடம் முழு நம்பிக்கையைப் பெற்று விட்டதால், அடிகளார் வாழ்க்கையில் அவர் விரும்பியபடி முன்னேற முடிந்தது. இந்த நம்பிக்கையை அவருடைய சிந்தை பெறுவதற்குக் காரணமாக இருந்தது திருப்பெருந்துறை அனுபவமாகும். இதனை அடிகளாரே

நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்

*(229)*

என்ற பாடல்மூலம் தெரிவிக்கின்றார்.

*தலைவனால் ஆட்கொள்ளப்பெற்ற காரணத்தால் அவருடைய சிந்தையில் வலுவான நம்பிக்கை பிறந்தது. அதனை நினைவிற் கொண்டுதான் 'நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம்' என்று பாடுகிறார்.*

**565.** **மதிக்கும் திறல் உடைய வல் அரக்கன் தோள் நெரிய**
**மிதிக்கும் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்**
**கதிக்கும் பசு பாசம் ஒன்றும் இலோம் எனக் களித்து இங்கு**
**அதிர்க்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 7**

*அதிர்த்தல்-சிலம்பொலித்தல்*

*பாடலின் முதலிரண்டு அடிகளில் ஓர் அழகான கருத்தைப் பெறவைக்கிறார் அடிகளார். வீரத்தால் மிக்கவர்கள் அனைவரும் மதித்துப் பாராட்டும் இராவணனுடைய இருபது தோள்களும் நெரியும்படியாகத் தன் விரலால் அழுத்தினான் என்று கூறுவது பழைய கதைபற்றியதாகும். இக்கதையை நினைவூட்டுவதன் மூலம் ஓர் அற்புதமான கருத்தைப் பெறவைக்கிறார் அடிகளார்.*

*இராவணனுடைய பத்துத் தலைகளிலும் அகங்கார, மமகாரங்கள் நிறைந்திருந்தன. அவனால் அவற்றை வளர்த்துக்கொள்ள முடிந்ததே தவிரப் போக்கிக்கொள்ள முடியவில்லை. பரம கருணா மூர்த்தியாகிய இறைவன் என்ன செய்தான் தெரியுமா? தன் திருவடியால் ஒருமுறை அழுத்தினான். இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் இறைவன் திருவடி அரக்கன் தலைமேல் படவேயில்லை. திருவடி அழுத்தியது கயிலைமலையைத்தான். அந்தக் கயிலை மலை அரக்கன் தோள்மேல் அமர்ந்திருந்தது. திருவடிக்கும் தோளுக்கும் இடையே மிகப் பெரிய கயிலை மலை இருந்தும், திருவடி தன் பணியைச் செய்துவிட்டது. திருவடி அழுத்தியவுடன் இராவணனுடைய அகங்கார, மமகாரங்கள் சிதைந்து, அவன் சாமகானம் பாடத் தொடங்கிவிட்டான்.*

இப்படியல்லாமல் குருநாதர் வடிவிலிருந்த இறைவன் திருவடி நேரிடையாக அடிகளாரின் திருமுடிமேல்; சகஸ்ர தளத்தில், பதிந்த காரணத்தால் அதுவரை இயல்பாக இருந்துவந்த பசுத்தன்மையும் பாசமும் இப்பொழுது தலைதூக்கவில்லை. இதனையே 'கதிக்கும் (சுண்டி மேல் எழுகின்ற) பசு பாசம் ஒன்றும் இலோம்' என்கிறார் அடிகளார்.

'கதிக்கும் பசு பாசம் ஒன்றும் இலோம்' என்ற தொடர் அமைந்துள்ள முறையில் ஒரு புதிய சிந்தனை ஓட்டம் ஏற்படுகின்றது. 'கதிக்கும்' என்பதைப் பசு பாதத்திற்குப் அடைமொழியாக்கி, இவை எதுவும் தம்பாலில்லை என்று பொருள் காண்பது ஒருமுறை; அன்றி, பசுபாசம் என்பாலுண்டு! ஆனால் அவை அடங்கியுள்ளனவே தவிரக் கதிக்கும் நிலையொன்றும் இல்லை. அதாவது பசுத்தன்மையும் பாசமும் எம்முடைய கட்டுப்பாட்டில் உள்ளனவே தவிர, அவை மீதூர்ந்து எழும்நிலை இல்லை என்றும் பொர்ருள் கொள்ளலாம்.

**566.** **இடக்கும் கரு முருட்டு ஏனப் பின் கானகத்தே**
**நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்**
**கடக்கும் திறல் ஐவர் கண்டகர்தம் வல் அரட்டை**
**அடக்கும் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 8**

பாடலின் முதலிரண்டு அடிகள் அர்ச்சுனன் தவம் இயற்றும்கால் பெருமான் வேடுவனாகப் பன்றியை விரட்டிச் சென்ற கதையை நினைவுறுத்துகிறது.

வேடுவனாக வடிவெடுத்துப் பன்றியை விரட்டிச் சென்றவன் இறைவனே ஆதலால் அந்தக் காட்டில் பெரும்பகுதி அவன் திருவடி பட்ட புண்ணியத் தலங்களாயின. அங்ஙனம் விரட்டிச் சென்ற திருவடிகள்தான் குருநாதர் திருவடிகளாக வந்து தம்முடைய தலையின்மேல் அமர்ந்தன என்று மகிழ்கிறார் அடிகளார்.

வைக்கப்பட்ட திருவடிகள் அடிகளார் தலைமேல் சில விநாடிகளே இருந்தன என்றாலும், அத்திருவடிகள் செய்த மாபெரும் காரியத்தை மூன்றாம் அடியில் பேசுகிறார் அடிகளார்.

மிகக் கொடியவர்களாகிய (கண்டகர்) ஐந்து பொறிகளும் தீங்கிழைக்கும் குறும்புச்செயல்கள் (வல்அரட்டை) பலவற்றையும் செய்து, தம்மை உடையவனை அருநரகில் தள்ளும் இயல்புடையன. அந்த ஐவரையும், தலைமேல் வைக்கப்பட்ட திருவடி, ஒரே விநாடியில் செயலிழக்கச் செய்தது.

**567.** **பாழ்ச் செய் விளாவிப் பயன் இலியாய்க் கிடப்பேற்குக்**
**கீழ்ச் செய் தவத்தால் கிழியீடு நேர்பட்டுத்**
**தாள் செய்ய தாமரைச் சைவனுக்கு என் புன் தலையால்**
**ஆட் செய் குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 9**

'பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேன்' என்பதுவரை ஒரு தொடராகும். 'விளாவி' என்பது உழுதல் என்ற பொருளை உடையது. 'செய்' என்பது பதப்படுத்தப்பட்ட விளைநிலம் என்ற பொருளையுடையது. 'பாழ்ச்செய்' என்பது இயல்பும், தரமும் கெட்டுப்போன விளைநிலமாகும். அதாவது பாழாகிப்போன விளைநிலம். இந்த நிலத்தை எவ்வளவு உழுது பயன்படுத்தினாலும் அது எதற்கும் உதவாமற் போய்விடுகிறது. 'அதுபோல எத்தனையோ பெரியவர்கள் என்னை முன்னேற்றுவதற்கு எவ்வளவோ பாடுபட்டும், அந்தப் பாழாய்ப்போன நிலம்போல எவ்விதப் பயனையும் விளைவிக்காமல் கிடக்கின்றேன்' என்பது இத்தொடரின் பொருளாகும்.

'கீழ்ச்செய் தவத்தால் கிழியீடு நேர்பட்டு' என்பது இரண்டாவதாக உள்ள தொடராகும். பாழாய்ப்போன நிலம்போலப் பயனிலியாய்க் கிடந்த தமக்கு எதிர்பாராத ஓர் அதிர்ஷ்டம் சித்தித்தது என்கிறார் அடிகளார்.

பாழ்நிலச் சொந்தக்காரனுக்குப் பொன்னைப் பொதிந்து வைத்த துணிமூட்டையொன்று (கிழியீடு) எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் கிடைத்ததுபோல, பயனிலியாய்க் கிடந்த தமக்கும் எதிர்பாராத இடத்தில் (திருப்பெருந்துறையில்) எதிர்பாராத நேரத்தில் (குதிரை வாங்கச் சென்ற நேரத்தில்) குருநாதர் எதிரே தோன்றித் தம் சிவந்த திருவடிகளாகிய தாமரைகளைத் தம் தலைமேல் வைத்துப் பணிகொண்டார்.

இங்ஙனம் குருநாதர் கிடைத்தது தம்முடைய முயற்சி, விருப்பம் என்பவற்றால் அன்று என்பதைக் குறிக்கவே 'கீழ்ச்செய் தவத்தால்' (முற்பிறவிகளின் செய்த தவத்தால்) என்றார்.

அந்தத் தவத்தின் விளைவாகப் பயனின்றிக் கிடந்த அவருடைய தலை, குருநாதர் திருவடிகளைத் தாங்குபலகையாக மாறி மேலும் அத்திருவடிகளுக்குத் தொண்டு செய்யும் சிறப்பையும் பெற்றது என்கிறார்.

ஒரு பேரரசின் அமைச்சராக இருந்தவருக்கு, ஆயிரக்கணக்கான பிரச்சினைகளும் சிந்தனைகளும் தலையில் குடிகொண்டிருந்திருக்கும். எனவே, இவற்றை ஒதுக்கிவைத்துவிட்டுச் சிவசிந்தனை அத்தலையில் புகவேண்டுமானால் அதற்கு வாய்ப்பே இல்லை.

வழியோடு சென்ற வறியனுக்குப் பொன்மூட்டை கிடைத்தாற்போல், ஆன்மிகத்தில் வறியராயிருந்த அமைச்சருக்குக் குருநாதர் சிக்கினார். பொன்மூட்டை வறியவனின் வாழ்க்கையைத் திசைதிருப்பியதுபோல, குருநாதரின் திருவடி, அமைச்சரின் வாழ்க்கையைத் திசை திருப்பிவிட்டது.

தம்முடைய தலையில் குருநாதர் திருவடி பட்ட விசேடத்தால் அத்திருவடிகளுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்புத் தமக்குக் கிட்டியது என்கிறார்.

**568.** **கொம்மை வரி முலைக் கொம்பு அனையாள் கூறனுக்குச்**
**செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு**
**இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்**
**அம்மை குலாத் தில்லை ஆண்டானைக் கொண்டன்றே 10**

*இப்பாடல் அமைந்துள்ள முறை பெரிதும் குழப்பத்தைத் தருவதாகவுள்ளது. 'கூறனுக்கு, செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு, இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்' என்ற முறையில் பாடல் செல்கின்றதேனும், நேரிடையாக, எளிதாகப் பொருள்கொள்ள வாய்ப்பில்லை.*

*'கொம்பனையாள் கூறனுக்கு திருப்பணிகள் செய்வேனுக்கு' என்றால் அது இயல்பான தொண்டு செய்தலைக் குறிக்கும். 'செய்வேனுக்கு' என்பது எதிர்காலமாயினும் நிகழ்காலப் பொருளையே தந்துநிற்கிறது.*

*திருப்பணிகள் செய்தல் என்பது பெரும்பாலும் உடல்பற்றியதே ஆகும். கூலி வாங்கிக்கொண்டு கோயில் கட்டும் பணியில் ஈடுபடுபவர்களும் ஒருவகையில் பார்த்தால் கோயில் திருப்பணியையே செய்கின்றார்கள் என்று கூறிவிடலாம். இப்படி உடல் ரீதியாக எந்தத் திருப்பணியையும் அடிகளார் செய்ய மேற்கொண்டார் என்று கூற வாய்ப்பில்லை. காரணம், அவருடைய உண்மையான வரலாற்றை இதுவரை யாரும் கூறவில்லை.*

*உடல்ரீதியான திருப்பணியா, இல்லையா என்பதைச் சிந்திக்கும்போது, அடிகளார் கூறும் 'செம்மை மனத்தால்' என்ற இரண்டு சொற்கள் திருப்பணி என்ற சொல்லுக்குப் பொருள்செய்ய உதவுகின்றன.*

*அடிகளார் காலத்திற்கு முக்கால் நூற்றாண்டிற்கு முன்பிருந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். அவருடைய திருத்தொண்டத் தொகையில் மனத்தில் கோயில் கட்டிய பூசலார் நாயனாருடைய வரலாறு இடம்பெற்றுள்ளது.*

எனவே, அடிகளாருக்கும் பூசலார் வரலாறு தெரிந்திருக்க நியாயமுண்டு. இதனை மனத்திற் கொண்டு பார்த்தால், 'செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு' என்ற தொடருக்கு, பூசலார் போன்றே இவரும் ஏதோ ஒருவகைத் திருப்பணியில் ஈடுபட்டிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பாடலில் அடுத்துவரும் தொடர்கள் கொஞ்சம் புதுமையாக- 'திருப்பணிகள் செய்வேனுக்கு இம்மைதரும் பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்' என்ற முறையில் செல்கின்றன.

'இம்மை தரும் பயன்' என்ற தொடருக்கு இப்பிறப்பில் கிடைக்கும் பொறி, புல இன்பங்கள் எனப் பலரும் பொருள் கூறிச் சென்றனர்.

திருப்பணிகள் சாதாரண மனநிலையில் செய்யப் பெற்றால்கூட இம்மை தரும் பயன்களாகிய பேர், புகழ் என்பவை கிட்டும். இவ்வாறில்லாமல் 'செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்தல்' என்பதன் பொருளென்ன?

மிக நீண்ட காலமாகத் திருப்பணி என்ற சொல்லை இறைவனோடும், திருக்கோயிலோடும் தொடர்புபடுத்தியே பேசி வருகின்றோம். இறைதிருப்பணி, கோயில்திருப்பணி, என்று சொல்லும் மரபு உண்டேதவிர, மக்கள் திருப்பணி என்றோ, சமூகத் திருப்பணி என்றோ சொல்லும் மரபு இல்லை. இக்கருத்தை மனத்திற் கொண்டு 'செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு' என்ற தொடரை மீண்டும் சிந்திக்கலாம்.

புண்ணியம் உட்பட எவ்விதப் பயனையும் கருதாமல் தொண்டைத் தொண்டிற்காகவே செய்யும் ஒரு நிலையைத்தான் 'செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு' என்று அடிகளார் கூறுகின்றார். செம்மை மனத்தால் செய்யும் இத்திருப்பணிக்கு, பெயர், புகழ்

என்பவற்றோடு புண்ணியமும் கிட்டும். இவை ஒன்றையும் அடிகளார் சட்டை செய்யாமல் ‘இம்மை தரும் பயன் இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்’ என்று கூறுகிறார்.

புண்ணியம்கூடப் பொன் விலங்கு ஆதலின் பெயர், புகழ், புண்ணியம் ஆகிய அனைத்தையும் இங்கு ஒழிக்கும் படியான நல்லருளைக் கூத்தன் செய்தான் என்றபடி.

இக்கருத்தை மனத்துட் கொண்டு பாட்டை மறுபடியும் பார்த்தால், அடிகளார் வாழ்க்கையில் செம்மை மனத்தோடு ஏதோ ஒரு திருப்பணி நடைபெற்றிருக்க வேண்டும். அத்திருப்பணி காரணமாகக் கிடைக்கக்கூடிய பேர், புகழ், புண்ணியம் ஆகிய அனைத்தையும் அடிகளார் துறந்துவிட்டார் என்று நினைக்கத் தோன்றுகிறது.

எத்தகைய திருப்பணியை எப்போது செய்தார் என்பது விளங்கவில்லை. குருநாதர் உபதேசம் பெற்றபிறகு திருப்பெருந்துறைக் கோயிலை இவரே கட்டினார் என்று வழங்கும் பழங்கதையை நம்புபவர்களும் உண்டு.

இவற்றையெல்லாம் மனத்துள் வைத்துப்பார்த்தால் ‘செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு’ என்ற தொடரின் பொருள் நன்கு விளங்காததுடன் குழப்பத்தைத் தருவதாகவும் உள்ளது.

ௐ ௐ ௐ

# 41. அற்புதப் பத்து

## [அனுபவம் ஆற்றாமை]

இன்று கிடைக்கும் திருவாசகப் பதிப்புகளில் பதிக வைப்புமுறை ஒரு மாதிரியாகவே உள்ளது. இப்பதிகங்களைப் பிரித்து ஒவ்வொன்றிற்கு ஒவ்வொரு தலைப்புத் தந்து, யார் எப்பொழுது வெளியிட்டார்கள் என்பது அறியமுடியவில்லை

இது ஒருபுறம் நிற்க- இன்ன பதிகத்தை அடுத்து இன்ன பதிகம் வரவேண்டும் என்று பிற்காலத்தார் தொகுத்து உள்ளனர். அந்த முறைவைப்பும் பெரும்பகுதி பொருத்தம் இல்லாமல் அமைந்திருப்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம்

இன்று நூலுள்ள முறையில் இருபத்தாறாவது பதிகமாக அமைக்கப்பெற்றுள்ளது அதிசயப் பத்தாகும். அதனை அடுத்துப் பதினைந்து பதிகங்கள் தள்ளி அமைந்திருப்பது அற்புதப் பத்தாகும்.

அதிசயம், அற்புதம் என்ற இரண்டு சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளை உணர்த்துவனவாகும்.

என்ன காரணத்தால் ஒரே பொருளில் அமைந்துள்ள இரண்டு சொற்களைப் பயன்படுத்தி, இரண்டு பதிகங்கள் பாடியுள்ளார் அடிகளார் என்று சிந்திப்பதில் தவறில்லை. இந்த நினைவுடன், இந்த இரண்டு பத்துக்களையும் அடுத்தடுத்துப் படித்துப் பார்ப்பதால், ஏதேனும் புதிய சிந்தனை தோன்றுகிறதா என்று ஆராய்வதிலும் தவறில்லை.

பொதுவாக, அதிசயம் என்ற சொல் பயன்படுத்தப்பெறுகின்ற சூழ்நிலைகளை வைத்து, பின்வருமாறு பொருள் காணலாம்.

ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி அடிக்கடி நடைபெறாவிட்டாலும் முன்னர் என்றோ ஒருநாள் நடைபெற்றதுண்டு. அதேபோல இனியும் என்றோ ஒருநாள் நடைபெறக்கூடும். ஆனால், நாம் எதிர்பார்த்த நேரத்தில், எதிர்பார்த்த இடத்தில் அந்த நிகழ்ச்சி நடைபெற வாய்ப்பில்லை. எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்தில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடைபெறக் கூடும். நாம் சற்றும் எதிர்பாராத முறையில் அவ்வாறு நடந்தால் அதை அதிசயம் எனலாம்.

அதிசயப் பத்தின் பத்துப் பாடல்களிலும் தம்மை அடியாரில் கூட்டியதை அதிசயம் என்று விளம்புகிறார் அடிகளார். இறைவன் திருவடிகளை விட்டுப் பிரியாத அடியார் கூட்டத்தில் தாமும் ஒருவராக அமரும் வாய்ப்புக் கிட்டியதை அதிசயம் என்று போற்றுகிறார்.

அற்புதம் இதனினும் முற்றிலும் மாறுபட்டதாகும். நடக்கமுடியாதது என்று அனைவரும் உறுதியாக நம்பிக் கூறும் ஒரு செயல், நம் கண்ணெதிரே நடந்தால் அதனை அற்புதம் (miracle) என்று கூறலாம்.

திருவாதவூரர் என்ற பெயருடன் அமைச்சராக இருந்து அப்பணியில் முழுமையாகத் தம்மை ஆட்படுத்திக் கொண்ட ஒரு மனிதரை, குதிரை வாங்குவதற்கென்றே வழியோடு சென்ற ஒரு மனிதரைக் குருந்த மரத்தடியில் குருநாதர் வடிவுடன் அமர்ந்திருந்த ஒருவர் சுண்டியிழுத்துத் தம் கால்களில் விழுந்து பணியுமாறு செய்தார்; தம் திருவடிகளை அமைச்சர் தலையின்மேல் வைத்தார். இந்த ஒரு விநாடிச் செயலில், திருவாதவூரர் மறைந்தார்; பாண்டிய அமைச்சர் மறைந்தார்; குதிரை வாங்கச் சென்ற அரசுப் பணியாளர் மறைந்தார். அந்த இடத்தில் மணிவாசகர் என்ற ஒரு புத்தம் புதிய மனிதர் உருவானார். ஒரே விநாடியில் 'துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழி'ந்தார் (275) தாம் யார் என்பதை மறந்தார்; பகல்

இரவு வேறுபாட்டை அறிய முடியாதவர் ஆனார்(508) 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம்' (397) பெற்றவர் ஆனார்; 'அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும்' (174-5) ஏற்றப்பெற்றார். பரா அமுதாகிய திருவாசகத்தைப் பாடும் ஆற்றலைப் பெற்றார்.

இவை அனைத்தும் பல பிறவிகளில் கிடைத்த வளர்ச்சி அன்று. ஒரே பிறப்பில், ஒரே விநாடியில் இவை அனைத்தும் ஒரே மனிதருக்குக் கிட்டியதென்றால், இதைவிட வேறு அற்புதம் என்ன இருக்கமுடியும்? தமக்குக் கிடைத்த மாற்றத்தை 'அற்புதம் விளம்பேன்' 'அற்புதம் அறியேன்' என்று பாடிக்கொண்டு செல்கிறார்.

இதனால்தான் அதிசயப்பத்தின் வேறாக அற்புதப் பத்து வைக்கப்பெற்றுள்ளது.

ஆனால், உட்தலைப்புத் தந்த பெரியவர்கள் இதற்கும் 'அனுபவ ஆற்றாமை' என்ற தலைப்புத் தந்து வழக்கம்போல் குழப்பியுள்ளனர்.

இப்பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களில் எட்டாம் பாடல் (576) தவிர ஏனைய பாடல்கள் அனைத்தும் ஒரே கருத்தையே தமது இறுதி அடிகளில் வெளியிடுகின்றன. அதிலும் முதலாம், இரண்டாம் (569, 570) பாடல்கள் ஒருவித அற்புதத்தைப்பற்றிப் பேசுகின்றன. எஞ்சிய ஏழு பாடல்களும் மற்றொரு வகை அற்புதத்தைப்பற்றிப் பேசுகின்றன.

இந்த இரு வகை அற்புதங்களிலும் ஒரு பொதுத் தன்மை உண்டு.

பிரபஞ்ச காரணனாய், வாக்கு மனோலயம் கடந்தவனாய், நாம ரூபம் கடந்தவனாய் உள்ள ஒருவன், மானிட வடிவு தாங்கி, தமக்காக, தம்முடைய ஊனக் கண்களும் காணும்படியாக, தமக்கு எதிரே வந்து

இருந்தமை ஓர் அற்புதம். இதனையே 'பொன் அடி இணைகாட்டி மெய்யனாய் வெளிகாட்டி முன்நின்றது ஓர் அற்புதம்' (569) என்றும், 'பொன் கழல் இணைகாட்டி வேந்தனாய் வெளியே என்முன் நின்றது ஓர் அற்புதம்' (570) என்றும் பாடியுள்ளார். இவை முதல் வகை அற்புதத்தைச் சேர்ந்தவை.

எஞ்சியுள்ள ஏழு பாடல்களும் இரண்டாவது வகை அற்புதத்தைப்பற்றிப் பேசுகின்றன. உதாரணமாக, 'அருந்துணைவனாய் ஆண்டுகொண்டு அருளிய அற்புதம்' (572) என்றும், 'கழல்காட்டி அறிவு தந்து எனை ஆண்டுகொண்டருளிய அற்புதம்' (578) என்றும் கூறுவதைக் காணலாம்.

இரண்டாவது வகை அற்புதத்தில் ஒன்றுக்கும் உதவாதவராகிய தம்மை ஆண்டுகொண்டது அற்புதம் என்கிறார். அதைவிட அற்புதம் என்னவென்றால் ஆண்டு கொண்டதோடு நில்லாமல், முன்னரே ஆண்டுகொள்ளப் பெற்ற அடியார்களிடையே அமருமாறு செய்தமை ஆகும்.

**569.** மையல் ஆய் இந்த மண்ணிடை வாழ்வு எனும்
ஆழியுள் அகப்பட்டுத்
தையலார் எனும் சுழித்தலைப் பட்டு நான்
தலை தடுமாறாமே
பொய் எலாம் விடத் திருவருள் தந்து தன்
பொன் அடி இணை காட்டி
மெய்யன் ஆய் வெளி காட்டி முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே

இப்பதிகத்தில் வரும் பத்துப் பாடல்களில் மூன்றாம் (571) எட்டாம் (576) பாடல்கள் தவிர எஞ்சிய எட்டுப் பாடல்களிலும் காம வான்சுறவின் வாய்ப்பட்ட தம்மையும் ஏற்றுக்கொண்டதை அற்புதம் அற்புதம் என்று பேசிச் செல்கின்றார்.

இப்பாடலின் முதலிரண்டு அடிகளில் மனிதர்கள் இயல்பாக அகப்பட்டுக்கொள்ளும் இரண்டு பெரும் சுழல்கள் பேசப்பெறுகின்றன.

முதலாவது சுழல் 'மண்ணிடை வாழ்வெனும் ஆழி' யின் சுழல்; இரண்டாவது 'தையலார் என்னும்' சுழல்.

இவை இரண்டையும் சுழல் என்று உருவகித்ததற்கு ஏற்ப, அதில் அகப்பட்டவர்கள் தலைதடுமாறுவர் என்ற அனுபவ உண்மையைப் பேசுகிறார். நீர்ச்சுழலில் அகப்பட்டவர், மேல் எது, கீழ் எது, பக்கப் பகுதி எது என்று அறிந்துகொள்ள முடியாமல் அதிலேயே சுழன்று உயிரை விடுவர்.

சுழலிடைப் பட்டவர்களைக் காக்கவேண்டுமே யானால் அவர்கள் தலையையோ காலையோ எட்ட இருந்து பிடித்துக்கொள்ள வேண்டும். அதனால் சுழலில் விழுந்தவர் தலைதடுமாறுகின்ற நிலை தடுக்கப்படும். அதன்பிறகு அவர்களை வெளியே இழுப்பது எளிது.

இந்த அனுபவ உண்மையை நன்கு அறிந்திருந்த அடிகளார், இப்பாடலில் மிக அற்புதமாக இதனை வெளியிடுகின்றார்.

'சுழித்தலைப்பட்டு நான் தலைதடுமாறாமே, பொய்யெலாம் விடத் திருவருள் தந்து தன் பொன்னடி இணை காட்டி, மெய்யனாய் வெளி காட்டி (என்) முன் நின்றது ஓர் அற்புதம்' என்றவாறு கொண்டுகூட்டுச் செய்துகொண்டால் பொருள் எளிதாக விளங்கும்.

இதே அடிப்படையில் தையலார் சுழலில்பட்டுத் தலைதடுமாறும் அடிகளாரைப் பெருந்துறை நாயகன், குருநாதர் வடிவில் வந்து திருவருள் தந்ததன் மூலம் தலை தடுமாற்றத்தை நிறுத்தினான். அடுத்து என்ன செய்தான் தெரியுமா? உடன்பிறந்த பொய்யை அகலுமாறு செய்தான்.

தலைதடுமாற்றமும் பொய்யும் போனவுடன் எவ்வித அப்பழுக்குமின்றித் தூய்மை அடைந்துவிடுகிறார் அடிகளார். அப்பொழுது எங்கும் நிறைந்துள்ள அந்தத் திருவடி இவருக்கென்று தனியே காட்சி தருகிறது.

இவர்மாட்டுக் கொண்ட கருணை காரணமாக, திருவடி தரிசனம் தந்ததுடன் அமையாமல், நாம ரூபம் கடந்த அந்தப் பொருள் ஒரு வடிவு தாங்கி, சத்தியசொரூபனாகி, மெய்யனாய் அவர் முன்னர் காட்சியளித்தது.

அந்த வடிவின் திருவடி, இவரைச் சுழலிலிருந்து காப்பாற்றிக் கரைசேர்த்தது. மேலும் தையலார் சுழலில் இவர் வீழ்வதற்குக் காரணமாயிருந்த பொய்யையும், தன் திருவருளைத் தந்து போக்கிற்று.

வடிவிலாததும், வடிவு கடந்ததுமாகிய அப்பொருள் பரவெளி தரிசனம் தந்து வெளிகாட்டி அவர்முன் நின்றது மற்றோர் அற்புதம்.

இவை ஒவ்வொன்றும் தனித்தனி அற்புதமாக இருப்பினும் அனைத்தையும் ஒன்றுசேர்த்து 'முன்னின்றது ஓர் அற்புதம்' என்று பேசுகிறார்.

**570.** ஏய்ந்த மா மலர் இட்டு முட்டாதது ஓர்
இயல்பொடும் வணங்காதே
சாந்தம் ஆர் முலைத் தையல் நல்லாரொடும்
தலை தடுமாறு ஆகிப்
போந்து யான் துயர் புகாவணம் அருள்செய்து
பொன் கழல் இணை காட்டி
வேந்தன் ஆய் வெளியே என் முன் நின்றது ஓர்
அற்புதம் விளம்பேனே 2

இந்தப் பாடலில் உடம்பின் பயன் என்ன என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார் அடிகளார். எந்த ஒரு

பொருளுக்கும் குறைந்தபட்சம் இருவகைப் பயன்கள் உண்டு. ஒரு கத்தியை எடுத்துக்கொண்டால் அதனால் பழங்களை வெட்டித் துண்டாக்கி எளிதாக உண்ண முடியும். பழங்களை வெட்டுவதற்குப் பதிலாகப் பிற உயிர்களைப் போக்கவும் அந்த கத்தியைப் பயன்படுத்தலாம். அதேபோலத் தம்முடைய உடம்பு எதனைச் செய்யவில்லை, எதனைச் செய்தது என்பதை முதலிரண்டு அடிகளில் விளக்குகிறார்.

அரிதிற் கிடைத்த இந்த உடம்பைக்கொண்டு, நாண்மலரைத் தேடிப் பிடித்துப் பறித்து, இறைவன் திருவடிகளில் இட்டு வழிபடவும் செய்யலாம். இதன் மறுதலையாக மகளிரைத் தேடிப் பிடித்து முயங்கியும் காலத்தைக் கழிக்கலாம். இவ்விரண்டையும் எடுத்துக்கூறிய அடிகளார், முதலிற் கூறிய வழியில் தம் உடம்பைப் பயன்படுத்தவில்லை; இரண்டாவது கூறிய வழியிலேயே முழுமூச்சாகச் செல்லத் தொடங்கியதாகக் கூறுகிறார்.

அப்படியே அவர் சென்றிருப்பின், மாபெரும் துயர் அவரை ஆட்கொண்டிருக்கும். எனவே, துயரக்கடலில் அவர் புகாவண்ணம் அருள்செய்தார் குருநாதர். எப்படிச் செய்தார்? முதலில் தம் திருவடி இணையை அடிகளார் தரிசிக்கும் வண்ணம் நேரே காட்டினார். அந்தத் திருவடி தரிசனம் கிடைத்தவுடன் துயர்க்கடலில் புகாமல் நிலைகொள்ள முடிந்தது. அதுமட்டுமா? துயர்க்கடலில் புகுவதற்குக் காரணமாக இருந்த தையலார் மையலும் அவரை விட்டு நீங்கிற்று.

இந்த அற்புதங்களைச் செய்த குருநாதர், ஞானத்தின் எல்லை தாமே (வேந்தன்) என்பதை அடிகளார் உணரும்படியாக வெளிப்பட்டு நின்றார் என்க.

இவ்விரண்டு பாடல்களிலும், நான்முகன், நாரணன், தேவர்கள் ஆகிய அனைவரும் 'கனவேயும் காண்பரியவனாகிய' (244) அப்பரம்பொருள், தம்மாட்டுக்

கொண்ட கருணை காரணமாக, தம்மைச் சுழலிலிருந்து காப்பாற்றியதோடு அல்லாமல், தம் துயரத்தைப் போக்க வெளிப்பட்டுக் காட்சியும் தந்தான் என்கிறார். வெளிப்பட்டு நின்ற இச்செயல் எளிதில் நடைபெறாத ஓர் அற்புதம் என்பதை அப்பொழுதே அறிந்திருந்தால் பலர் வந்து கூடி இந்த அற்புதத்தில் பங்குகொள்ள அவர்களை அழைத்து இருப்பேன். அது இயலாமல் போய்விட்டதே என்றபடி.

அடுத்துவரும் எட்டுப் பாடல்களிலும் காணப்படாத ஒரு சிறப்பு இந்த இரண்டு பாடல்களிலும் அமைந்திருப்பது அறிதற்குரியது. புறக்கண்களாலும் காணுமாறு அப்பொருள் வெளிப்பட்டு நின்றது என்பதே அச்சிறப்பு.

**571.** **நடித்து மண்ணிடை பொய்யினைப் பல செய்து**
**நான் எனது எனும் மாயம்**
**கடித்த வாயிலே நின்று முன் வினை மிகக்**
**கழறியே திரிவேனைப்**
**பிடித்து முன் நின்று அப் பெரு மறை தேடிய**
**அரும் பொருள் அடியேனை**
**அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய**
**அற்புதம் அறியேனே** **3**

அடித்தடித்து அக்காரம் தீற்றுதல் என்ற முதுமொழி அடிகளார் காலத்திற்கு முன்னரே தமிழகத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். சர்க்கரை என்ற பொருளையுடையது அக்காரம் என்ற சொல். உண்பவருக்கு இன்பத்தைத் தருதலால் அதனை உண்ணத் தொடங்கியவர் எளிதில் அதனை விட்டுவிட மாட்டார். ஒரோ வழி விட்டாலும் மறுபடியும் அது எங்கே கிடைக்குமென்ற நினைவிலேயே சுற்றித்திரிவர். அப்படியிருக்க ஒருவரை அடித்து அக்காரம் தீற்ற வேண்டிய (ஊட்டவேண்டிய) தேவை என்ன? உயிர்கட்குரிய ஒருசில தனிப்பண்புகளை நினைவுகூரும் முறையில் அமைந்துள்ளது இம்முதுமொழி.

இனிய சர்க்கரை வேண்டுமளவு கிடைத்தாலும் அதனை விட்டுவிட்டு புளிப்பு நிறைந்த புளியங்காயைத் தின்னும் விருப்பமுடைய சிலர் உண்டல்லவா? அத்தகையோரை இந்தப் புளிப்பை விட்டுவிட்டுத் சர்க்கரையைத் தின்னுமாறு செய்ய அடிகூடத் தேவைப்படுகிறது.

இந்த முதுமொழியை மிக அற்புதமாகத் தம் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கு விளக்கமாக அமைக்கிறார் அடிகளார்.

பெருந்துறை நிகழ்ச்சிக்கு முன்னர், பாண்டிய அரசின் தலைமை அமைச்சராக இருந்த ஒருவர், பல நேரங்களில் நடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும்.

'நடித்து மண்ணிடை; பொய்யினைப் பலசெய்து; நான், எனது, எனும் மாயம் கடித்த வாயிலே நின்று' என்பது வரை அமைச்சராக இருந்த வாழ்க்கையைக் குறிக்கும் பகுதியாகும். அரசியலில் பெரும்பதவியை வகிப்பவர், தம் நாட்டிற்காகப் பகைவரிடத்தில் நண்பர்போல நடித்தும், கீழ்மக்களிடம் சமத்துவம் உடையார்போல நடித்தும் நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்திருக்கும். இது 'மண்ணிடை நடித்து' என்ற பகுதியின் விளக்கமாகும்.

பொய்யினைப் பேசி என்றுதான் கூறுவது மரபு. அதற்கு மாறாக, அடிகளார் 'பொய்யினைப் பல செய்து' என்று கூறுவதால் அரசியல் வாழ்க்கையில் நடைபெறும் ஒன்றை இங்கே குறிக்கிறார்.

அரசனும் அமைச்சரும் பொய்யான ஒரு செயலை உண்மை என்று நம்பிச் செய்வது போல நடிக்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். பகை மன்னர்களும் நாட்டு மக்களும் கூட இவ்வளவு ஈடுபாட்டுடன் இவர்கள் செய்கின்றார்கள் என்று நினைந்து அதனை உண்மையென்றே நம்புவர்.

அந்த நம்பிக்கையை வளர்ப்பதற்காகவே பொய்யான இச்செயல் செய்யப்பெறுகிறது. இதனையே அடிகளார் 'பொய்யினைப் பல செய்து' என்று சொல்கிறார்.

நடித்தல், செய்தல் ஆகிய இரண்டுமே அடிப்படையில் உண்மையில்லாமல் பிற மன்னர்களுக்காகவும் மக்களுக்கா-வும் செய்யப்படுகின்றன என்பதை அறிதல் வேண்டும்.

மேலே கூறப்பெற்ற நடித்தல், செய்தல் ஆகிய இரண்டும் உண்மைக்கு மாறானவை என்று தெரிந்திருந்தும் அரசியல் சூழல் காரணமாகச் செய்யப்படுபவையாகும். இந்த இரண்டிலும் ஈடுபடும் தேர்ந்த ஆட்சியாளர்கள் இந்த நடிப்பில் ஆழ்ந்துபோகாமல், தாம் யார் என்பதை மறவாமல், மனத்தில் பதித்திருத்தல் வேண்டும். ஓயாமல் நடிப்பதும் பொய் செய்தலும் நடைபெறுகின்ற காரணத்தால், இதற்குக் கர்த்தாவாக இருக்கின்ற அரசியல் வாதிகள் நாளாவட்டத்தில் தம்முடைய உண்மைத் தன்மையை மறந்து நடிகர்களாகவே ஆகிவிடுவர். ஆனால், தேர்ந்த அரசியல் அறிஞன் எவ்வளவு நடித்தாலும், தான் யார் என்பதை மறப்பதேயில்லை. அதனைத்தான் அடிகளார் 'நான் எனது எனும் மாயம் கடித்த வாயிலே நின்று' என்று பேசுகிறார். அதாவது இந்த அகங்கார மமகாரங்கள் அவர்களைக் காக்கின்ற கேடயமாக அமைந்துவிடுதலைக் காண்கிறோம்.

அடிகளார் வாழ்க்கையில் உண்மையான சிக்கல் நிகழ்ந்த நேரமிது. குருநாதரைக் காண்கின்றவரையில் முழுநேர அரசியல் அலுவலரான அவர் நடித்துக் கொண்டிருந்தார். பொய்களைச் செய்துகொண்டிருந்தார். எந்த நிலையிலும் தம்மை இழக்காமல் இருக்க நான், எனது என்ற அகங்கார மமகாரங்கள் அவரைப் பற்றிக்கொண்டு நின்றன. திருப்பெருந்துறைக் குருநாதரைக் காண்கின்றதற்கு முந்தைய நிலை இது. அவரைக் கண்ட விநாடியே நடிப்பு, பொய், நான், எனது ஆகிய அனைத்தும் மறைந்தொழிந்தன. ஏன் தெரியுமா? வேதங்கள்கூட இன்னும் அவனைக் காணாமல் 'ஐயா!' என்று அரற்றிக்கொண்டிருப்பவும்,

அப்பரம்பொருள் தன் எளிவந்த தன்மை காரணமாக குருநாதர் வடிவில் வந்து திருவாதவூரரை மணிவாசகராக மாற்றிற்று. இந்த நிகழ்ச்சியின் பயன் இப்படியே தொடர்ந்திருக்குமேயானால் இப்பாடல் தோன்றியிருக்க நியாயமேயில்லை.

ஒருமுறை அக்காரம் தீற்றியவுடன் நடிப்பு ஒழிந்தது; பொய் ஒழிந்தது; நான் ஒழிந்தது; எனதும் ஒழிந்தது; தூய்மையே வடிவான மணிவாசகர் இங்கே நிற்கிறார்.

இவரை அடித்து அடித்து மறுபடியும் இந்த இறையனுபவத்தை உண்ணுமாறு செய்யவேண்டிய தேவை என்ன?

மனித மனத்தின் ஒரு விநோதமான பகுதியாகும் இது. எல்லாவற்றையும் விட்டொழித்தவர்கள்கூட 'விட்டோம்' என்ற எண்ணத்தை ஒழிப்பது கடினம்.

இந்த நிலையிலும் அடிகளாரைப் பொறுத்தவரையில் தம்முடைய பழைய வாழ்க்கைமுறை நினைவில் ஒரோவழித் தோன்றி மறைகின்றது. அது நினைவு மாத்திரையாய் வந்துபோயிற்றே தவிர, அடிகளாரின் வளர்ச்சிக்கோ முன்னேற்றத்திற்கோ எவ்விதத் தடையையும் செய்யவில்லை. என்றாலும், அந்த நினைவு வந்துபோகின்ற நேரம், இறையனுபவத்தில் மூழ்குகின்ற நேரத்திற்குத் தடையாகத்தானே வருகிறது? அப்பொழுது தாம் செய்த செயல்களை நினைந்துபார்த்து, அது சரியா தவறா என்ற ஆராய்ச்சியில் மனம் ஈடுபட்டிருத்தல் வேண்டும். அவரையும் மீறிய இந்த ஆராய்ச்சி நடைபெறுவதை அவரால் தடுக்க முடியவில்லை. காரணம், இறையனுபவத்தில் மூழ்கியிராத நேரமாகும் அது. இந்த நிலை நீடிக்காதபடி தில்லைக்கூத்தன் மறுபடி இறையனுபவத்தை அவருள் புகுத்துகிறான். விட்டு விட்டு வரும் இந்த மனோநிலையைத்தான் 'அடித்து அடித்து அக்காரம் தீற்றி' என்கிறார் அடிகளார்.

**572.** பொருந்தும் இப்பிறப்பு இறப்பு இவை நினையாது
பொய்களே புகன்று போய்க்
கரும் குழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பு அவை சிலம்பிடத்
திருவொடும் அகலாதே
அரும் துணைவன் ஆய் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 4

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் அமைச்சராக இருந்த காலத்தையே நினைவுகூர்வதாகும். பெரும்பதவி வகிக்கின்ற காலத்தில் பிறப்பு இறப்புப் பற்றிய நினைவு யாருக்கும் வருவதில்லை. அதிகாரத்தில் உள்ளவர்கள் யாரும் 'இது நிலையற்றது' என்று நினைப்பதேயில்லை. நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறிமாறி வரும் அதிகாரத்தை அனுபவிப்பவர்கள்கூட இது நானூறு ஆண்டுகளுக்குத் தம்முடையது என்று நினைக்கின்றார்களே தவிர, நான்கு என்பதுகூட நிலையில்லாதது என்று நினைப்பதே இல்லை.

இத்தகைய நிர்ப்பந்தம் எதுவும் இல்லாமல் பதவிக்கு வந்துவிட்டால் சாகின்றவரையில் அப்பதவியில் இருக்கக் கூடிய அந்தநாள்பற்றிய பாடலாகும் இது. அதிகாரத்தில் உள்ளவர்கள் பிறப்பு இறப்பினால் வரும் துன்பங்களைப் பற்றி நினைப்பதேயில்லை. மேலும், பகல் முழுவதும் பெரும் பொறுப்பில் கடமையை நிறைவேற்றுபவர்கள் அதிலிருந்து மாறியவுடன் இன்ப வேட்டையில் பொழுதைக் கழிக்க முற்படுகின்றனர். பதவி காரணமாக மனத்தில் ஏற்படும் இறுக்கத்தைப் போக்கிக்கொள்ளத் தையலார் மையல் பெரிதும் உதவிற்று. இந்நிலை அன்றும் இன்றும் பொதுவானதேயாகும்.

இப்படியே வாழ்நாள் முழுவதையும் வீணே கழித்திருக்கக் கூடிய தம்மைக் குருநாதர்

ஆண்டுகொண்டார் என்ற செய்தியையே இப்பாடலில் அடிகளார் கூறுகிறார்.

அமைச்சராக இருந்தபொழுது மகளிர் தாக்கத்தை ஏற்றுக்கொண்டு அனுபவித்த அடிகளாரைப் பெருந்துறை நாயகன் மாற்றினான். எவ்வாறு? 'வேந்தனாய் வெளி'ப்பட்டு (570) நின்று அடிகளாரின் கட்புலனுக்கு விருந்தளித்தான். தையலார் அழகைக்காட்டிலும் குருநாதரின் அழகிய வடிவம் கட்புலனுக்குச் சிறந்த விருந்தாயிற்று.

570ஆம் பாடலில் 'வேந்தனாய் என்முன் நின்றதோர் அற்புதம்' என்று பாடிய அடிகளார் அதனை அடுத்து இந்தப் பாடலில் (572) 'அருந்துணைவனாய் ஆண்டு கொண்டான்' என்று சொல்வது சிந்தனையைத் தூண்டுகிறது.

திருவாதவூரராக, அமைச்சராக வருகின்ற ஒருவரை வழிமறித்து ஆட்கொள்ளவேண்டுமானால் அவர் வகிக்கும் பதவியைவிட உயர்ந்த பதவியில் இருப்பவராக இருத்தல் வேண்டும். அப்படி உயர்பதவியில் இருந்தாலும் அவனுடைய கட்டளையை அமைச்சராகவுள்ள ஒருவர் ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கவேண்டுமானால் அந்தக் கட்டளையை இடுகின்ற அரசன் திருமந்திரஓலைநாயகம் வழியாக அல்லாமல் அமைச்சரின் எதிரே நின்று கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும்.

இந்தக் கருத்துத்தான் சென்ற பாடலில் வேந்தனாய் வெளியே (வெளிப்பட்டு) என்முன் நின்றதோர் அற்புதம் என்று அடிகளாரால் பேசப்பெறுகிறது.

உலகியலில் இப்படி எஜமானர் ஆகவும் எஜமானரின் கீழ்ப் பணிபுரிபவராகவும் வாழ்க்கையைத் தொடங்கிய இருவர் தம்தம் பதவிகள் உயர்வுதாழ்வுகள் என்பவற்றை மறந்து ஒருவருக்கு ஒருவர் சமத்துவம் பாராட்டி நெருங்க வேண்டுமானால் அதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனால், குருநாதரையும் அடிகளாரையும் பொறுத்தமட்டில்

இந்நிகழ்ச்சி ஒரு சில விநாடிகளில் நடைபெற்றது என்பதை அறிவிக்கவே, 570-ஆவது பாடலில் 'வேந்தனாய்' என்று குறிப்பிட்ட அடிகளார் இங்குத் 'துணைவனாய்' என்று குறிப்பிடுகிறார். வேந்தனாய் வெளிப்பட்ட குருநாதர், ஒரு சில விநாடிகளில் துணைவனாக மாறி அடிகளாரின் ஆன்ம முன்னேற்றத்திற்கு வழிகாட்டி அழைத்துச்செல்லும் துணையாக மாறிவிட்டார் என்பதை இவ்விரு பாடல்களிலும் தெரிவித்துவிட்டார்.

துணையாகச் செல்பவர்கள் இலக்கணம் இருவகைப்படும். ஒருவகைத் துணையாவது, செல்பவர் கூடவே இருந்து அவர் கையைப் பிடித்து அழைத்துச் செல்வதாகும். மற்றொருவகைத் துணை தூரத்தே இருந்துகொண்டு 'நான் இங்கேதான் இருக்கிறேன், அஞ்சாமல் வா' என்ற ஒலியின்மூலம் மனத்திட்பத்தை உண்டாக்கித் தனியே செல்பவர்க்கு உதவி புரிவதாகும்.

அடிகளாரைப் பொறுத்தவரையில் குருநாதர், மலர்க் கழல்களைக் காட்டியதன் மூலமும், வடிவுடன் அமர்ந்திருந்ததன் மூலமும் முதல்வகைத் துணையாகப் பொலிவு பெறுகிறார். அந்தக் காட்சியே திருவாதவூரரின் வாழ்க்கைப் போக்கை மாற்றுவதற்குப் பேருதவி புரிந்தது. அமைச்சர் பதவியிலிருந்து அப்பொழுதுதான் விடுபட்டாராகலின் அரச—அமைச்சர் தொடர்பு இன்னும் அவருடைய ஆழ்மனத்தில் ஓரளவு இருந்திருக்கும். எனவே, குருநாதர் தோற்றத்தை 'வேந்தன்' என்று வர்ணித்தார்.

இப்பொழுது நிலைமை மாறிவிடுகிறது. துணைவன், வெளிப்பட்டு நின்று அழைத்துச் செல்லவேண்டிய தேவையில்லை. அடிகளார் வளர்ச்சியடைந்துவிட்டார். அவருடைய யாத்திரையில் ஒரோவழி தளர்ச்சி ஏற்படும்போதெல்லாம் துணைவனுடைய குரலைக் கேட்கவேண்டும். இப்பொழுது அந்தக் குரல் செய்யும் பணியை அந்தக் குரலுக்குடையவனுடைய திருச்சிலம்பு

செய்கின்றது. 'சேவடிச் சிலம்பு அவை சிலம்பிட' என்ற தொடரின் பொருள் இதுவேயாகும். இந்தச் சிலம்பு ஒலி தமக்கு வழிகாட்டுபவனுடைய சிலம்பு ஒலி என்று அறிந்து கொண்டதும் சிலம்பொலிக்கு உரியவன் 'அருந்துணைவன்' என்று பேசப்பெறுகிறான்.

தையலார் வளையொலி மனத்தைமட்டும் கவர்ந்து அவர்கள்பால் ஈர்த்தது. ஆனால் தில்லைக்கூத்தனின் திருவடிச் சிலம்பொலி மனம் முதலிய அந்தக்கரணங்கள் நான்கையும், உயிரையும் சேர்த்தல்லவா ஈர்த்தது! அதனையே அடிகளார் 'திருந்து சேவடிச் சிலம்பு அவை சிலம்பிட' என்று பாடுகிறார்.

**573.** மாடும் சுற்றமும் மற்று உள போகமும்
மங்கையர் தம்மோடும்
கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்து என் தன் வெம் தொழில் வீட்டிட
மென் மலர்க் கழல் காட்டி
ஆடுவித்து எனது அகம் புகுந்து ஆண்டது ஓர்
அற்புதம் அறியேனே 5

மாடு, (செல்வம்) சுற்றம், மற்றுள போகம் என்பவற்றோடு அல்லாமல், இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மங்கையர் தம்மோடும் கூடி அங்குள குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை' என்று கூறியது திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்கு முற்பட்ட அமைச்சர்கால வாழ்வில் நடைபெற்றவை என்க.

இவ்வாறு இருந்த அவரை அவன் இப்பொழுது என்ன செய்தான் தெரியுமா? மென்மலர்க் கழல் காட்டினான், மகளிரின் கால்களையே கண்டுகொண்டிருந்த அவரை அவன் திருவடிகளைக் காணுமாறு செய்தான். சில விநாடிநேரம் அந்த மகளிர் தந்த இன்பத்திற்குப் பதிலாக வீட்டை அல்லவா தந்தான்! (வீடு தந்து). அவன் மென்

மலர்க் கழல்களைக் காட்டியவுடன் அவருடைய பழைய ஆட்டம் ஒழிந்தது. இதனையே 'என்தன் வெந்தொழில் வீட்டிட' என்கிறார் அடிகளார்.

அடுத்தபடியாக 'என் அகம் புகுந்தான். புகுந்தவுடன் நான் ஆடத் தொடங்கிவிட்டேன். என் பழைய ஆட்டத்திலும் இப்புதிய ஆட்டம் முற்றிலும் மாறுபட்டிருந்தது. மாடு, மனை, மகளிர் என்பவற்றில் ஆழ்ந்து ஆடும்போது 'நான்' என்ற ஒன்று தலைதூக்கி நின்றது. இந்த நான், உலகம் முழுவதையும், எனது என்ற போர்வைக்குள் புகுத்திவிட்டது.

'இப்பொழுது, மென்மலர்க்கழல் காட்டி ஆடுவித்தபோது என்ன புதுமை! என்ன வேறுபாடு! சில விநாடிகளுக்குப் பதிலாக, நீங்காத நிலையான பேரின்பம் நிலைத்துவிட்டது. முன்னர்த் தலைதூக்கிநின்ற 'நான்' இப்பொழுது எங்கே போயிற்றென்றே தெரியவில்லை. அது போய்விட்ட காரணத்தால் இந்த அற்புதத்தை அவன் எப்படி நிகழ்த்தினான், எவ்வாறு உள்ளே புகுந்தான், எவ்வாறு என்னை மறந்து ஆடுமாறு செய்தான் என்பதை நான் அறியமுடியவில்லை' என்ற கருத்தையே 'ஆண்டது ஓர் அற்புதம் அறியேனே' என்கிறார்.

**574.** வணங்கும் இப்பிறப்பு இறப்பு இவை நினையாது
மங்கையர் தம்மொடும்
பிணைந்து வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து அழுந்தி நான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்களும் குறிகளும் இலாக் குணக் கடல்
கோமளத்தொடும் கூடி
அணைந்து வந்து எனை ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 6

வணங்குதல் என்பது, நேராக நிற்கும் தம் உடலை வளைத்துப் பணிதலைக் குறிக்கும். மேலும்மேலும் முன்னேறிச் செல்லவேண்டிய ஆன்மாவை வினை வளைத்துப் பிடித்து

ஓர் உடம்பினுள் புகுமாறு செய்தலின் 'வணங்கும் இப்பிறப்பு' என்றார்.

இப்பாடலின் மூன்றாம் நான்காம் அடிகள் தமிழர் கண்ட பேருண்மையை விளக்கும் முறையில் அமைந்துள்ளன.

'குணங்களும் குறிகளும்' இல்லாத ஒன்றைக் 'குணக் கடல்' என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? குறியில்லாத ஒரு பொருள் கோமளத்தொடும் (உமையம்மையுடன்) வந்தது என்பதும் எவ்வாறு பொருந்தும்?

கடவுட்பொருளை அருவம், உருவம், அருவுருவம் என்ற மூன்று நிலைகளில் வைத்துப் பேசினர் இத்தமிழர். ஏதாவது ஒரு குறியீட்டின்மூலம் அதனைச் சுட்டத் தொடங்கினால் அந்தக் குறியீட்டுக்கு உள்ளாகவே அது அடங்கிவிடும் என்று மனித மனம் நினைக்கலாம் அல்லவா? இந்தப் பிரச்சினையைத் தவிர்க்கவே குறிகளின் உள்ளும் இருக்கிறான்; அவற்றிற்கு அப்பாலும் இருக்கிறான் என்ற இரண்டு மாறுபட்ட பொருள்களையும் உள்ளடக்கித், தொல்காப்பியர் காலத்திற்குமுன்பே 'கடவுள்' என்ற பெயரை அப்பொருட்குச் சூட்டினர்.

உள்ளே உள்ளது, அதே பொருள் கடந்தும் நிற்பது என்ற பொருளில் கடவுள் என்ற பெயர் அமைந்தது. இக்கருத்தையே மூன்றாம் அடியில் அடிகளார் குறிப்பிடுகின்றார் என்க.

**575.** இப்பிறப்பினில் இணை மலர் கொய்து நான்
இயல்பொடு அஞ்சு எழுத்து ஓதித்
தப்பு இலாது பொன் கழல்களுக்கு இடாது நான்
தட முலையார் தங்கள்
மைப்பு உலாம் கண்ணால் ஏறுண்டு கிடப்பேனை
மலர் அடி இணை காட்டி
அப்பன் என்னை வந்து ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 7

மனித மனத்தின் இயல்புகளில் முக்கியமானது, ஒரு செயலில் அதிகமாக ஈடுபட்டால் மற்றச் செயல்களை மறப்பதாகும். மானிடப் பிறப்பில் அடிகளாரளவு கல்வி முதலியவற்றில் மேம்படாமல் சாதாரண நிலையில் இருப்பவர்கள்கூடப் பூசை முதலியவற்றில் ஈடுபட்டுத் தங்கள் துன்பங்களைப் போக்கிக்கொள்ள முயல்வர். பூசனை புரிபவர் அனைவரும் உலகப்பொருட்கள் எதனையும் வேண்டாமல் நிஷ்காமியமாகப் பூசனை புரிகின்றனர் என்று சொல்ல இயலாது.

மேல்நிலையில் உள்ளவர்களும் சிவபூசை முதலியவற்றில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு ஈடுபடும் முறையை அடிகளார் இப்பாடலின் முற்பகுதியில் பேசுகிறார். 'இப்பிறப்பினில் இணைமலர் கொய்து இயல்பொடு அஞ்செழுத்து ஓதி, தப்பிலாது பொன் கழல்களுக்கு இடுதலே அம்முறை. அவ்வாறு தாம் செய்யவில்லை என்பதை இடாது' என்ற சொல்லால் குறிக்கின்றார்.

'இணைமலர்' என்றதால் மலர்களை மாலையாகக் கட்டி இறைவன் திருவடிக்குச் சாத்துகின்ற பழக்கம் அந்நாள்தொட்டே இருந்துவந்ததை அறியமுடிகிறது. அதைவிட அற்புதமான ஒரு செய்தியை 'இயல்பொடு அஞ்செழுத்து ஓதி' என்ற தொடரில் குறிக்கின்றார்.

அஞ்செழுத்து ஓதுதல் என்பது சரிதான். ஆனால் இயல்பொடு என்ற சொல்லை ஏன் இங்கே அடிகளார் பயன்படுத்துகிறார்? அப்படியானால் இயல்பாக எப்பொழுதும் அஞ்செழுத்து ஓதுதல், குறிப்பிட்ட எண்ணிக்கை ஜெபிக்க வேண்டும் என்ற கருத்தில் செயற்கையாக ஓதுதல் என இருவகை உண்டா? இயல்பொடு என்ற சொல்லை அடிகளார் பயன்படுத்தியமையால் மேலே கூறிய இருவகையினரும் அக்காலத்திலும் உண்டு என்பதை அறியமுடிகிறது.

அடிகளாருக்கு இரண்டு நூற்றாண்டுகள் முற்பட்ட நாவரசர் பெருமான் தம் காலத்திலும் இத்தகையவர்கள் உண்டு என்பதைப் 'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே' 'புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன் பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பன் அவர்தமை நாணியே' (திருமுறை:5,90-9) என்ற பாடலால் அறிவிக்கின்றார்.

இயல்பொடு அஞ்செழுத்து ஓதுதல் என்பது எடுத்த எடுப்பிலேயே யாருக்கும் வந்துவிடுவதில்லை. ஆனால், ஒரு சில காலப் பயிற்சிக்குப் பின்னர் இந்த ஐந்தெழுத்து ஓதுதல் மூச்சு விடுதல் இயல்பாக நடைபெறுதல் வேண்டும். வஞ்சகம் இல்லாமல், தன்னையும் பிறரையும் ஏமாற்றும் சூழ்நிலை இல்லாமல், உள்ளன்போடு உண்மையாக ஐந்தெழுத்தை ஓதல் வேண்டும் என்ற உறுதிப்பாடு மனத்திடை இருக்குமேயானால், ஒருசில காலப் பயிற்சியின் பின்னர் இயல்பொடு ஓதும் நிலை, தானே ஏற்பட்டுவிடும். இயல்பொடு என்று கூறியமையின் மனம் ஐந்தெழுத்து ஓதும் செயலில் ஒருங்கிணைந்து தொழிற்படுகிறது என்பது பெற்றாம்.

இயல்பொடு ஐந்தெழுத்து ஓதுதல் என்பதில் மனம், மொழி என்ற இரண்டிற்கும் உரிய பணியைத் தந்தாயிற்று. எஞ்சியிருப்பது மெய்(உடம்பு) ஒன்றுதான். இயல்பொடு ஐந்தெழுத்து ஓதத் தொடங்கும் மனத்தோடும், ஓதுகின்ற வாயோடும், இந்த உடல் ஒருங்கிணைந்து தொழிற்பட வேண்டுமேயானால், இந்த ஓதுதலோடு தொடர்புடைய ஒரு பணியை உடம்பிற்குத் தரவேண்டும். அதனையே முற்பகுதியில் 'இப்பிறப்பினில் இணைமலர் கொய்து தப்பிலாது பொன் கழல்களுக்கு இட' வேண்டும் என்கிறார்.

மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து செயற்பட்டாலொழிய வரப்போகும் ஆபத்திலிருந்து ஒருவர் தம்மைக் காத்துக்கொள்ள முடியாது. இந்த மூன்றில்

ஒன்றோ இரண்டோ குறைவதாயின், என்ன நிகழும் என்பதையே அடிகளார், 'தடமுலையார் தங்கள் மைப்பு உலாம் கண்ணால் ஏறுண்டு' கிடக்க நேரிடும் என்கிறார். இதற்கொரு காரணமுண்டு. மனிதன் காமவசப்படும்போது மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து செயற்படும். இதனை மாற்றி வேறு வழியில் செலுத்தத் தொடங்கினால், ஒன்றைமட்டும் செலுத்திப் பயனில்லை.

மகளிர் மயக்கத்தில் மனம், மொழி, மெய் என்ற மூன்றுக்கும் ஒரே இடத்தில் உணவு கிடைக்கிறது. இறை வழிபாட்டில் இந்த மூன்றையும் ஒருசேரச் செலுத்தினால் அன்றி அது முழுமைத்தன்மை பெறுவதில்லை.

மேலே கூறிய இரண்டு வழிகளில் இறைவழிபாட்டை விட்டுவிட்டு, தையலார் மையலில் மயங்கிக் கிடந்த தம்மையும் கருணை வள்ளலாகிய குருநாதர் திருவடிக் காட்சி தந்து ஆட்கொண்டது ஓர் அற்புதம் என்கிறார் அடிகளார்.

**576.** **ஊசல் ஆட்டும் இவ் உடல் உயிர் ஆயின**
**இரு வினை அறுத்து என்னை**
**ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்**
**உணர்வு தந்து ஒளி ஆக்கிப்**
**பாசம் ஆனவை பற்று அறுத்து உயர்ந்த தன்**
**பரம் பெரும் கருணையால்**
**ஆசை தீர்த்து அடியார் அடிக் கூட்டிய**
**அற்புதம் அறியேனே** 8

இப்பாடலின் முதலடி 'ஊசலாட்டும் இவ்வுடல் உயிர் ஆயின இருவினை அறுத்து' என்று தொடங்குகின்றது. இருவினை என்பது, நல்வினை-தீவினை என்ற இரண்டையும் குறிக்குமேனும் இவை இரண்டுமே பிறவியை உண்டாக்குவதற்குரிய விதைகளாகும். உயிரைப் பற்றியிருக்கும்

இந்த இரு வினைகளும் பிறவிதோறும் தொடர்ந்து வருகின்றன. அவை இறைவன் ஆணைப்படி இந்த உயிரை ஒவ்வொரு பிறப்பிலும் ஒவ்வொரு உடம்பிற்குள் புகுத்துகின்றன. அவ்வுடம்பினுள் இருக்கவேண்டிய வினை அளவு முடிந்தவுடன் அந்த உடம்பைவிட்டு உயிர் புறப்பட்டு விடுகிறது. புறப்பட்ட உயிரை விடுதலையடையவிடாமல் மற்றோர் உடம்பிற்குள் இவ்வினைகள் செலுத்துகின்றன. ஆகவே, இந்த உயிரை ஊஞ்சல் என்று உருவகிக்கிறார் அடிகளார்.

இந்த உடம்பு-அந்த உடம்பு, அந்த உடம்பு— இந்த உடம்பு என்று மாறிமாறி இந்த உயிர் சென்று தங்குவதால் இதனை ஊசலாட்டு என்கிறார் அடிகளார். இருவினை இருக்கின்றவரையில் இந்த ஊசலாட்டத்தை நிறுத்த முடியாது. எனவே. அடிகளாரின் உயிரை, இந்த ஊசலாட்டிலிருந்து விடுவிக்கக் கருதிய இறைவன், அதற்கு மூலகாரணமாகிய இருவினையை அறுத்தான் என்கிறார்.

'ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்' என்பது அடுத்து நிற்கும் தொடராகும். இதில் வரும் ஓசை என்பதற்குச் சொல் என்று பொருள் கண்டு, சொல்லாலாகிய கல்வி என நீட்டி, அக்கல்வியறிவால் உணருதற்கு அரியவன் என ஒரு சாரார் பொருள் கண்டுள்ளனர். இந்த உரையை ஏற்றுக்கொள்வதற்கு, 'உணர்வார்க்கு' என்றசொல் இடையூறாக நிற்கின்றது.

கல்வி அறிவால் எந்த ஒன்றையும் அறிய முடியுமே தவிர, உணர முடியாது. எனவே, 'ஓசையால் உணர்வார்க்கு' என்பதற்கு வேறு பொருள் காண்டல் தேவைப்படுகிறது.

ஓசை என்ற சொல் ஒலியோடு தொடர்புடையதாகும். வரம்புக்கு உட்பட்ட ஓசையை ஒலியென்றும், வரம்புக்கு உட்படாததை ஓசையென்றும் கொள்ளலாம். நான்கு சுரங்களுக்கு உட்பட்டு வருகின்ற வேதத்தை ஒலி சிறந்த

வேதம் என ஆளுடைய அரசு குறிக்கின்றார். 'ஓதிய ஞானமும்' (திருமுறை : 4:92-17) என்று தொடங்கும் பாடலில் 'ஒலிசிறந்த வேதமும்' என்று கூறுகின்றார். எனவே 'ஓசையால் உணர்வார்க்கு உணர்வரியன்' என்ற தொடருக்குக் குறுகிய அதிர்வுகளையுடைய மந்திரங்களை விடாமல் ஜெபிப்பதன் மூலம் அவனை உணரமுடியும் என்று நினைப்பவர்கட்கு அவர்கள் உணர்வுக்கு அப்பாற்பட்டவனாய் உள்ளான் என்பது பொருளாகும்.

பொதுவாக மந்திரங்கள் மூலம் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்று நம்புகிறவர்கள் அன்றும் உண்டு; இன்றும் உண்டு. இவர்கள் நம்பிக்கை ஓரளவிற்கு உண்மையானதுதான். அட்டமாசித்திகளைக்கூட எளிதாகக் கைவரப்பெறலாம். இந்த அளவில்தான் மந்திரங்களின் எல்லை முடிவடைகிறது. எனவே, இந்த மந்திரங்களைப் பயன்படுத்தி இறைவனை உணரமுடியும் என்ற நம்பிக்கை இடைக்காலத்தில் வலுப் பெற்றிருந்தது என்பது உண்மைதான்.

அனுபவ ஞானியாகிய அடிகளார் குருநாதரைத் தரிசித்தார். அந்தக் குருநாதர் தம்முட் புகுவதை அறிவினால் அறிந்தார்; உணர்வினாலும் உணர்ந்தார். எந்த மந்திரமும் செய்யமுடியாத ஒரு செயலை- அதாவது அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றும் செயலைக் குருநாதர் செய்தார் என்பதை அறியவும் செய்தார்; உணரவும் செய்தார்.

இவ்வளவு அனுபவங்களைப் பெற்ற அடிகளார் ஒன்றைச் சொல்வாரேயானால், நாம் அதனைத் தலைவணங்கி ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை.

ஓசையால் உணர்தற்கு அரியவனாகிய அவன் 'உணர்வு தந்து ஒளியாக்கி, பாசம் ஆனவை பற்றறுத்தான்' என்று கூறுகிறார்.

'ஓசையால் உணர்தற்கு அரியவன்' என்றார்; அடுத்து அவரே 'உணர்வு தந்து' என்று கூறுகிறார். ஈதென்ன விந்தை! இவை ஒன்றுக்கொன்று முரணானவை. சற்று நின்று நிதானித்தால் அவர் கூற்றிலுள்ள நுணுக்கம் நன்கு விளங்கும்.

'ஓசையால் உணர்வார்க்கு அரியவன்' என்பதில் உணர முயன்ற கர்த்தா மனிதனாவான். 'உணர்வுதந்து' என்று கூறும்போது உணர்வைத் தருதலுக்குக் கர்த்தா இறைவன் ஆவான்.

தான் கர்த்தாவாக நின்று மனிதன், மந்திரங்களை உருவேற்றி, தன் உணர்வுக்குள் இறைவன் சிக்கவேண்டும் என்று நினைத்தால், அது நடவாத காரியம். இதனையே அடிகளார் 'ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்' என்கிறார். மறுதலையாக அடியவனுடைய உணர்வுக்குள் அகப்பட்டுக்கொள்ள வேண்டுமென்று அவனே நினைந்தால் அதையும் யாரும் தடுக்கமுடியாது. அதனையே அடிகளார் அவனே விரும்பி உணரும் 'உணர்வு தந்து' என்கிறார்.

பாடலின் நான்காவது அடியில் காணப்படும் 'ஆசைதீர்த்து' என்ற தொடர் கவனமாகப் பொருள் கொள்ள வேண்டிய ஒன்றாகும். வாலாயமாகப் பொருள்கொள்கின்ற முறையில் பற்று, பாசம் ஆகியவற்றைப் போக்கினான் என்பதோடு சேர்த்து, மனத்தில் தோன்றும் ஆசைகளையும் போக்கினான் என்று பொருள் கொள்வது சரியாகப்படவில்லை

ஆசை அறுத்து அல்லது ஆசை அழித்து என்று அடிகளார் கூறியிருப்பின் இப்பொருள் பொருந்தும். 'ஆசை தீர்த்து' என்றல்லவா கூறியிருக்கிறார். ஆசைப்பட்டது கிடைத்தவுடன் 'ஆசை தீர்ந்தது' என்று சொல்லுகிறோம். இந்த அடிப்படையில் பாடலின் நான்காவது அடியைக்

கொண்டு கூட்டுச் செய்துகொண்டால் பொருள் நன்கு விளங்கும். அடியார் அடிக்கூட்டி ஆசைதீர்த்த அற்புதம் அறியேனே என்று கொண்டால் அடியரோடு கூடவேண்டும் என்ற அடிகளாரின் நீண்டநாள் ஆசையைப் பெருந்துறைக் குருநாதர் தீர்த்து வைத்த அற்புதம் தெரியவரும்.

**577.** பொச்சை ஆன இப் பிறவியில் கிடந்து நான்
புழுத்து அலை நாய்போல
இச்சை ஆயின ஏழையர்க்கே செய்து அங்கு
இணங்கியே திரிவேனை
விச்சகத்து அரி அயனும் எட்டாத தன்
விரை மலர்க் கழல் காட்டி
அச்சன் என்னையும் ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 9

'பொச்சையான இப்பிறவி' என்பது அடர்த்தியும், இருளும் துன்பமும் நிறைந்த காடுபோன்ற இப்பிறப்பு ஆகும்.

ஒரு குறிப்பிட்ட குறிக்கோளோ வரையறையோ இல்லாமல் இங்குமங்கும் அலைகின்ற நாய்போல, பெண்கள் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக இங்குமங்கும் தாம் அலைந்து திரிந்ததாக அடிகளார் கூறுகிறார். அப்படியான தம்மையும் ஆண்டுகொண்டது அற்புதம் என்கிறார்.

**578.** செறியும் இப் பிறப்பு இறப்பு இவை நினையாது
செறி குழலார் செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டை அம் கண்களும்
உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லை இல்லாத தன்
இணை மலர்க் கழல் காட்டி
அறிவு தந்து எனை ஆண்டுகொண்டு அருளிய
அற்புதம் அறியேனே 10

மாபெரும் கல்வியாளராகிய அடிகளார், இப்பிறப்பு நிலையில்லாதது, அடுத்தடுத்து வருவது என்பதை அறிந்திருத்தல் வேண்டும். இதனை அறிய இயல்பான அறிவும் கல்யறிவுமே போதுமானவை. இவை இரண்டையும் பெற்றிருந்தும், தையலார் மையலில் மயங்கிநின்று, அவர்களுடைய 'கிறியும் (பொய்ம்மை, வஞ்சனை) கீழ்மையும்' அறிய முற்படாமல், வாழ்ந்தேன் என்கிறார். இருந்தபொழுதும் குருநாதர் அவற்றைப் பொருட்படுத்தாமல் 'இணை மலர்க் கழல்காட்டி' ஆண்டுகொண்டார். அம்மட்டோடு இல்லை. பழைய வாழ்க்கையிலுள்ள குறைபாட்டை அறியும் அறிவையும் தந்தார் என்கிறார்.

இப்பாடலில் வரும் 'அறிவு தந்து' என்பது திருவாசகத்தில் அதிகம் காணப்படாத பிரயோகம் ஆகும். அறிவுக்கும் உணர்வுக்கும் உள்ள வேறுபாட்டை அடிகளார் நன்கு அறிந்தவர் ஆவார். எனவே, இங்கு அறிவு தந்து என்ற அவருடைய தொடருக்குத் தையலார் மயக்கம் நெறிப்படுத்தப்பட வேண்டிய ஒன்று என்ற அறிவைத் தந்து என்று பொருள் கொள்வதே சிறப்புடையதாகும்.

ௐ ௐ ௐ

# 42. சென்னிப் பத்து

## [சிவ விளைவு]

இப்பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் 'சென்னி' என்று வருதலால் சென்னிப் பத்து என்ற பெயர் கொடுக்கப்பெற்றுள்ளது.

சேவடிக்கண் நம் சென்னி மன்னி மலருமே, சேவடிக்கண் நம் சென்னி மன்னித் திகழுமே, சேவடிக்கண் நம் சென்னி மன்னிப் பொலியுமே, சேவடிக்கண் நம் சென்னி மன்னிச் சுடருமே என்ற முறையில் பாடல்கள் முடிகின்றன. சேவடிக்கண் என்ற சொல்லிலுள்ள கண் என்ற ஏழாம் வேற்றுமை உருபு, இடம் என்ற பொருளைத் தருவதால் இந்தக் கண் உருபைச் சேவடிக்கே ஏற்றிப் பலரும் பொருள் கண்டுள்ளனர்.

இடத்து என்றும் பொருளுடைய இந்தக் கண்ணுருபைச் சென்னிக்கும் ஏற்றலாம். திருப்பெருந்துறையில் குருநாதர் பூமியில் பதித்திருந்த தம் திருவடிகளை அடிகளார் வணங்கியவுடன் அடிகளாரின் திருமுடிமேல் வைத்தருளினார் என்று பல இடங்களிலும் கூறப்பெற்றுள்ளது. அந்த அடிப்படையில் கண்ணுருபைச் சென்னிக்கு ஏற்றி, திருவடி, சென்னிக்கண் மன்னி மலருமே, என்று பொருள் கொள்வதில் தவறொன்றும் இல்லை. மலருமே என்று கூறியதால் சென்னியில் வைப்பதற்குமுன் அது கூம்பியிருந்தது, சென்னிக்கண் வைத்ததால்தான் அது மலர்ந்தது என்று பொருள்செய்து இடர்ப்படத் தேவையில்லை.

மலருமே, திகழுமே, பொலியுமே, சுடருமே என்ற சொற்கள், விளங்கின என்ற பொருளிலேயே ஆளப் பெற்றுள்ளன. அதாவது, சென்னிக்கண் மன்னிய சேவடிகள் விளங்கின என்ற அளவில் மேலே கூறிய சொற்கள் அனைத்தும் பொருள் தந்து நிற்பதைக் காணலாம்.

இவ்வாறு பொருள் கொள்ளாமல் திருவடிக்கண் சென்னி சென்று மன்னியதால் அந்தச் சென்னி அஞ்ஞானம் முதலியவை நீங்கி மலர்வதாயிற்று என்று பொருள் கூறுவதிலும், பெருந் தவறொன்றுமில்லை.

என்றாலும், திருவடிக்கண் சென்று நிலைபெற்ற காரணத்தால் தம் சென்னி மலர்ந்தது, பொலிந்தது, சுடர்ந்தது, திகழ்ந்தது என்றெல்லாம் அடிகளார் கூறிக்கொள்வாரா என்பது சிந்திக்கற்பாலது. இவை அனைத்தும் நடைபெற்றிருக்கலாம் என்றாலும், இவ்வளவு வெளிப்படையாகத் தம் சென்னி மலருமே, திகழுமே, பொலியுமே, சுடருமே என்றெல்லாம் அடிகளார் கூறிக் கொள்வாரா என்று நினைத்தால் இவ்வாறு பொருள் கொள்வதைவிட முதலிற் கூறிய முறையில் பொருள் கூறுவது சிறப்புடையதோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

அடிகளார் திருமுடிமேல் குருநாதர் திருவடியை வைத்தது சில விநாடி நேரமே. என்றாலும், அடிகளாரைப் பொறுத்தவரையில் அந்தத் திருவடி சம்பந்தம் இருபத்துநான்கு மணிநேரமும் அடிகளார் மனத்தைவிட்டு நீங்கவேயில்லை. அந்த அடிப்படையில்தான், எல்லா நேரமும் தம் சென்னிக்கண் குருநாதர் திருவடி நிலைபெற்று (மன்னி) மலர்கின்றது, திகழுகின்றது, சுடர்கின்றது, பொலிகின்றது என்று கூறிச் செல்கிறார்.

மன்னி என்ற சொல் மிக ஆழமானதும், இன்றியமையாததுமாகிய ஒரு பொருளைத் தந்துநிற்கிறது.

திருவடி சென்னியில் பட்டது ஒருவிநாடி நேரம்தான். அந்தத் திருவடி சம்பந்தம் நேரிடையாக நடைபெற்ற நிலை ஒருவிநாடிதான் என்றாலும், சென்னியில் வைக்கப்பெற்ற திருவடி சென்னியை விட்டு நீங்கவேயில்லை. அங்கேயே நிலை பெற்றுவிட்டது. அதை வலியுறுத்தவே ஒவ்வொரு பாடலிலும் சென்னி மன்னி (நிலைபெற்று) விட்டது என்று பாடுகிறார்.

வாழ்க்கையில் நம்மால் பெரிதும் விரும்பப் பட்டவர்கள் மறைந்துவிட்டால்கூடப் பல நாட்கள்வரையில் அவர்கள் நம்மைவிட்டு நீங்காமல் உடனிருப்பது போன்ற பிரமை ஏற்படுவது பலருடைய அனுபவத்தில் கண்டிருக்கலாம். கேவலம் உடல் காரணமாகப் பெற்ற உறவே, நீங்கிய பிறகும் இருக்கின்றது என்பதுபோலப் பிரமையை உண்டாக்கும் என்றால் சத்திய சொரூபனின் திருவடி தம் சென்னியில் நிலைபெற்றுவிட்டது என்று அடிகளார் பேசுவதில் வியப்பொன்றுமில்லை அல்லவா?

திருவடி சம்பந்தம் பெற்ற காரணத்தால், சென்னியில் முன்னர் இருந்த அஞ்ஞானம் முதலியவை நீங்கப்பெற்றது உண்மைதான். அஞ்ஞானம் நீங்கப்பெற்றதால் அது இருந்த இடத்தில் மெய்ஞ்ஞானம் நிறைந்தது என்பதும் உண்மைதான். என்றாலும் மெய்ஞ்ஞானத்தைப் பெற்று என் சென்னி மலர்ந்தது என்று அடிகளாரே கூறிக்கொள்வாரா என்பது சிந்திக்கற்பாலது. இதனை மனத்துட் கொண்டு பார்த்தால் இவ்வாறு பொருள்கொள்வதைவிடச் சென்னிக்கண் என்று முதலிற் கூறப்பெற்ற பொருளே ஏற்புடையதாகத் தெரிகிறது.

சென்னி மன்னி மலருமே என்ற தொடரை வைத்துக்கொண்டு, மலர்ந்த ஒன்று காயாகிக் கனியாகி விளையும் என்று நினைத்த யாரோ ஒருவர், திருவடியைச் சிவம் என்று பொருள் கொண்டு, 'சிவ விளைவு' என

உட்தலைப்புத் தந்துள்ளார்போலும். வழக்கம்போல இதுவும் பொருந்தாத குழறுபடியாகவே உள்ளது.

579. தேவ தேவன் மெய்ச் சேவகன்
தென் பெருந்துறை நாயகன்
மூவராலும் அறி ஒணா முதல்
ஆய ஆனந்த மூர்த்தியான்
யாவர் ஆயினும் அன்பர் அன்றி
அறிஒணா மலர்ச் சோதியான்
தூய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிச் சுடருமே 1

தேவ தேவனாகவும், மெய்ச்சேவகன்(வீரன்) ஆகவும் உள்ள ஒருவன் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மூவராலும் அறியப்படாதவன். ஆனால், அவன் ஆனந்தமே வடிவாக உள்ளான். அப்படியிருக்க, இந்த மூவரோ தேவர்களோ அறியவில்லையென்றால் யாருமே அறியமுடியாமல் எங்கோ இருக்கின்ற ஒருவன் என்று நினைந்துவிடக்கூடாது என்பதற்காக மூன்றாவது அடியில் அவனை அறிபவர் யார் என்று விளக்கம் கூறுகிறார்.

அவனை அறிவதற்கு ஒன்றே ஒன்றுதான் தேவை. அந்த ஒன்றிருந்தால் அதனை உடையவர் 'ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும்' (திருமுறை 6:95-10) அவனை (உணர்ந்து அனுபவிக்க) முடியும்; ஏன் ஓரளவு அறியவும் முடியவும். அந்த ஒன்றில்லாவிட்டால் தேவராகப் பிறந்தாலும், மூவருள் ஒருவராக இருந்தாலும் அவனை அறிய முடியாது என்ற பேருண்மையை 'யாவராயினும் அன்பர் அன்றி அறியொணா மலர்ச் சோதியான்' என்ற அடியில் அற்புதமாக விளக்கியுள்ளார். அந்த ஒன்று என்ன என்பதை அன்பர் அன்றி என்ற சொற்களால் குறிப்பிட்டுவிட்டார். எனவே, அன்பராக இருப்பின் யாராக இருந்தாலும் அதாவது ஆவுரித்துத் தின்பவராக இருந்தாலும்கூட அவனை அறியமுடியும் என்கிறார்.

இதைவிடச் சிறப்பு ஒன்றும் இந்த அடியில் உண்டு. அன்பரால் அறியப்படும் இவன் யார்? மலர்ச்சோதியான் என்றல்லவா அவனை விளக்குகின்றார். இது என்ன வேடிக்கை! சோதி வடிவாகவுள்ள ஒருவனை, இமையா நாட்டமுடைய தேவர்களும், எட்டுக் கண்களையுடைய நான்முகனும், மூன்று கண்களையுடைய உருத்திரனும், தாமரை மலர்போன்ற இரண்டு கண்களையுடைய நாரணனும் ஏன் காணமுடியவில்லை? அந்த மலர்ச்சோதியை நேரிடையாகப் பார்க்க முடியாது.

இந்தச் சோதியினைப் பார்க்க அன்பு என்ற கண்ணாடி தேவை. இந்தக் கண்ணாடி அணிந்தவர் யாராக இருப்பினும் அவனைக் காணமுடியும். இக்கண்ணாடி அணியாதவர் எத்தனை கண்களை உடையவராயினும் அவனைக் காணமுடியாது என்பதையே 'யாவராயினும் அன்பரன்றி அறியொணா மலர்ச்சோதியான்' என்று பாடுகிறார்.

அத்தகைய பெருமானுடைய தூய மலர்போன்ற சேவடி தம் சென்னிக்கண் நிலையாகத் தங்கி (மன்னி) விளங்குகிறது என்று பாடுகிறார். இங்கு 'சுடரும்' என்ற சொல், ஒளிவிட்டு விளங்குகிறது என்ற பொருளைத் தருகிறது

இந்தப் பாடல் பாடுகின்ற நேரத்தில் குருநாதர் எதிரே இல்லை. அவருடைய திருவடியும் அடிகளாரின் திருமுடி மேல் இல்லை என்றுதான் அடிகளாரைக் காண்பவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால், அந்தத் திருவடிகள் அடிகளாரின் திருமுடிமேல் நிலைத்துநின்று, ஒளி விடுகின்றன என்றல்லவா அடிகளார் கூறுகின்றார்.

சோதி வடிவானவனை இரண்டுக்கு மேற்பட்ட கண்களை உடையவர்கள்கூட ஏன் காணமுடியவில்லை? தூய அன்புக் கண்ணாடி அணியாததால்தானே? அதேபோல அடிகளாரிடத்தோ குருநாதரிடத்தோ தூய அன்பு பூண்டவர்களல்லாமல் ஏனையோருக்குச் சென்னி மன்னி மலரும் சேவடியின் சுடர் ஒளியைக் காண்பது இயலாத காரியம் என்க.

580. அட்ட மூர்த்தி அழகன் இன் அமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச் சிவலோக நாயகன்
தென் பெருந்துறைச் சேவகன்
மட்டு வார் குழல் மங்கையாளை ஓர்
பாகம் வைத்த அழகன் தன்
வட்ட மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே 2

*சிட்டன்-மேலானவன்*

*மலர்ச்சேவடி என்று கூறியிருப்பின் எந்த மலர் என்ற ஐயம் தோன்றும். எல்லா மலர்களும் மென்மையும் அழகும் உடையன; திருவடியும் அவ்வாறே. இந்தப் பொதுத்தன்மை போக, திருவடிக்குப் பொதுவாக உவமை கூறப்பெறும். மலர், தாமரை ஆகும். ஏனைய மலர்களிலிருந்து தாமரையை வேறு பிறித்துக் காட்ட, 'வட்டமாமலர்' என்றார்.*

*சிவலோகம் என்ற சொல்லிற்கு முன்னர் 'மெய்' என்ற அடைகொடுத்தது, அதற்கு மறுதலையான பொய் என்ற சொல்லிலிருந்து விலக்கு அளிப்பதற்கன்று. இங்கு மெய் என்பது 'சத்தியசொரூபம்' என்ற பொருளைத்தரும் சொல்லாகும். நாயகன் சத்தியசொரூபன் ஆதலால் அவன் உறைகின்ற சிவலோகமும் அதே இயல்பைப் பெறுவதாயிற்று. இதனால் 'மெய்ச்சிவலோகம்' என்றார்.*

581. நங்கைமீர் எனை நோக்குமின் நங்கள்
நாதன் நம் பணி கொண்டவன்
தெங்கு சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன் நாயகன்
மங்கை மார் கையில் வளையும் கொண்டு எம்
உயிரும் கொண்டு எம் பணி கொள்வான்
பொங்கு மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னிப் பொலியுமே 3

இந்நாட்டு மரபுபற்றி, அடிகளார் தம்மைப் பெண்ணாகக் கற்பித்துக்கொண்டு இப்பாடலைப் பாடுகிறார்.

இறைவன் ஒருவனே ஆண்மகன், ஏனைய உயிர்கள் அனைத்தும் அவனைப் பற்றிப்படரும் கொடிகள் போன்றவை; ஆதலின் எல்லா உயிரும் பெண்களே என்று கொள்ளும் மரபு இந்நாட்டிடை தொன்றுதொட்டு உண்டு. வைணவர்கள் நாராயணமூர்த்தியைப் புருஷோத்தமன் என்று கூறுவர்.

ஒருவனும் ஒருத்தியும் இணைந்து காதல் வாழ்க்கையைத் தொடங்கும்போது அந்த வாழ்க்கையின் அடிப்படையில் ஆழமாக நிலைபெற்றிருக்கும் ஒன்றை அறிதல் வேண்டும். ஒருவர்மேல் ஒருவர் கொள்ளும் அன்பு வளர்ச்சியடைந்து ஒருநிலையில் உடல்தான் இரண்டே தவிர, இருவருக்குமே உயிர் ஒன்றுதான் என்ற நிலை தோன்றும். இந்த நிலையில் அந்தத் தலைமகனுக்கு, 'தான்' என்ற தனித்தன்மையும் அவளுக்குரிய தனித்தன்மையும் மெள்ளக் கரைந்துவிடுகின்றன. எனவே, இந்தக் காதல் வாழ்க்கை, அழிக்க முடியாத தன்முனைப்பை அழிக்க உதவுகிறது.

இதனையே அடிகளார் 'தோகைக்கும், தோன்றற்கும் ஒன்றாய்வரும் இன்ப துன்பங்களே' என்று திருக்கோவை யாரில் (71) மிக அற்புதமாகப் பாடியுள்ளார்.

அகத்துறை வாழ்க்கையின் அடிப்படை, தன்முனைப்பை அறவே போக்குதல் என்ற உண்மையைக் கண்டுகொண்ட நம் பெரியோர், தன்முனைப்பை அறவே போக்குகின்ற மற்றொன்றையும் கண்டனர். அதுவே பேரின்பமாகும். எனவே, ஒன்றைச் சிற்றின்பம் என்றும், மற்றொன்றைப் பேரின்பமென்றும் கூறினர்.

சிற்றின்பத்தின் முதிர்ச்சி தன்னை மறந்து தன் நாமம் கெடுதல் ஆகும்; பேரின்பத்தின் முதிர்ச்சியும் அதுதான்.

ஆகவேதான் இத்தமிழர் ஆண்—பெண் வேறுபாடின்றி உயிர்கள் அனைத்தையும் தலைவியாகக் கொண்டு, இறைவன் ஒருவனையே தலைவனாகக் கொண்டு பக்தியின் முதிர்ச்சியில் அகத்துறைப் பாடல்கள் பாடினர்.

இந்த அடிப்படையைப் புரிந்துகொள்ள முடியாத ஜி.யூ.போப் போன்ற திருவாசக பக்தர்கள் இதுபோன்ற பாடல்களை அடிகளார் ஏன் பாடினார் என்று புரிந்துகொள்ள முடியாமல் தவித்தனர்.

இப்பாடல், அடிகளார் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு, ஏனைப் பெண்களையும் உடன் சேர்த்துக்கொண்டு தன்மைப் பன்மையில் பாடியதாகும்

'சகதோழிகளே! நம்முடைய நாதனாகிய சிவபெருமான் நாம் செய்யும் பணியை ஏற்றுக் கொள்கிறான். பெருந்துறையில் உள்ள பெருமான் தன்மாட்டு அன்புசெய்யும் சில பெண்களின் வளைகளை மட்டும்தான் கவர்ந்தான். ஆனால், என்ன வேடிக்கை! நம்மைப் பொறுத்தவரையில் நம் பணிகளை ஏற்றுக்கொண்டு, வளைகளையும் கவர்ந்துகொண்டதோடு அன்றி நம் உயிர்களையும் அல்லவா கவர்ந்துவிட்டான்! அத்தகைய பெருமானுடைய திருவடி நம்முடைய தலைகளின்மேல் நிலையாகத் தங்கிப் பொலிவதைக் காண்பீர்களாக' என்கிறார்.

**582.** பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்து பார்ப்பான் எனச்
சித்தர் சூழச் சிவபிரான்
தில்லை மூதூர் நடம் செய்வான்
எத்தன் ஆகி வந்து இல் புகுந்து எமை
ஆளுங்கொண்டு எம் பணி கொள்வான்
வைத்த மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே

*தில்லைக் கூத்தன் தன் நடனத்தை விட்டு, திருவடியைப் பிரியாத அடியார்களையும் உடனழைத்துக் கொண்டு, அந்தண வடிவில் பெருந்துறைக்கு வந்து, தமக்கு அருள்செய்த சிறப்பை இப்பாடலில் கூறுகின்றார்.*

*அடிகளாரும் பிறரும் அறியாமல் அவர்களுடைய உள்ளங்களிற் புகுந்து பணியும் கொண்டான் ஆதலின் அவனை 'எத்தன்' என்கிறார்.*

**583.** மாய வாழ்க்கையை மெய் என்று எண்ணி
மதித்திடா வகை நல்கினான்
வேய தோள் உமை பங்கன் எங்கள்.
திருப்பெருந்துறை மேவினான்
காயத்துள் அமுது ஊற ஊற நீ
கண்டுகொள் என்று காட்டிய
சேய மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே 5

*இப்பாடலின் மூன்றாவது அடி ஆழமாகச் சிந்தித்துப் பொருள் கொள்ள வேண்டிய பகுதியாகும்.*

*குருநாதரின் சேவடி சென்னிக்கண் மன்னித் திகழ்கின்ற காரணத்தால் இரண்டு செயல்கள் நடைபெற்றன.*

*சென்னியில் சேவடி படுவதற்கு முன்னர் அந்த உடம்பு ஏனையோருடைய உடம்பைப்போலவே பொறி புலன்களால் கட்டுண்டு வினை வயத்ததாய், தன்முனைப்போடு கூடியதாய் இருந்தது. இது திருவாதவூரர் என்ற அமைச்சரின் உடல் அமைப்பு இருந்தவாறாகும். அந்த உடம்பில் குருதி முதல் சுக்கிலம் வரை ஊறினவே தவிர வேறு எதுவும் நிகழவில்லை. இல்லை! தவறு. அந்த உடம்பினுள் எல்லையற்ற கவலைகள், துன்பங்கள், துயரங்கள் என்பவை நூற்றுக்கணக்கில் குடியிருந்தன. திருவாதவூரரின் இத்தகைய உடம்பின் ஒரு*

பகுதியாகிய தலையின்மேல் குருநாதரின் திருவடி நிலைபெற்றுத் தங்கிய அந்த விநாடி என்ன நிகழ்ந்தது தெரியுமா? இரத்தம் ஊறிக்கொண்டிருந்த அந்த உடலில் திருவடி பட்டவுடன் அமுது மேலும்மேலும் ஊறலாயிற்று. திருவடி பட்ட இடம் திருவாதவூரரின் தலைதானே? அதனால் அத்தலையில் மட்டும்தான் அமுது ஊறியிருக்கும் என்று நினைத்துவிடவேண்டா. அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றப்பெற்றன ஆதலால் உடம்பு முழுவதும் அமுதம் பாய்ந்தது என்பதையே 'காயத்துள் அமுது ஊறஊற' என்கிறார் அடிகளார். இது முதலாவது செயலாகும்.

பல சமயங்களில் நம்மிடம் புறத்தும் அகத்தும் ஏற்படுகின்ற மாறுதல்களை நாமே கவனிக்காமல் இருந்து விடுவதும் உண்டு. அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் நண்பர்கள், நம்மிடம் ஏற்பட்டுள்ள மாறுதல்களைச் சுட்டிக்காட்டி வியக்கின்றனர். அதேபோல அடிகளாரின் உடம்பில் அமுது ஊற ஊற அடிகளார் அதனைக் கவனிக்காமல் இருந்திருத்தல் வேண்டும். இதற்கும் ஒரு காரணம் உண்டு. திருவடியினிடத்துக் கொண்ட பக்தி காரணமாகச் சுயநினைவை மறந்து குருநாதர் திருவடியிலேயே முற்றிலுமாக ஈடுபட்டிருந்தார் ஆதலின், தம்முடைய உடம்பினுள் ஏற்பட்ட இம்மாற்றத்தை அடிகளார் முதலில் கவனிக்கவில்லைபோலும்! இப்பொழுது குருநாதர் என்ன செய்தார் தெரியுமா? கவனிக்காமல் இருந்த அடிகளாரை, அவருடைய அகத்துள் ஏற்பட்ட மாறுதலை, 'காண்பாயாக!' என்று ஏவினார். அந்த ஏவலையும் அத்திருவடியே செய்தது என்ற கருத்தில் 'நீ கண்டுகொள்! என்று காட்டிய சேய மாமலர்ச் சேவடி' என்று பாடுகிறார். இதுவே திருவடி செய்த இரண்டாவது செயலாகும்.

584. சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு
தீ வினை கெடுத்து உய்யல் ஆம்
பத்தி தந்து தன் பொன் கழல்கணே
பன் மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும்
அப்புறத்து எமை வைத்திடும்
மத்தன் மா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே 6

*திருப்பெருந்துறை நாயகன் தமக்குச் செய்த பேருபகாரத்தை வரிசைப்படுத்திக் கூறுகிறார் அடிகளார்.*

*'இவ்வாழ்வு வீணாகாமல் உய்வதற்குரிய பக்தியை எமக்குத் தந்தான்; அதனால் பல வகையான மலர்களைக் கொய்து அவன் திருவடிகளில் சாத்தி வழிபட்டேன். நான் செய்தது வழிபடுதலாகிய ஒரேயொரு செயலைத்தான். இந்த ஒன்றுக்குப் பதிலாக அவன் என்ன செய்தான் தெரியுமா? முதலாவதாக என் தீவினையைக் கெடுத்தான்! தீவினை நீங்கித் தூய்மை அடைந்த காரணத்தால் என் சித்தத்துள் புகுந்தான்; புகுந்ததோடு நிற்கவில்லை, என்னை ஆட்கொள்ளவும் செய்தான்.*

*பக்தியுடன் திருவடிகளில் மலரைச் சாத்திய ஒரே செயலுக்காக மேலே கூறியவற்றைச் செய்ததோடு நில்லாமல் ஊமத்தம் பூவைச் சூடிய (மத்தன்) அப்பெருமான், மூவுலகுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் வீடுபேற்றில் (முத்தியில்) என்னை வைத்தான். அத்தகைய பெருமானின் திருவடி என் சென்னியில் நிலைபெற்று மலர்வதைக் காண்போமாக' என்கிறார்.*

*ஒரு சில மலரைக் கொய்து அவன் திருவடிகளில் இட்ட ஒரே காரணத்திற்காக என் சித்தத்துள் புகுதல், என்னை ஆட்கொள்தல், என் தீவினை கெடுத்தல், உய்வதற்குரிய பக்தியை எனக்குத் தருதல், இறுதியாக*

*வீடுபேற்றையும் தருதல் ஆகிய இத்தனையையும் தந்த ஒருவனைப் பைத்தியம் என்று சொல்வதில் தவறில்லை என்ற அழகிய கருத்துப்பட இப்பாடல் அமைந்திருத்தலின், நான்காம் அடியின் தொடக்கத்தில் 'மத்தன்' (பைத்தியம்) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்.*

*இவ்வாறு சொள்ளாமல் 'அத்தன்' என்று பாடம் கொள்வாரும் உளர்.*

*வீடுபேறு என்பது தேவர் உலகத்தில் சென்று துய்ப்பது என்ற கொள்கையிலும் மாறுபட்டு மூவுலகத்திற்கும் அப்பாற்பட்டது என்ற கருத்து இந்நாட்டைப் பொறுத்தவரை சைவர் வைணவர் ஆகிய இருவரிடையேயும் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. அடிகளார் கூறிய இதே கருத்தைக் கம்பநாடனும் வாலிவதைப் படலத்தில், வாலி மூவுலகையும் கடந்த வீட்டுலகை அடைந்தான் என்ற கருத்தை 'இறந்து வாலி அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்' (வாலிவதை—159) என்று பாடிச் செல்கிறார்.*

**585.** பிறவி என்னும் இக்கடலை நீந்தத் தன்
பேர் அருள் தந்தருளினான்
அறவை என்று அடியார்கள் தங்கள்
அருள் குழாம் புகவிட்டு நல்
உறவு செய்து எனை உய்யக்கொண்ட
பிரான் தன் உண்மைப் பெருக்கம் ஆம்
திறமை காட்டிய சேவடிக்கண் நம்
சென்னி மன்னித் திகழுமே 7

*இப்பாடலின் பிற்பகுதியில் வரும் 'உண்மைப் பெருக்கமாம் திறமை காட்டிய சேவடி' என்ற தொடரைப் பின்வருமாறு கொண்டுகூட்டுச் செய்தல் நலம். 'பெருக்கமாம் திறமை(யின்) உண்மை காட்டிய சேவடி' என்பது ஓர் ஆழமான பொருளை உட்கொண்டதாகும்.*

இந்தச் சேவடி திறமையின் பெருக்கத்தைக் கொண்டது. திறமை பெருகிவிட்டால் அது எவ்வாறு பணிபுரியும் என்று சொல்வதற்கில்லை. ஒரு குறிப்பிட்ட துறையில் பணிபுரியும் திறமை, வேறொரு துறைக்குப் பயன்படுவது கடினம். ஆனால், மாபெரும் ஆற்றலையுடைய இத்திருவடியின் உண்மைத் தன்மை என்ன தெரியுமா? சுடுகாட்டில் நட்டமாடிக்கொண்டே பிரபஞ்சத்தையும் நடத்திச்செல்லும் திறமையுடையது. இப்பிரபஞ்சத்தில் எங்கோ ஒரு மூலையில் தனிமனிதனாக வாழ்ந்து துயர்ப்படும் துணையிலி (அறவை) ஆகிய ஒருவரை அடியார் கூட்டத்தினிடையே சென்றிருக்குமாறு செய்ய வல்லது. அம்மட்டோ! அந்தத் துணையிலியின் பிறப்பை அறுக்கவும் வல்லது.

நட்டமாடுவது, தனி மனிதரைக் காப்பாற்றுவது என்ற இரண்டு செயல்களையும் கண்டபிறகு இந்தத் திருவடியின் பேராற்றல் நட்ஞ் செய்யத்தான் பயன்படும்போலும் என்று யாரேனும் நினைத்தால், அவர்கள் அதன் உண்மைத் தன்மையை அறியாதவர்கள் ஆவர்.

பிரபஞ்சத்தை உய்வித்தல் தனிமனிதனின் பிறப்பை அறுத்தல் ஆகிய செயல்களைச் செய்த அதே திருவடிகள் காலனையும் எட்டி உதைத்து அவன் உயிரையும் போக்கும் திருவடிகளாகும்.

திருவடியின் பேராற்றலின் உண்மைநிலை இதுவேயாகும்

586. புழுவினால் பொதிந்திடு குரம்பையில்
பொய் தனை ஒழிவித்திடும்
எழில்கொள் சோதி எம் ஈசன் எம்பிரான்
என்னுடை அப்பன் என்று என்று
தொழுத கையினர் ஆகித் தூ மலர்க்
கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு
வழு இலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி மலருமே 8

*'எழில் கொள் சோதி, எம் ஈசன், எம்பிரான், என்னுடை அப்பன் என்று என்று (ஏத்திக்கொண்டு) தொழுத கையினராகி, தூமலர்க் கண்கள் நீர் மல்கு தொண்டர்க்கு' தவறாமல் கிடைக்கக்கூடிய (வழுவிலா) மலர்ச் சேவடி, இப்பொழுது என் சென்னியின்கண் மலர்ந்துள்ளது என்றபடி,*

*இக்கருத்தை நாவரசர் பெருமான் திருவையாற்றுப் பதிகத்தில் முன்னின்ற தொண்டரைக் கோதில் செந்தேன் தெளித்துச் சுவையமுது ஊட்டி அமரர்கள் சூழிருப்ப அளித்துப் பெருஞ்செல்வமார்க்கும் ஐயாறன் அடித்தலமே (திருமுறை:4,92-7) என்றும், சுழலார் துயர் வெயில் சுடும்போது அடித்தொண்டர் துன்னும் நிழலாவன் (திருமுறை:4,92-19) என்றும் பாடியருளுதலைக் காணலாம்.*

**587.** **வம்பனாய்த் திரிவேனை வா என்று**
**வல் வினைப் பகை மாய்த்திடும்**
**உம்பரான் உலகு ஊடு அறுத்து அப்**
**புறத்தன் ஆய் நின்ற எம்பிரான்**
**அன்பர் ஆனவர்க்கு அருளி மெய்**
**அடியார்கட்கு இன்பம் தழைத்திடும்**
**செம் பொன் மா மலர்ச் சேவடிக்கண் நம்**
**சென்னி மன்னித் திகழுமே** **9**

*அமைச்சுத் தொழில் பூண்டு உலகியல் முறையில் பல்வேறு செயல்களைச் செய்துகொண்டிருந்தாலும் அவருடைய வாழ்வு முன்னேற்றத்திற்கு அச்செயல்கள் எவ்வித உதவியும் செய்யவில்லை ஆதலால் 'வம்பனாய்த் திரிவேனை' என்றார். இவரோ இந்த உலகியற் சூழலிற் சிக்குண்டு பல்வேறு பணிகளைச் செய்துகொண்டிருந்தார். இவரை ஆட்கொண்டவனோ மன வாசகம் கடந்த நிலையில் உள்ளவனாவான். அப்படியிருக்கின்ற ஒருவனுக்கு இந்த வம்பனை அழைத்து ஆட்கொள்ள வேண்டிய*

தேவை என்ன? இந்த வம்பர் அவர் இருக்குமிடம் சென்று தம்மை ஆட்கொள்ள வேண்டுமென்று வேண்டினாரா? இல்லையே! அப்படியிருக்க உம்பரான் ஆகிய அவன் இவரை 'வா' என்று அழைத்து, இவருடைய வல்வினையை ஒரே விநாடியிற் போக்கினான்.

உம்பரான் என்று சொன்னவுடன் ஏதோ தேவலோகத்தில் உள்ளவன் என்று நினைத்துக்கொண்டு அண்ணாந்து பார்க்கவேண்டா. இங்கு அவர் கூறிய உம்பர் இந்தப் பிரபஞ்சம் முழுவதையும் கடந்து அப்பால் இருக்கும் இடத்தில் உள்ள ஒருவனைக் குறிப்பது ஆகும். அந்த இடத்தில் உள்ளவன், வம்பனாய்த் திரிந்த ஒருவரை ஆட்கொண்டது அவன் காட்டிய கருணையின் வெளிப்பாடாகும்.

வம்பனாய்த் திரிந்த ஒருவருக்கு அருள்செய்தது எது தெரியுமா? அவனுடைய கருணை பொங்கும் விழிகளோ, அபயம் தரும் கைகளோ அல்ல. பின்னர் எது? 'அன்பர் ஆனவர்க்கு அருளி (அருள்செய்து) மெய் அடியார்கட்கு இன்பம் தழைத்திடும் செம்பொன் மாமலர்ச் சேவடி' ஆகும் அது.

**588.** **முத்தனை முதல் சோதியை முக் கண்**
**அப்பனை முதல் வித்தினைச்**
**சித்தனைச் சிவலோகனைத் திரு**
**நாமம் பாடித் திரிதரும்**
**பத்தர்காள் இங்கே வம்மின் நீர் உங்கள்**
**பாசம் தீரப் பணிமினோ**
**சித்தம் ஆர்தரும் சேவடிக்கண் நம்**
**சென்னி மன்னித் திகழுமே.** **10**

குருநாதரின் திருவடிகளைத் தொழுது பிறப்பை அறுத்து வீடுபேற்றைப் பெறும் பயனைப் பெற்றவர் ஆதலின் உயிர்கள்மாட்டுக் கொண்ட எல்லையற்ற கருணையால் தாம்

பெற்ற சிறப்பையும் அதற்குரிய காரணத்தையும் அதனைப் பெறும் வழியையும் இப்பாடலில் அருளிச்செய்கின்றார் அடிகளார்.

இறைவன் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டு திரிகின்ற அடியார்களைப் பார்த்து, தம் கருணைப் பெருக்கால் 'இங்கே வாருங்கள்' என்று அழைக்கின்றார் அடிகளார். அழைத்து, 'உங்கள் பாசம் தீரவேண்டுமேயானால், அதாவது உங்கள் பிறப்பு அறவேண்டுமேயானால் நான் கண்ட வழியை இதோ உங்களுக்குச் சொல்கிறேன்' என்கிறார். அது என்னவழி தெரியுமா?

'உங்கள் புறமனம், அகமனம் என்பவற்றைத் தாண்டி, மேற்சித்தத்தையும் கடந்து, அடிச்சித்தம்வரை சென்று அங்கு நிறைந்திருக்கும் அவன் திருவடிகளைப் பணிவீர்களாக' என்கிறார்.

ௐ ௐ ௐ

# 43. திரு வார்த்தை

## [அறிவித்து அன்புறுதல்]

*இப்பதிகத்திற்குத் திருவார்த்தை என்ற தலைப்பை முன்னோர் தந்துள்ளனர். எந்த அடிப்படையில் திருவார்த்தை என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தனர் என்பதை அறியக்கூடவில்லை. ஆயினும், பெரிய புராணத்தில் வரும் ஒரு தொடர் இதற்கு உதவிற்றோ என்று நினைக்கத் தோன்றுகிறது.*

*காரைக்கால் அம்மையார் புராணத்தின் ஐந்தாம் பாடலில் 'அண்டர் பிரான் திருவார்த்தை அணைய வருவன பயின்று' என வரும் பகுதியிலுள்ள திருவார்த்தை என்ற சொல்லில் ஈடுபட்டவர்கள் அதனை இங்குப் பயன்படுத்தினர் என்று நினைக்கத் தோன்றுகிறது.*

*அம்மையாருடைய வரலாற்றிலும், அவர் பாடல்களிலும் அதிகம் ஈடுபட்டுள்ளவர் இத்தலைப்பைத் தந்தவர்கள் என்பதைக் கோயில் மூத்த திருப்பதிகத்தின் முன்னுரையிலும் குறித்துள்ளோம். அதே அடிப்படையில்தான் 'திருவார்த்தை' என்ற தலைப்பும் தரப்பெற்றுள்ளது போலும்.*

*இறைவன் புகழ் பாடுதலின் திருவார்த்தை எனப் பெயரிட்டனர் என்றும் சில உரையாசிரியர்கள் குறிப்பிடுவர். இறைவன் திருவிளையாடல்களைப்பற்றிக் கூறுதலின் திருவார்த்தை (வார்த்திகம்) எனப் பெயரிட்டனர் என்றும் சிலர் கூறுவர்.*

*அப்படியானால் திருவார்த்தை என்பதற்கு என்ன பொருள் காண்பது? இப்பதிகத்திலுள்ள பாடல்கள் அனைத்தும் முற்பகுதியில் இறைவன் புகழைப்*

பாடுகின்றன. பாடல்களின் பிற்பகுதிகள் இறைவனின் பரங்கருணையை நன்கு அறிந்து அதனை அனுபவித்த அடியார்களை இறைவனென்றே அடிகளார் நினைப்பதாக அமைந்துள்ளன.

வைகுந்த நாதனை நேரடியாகப் பாடி அருள் பெற்ற ஆழ்வார்கள் பதினொருவர் ஆவர். இத்தொகுப்பிற் சேராமல் அதாவது நேரடியாக வைகுண்ட நாதனைப் பாடாமல், அவன் அருளைப் பூரணமாகப் பெற்ற நம்மாழ்வாரையே இறையென நினைத்து, அவரைப் பாடியவர் மதுரகவி என்ற பெருமகனார். இதன் காரணமாகவே இறைவனை நேரே பாடிய ஆழ்வார்களுள் இவரும் ஒரு ஆழ்வாராக இடம்பெற்றார்.

அப்பூதியடிகள், பெருமிழலைக் குறும்பனார் என்ற இருவரும் முறையே ஆளுடைய அரசரையும், ஆளுடைய நம்பியையுமே இறையெனப் போற்றி வழிபட்டு உய்கதி அடைந்ததால் நாயன்மார் வரிசையில் இடம்பெற்றனர் என்பதும் மேலே கூறிய கருத்துக்கு அரண்செய்வதாகும்.

இறையருட் போக்கை அறிந்துகொண்டவர்களை 'எம்பிரான் ஆவாரே' என்று அடிகளார் பாடியது இந்நாட்டு மரபை ஒட்டியே பாடப்பெற்றதாகும்.

இறையருள் யார்யாருக்கு எவ்வகையில் அருள்புரிகிறது என்பதைப் புறத்தே நிற்பவர்கள் அறியமுடியாது. பல நேரங்களில் அந்த இறையருளைப் பெறுபவர்கள்கூடத் தமக்குக் கிடைத்தது அந்த அருள்தான் என்று புரிந்து கொள்வதில்லை. இதுவே பெரும்பாலான உலகியற்கை.

இதன் மறுதலையாக இறையருள் எவ்வாறெல்லாம் வந்து உதவுகிறது என்பதை அறியக்கூடியவர் சிலரேயாவர். தமக்கு மட்டுமல்லாமல் பிறருக்குச் செய்யப்பட்ட அருளைக்கூட, தம் இறையனுபவம் காரணமாக அறிந்து

*கொள்ளக் கூடியவர் மிகமிகச் சிலரேயாவர். இத்தகைய பெருமக்களை அருளாளர்கள் என்றும், இறைவனே என்றும்கூடக் கூறிவிடலாம்.*

*இறைவனை வழிபடுவதோடு அல்லாமல், அல்லது இறைவனை வழிபடாமற்கூட அருளாளர்களை இறைவன் என்றே நினைத்து வழிபடுவது இந்நாட்டு மரபாகும்.*

*திருவார்த்தையின் பாடல்களின் இறுதியாக 'அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே' என்றும், 'திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே' என்றும் வரும் தொடர்கள் மேலே கூறிய கருத்திற்கு அரண்செய்கின்றன.*

*இந்தப் பாடல்களில், அன்று புழக்கத்தில் இருந்த பல கதைகளை அடிகளார் எடுத்துப் பேசியுள்ளார்.*

*'அறிவித்து அன்புறுதல்' என்பது வழக்கம்போலக் குழப்பத்தை உண்டாக்கும் உட்தலைப்பாகவே அமைந்துள்ளது.*

**589.** மாதிவர் பாகன் மறை பயின்ற
　　வாசகன் மா மலர் மேய சோதி
கோது இல் பரம் கருணை அடியார்
　　குலாவும் நீதி குணம் ஆய நல்கும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
　　புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப் பிரமம் வெளிப்படுத்த
　　அருள் அறிவார் எம்பிரான் ஆவாரே　　1

*முதலடியின் இறுதியிலுள்ள 'மா மலர் மேய சோதி' என்பது திருக்குறளை அடியொற்றி எழுந்த பகுதியாகும். 'மலர் மிசை ஏகினான்' (திருக்குறள்:3) என்ற தொடரில் மலர் என்பது இதய கமலம் என்ற பொருளைத் தந்துநிற்கிறது. அக்கருத்தையே சற்று விரிவுபடுத்தி ஏகினவனைச் சோதியாக உருவகித்து 'மா மலர் மேய சோதி' என்று பாடுகிறார் அடிகளார்.*

இதய கமலம் என்று இவர்கள் பேசுவது இரத்த ஓட்டத்திற்கு உதவிசெய்யும் இருதயத்தைக் குறிப்பதன்று. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களில் நான்காவதாகவுள்ள அநாகதம் என்ற பகுதியையே இது குறிப்பதாகும். இந்த ஆறு ஆதாரங்களும் தாமரை மலர்போன்றவை என்று சொல்லப்படுகிறதேதவிரப் பரு உடற்கூறு அமைப்பில் இவற்றிற்குத் தனிவடிவம் உண்டா என்பது தெரியவில்லை. எனவே, அடிகளார் 'மாமலர் மேய சோதி' என்று கூறுவது இதய கமலத்தில் தோன்றும் சோதி வடிவினையே ஆகும்.

நான்காவது அடியிலுள்ள 'ஆதிப் பிரமம்' என்ற தொடர்பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. பிரமம் என்ற சொல் தேவாரம் முதலியவற்றில் இடம்பெறவில்லை. இருக்கு வேதத்திலும், பிரமத்திற்குத் தனிச்சிறப்புப் பேசப்பெறவில்லை. முக்கியமான பதினொரு உபநிடதங்களில் கடோபநிடதம் 'பிரமம்' என்ற சொல்லைப் பயன் படுத்துகிறது என்றாலும், மூலப்பொருள் என்ற பொருளில் அதனைப் பயன்படுத்துகிறதா என்பது ஆராய்ச்சிக்குரியது.

'ஏகம் சத்' என்ற வேத வாக்கியம் பிரமத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாமேனும், வேத காலத்தில் பிரமத்திற்கு இவ்வளவு சிறப்பு இல்லை. உபநிடதங்களில் மட்டுமே படிப்படியாகச் சிறப்புப் பெற்ற பிரமம், பதினோராவது உபநிடதமான சுவேதாஸ்வதர உபநிடதத்தில் பெரும் சிறப்பைப் பெறுகிறது. முதன்முதலாகச் சிவபெருமானை மூலப்பொருள் என்று கூறி, அதுவே பிரமம் என்று கூறிய பெருமை பதினோராவது உபநிடதமான சுவேதாஸ்வதர உபநிடதத்திற்கே உரியது.

வேதத்திலும் ஏனைய உபநிடதங்களிலும் சிவபெருமானுக்கு இத்தகைய சிறப்பு தரப்பெறவில்லை.

இவை அனைத்திற்கும் எதிராகச் சுவேதாஸ்வதர உபநிடதம் சிவபெருமானையே பிரமம் என்று குறிக்கின்றது. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவரசர் பெருமானும் அடிகளாரைப்போல இந்த உபநிடதத்தில் அதிகம் ஈடுபட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

நாவரசர் பெருமானின் 'விறகில் தீயினன்' (திருமுறை:5-90-10) என்று தொடங்கும் பாடல் சுவேதாஸ்வதர உபநிடதத்தின் ஒரு பாடலின் முழு மொழிபெயர்ப்பாகும். நாவரசரை அடுத்து, இரண்டு நூற்றாண்டுகள் கழித்து வந்த அடிகளாரும் இந்த உபநிடதக் கருத்தை 'ஆதிப்பிரமம்' என்ற சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் அப்படியே எடுத்து ஆள்கிறார்.

இந்தப் பிரமத்தின் இயல்பை உணர்ந்தவர்கள் தம்மால் வழிபடப்படும் இறைவனாகவே கருதப்படுவர் என்ற புதுமையான கருத்தை 'அருள் அறிவார் எம் பிரானாவாரே' என்ற தொடரில் குறிப்பிடுகின்றார்.

பிரான் என்ற சொல் அனைத்திற்கும் தலைவனாகவுள்ள இறைவனையே குறிக்கும். அடியார்களை இறைவனாகவே கருதி வழிபடும் மரபு மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் நாட்டில் பரவியிருந்தமையைப் பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களின் வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இதுவரை அடியார்கள் என்று அடிகளார் கூறியது திருப்பெருந்துறையில் குருநாதர் எதிரேயிருந்த அடியார்களையே ஆகும். 'தெருளார் கூட்டம் காட்டாயேல்' (385) என்றும், 'உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' (378) என்றும் வரும் பகுதிகள் திருப்பெருந்துறையில் கண்ட அடியார் கூட்டத்தையே குறிக்கும்.

ஆனால், திருவார்த்தையில் கூறப்பெறும் அடியார்கள் இவர்களின் வேறானவர்கள். இவர்கள் உலகிடை பூத உடலோடு வாழ்கின்றவர் ஆவார்கள். இந்த உடலுடன்

இங்கே வாழ்ந்தாலும் இவர்கள் ஏனையோரிலும் வேறுபட்டவர் என்பதைக் குறிக்கவே 'அருள் அறிவார்' (589) என்றும், 'திறமறிவார்' (590) என்றும், 'ஆண்டு கொண்ட இயல்பு அறிவார்' (592) என்றும், 'அருளும் பரிசு அறிவார்' (593) என்றும் இதுபோன்ற பல தொடர்களால் கூறிச்செல்கிறார்.

மேலே கூறப்பெற்ற தனிச்சிறப்புக் காரணமாகவே, இந்த அடியார்களை மனித உடலோடு வாழும் 'எம்பிரான் ஆவார்' என்று அடிகளார் சிறப்பித்துப் பேசுகிறார்.

திருப்பெருந்துறைக் கூட்டத்தைத் தவிர வேறு யாரையும் இவ்வளவு சிறப்புத் தந்து அடிகளார் பேசியது இல்லை. இந்தப் புதுவழி, அடிகளார் மனத்தில் தோன்றிய, வெளிப்பட்டுத் தெரியாத, ஒரு புரட்சியை அறிவிப்பதாகும்.

**590.** **மால் அயன் வானவர் கோனும் வந்து**
**வணங்க அவர்க்கு அருள்செய்த ஈசன்**
**ஞாலம் அதனிடை வந்திழிந்து**
**நல் நெறி காட்டி நலம் திகழும்**
**கோல மணி அணி மாடம் நீடு**
**குலாவும் இடவை மட நல்லாட்குச்**
**சீலம் மிகக் கருணை அளிக்கும்**
**திறம் அறிவார் எம்பிரான் ஆவாரே** **2**

இப்பாடலில் அந்த மூலப் பரம்பொருள் இம்மண்ணிடை இறங்கி வந்து உயிர்கள் உய்ய நல்நெறி காட்டிற்று என்று கூறுவதன் மூலம், குருநாதராக வந்தவர் யாரென்பதைப் பேசுகின்றார்.

'இடவை மட நல்லாட்குக் கருணை அளிக்கும்' என்ற பகுதியில், பிட்டு விற்ற வாணிச்சியின் கதை பேசப் பெற்றுள்ளது எனப் பலரும் கூறியுள்ளனர். இது மேலும் சிந்திப்பதற்கு உரியது. மடநல்லாள் என்று அடிகளார்

கூறியிருத்தலின் அடிகளார் கூறும் பல்வேறு கதைகளில் பிட்டு வாணிச்சி அல்லாத மற்றோர் இளம்பெண்ணை இச்சொல் குறிக்குமோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது. பிட்டு விற்றவள் வயது முதிர்ந்த மூதாட்டி என்றே புராணங்கள் பாடிச்செல்கின்றன. 'மட நல்லாள்' என்ற பெயர் இதனோடு பொருந்துமாறில்லை.

**591.** அணி முடி ஆதி அமரர் கோமான்
ஆனந்தக் கூத்தன் அறுசமயம்
பணி வகை செய்து படவு அது ஏறிப்
பாரொடு விண்ணும் பரவி ஏத்தப்
பிணி கெட நல்கும் பெருந்துறை எம்
பேர் அருளாளன் பெண் பால் உகந்து
மணி வலை கொண்டு வான் மீன் விசிறும்
வகை அறிவார் எம்பிரான் ஆவாரே 3

'அமரர் கோமானாகிய ஆனந்தக்கூத்தன் அறு சமயத்தோரும் தன்னை வழிபட வழிவகுத்து மேலுலகோர், மண்ணுலகோர், ஆகியோர் அனைவரும் தன்னைப் பரவி ஏத்தப் பெண்பால் உகந்து, பரவி ஏத்துபவர்களின் பிறவியாகிய பிணி கெட அருள்வான். அவன் யாரென்று தெரியுமா? அமரர் தொழுது ஏத்துபவனாகிய அவன், சாதர்ரண வலைஞனைப்போல் படகில் ஏறி வலைவீசி மீன்பிடித்தான்' என்க. வலைவீசி மீன்பிடித்தான் என்பது வலைவீசிய திருவிளையாடல் கதையைக் குறிப்பதாகும்.

அறுவகைச் சமயம் என்பதற்கு அகச்சமயம் ஆறும் என்று பொருள் கூறுவது ஏற்புடையதாகத் தெரியவில்லை.

**592.** வேடு உரு ஆகி மயேந்திரத்து
மிகு குறை வானவர் வந்து தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்
சிந்தனை செய்து அடியோங்கள் உய்ய

ஆடல் அமர்ந்த பரிமா ஏறி
ஐயன் பெருந்துறை ஆதி அந்நாள்
ஏடர்களை எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பு அறிவார் எம்பிரான் ஆவாரே 4

*'மயேந்திர மலையில் வேடுருக் கொண்டு இறைவன் இருந்தானாக, தேவர்கள் அவனை இன்னானென்று அறியாமல் தேடினார்கள். அத்தகைய பெருமான் குதிரைச் சேவகனாகக் குதிரைமேல் ஏறி அடியார்களாகிய நாங்கள் உய்யும்பொருட்டு இங்கு வந்து எங்களை ஆண்டுகொண்டான். இந்த நுணுக்கத்தை அறிந்தவர்களை எம்பிரான் என்றே கருதுகிறோம்.*

*'மனிதர்களினும் தாங்கள் மேம்பட்டவர்கள் என்று கருதித் தருக்கித் திரியும் தேவர்கள், மயேந்திர மலையில் வேடுருக் கொண்டு அமர்ந்திருந்தவனை, அவன் இன்னானென்று அறிந்தார்களில்லை. ஆனால் குதிரைச் சேவகனாக வந்தவனைக் கண்டவுடனேயே இன்னானென்று அறிந்து கொள்ளும் ஆற்றலுடையவர்களை எம்பிரான் என்றே நான் கருதுகின்றேன்' என்றவாறு.*

*'தேவர்கள் தேடிச்சென்றும் காண்பரியானாகிய அவன், தொழும்பர்களை (ஏடர்களை) ஆட்கொள்ள வேண்டி விரைந்து செல்லும் பரிமா ஏறி வந்தான்' என்க.*

**593.** வந்து இமையோர்கள் வணங்கி ஏத்த
மாக் கருணைக் கடல் ஆய் அடியார்
பந்தனை விண்டு அற நல்கும் எங்கள்
பரமன் பெருந்துறை ஆதி அந்நாள்
உந்து திரைக் கடலைக் கடந்து அன்று
ஓங்கு மதில் இலங்கை அதனில்
பந்து அணை மெல் விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் எம்பிரான் ஆவாரே 5

'இமையோர்கள் வணங்கி ஏத்த இருந்த பெருமான், திருப்பெருந்துறையில் மானுட உருக்கொண்டு வந்து அடியார்களாகிய எம்முடைய ஆணவம் முதலிய குற்றங்கள் விண்டு அற்றுப்போகும்படியாகச் செய்தான். இதுமட்டுமா? அன்றொருநாள் இலங்கையர்கோன் மனைவி மண்டோதரி எல்லையற்ற பக்தியுடன் இப்பெருமானை வழிபட, அங்கே சென்று அவளுக்கு மகனாய்த் தோன்றி அருள் செய்தான்' என்க. இது உத்தரகோசமங்கைப் புராணக் கதையைத் தழுவியது.

594. வேவத் திரிபுரம் செற்ற வில்லி
வேடுவன் ஆய்க் கடி நாய்கள் சூழ
ஏவல் செயல் செய்யும் தேவர் முன்னே
எம்பெருமான் தான் இயங்கு காட்டில்
ஏ உண்ட பன்றிக்கு இரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதி அன்று
கேவலம் கேழல் ஆய்ப் பால் கொடுத்த
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே 6

இப்பாடலின் முதல் மூன்று அடிகள் தவம் செய்யும் அர்ச்சுனனுக்கு அருள்செய்ய ஒரு பன்றியை விரட்டிச் சென்று அதன்மேல் அம்புவிட்ட கதையைப் பேசுகின்றன. காட்டில் நடந்த இக்கதைக்கு ஏற்ப, பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த கதையும் அமைந்திருத்தலின் இரண்டையும் ஒன்றாக்கிப் பாடினார்.

இரண்டும் காட்டில் நடந்தவை; ஒரு பன்றியைக் கொன்றும், மற்றோரிடத்தில் தாய்ப்பன்றியை நினைத்து வருந்தும் பன்றிக்குட்டிகளுக்குத் தாய்ப் பன்றியாய்ச் சென்றும் திருவிளையாடல் செய்த சம்பவங்கள் பேசப்படுகின்றன. இரண்டு கதைகளிலும் பன்றிகள் இடம்பெறுகின்றன. மிகத் தாழ்ந்ததும் மிகக் கேவலமாகக்

கருதப்படுவதுமாகிய விலங்கு பன்றி என்று கூறுவர். அந்தப் பன்றிக் குட்டிகளுக்கு, தானும் பன்றியாக மாறிப் பால் கொடுத்தான் என்ற கதை, அவனுடைய எளிவந்த தன்மைக்கு ஈடிணையற்ற எடுத்துக்காட்டாகும்.

'பெருந்துறை ஆதி' என்றமையின் அனைத்திற்கும் மூலமாய் உள்ள அவன் பெருமை கூறியவாறாயிற்று. அவ்வளவு பெருமைவாய்ந்த அந்த ஆதி, என்ன செய்தது? திரிபுரங்களை அழித்தது. அது அந்த ஆதியின் எல்லையற்ற பேராண்மைக்கு எடுத்துக்காட்டாகும். திரிபுரத்தை அம்பு எய்யாமல் சிரித்தே எரித்த அந்த ஆதி, கேவலம் ஒரு பன்றியின்மேல் அம்பை எய்தது. இது அந்த ஆதிக்கு ஓர் விளையாட்டு.

அப்படியிருந்தும் அதே ஆதி, தாயை இழந்து வருந்தும் பன்றிக் குட்டிகட்குப் பாலுட்டியது என்றால், அதனுடைய பெருமையை அறிபவர்களை இறை என்றே கூறுகிறார் அடிகளார்.

ஆணவம் கொண்ட திரிபுரத்தை அழித்தது மறக்கருணையின்பாற்படும். தன் கை அம்பினால் பன்றியை எய்தது அப்பன்றிக்கு வீடுபேறு அளிக்க மேற்கொண்ட உபாயமாகும். அம்பு எய்தலைமட்டும் எடுத்துக் கொண்டால் அது மறச்செயல். அதன் முடிவில் பன்றிக்கு வீடுபேறளித்தது கருணையாகும். ஆகவே, இதனை மறக்கருணை எனலாம். ஆனால், பன்றிக்குட்டிகள் எக்குற்றமும் உடையவை அல்லவாதலால் அவற்றின் துயரைப் போக்கத் தானே தாய்ப்பன்றி ஆயினான். சர்வ வல்லமை உள்ள அவன் இருந்த இடத்தில் இருந்தே கருணை பாலித்துப் பன்றிக்குட்டிகளின் பசியைப் போக்கியிருக்கலாம். இவ்வாறு செய்திருப்பின் பன்றிக் குட்டிகளின் பசி அடங்கியிருக்கும். ஆனால், தாய் முலையைப் பற்றிச் சுவைக்கும் அந்த இன்ப அனுபவம் கிட்டாமல் போயிருக்குமே! அதனால்தான் அந்தக்

கருணை வள்ளல் தானே தாய்ப்பன்றி ஆயினான் என்ற இந்த நுணுக்கத்தை அறிகின்ற அடியார்களை எம்பிரான் என்று கூறுவதில் வியப்பொன்றுமில்லை.

**595.** நாதம் உடையது ஓர் நல் கமலப்
போதினில் நண்ணிய நல் நுதலார்
ஓதிப் பணிந்து அலர் தூவி ஏத்த
ஒளி வளர் சோதி எம் ஈசன் மன்னும்
போது அலர் சோலைப் பெருந்துறை எம்
புண்ணியன் மண்ணிடை வந்து தோன்றிப்
பேதம் கெடுத்து அருள் செய் பெருமை
அறியவல்லார் எம்பிரான் ஆவாரே 7

'திருமகளும், கலைமகளும் வேண்ட அவ்விருவர்க்கும் இரங்கி அருள் செய்த பெருமான் என்ன செய்தான்? மண்ணிடை வந்து குருநாதராகத் தோன்றினான். ஏன்? உயிர்களுக்கு இயல்பாக அமைந்துள்ள பேத உணர்வை போக்குவதற்காகவே அவன் குருநாதராக வந்தான்' என்க.

பொருள்களிடையே வேறுபாடு இல்லை என்பதை அறிவு வாதத்தால், தருக்க ரீதியாக எவ்வளவு எடுத்துக் கூறினாலும் மனிதன் பேத உணர்வை விட்டுநீங்குதல் என்பது ஏறத்தாழ இயலாத காரியம். இறையருள் பெற்ற அருளாளர்கள் மட்டுமே இந்தப் பேத உணர்வைப் போக்க முடியும். 'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி' என்று தாயுமானவப் பெருந்தகை பாடும்போது, பேத உணர்வு நீங்கிய நிலையைப் பார்க்கின்றோம். இது இறை அருளால் கிட்டுவதேயன்றி, மனித முயற்சியால் கிட்டுவதன்று. இந்த நுணுக்கத்தைதான் குருநாதராக வந்தவர் 'பேதம் கெடுத்தார்' என்கிறார் அடிகளார்.

பேதம் கெடுத்தவனை இன்னான் என்று அறிபவர்கள் எம்பிரானாகக் கருதத் தக்கவர்கள்.

596. பூ அலர் கொன்றை அம்மாலை மார்பன்
போர் உகிர் வன் புலி கொன்ற வீரன்
மாது நல்லாள் உமை மங்கை பங்கன்
வண் பொழில் சூழ் தென் பெருந்துறைக் கோன்
ஏது இல் பெரும் புகழ் எங்கள் ஈசன்
இரும் கடல் வாணற்குத் தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர் தோள் புணரும்
உருவு அறிவார் எம்பிரான் ஆவாரே 8

*கூர்மையான நகங்களையுடைய புலியைக் கொன்ற வீரன் என்பது தாருகாவனத்துக் கதையை அடிப்படையாகக் கொண்டதாகும். 'தீயில் தோன்றும் ஓவிய மங்கையர் தோள் புணரும்' என்ற தொடர் குறிப்பிடும் கதை விளங்குமாறில்லை.*

597. தூ வெள்ளை நீறு அணி எம்பெருமான்
சோதி மயேந்திர நாதன் வந்து
தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்
தென்னன் பெருந்துறை ஆளி அன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன் கழல் காட்டிக் கசிந்து உருக
கேதம் கெடுத்து என்னை ஆண்டருளும்
கிடப்பு அறிவார் எம்பிரான் ஆவாரே. 9

*கிடப்பு—நிலை*

*'தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்' என்ற தொடரால் தேவர்கள்கூடத், தூரத்தே நின்று வணங்கும் திருவடிகளைத் தம் தலைமேல் வைத்து அருள்புரிந்தான் என்கிறார். அதன் பயனாகப் பிறவியால் வரும் துன்பத்தைக் கெடுத்து (கேதம் கெடுத்து) ஆண்டான்.*

*'இதனால் விளைந்த மாபெரும் பயனொன்று உண்டு. அது யாதெனின், யான் உள்ளம் உருகுமாறு செய்ததே ஆகும். இந்த உருக்கம் என்பால் தோன்றத் திருவடி*

வைத்தல் மட்டுமா செய்தான்? எல்லையற்ற கருணையையும் காட்டினான். எல்லா உயிர்களையும் உய்விக்கும் தன் திருவடிகளையும் காட்டினான்.

'இவற்றின் பயனாகவே என் கேதங்கள் அகன்றன; உள்ளம் உருகிற்று. இதனை அறிந்தவர்கள் எம்பிரானுக்குச் சமமாவார்கள்' என்றபடி.

**598.** **அம் கணன் எங்கள் அமரர் பெம்மான்**
**அடியார்க்கு அமுதன் அவனி வந்த**
**எங்கள் பிரான் இரும் பாசம் தீர**
**இக பரம் ஆயது ஓர் இன்பம் எய்தச்**
**சங்கம் கவர்ந்து வண் சாத்தினோடும்**
**சதுரன் பெருந்துறை ஆளி அன்று**
**மங்கையர் மல்கு மதுரை சேர்ந்த**
**வகை அறிவார் எம்பிரான் ஆவாரே** **10**

குதிரை விற்கும் வணிகர்கள் கூட்டத்தோடு (சாத்தோடு) வந்தவன் மாபெரும் திறமையுள்ளவன் (சதுரன்). ஆதலால் வழியோடு செல்கையிலேயே மதுரை மங்கையர் சங்கு வளையல்களைக் கவர்ந்தான்.

வளையல்களைக் கவர்ந்தான் என்றால், தன் அழகு காரணமாக மங்கையர் மையல் கொள்ளும்படி செய்தான் என்றே பொருள் கூறிவருகின்றனர். இந்நாட்டு மரபின்படி இறைவன் ஒருவனே புருஷன் என்றும், எல்லா உயிர்களும் பெண்கள் என்றும் கொள்வது தொன்றுதொட்டு இருந்து வருகிறது. அந்த அடிப்படையில் பெண்களைக் காதல் கொள்ளச் செய்தான் என்று பொருள் கூறி வருகின்றனர்.

ஆனால், இங்கே இவ்வாறு பொருள் செய்வது மனத்திற்குத் திருப்தியளிப்பதாக இல்லை. இதற்கு வேறுவகையாகப் பொருள்கொள்ளலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது. குதிரைச்சேவகன் உண்மையில் ஆலவாய்ச்

சொக்கன்தானே! எந்த வடிவத்தை அவன் எடுத்துக் கொண்டாலும் ஒளிவடிவான அப்பெருமானின் தேஜஸ் எல்லோரையும் கவர்ந்து இழுக்கும் என்பதில் ஐயமொன்றும் இல்லை. அவனைக் காணும்போது ஏற்படும் ஈடுபாடு, கேவலம் உடல்பற்றியது அன்று. அது உயிர்பற்றிய தாகும்.

அவனைக் கண்டவர்கள் உள்ளம் ஒருமுகப்படுகின்றது; மனம் சலிப்பின்றி நிற்கிறது; ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்கின்றது. அதன் பயனாகக் குருதியோட்டம் குறைந்து ஒருவகைத் தளர்ச்சி ஏற்படுகிறது. இதனால் கைவளையல்கள் கழலுகின்றன.

மனிதர்களிடையே தோன்றும் காமம் அல்லது காதல்பற்றியதன்று இது. உயிர்க்குத் தலைவன் உலா வரும் பொழுது, கண்டோர் அனைவருடைய உடல்களும் குழைகின்றன. ஆண்களுக்கும் இது உண்டு. அவர்கள் இளைப்பைக் காட்ட வளையல் முதலிய அணிகள் அவர்பால் இல்லை. அதனால் அவர்கள் இளைப்பு புறத்தே தெரிவதில்லை. மங்கையர்களைப் பொறுத்தமட்டில் வளையல்கள் இருத்தலின் உடல் இளைப்பை அவை காட்டிவிடுகின்றன.

மதுரை மங்கையர் 'சங்கம் கவர்ந்து' என்பதில் உள்ள 'கவர்ந்து' என்பது, கழன்றது என்ற பொருளையே சுட்டிநிற்கின்றது.

ௐ ௐ ௐ

# 44. எண்ணப் பதிகம்

## [ஒழியா இன்பத்து உவகை]

*அடிகளார் தனியே அமர்ந்துகொண்டு தம்முடைய எண்ணங்களை ஓடவிட்ட பகுதியை வரிசைப்படுத்த முயல்கின்றன இதில் வரும் பாடல்கள்.*

*இப்பதிகத்தில் திருவாசகத்தில் வேறு எங்கும் இடம் பெறாத மூன்று நான்கு செய்திகள் இடம் பெற்றுள்ளன. அவை அங்கங்கே குறிக்கப்பெற்றுள்ளன.*

*'ஒழியா இன்பத்து உவகை' என்ற உட்தலைப்புச் சற்று விநோதமானது. ஒழியா இன்பம் என்பது வீடுபேற்றைக் குறிக்கும் சொல்லாகும். உவகை என்பது சாதாரண மனித மனநிலையில் கிடைக்கின்ற மகிழ்ச்சியாகும். நிலைபேறான ஒழியா இன்பத்தையும், சில நேரம் வந்துபோகும் உவகையையும் ஒன்றாக இணைத்துக் கூறியது வேடிக்கையாக உள்ளது. இந்த ஆறு பாடல்களிலும் உவகை எங்கும் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாகக் கழிவிரக்கமே பெரிதாக இடம்பெற்றுள்ளது.*

**599.** பார் உரு ஆய பிறப்பு அற வேண்டும்
பத்திமையும் பெற வேண்டும்
சீர் உரு ஆய சிவபெருமானே
செம் கமல மலர் போலும்
ஆர் உரு ஆய என் ஆர் அமுதே உன்
அடியவர் தொகை நடுவே
ஓர் உரு ஆய நின் திருஅருள் காட்டி
என்னையும் உய்யக்கொண்டருளே 1

இப்பாடல் 'வேண்டும் வேண்டும்' என்ற முறையில் அமைந்துள்ளது. என்ன வேண்டும் என்று கேட்கிறார்? முதலடியில் 'பிறப்பு அற வேண்டும்' என்று கூறிவிட்டு அடுத்தபடியாகப் 'பத்திமையும் வேண்டும்' என்று சொல்வது சிந்திக்கற்பாலது. அடுத்து இரண்டு அடிகளில் அடியார் நடுவுள் இருக்கும் அருள் புரிய வேண்டும் என்று கேட்கிறார்.

பிறப்பு அறவேண்டும் என்று முதலிற் கூறியமையால் அடுத்த பிறப்பில் பத்திமையும் அடியார் நடுவுள் இருக்கும் சிறப்பும் வேண்டும் என்கிறாரா? இவ்வாறு பொருள் கூறியுள்ளனர் பலர். ஆனால். அது பொருந்துவதாகத் தெரியவில்லை.

இந்தப் பிறப்பிலேயே நாள் முழுவதும் பக்தி செய்யும் ஒரு சிறப்பு வேண்டும். அவ்வாறு பக்தி செய்தால் அடியார் கூட்டத்தின் இடையேயிருக்கும் அருளை அவன் புரிவான். இப்பிறப்பில் எஞ்சிய நாட்களின் முழுநேரப் பக்தி செய்வதிலும் அடியார் நடுவுள் இருப்பதிலும் கழியவேண்டும். இன்றேல் ஐம்பூதங்களோடு தொடர்புடைய இந்தப் பிறப்பு அழிந்து ஒழிய வேண்டும் என்று அடிகளார் பேசுவதாகக் கொள்வதே நேரிது என்று கொள்ளத் தோன்றுகிறது.

'ஓர் உரு ஆய நின் திருவருள் காட்டி' என்றதால் ஒப்பற்ற திருவருளையே வடிவாகக் கொண்ட உன்னைக் காட்டி என்பதாம்.

**600.** **உரியேன் அல்லேன் உனக்கு அடிமை**
**உன்னைப் பிரிந்து இங்கு ஒரு பொழுதும்**
**தரியேன் நாயேன் இன்னது என்று**
**அறியேன் சங்கரா கருணையினால்**
**பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்று உன்**
**பெய் கழல் அடி காட்டிப்**
**பிரியேன் என்று என்று அருளிய அருளும்**
**பொய்யோ எங்கள் பெருமானே** **2**

இப்பாடலின் முதல் இரண்டு அடிகளில் சாதாரண மக்களின் இரண்டாட்டமான மனநிலையைத் தம்மேல் ஏற்றிக்கொண்டு பாடுகிறார். 'உனக்கு அடிமைசெய்ய உரியேன் அல்லேன்' என்று ஏன் தொடங்கவேண்டும்? திருவடிக்கு அடிமைபூண்டு ஒழுகத் தமக்கு உரிமையில்லை என்ற முடிவிற்கு எப்பொழுது வந்தார்? உடல், பொருள், ஆவி அனைத்தையும் கண்டபொழுதே கொண்டிலையோ என்று பாடுபவர் (502), அடிமை செய்ய உரியேன் அல்லேன் என்ற முடிவுக்கு ஏன் வரவேண்டும்? அருள் செய்த குருநாதர் உடனே மறைந்துவிட்டமையால் தம்முடைய அடிமைத் திறத்தை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; அதனால்தான் மறைந்துவிட்டார்போலும் என்ற முடிவிற்கு வந்திருக்கலாம். அதனால்தான் 'அடிமை செய்ய உரியேன் அல்லேன்' என்று பாடுகிறார்.

அடிமைத் திறத்தை ஏற்றுக்கொள்ளாமல் மறைந்தது குருநாதருடைய செயலாகும். அடிமையின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை அடுத்த தொடரில் அடிகளார் குறிப்பிடுகின்றார். குருநாதரைப் பிரிந்து ஒருபொழுதும் தரிக்க விரும்பாத மனநிலையில் உள்ளார்.

குருநாதரோ அடிமைத்திறத்தை விரும்பாமல் மறைந்துவிட்டார். அடிமையோ ஒரு விநாடியும் அவரைப் பிரிந்திருக்க விரும்பவில்லை.

இது ஒரு இக்கட்டான நிலை. குருநாதரை வற்புறுத்தித் தம்மை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தல் அடிமைக்கு இயலாத காரியம். அடிமை ஒரு கணமும் பிரிந்திருக்க இயலாமல் வருந்துகிறார் என்பதைக் குருநாதர் தெரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. தம் குறையைக் குருநாதரிடம் சென்று எடுத்துச் சொல்ல யாருமில்லை. இந்த நிலையில் செய்வதறியாது திகைக்கின்ற திகைப்புத்தான் மிஞ்சுகிறது.

அதனையே 'இன்னது (செய்வது) என்று அறியேன் நாயேன்' என்கிறார்.

நம்பிக்கை இழந்த இந்த மனநிலையில் எங்கோ ஒரு மூலையில் ஒரு வெளிச்சம் தோன்றுகிறது. அந்த வெளிச்சத்தில் திருப்பெருந்துறை நிகழ்ச்சி ஓடும் படம்போல் தெரிகிறது.

குருந்தமரத்தடியில் இருந்த ஒப்பற்ற பெரியோனாகிய குருநாதர், தம்மை வந்து வணங்கிய திருவாதவூரருக்கு தம் பெய்கழலைக் காட்டினார்; 'கண்டுகொள்' என்று குறிப்பால் உணர்த்தினார். காட்டியது என்னவோ திருவடிகளைத்தான். அதனைத்தான் திருவாதவூரர் இரண்டு கண்களாலும் பார்த்துக்கொண்டுள்ளாரே. அப்பொழுது அவருக்கு என்ன தெரிந்தது? இரண்டு திருவடிகள்மட்டுமே தெரிந்திருக்கும். அந்தத் திருவடிகள் ஏனைய மனிதர்களுடைய கால்களைப் போலத்தானே இருந்திருக்கும்!

அந்த விநாடியில் குருநாதர் ஒரு நுண்மையான காரியத்தைச் செய்தார். திருவடிகளைக் காட்டி 'கண்டுகொள்' என்று குறிப்பால் உணர்த்தினார்.

'வாதவூரனே! இவைகள் கால்களல்ல; எனது திருவருளுக்கு ஒரு புறச்சின்னம். இக்கால்களின் மூலம் என் கருணையையும் திருவருளையும் கண்டுகொள்வாயாக' என்ற ஆணையைக் குறிப்பால் உணர்த்தினார். 'கண்டுகொள் என்று உன் பெய்கழல் அடி காட்டி' என்றதன் பொருள் இதுவேயாகும்.

'காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக்காலே' (திருமுறை: 6-95-3) என்று நாவரசர் பெருமான் கூறியதற்கு ஒரு விளக்க உரையாகும் இப்பகுதி. 'காட்டாக்காலே' என்று நாவரசர் பெருமான் கூறியதையே '(பெய்கழல் அடி) காட்டி' என்று அடிகளாரும் பேசுகின்றார்.

இப்பாடலின் நான்காவது அடி மிகப் பெரிய குழப்பத்தை உண்டாக்கும் பகுதியாகும். 'பெய் கழல் அடி காட்டிப் பிரியேன் என்று என்று அருளிய அருளும் பொய்யோ?' என்று வரும் பகுதியே குழப்பத்தை விளைவிக்கின்ற பகுதியாகும்.

குருநாதராக வந்த பெருமான் 'கோலமார்தரு பொதுவினில் வருக' (2-128) என்று ஆணையிட்டது தவிர வேறு எதனையும் கூறியதாகத் திருவாசகத்தில் பேசப்பெறவில்லை. இந்த ஆணையை இட்டுவிட்டு உடனே மறைந்தார் என்பதைப் 'பொதுவினில் வருக என ஏல என்னை ஈங்கொழித்தருளி' (2:128-129) என்று அடிகளாரே பாடியுள்ளார். அப்படியிருக்க, 'பிரியேன்' என்றென்று அருளியது எப்பொழுது, எங்கே நடைபெற்றது?

நல்ல வேளையாக 'அருளிய அருளும்' என்று கூறினாரே தவிரச் 'சொல்லிய சொல்லும்' என்று கூறவில்லை. ஒரே விநாடியில் திருவடி தீட்சை செய்து அடியார் நடுவுள் இருக்கும் வாய்ப்பையும் தந்ததால் குருநாதர் தம்மைப் பிரியமாட்டார் என்ற எண்ணம் மனத்திடைத்தோன்றி வலுப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய எண்ணம் அவர் மனத்திடைத் தோன்றக் காரணம் குருநாதரின் அருளே தவிர வேறொன்றாக இருக்க முடியாது.

குறிப்பிட்ட இந்த நாளில் குதிரைகள் வரும் என்று பாண்டியனிடம் அடிகளார் சொல்ல எது காரணமாக இருந்தது? குருநாதரோ பெருந்துறையானோ இவ்வாறு சொல்லியதாக எந்தத் திருவிளையாடலும் சொல்லவில்லை. நம்பி திருவிளையாடலில் அரசனுடைய பணியாளர் வந்து அடிகளாரை அழைத்தபொழுது அவர் கூறியதாகவுள்ள பாடல் பின்வருமாறு:

தென்னவன் அமைச்சனே யான்
என்ன காரியம் செய்தேன் மேல்
என்னதாய் விளையும் கெட்டேன்
இவுளி கொள்வதற்கே வந்தேன்
பொன்னையே அழித்தேன் அந்தோ
புகல ஓர் மாற்றம் உண்டோ
மன்னவர் பிழைத்தல் ஆகா
மற்று இனி ஆவது என்கொல்

*(நம்பி ஞானபதேசம்: 63)*

*இதுவே நடைமுறைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.*

*இந்தக் குழப்பநிலையிலிருந்த அடிகளாருக்கு ஆவணி மூலத்தில் குதிரை வரும் என்று உள்ளுணர்வு சொல்ல, அதனையே பாண்டியனிடம் சென்று கூறுகிறார். இந்த உள்ளுணர்வு இறைவனுடைய அருட்செயல் என்று அடிகளார் வலுவாக நம்பினார். ஆனால், அது நடைபெறவில்லை. இதேபோலக் குருநாதர் பிரியமாட்டார் என்று உள்ளுணர்வு சொல்ல, அதைக் குருநாதர் சொல்லியதாகவே அடிகளார் கருதினார்.*

*இந்த அடிப்படையைத்தான் 'பிரியேன் என்று என்று அருளிய அருளும் பொய்யோ' என்று பாடல் சொல்லிச் செல்கிறது.*

**601.** என்பே உருக நின் அருள் அளித்து உன்
இணை மலர் அடி காட்டி
முன்பே என்னை ஆண்டுகொண்ட
முனிவா முனிவர் முழு முதலே
இன்பே அருளி எனை உருக்கி
உயிர் உண்கின்ற எம்மானே
நன்பே அருளாய் என் உயிர்
நாதா நின் அருள் நாணாமே 3

'என்பே உருக...' என்பது தொடங்கி 'முழுமுதலே' என்பது வரையுள்ள பகுதி திருப்பெருந்துறை நிகழ்ச்சி பற்றியதாகும்.

'இன்பே அருளி எனை உருக்கி உயிர் உண்கின்ற எம்மானே' என்ற பகுதியில் உண்கின்ற என்ற நிகழ்காலப் பெயரெச்சம் பயன்படுத்தப்பெற்றுள்ளது. பெருந்துறை நிகழ்ச்சி நடந்து சில காலம் சென்றபின்பும்கூட, அடிகளாரைப் பொறுத்தவரையில் இந்த இறையனுபவம் ஏறியும் இறங்கியும் வருவதும் போவதுமாக இருந்துள்ளது என்பதை முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். இந்த அனுபவம் வந்துவந்துபோன காரணத்தால் 'உண்கின்ற எம்மானே' என்று நிகழ்காலத்தால் குறிப்பிட்டார்.

சோதி வடிவினனாகத் தம்முள் புகுந்தான் தம் அடிச் சித்தத்துள் தங்கியுள்ளான் என்று முன்னர்ப் பல பாடல்களில் குறிப்பிட்ட அடிகளார் உயிரை உண்கின்ற செய்தியை எங்கும் பேசியதாகத் தெரியவில்லை.

எண்ணப் பதிகத்தில் முதல் மூன்று பாடல்களில் திருவாசகத்தில் வேறெங்கும் காணப்பெறாத இரண்டு செய்திகள் இடம்பெற்றுள்ளன. அதாவது 'பிரியேன்' என்று குருநாதர் சொன்னார் (600) என்பது ஒன்று; 'எனை உருக்கி உயிர் உண்கின்ற எம்மானே' என்பது மற்றொன்று.

'நன்பே அருளாய்' என்பது நின் அருள் செம்மையான முறையில் (நன்பே) எனக்குக்கிட்டுமாறு செய்வாயாக என்னும் பொருளைத் தரும். (நன்பே-நல்ல வகையில்)

**602.** **பத்து இலனேனும் பணிந்திலனேனும் உன்**
**உயர்ந்த பைம் கழல் காணப்**
**பித்து இலனேனும் பிதற்றிலனேனும்**
**பிறப்பு அறுப்பாய் எம்பெருமானே**
**முத்து அனையானே மணி அனையானே**
**முதல்வனே முறையோ என்று**
**எத்தனையானும் யான் தொடர்ந்து உன்னை**
**இனிப் பிரிந்து ஆற்றேனே** **4**

'பற்று இல்லாவிடினும், நின் திருவருளுக்குப் பணியாவிடினும், உன் திருவடிகளைக் காணவேண்டுமென்ற பித்துப்பிடித்து அலையாவிடினும், உன் புகழை என்னை மறந்து பிதற்றாவிடினும் உறுதியாக என்பிறப்பை அறுக்கத் துணிந்தவனே, உன்னைப் பிரிந்து இருக்க என்னால் இயலவில்லை' என்கிறார்.

முன்னருள்ள பல பாடல்களில் பிறப்பை அறுத்தான் என்ற இறந்தகால வாய்பாட்டால் கூறியவர் இப்பாடலில் 'அறுப்பாய்' என்று எதிர்கால வாய்பாட்டில் கூறியது மற்றோர் புதுமையாகும்.

**603.** **காணும் அது ஒழிந்தேன் நின் திருப் பாதம்**
**கண்டு கண் களி கூரப்**
**பேணும் அது ஒழிந்தேன் பிதற்றும் அது ஒழிந்தேன்**
**பின்னை எம்பெருமானே**
**தாணுவே அழிந்தேன் நின் நினைந்து உருகும்**
**தன்மை என் புன்மைகளால்**
**காணும் அது ஒழிந்தேன் நீ இனி வரினும்**
**காணவும் நாணுவனே** **5**

'ஐயா நீயாக வந்து திருப்பெருந்துறையில் அருள் செய்யவும் நின் அருள் என்பால் நிறையவும் இருந்த நிலைமையிலும் என் புன்மை காரணமாக உன் திருவடிகளைக் காண்பதை விட்டுவிட்டேன். அத்திருவடிகளைக் காண்பதோடுமட்டு மல்லாமல் என்னுள் போற்றிப் பாதுகாத்திருக்க வேண்டும். அதனையும் செய்யாமல் ஒழிந்தேன். உன் திருவடி மலரில் எனது தற்போதம் ஓரளவு அழுந்தி நிற்க உன் புகழைப் பிதற்றும் செயலையும் செய்யாமல் விட்டுவிட்டேன். தூணாக (தாணு) நிற்கும் பெருமானே! முற்றிலுமாக அழியும் நிலைக்கு வந்துவிட்டேன். இப்பொழுது மறுமுறையாக என்பால் கருணைகொண்டு நீ வரினும், தோன்றும் நாணம்

*காரணமாக உன்னைப் பார்க்க முடியாமல் ஆகிவிடும்போலும்' என்றபடி.*

**604.** பால் திரு நீற்று எம் பரமனைப்
பரம் கருணையொடும் எதிர்ந்து
தோற்றி மெய் அடியார்க்கு அருள் துறை அளிக்கும்
சோதியை நீதி இலேன்
போற்றி என் அமுதே என நினைந்து ஏத்திப்
புகழ்ந்து அழைத்து அலறி என் உள்ளே
ஆற்றுவன் ஆக உடையவனே எனை
ஆவ என்று அருளாயே 6

*'பால்போன்ற திருநீற்றை அணிந்த பெருமானே! உன்னை நாடும் அடியார்கள் எதிர்சென்று அவர்களை ஆட்கொள்ளும் ஒளிவடிவானவனே! என் அமுதே என நினைந்து உன்னைப் போற்றி ஏத்திப் புகழ்ந்து அழைத்து அலறி என்னுள் அமைதியடைந்தேன். இந்நிலையில் நீ என் அமைதி "நிலைபெறுவதாக" (ஆவ) என்று அருள்வாயாக' என்றபடி.*

*'ஆவ' என்ற சொல் 'ததாஸ்து' என்ற வடசொல்லின் தமிழாக்கமாகும். அதாவது 'அங்ஙனமே ஆகுக' என்ற பொருளைத் தருவதாகும்.*

ௐ ௐ ௐ

# 45. யாத்திரைப் பத்து

## (அனுபவ அதீதம் உரைத்தல்)

*இப்பதிகத்திற்கு யாத்திரைப் பத்து என்று பெயரிட்டவர்கள் பதிகத்தின் உட்பொருளை நன்கு உணர்ந்துகொண்டே இத்தலைப்பை இட்டுள்ளனர். யாத்திரை என்ற வடசொல் பதினெண் புராண காலங்களில் அதிகம் காணப்பெறும் ஒரு சொல்லாகும். தமிழ்மொழியில் இச்சொல்லைக் காண்பது அரிது. யாத்திரை என்ற சொல்லுக்குப் பயணம் போதல் என்பதே பொருளாகும்.*

*திருப்பெருந்துறையில் 'கோலமார் தரு பொதுவினில் வருக' (2-128) என்ற ஆணை பிறந்தது. அந்த ஆணையைப் பின்பற்றி வழியிலுள்ள பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு, தில்லைக்கு வருகிறார் அடிகளார். தில்லைப் பயணத்தின் இறுதியில், இந்த உடம்பைத் துறந்து அவனுடைய திருவடியை அடையும் வாய்ப்பும், அடியாரிடையே அமரும் வாய்ப்பும் கிட்டும் என அடிகளார் நினைந்திருந்தார். திருவாசகத்தில் இன்னும் பல பாடல்கள் பாடப்பெறவேண்டியிருத்தலின், தில்லைக்கூத்தன் இவரை அழைத்துக்கொள்ளத் தயாராக இல்லை. தம் எண்ணம் நிறைவேறாமையால் மிகவும் கலக்கமடைந்த அடிகளார், மறுபடியும் தலங்களை வழிபட்டுக்கொண்டு கழுக்குன்றம் அடைகின்றார். குருதரிசனமும் அடியார்கள் தரிசனமும் மறுபடியும் கிட்டவேண்டும் என்று வேண்டிக்கொண்டிருந்த அடிகளாருக்கு, இவ்விரண்டும் எதிர்பாராமல் கழுக்குன்றில் கிடைத்தன. இந்த உடம்போடு இருக்கும்பொழுதே இவை இரண்டும் மறுபடியும் கிட்டவேண்டும் என்று நினைந்த*

அடிகளாருக்கு ஒரே ஊரில் ஒரே இடத்தில் ஏறத்தாழ ஒரே நேரத்தில் அடுத்தடுத்து இந்த இரண்டு காட்சிகளும் கிட்டிவிட்டன. இந்த நிலையில், இந்த உடம்போடு வாழும் வாழ்வில், இனி அடைய வேண்டியது வேறு எதுவும் இல்லை என்ற முடிவிற்கு வந்துவிட்டார். இதன் பிறகு அவருடைய வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்படுகிறது. இந்தப் பிறப்பில் தாம் அடைய வேண்டியதை அடைந்துவிட்ட காரணத்தால் தம்மை நோக்குவதை விட்டுவிட்டு மனித சமுதாயத்தை நோக்குகின்றார். இதுவரைப் பாடாத முறையில் யாத்திரைப் பத்துப்போன்ற பதிகங்கள் தோன்றுகின்றன.

இப்பதிகத்தில் வரும் பாடல்கள் சில, தன்மைப் பன்மையாக அமைந்துள்ளன. 'ஒருப்படுமின்' போன்ற சொற்கள் தம் உடன்இருந்தவர்களை விளித்துப் பேசுவது போல் அமைந்துள்ளன. ' சிவபுர யாத்திரைக்குப் புறப்பட அனைவரும் தயாராக இருங்கள், புறப்படுவதற்குரிய காலம் வந்துவிட்டது' என்று கூறுவதுபோல் இப்பாடல்கள் அமைந்துள்ளன.

இப்பாடல்கள் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளன.

இந்தப் பதிகத்திற்கு உட்தலைப்புத் தந்தவர்கள் 'அனுபவா தீதம் உரைத்தல்' என்று தலைப்பு தந்துள்ளனர். திருவாசகத்தில் நூற்றுக் கணக்கான பாடல்களில் தாம் பெற்ற இறையனுபவத்தை அடிகளார் பாடியுள்ளார். அப்படியிருக்க, இப்பதிகத்தில் கூறப்பெற்றவற்றிற்கு அனுபவ+அதீதம்—'அனுபவத்தின் எல்லையற்ற தன்மை' என்று தலைப்பைக் கொடுக்க என்ன அடிப்படை என்பது புரியவில்லை. குழப்பமான உட்தலைப்புக்களுள் இதுவும் ஒன்று என்று கொள்ளலாம்.

605. பூ ஆர் சென்னி மன்னன் எம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவாது உள்ளம் கலந்து உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்
ஆ ஆ என்னப் பட்டு அன்பு ஆய்
ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்
போவோம் காலம் வந்தது காண்
பொய் விட்டு உடையான் கழல் புகவே 1

*இதுவரைக் கண்ட பாடல்களிலிருந்து இப்பாடல் சற்று வித்தியாசமானது. தம்முடைய அனுபவத்தை, தாம் பெற்ற அருட் சிறப்பைத், தன்மை ஒருமையிலும் தன்மைப் பன்மையிலும் கூறிவந்துள்ளார்; ஒரே பாடலில், தன்மை ஒருமையில் தொடங்கித் தன்மைப் பன்மையிலும் முடித்துள்ளார். அந்த இடங்களில், சொல்லளவில் பன்மையாக இருப்பினும், அவற்றைத் தன்மை ஒருமையாகக் கொள்ளவேண்டும் என்று விளக்கியுள்ளோம்.*

*ஆனால், யாத்திரைப் பத்தில் நேரிடையாகவே உடனிருந்த அடியார்களை விளித்துப் பாடத்தொடங்குகிறார்.*

*'மலர்மாலை அணிந்தவனும் புய(ஜ)ங்க நடனம் ஆடுபவனும் சிறியோர்களாகிய நம்மை ஒருபொருட்டாக மதித்து, தன்னுடைய கருணை காரணமாக நம்முடைய உள்ளத்தைக் கவர்ந்து 'ஆ, ஆ' என்று ஆச்சரியப்படும்படி ஆட்கொண்டவனும் ஆகிய பெருமானிடத்து ஆட்பட்டவர்களே! இதுவரை இந்தப் பருவுடலோடு இந்த உலகிடைத் தங்கி அவனால் ஆட்கொள்ளப்பெற்று ஆனந்தம் அடைந்தவர்களே! இப்பொழுது நிலையில்லாத இந்த உடம்பை இங்கேயே விட்டுவிட்டு நம்மை உடையவனாகிய அந்தப் பெருமானின் திருவடிகளில் புகுவதற்குரிய காலம் வந்துவிட்டது. உடனே புறப்படச் சித்தமாகுங்கள்' என்றவாறு.*

606. புகவே வேண்டாம் புலன்களில் நீர்
புயங்கப் பெருமான் பூம் கழல்கள்
மிகவே நினைமின் மிக்க எல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத்து உள் புகுந்து
நாயே அனைய நமை ஆண்ட
தகவே உடையான் தனைச் சாரத்
தளராது இருப்பார் தாம் தாமே 2

*சென்ற பாடலில் உடையான் கழல்புக ஆயத்தமாக இருக்கும் அடியார்களைப் 'புகவே ஒருப்படுமின்' என்று கூவியழைத்தார். இந்தப் பாடலில் அந்த நிலையை அடையாத, ஆனால் அடையவேண்டும் என்ற உறுதிப்பாட்டோடு இருக்கும் சாதகர்களை விளித்துச் சில அறவுரைகள் கூறுகின்றார்.*

*'மூலப் பரம்பொருளாகிய அவன், பிரபஞ்சம் முழுதும் நிறைந்திருக்கின்ற அவன், குருநாதர் வடிவில் இம் மண்ணிடை வந்தான். எத்தனையோ அடியார்கள் புற்றுமாய், மரமுமாய் நின்று புனல் காலே உண்டியாய் கொண்டு தவம் செய்தார்கள். அவர்களையெல்லாம் விட்டுவிட்டு நாய்போன்றவனாகிய என்னை ஆண்டுகொண்டான். இது கண்ட பலர் நகைத்தார்கள். இத்தகைய தன்மை உடையவன் அவன் என்பதை அறிந்து அவனைச் சார வேண்டும் என்ற தளராத ஊக்கத்தோடு இருப்போர்தமக்கு ஒரு வார்த்தை. நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை இதோ கூறுகிறேன். உங்கட்குப் பொறி புலன்கள் உண்டு என்பதை நாம் அறிவோம். சாதகர்களாக உள்ளவர்கள் அப்புலன்களில் எக்காரணம் கொண்டும் புகவே வேண்டா. அப்படியானால் அந்தப் பொறிபுலன்களையும் அவற்றிற்கு அடிப்படையான மனத்தையும் வைத்துக்கொண்டு என்ன செய்வது? பொறி புலன்கள் சும்மா இராவே என்று சிந்திக்கிறீர்களா? இதோ*

விடை கூறுகிறேன். இந்தப் பொறிபுலன்களையும் மனத்தையும் செலுத்துவதற்கு ஒரு வழியுண்டு. மிகுதியாக நாகங்களை அணிந்துள்ள பெருமானுடைய திருவடிகளை ஓயாது (மிகவே) நினையுங்கள். அப்படி ஓயாது நினைக்கத் தொடங்கினால், இந்தப் பொறி புலன்களும் அப்பணியில் ஈடுபடும். சாதகர்களே! இவ்வளவு செய்தும் இந்த உலகிடை இந்த உடம்போடு வாழ்கின்ற காரணத்தால் உம்மை அலைக்கழிக்கக்கூடிய எத்தனையோ நிகழ்ச்சிகளும் பொருள்களும் உமக்கு எதிரே வரும். அவற்றைப்பற்றிக் கவலைப்படாமல் அவை வந்தவழியே போமாறு விட்டுவிடுங்கள். இந்த வழிகளைத் தவறாமல் மேற்கொள்வீர்களாயின், வான் விட்டு இம்மண்ணிடை வந்தவன், உமக்கு அருள் செய்வான்' என்றபடி.

**607.** **தாமே தமக்குச் சுற்றமும்**
**தாமே தமக்கு விதி வகையும்**
**யாம் ஆர் எமது ஆர் பாசம் ஆர்**
**என்ன மாயம் இவை போகக்**
**கோமான் பண்டைத் தொண்டரொடும்**
**அவன் தன் குறிப்பே குறிக்கொண்டு**
**போம் ஆறு அமைமின் பொய் நீக்கிப்**
**புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே** **3**

சாதகர்களைப் பொறுத்தமட்டில் அவர்களை முன்னேற விடாமல் செய்யும் தடைகள் இரு வகைப்படும். முதல் வகை- அவர்களுடைய உடலை ஒட்டிய பொறி புலன்கள், மனம் என்பவையாம். இவற்றை முந்தையபாட்டில் கூறினார். இந்தப் பாடலில் இரண்டாவது வகைத் தடைகளைப்பற்றிக் கூறுகிறார்.

சாதகன் ஒருவழியை அமைத்துக்கொண்டு பொறி புலன்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு அவ்வழியில் செல்ல முற்படும்போது, சுற்றம் என்னும் தொல் பசுக் குழாங்கள்

சாதகனை முன்னேற விடாமல் தடைசெய்யும். 'இந்த வயதில் பிள்ளை குட்டிகளுக்கு நீ செய்ய வேண்டிய பணிகள் உள்ளன; அவற்றை விட்டு இத்துறையில் நீ போவது சரியில்லை' என்று சுற்றம் தடுக்கும். அவர்கள் கூறும் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, சிலகாலம் கழித்து இவ்வழி போகலாம் என்று மனத்திடைத் தோன்றும் எண்ண ஓட்டங்களை 'விதி வகை' என்கிறார் அடிகளார். 'எனக்கு நானே இந்தச் சட்டதிட்டங்களை அமைத்துக்கொள்கிறேன்' என்று பேசும் சாதகர்களை அடிகள் எச்சரிக்கிறார். 'உனக்குச் சுற்றம் என்பது நீதான்; உன் செயற்பாடுகளை எவ்வாறு செய்யவேண்டும் என வழி வகுத்துக் கொள்பவனும் நீயேதான்' என்கிறார்.

தன்னையன்றித் தனக்கென்று ஒரு சுற்றம் இல்லை; சிறந்த வழியென்று கண்டு அதிற்செல்லும் முறையை வகுத்துக்கொண்டு அதன் வழி நிற்றலே சிறப்புடையதாகும். இந்த இரண்டும் நடைபெறுவதற்கு முன்னர், 'யாம் ஆர்?' என்ற வினாவிற்கு, சுற்றத்தார் எழுந்து நின்று 'நீ இத்தகையவன், இன்ன பதவி வகிப்பவன், உன்னை ஒத்தாரும், மிக்காரும் யாருமில்லை' என்று கூறி, தற்போதத்தை வளர்த்தனர்.

இந்த 'யான்' வலுப்பெற்று விசுவரூபம் எடுத்தபோது உலகிடைக் காணப்பெறும் அனைத்துப் பொருட்களும் 'எமது' (எம்முடையது) என்ற எண்ணம் வலுப்பெற்று விடுகிறது. இந்த 'யானும் எமதும்' இவ்வளவு விரிவாக வளர்ச்சியடைவதற்குக் காரணம், உயிர்மாட்டும், பொருள்கள்மாட்டும் நாம் கொண்டுள்ள பற்றேயாகும். உயிருக்கும் உலகிலுள்ள பொருள்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று எவ்வளவு எடுத்துக்கூறினாலும் இப்பாச உணர்வு எளிதில் நீங்குமாறில்லை. இது ஒரு மயக்கம். தாமே தமக்குச் சுற்றம் என்பதை உணர்ந்தவர்கட்கு இந்த மயக்கம் இருப்பதில்லை. அந்த

மயக்கம் நீங்கியபொழுது, 'நான் யார்' என்ற கேள்விக்கு 'நான் இறைவனுடைய அடிமை, உடைமை' என்ற பொருள் வந்துவிடுகிறது. மயக்கம் ஏற்படுவதற்கு முன்னர் 'நான் இன்னான்' என்று பெருமைப்பட்டவர்கள் மயக்கம் தீர்ந்ததும் தாம் ஒருவனுடைய உடைமை என்ற முடிவிற்கு வருகின்றனர்.

'தாமே தமக்குச் சுற்றம் என்பதை உணர்ந்து அகங்காரம், மமகாரங்களை விட்டு மயக்கம் தெளிந்தவர்கள், புறப்படச் சித்தமாக இருங்கள் (பொன் அடிக்கே போமாறு அமைமின்)' என்றபடி.

**608.** **அடியார் ஆனீர் எல்லீரும்**
**அகலவிடுமின் விளையாட்டைக்**
**கடி சேர் அடியே வந்து அடைந்து**
**கடைக்கொண்டு இருமின் திருக் குறிப்பைச்**
**செடி சேர் உடலைச் செல நீக்கிச்**
**சிவலோகத்தே நமை வைப்பான்**
**பொடி சேர் மேனிப் புயங்கன் தன்**
**பூ ஆர் கழற்கே புகவிடுமே** **4**

'அடியார்கள் ஆகும் நிலையை ஓரளவு அடைந்துவிட்ட சாதகர்களே! இப்போது உங்கள் எதிரே ஒரு தடை வந்து நிற்கும். மேலோட்டமாகப் பார்க்கும்போது அது தடையென்று தெரியாது. தாமே தமக்குச் சுற்றம் என்பதை உணர்ந்து தாம் செல்லவேண்டிய வழிகளை வகுத்துக்கொண்டு, மயக்கத்தினின்றும் நீங்கி, முன்னேறி வருகின்ற உங்களுக்கு இப்பொழுது எதிரே நிற்பது, தடையென்று தெரிவிக்காமல், விளையாட்டு என்ற முறையில் அது தன்னை அறிவிக்கும். இது விளையாட்டுத்தானே! இதில் புகுந்து பங்குகொண்டால் அது என்னை எந்த விதத்திலும் பாதிக்கப்போவதில்லை என்று நினைந்து அதில் ஈடுபட்டுவிடாதீர்கள். பற்றோ பாசமோ இன்றி மகிழ்ச்சியான

பொழுதுபோக்கிற்காக இந்த விளையாட்டில் ஈடுபடுகிறேன் என்று நினைப்பீர்களேயானால், வெள்ளத்தில் ஏற்படும் சுழல்போல் இந்த விளையாட்டு உங்களையே ஏய்த்துவிடும். எனவே அதனைப் புறந்தள்ளுக' என்கிறார்.

'இவ்வாறு செய்தால் சாதகர்களாகிய நீங்கள் அடியார்களாக மாறும் நிலை எளிதாகக் கைகூடும். அடியார்களாக ஆகிவிட்ட பிறகு அவன் திருவடி நினைவோடு, அவன் திருக்குறிப்பு என்ன என்பதை அறிய விழிப்போடு இருப்பீர்களாக. அப்படி இருப்பீர்களானால் முதலில் உங்களைச் சிவலோகத்தில் சேர்ப்பான். அடுத்து அவன் திருவடிகளில் புகச்செய்வான். அதுவே வீடுபேறாகும்' என்றபடி.

**609.** **விடுமின் வெகுளி வேட்கை நோய்**
**மிகவே காலம் இனி இல்லை**
**உடையான் அடிக்கீழ்ப் பெருஞ் சாத்தோடு**
**உடன் போவதற்கே ஒருப்படுமின்**
**அடைவோம் நாம் போய்ச் சிவபுரத்துள்**
**அணி ஆர் கதவு அது அடையாமே**
**புடைபட்டு உருகிப் போற்றுவோம்**
**புயங்கன் ஆள்வான் புகழ்களையே** **5**

மாபெரும் தவங்கள் செய்த துர்வாசர் போன்றவர்களும் வெகுளியை விட்டு நீங்க முடியவில்லை. 'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி' (குறள்:306) என்றார் வள்ளுவரும். எனவே, சிவலோகத்தில் புகுவதற்கு காத்துக் கொண்டிருக்கும் அடியார்கட்கு அகப்பகையாக உள்ளே நிற்பது வெகுளியாகும். இது 'குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி' (குறள்: 29) யாகும். இந்த வெகுளியால் தாக்கப்பட்டவர் அழிவது திண்ணம். ஆனால், அதே நேரத்தில், இந்த வெகுளி தம்பால் தோன்ற இடம் கொடுத்தவர்களும் பல படிகள் கீழே இறங்க நேரிடும்.

அதனாலேயே அடியார்கள் நிலைக்கு வந்தவர்களைப் பார்த்து, 'விடுமின் வெகுளி' என்கிறார் அடிகளார்.

வெகுளிக்கு அடுத்தபடியாக அடியார்கள் மனத்திடை ஒரோவழித் தோன்றுவது வேட்கை. இந்த வேட்கை பொருள்களின்மேல் தோன்றும் மிகுபற்றாகும்.

சமதிருஷ்டி அடைந்தவர்களே அடியார்களாவர். அந்தச் சமதிருஷ்டிக்குப் பகையாக முன் நிற்பவை வெகுளியும் வேட்கையும். எனவே, இவற்றை அடியோடு ஒழித்துவிடுங்கள் என்பதைக் கூறவந்த அடிகளார் 'வெகுளி வேட்கை' இரண்டையும் மிகவே விடுமின் என்கிறார்.

அடுத்து உடம்போடு கூடிய உயிர்கட்கு இவை இயல்பாக அமைந்தவைதானே, உடம்போடு இருக்கின்றவரை இவை ஓரளவு இருக்கத்தானே செய்யும் என்பாரை நோக்கி, இவற்றை வைத்துக்கொண்டிருக்க, இது சரியான காலமன்று என்பதை, 'காலம் இனி இல்லை' என்ற தொடரால் கூறுகிறார்.

இதனை அடுத்து வருகின்ற அடி சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். அடியார் கூட்டத்தைச் 'சாத்து' என்ற சொல்லால் குறிப்பிடுகிறார். 'சாத்தோடு செல்ல ஒருப்படுமின்' என்று ஏன் சொல்லவேண்டும்? பயணமோ கடுமையான பயணம்; உடலோடு உடன் பிறந்த வெகுளி முதலியவற்றை எல்லாம் உடனடியாக விடவேண்டும் என்று கூறிவிட்டார். சிவலோகத்தில் நுழைவதற்கு, எப்போது அவருடைய திருக்குறிப்பு வரும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் நேரம், மிக மிக இக்கட்டானதும் புதிய பிரச்சினைகள் தோன்றக் கூடியதுமான நேரம். இந்த நிலையில், ஒத்த எண்ண அதிர்வுகளை (vibration) உடைய அடியார்களுடன் சேர்ந்திருக்க வேண்டும் என்பதைக் கூறவே 'பெருஞ் சாத்தோடு' என்றார். உடம்போடு இருக்கின்றவரை மனித மனத்திற்குச் சில குறைகள் உண்டு.

எவ்வளவு உயர்ந்தவராயினும் தனித்து இருக்கும்பொழுது மனத்திற்கு வலுக் குறைவும் தளர்ச்சியும் ஏற்படுவது இயற்கை. அத்தகைய நேரங்களில் தம்மைப்போன்ற அதிர்வுகளுடையவர்கள் உடன் இருப்பார்களாயின் இந்தத் தளர்ச்சி உடனே நீங்கிவிடும். இந்த நுணுக்கத்தைத்தான் 'பெருஞ்சாத்தோடு (சிவபுரம் போவதற்கே) ஒருப்படுமின்' என்கிறார் அடிகளார். புத்தருடைய மூன்று மந்திரங்களில் ஒன்றான 'சங்கம், சரணம், கச்சாமி' என்பதும் இதுபற்றி எழுந்ததேயாகும்.

**610.** புகழ்மின் தொழுமின் பூப் புனைமின்
புயங்கன் தாளே புந்தி வைத்திட்டு
இகழ்மின் எல்லா அல்லலையும்
இனி ஓர் இடையூறு அடையாமே
திகழும் சீர் ஆர் சிவபுரத்துச்
சென்று சிவன் தாள் வணங்கி நாம்
நிகழும் அடியார் முன் சென்று
நெஞ்சம் உருகி நிற்போமே 6

இப்பாடலின் முதலடியில் அடியாரானவர்கள் 'ஒரு நிலை அடைந்து விட்டோம்' என்ற திருப்தியோடு இருத்தல் ஆகாது; மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் ஒரு பொருள்பற்றியே ஈடுபட வேண்டும் என்று கூறுகிறார். 'புயங்கன் தாளே புந்திவைத்திட்டு' என்பதால் அவன் திருவடிகளை புந்தியில் பதித்திக் கொள்ள வேண்டிய பணியை மனத்திற்குத் தந்தார். 'புகழ்மின்' என்ற சொல்லால் அவன் புகழையே ஓயாது பேசிக்கொண்டிருக்கும் பணியை நாவிற்குத் தந்தார். இதனையே நாவரசர் பெருமான் 'படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சு என் நாவிற் கொண்டேன்' (திருமுறை 4:81-8) என்று கூறியுள்ளார். 'தொழுமின், பூப்புனைமின்' என்பதால் உடலுக்கும் ஒரு பணியை வைத்தார். மனம், மொழி, மெய் என்ற மூன்றும்

ஒரே வழியில் செல்வதால் நிலைகுலைய வழியில்லை என்பதைக் கூறியருளினார்.

எடுத்த இப்பிறப்பில் எதிர்வரும் இன்னல்களை 'இகழ்மின்' என்றார். இப்பொழுது வந்த, வரப்போகின்ற இன்னல்களை இகழவேண்டுமேயானால் மிகமிக உறுதியான மனத்திட்பம் வேண்டும். அத்திட்பம் உடையவர்களே வந்த வினையையும் வரப்போகும் வினையையும் இகழக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பர். இந்தத் திட்பத்தை எவ்வாறு பெறுவது? அதற்குரிய வழியைத்தான், மனம், மொழி, மெய் என்ற மூன்றிற்கும் ஒரே விதமான பணியைத் தரவேண்டும் என்பதன் மூலம் முதல் அடியில் கூறினாராயிற்று.

**611.** **நிற்பார் நிற்க நில்லா உலகில்**
**நில்லோம் இனி நாம் செல்வோமே**
**பொற்பால் ஒப்பாம் திருமேனிப்**
**புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே**
**நிற்பீர் எல்லாம் தாழாதே**
**நிற்கும் பரிசே ஒருப்படுமின்**
**பிற்பால் நின்று பேழ்கணித்தால்**
**பெறுதற்கு அரியன் பெருமானே** **7**

இப்பாடலில் புதிய கருத்து ஒன்றைப் பேசுகின்றார். புறப்படுவதற்கு ஒருப்படுமின் என்றெல்லாம் கூறிவந்தவர் இப்போது 'நிற்பார் நிற்க' என்று பேசுவது புதுமை. அனைவரும் புறப்படவில்லை; ஒருசிலர் நின்றுவிட்டனர் என்ற குறிப்பை உணர்த்துவதாகும் இது. அவர்களையும் 'உடனே புறப்படுங்கள்' என்று சொல்லாமல், 'நிற்பார் நிற்க' 'தங்கினவர்கள் தங்கிவிடட்டும்' என்று கூறுகிறார். உடன் புறப்பட்ட அடியார்களைப் உளப்படுத்தி 'நின்றுவிட்டவர்களைப்பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை இனி நாம் செல்வோம்' என்கிறார். எங்கே போகிறோம் என்பதை உடன் வருபவர்களுக்கும் தங்கிவிட்டவர்களுக்கும்

உணர்த்தும் முறையில் 'புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே' என்று குறிக்கிறார். பொன்னடிக்குப் போகிறோம் என்ற சொற்களைக் கேட்டவுடன் தங்கிவிட்ட ஒருசிலர் புறப்படலாமா வேண்டாமா என்ற அரைமனத்துடன் எழுந்தும் எழாமலும் இருக்கின்ற நிலையைப் பார்க்கிறார் அடிகளார். அவர்களைப் பார்த்து, இந்த இரண்டாட்டம் வேண்டா. நின்றுவிடுவது என்ற எண்ணத்துடன் இருக்கும் நீங்கள் அனைவரும் உறுதியாக நின்றுவிடும் நிலையையே ஏற்றுக்கொள்ளுங்கள். அந்த முடிவைக்கூடக் காலந்தாழ்த்தாமல் எடுத்துவிடுங்கள் என்ற கருத்தில் 'தாழாதே நிற்பீர் எல்லாம், நிற்கும் பரிசே ஒருப்படுமின்' என்கிறார். இத்தனையும் கூறிவிட்டு, நிற்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் தருகிறார். 'இப்போது இந்த உலகம் சுகமானது; இதைவிடச் சிவபுரம் சென்று பெரிதாக எதனைப் பெற்றுவிடப்போகிறோம் என்று நினைப்பவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடப்படுகிறது. இப்போது புறப்படாமல் தங்கிவிட்டுப் பின்னர்க் கழிந்த நும் செயலுக்கு வருந்துவீர்களேயானால் மறுபடியும் பெருமானை அடைவது மிகக் கடினமானதாகும்' என்கிறார்.

**612.** **பெருமான் பேரானந்தத்துப்**
**பிரியாது இருக்கப் பெற்றீர்காள்**
**அரு மால் உற்றுப் பின்னை நீர்**
**அம்மா அழுங்கி அரற்றாதே**
**திரு மா மணி சேர் திருக்கதவம்**
**திறந்தபோதே சிவபுரத்துத்**
**திருமால் அறியாத் திருப் புயங்கன்**
**திருத்தாள் சென்று சேர்வோமே** **8**

'இறைவனுடைய அருளனுபவத்தில் தோய்ந்து இருக்கப் பெற்றவர்களே! திடீரென்று மயக்கமுற்று இந்நிலையிலிருந்து

*வழுவிவிடுவீர்களானால் பின்னர் "அம்மா" என்று அழுது பயனில்லை. சிவபுரத்தின் கதவுகள் திறப்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கும் நாம், அது திறந்தவுடனேயே அவன் திருவடிகளைச் சென்று சேர்வோமாக' என்றபடி.*

**613.** சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரில் பொலியும் வேல் கண்ணாள்
பங்கன் புயங்கன் அருள் அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர்
போரப் புரிமின் சிவன் கழற்கே
பொய்யில் கிடந்து புரளாதே 9

*'இறைவன் திருவடியைச் சென்று சேரக் கருதுபவர்களாகிய நீங்கள் உங்கள் சிந்தனையை ஒருமுகப்படுத்தி அத்திருவடிகளைச் சிந்திப்பீர்களாக. அவ்வாறு செய்தால், உமையொரு பாகனின் திருவருளை ஆரப் பருகி அதிலேயே நிலைகொள்ளும் நிலை ஏற்படும். ஆதலால் பொய்யான இவ்வுலகத்திடைக் கிடந்து புரளாமல், (திருவடிமாட்டுப்) போதல் புரிவீர்களாக' என்றபடி.*

**614.** புரள்வார் தொழுவார் புகழ்வார் ஆய்
இன்றே வந்து ஆள் ஆகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பார் ஆர்
மதியுள் கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகில் இது செய்மின்
சிவலோகக் கோன் திருப்புயங்கன்
அருள் ஆர் பெறுவார் அகல் இடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே 10

*ஆன்மிக வாழ்க்கையில் ஓர் உறுதிப்பாட்டோடு இருந்தவர்கள்கூட ஏதோ ஒரு காரணத்தால் இடையில்*

நின்றுவிடுதலும் கீழே இறங்கிவிடுதலும் இவ்வுலகில் உண்டு. அவ்வாறு இறங்குகிறவர்கள் இறையன்பும் உள்ளத்து உறுதியும் தம்மைவிட்டு நீங்கிவிட்டாலும் அகத்தே அன்பில்லாமல் புரள்தல், தொழுதல், புகழ்தல் ஆகியவற்றை உடலளவில் செய்து வருகின்றனர். இப்போலிகளைப் பார்த்து இப்பாடல் எச்சரிக்கை செய்கின்றதோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

'இந்த விநாடியே முழுஈடுபாட்டுடன் வந்து அவன் திருவருளுக்கு ஆளாகாமல் அவன் திருவடிகளைப் புகழ்ந்தும், வீழ்ந்து புரண்டும், அவனைத் தொழுதும் பாடிக்கொண்டும் நிற்கின்றவர்களே! இவ்வழிகளைப் பின்பற்றி முன்னேறாமல் இதிலேயே இன்பம் கண்டு நின்றுவிடுவீர்களேயானால், அதாவது மருண்டு (மயக்கமெய்தி) நின்று விடுவீர்களேயானால் உங்களை யாரும் மதிக்கமாட்டார்கள்; பாதிக் கிணறு தாண்டியவர்கள் என்று நகையாடுவர். நீங்கள் தெளிவடைவீர்களேயானால் அகத்து அன்போடு உள்ளத்து உறுதிப்பாட்டோடு இவற்றைச் செய்க. நீங்களே இவ்வாறு செய்யாவிடின் புயங்கனுடைய அருளை வேறு யார் பெறுவார்கள்? அந்தோ பரிதாபம்' என்றபடி.

இம்முறையில் முன்னேற்றமடையாமல் புறவழிபாட்டில் ஈடுபடுபவர்களைக் கண்டவுடன் அடிகளாருக்கு எல்லையற்ற பச்சாதாபம் உண்டாகிறது. அதனையே அந்தோ என்ற சொல்லை மும்முறை பயன்படுத்துவதன் மூலம் வெளிப்படுத்துகிறார்.

ௐ ௐ ௐ

# 46. திருப்படை எழுச்சி

## [பிரபஞ்சப் போர்]

அடிகளாரின் உண்மையான வரலாற்றைச் சொல்லும் எந்த ஒரு நூலும் இதுவரைக் கிடைத்திலது. திருவாதவூரடிகள் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல், நம்பி திருவிளையாடல் போன்ற நூல்களில் அடிகளார் வரலாறு மிகப் பல மாறுபாடுகளுடன் காணப்பெறுகிறது. இதனைப் பாடியவர்கள் இறையன்பர்கள் என்பதுதவிர வரலாற்று உண்மை காணும் அறிவு படைத்தவர்கள் அல்லர். இவர்கள் மூவரும், அடிகளார் அமைச்சராக இருந்தார் என்ற ஒரு செய்தியைப் பாடிச்சென்றுள்ளனர்.

திருவாசகத்தில் பல அகச் சான்றுகள் இருப்பினும் அடிகளார் அமைச்சராக இருந்தார் என்பதற்குரிய எவ்வித நேரடிச் சான்றும் இல்லை. இந்த நிலையில் இந்த மூன்று ஆசிரியர்களையும் நம்புவதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உறுதி. திருப்படையெழுச்சி என்ற தலைப்பில் காணப்பெறும் இந்த இரண்டு பாடல்களையும் படித்தால், இதனைப் பாடியவர் போர்த் திறத்தையும், போர் நுணுக்கத்தையும், படை செலுத்தும் முறையையும் மிக நன்றாக அறிந்திருந்தார் என்று நினைப்பதில் தவறே இல்லை. அவருடைய பழைய வாழ்க்கையில் இவற்றை அறிந்திருந்தாலன்றி இவ்வளவு விரிவாகப் படை எழுச்சிபற்றிக் கூற இயலாது. அந்த அடிப்படையில் அடிகளார் அமைச்சுத் தொழில் பூண்டு, சிலகாலம் இருந்தார் என்று கொள்வதிலும் தவறில்லை.

ஓயாது தம்மைக் கடையன், நாயினும் கடையன் என்று சொல்லிக்கொள்ளும் ஒருவர், தாம் அமைச்சராக

இருந்ததை எக்காரணம் கொண்டும் தம் வாயால் பேசியிருக்கமாட்டார். ஆதலின், திருவாசகத்தில் அடிகளார் அமைச்சராக இருந்ததற்கு அகச் சான்று உறுதியாகக் கிடைக்காது.

போர் இரு வகைப்படும். ஒன்று, தற்காப்புக்காகச் செய்யப்பெறும் போர். இதில் படை அணிவகுப்பு முறை ஒருவகை. இரண்டாவது, வேறொரு நாட்டைத் தாமே படையெடுத்துச் சென்று போர்செய்து வெற்றி கொள்வது. இதில் படை அணிவகுப்பு முறை வேறு.

அடிகளார் பாடிய திருப்படையெழுச்சி இரண்டாவது வகைப் போர்முறையைச் சேர்ந்ததாகும்.

அடிகளார் புறப்படச் சொல்லும் இப்படை எழுச்சியில் எதிர்த்து வருபவர்கள் இவர் அடையவேண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர். ஆனால், இடையே இருக்கும் அவர்களை வெல்லாமல் இவர் விரும்பிய இடத்திற்குச் செல்லமுடியாது.

படைகள் தாங்கவேண்டிய ஆயுதம் முதலியவற்றை ஒரு பாடலில் கூறியபிறகு அடுத்த பாடலில் இப்படைகள் செல்லவேண்டிய அணிவகுப்பு முறை பேசப்பெறுகிறது.

இப்படை முன்னேறிச் செல்வதைத் தடுக்கும் படைகள் எவை தெரியுமா? அவற்றை மாயப் படை என்றும், அல்லற் படை என்றும் அடிகளார் கூறியுள்ளார். இவை இரண்டுமே அடியார்களைப்போலப் பருவுடம்பு உடையவை அல்ல. வடிவு இல்லாமல், மிக நுண்மையாக இருந்துகொண்டு எதிர்பாராத நேரத்தில் தாக்கும் இயல்புடையவை மாயப் படை. மாயப்படை முதலில் மதியை மயக்கி, அறிவை இழக்கச் செய்து, மனக் கலக்கத்தை உண்டாக்குகிறது. அடுத்து வரும் அல்லற் படை பெரும் துன்பத்தைச் செய்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், மாயப் படையின் இயல்பையும்

அல்லற்படையின் ஆற்றலையும் யாரும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது.

சிவபுர யாத்திரைக்குச் செல்லும் அடியார்கள் எளிமையானவர்களாகவும், போராடும் வல்லமை இல்லாதவர்களாகவும் இருந்துவிட்டால் சிவபுர யாத்திரையின் பயனை அடையமுடியாது.

இதுவரை இல்லாத தைரியத்தையும் அடியார்களைத் தலைமையேற்று நடத்திச் செல்லும் ஆற்றலையும் தில்லைக் கூத்தன் அடிகளாருக்குத் தந்தான் என்பதை யாத்திரைப் பத்தில் கூறியுள்ளோம். தலைமை ஏற்றவராகிய அடிகளார் சிவபுர யாத்திரைக்குப் புறப்படத் தயாராகவுள்ள அடியார் கூட்டத்தைத் திரும்பிப் பார்க்கிறார். இவர்கள் தனித்துச் சென்றால், மாயப் படை, அல்லற் படை என்பவற்றிற்கு இவர்கள் ஈடுகொடுக்க முடியாது ஆதலின் இவர்களிற் சிலரைத் தேர்ந்தெடுத்துப் படை எழுச்சியின் நுணுக்கங்களை -யும் தந்திரங்களையும் அறிவுறுத்துகின்றார். திருப்படை எழுச்சி என்ற தலைப்பின் நுணுக்கம் இதுவேயாகும்.

'பிரபஞ்சப் போர்' என்பது இதன் உட்தலைப்பு ஆகும். பிரபஞ்சத்தில் யாரோ இருவர் செய்ய முற்படும் போர்பற்றி இந்த உட்தலைப்பு வந்ததா, அல்லது பிரபஞ்சமே வேறு எதனுடனாவது போர்தொடுத்ததா என்ற வினாக்களை எழுப்பினால் இந்த உட்தலைப்பு எவ்வளவு அர்த்தமற்றது என்பது விளங்கும்.

**615.** **ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின்**
**மான மா ஏறும் ஐயர் மதி வெண் குடை கவிமின்**
**ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்**
**வான ஊர் கொள்வோம் நாம் மாயப் படை வாராமே 1**

இந்த முதற் பாடல் அடியார் படையில் உள்ளவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்பதை மிக விளக்கமாகக் கூறுகிறது. குதிரைப்படை வீரர்கள் வாள் ஏந்திச் செல்வர்.

அவர்களுக்கு முன்னர்ப் போர் எழுச்சியை ஊட்டக்கூடிய பறை முழங்கிக் கொண்டு செல்லும். அவர்களுள் தலைவராக இருப்பவர்கள், அடுத்த தரத்தில் உள்ளவர்கள் ஆகிய இருசாராருக்கும் தலைக்குமேல் வெண்கொற்றக்குடை விரிந்திருக்கும்.

கவசம் அணிதல் என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; கவசத்தில் புகுதல் என்பது ஒரு புதுமையான சொல்லாட்சியாகும். கவசம் 'அணிதலை'த்தான் 'புகுமின்கள்' என்று சொல்லுகிறாரா? இல்லையென்பதை உறுதியாகக் கூறலாம். கவசம் என்பது தலை, மார்பு, முழங்கை, முழங்காலிற்கும் கீழ் உள் பகுதிகளில் அணியப்பெறுவதாகும். ஆனால், அடிகளார் கூறும் கவசம் உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை அணிந்து கொள்ளப்படும் கவசமாகும்.

அணியப்பெறும் போர்க் கவசம் உலோகத்தால் ஆயது. உயர்திணையைச் சேர்ந்த வீரர்கள் அஃறிணைப் பொருளாகிய கவசத்தை அணிகிறார்கள். ஆனால், இங்கே பேசப்பெறும் கவசம் இந்த வகையைச் சேர்ந்ததன்று. அதனாலேயே கவசத்தை அணியுங்கள் என்று சொல்லாமல் அதனுள் புகுந்துவிடுங்கள் என்கிறார்.

ஒன்றினுள் புகுந்துவிடுதல் என்றால் சரணாகதி அடைதல் என்பதே பொருளாகும். இரும்புக் கவசத்திடம் யாரும் சரணடைவதில்லை. ஆனால், திருநீறு ஆகிய கவசத்திடம் யாரும் தாராளமாகச் சரண் அடையலாம்.

திருநீற்றுக் கவசத்தில் முழுவதுமாகப் புகுந்துகொண்டு, குதிரைமேல் ஏறி, வெண்கொற்றக் குடையின்கீழ், ஞான வாளை ஏந்திக்கொண்டு, முன்னே நாதப் பறை முழங்கப் புறப்படுங்கள் என்கிறார்.

இப்பாடலின் முதலிரண்டு அடிகளில் 'ஐயர்' என்ற சொல் வருவதால், அதற்குச் சிவபெருமான் என்று பொருள் செய்து உரை வகுத்துள்ளனர்.

'ஐ' வியப்பாகும் என்ற தொல்காப்பிய அடிப் படையில் உண்டாக்கப்பட்டது, இந்த 'ஐயர்' என்ற சொல். அதாவது நம்மால் மதிக்கப்படும், வணங்கப்படும் பெருமை வாய்ந்தவர்கள் என்பதே இதன் பொருளாகும். நாதப் பறை அறைகின்றவர்கள், குடை பிடிக்கின்றவர்கள் ஆகிய அனைவரும் போர்ப்படையில் இருப்பவர்களே ஆயினும், குதிரைமேல் ஏறி வாளேந்தும் வீரர்களிலும் இவர்கள் வேறுபட்டவர்கள். அதனாலேயே 'ஞானவாள் ஏந்தும் ஐயர்', 'மானமா ஏறும் ஐயர்' என்று இவர்களைப் பிரித்து ஓதினார்.

பறை அறைதலும் குடை பிடித்தலும் எல்லாப் படைக்கும் பொதுவானவை. ஆனால், அடிகளார் கூறும் இப்படை உடற்போர் செய்யும் வீரர்களைக் கொண்டதன்று என்பதைக் கூற, சில சொற் பிரயோகங்களைப் பயன்படுத்துகிறார். போர்வீரர்கள் கையாள்வது இரும்பினால் செய்த வாள். அது உடலுக்கு மட்டுமே ஊறு செய்யும். ஆனால் அடிகளார் படையில் உள்ளவர்கள் கைப்பிடித்திருப்பது ஞானமாகிய வாளாகும். எதிர்த்துவரும் மாயப் படையை வெல்ல இரும்பாலாகிய வாள் பயன்படாது; ஞானம் ஒன்றே அஞ்ஞானமாகிய மாயத்தை அழிக்க வல்லது ஆதலின் 'ஞானவாள் ஏந்தும்' என்றார்.

அடிகளாரைப் போன்று போர்க்கலையில் வல்லவர்கள் மட்டுமே 'ஏந்தும்' என்ற சொல்லைப் பயன்படுத்தமுடியும். ஞானவாளைக் கட்டிக்கொள்ளுங்கள், பிடித்துக் கொள்ளுங்கள் என்ற எந்தச் சொல்லைப் போட்டாலும் 'ஏந்தும்' என்ற சொல்லுக்கு இணையாகாது. உறையிலிருந்து கழித்து வீசுவதற்குத் தயாராக வாளிருக்கும் நிலையை 'ஏந்தும்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

அடுத்துள்ளது 'மான மா ஏறும் ஐயர்' என்பதாகும். குதிரை (மா) என்ற சொல்லுக்கு முன்னர் 'மானம்' என்ற சொல் பயன்படுத்தப்பெற்றுள்ளது. மானம் என்ற

சொல்லுக்குப் பல பொருள் உண்டேனும், கற்பு, அன்பு என்ற இரண்டு பொருள்களும் இங்கு மிகப் பொருத்தமாக அமையக்கூடியவை. கற்பு என்பது கல்வி, நெஞ்சுறுதி என்பவற்றின் கூட்டமாகும். அடியார்கள் ஏறும் குதிரையை கல்வி என்று கூறினால், கல்வியறிவு இவர்களை ஆட்கொள்ளாமல், அந்த அறிவுக்குத் தலைவர்களாக நின்று இவர்கள் தொழிற்படவேண்டும். அதாவது கல்வியாகிய குதிரையின்மேல் இவர்கள் ஏறவேண்டுமே தவிர, கல்விச்செருக்கு என்பது இவர்கள்மேல் ஏறிவிடக்கூடாது.

மானம் என்ற சொல் அன்பு என்ற பொருளையும் கொண்டது என்று கண்டோமல்லவா? போருக்குச் செல்கின்றவர்கள் அன்பு என்ற குதிரையில் ஏறிச்சென்றால் எவ்வாறு போர்செய்யமுடியும் என்று ஐயுறுகின்றவர்களும் உண்டு. ஆனால், உண்மை வேறு. அன்பாகிய குதிரைமீது ஏறி, ஞானமாகிய வாளைப் பிடித்துக்கொண்டு செல்லும் வீரர்கள் எவ்விதப் போரும் செய்யாமல் அஞ்ஞானத்தை வெல்வர். வெல்லப்பட்ட அஞ்ஞானத்தின்மீது வெறுப்போ பகைமையோ கொள்ளாமல் இருக்கச்செய்வது இவர்கள் ஏறியுள்ள அன்பு என்ற குதிரை.

இனி இருப்பது 'நாதப் பறை அறைமின்' என்பதாகும். இங்குக் கூறப்பட்டது பர நாதமே ஆகும். அதன் ஒலி வடிவம் நமசிவாய என்பதாகும். ஆக; ஞானவாளை ஏந்தி, மான மாவில் ஏறிச் செல்பவர்களைச் சுற்றி, ஐந்தெழுத்தின் ஓசை வெகுவாகக் கேட்கிறது.

ஞானவாளை ஏந்தியவர்களாயினும், மான மா ஏறியவர்களாயினும் தங்கள் குறிக்கோள் என்ன என்பதை அறிவின் துணைகொண்டு ஆய்ந்து, அதை மூளைப் பகுதியில் நிறுத்தவேண்டும். அதனையே உருவகமாக 'மதி (அறிவு) வெண்குடை கவிமின்' என்கிறார்.

வாள், குதிரை, பறை முதலியவை இருப்பினும் இந்தப் பரு உடல் தனித்துத்தானே இயங்குகிறது. குதிரைமேல்

வேகமாகச் சென்று வாளால் பகைவர்களை வெட்டலாம். ஆனால், அவர்களுடைய கருவிகளிலிருந்து இவர்கள் தம்மைக் காத்துக்கொள்ள என்ன தேவை? அதையே மூன்றாவது அடியில் 'நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள்' என்கிறார். இப்பாடலில் கூறப்பெற்றவை அனைத்தும் தனித்தனி வீரர்களுக்கு உரியவை ஆகும். உருவகம் பாடுவதில் அடிகளார் ஒப்பற்றவர் என்பதை முன்னரும் கண்டோம். அச்சிறப்பிற்கு இப்பாடல் மற்றோர் உதாரணமாகும்.

**616.** **தொண்டர்காள் தூசி செல்லீர் பத்தர்காள் சூழப் போகீர்**
**ஒண் திறல் யோகிகளே பேர் அணி உந்தீர்கள்**
**திண் திறல் சித்தர்களே கடைக் கூழை செல்மின்கள்**
**அண்டர் நாடு ஆள்வோம் நாம் அல்லற் படை வாராமே 2**

எவ்வளவு சிறப்புடைய வீரர்களாயினும் போருக்குச் செல்கையில் அணிவகுப்பு இன்றியமையாதது. கடலில் அலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்ததுபோல் வருவதால் அந்த அலைகளின் ஆற்றல் மிகப்பெரியதாகி விடுகின்றது.

அந்த அடிப்படையில் இப்பாடலில் அடியார் படையின் அணிவகுப்பை முறைப்படுத்துகிறார் பழைய பாண்டிய அமைச்சர். இன்றுகூடப் போருக்குச் செல்லும் படைகளில் தூசுப்படை, சூழ்ந்து வரும் படை, நடுவேயுள்ள மூல பலப் படை, இறுதியாகவுள்ள பின் காவல் படை (Rear-Guard) எனப் படைப்பிரிவுகள் வகுக்கப் பட்டுள்ளதை அறியலாம். இந்த நான்கு பகுப்புக்களில் யார்யார் எங்கெங்கே இருக்கவேண்டும் என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுப் பேசுகிறார் பழைய அமைச்சர்.

தொண்டர்கள் என்பவர்கள் பல்வேறு வகைப்பட்ட தொழில்களையும் செய்யும் உடல் வலிமையும், மனத்திடமும் அனுபவமும் உடையவர்கள். அதனால் 'தொண்டர்காள்

தூசி செல்லீர்' என்றார் அடிகளார். தூசிப் படை என்பது படைக்கு முன்னர் நின்று, கொடியைத் தாங்கிக்கொண்டு வழிவகுத்துச் செல்லும் படையாகும். அடுத்துள்ளவை பக்கவாட்டிலும், சுற்றியும் உள்ள படைகளாகும். நடுவே உள்ள படை வீரர்களுக்கு வேண்டுமானவற்றை வேண்டும்போது தருவதே இவர்கள் வேலை. இறையன்பில் தோய்ந்த பக்தர்கள் தன்னலம் அற்றவர்களாய்ப் பிறர்க்கு உதவுவதையே கடமையாகக் கொண்டவர்கள் ஆதலின் 'பத்தர்காள் சூழப்போகீர்' என்றார்.

படையின் நடுவே இருப்பவர்கள் மூலபலம் போன்றிருந்து படை பின்தங்கிவிடாமல் செலுத்தக் கூடியவர்கள் ஆதலின் யோகிகளே 'ஒண்திறல் பேர் அணி உந்தீர்கள்' என்றார்.

நான்காவதாக உள்ளது பின்காவற் படையாகும். அதில் 'திண் திறல் சித்தர்களைச்' செல்லுமாறு பணிக்கின்றார் அடிகளார். இவர்கள் அட்டமா சித்திகளும் வல்லவர்கள் ஆதலின் முன்னே செல்லும் படைக்கு எவ்வித அச்சமும் தோன்றாதபடி எதிரே உள்ள 'அல்லல் படை'யை தம்முடைய அணிமா, லகிமா முதலிய சித்திகளால் பெரிதாக்கியும், சிறிதாக்கியும் தம்முடைய படைவீரர்கட்கு அச்சம் தோன்றாமல் இருக்கச் செய்வார்கள். கடைக்கூழை என்பது 'Rear-Guard' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம்போல் அமைந்துள்ளதைக் காணலாம்.

ௐ ௐ ௐ

# 47. திருவெண்பா

## [அணைந்தோர் தன்மை]

திருவெண்பா என்ற தலைப்புடன் இங்குக் காணப்பெறும் பதினொரு பாடல்களும் வெண்பா யாப்பில் அமைந்திருத்தலின் திருவெண்பா என்று யாரோ பெயரிட்டுள்ளனர்.

பொதுவாக உணர்ச்சிகளை வெளியிட வெண்பா யாப்பு அதிகம் துணைபுரிவதில்லை எனத் திறனாய்வாளர் கூறுவர். நான்கு சீர், ஆறு சீர், எட்டுச் சீர் என்ற முறையில் வரும் விருத்தப்பாக்களே கவிஞன் விருப்பம்போல் உணர்ச்சிகளை வெளியிட உதவும்.

வெண்டளை இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டு வரும் வெண்பாவில் செய்திகளைக் கூறலாமே தவிர, உணர்ச்சிகளை வெளியிட வாய்ப்புக் குறைவு. என்றாலும், அடிகளார் பெரும் கவிஞர்கள் ஆதலின் வெண்பா யாப்பில் இயற்றப்பெற்ற திருவெண்பா, பண்டாயநான்மறை என்பவற்றிற்கூட 'ஆர்க்கோ அரற்றுகோ' என்று தொடங்கும் பாடலிலும் (618) 'பண்டாய நான்மறை' என்று தொடங்கும் பாடலிலும் (628) உள்ளத்தில் முகிழ்த்து எழும் உணர்ச்சிக்கு வடிவு தந்துள்ளார் என்பதை அறியலாம்.

உணர்ச்சிகளுக்கு முதலிடம் தந்து நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாடிய அடிகளார், செய்திகளை மட்டும் கூறுவதற்கு வெண்பா யாப்பை மேற்கொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. வெண்பா யாப்பில் அமைந்துள்ள 'திருத்தசாங்கம்' ஏனைய திருவாசகப் பாடல்களோடு எவ்விதத்திலும் ஒப்பவைத்து எண்ணப்படக்கூடியது அன்று என்று முன்னரே கூறியுள்ளோம்.

திருவெண்பாவை அடுத்து வைக்கப்பெற்றுள்ள 'பண்டாய நான்மறை'யும் வெண்பா யாப்பில்தான் உள்ளது. வெண்பா யாப்பை ஓரளவு உணர்ச்சியும் தோன்ற வெற்றிகரமாக முதன்முதலில் கையாண்டவர் காரைக்கால் அம்மையாரே ஆவார். சங்க காலத்தில் வெண்பா யாப்பை அதிகமாக யாரும் கையாண்டதாகத் தெரியவில்லை.

ஆசிரியப்பாவிற்கும் உணர்ச்சிகளை வெளியிடும் இயல்பு குறைவு என்றாலும், வெண்பாவைப்போல் நான்கு அடியில் முடியாமல் தொடர்ந்து பல அடிகள் வருவதால் இக்குறையைச் சரிக்கட்ட முடிந்தது.

விருத்தப்பாக்கள் அரங்கேறியவுடன் ஆசிரியப்பா வெண்பா ஆகியவை ஒளிமழுங்கிய தாரகைகளாய் ஆகிவிட்டன.

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அடிகளார்- முதலில் திருக்கோவையாரும் அடுத்துத் திருவாசகமும் பாடிய அடிகளார்- என்ன காரணத்தாலோ மூன்று இடங்களில் வெண்பாக்களைக் கையாண்டுள்ளார். அவற்றுள் திருத்தசாங்கம் பஞ்சாங்கம்போல் நாடு, மலை, ஆறு என்ற செய்திகளைக் கூறுகின்றது.

திருவெண்பாவில் அடிகளார் கூறும் செய்திகள் அனைத்தும் திருப்பெருந்துறை நிகழ்ச்சிபற்றியனவாகும். அந்நிகழ்ச்சி அவரை மிகப் பெரிய அளவில் ஆட்கொண்டு, இறையருளில் மூழ்குவித்து, உணர்ச்சிப் பிழம்பாக மாற்றிப் பரா அமுதாகிய திருவாசகத்தைப் பாடச்செய்தது.

யாத்திரைப் பத்துப் பாடுகின்ற நேரத்திலேயே அடிகளாரின் உணர்ச்சிகளெல்லாம் அடங்கித் தில்லைக் கூத்தன் திருவடி மிக அருகில் உள்ளது என்ற நிலை தோன்றிவிட்டது. மேலும் அத்திருவடியில் உறுதியாகத் தமக்கோர் இடமுண்டு என்பதை அறிந்த நிலையில் உணர்ச்சி கொப்பளிப்பதற்குத் தேவையில்லாமற் போய்

*விட்டது. அந்த நிலையில் அமைதியே வடிவாக இருந்து, தாம் தோன்றி வளர்ந்த மனிதசமுதாயத்திற்குச் சில அறவுரைகளை யாத்திரைப் பத்தில் கூறுகிறார். இப்போது அதுவும் முடிந்துவிட்டது. இரயில் நிலையத்தில் வண்டிக்காகக் காத்திருப்போர் பழையனவற்றை நினைந்து அசைபோடுவதைப்போல, திருப்பெருந்துறை நிகழ்ச்சியை நினைந்து அசைபோடுகிறார் அடிகளார். 'நானேயோ தவம் செய்தேன்' (555) என்று பாடுவதுபோன்ற வியப்போ உணர்ச்சியோ இங்கில்லை. புறநிலையில் நின்று நடந்தவற்றை எண்ணிப்பார்த்து அவற்றுக்கு ஒரு வடிவு கொடுக்கும் முயற்சியே திருவெண்பா ஆகும்.*

*'அணைந்தோர் தன்மை' என்பது இப்பதிகத்தின் உட்தலைப்பாகும். அணைந்தோர் என்பதற்குச் 'சீவன் முத்தர்' என்று பொருள் கூறியுள்ளனர். இந்த உட்தலைப்பை ஏற்க மனம் இடந்தரவில்லை.*

**617.** வெய்ய வினை இரண்டும் வெந்து அகல மெய் உருகிப்
பொய்யும் பொடி ஆகாது என் செய்கேன்- செய்ய
திரு ஆர் பெருந்துறையான் தேன் உந்து செம் தீ
மருவாது இருந்தேன் மனத்து 1

*நல்வினை தீவினை என்ற இரண்டும் வெந்து ஒழியவில்லை; உடலும் உள்ளமும் உருகவில்லை; உடன்பிறந்த பொய்யும் பொடியாகவில்லை. ஏன்? திருவார்பெருந்துறையில் எழுந்தருளியுள்ள குருநாதரின் திருவருள் என்ற செந்தீயை மனத்தில் மருவாதிருந்த காரணத்தால் இவை நிகழவில்லை என்று வருந்துகிறார்.*

*திருவடியைத் தழுவியிருந்தால் மேலே கூறியவை நடைபெற்றிருக்கும். இவற்றைப் பொடியாக்கும் இயல்பு திருவடி ஒன்றிற்கே இருத்தலின் அத்திருவடியைச் 'செந்தீ' என்று உருவகிக்கிறார். தீ என்று கூறியவுடன் அதனுடைய சுடுகின்ற இயல்புதான் மனத்தில் தோன்றும். மேலே கூறிய*

*செயல்களைச் செய்வதால் செந்தீ என்றாரேனும் ஏனைய செந்தீயிலிருந்து இதனை வேறுபடுத்திக்காட்ட, 'தேனுந்து செந்தீ' என்றார்.*

**618.** ஆர்க்கோ அரற்றுகோ ஆடுகோ பாடுகோ
பார்க்கோ பரம்பரனே என் செய்கேன்- தீர்ப்பு அரிய
ஆனந்த மால் ஏற்றும் அத்தன் பெருந்துறையான்
தான் என்பார் ஆர் ஒருவர் தாழ்ந்து 2

*இப்பாடலின் முதலிரண்டு அடிகளும் பின்னிரண்டு அடிகளும் எளிதில் இணைத்துப் பொருள்கொள்ள முடியாதபடி தனித்தனியே நிற்கின்றன.*

*இப்பொழுது பின்வருமாறு பாடலைக் கொண்டு-கூட்டுச் செய்துகொள்வது நலம். 'தீர்ப்பரிய ஆனந்தமால் ஏற்றும் அத்தன் பெருந்துறையான்தான் என்பார் ஆரொருவர்? (அவரைத்) தாழ்ந்து ஆர்க்கோ? அரற்றுகோ? ஆடுகோ? பாடுகோ? பார்க்கோ? பரம்பரனே (இவற்றை அல்லாமல் வேறு) என்செய்கேன்?'*

*'பரம்பரனே! இடையிடையே வந்துபோகாமல் நிலைபேறுடையதாய் (தீர்ப்பரிய) உள்ள ஆனந்தமாகிய பித்தை (மால்) ஏற்றக் கூடியவன் பெருந்துறை நாயகன் ஒருவனேதான் என்று யாரேனும் ஒருவர் என்பால் கூறுவாராயின், அவரைப் பணிந்து (தாழ்ந்து) புகழ்வேனோ? அவர் செய்த உதவியை நினைந்து அரற்றுவேனோ? ஆடுவேனோ? பாடுவேனோ? எனக்கு வழிகாட்டிய அவரைப் பார்த்துக்கொண்டே இருப்பேனோ? என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கின்றேன்' என்றபடி.*

**619.** செய்த பிழை அறியேன் சேவடியே கை தொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்- வையத்து
இருந்து உறையுள் வேல் மடுத்து என் சிந்தனைக்கே
கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான் 3

உறையுள் இருக்கும் வேலை எடுத்து எதிரேயுள்ளவன் மார்பில் பாய்ச்சினான் என்றால், எதிரேயுள்ளவன் ஏதேனும் பிழைசெய்திருக்க வேண்டும் என்று நினைப்பது உலகியல்பு. திருப்பெருந்துறையில் இருந்த குருநாதர் ஒரே விநாடியில் தம் மார்பில் வேலைப் பாய்ச்சினார் என்கிறார் அடிகளார். அவர் வேலைப் பாய்ச்சுவதற்கு தாம் என்ன பிழை செய்தோம் என்று தமக்கே தெரியவில்லை என்கிறார். பழிப்பது போன்றுள்ள இந்த உருவகத்தின் உண்மைப்பொருள் வருமாறு:

செய்த பிழை என்பது அவரையும் அறியாமல் அவர் ஈட்டிய மூவகை வினைகளாம். 'இந்த வினைகள் என்பால் சேராமல் இருக்கவேண்டுமாயின் குருநாதர் சேவடிகளைக் கைகளால் தொழுது இதனைப் போக்கிடவேண்டும் என்பதையும் அறியாமல் இருந்துவிட்டேன்' என்கிறார்.

உய்தல் என்பது பிழைப்பது, வாழ்தல் என்ற பொருளையுடையது. சாதாரணமாக உலகிடை வாழவேண்டுமேயானால் உயிர்ப்பு இன்றியமையாததாகும். உயிர்ப்பு என்பது மூச்சை உள்ளிழுத்து வெளிவிடுதல் என்ற பொருளையுடையது. சேவடி தொழும் செயல் ஏதோ தம்மி னும் வேறாய்த் தனித்து நிற்காமல் உயிர்ப்புப்போலத் தம்பால் இயல்பாக அமைந்திருக்க வேண்டும். ஏதோ திருக்கோயில்களைக் கண்டபொழுது சேவடிகளைத் தொழுததாகவும் ஆனால், அப்படித் தொழும் பழக்கம் தம்முடைய மூச்சுக் காற்றுப்போல் இயல்பாக அமையவில்லை என்றும் வருந்துகிறார் அடிகளார். இதனையே 'சேவடியே கை தொழுதே உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்' என்கிறார்.

அப்படியிருந்த அவரைப் பெருந்துறை நாயகன் என்ன செய்தான் தெரியுமா? உறைக்குள் (திரோதான சக்தி) இருந்த வேலை (மெய்ஞ்ஞானத்தை) எடுத்து அவர் மார்பில் பாய்ச்சினான் என்கிறார்.

மெய்ஞ்ஞானத்தை ஒரே விநாடியில் புகுத்தினான் என்றால் இது பரஞானம் என்பது பெறப்படும். பரஞானம் ஒன்றுதான் சித்தத்தில் நிலைகொள்ளும். இதன் எதிரான அபரஞானம் மூளையின்பாற்பட்டதாகும். அது அறிவுவழிப் பணிசெய்வதாகும்.

குருநாதர் பரஞானத்தை ஒரேவிநாடியில் தம்சிந்தனையில் புகுத்தினார் என்பதையே அடிகளார் ‘வேல் மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்’ என்று பாடுகிறார். இதிலும் ஓர் அழகும், நுண்மையும் பொதியப்பெற்றுள்ளன. சித்தத்தில் கோத்தான் என்று பாடியிருக்கலாம். அவ்வாறில்லாமல் என் சிந்தனைக்கே கோத்தான் என்றல்லவா அடிகளார் பாடுகிறார்! சித்தத்தில் தோன்றுவதே சிந்தனை எனப்படும். பரஞானத்தைச் சித்தத்தில் கோத்தான் என்று கூறாமல், சிந்தனைக்கே கோத்தான் என்று கூறியமையால் அந்தச் சித்தத்திலிருந்து வெளிப்படும் சிந்தனை அனைத்துமே பரஞானமாக வெளிப்படுமாறு செய்தான் என்ற அருங்கருத்தை இங்கே பேசியுள்ளார்.

**620.** **முன்னை வினை இரண்டும் வேர் அறுத்து முன் நின்றான்**
**பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்- தென்னன்**
**பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்**
**வரும் துயரம் தீர்க்கும் மருந்து 4**

‘பெருந்துறைப் பேராளன் முன்னை வினையிரண்டும் (சஞ்சிதம், பிராரத்துவம்) முன்னின்று வேரறுத்தான். இதன் பயனாகப் பெரும் கருணையுடையவனாகிய அவன் இனி வரப்போகின்ற பிறப்புக்களையும் அறுத்துவிடுவான். நீள்கின்ற இப்பிறப்பில் ஆகாமியவினை காரணமாக ஏதேனும் துயரங்கள் வருவதாக இருப்பின் அதற்கும் மருந்தாக உள்ளான்’ என்றபடி.

621\. அறையோ அறிவார்க்கு அனைத்து உலகும் ஈன்ற
மறையோனும் மாலும் மால் கொள்ளும்- இறையோன்
பெருந்துறையுள் மேய பெருமான் பிரியாது
இருந்து உறையும் என் நெஞ்சத்து இன்று 5

*அறைகூவல் விடுதல் என்பது நம்பாதவர்களை நம்பச் செய்வதற்குரிய ஓர் உபாயமாகும். மாலும் நான்முகனும் அறியமுடியாது மயங்குகின்ற ஒருவன் அடிகளார் உள்ளத்தில் தங்கியுள்ளதாக அவரே கூறுகின்றார். 'அந்த மாலும் நான்முகனும்கூட இதனை நம்பமாட்டார்களே! அப்படியிருக்க உலகத்தார் எப்படி நம்புவார்கள்? இவர்களை நம்பவைப்பான் வேண்டி அறைகூவுகின்றேன்' என்கிறார் அடிகளார்.*

622\. பித்து என்னை ஏற்றும் பிறப்பு அறுக்கும் பேச்சு அரிது ஆம்
மத்தமே ஆக்கும் வந்து என் மனத்தை- அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேர் அருளால் நோக்கும்
மருந்து இறவாப் பேரின்பம் வந்து 6

*மருந்து போல்பவனை மருந்து என்றார்.*

*இறவாப்பேரின்பம்-வீடுபேறு*

*'மருந்தாகவும், அத்தனாகவும் உள்ள பெருந்துறையான் என்னுட் புகுந்து என்னைப் பித்தாக்கினான்; என்னுடைய பிறப்பை அறுத்தான்; இன்னது என்று எடுத்து விளக்கிச் சொல்ல முடியாதபடி அவன் திருவடி ஒன்றையே பற்றிநிற்கும் உன்மத்தனாக என்னை ஆக்கினான். இத்தனை செயல்களையும் பெருந்துறை நாயகன் தன் அருள்நோக்கம் ஒன்றினாலேயே செய்துவிட்டான்' என்கிறார்.*

623\. வாரா வழி அருளி வந்து எனக்கு மாறு இன்றி
ஆரா அமுதாய் அமைந்தன்றே- சீர் ஆர்
திருத்தன் பெருந்துறையான் என் சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கும் ஒளி 7

*திருத்தன் என்பது தீர்த்தன் (தூய்மையே வடிவானவன்) என்ற வடசொல்லின் தமிழாக்கமாகும். 'சிறப்புப்பொருந்திய திருப்பெருந்துறையிலுள்ள தூய்மையே வடிவினனாகிய அவன் என் சிந்தையுள் வந்து ஒளிவடிவாகத் தங்கினான். அதன் பயனாக மறு பிறப்பில்லாமல் செய்தான்; இந்தப் பிறப்பில் நினைத்தது எவ்வித மாறுபாடுமின்றி நினைத்தபடியே வந்துநிற்கும் அமுதாகவும் என்றும் தெவிட்டாத இன்பம் தரும் அமுதாகவும் எனக்கு அமைந்தான்' என்கிறார்.*

**624.** யாவர்க்கும் மேல் ஆம் அளவு இலாச் சீர் உடையான்
யாவர்க்கும் கீழ் ஆம் அடியேனை- யாவரும்
பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய்க்கு என்
எம்பெருமான்
மற்று அறியேன் செய்யும் வகை 8

*அனைத்தினும் மேலாகவுள்ள அவன் அனைவர்க்கும் கீழாகிய தம்மைப் பிடித்து ஆண்டு இன்பத்துள் வைத்தான். அங்ஙனம் வைத்தமைக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? என்று கூறுகிறார்.*

**625.** மூவரும் முப்பத்து மூவரும் மற்று ஒழிந்த
தேவரும் காணாச் சிவபெருமான்- மா ஏறி
வையகத்தே வந்திழிந்த வார் கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே இன்பம் மிகும் 9

*'மும்மூர்த்திகள், முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோருள் யாரும் கண்டிராத சிவபெருமான் குதிரைச் சேவகனாகக் குதிரையில் அமர்ந்து தன் திருவடிகளைக் குதிரையின் அங்கவடியில் புகுத்திக் கொண்டு வந்ததை நினைந்து தொழத்தொழ என்னுள் இன்பம் மிகும்' என்றபடி.*

**626.** இருந்து என்னை ஆண்டான் இணை அடியே சிந்தித்து
இருந்து இரந்துகொள் நெஞ்சே எல்லாம்- தரும் காண்
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்
மருந்து உருவாய் என் மனத்தே வந்து 10

*'பெருந்துறை நாயகன் பிறவியைப் போக்கும் மருந்தாக என்னுள் புகுந்து இருந்துவிட்டான். ஆதலின் நெஞ்சே! அவன் திருவடிகளைச் சிந்தித்து, நீ விரும்பியவற்றை யெல்லாம் அவனை இரந்து பெறுவாயாக!' என்கிறார்.*

**627.** இன்பம் பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்துச் சோதி ஆய்- அன்பு அமைத்து
சீர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர் ஆகக் கொண்டான் உவந்து 11

*'பெருமை மிகுந்த திருப்பெருந்துறை நாயகன் தான் விரும்பித் தங்கும் ஊராக என்னுடைய சிந்தையையே கொண்டான். ஆதலின் என்ன நிகழ்ந்தது? இன்பம் பெருகிற்று; அஞ்ஞானமாகிய இருள் அகன்றது; துன்பம் என்பது தலைகாட்டாதபடி அகன்றது; அன்பு பெருகிற்று. அந்த அன்பு அவனினும் வேறானதன்று ஆதலால்- அதாவது அன்பே சிவம் ஆதலால்- ஒளிவடிவாய் நின்றது' என்க.*

ॐ ॐ ॐ

# 48. பண்டு ஆய நான்மறை

## [அனுபவத்துக்கு ஐயமின்மை உரைத்தல்]

பண்டாய நான்மறை என்ற பகுதியிலுள்ள ஏழு பாடல்களும் அந்தாதித் தொடையாக அமைந்திருத்தலின் எஞ்சிய மூன்று பாடல்கள் காணாமற் போய்விட்டன என்று நினைப்பதில் தவறில்லை. போய்விட்ட பத்தாம் பாடலின் ஈற்றடி பண்டே என்று முடிந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் 'பண்டாய' என்று தொடங்குவது மண்டலித்தல் என்ற மரபுக்குப் பொருத்தமாக இருந்திருக்கும்.

அடிகளார் வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளும் அவருடைய மனமாற்றம் ஏற்பட்ட சூழ்நிலையும், பெருந்துறையான் திருவிளையாடலும் இதற்கு முந்தைய பகுதியாகிய 'திருவெண்பா' விலும், இந்தப் பகுதியிலும் பேசப்பெறுகின்றன. ஆனால், எந்த ஒரு கருத்தும் விரிவாகப் பேசப்பெறவில்லை. எந்த ஒரு நிகழ்ச்சியும்கூடத் தொடக்கம், நடுவு, இறுதியென்றில்லாமல், போகிற போக்கில் சில சொற்களை மட்டும் வைத்துக் கொண்டு, குறிக்கப்பெறுகின்றன.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது விட்டுவிட்டு வருகின்ற நினைவுகள் (random thoughts) இப்பாடல்களில் ஒரு வடிவு பெற்றனவா என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

பெரும்பாலும் அருள் அனுபவ நினைவுகள் உணர்ச்சியுடன் கலந்தே வெளிப்படும். திருவாசகத்தில் இதற்கு முன்னருள்ள பாடல்கள் இக்கூற்றுக்கு ஆதாரமாக உள்ளன. திருவெண்பாவின் முன்னுரையில் கூறியுள்ளபடி,

கூத்தன் திருவடி சேர்தல் மிக அண்மையிலுள்ளது என்பதை அறிந்துவிட்ட காரணத்தால் உணர்ச்சிக் கொந்தளிப்பு அடங்கிவிட்டதோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. யாத்திரைப் பத்தில்கூட இதே நிலைதான்.

மக்களுக்கு உதவ வேண்டும். திருவடி சேர்வதற்கு முன்னர், தம் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை, விட்டு விட்டு வருகின்ற எண்ணங்களாகக் கோத்துச் சுருங்கச் சொல்ல வேண்டும் என்று அடிகளார் நினைத்தார் போலும். உணர்ச்சி அதிகம் கலவாமல் எண்ணங்களுக்கு வடிவு கொடுக்கவேண்டும் என்று அடிகளார் நினைத்தபோது வெண்பா யாப்பு கைகொடுத்தது. அந்த அடிப்படையை மனத்துட் கொண்டு திருவெண்பா, பண்டாய நான்மறை என்ற இரண்டு பகுதிகளையும் நோட்டம்விட்டால் இந்த இரண்டு பகுதிகளும் மேலே கூறியவற்றிற்குப் பொருத்தமாக அமைவதைக் காணலாம்.

'அநுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல்' என்பது இதன் உட்தலைப்பு ஆகும். எவ்வளவு சிந்தித்தும் இத் தலைப்பின் பொருத்தத்தை என்னால் அறியமுடியவில்லை.

**628.** **பண்டு ஆய நான்மறையும் பால் அணுகா மால் அயனும்**
**கண்டாரும் இல்லைக் கடையேனைத்- தொண்டு ஆகக்**
**கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு நெஞ்சமே**
**உண்டாமோ கைம்மாறு உரை** **1**

மிகப் பழமையானதாகிய நான்கு வேதங்களும் அவன்பால் அணுகா, தூரத்தே நின்று ஐயா என்று அழைப்பதுதவிர நான்மறைகள் செய்யக்கூடியது எதுவும் இல்லை என்பதை 'வேதங்கள் ஐயா என, ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' (1: 34, 35) என்று அடிகளாரே பாடியுள்ளார்; இங்கும் அதே கருத்தைப் பேசுகிறார். வேதங்கள் அவன்பால் அணுகாததில் புதுமையொன்றும் இல்லை. வேதங்களை ஓதிக் கொண்டிருக்கும் நான்முகனும், அவன் தந்தையாகிய நாரணனும்கூட அவனைக் கண்டதில்லை.

'கோகழி என்ற தலத்தில் வீற்றிருக்கும் பெருமான் தானே வந்து என்னை ஆட்கொண்டான். மாலும் அயனும் வேதமும் காணமுடியாத ஒரு பொருள் தானே வந்து என்னை ஆட்கொண்டது என்றால், அந்த உபகாரத்திற்கு என்ன கைம்மாறு செய்யமுடியும்? நெஞ்சமே! உன்னிடம்தானே அவன் வந்து தங்கினான். எனவே, என்ன கைம்மாறு செய்யமுடியும் என்தை நீயே உரைப்பாயாக!' என்கிறார்.

**629. உள்ள மலம் மூன்றும் மாய உகு பெரும் தேன்**
**வெள்ளம் தரும் பரியின் மேல் வந்த- வள்ளல்**
**மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்**
**கருவும் கெடும் பிறவிக் காடு 2**

'பரியின்மேல் வந்த வள்ளல் என்மாட்டு இரண்டு காரியங்களைச் செய்தான். ஒன்றைப் போக்கினான். அது யாதெனில் என்னைப் பற்றியிருந்த ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் போக்கினான். அவற்றைப் போக்கிய இடம் வெறுமையாக இருந்துவிடாதபடி இரண்டாவது ஒரு காரியத்தைச் செய்தான். அவனுடைய திருவருளாகிய தேன் குபுகுபு என்று பாய்ந்து வெள்ளமாக என் உள்ளத்தில் நிரம்புமாறு செய்தான்.

'இவற்றைச் செய்தவன் யார்? பரிமேல் வந்த வள்ளல். பரியின்மேல்வந்தவன் என்பால் அணுகி அரசன் முதலானவர் இடையில் இருக்கையில் என்னைத் தனியே பிரித்து இவற்றைச் செய்யவில்லை. என்ன ஆச்சரியம்! அந்த வள்ளலைக் கருத்து ஒருமித்து என் கண்களால் கண்டவுடனேயே இவ்விரு செயல்களும் நிகழ்ந்துவிட்டன.

வினை கழலுவது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. பல பிறவிகளில் பல்வேறு வகையாகத் தவம் முயன்று பல்வேறு செயல்களைச் செய்து இவற்றைக் கழற்ற முயல்வோர் உலகிடை உண்டு. இவ்வளவு பெரிய

*காரியத்தில், என்னுடைய செயற்பாடு என்று சொல்லக்கூடிய எதுவுமில்லாமல் பரிமேல் வந்த சேவகன் போகிற போக்கில் இதனைச் செய்துவிட்டான்.*

*'வழியோடு சென்ற என்னைப் பெருந்துறைக் குருநாதர் இழுத்துப் பிடித்து இதனைச் செய்தார். இதன் எதிராகப் பரிமேல் வந்த சேவகனார் என்னை இழுக்கவும் இல்லை; பிடிக்கவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் குறிப்பாக என்னைப் பார்த்தாரா என்றுகூடச் சொல்ல முடியாது. ஆனால், சேவகனாரை நான் கண்டவுடன் மேலே சொல்லிய இரண்டு செயல்களும் நிகழ்ந்துவிட்டன' என்கிறார்.*

*இந்த அனுபவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு உலக மக்களுக்கு ஒரு சிறந்த உபதேசம் செய்கிறார் அடிகளார். 'யார் யார் பிறவியை வேரொடும் வேரடி மண்ணோடும் தொலைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவர்கள் அனைவரும் பெருந்துறைக் கோனை வாழ்த்தி வழிபடுங்கள்' என்கிறார்.*

**630.** **காட்டகத்து வேடன் கடலில் வலை வாணன்**
**நாட்டில் பரிப்பாகன் நம் வினையை- வீட்டி**
**அருளும் பெருந்துறையான் அம் கமல பாதம்**
**மருளும் கெட நெஞ்சே வாழ்த்து** **3**

*'நெஞ்சமே! குருநாதராக எழுந்தருளி உனக்கு அருள் செய்தவன் யாரென்று தெரியுமா? பெருந்துறை நாயகன் என்றுமட்டுந்தானே நீ நினைக்கிறாய்! ஆனால், அருச்சுனன் பொருட்டு வேட்டுருக் கொண்டு காட்டில் அலைந்தான்; நந்தி சாபத்தைத் தீர்த்தற்காக வலைஞன் வடிவெடுத்துக் கடலில் வலைவீசினான்; மதுரையம்பதியில் குதிரைச் சேவகனாகத் தெருக்களைச் சுற்றிவந்தான் அவன்.*

*'வேண்டிய இடத்தில் வேண்டுருக் கொண்டு பல்வேறு வகைப்பட்ட செயல்களைச் செய்யும் பெருந்துறை நாயகனுடைய கமல பாதங்களை நீ தொழுவாயாக,*

*அவ்வாறு செய்வாயேயாயின் அம்பு எய்து பன்றியைக் கொன்றதுபோல நீ செய்த வினைகளை அழித்துவிடுவான். வலை வீசி மீனைப் பிடித்ததுபோலத் தன்னுடைய அருட்பார்வையாம் வலையை வீசி உன்னுடைய அஞ்ஞானத்தையும் அகப்படுத்திவிடுவான்.*

*'எங்கோ இருக்கும் ஒருவன் யாருக்காகவோ குதிரைமேல் ஏறிவந்தான் ஆதலின் உனக்கும் அருள்வான்' என்றபடி.*

**631.** வாழ்ந்தார்கள் ஆவாரும் வல் வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்து உலகம் ஏத்தத் தகுவாரும்- சூழ்ந்து அமரர்
சென்று இறைஞ்சி ஏத்தும் திரு ஆர் பெருந்துறையை
நன்று இறைஞ்சி ஏத்தும் நமர் 4

*'திருப்பெருந்துறைக்குச் சென்று அந்த நாயகனை உடலாலும் மனத்தாலும் இறைஞ்சி, அவன் புகழை நாவார ஏத்தும் நம்மவர்களே! மறுமையில் உங்களுக்கு வீடுபேறு கிட்டும் என்பது ஒருபுறம் இருக்க, இந்த உடலோடு இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போது என்ன பயன் கிட்டும் என்று நினைக்கிறீர்களா? இதோ சொல்கிறேன்.*

*'மனித வாழ்க்கையில் ஒரு குறிக்கோளுடன் வாழ்ந்தவர்கள் ஆவீர்கள்; இந்தப் பிறப்பில் இருக்கின்ற வரையில் நீக்க முடியாத சஞ்சித, பிராரத்துவ, ஆகாமிய வினைகளை மாய்ப்பீர்கள்; உலகத்தில் உள்ள ஏனையோர் உங்களிடம் வந்து தாழ்ந்து வணங்கும் தகுதியைப் பெறுவீர்கள்;' என்கிறார். இம்மூன்றும் இம்மையில் கிடைக்கின்ற பயன்களாகும்.*

**632.** நண்ணிப் பெருந்துறையை நம் இடர்கள் போய் அகல
எண்ணி எழு கோகழிக்கு அரசைப்- பண்ணின்
மொழியாளோடு உத்தரகோசமங்கை மன்னிக்
கழியாது இருந்தவனைக் காண் 5

'கோகழியில் எழுந்தருளியிருக்கின்ற அரசனை, பண்போன்ற மொழியுடைய பெருமாட்டியுடன் உத்தரகோசமங்கையை விட்டு நீங்காதிருக்கின்றவனை, அங்கங்கே சென்றுதான் காணவேண்டுமென்பதில்லை. நெஞ்சே! நம் வினைகள் நம்மைவிட்டு நீங்கவேண்டுமேயானால் பெருந்துறையை நண்ணிக் காண்பாயாக' என்கிறார்.

**633. காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப்**
**பேணும் அடியார் பிறப்பு அகலக் – காணும்**
**பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்**
**பிரியானை வாய் ஆரப் பேசு 6**

இப்பாடல் எளிதாகப் பொருள் காணுமாறு இல்லை.

மனித உடம்புடன் வாழ்பவர்க்கு ஐம்பொறிகள் என்ற கருவிகளும் நான்கு கரணங்களும் இவ்வுடம்புடன் இருந்து பணிபுரிகின்றன. இவற்றை உடையவன் ஆன்மிக வளர்ச்சி அடையாததால் இக்கருவி, கரணங்கள் சாதாரணப் பசுகரணங்களாகவே உள்ளன. அவை அவ்வாறு இருப்பதால் பிராரத்துவ வினையை நுகரும் காலத்தில்கூடத் தாம் செய்த வினைப்பயனால் இது நிகழ்ந்தது என்று வருந்துவர் ஒரு சிலர்; ஏனையோர் பிறர் தந்த துன்பத்தால் இது நிகழ்ந்தது என்று கருதி அவர்மேல் வருந்துவர்.

இந்த வருத்தம் இப்பிறப்பில் செய்யப்படுகின்ற ஆகாமிய வினையாய் மறுபிறப்பிற்கு வித்தாகிறது.

இதற்கு மறுதலையாக, அடியார்கள் என்பவர்கள் பிராரத்துவ வினையால் தமக்கு நிகழ்பவற்றைக்கூட, அவன் செயல் என்று கருதி, அதனைப் பேரின்பமாகவே நினைந்து போற்றுவர். அதன் பயனாக, ஆகாமிய வினை வருதல் இல்லாமலேயே போய்விடுகிறது. இத்தகையோர்க்கு மறுபிறப்பு இல்லை என்பது ஒருதலை. இதனையே

அடிகளார், 'காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமென, பேணும் அடியார் பிறப்பகல' என்று கூறுகிறார்.

**634.** பேசும் பொருளுக்கு இலக்கிதம் ஆய்ப் பேச்சு இறந்த
மாசு இல் மணியின் மணி வார்த்தை- பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பு அறுத்தேன் நல்ல
மருந்தின் அடி என் மனத்தே வைத்து 7

*பாடலின் முதலடி 'பேசும் பொருளுக்கு இலக்கிதமாய்' என்றுள்ளது. பேச்சு என்பது சொல்வடிவமாகும். அந்தச் சொற்கள் வெறும் ஓசையளவாய் நில்லாமல் ஒரு பொருளைக் குறிப்பனவாகவே உள்ளன. இதனையே தொல்காப்பியனார், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (தொல்.சொல். பெயர்.1) என்கிறார்.*

*பல்வேறு வகைப்பட்ட சொற்கள், பல்வேறு வகைப்பட்ட பொருள்களைக் குறிக்கின்றன. இப்பொருள்கள் பல்வேறு வடிவுடனும் பல்வேறு திறத்துடனும் இருப்பினும் அவை அனைத்தும் அணுக்களின் சேர்க்கையே என்பது நாமறிந்த ஒன்று. இந்த அணுவும் அணுவைவிடச் சிறிதாக இருக்கின்ற ஒன்றும், அவனே என்பதை 'அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க' (3: -45) என்று முன்னரே அடிகளார் குறித்துள்ளார். ஆதலால், பொருளுக்கு இலக்கிதமாய் (இலக்கியமாய்) உள்ளவன் அவனே என்ற கருத்தையே 'பேசும் பொருளுக்கு இலக்கிதமாய்' என்றார்.*

*'பேச்சிறந்த மாசில் மணி' என்பது அடுத்து நிற்பதாகும். நுண்ணிய அணுவாய் இருந்தாலும், மிகப் பெரிய மலையாய் இருந்தாலும் ஒரு வடிவு பெற்றிருக்கின்ற வரையில் அதற்கென ஒரு பெயர் உண்டு. அணுத்தன்மைவரையில் அதற்கு அணு என்ற பெயர் உண்டு. அதையும் கடந்து சிறிதாய், சக்தியே வடிவாய் இருக்கும் ஒன்றுக்கு இன்று பலபெயர்கள் தரப்படினும்*

எலக்ட்ரான், பொசிட்ட்ரான், மீசான் அவற்றையும் கடந்து நிற்பவன் இறைவன் ஆதலாலும், அவன் சொல்லுக்குள் அடங்காதவன்; ஆதலாலும், 'பேச்சிறந்த மாசில் மணி' என்றார். 'மாசில் மணி' என்பது அவனுடைய பெயர் அன்று. நாம் சொல்லும் மாசில் மணி போன்றவன் என்ற உவமையளவில் மாசில்மணி நிற்குமேதவிர, அதை அவனுடைய பெயராகக் கொள்ளக்கூடாது.

இறைவன் ஆகிய பொருளுக்குத்தான் பெயரோ, உருவோ வடிவோ இல்லையே தவிர அந்தப் பொருளை மனத்திலிருத்திக்கொண்டு அதைப்பற்றி நாம் என்ன பேசினாலும் அதனை 'மணிவார்த்தை' என்கிறார் அடிகளார்.

'குருந்தமரத்தடியில் இருந்த குருநாதரின் திருவடிகளைப் பிறவிக்கு மருந்தாக என் உள்ளத்துள் பொதிந்தேன் ஆதலின், என் பிறப்பை அறுக்கும் ஓர் அற்புதமும் நடைபெற்றது' என்கிறார். இதனையே 'நல்ல மருந்தின் அடி என்மனத்தே வைத்துப் பிறப்பு அறுத்தேன்' என்கிறார்.

மருந்தில் இரு வகை உண்டு. வேம்பும், கடுவும் போன்ற சில மருந்துகள் உண்ணும்பொழுது பெருவெறுப்பைத் தந்து பின்னர் நலம் பயக்கும். இதன் எதிராகத் தேன் போன்ற சில மருந்துகள் உண்ணும்போதும் சுவை தந்து பின்னரும் நலம் பயத்தலின் அவை அனைவரும் விரும்பி உண்ணும் நல் மருந்தாயின. அதுபோலப் பெருந்துறையான் திருவடியை மனத்தில் வைக்கும்பொழுதும் ஆனந்தம், பின்னர்ப் பிறப்பு அறுத்தலாகிய பின்விளைவும் ஆனந்தமே. ஆதலின் அதனை 'நல்ல மருந்து' என்றார்.

ॐ ॐ ॐ

# 49. திருப்படை ஆட்சி

## (சீவ உபாதி ஒழிதல்)

பொதுவாகவே திருவாசகத்தின் பிற்பகுதி எளிதில் பொருள் விளங்கிக்கொள்ள முடியாத அளவில் அமைந்துள்ளது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். இந்தக் கருத்துக்கு முத்தாய்ப்பாக அமைந்துள்ளது திருப்படையாட்சி என்னும் இப்பகுதியாகும்.

என்னைப் பொறுத்தவரை எத்துணை முறை படித்தும், எத்துணை முறை பிறரைப் படிக்கச்சொல்லிக் கேட்டும் ஒரு சிறிதும் பொருள் விளங்குமாறில்லை. ஒரு சில பெருமக்களுடைய உரைகளைப் பார்த்ததில் விளக்கம் கிடைக்காமல்போனதுமட்டும் அன்றி எனது குழப்பமே அதிகமாயிற்று. காரணம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் பொருள் கொண்டுள்ளனர்.

'ஆகாதே' என்ற சொல்லுக்குக்கூட ஒரே வகையாகப் பொருள்கொள்ளும் முறை காணப்படவில்லை. இச்சொல்லுக்கு 'ஆகும்' என்றும், 'ஆகாமற் போய்விடுமோ?' என்றும், 'ஆகாது' என்றும் பொருள்கூறியுள்ளனர். இந்த நிலையில் இந்த எட்டுப் பாடல்களில் ஐம்பத்தாறு முறை வரும் 'ஆகாதே' என்ற சொல்லுக்குப் பொருள் கொள்வது எளிதான காரியமாக இல்லை.

முதலாவதாகத் தலைப்பையே எடுத்துக்கொள்ளலாம். 'படை' என்ற சொல்லும், 'ஆட்சி' என்ற சொல்லும் நன்கு அறியப்பட்டனவே ஆகும். பகையை அழிப்பதற்குப் பயன்படும் கருவிகளைப் படை என்று பொதுவாகக் கூறுவர். அப்படைகளை ஏந்திய காரணத்தால் அதனை ஏந்திய வீரர்களின் கூட்டத்தை ஆகுபெயரால் படை என்று கூறுவதும் உண்டு.

திருப்படை என்று யாரோ தலைப்புத் தந்தமையால் இது அடியார் கூட்டத்தைக் குறிக்கும் என்றும் பொருள் கொண்டுள்ளனர். இவ்வாறன்றிப் படை ஆட்சி என்று வைத்துக்கொண்டு, படைகளை ஆளும் தன்மை என்று பொருள்கூறலாமோ எனத் தோன்றுகிறது.

படைகளுக்கென்று ஒரு தனித்தன்மையுண்டு. எந்த ஒரு படைக்கலமும் பகைவர்களை வென்று, நன்மையையும் செய்யும்; தன்னை ஏந்தியவர்களுக்கும் அவர்களுடைய நண்பர்களுக்கும் கவனக்குறைவு காரணமாகத் தீமையையும் விளைக்கும். எனவே. படைகளை வைத்திருப்பவனுக்கு அவற்றை முறையறிந்து ஆளுந்தன்மை மிக இன்றியமையாததாகும். இன்றேல் அப்படைகள் அவனுக்கும் அவனை அண்டியவர்களுக்கும் ஊறே செய்யும். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு படைகளை ஆளும் தன்மைபற்றி இப்பதிகம் பேசுகிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இரண்டாம் பாடலின் முதலடியில் 'ஐந்தினொடு ஐந்து' என்ற தொடரால் கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் ஆகியவற்றைக் குறிக்கின்றார். இவற்றை விரிவுபடுத்தி, கண்கள் முதற்பாடலிலும் (635) மூன்றாம் பாடலிலும் (637) கைகள், வாய் என்பன ஆறாம் பாடலிலும் (640) 'மணியோசை' 'முரன்றெழும் ஓசை' என்பவற்றால் காதுகள் ஏழாம் (641) எட்டாம் (642) பாடல்களிலும் குறிக்கப்பெறுகின்றன.

இவற்றைப் படைகள் என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை. இப்படைகளை அடக்கி ஆளும் முறையில், கண் இறைவன் திருவடிகளைக் காணவும், வாய் அவன் புகழைப் பேசவும், காதுகள் அவனுக்கு இசைக்கப்படும் மணியோசை போன்றவற்றைக் கேட்கவும், கைகள் அவன் திருவடிகட்கு மலர் தூவவும் பயன்படுமேயானால் இப்படைகளை அடக்கி ஆண்டதாக முடியும். அவ்வாறின்றி இப்பொறிகளை அடக்கமுடியாமல் அவை தறிகெட்டுப்

போகுமாறு விட்டுவிட்டால் படைகளை ஆளும் தன்மை இழக்கப்பெறும்.

படையாட்சி என்ற தலைப்பை இந்த அடிப்படையில் யாரோ இட்டிருக்க வேண்டும். அதனைப் புரிந்துகொள்ளாத பிற்காலத்தார், திருவாசகத்தில் வரும் தலைப்புக்கள் என்ற காரணத்தால் ஒரு 'திரு' வைப் படைக்கு முன்னர்ச் சேர்த்துவிட்டனர் போலும். வெண்பாவிற்கு முன்னர்த் திருவைச் சேர்த்துத் 'திருவெண்பா' என்று பெயர் சூட்டியதும் இதேபோன்றுதான்.

ஒவ்வொரு பாடலிலும் வரும் 'ஆகாதே' என்ற சொல் ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். ஆகாது என்ற எதிர்மறைப் பொருளையும் ஆகும் என்ற உடன்பாட்டுப் பொருளையும் தேவைப்பட்ட இடங்களில் ஏற்றுக்கொள்ளுதல் பொருத்தமுடையதோ என்று தோன்றுகிறது.

'சீவ உபாதி ஒழிதல்' என்ற உட்தலைப்பு என்ன பொருளைத் தருகிறது என்பது விளங்கவேயில்லை.

**635.** கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன ஆகாதே
காரிகையார்கள்தம் வாழ்வில் என் வாழ்வு
கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு
மறந்திடும் ஆகாதே
மால் அறியா மலர்ப் பாதம் இரண்டும்
வணங்குதும் ஆகாதே
பண் களிகூர்தரு பாடலொடு ஆடல்
பயின்றிடும் ஆகாதே
பாண்டி நல் நாடு உடையான் படை ஆட்சிகள்
பாடுதும் ஆகாதே
விண் களி கூர்வது ஓர் வேதகம் வந்து
வெளிப்படும் ஆகாதே

மீன் வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படும் ஆயிடிலே 1

இரண்டு கண்களும் அவன் திருவடிகளைக் கண்டு களிப்பதற்குரியனவாகும். இங்கு 'ஆகாதே' என்ற சொல் ஆகமாட்டாவா என்ற எதிர்மறை வினாவாக அமைந்து, ஆகும் என்ற பொருளைத் தந்துநிற்கிறது. 'கண்கள் இரண்டும்' என்பதிலுள்ள உம்மையை முற்றும்மை என்று கொள்ளாமல், இறந்தது தழுவிய எச்ச உம்மையாகக் கொண்டு, கண்கள் காண்பதற்கு அடிப்படை உதவி புரிகின்ற மனம் என்ற ஒன்றையும் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் நலம். இரண்டு கண்களும் மனமும் அவன் திருவடிகளைக் கண்டு களிப்பதற்கு உரியனவாகும்.

இது எளிதாக நடைபெறுவது ஒன்றன்று. மனம், மொழி, மெய் கடந்து நிற்கின்ற ஒருவனை, இந்தக் கண்களோ மனமோ தேடிச்சென்று காண்டல் இயலாத காரியம். எனவே, காண்பதற்குரிய வாய்ப்புக் கிட்டியதைப் பாடலின் பிற்பகுதியில் அடிகளார் விளக்குகின்றார்.

மீன்வலை வீசிய கானவனாக அவன் வெளிப்பட்டான் என்றால், அவனுடைய திருவடிகள் நிலத்திலும் நீரிலும் தோய்ந்து நிற்றல் ஒருதலை. எனவே, கண்களிரண்டும் அத்திருவடிகளைக் கண்டு களித்தல் எளிது.

'மீன்வலை வீசிய கானவன்' என்றதால், மீன் பிடிக்கும் தாழ்ந்த தொழிலைச் செய்பவன் என்று கருதிவிட வேண்டா என்று கூறுவதற்காகக் கானவன் என்ற சொல்லின் முன்னரேயே 'மாலறியா மலர்ப் பாதம்' என்றார்.

அந்த மலர்ப்பாதங்களைக் கண்ணும், மனமும் கண்டு களிக்கும்போது, தம்மையும் அறியாமல் சில மாற்றங்களும் நிகழ்ச்சிகளும் காண்பவர்களிடம் தோன்றுமென்பதைக் 'களிகூர்தரு பண்களோடு பாடலொடு ஆடல் பயின்றிடுதல்' ஆகும் என்கிறார்.

இவ்வாறு வெளிப்பட்ட அம்மலர்ப்பாதத்தைக் கண்களால் கண்டு, பாடலொடு ஆடல் நிகழவேண்டும். அஃதின்றேல் அந்த வாழ்வு, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று திரியும் சில காரிகையார் வாழ்வில் அகப்பட்டுக்கொண்டு, வெளியேற முடியாமல் இறுதியில் அவர்கள் வாழ்வைவிடக் கடைப்பட்டதாகிவிடும்.

மேலே கூறியபடி காணுதலும் ஆடுதலும் நடைபெற வில்லையானால் இப்பிறவி நீங்குவதற்குப் பதிலாக மறுபடியும் வந்து பிறத்தல் உறுதி என்பதை அறிவிக்கப் ‘பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே’ என்றார். ‘மண்களில்’ என்ற பன்மை வாய்பாட்டை உபயோகப்படுத்தியதன் மூலம் மண்ணுலகம், நாகலோகம் முதலியவற்றைக் குறித்தாராயிற்று.

‘வேதகம்’ என்ற சொல், மட்டமான உலோகத்தைப் பொன்னாக மாற்றும் இரசவாதவித்தையைக் குறிப்பதாகும். கடைப்பட்ட ஆன்மாக்களும் கடைத்தேற அவன் உதவுகின்றான் ஆதலின், ‘வேதகம்’ என்று இறைவனை இங்கே கூறினார்.

‘விண்களி கூர்வதோர் வேதகம்’ என்று வருதலின் விண் என்ற சொல் தேவருலகம் என்ற வாலாயமான பொருளைத் தராமல், அண்டம் அல்லது பிரபஞ்சம் என்ற பொருளைத் தந்து நிற்கின்றது. இவன் வெளிப்படுதலால் பிரபஞ்சத்திலுள்ள எல்லா உயிர்களும் உய்கதி அடைகின்றன. எனவேதான் விண்ணுக்கு வேதகம் என்றார்.

இப்பாடல் முழுவதிலும் ஆகாதே என்ற சொல் ஆகும் என்ற உடன்பாட்டுப் பொருளிலேயே வருதல் காண்க.

**636. ஒன்றினொடு ஒன்றும் ஓர் ஐந்தினொடு ஐந்தும்**
**உயிர்ப்பதும் ஆகாதே**
**உன் அடியார் அடியார் அடியோம் என**
**உய்ந்தன ஆகாதே**

கன்றை நினைந்து எழு தாய் என வந்த
கணக்குஅதும் ஆகாதே
காரணம் ஆகும் மனஆதி குணங்கள்
கருத்து உறும் ஆகாதே
நன்று இது தீது என வந்த நடுக்கம்
நடந்தன ஆகாதே
நாமும் மேல்ஆம் அடியாருடனே செல
நண்ணுதும் ஆகாதே
என்றும் என் அன்பு நிறைந்த பரா அமுது
எய்துவது ஆகாதே
ஏறு உடையான் எனை ஆளுடை நாயகன்
என்னுள் புகுந்திடிலே 2

*இடபத்தில் ஊர்கின்ற பெருமான் தம் நெஞ்சுள் புகுந்துவிட்டால் என்ன நடைபெறும் என்பதை அடிகளார் வரிசைப்படுத்திப் பேசுகிறார்.*

*உடல்- உயிர் கன்மேந்திரியங்கள்- ஞானேந்திரியங்கள் ஆகியவை செயலிழந்துவிடும். அவனுடைய அடியார்களுக்கு அடியார்களாகத் தாம் ஆகிவிட்டால் உய்வது உறுதி என்கிறார். உய்வன என்ற எதிர்காலத்தைக் குறிக்கும் சொல் உறுதி நோக்கி 'உய்ந்தன' என இறந்தகாலம் ஆயிற்று.*

*வாக்கு மனோலயம் கடந்த பொருள் திருப்பெருந்துறையில் குருநாதர்வடிவில் வந்ததன் அடிப்படை என்ன? தன்னால் படைக்கப்பட்ட உயிர்களின் துன்பத்தைப் போக்கக் கன்றை நினைந்து வரும் பசுவின் நிலையாகும் அந்த வரவு.*

*இவ்வாறு குருநாதர் வடிவில் வந்தவன் தாய்ப்பசுவினைப் போன்று அன்பு நிறைந்தவன். அவன், அகில பிரபஞ்ச காரணன் ஆவான். அவனே காரணன் என்றாலும் அவனை உயிர்கள் அறியமாட்டா. ஆனால், அவன் அடிகளாருள் நுழைந்ததால் அவனே அநாதி*

என்றும், அனைத்திற்கும் காரணனாக இருப்பவன் என்றும் அவரால் உணரமுடிந்தது.

அவன் நுழைவதற்கு முன்னர் எந்த ஒன்றையும் இது நல்லது, இது கெட்டது என்று பிரித்தறியும் மனநிலை இருந்தது. நன்று இது தீது இது எனக் கூறிய பிறகு 'என வந்த நடுக்கம்' என அடிகளார் கூறுகிறார். எந்த ஒன்றும் நன்று என்றோ தீது என்றோ முடிவு செய்வதால் அவற்றிடையே முறையே விருப்பும் வெறுப்பும் தோன்றுகின்றன. இந்த விருப்பு வெறுப்புகளே சமநிலையை நோக்கிச் செல்லும் ஆன்மாவிற்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன. இந்தக் கருத்தையே 'என'என்ற சொல்லால் பெறவைக்கிறார். நன்று என தீது என மாறுபடுத்திப் பார்ப்பதையும் அதன் விளைவையும் கண்டு நடுங்குகிறேன் என்கிறார்.

அவன் உள்ளே புகுந்ததால் மேலே கூறிய செயல்கள் நிகழ்ந்துவிட்டன. நன்று, தீது என்ற வேறுபாடு இன்மையின் சமதிருஷ்டி நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே திருப்பெருந்துறையில் கண்ட பழைய அடியார்களோடு தாமும் சென்று சேர்ந்து, அவர்கள் செல்லுமிடத்திற்கு செல்லலாம் என்கிறார்.

இப்பாடலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இதுவரை திருப்பெருந்துறை அடியார்களோடு செல்ல முடியாமைக்குக் காரணம், தம்முடைய இந்தச் செடிசேர் உடலம்தான் என்று பேசிவந்த அடிகளார், இப்பொழுது அங்கே போகத் தடையில்லை என்று பேசுகிறார். திருப்பெருந்துறை அனுபவத்திற்கு முன்னர்ச் செடிசேர் உடலமாகக் காட்சியளித்த இந்த உடம்பு, அதனோடு கூடிய உயிர் என்ற இரண்டும் இப்பொழுது அடைந்து விட்ட நிலையை இப்பாடல் முழுவதும் விவரிக்கின்றது.

உடம்பை வைத்துக்கொண்டே இந்த நிலையை அடைந்துவிட்டமையின் திருப்பெருந்துறை அடியார்களுடன் சிவபுரத்தை நண்ணுவது ஆகும் என்ற உறுதிப்பாட்டுடன் பேசுகிறார். இந்தப் பாடலைப் பார்த்த பிறகு, இது, யாத்திரைப் பத்தை அடுத்து, அச்சோப் பதிகத்தின் முன்னர் இருக்கவேண்டிய ஒரு பகுதியாகும் என்பது தெளிவாகிறது.

இப்பாடலிலும் 'ஆகாதே' என்ற சொல் ஆகும் என்ற பொருளிலேயே வழங்கப்பெற்றுள்ளது.

**637.** **பந்த விகார குணங்கள் பறிந்து**
**மறிந்திடும் ஆகாதே**
**பாவனை ஆய கருத்தினில் வந்த**
**பரா அமுது ஆகாதே**
**அந்தம் இலாத அகண்டமும் நம்முள்**
**அகப்படும் ஆகாதே**
**ஆதி முதல் பரம் ஆய பரம் சுடர்**
**அண்ணுவது ஆகாதே**
**செம் துவர் வாய் மடவார் இடர் ஆனவை**
**சிந்திடும் ஆகாதே**
**சேல் அன கண்கள் அவன் திருமேனி**
**திளைப்பன ஆகாதே**
**இந்திர ஞால இடர்ப் பிறவித் துயர்**
**ஏகுவது ஆகாதே**
**என்னுடை நாயகன் ஆகிய ஈசன்**
**எதிர்ப்படும் ஆயிடிலே** **3**

எம் தலைவனும் ஈசனுமாகிய அவன் என்முன் எதிர்ப்படுவானேயானால் பிற்கூறியவை நிகழுமென்க.

உயிரைப் பற்றிநின்று பல்வேறு குணவேறுபாடுகளை ஏற்படுத்தி, இந்த உயிரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திடும் இந்தப் பந்தமும் முக்குணங்களும் எம்மிடம் முன்நிற்க ஆற்றாது திரும்பிச் சென்றுவிடும்.

பாவனை என்பது மனம், ஆழ்மனம் என்ற இரண்டையும் கடந்து, சித்தத்தில் ஒன்றிநிலைபெறும் நிலையாகும். பயனில்லாத ஒன்று சித்தம்வரை செல்வதில்லை; சென்றாலும் பயன்விளைப்பதில்லை. இதனையே, அடிகளார் 'பாவனையாய கருத்து' என்று பேசுகிறார். சித்தத்தில் நிலைபேறாகவுள்ள ஒன்றைப் பாவனை என்று கூறுவதுண்டு. பாவனையாய கருத்து என்று அடிகளார் கூறும்போது சித்தத்தில் நிலைபேறாக நிலைத்துவிட்ட ஒரு கருத்து என்ற பொருளிலேயே இதனைக் கூறுகிறார்.

மேல் மனம், அடி மனம், புத்தி, அகங்காரம் ஆகிய அனைத்தையும் தொழிற்படாமல் இருக்கச்செய்து, சித்தத்தில் நிரம்பியிருக்கும் ஒன்றைப் பாவனை என்று கூறுவர். இதனைச் சமாதிநிலை என்று கூறுபவர்களும் உண்டு. இந்தச் சமாதிநிலையில் எல்லையற்ற ஆனந்தம் நிறைந்திருக்கும். ஆதலால், இது 'பராஅமுது' ஆகும் என்கிறார் அடிகளார்.

கண்டம் என்ற சொல் துண்டிக்கப்பட்டது அல்லது பிளவுபட்டது என்ற பொருளைத் தரும். அகண்டம் என்பது பூரணப்பொருள் எனப்படும். பூரணத்திற்கு அழிவில்லை; ஆதலால், 'அந்தமிலாத அகண்டம்' என்றார். அத்தகைய ஒன்று, எல்லை கடந்துநிற்கும் ஒன்று, அகண்டமாய் நிற்கும் ஒன்று, அழிவில்லாத ஒன்று எல்லையுடையதும் அழியக்கூடியதும் பிளவுபட்டு நிற்பதும் ஆகிய நம் உடம்பினுள் உறையும் உள்ளத்தில் தோன்றி ஒளிவிடுவது வியப்பேயாகும்.

ஆதியாகவும், முதன்மையானதாகவும் உள்ள அந்தப் பரஞ்சுடர் நம்மை நெருங்கி வருவது ஓர் அதிசயம்.

மகளிரால் வரும் இடர் நம்மை வந்து அணுகாது. மேலும் இதுவரை இடர் செய்துவந்த சேல்போன்ற

*கண்ணினை உடைய மடவார்கூட இப்பொழுது அந்தக் கண்களை அவன் திருமேனியின் அழகைக் கண்டு உய்வதற்குப் பயன்படுத்துகிறார்கள்.*

*தோன்றித் தோன்றி மறைவதும் பல இடர்களைச் செய்வதுமாகிய துயரம் நிறைந்த பிறவி நம்மை விட்டு நீங்கிவிடும்.*

*இப்பாடலிலும் 'ஆகாதே' என்பது ஆகும் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பெற்றுள்ளது.*

**638.** என் அணி ஆர் முலை ஆகம் அளைந்து உடன்
இன்புறும் ஆகாதே
எல்லை இல் மாக் கருணைக்கடல் இன்று இனிது
ஆடுதும் ஆகாதே
நல் மணி நாதம் முழங்கி என் உள் உற
நண்ணுவது ஆகாதே
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும்
நண்ணுவது ஆகாதே
மன்னிய அன்பரில் என் பணி முந்துற
வைகுவது ஆகாதே
மா மறையும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே
இன் இயல் செங்கழுநீர் மலர் என் தலை
எய்துவது ஆகாதே
என்னை உடைப் பெருமான் அருள் ஈசன்
எழுந்தருளப் பெறிலே 4

*எந்த அடிப்படையில் நின்று பார்த்தாலும் இப்பாடலின் பொருள் தெளிவாக எனக்கு விளங்குமாறில்லை. முழுவதையும் தெளிவுபடுத்த இயலாதெனினும் ஒருசில தொடர்களின் பொருளைக் கீழே தந்துள்ளேன்.*

*பக்தி இயக்கத்தில் இறைவன் ஒருவனே ஆண் என்றும் உயிர்கள் அனைத்தும் பெண் என்றும் கொள்ளுதல் மரபு.*

இந்த அடிப்படையில், பாடுபவர் யாராக இருப்பினும் ஆண் பெண் வேறுபாடு கற்பிக்காமல் அகப்பொருள் இலக்கணத்தை ஒட்டிப் பாடிச்செல்லும் மரபைக் காண்கிறோம். இங்கு அடிகளார் தம்மைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு இப்பாடலைப் பாடுகிறார் என்று கொள்ளலாம்.

ஈசன் என்முன் எழுந்தருளப் பெற்றால், என் மார்புகள் அவனுடைய மார்புடன் இணைந்து இன்புறுதல் ஆகும். அவ்வாறு அவ்னைப் புல்லுகையில் மனம், உடல் என்பவை இன்புறுதல் போக, அவனுடைய பெருங்கருணைத் தடங்கடலில் துளையமாடுதலும் ஆகும். அந்த நிலையில் அவனுடைய சிலம்பிலிருந்து புறப்படும் ஒலி என் புறச் செவிகளுக்குக் கேளாமலும் என் உள்ளத்தின் உள்ளே சென்று ஒலிக்கும். அவன் அணிந்த திருநீறு என்மேலும் படும்.

அவனோடு சதா சர்வ காலமும் உடனிருக்கும் அடியார்கள், அவன் பொருட்டுச் செய்யும் பணிகளில் நான் செய்யும் சிறுபணியும் முன்னுற வந்துநிற்கும்.

இவை அனைத்தும் நடைபெற்றபோதிலும் மறைகள் காணவேண்டி ஓலமிடும் அவனுடைய திருவடியைத் தரிசிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிட்டும். அவனை புல்லுகின்ற காரணத்தால் அவன் அணிந்திருக்கின்ற செங்கழுநீர் மாலை என்னிடத்தும் பொருந்தும் என்க.

**639.** மண்ணினில் மாயை மதித்து வகுத்த
மயக்கு அறும் ஆகாதே
வானவரும் அறியா மலர்ப் பாதம்
வணங்குதும் ஆகாதே
கண் இலி காலம் அனைத்தினும் வந்த
கலக்கு அறும் ஆகாதே
காதல் செயும் அடியார் மனம் இன்று

களித்திடும் ஆகாதே
பெண் அலி ஆண் என நாம் என வந்த
பிணக்கு அறும் ஆகாதே
பேர் அறியாத அனேக பவங்கள்
பிழைத்தன ஆகாதே
எண் இலி ஆகிய சித்திகள் வந்து எனை
எய்துவது ஆகாதே
என்னை உடைப்பெருமான் அருள் ஈசன்
எழுந்தருளப் பெறிலே 5

*ஈசன் என்முன் எழுந்தருளுவானேயானால் இனிக் கூறப்பெறுபவை எளிதாக நடைபெறும் என்கிறார் அடிகளார்.*

*இம்மண்ணுலகில் வாழும் அனைவரையும் பிடித்தாட்டும் மாயை, அதனால் ஏற்படும் மனக் குழப்பம் என்பவை மறைந்துவிடும். வானவரும் காண இயலாத அவனுடைய மலர்போன்ற திருவடிகளை நேரடியாகக் காணும் வாய்ப்புக் கிட்டும். கண்ணில்லாதவனாகிய காலதேவன் நமக்கு அளிக்கும் இறப்பு என்ற ஒன்றைக் கண்டு மனம் மறுகும் நிலைமை மாறிவிடும். பிற உயிர்கள்மாட்டும் சக அடியார்கள்மாட்டும் அன்பு செய்கின்ற அடியார்கள் தாம் வெளிப்படுத்தும் அன்பு காரணமாக, இறைவன் தம் முன்னர் வெளிப்பட்டான் என்று பெருமகிழ்ச்சியடைவர்.*

*'நாம்' என்ற தற்போதம் எம் உள்ளே இருக்கின்ற காரணத்தால், எம்மினும் வேறுபட்டு எதிரே நிற்பவர்களைப் பெண் என்றும் ஆண் என்றும் அலி என்றும் வேறு பிரித்துக் காண்கின்றோம். இறைவன் வெளிப்பட்ட காரணத்தால் முதலில் 'நாம்' அழிகிறது. அது அழியவே பெண், ஆண், அலி என்ற மாறுபாடுகள் புலப்படாமல் போய்விடுகின்றன. 'நாம்' என்பது இலக்கங்களில் காணப்பெறும் 'ஒன்று' என்ற எண்*

போன்றதாகும். அதனை முன்னிறுத்திப் பூஜ்ஜியங்களைப் பின்னர்ச் சேர்த்தால் ஒன்று, பத்து, நூறு எனப் பெருகிக்கொண்டே செல்லும். ஒவ்வொரு பூஜ்ஜியமாக அழித்தாலும் தொகையின் அளவு குறையுமே தவிர முற்றிலும் இல்லாமற்போகாது. ஆனால், முதலிலுள்ள ஒன்று என்ற எண்ணை அழித்துவிட்டால் எஞ்சுவது எதுவும் இல்லை. அதேபோல 'நாம்' என்ற 'ஒன்று' இருக்கின்றவரையில் பெண் என்றும் ஆண் என்றும் அலி என்றும் பிரிவினைகள் விரிந்துகொண்டே செல்கின்றன. இந்த 'நாம்' அழிந்தால் பிரிவினைகளும் உடன் அழிந்துவிடுகின்றன. இறைவன் வெளிப்படும்போது 'நாம்' அழிவதால் பெண், ஆண், அலி என்ற வேறுபாடுகள் ஒழிகின்றன. இதனையே அடிகளார் 'பெண், அலி, ஆண் என நாம் என வந்த பிணக்கு அறும்' என்கிறார்.

இப்பிறப்பிற்கு முன்னர் எடுத்த பிறப்புக்கள் எத்தனையென்று தெரியாது. ஒவ்வொரு பிறப்பிலும் அந்த அந்த உடம்பு ஒரு பெயரைத் தாங்கி இருந்திருக்கும். சங்கிலித் தொடர்போன்ற அந்தப் பிறப்புக்கள் அழிந்தொழிந்தன. கணக்கற்ற சித்திகள் நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் என்னை வந்து அடையும் என்கிறார்.

**640.** பொன் இயலும் திருமேனி வெண் நீறு
பொலிந்திடும் ஆகாதே
பூ மழை மாதவர் கைகள் குவிந்து
பொழிந்திடும் ஆகாதே
மின் இயல் நுண்இடையார்கள் கருத்து
வெளிப்படும் ஆகாதே
வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம்
மிகுத்திடும் ஆகாதே
தன்அடியார் அடி என் தலை மீது
தழைப்பன ஆகாதே
தான் அடியோமுடனே உய வந்து

தலைப்படும் ஆகாதே
இன்இயம் எங்கும் நிறைந்து இனிது ஆக
இயம்பிடும் ஆகாதே
என்னை முன் ஆளுடை ஈசன் என் அத்தன்
எழுந்தருளப் பெறிலே 6

ஈசனும் எந்தையுமாகிய இறைவன் என்முன் எழுந்தருளுவானேயாகில் பிற்கூறப்பட்டவை நிகழும் என்கிறார்.

பொன்போன்ற அவனுடைய திருமேனியில் வெண்ணீறு பொலிவதைக் காணமுடியும். மாதவர்கள் மலர்மழை பொழிவர். நுண்ணிய இடையினையுடைய மகளிரின் மனத்தின் ஆழத்தில் தோன்றும் கருத்துக்கள் வெட்டவெளிச்சமாக வெளிப்பட்டுத் தோன்றும். கடலின் ஆழத்தைக் கணக்கிட்டாலும் மகளிர் ஆழ்மனத்திலுள்ள எண்ணங்களை அறிதல் இயலாத காரியம் என்பது இன்றும் நம்மிடைப் பொதுவாக வழங்கும் ஒரு முதுமொழியாகும். எவ்வளவு நுண்ணறிவு உடையவர்களும், ஏன் அந்த மகளிரேகூட, அவர்களுடைய ஆழ்மனத்திலுள்ள எண்ணங்களை அறிதல் இயலாது என்பர். இந்த மகளிரையும் அவர்கள் மனங்களையும் படைத்த பரம்பொருள் எதிரே வந்து நிற்குமாயின் மகளிரின் ஆழ்மனக் கருத்துக்கூட வெளிப்பட்டு நிற்கும் என்கிறார் அடிகளார். இந்த நுண்மையான பொருளை அறியாத உரையாசிரியர் சிலர் கருத்து என்ற சொல்லுக்கு வஞ்சனை என்று பொருள்கூறிப் போயினர். அம்பிகையும் பெண்தான் என்பதை ஏனோ இவர்கள் மறந்தனர்.

சாதாரண நேரங்களில் வீணை வாசிப்பதைக் கேட்டால், அந்த இசை, சுரங்களின் இருப்பிடமாகக் காணப்பெறும். அசுத்தமாயா காரியமான இந்த உலகில் எழும் வீணையின் ஒலி புறக்காதுகளில் பட்டு உள்ளத்தைச் சென்று தைத்தாலும் அது ஓரளவே உணர்ச்சியைத்

தூண்டும். அவ்வாறின்றி நாதத்திற்கே மூலமான, நாத சொரூபியான இறைவனே வெளிப்பட்டுநின்றால் அந்த இசை, சுரங்களுக்கு இருப்பிடமாவதன்றி எல்லையற்ற ஆனந்தத்தின் வெளிப்பாடாக மிளிரும். இதனையே அடிகளார் 'வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும்' என்கிறார்.

இறைவன் வெளிப்படாதபோது வீணையின் முரன்று எழும் ஓசை, இன்பம் தரும் என்பது உண்மைதான். ஆனால், அவன் வெளிப்பட்டபோது இன்பம் மிகுத்திடும் என்பதால் அது வெறும் இன்பமாக இல்லாமல் ஆனந்தமாக மாறிவிடும் என்க.

அவன் திருவடியே அல்லாமல் அவனுடைய அடியார்களின் திருவடியும் என் தலைமேலனவாகும். திருப்பெருந்துறையில் காட்சிகொடுத்ததுபோல நாம் உய்யும் வகையில் அடியார் கூட்டத்துடன் குருநாதர் இப்பொழுது வந்து காட்சி தருவார் என்பதைத் 'தான் அடியோமுடனே உய வந்து தலைப்படும்' என்கிறார். இந்நிலையில் பலவகைப்பட்ட இசைக்கருவிகள் இன்னியம் இசைக்கும் என்க.

**641.** **சொல் இயலாது எழு தூ மணி ஓசை**
**சுவை தரும் ஆகாதே**
**துண் என என் உளம் மன்னிய சோதி**
**தொடர்ந்து எழும் ஆகாதே**
**பல் இயல்பு ஆய பரப்பு அற வந்த**
**பரா பரம் ஆகாதே**
**பண்டு அறியாத பர அனுபவங்கள்**
**பரந்து எழும் ஆகாதே**
**வில் இயல் நல் நுதலார் மயல் இன்று**
**விளைந்திடும் ஆகாதே**
**விண்ணவரும் அறியாத விழுப் பொருள்**
**இப் பொருள் ஆகாதே**

**எல்லை இலாதன எண் குணம் ஆனவை**
**எய்திடும் ஆகாதே**
**இந்து சிகாமணி எங்களை ஆள**
**எழுந்தருளப் பெறிலே** **7**

*பிறைச்சந்திரனைச் சூடிய பெருமான் எங்களை ஆளும்பொருட்டு இங்கே வந்து தோன்றுவானாயின் பின்கூறப்பெற்றவை நிகழும் என்கிறார் அடிகளார்.*

*சொல் அற்ற இடத்து சித்தத்தினுள்ளே எழும் தூய்மையான சிலம்பொலி ஆனந்தத்தைப் பெருக்கும். (சுவை தரும்)*

*'சொல் இயலாது' என்பது அதிர்வுகளால் உண்டாகும் ஓசையோடுகூடிய சொல்லைக் குறிக்கும். இந்தச் சொல்லின்வழியே எண்ணமும் தோன்றுதலால் சொல்லைக் கடந்த ஒன்று என்று அடிகளார் கூறும்பொழுது, சொல்லின் வடிவாக மனத்தின் அடித்தளத்திலிருக்கும் ஒலி, அது வைகரி, வையைந்தி என்பவற்றின் உதவியுடன் ஓசையாக வெளிப்பட்டு நிற்கும் நிலை என்ற இரண்டையும் குறிக்கின்றார். 'சொல் இயலாது' என்ற ஒரே தொடரில் சொல், எண்ணம் என்ற இரண்டையும் கூறினாராயிற்று. இவை இரண்டும் முற்றிலும் அடங்கியபொழுது கூத்தனின் சிலம்பொலியை உள்ளே கேட்கமுடியும். அந்த ஒலி எல்லையில்லாத ஆனந்தத்தை விளைவிக்கும்.*

*'எதிர்பாராமல் என் உள்ளத்தில் திடீரென்று புகுந்த அந்த ஒளி இடைவிடாமல் உள்ளே ஒளிர்ந்துகொண்டே இருக்கின்றது என்பதை 'துண் எண என் உளம் மன்னிய சோதி தொடர்ந்து எழும்' என்று குறிப்பிடுகிறார்.. மனத்தின் இயல்பு மிக விரைவாகப் பல்வேறுபட்ட, ஒன்றுக்கொன்று முரணான, எண்ணங்களைத் தோற்றுவித்துக்கொண்டேயிருத்தலின் அதனைப் 'பல் இயல்பு ஆய பரப்பு' என்றார். அந்தப் பல்லியல்பும், பரப்பும் அற்றுப்போனால் அங்கே பராபரம் தோன்றும்.*

'இதற்குமுன்னர்க் கனவிலும் காண இயலாத இறையனுபவங்கள் இப்பொழுது விரிவாகச் சித்தத்தில் தோன்றுகின்றன.

'தன்னுடைய காதலனிடத்து ஒரு பெண்ணுக்கு முழுமையாகத் தோன்றும் மையல் எப்படி அவளை ஆட்கொள்ளுமோ அதுபோல இறைவனிடத்து எனக்குள்ள மையல் முழுவதுமாக வளர்ந்து என்னை ஆட்கொண்டுவிட்டது.

'என் எதிரேயுள்ள இப்பொருள் விண்ணவரும் அறிய முடியாத விழுப்பொருளாகும். எல்லையில்லாத எண்குணங்களைத் தன் வடிவாகக் கொண்டுள்ள இறைவன் என் எதிரே தோன்றினமையின், மேலேகூறியவை என்மாட்டும் பரவின' என்றபடி.

**642.** சங்கு திரண்டு முரன்று எழும் ஓசை
தழைப்பன ஆகாதே
சாதி விடாத குணங்கள் நம்மோடு
சலித்திடும் ஆகாதே
அங்கு இது நன்று இது நன்று எனும் மாயை
அடங்கிடும் ஆகாதே
ஆசை எலாம் அடியார் அடியோம் எனும்
அத்தனை ஆகாதே
செம் கயல் ஒண் கண் மடந்தையர் சிந்தை
திளைப்பன ஆகாதே
சீர் அடியார்கள் சிவ அனுபவங்கள்
தெரிந்திடும் ஆகாதே
எங்கும் நிறைந்து அமுது ஊறு பரம் சுடர்
எய்துவது ஆகாதே
ஈறு அறியா மறையோன் எனை ஆள
எழுந்தருளப் பெறிலே 8

தோற்றமும் முடிவும் இல்லாத மறையோனாகிய பெருமான் அடியேனை ஆள்வதற்காக மானிட வடிவு தாங்கி எழுந்தருள்வானேயானால் என்ன என்ன நிகழும்?

இந்த உலகத்தில் தோன்றி எழும் ஓசைகளெல்லாம் அடங்கிவிட, ஆயிரக்கணக்கான சங்குகள் ஒன்றாகத் திரண்டு ஒரே நேரத்தில் ஒரே சுருதியில் முரன்று எழுப்பும் ஓசைபோல ஆதிநாதத்தின் ஓசை எழும்.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தில் பிறந்த உயிர்கள் அனைத்திற்கும் அத்தனை சாதி பேதங்கள் உண்டு. பறப்பன, ஊர்வன, நடப்பன, நீந்துவன என்பன போன்ற அந்த அந்தச் சாதிக்கேற்பச் சில குணங்கள் பிறப்போடு தோன்றும். இக்குணங்களைப் போக்கிக் கொள்ளுதல் ஏறத்தாழ இயலாத காரியம். மறையோன் எனை ஆள வெளிப்பட்டு வருவானேயாகில் இந்தச் சாதிபற்றி வரும் தவிர்க்கமுடியாத குணங்கள்கூடச் சலித்துப்போய் உயிர்களைவிட்டு நீங்கிவிடும்.

ஒன்றை நன்று என்று கருதும் ஒரு சாதி; மற்றொரு சாதி மற்றொன்றை நன்றென்று கருதும். ஓர் இனம் நன்று என்று கருதுவதை மற்றோர் இனம் ஏற்றுக்கொள்ளும் என்று சொல்வதற்கில்லை. இந்த வேறுபாடுகள் அனைத்தும் அவன் வெளிப்படும்பொழுது அடங்கிவிடும். ஒன்றை நன்று என்று கூறுவதால் அதன் எதிராகவுள்ள ஒன்று தீது என்ற எண்ணம் மனத்திடைத் தோன்றுமன்றே! சமதிருஷ்டி என்று சொல்லப்பெறும் அதீத நிலையில் எந்த ஒன்றையும் நன்று என்றோ தீது என்றோ இனம்பிரித்துச் சொல்லும் இயல்பு முற்றிலுமாக அடங்கிவிடும். உயிர்களிடத்துச் சாதிபற்றி வருகின்ற, இனம் பிரித்துக் காணும் இந்த இயல்பு, அவன் வெளிப்படும்போது நீங்கும் என்க.

சாதி வேறுபாடுகளுடன் தோன்றும் இந்த உயிர்கள் அனைத்திற்கும் பொது இலக்கணம் ஆசை என்பதாகும்.

விலங்கினங்கள்கூட உணவு மிகுதியாகக் கிடைக்கும் இடத்தை அணுக ஆசைப்படுகின்றன. உயிர்களின் பிறப்போடு பிறந்த இந்த ஆசை, ஒன்றில்லாவிட்டால் ஒன்றின்மேல் சென்றுகொண்டே இருக்கும். அது என்றும் அடங்குவதுமில்லை. மறையோன் வெளிப்படுவானே யானால் பல துறைகளில் விரிந்துகொண்டு செல்லும் இந்த ஆசை திடீரென்று மடங்கி, ஒரே ஓர் ஆசையாக வெளிப்படும். 'அடியார்களுக்கு அடியோங்கள் நாம் 'என்ற அளவில், அந்த ஆசை மேலும் வளராமல் அடங்கிவிடுகிறது.

இந்த நிலை வருமேயானால் அந்த ஆசை, 'அடியார் அடியோங்கள் நாம்' என்ற அளவில் நின்றுவிடும். அதோடல்லாமல் பிற அடியார்களுடைய சிவானந்த அனுபவங்களைக் கேட்டுத் தானும் ஆனந்தம் அடைகிறது.

மனித மனத்தின் இயல்பையும் செயற்பாட்டையும் நன்கு அறிந்த அடிகளார், மிகமிக முக்கியமான ஒரு செய்தியை இந்த இரண்டு அடிகளிலும் கூறுகிறார். மனிதனுடைய ஆசைகள் வரம்பற்றவை, விரிந்துகொண்டே செல்லும் இயல்பை உடையவை. ஆதலால் அவற்றை அடக்கி ஆளுதல் மிகமிகக் கடினமானதாகும். ஒரு திசையில் செல்லும் ஆசையை அரும்பாடுபட்டு அத்திசையில் செல்லாமல் நிறுத்துவோமேயானால் அந்த ஆசை திடீரென்று வெடித்து, நாம் சற்றும் எதிர்பாராத நேரத்தில் வேறு திசையில் சென்றுவிடும். முன்னர்ச் சென்ற திசையைவிட இது மோசமானதாகக்கூட இருக்கலாம். அது நிகழாமலிருக்க மூன்று விஷயங்களை அடிகளார் இங்கே பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

ஒன்று, அடக்கமுடியாத இந்த ஆசைகூட மறையவன் வெளிப்படுவானேயானால் அடங்கிவிடும். இரண்டு, அவ்வாறு அடங்கிய ஆசையை அடியார் அடியோங்கள் நாம் என்ற எல்லையில் நிறுத்தவேண்டும். மூன்றாவது, இந்த எல்லைக்குள் நின்று, பிற அடியார்களுடைய

சிவானுபவங்களைக் கேட்பதில் அந்த ஆசையை அடக்கிக் கொள்ள வேண்டும்.

முதலாவது நடைபெற்ற பின்னரும் இரண்டாவதும் மூன்றாவதும் நடைபெறவில்லையானால் ஒரு மிகப் பெரிய ஆபத்து எதிரே தோன்றும். மறையவன் வெளிப்பட்டதால் அடங்கி ஒருமுகப்பட்ட ஆசையை உடனே இரண்டாம், மூன்றாம் வழிகளில் செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தத் தவறினால் என்ன விளையும் தெரியுமா? ஒன்றாம் நிலையில் அடங்கி ஒடுங்கி ஒருமுகப்பட்ட இந்த ஆசை, இரண்டாம் மூன்றாம் வழிகளில் செலுத்தப் படாதபோது 'செம்கயல் ஒண் கண் மடந்தையர்' உடலிலும் சிந்தையிலும் புகுந்து திளைக்கத் தொடங்கிவிடும். இந்த ஆபத்து நிகழாமல் இருப்பதற் காகவே, அடியார் கூட்டத்திடை இருக்கவேண்டும் என்பதையும், அவர்களுடைய சிவானுபவங்களைக் கேட்டுத் திளைக்கவேண்டும் என்பதையும் 'ஆசை எலாம் அடியார் அடியோம் எனும் அத்தனை ஆகாதே?' என்றும் 'சீர் அடியார்கள் சிவானுபவங்கள் தெரிந்திடும் ஆகாதே?' என்றும் இரண்டு அடிகளில் கூறினார்.

ஈறறியாத மறையோனாகிய அவன் எனை ஆள வரும்போது எப்படி வருவான் என்று நினைக்கிறீர்கள்? மீன்வலை வீசிய கானவன் ஆகவும் (635) என்னுடை நாயகனாகிய ஈசனாகவும் (637) என் அத்தனாகவும் (640) இந்து சிகாமணியாகவும் (641) வருவான் என்க.

இவ்வாறல்லாமல் மற்றோர் வடிவம் கொண்டு தம்முள் புகுந்தருள்வான் என்பதை, எட்டாவது (642) பாடலின் முடிமணியாக 'எங்கும் நிறைந்து அமுதூறு பரஞ்சுடர்' எய்துவான் என்று கூறுகிறார். இந்த ஒரு சிற்றடியில் இதுவரை கூறப்பெறாத அவனது இயல்புகளைச் சொற்செல்வம் உடையவராகிய அடிகளார் சில சொற்களின் மூலம் வெளிப்படுத்துகிறார். எங்கும்

நிறைந்தவன் என்பது முதலாவது இயல்பு; அமுத வடிவமாக இருத்தல் இரண்டாவது இயல்பு; ஊறுதல் மூன்றாவது இயல்பு; பரஞ்சுடராய் நிற்றல் நான்காவது இயல்பு. அமுது என்று கூறியவுடன் அள்ளக்குறையக் கூடியது என்ற எண்ணம் நம்முடைய மனத்தில் தோன்றும் ஆதலால் அதனை மறுக்க ஊறு என்ற சொல்லைப் பெய்கிறார்.

'ஊறு பரஞ்சுடர்' என்ற வினைத்தொகையால் முக்காலத்திலும் இந்தஅமிழ்து ஊறும் என்ற பொருளையும் பெறவைத்தார்.

பரஞ்சுடர் என்று கூறியவுடன் ஒளி, வெப்பம் என்ற இரண்டும் சுடரின் இயல்பு என்ற எண்ணம் தோன்றுமன்றே? இவற்றைப் பரிகரிக்க 'அமுது ஊறு பரஞ்சுடர்' என்றார். அமுது ஊறு என்றமையால் வெப்ப மில்லாத குளிர்ச்சியுடையது என்பதைப் பெறவைத்தார். சுடர் என்று கூறாது பரஞ்சுடர் என்றமையால் புறக் கண்களால் காணும் ஒளியன்று என்பதையும் பெறவைத்தார்.

சுடருக்குள்ள மற்றோர் இலக்கணத்தையும் இங்குச் சிந்தித்தல் வேண்டும். எத்தகைய சுடராயினும் அது பற்றிநின்ற பொருளை ஒளிரவிடாமல் கறுப்பாகவே இருக்கச்செய்யும். அன்றியும் ஓரளவே பரவி அந்த எல்லைக்கு அப்பால் சென்று பரவ முடியாமல் நிற்கும் இயல்பும் சுடருக்கு உண்டு. இக்குறைபாடுகளை நீக்கப் பரஞ்சுடர் என்றும் எங்கும் நிறை பரஞ்சுடர் என்றும் கூறினாராயிற்று.

ௐ ௐ ௐ

# 50. ஆனந்த மாலை

## [சிவானுபவ விருப்பம்]

ஆனந்தமாலை என்று யாரோ, என்றோ தலைப்புத் தந்துபோயினர். கிடைக்கும் ஏழு பாடல்களையும் படித்துப் பார்த்தால் குருநாதருக்கு எதிரே அடிகளார் கண்ட ஆனந்தத்தைக் கூறுவனவாக இல்லை இப்பாடல்கள். அதற்குப் பதிலாக 'இனி உன்னைக் கூடும் வண்ணம் இயம்பாயே' (643), 'பிறப்பட்டு இங்கு இருந்தேன் நோய்க்கு விருந்தாயே' (644), 'ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே' (645), 'நான்தான் வேண்டாவோ' (647), 'இனித்தான் தேற்றாயே' (648), 'செய்வது ஒன்றும் அறியேனே' (649) என்றெல்லாம் அடிகளார் பாடுவது எந்த நிலையிலும் ஆனந்தத்தை அறிவிப்பதாகத் தெரியவில்லை. இத்தலைப்புக்குப் பதிலாகக் 'கழிவிரக்க மாலை' என்று தலைப்புத் தந்திருந்தால் பொருந்தும்போலும்.

பொதுவாக 'மாலை' என்பது பத்துப் பாடல்களைக் கொண்டதாகும். இப்பகுதியில் ஏழு பாடல்களே உள்ளமையின் ஏனைய மூன்று பாடல்களும் மறைந்தது தமிழரின் கவனக்குறைவுக்கு எடுத்துக்காட்டாகும்.

'சிவானுபவ விருப்பம்' என்ற உட்தலைப்பு வழக்கம் போலில்லாமல் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதி அடியும் கூடும் வண்ணம் இயம்பாயே, கொடியேன் என்றோ கூடுவதே போன்ற தொடர்களால் முடிதலின், இழந்த சிவானந்தத்தை மீட்டும் அடைய ஆவல் கொண்ட அடிகளாரின் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றன.

643. மின் நேர் அனைய பூம் கழல்கள்
அடைந்தார் கடந்தார் வியன் உலகம்
பொன் நேர் அனைய மலர் கொண்டு
போற்றாநின்றார் அமரர் எல்லாம்
கல் நேர் அனைய மனக் கடையாய்
கழிப்புண்டு அவலக் கடல் வீழ்ந்த
என் நேர் அனையேன் இனி உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே 1

'நின் திருவடியை அடைந்தவர்கள் யாரென்றால் இந்தப் பரந்த உலகின் மாயையைக் கடந்தவர்கள் ஆவார்கள். இந்த நிலை இல்லாமல் தேவர்களாக உள்ளவர்களும்கூடப் பொன்போன்ற மலர்களைப் பறித்து உன் திருவடியில் இட்டு வழிபட்டுக்கொண்டே இருக்கின்றனர்.

'உண்மை அடியார்கள், தேவர்கள் என்போர் நிலை இவ்வாறாக, கல்லை ஒத்த மனமுடைய கடையனாகிய யான் உன் அருகில் வரத் தகாது என்று கழிக்கப்பட்டேன். உன்னால் ஒதுக்கப்பட்டது மட்டுமன்று; துயரக் கடலில் அல்லவா வீழ்ந்துவிட்டேன். இக்கடலில் அவதியுறுகின்றவனாகிய யான், உன்னுடைய திருவடியை அடைவதற்குரிய வழி இயம்பியருள்வாயாக' என்கிறார்.

644. என்னால் அறியாப் பதம் தந்தாய்
யான் அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை
உடையாய் அடிமைக்கு யார் என்பேன்
பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும்
பழைய அடியரொடும் கூடாது
என் நாயகமே பிற்பட்டு இங்கு
இருந்தேன் நோய்க்கு விருந்தாயே 2

'என்னுடைய தலைவனே! நான் அறிந்துகொள்ள முடியாத மிகுந்த உயர் பதமாகிய உன் திருவடிகளையே எனக்குத் தந்துவிட்டாய். அந்த நிலையில் உன்மேல் குறை

சொல்வதற்கு எதுவும் இல்லை. ஆனால், அப்பதத்தின் அருமை அறியாமல், அதனை வைத்து அநுபவிக்க முடியாமல் கெட்டேன்.

'இந்த அடிமை செய்த பிழைக்கு யாரைப் பொறுப்பு என்று சொல்லமுடியும்?' இந்த அடிமை செய்த பிழை யாது என்றால் தரப்பட்ட பதத்தின் பெருமை அறியாமல் அதனை விட்டு நீங்கியதாகும்.

'நீ பதம் தந்த காலத்து உன்னைச் சுற்றி அமர்ந்திருந்த பழைய அடியார்களின் உடன் செல்லாமல், இங்கேயே தங்கிவிட்டேன். தங்கியதால் நீ தந்த பதத்தை இழந்துவிட்டேன். அதற்குப் பதிலாகப் பல்வேறு நோய்கள் என்னிடம் அடைக்கலம் புகுந்துள்ளன' என்றவாறு.

**645.** **சீலம் இன்றி நோன்பு இன்றிச்**
**செறிவே இன்றி அறிவு இன்றித்**
**தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்ச்**
**சுழன்று விழுந்து கிடப்பேனை**
**மாலும் காட்டி வழி காட்டி**
**வாரா உலக நெறி ஏறக்**
**கோலம் காட்டி ஆண்டானைக்**
**கொடியேன் என்றோ கூடுவதே** **3**

தோலின் பாவைக்கூத்து—பொம்மலாட்டம்

பொம்மலாட்டத்தை நிகழ்த்துபவன் தோலினால் செய்யப்பட்ட பொம்மைகளை, வெள்ளைத் திரையின் முன்னேவிட்டு ஆடச்செய்வான். பொம்மையின் பல உறுப்புக்களிலும் கட்டப்பட்ட கயிறு அவனுடைய கையில் உள்ள விரல்களோடு இணைக்கப்பட்டிருக்கும். ஆதலால் அவன் ஆட்டுவிக்க, இப்பொம்மைகள் ஆடுகின்றன. இனி ஆட்டுவதில்லையெனப் பொம்மலாட்டக்காரன் முடிவு செய்துவிட்டான். இந்தத் தோல் பொம்மைகள் கீழே விழுந்து கிடப்பது தவிர வேறொன்றும் செய்யமுடியாது.

அடிகளார் தம்மை வீழ்ந்துகிடக்கும் பொம்மையோடு உவமிக்கின்றார். ஆட்டுபவன் அவன், அந்த ஆட்டத்தின் ஒரு பகுதியாகத் திருப்பெருந்துறையில் திருவாதவூரர் என்ற மனிதரை, மணிவாசகரென்ற ஒப்பற்ற பொம்மையாகச் செய்துவிட்டான்.

என்ன காரணத்தாலோ பொம்மலாட்டக்காரன் இந்தப் பொம்மையான அடிகளாரைச் செயலிழக்கச் செய்துவிட்டான். அதன் பயன் என்ன? பொம்மை வீழ்ந்து கிடக்கிறது. வீழாமல் இருந்திருந்தால் சீலம், நோன்பு, செறிவு, (செயல் உறுதிப்பாடு) அறிவு ஆகிய அனைத்தும் ஆடுகின்ற அந்தப் பொம்மையினிடத்து நிறைந்து இருந்திருக்கும். ஆனால், இப்பொழுது செயலிழந்து கிடக்கும் அந்தப் பொம்மையினிடத்துச் சீலம், நோன்பு செறிவு, அறிவு என்பவை இல்லையாகிவிட்டன.

உலகிடைப் பிறந்தவர்கட்கு இயல்பாக அமைந்துள்ள அறிவுமயக்கம், (மால்) என்ன என்பதைக் காட்டினான். இந்த மாலைப் புரிந்துகொள்வதோடு மட்டுமல்லாமல் இதிலிருந்து வெளியேறுவதற்குரிய வழியையும் காட்டினான். இவை இரண்டையும் எவ்வாறு செய்தான்? அந்தப் பொம்மலாட்டக்காரன் மறைவாக நின்று தம்மை விளையாடச் செய்யாமல் குருநாதர் வடிவு தாங்கித் தன் கோலத்தை உள்ளவாறு காட்டி, மீட்டு வாரா உலகிற்குச் செல்லும் வழியையும் காட்டினான்.

'அவனால் கைவிடப்பட்ட கொடியேனாகிய நான் மீட்டும் அவனைக் கூடுவது எந்நாளோ' என்று வருந்தியாவாறு.

**646.** **கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்**
**கேடு இலாதாய் பழி கொண்டாய்**
**படுவேன் படுவது எல்லாம் நான்**
**பட்டால் பின்னைப் பயன் என்னே**

கொடு மா நரகத்து அழுந்தாமே
காத்து ஆட்கொள்ளும் குருமணியே
நடு ஆய் நில்லாது ஒழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே 4

*'திருப்பெருந்துறைக் குருமணியே! கெடுவதற்குரிய பல இழிகுணங்கள் உடையவனாகிய யான், அவற்றின் வழியிற் சென்று கெட்டுப்போய்க்கொண்டேயிருக்கின்றேன். அழிவில்லாதவனே! நான் இத்தகையவன் என்று அறிந்திருந்தும் என்னை ஆட்கொண்டு, இப்பொழுது கைவிட்டுவிட்டாய். கேடுகள் பலவும் உடைய ஒருவன் அனுபவிக்கவேண்டிய துன்பங்களையெல்லாம் நான் இன்னும் அனுபவித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.*

*'குற்றமுடையவன் என்று தெரிந்திருந்தும் என்னை ஆட்கொண்ட நீ, இப்பொழுது இடையே கைவிட்டால் அடைக்கலப் பொருளை இடையில்விட்ட பழி உனக்கு வந்தே தீரும். இவ்வாறு, துன்பத்தை நான் அனுபவிப்பதில் யாருக்கு என்ன பயன்?*

*'என் குற்றம் பாராது உன்னால் ஆட்கொள்ளப்பெற்ற யான், நரகிடை வீழுமாறு செல்கையில் நீ வாளா பார்த்துக் கொண்டிருப்பின் உன்னுடைய நடுவுநிலைமை என்ன ஆகும்? ஆட்கொள்ளப்பெற்ற அடைக்கலப்பொருள் எக்கேடோ கெட்டு ஒழியட்டும் என்று விட்டுவிடுவது நடுவுநிலையின் பாற்பட்டது அன்று' என்றவாறு.*

**647.** தாய் ஆய் முலையைத் தருவானே
தாராது ஒழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்று உன் தாள் அடைந்தேன்
தயா நீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடன் ஆக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ 5

‘முலையூட்டும் தாய் போல அகில உலகிற்கும் தாயாய் நின்று உயிர்களைக் காக்கின்றவனே! நீ இருந்தும், உன் கருணை இருந்தும் அதனைப் பயன்படுத்த முடியாத சவலைப் பிள்ளையாக நான் கழிந்துபோதல் நியாயமா?.

‘தாயே! உன் கருணையைத் தராவிட்டால் பயனற்றவனாக ஆகிவிடுவேன் யான். இதனை உணர்ந்து தாயே! நீயே கதி என்று உன்னை அடைந்தேன் எனக்கு அருளை நல்கவேண்டியது உன் கடமை.

‘அன்று திருப்பெருந்துறையில், என்னையும் என் அடிமைத்திறத்தையும் ஏற்றுக்கொண்டாய். ஆனால், இப்பொழுது என்னை ஒதுக்கிவிட்டாய். என்னைமட்டும் ஒதுக்கியது எந்த முறையில் நியாயமாகும்?’ என்றவாறு.

**648. கோவே அருள வேண்டாவோ**
**கொடியேன் கெடவே அமையுமே**
**ஆ ஆ என்னாவிடில் என்னை**
**அஞ்சேல் என்பார் ஆரோதான்**
**சாவார் எல்லாம் என் அளவோ**
**தக்க ஆறு அன்று என்னாரோ**
**தேவே தில்லை நடம் ஆடீ**
**திகைத்தேன் இனித்தான் தேற்றாயே 6**

‘தலைவனே! ஆட்கொள்ள வேண்டாவா? நான் இப்படியே பயனின்றி அழிந்தால் அது முறையாகுமா? ஐயனே! “ஐயோ பாவம்” என்றுகூட நீ கூறாவிட்டால் அடியேனை, அஞ்சவேண்டா என்று கூறுபவர் யாருளர்?

‘உலகில் இறந்துபோகின்றவர்கள் எல்லாம் உன் அருள் பெற்றவர்களா? அல்லது என்போன்றவர்களா? உன் அருள் பெறாது நான் இறந்தால், உன்னால் ஆட்கொள்ளப் பெற்ற ஒருவன், இவ்வாறு பயனின்றி இறந்தான் என்று தக்கோர் கூறுவர். அந்தப் பழிச்சொல் உன்னையே சேரும்.

'எத்தகைய தெளிவும் இல்லாமல் திகைத்து நிற்கின்ற என்னை இனியாவது தேற்றுதல் உனது கடமையன்றோ' என்றவாறு.

**649.** நரியைக் குதிரைப் பரி ஆக்கி
ஞாலம் எல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
பிச்சு அது ஏற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வது ஒன்றும் அறியேனே 7

இப்பாடலில் உள்ள முதலடி சிந்திப்பதற்குரியது. நரியைக் குதிரையாக்குவது என்பது ஞாலமெல்லாம் நிகழ்வித்து என்பதோடு எப்படிப் பொருந்தும்? மாபெரும் மெய்ஞ்ஞானியாகிய இந்த விஞ்ஞானி கூர்தல் அறத்தைக் குறிப்பாகப் பேசுகிறாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

நரியும் குதிரையும் விலங்குகளே எனினும் பரிணாம வளர்ச்சியில் நரியிலிருந்து பல மடங்கு உயர்ந்த இயல்பு கொண்டது குதிரை. மனிதர்கள் என்ற பொதுச்சொல்லில் பல நிலையிலுள்ள மனிதர்களும் அடங்குவதுபோலக், குதிரை என்ற பொதுச்சொல்லில் வண்டியிழுக்கும் குதிரைமுதல் போர்க் குதிரை வரை பல நிலைகள் உண்டு. அடிகளார் குறிப்பிட்ட குதிரை வண்டியிழுக்கும் குதிரை அன்று என்பதை அறிவிக்கப் பரிக்குதிரை என்றார். பரி என்பது மிக வேகமாகச் செல்லும் குதிரையைக் குறிப்பதாகும். குதிரைச் சேவகன் கொண்டு வந்தவை போர்க் குதிரைகளே தவிரச் சாதாரணக் குதிரைகள்அல்ல.

நரியாகிய தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த இனமாகிய குதிரையை ஆக்கியமை குதிரைச் சேவகனின் பேராற்றலைக் குறிக்கும். மிகத் தாழ்ந்த ஓர் இனத்திலிருந்து உயர்ந்த இனம் தோன்றப் பல்லாயிரம் ஆண்டுகளாகும்.

ஆனால், இவற்றை உண்டாக்கிய கர்த்தா ஒரே விநாடியில் இதனைச் செய்தான் என்பதை 'ஆக்கி' என்ற சொல்லால் குறிப்பிட்டார். இச்செயல் நரி குதிரை என்பவற்றோடு நில்லாமல் கூர்தல் அறம் உலகம் முழுவதும் நடைபெறும் படியாகச் செய்தான் என்பதை 'ஞாலமெல்லாம் நிகழ்வித்து' என்ற சொற்களால் குறிப்பிட்டார்.

இத்தகைய பேராற்றல் படைத்த ஒருவன், மதுரை மாநகரிலுள்ள அனைவரும் தன்னைக் கண்டவுடன் தம்மை மறந்து குதிரைச் சேவகனாகிய தன்னில் லயிக்குமாறு செய்துவிட்டான் (பிச்சது ஏற்றி). இவற்றையெல்லாம் நினைக்கும்பொழுது இவற்றைச் செய்தவனை எவ்வாறு விளிப்பது என்ற ஐயம் அடிகளாருக்கே வந்துவிட்டது. அவனை உயர்திணை என்பதா, அஃறிணை என்பதா? இவை இரண்டுமாக இருப்பவன் அவன்தான் என்பதை அறிவிக்கவே 'பெருந்துறையாய்' என்ற உயர்திணை விளியையும் 'அரிய பொருளே' என்ற அஃறிணை விளியையும் அவனுக்கே ஏற்றுகின்றார். இந்த எண்ணம் மனத்தில் பெருகவே 'அவிநாசி அப்பா' என்று உயர்திணையிலும் 'பாண்டி வெள்ளமே' என்று அஃறிணையிலும் விளிக்கின்றார்.

அடுத்து, இரண்டு திணையிலும் கொள்ளப்படாத 'பரஞ்சோதீ' என்று விளிக்கின்றார். 'சோதீ' என்று மட்டும் குறிப்பிட்டிருந்தால் அஃது அஃறிணையாகும்.

பெருந்துறை நாயகனை நினைக்கும்பொழுது அவனுடைய பெருமை, எளிவந்த தன்மை என்ற இரண்டும் மாறிமாறி அடிகளார் உள்ளத்தில் தோன்றுதலின் 'செய்வது ஒன்றும் அறியேனே' என்றார்.

முன் வந்த பாடல்களில் அவர் வேண்டிக்கொண்ட எதுவும் நடைபெறாமல் போகவே, நம்பிக்கை இழந்த நிலையில் 'செய்வது ஒன்றும் அறியேனே' என்று முடிக்கின்றார்.

# 51. அச்சோப் பதிகம்

## [அநுபவ வழி அறியாமை]

அச்சோப் பதிகம் என்ற தலைப்பில் ஒன்பது பாடல்களே உள்ளன. 'அச்சோ' என்பது வியப்பிடைச் சொல்லாக இருந்து, இப்பொழுது அதே பொருளில் 'அடேயப்பா' என்ற வடிவுடன் வழங்குகிறது.

பதிகம் என்பதால் பத்துப் பாடல்கள் இருந்திருக்க வேண்டும். வழக்கம்போல் ஏதோ ஒரு பாடல் காணாமல் போய்விட்டது. அது கடைசிப் பாடலாகத்தான் இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

முன்னைய பதிகங்களின் முறைவைப்பை மாற்றி அமைக்கலாம் என்றெல்லாம் சொல்லியுள்ளோம். ஆனால், எவ்வித ஐயத்திற்கும் இடமின்றி இறுதியாக இருக்கவேண்டியது அச்சோப் பதிகம் என்று நினைப்பதில் தவறில்லை.

'ஆர்பெறுவார் அச்சோவே' என்ற தொடருக்கு 'என்னையன்றி யார் பெற்றார்கள்' என்று பொருள் கூறியவர்கள் உண்டு. இது இப்பதிகத்தின் நுண்மையைச் சிந்திக்காமல் எழுதப்பெற்றதேயாகும்.

ஒவ்வொரு பாடலிலும் முன்னிரண்டு அடிகளில் இழி குணம் உடையவராகத் தம்மைச் சொல்லிக்கொண்டு, அடுத்த இரண்டு அடிகளில், இத்தகைய எனக்கும் அச்சன் (அப்பன்) அருளியவாறு ஆர் பெறுவார் என்று சொல்லும்போது, எந்தக் கடையனுக்கும் அவன் அருள் கிட்டும் என்பதையே வலியுறுத்துகிறார்.

உட்தலைப்பு இட்டவர்கள், அச்சோப் பதிகத்தின் போக்கினை அறியாமல், 'அநுபவவழி அறியாமை' என்ற பொருத்தமற்ற தலைப்பினை இட்டுள்ளனர். இந்தப் பாடல்களில் எந்த அனுபவம்? யார் பெற்ற அனுபவம் பேசப்பெறுகிறது? ஒருவேளை, கடையனாக இருந்த தமக்கு மட்டும், இறையனுபவம் கிடைத்தது என்பதை அடிகளார் சுட்டுகிறார் என்று கொண்டால், ஒருவகையில் இதை அனுபவம் என்று கூறலாம். ஆனால், வழி அறியாமை என்று அடுத்து நிற்கும் இரண்டு சொற்கள் முழுவதுமாகக் குழப்பிவிடுகின்றன.

**650.** **முத்தி நெறி அறியாத மூர்க்கரொடும் முயல்வேனைப்**
**பத்தி நெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும்வண்ணம்**
**சித்த மலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 1**

'முத்தி நெறி என்பது என்ன என்றுகூடத் தெரிந்து கொள்ளாமல் தாம் மேற்கொண்ட வழியே சிறந்தது என்று நினைக்கும் மூர்க்கரொடு பழகினேன். அத்தகைய என்னைப் பிடித்து, பத்தி நெறி என்றால் என்ன என்பதை நேரடியாக அவனே அறிவித்தான்.

'அவ்வாறு அவன் அறிவித்தது என்ன பயனைத் தந்தது என்றால், என்னுடைய பழவினைகள் ஒழிவதற்காகவே பத்தி நெறி அறிவித்தான். அறிவித்ததோடு விட்டானா? சித்தத்தையும், உயிரையும் பற்றிநின்ற மலங்கள் மூன்றையும் ஒருசேர அறுத்தெறிந்தான்' என்கிறார்.

அடுத்து உள்ளது 'சிவம்ஆக்கி எனை ஆண்ட அத்தன்' என்பதாகும். இந்நாட்டின் பழைய சமயங்களாகிய சைவம், வைணவம் இரண்டும் இறைவனின் திருவடியில் ஆன்மாக்கள் சென்று இணைவதாகவே கூறுகின்றன. அப்படியிருக்க, 'சிவம் ஆக்கி' என்ற பிரயோகம் சற்றுப் புதுமையானது. சாயுச்சிய நிலையிற்கூட இந்த ஆன்மாக்கள்

இறைவன் திருவடியில் எல்லையற்ற ஆனந்தத்தை நிலையாக அனுபவித்துக்கொண்டிருக்கும் என்று சைவர்களும், நித்தியசூரிகளாக இருந்து ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமான் திருவடி நீழலில் ஆனந்தத்தை அனுபவிக்கும் என்று வைணவர்களும் கூறிப்போயினர்.

இந்த அடிப்படையைக் கொண்டு பார்த்தால், 'சிவம் ஆக்கி' என்பது சற்றுப் புதுமையாகவே உள்ளது. சிவ என்ற சொல்லுக்கு மங்களத்தைச் செய்வது என்றே கிருஷ்ண யஜுர் வேதத்தின் ஒரு பகுதியாகிய ஸ்ரீருத்திரம் கூறிச் செல்கிறது. சிவம் என்பதைப் பெயர்ச் சொல்லாக எந்த வேதமும் பயன்படுத்தவில்லை. அந்தப் பொருளைவைத்துப் பார்த்தால், சிவமாக்கி என்பதற்கு மங்களத்தைச் செய்வது என்ற பொருளைக்கொள்ள நேரிடும்.

ஆக்குதல் என்ற சொல் முன்னரே உள்ள ஒரு பொருளை அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளாக மாற்றுதலையே குறிக்கும். சோறு ஆக்கினான், சிற்பத்தை ஆக்கினான் என்ற தொடர்களில் வரும் ஆக்கினான் என்ற சொல் அரிசியைச் சோறாக்கினான் என்றும், ஒரு கல்லை ஒரு வடிவு வரும்படி ஆக்கினான் என்றும் பொருள் தந்து நிற்பதைக் காணலாம். அந்த அடிப்படையில் சிவமாக்கி என்ற தொடரைப் பார்ப்போமேயானால், முன்னர்இருந்த ஆன்மாவைச் சிவமாக ஆக்கினான் என்று பொருள்கொள்ள நேரிடும். எப்படிச் சிந்தித்தாலும் சிவமாக்கி என்ற தொடரின் பொருள் நன்கு விளங்குமாறில்லை.

இன்றுள்ள சைவர்கள் சிலர், சிவம் என்ற சொல்லுக்கு, எங்கும் வியாபித்து நிற்பது என்ற பொருள் கொண்டு சிவமாக்கி என்பதற்கு, மணிவாசகரை அந்த வியாபகத்துள் அடங்குமாறு செய்தான் என்று பொருள் கூறுகின்றனர். வியாபகம் என்ற சொல்லுக்கு எல்லாவற்றிலும் எங்கும் நிறைந்திருப்பது என்பதே பொருளாகும். அப்படியானால்

இந்த வியாபகத்தில் மணிவாசகர் என்பவர் இதுவரை எப்படி உட்படாமல் இருந்தார் இப்பொழுது புதிதாகப் புகுத்துவதற்கு! இவ்வாறின்றி சிவமாக்கி என்பதைத் தாமாக்கி என்றும் பொருள் கூறுவர் உளர். இந்த இருவிளக்கங்களும் பொருந்துமாறில்லை.

**651. நெறி அல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனைச்**
**சிறு நெறிகள் சேராமே திரு அருளே சேரும்வண்ணம்**
**குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு**
**அறியும் வண்ணம் அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 2**

தவறான வழிகளில் சென்று கொண்டிருந்த என்னை அவற்றை விட்டுத் தன் திருவடியே சேரும் வண்ணம் அருள் செய்தான்; அவன் யார்? 'குறி ஒன்றும் இல்லாத கூத்தன்' என்கிறார்.

இந்தத் தொடர் முரண் அழகுடன் மிளிர்கின்றது. குறி ஒன்றும் இல்லாதது என்றால், தனக்கு என்று ஒரு வடிவோ பெயரோ அடையாளமோ இல்லாதது என்பது பொருளாகும். ஒன்றுமே இல்லாத இதனை எவ்வாறு அறிவது? மிகச் சிறப்பாகக் 'கூத்தன்' என்ற சொல்லால் விடையிறுக்கிறார். எதுவுமே இல்லாத இது, ஒரு செயலை ஓயாது நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. அதுதான் கூத்து அல்லது நடனம் என்பதாகும். நடனம் என்று கூறியவுடன் சுழன்றுவருதலை நினைவூட்டும். குறியொன்றும் இல்லாத இந்தப் பொருள் சுழன்று சுழன்று வருகின்றது என்றார். அப்படிப்பட்ட ஒரு பொருள் அணுவினும் சிறியதாக உள்ளது என்பதைச் 'சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் நின்ற நின் தன்மை' (394) என்று குறிப்பிடுகிறார்.

அடுத்து அடிகளார் 'தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளிய ஆறு' என்கிறார். அணுவினும் சிறிதாய் ஓயாது சுழன்றுகொண்டிருப்பதாய், எங்கும்

நிறைந்திருப்பதாய் உள்ள ஒரு பொருளைக் காண்டலோ அறிதலோ ஏறத் தாழ இயலாத காரியம்.

மிக நுண்ணிய பொருளைக் காண உதவுவது நுண்ணோக்காடி (microscope) ஆகும். சுழன்று ஆடிக்கொண்டிருக்கும் அந்த நுண்பொருள், தன்னுடைய திருவருளாகிய நுண்ணோக்காடியை அடிகளாருக்குத் தந்தது. கண்ணுக்குத் தெரியாத பொருள் நுண்ணோக்காடி மூலம் காணும்போது மிகப் பெரிய வடிவும் உருவும் பெற்றுக் காணப்படுவதுபோல் திருவருள் என்ற நுண்ணோக்காடி மூலம் அடிகளார் மிக நுண்ணிய கூத்தனின் கூத்தைக் காணமுடிந்தது. என்ன அதிசயம்! கட்புலனுக்கெட்டாத அந்தக் கூத்தன் என்ற அணுவினுள் பிரபஞ்சம் முழுவதுமல்லவா காட்சி தருகிறது! புல்லின் நுனியிலிருக்கும் பனித்துளியில் மிகப்பெரிய ஆலமரம் முழுவதுமாகக் காட்சிதருவதுபோல் கூத்தன் என்ற அணுவினுள் பிரபஞ்சமே காட்சி தருகிறது. இந்த நுணுக்கமான அற்புதத்தைத்தான் 'கூத்தன், தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளிய ஆறு' என்று பாடுகிறார்.

வெண்ணெய் திருடியுண்ட கண்ணனின் வாயைத் திறக்குமாறு யசோதை ஒரு நாள் மிரட்டினாள். இதற்குமுன்னர் எத்தனையோ தடவை இதேபோன்ற சந்தர்ப்பங்களில் அவன் வாயைத்திறந்தான். அந்த வாயினுள் ஒட்டிக்கொண்டிருந்த வெண்ணெயையும், அழகிய சிறு பற்களையும்தான் யசோதை கண்டாள் இன்றும் அதே மாதிரித்தான் வாயைத் திறந்து காட்டச் சொன்னாள். இப்பொழுது கண்ணன் தன் திருவருளாகிய நுண்ணோக்காடியை யசோதையின் கண்களில் மாட்டிவிட்டான். என்ன அதிசயம்! கண்ணனின் திறந்த வாயினுள் பிரபஞ்சம் முழுவதும் இயங்கிக் கொண்டிருப்பதை அந்தப் பெருமாட்டியால் காணமுடிந்தது.

*ஆனால், அப்பாவியாகிய யசோதையால் கண்ணனின் இந்தத் திருவிளையாடலைப் புரிந்துகொள்ள முடியவில்லை.*

*திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை பெற்ற காரணத்தால் திருவருளாகிய நுண்ணோக்காடி தம்மிடம் இருப்பதை அடிகளார் நன்கு அறிந்திருந்தார். அதனாலேயே 'கூத்தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளியவாறு' என்று பாடுகிறார்.*

**652.** **பொய் எல்லாம் மெய் என்று புணர் முலையார் போகத்தே**
**மையல் உறக் கடவேனை மாளாமே காத்தருளித்**
**தையல் இடம் கொண்ட பிரான் தன் கழலே சேரும்வண்ணம்**
**ஐயன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 3**

*தையலார் மையலில் மயங்கியிருந்த தம்மை, கருணையுடையவனாகிய கூத்தன், இந்த மயக்கத்திலிருந்து விடுபட்டுத் தன் திருவடியை அடையுமாறு அருளினான் என்க.*

**653.** **மண் அதனில் பிறந்து எய்த்து மாண்டு விழக் கடவேனை**
**எண்ணம் இலா அன்பு அருளி எனை ஆண்டிட்டு என்னையும் தன்**
**சுண்ண வெண் நீறு அணிவித்துத் தூ நெறியே சேரும்வண்ணம்**
**அண்ணல் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 4**

*இப்பாடலில் உள்ள 'எண்ணம் இலா அன்பு அருளி' என்ற தொடர் சிந்தனைக்குரியதாகும்.*

*அளவுக்குட்படாத அன்பை எனக்கு அருளிச் செய்தான் என்றே பலரும் பொருள்கூறியுள்ளனர். அதாவது அளவுபடாத கருணையைத் தன்பால் பொழிந்தான் என்ற*

பொருளிலேயே அன்பு என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதாக இவர்கள் நினைந்தனர் போலும். உயிர்கள் மாட்டு இறைவன் பொழிகின்ற கருணையை அன்பு என்ற சொல்லால் குறிக்கும் மரபு இல்லை. எனவே, இத் தொடருக்குக் கவனத்துடன் பொருள் கொள்ள வேண்டும்.

எல்லா உயிர்கள்மாட்டும் செல்லக்கூடியது ஆகிய பேரன்பு, கல்போன்ற என்னுள்ளத்தில் தோன்றி வளர்ந்து பெருகுமாறு செய்தான் என்பதே இதன் பொருளாகும்.

'எண்ணம் இலா எனை ஆண்டிட்டு' எனக்கொண்டுகூட்டுச் செய்து, அவன் திருவடிகளில் சேரவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாத என்னையும் ஆட்கொண்டு எனப்பொருளுரைக்க.

'எனை ஆண்டிட்டு' என்பது அடுத்து நிற்கும் தொடராகும். அவன் ஆட்கொள்ள வேண்டுமானால் அதற்குரிய தகுதி என்மாட்டு இருந்திருக்கவேண்டுமே! முன்னர் அது என்பால் இல்லை. ஆகவேதான், அந்த அன்பு பொங்கி வழியுமாறு முதலில் செய்தான், அதன் பின்னர் என்னை ஆட்கொண்டான் என்றபடி.

**654.** பஞ்சு ஆய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சு ஆய துயர் கூர நிற்பேன் உன் அருள் பெற்றேன்
உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று
அஞ்சேல் என்று அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 5

'பஞ்சு ஆய அடி மடவார்' வலையில் அகப்பட்டு உய்கதி அடையும் வழி தெரியாமல் துயரம் என்னை ஆட்கொள்ள, பரிதாபமாக நின்றிருந்தேன். அப்படிப்பட்ட என்னை 'அஞ்சேல்! வருக!' என்று அழைத்து என் துயர் துடைத்தாய். அதன் பயனாக உய்ந்தேன் (உய்ஞ்சேன்) நான் என்றவாறு.

பொருளிலேயே அன்பு என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதாக இவர்கள் நினைந்தனர் போலும். உயிர்கள் மாட்டு இறைவன் பொழிகின்ற கருணையை அன்பு என்ற சொல்லால் குறிக்கும் மரபு இல்லை. எனவே, இத் தொடருக்குக் கவனத்துடன் பொருள் கொள்ள வேண்டும்.

எல்லா உயிர்கள்மாட்டும் செல்லக்கூடியது ஆகிய பேரன்பு, கல்போன்ற என்னுள்ளத்தில் தோன்றி வளர்ந்து பெருகுமாறு செய்தான் என்பதே இதன் பொருளாகும்.

'எண்ணம் இலா எனை ஆண்டிட்டு' எனக்கொண்டுகூட்டுச் செய்து, அவன் திருவடிகளில் சேரவேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாத என்னையும் ஆட்கொண்டு எனப்பொருளுரைக்க.

'எனை ஆண்டிட்டு' என்பது அடுத்து நிற்கும் தொடராகும். அவன் ஆட்கொள்ள வேண்டுமானால் அதற்குரிய தகுதி என்மாட்டு இருந்திருக்கவேண்டுமே! முன்னர் அது என்பால் இல்லை. ஆகவேதான், அந்த அன்பு பொங்கி வழியுமாறு முதலில் செய்தான், அதன் பின்னர் என்னை ஆட்கொண்டான் என்றபடி.

**654.** **பஞ்சு ஆய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு**
**நெஞ்சு ஆய துயர் கூர நிற்பேன் உன் அருள் பெற்றேன்**
**உய்ஞ்சேன் நான் உடையானே அடியேனை வருக என்று**
**அஞ்சேல் என்று அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 5**

'பஞ்சு ஆய அடி மடவார்' வலையில் அகப்பட்டு உய்கதி அடையும் வழி தெரியாமல் துயரம் என்னை ஆட்கொள்ள, பரிதாபமாக நின்றிருந்தேன். அப்படிப்பட்ட என்னை 'அஞ்சேல்! வருக!' என்று அழைத்து என் துயர் துடைத்தாய். அதன் பயனாக உய்ந்தேன் (உய்ஞ்சேன்) நான் என்றவாறு.

தஞ்சே கண்டேன் தரிக்கிலாது ஆர் என்றேன்
அஞ்சேல் உன்னை அழைக்க வந்தேன் என்றார்
உயஞ்சேன் என்று உகந்தே எழுந்து ஓட்டந்தேன்
வஞ்சேர் வல்லரே வாய்மூர் அடிகளே

(திருமுறை:5-50-3)

என்ற நாவரசர் பாடல் ஒப்புநோக்கத்தக்கது.

655. வெந்து விழும் உடல் பிறவி மெய் என்று வினை பெருக்கிக்
கொந்து குழல் கோல் வளையார் குவி முலைமேல் விழுவேனைப்
பந்தம் அறுத்து எனை ஆண்டு பரிசு அற என் துரிசும் அறுத்து
அந்தம் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 6

'உடலை மெய்யென்று கருதி, தையலார் மையலில் கிடந்து தீவினையைப் பெருக்கிக்கொண்டிருந்த என்னுடைய இயல்பான பந்தங்களைப் போக்கினான்.

'உயிரைப் பற்றிநின்ற தன்மைகள் (பரிசு) அற்றுப் போகும்படியாகச் செய்தான். இதனிடையே (பெரும் பதவியில் இருந்த) நான் தெரிந்தோ தெரியாமலோ பல குற்றங்களைச் (துரிசு) செய்துள்ளேன். ஆதலின் அவற்றையெல்லாம் போக்கினான்' என்கிறார். சங்கிலித் தொடர்போன்ற பிறவிக்கு ஒரு முடிவைத் தந்தான். இக்கருத்தை 'மீடு வாரா வழியருள் புரிபவன்' (2:117) என்று முன்னரும் கூறியுள்ளமை காண்க.

ஆண்டதும், பரிசு அறுத்ததும் துரிசு அறுத்ததும் பந்தம் அறுத்ததும் ஆகிய அனைத்தும் அவன் அருள்செய்த அதே கணத்தில் உடன்நிகழ் செயல்களாக ஒரே விநாடியில் நிகழ்ந்தேறின என்கிறார்.

**656.** தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனை
பையவே கொடு போந்து பாசம் எனும் தாழ் உருவி
உய்யும் நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன் எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 7

*"பாசம் எனும் தாழ் உருவி" என்பது, உயிரை இயல்பாகப் பற்றிநிற்கும் பாசம் என்ற பூட்டைத் திறந்து என்ற பொருளைத் தரும்.*

*'ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு' என்பது புதிய முறையில் சிந்திக்கத் தூண்டுகிறது.*

*வேதத்தில் காணப்படாத இந்த 'ஓம்' என்பது பிற்காலத்தில் பெருவழக்காய் வடமொழி, தமிழ்மொழி என்ற இரண்டிலும் இடம் பெற்றுவிட்டது. அடிகளார் காலத்தில், அதாவது ஒன்பதாம் நூற்றாண்டில், நன்கு வழங்கப்பெற்ற இந்த 'ஓம்' பல பொருள்களையுடைய ஒரு சொல்லாக வழங்கிற்று.*

*அடிகளாரும் திருவாசகத்தில் இரண்டு இடங்களில் இதனைப் பயன்படுத்துகிறார். 'உய்ய என் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்ற மெய்யா'(1-33,34) என்று திருவாசகத்தின் தொடக்கப் பாடலாக அமைக்கப்பெற்றுள்ள சிவபுராணத்திலும், 'ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு' என்று திருவாசகத்தின் நிறைவுப் பதிகமான இதிலும் பயன்படுத்தியுள்ளமை ஆய்த்தக்கது.*

*உள்ளத்தில் ஓங்காரமாய் நின்றான் என்று முன்னர்க் கூறிய அடிகளார், இப்பொழுது ஓங்காரத்து உட்பொருளை எனக்கு அருளி என்று பாடுகிறார்.*

*'ஓம்' என்ற ஒலி ஆதி நாதத்தின் அடையாள ஒலியாகும். பிரபஞ்சம் தோன்றுவதற்கு ஆதி காரணமாய் உள்ளது ஒலியே என்பதை நம் முன்னோர் என்றோ கண்டு*

கூறினர். இடைக்காலத்தில் தோன்றிய மேலைநாட்டு வானநூலாரும் இக்கருத்தை முற்றிலுமாக ஏற்றுக்கொண்டு, அதற்கு 'மிகப்பெரிய சப்தக் கொள்கை'(big-bang theory) என்று பெயரிட்டனர். இவ்வளவு பெரிய தத்துவத்தை நம் முன்னோர் 'தோற்றம் துடி அதனில்' (உண்மை விளக்கம்: 36) என்று கூறிப்போயினர். அதற்கு அடையாளமாகக் கூத்தனின் வலக்கரத்தில் உடுக்கை (துடி) இருப்பதாகக் காட்டினர்.

இனி, இந்த ஆதி நாதத்திற்கு இரண்டு இயல்புகள் உண்டு. ஒலிவடிவாக அமைந்திருப்பது ஓர் இயல்பு. இந்த ஒலிக்கு ஓர் உட்பொருளும் உண்டு. அது இரண்டாவது இயல்பு. அடிகளார் போன்ற அருளாளர்கள்மட்டுமே இந்த இரண்டையும் அறியமுடியும்.

சிவபுராணத்தில் ஒலிவடிவாக உள்ளே நின்றான் என்று கூறியவர், அச்சோப் பதிகத்தில் அதன் உட்பொருளை விளக்கினான் என்று கூறுகிறார். மணிவாசகர் என்ற அருளாளரின் வாழ்க்கையில் இரண்டு நிலைகளைக் குறிப்பதாகும் இத்தொடர்கள். இவை இரண்டையும் சேர்த்தே நாத தரிசனம் என்று கூறுவர்.

'என்னுள் எழு பரஞ்சோதி' (388) என்று கூறியதால் சோதி தரிசனமும் 'ஓங்காரமாய் நின்ற' (1:33) என்றதால் நாத தரிசனமும் தொடக்கத்திலேயே இவருக்குக் கிட்டியது என்பதையும், அச்சோப் பதிகம் பாடுகின்ற காலத்தில் நாதத்தின் உட்பொருளையும் அறியமுடிந்தது என்பதையும் அடிகளாரே கூறியுள்ளார்.

திருவாதவூரர் என்ற சராசரி மனிதர் மணிவாசகரென்ற அருளாளராக மாறி வளர்ந்த வளர்ச்சியை அவருடைய கூற்றாகவே காணும் வாய்ப்பினை மேலே காட்டிய தொடர்கள் அறிவிக்கின்றன.

**657.** சாதல் பிறப்பு என்னும் தடம் சுழியில் தடுமாறிக்
காதலின் மிக்கு அணி இழையார் கலவியிலே விழுவேனை
மாது ஒரு கூறு உடைய பிரான் தன் கழலே சேரும்
வண்ணம்
ஆதி எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 8

*இறப்பும் பிறப்புமாகிய சுழியில் சிக்கித் தடுமாறி, பெண்கள் சுகத்தில் காதல் கொண்டு திரிந்த என்னை, ஆதிப்பிரானாகிய கூத்தன் தன் கழல் சேரும் வழியருளினான் என்றபடி.*

**658.** செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதல் ஆய முதல்வன்தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே 9

*சிதடர் - குருடர்*

*இப்பாடலின் நான்காவது அடி இந்த அச்சோப் பதிகத்தின் முடிமணியாகும். திருவாசகத்தின் முடிமணி அச்சோப் பதிகம் என்று முன்னர்க் கூறினோம்.*

*திருவாசகத்தின் இறுதிப் பதிகத்தின் இன்றுள்ள முறையில் இறுதிப் பாடலின், இறுதியாகவுள்ள மூன்றாம் நான்காம் அடிகள் துன்புற்று அலமந்து செல்கதி அறியாது நொந்துபோய் இருக்கின்ற மனித சமுதாயத்திற்கு (சைவர்களுக்குமட்டு மன்றி) மாபெரும் நம்பிக்கையை ஊட்டி நிமிர்ந்து நிற்கச் செய்யும் சத்து மருந்து* (tonic) *போன்று அமைந்துள்ளன.*

*சராசரி மனிதராக இருந்த திருவாதவூரருக்கு இந்த அரும் பெரும் நிலை கிட்டியது ஆதலால், தம்முடைய பழைய வாழ்க்கையைத் திரும்பிப்பார்த்த அடிகளார், இப்போது இருக்கும் நிலையையும் அதனோடு ஒப்பிட்டு,*

'நாய் சிவிகை ஏற்றுவித்த' என்ற தொடரால் அதனை விளக்குகிறார்.

நாயைச் சிவிகையில் ஒருவன் ஏற்றினான் என்றால் அதற்கு இரண்டே காரணங்கள் இருத்தல் கூடும். ஒன்று சிவிகையில் ஏறும் அளவிற்கு நாய் சிறப்புப் பெற்று உயர்ந்திருத்தல் வேண்டும். இன்றேல் நாய்க்கு உரியவன் அதன்மாட்டுக் கொண்ட எல்லையற்ற கருணை காரணமாக அந்த நாயைச் சிவிகையில் ஏற்றியிருக்கவேண்டும். இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு பார்த்தால், தம்மை நாயென்று உருவகித்த அடிகளார் எந்த விதத்திலும் அந்த நாய் சிறப்புப் பெறவில்லை என்பதைச் 'செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை' என்ற தொடரால் விளங்கவைக்கிறார். அப்படியானால் நாயைச் சிவிகையில் ஏற்றியதற்குக் காரணம் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட ஏற்றியவனின் கருணையேயாக இருக்கவேண்டும்.

இந்தக் கருணைதானும் தராதரம் பார்த்து வருவதன்று என்பதை அறிவிக்கவே 'நாய் சிவிகை ஏற்றுவித்த அம்மை' என்று கூறுகிறார். தாய்க்கு, தராதரம் பார்க்கும் இயல்பில்லை ஆதலால் தராதரம் பாராது கருணை செய்த இறைவனை அம்மை என்றார்.

திருவாசகத்தில் பெரும்பாலும் அம்மையப்பன் என்றும் அப்பன் என்றும் தலைவன் என்றும் ஆண்பால் முடிவு கொடுத்தே இறைவனைக் கூறும் மரபைக் காணலாம். இந்தப் பாடலில் 'முதல்வன் தான்' என்று தொடங்கியவர் பாடலின் முடிவில் இந்த ஆண்பால் இயல்பை முற்றிலும் விட்டு 'அம்மை' என்றே இறைவனைக் குறிப்பிட்டார்.

பாலுணர்வால் உந்தப்பெற்று பல மகளிரின் தொடர்புகொண்டிருந்த பழைய வாழ்க்கையை நினைந்து பாடுதல் இந்நூலில் பலபாடல்களில் இடம்பெற்றுள்ளது.

பாலுணர்வில் மிகுந்து செல்லும் ஒருவனை அவன் தந்தை மிகுதியாகக் கடிவானே தவிர, எளிதாக அவனை மன்னித்துவிடமாட்டான். அப்படியே மன்னித்தாலும் மன்னிக்கப்பட்டவனுக்கு எவ்வித நலத்தையும் செய்ய ஒருப்படான். இது பொது நியதி.

இது இவ்வாறிருக்க, முதலிரண்டு அடிகளில் பாலுணர்வு மிகுதியால் தாம் முன்னர் வாழ்ந்த வாழ்க்கையைக் குறிப்பிடும் அடிகளார் பெருந்துறைநாயகன் தம்மை மன்னித்து ஆட்கொண்டான் என்று பாடுவதைக் காணலாம். இவ்வாறு வரும் பாடல்களையெல்லாம் ஒன்றாக வைத்துப் பார்த்தால், ஒரு புதுமையைக் காணமுடியும். இம்முறையில் வரும் பல பாடல்களிலும் மூன்று அல்லது நான்காவது அடிகளில் பெருந்துறை நாயகன் பேசப்பெறுகிறான். அவ்வாறு வரும் இடங்களிலெல்லாம் 'பெருந்துறை நாயகன்' 'இறைவன்' என்று மட்டும் கூறாமல் 'தையல் இடம் கொண்ட பிரான்' (652), 'மாதொடு கூறுடைய பிரான்' (657), 'மான் அன்ன நோக்கிதன் பங்க' (413) என்றெல்லாம் பாடுதலைக் காணலாம். இதிலென்ன புதுமை என்று கேட்கிறீர்களா? மகளிர் வலையில் அகப்பட்ட ஒருவனைக் காக்க வருபவன் நோக்கி தன் பங்கனாகவும், மாதை ஒரு கூறுடையவனாகவும் கூறப்படுவது ஏன்? இறைவியின் தொடர்பு இல்லாமல் தனியே இறைவனைப்பற்றிப் பாடமுடியாதா? நன்றாகப் பாடலாம். நூற்றுக்கணக்கான இடங்களில் அப்படியே பாடியும் உள்ளார். அப்படியிருக்க, பாலுணர்வோடு தம்மைத் தொடர்பு படுத்திப் பாடும் பாடல்களில் மட்டும் இறைவியோடு கூடிய இறைவனை முன்னிலைப்படுத்துவதின் நோக்கமென்ன?

சற்றுச் சிந்தித்தால் இதன் அடிப்படை நன்கு விளங்கி விடும். பாலுணர்வில் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த தம்மை, தந்தையாக மட்டும் அவன் இருந்திருந்தால்,

மன்னித்திருப்பானா என்பது ஐயத்திற்குரியது. பின்னர் ஏன் மன்னித்தான்? பிள்ளைகள் செய்யும் தவறு தாய்மை என்னும் அன்புக் கண்ணாடி போட்டுள்ள தாய்க்குத் தெரியாது. எந்தத் தவற்றைச் சுட்டிக் காட்டினாலும் தாய் அதற்கு ஒரு சமாதானம் சொல்லிவிடுவாள். அப்படிப்பட்ட தாய், தந்தையின் ஒரு பாகமாக அமர்ந்திருக்கிறாள். தந்தை தம்மை மன்னித்தற்கு ஒரே காரணம் தாயின் தூண்டுதல்தான் என்பதை நினைவூட்டத்தான் இப்பகுதிப் பாடல்களிலெல்லாம் இறைவியை இடப்பாகத்தே உடைய இறைவன் என்று விடாமல் பாடிச் செல்கிறார்.

இந்த அடிப்படையை மனத்துட்கொண்டு பார்த்தால், அச்சோப்பதிகத்தில் மற்றொரு புதுமையையும் காணமுடியும். இப்பகுதியிலுள்ள ஒன்பது பாடல்களில் ஏழு பாடல்களில் தமது அதீதமான பாலுணர்வைச் சுட்டிப் பாடும் அடிகளார், ஒவ்வொரு பாடலிலும் தம்மை மன்னித்து ஆட்கொண்ட இறைவனைக் குறிக்கும்பொழுது அன்னையோடு தொடர்புபடுத்தியே பாடுகிறார். தம்முடைய மலைபோன்ற தவறுகள் அவருடைய உள்ளத்திடையே படம்போன்று ஓடுகிறது. உடனடியாகவே இவ்வளவையும் மன்னித்துத் தம்மை ஆட்கொண்ட இறைவன்பற்றிய உணர்வு தோன்றகிறது. அந்நினைவு வந்தவுடன் அன்னையோடு தொடர்புடையவன் அவன் என்ற எண்ணம் அவர் மனத்தில் ஆழமாகப் பதிகிறது. பாடல்கள் செல்லச் செல்ல மன்னித்தற்குக் காரணமாக இருந்த அவனுடைய நினைவைவிட, மன்னிக்குமாறு அவனைத் தூண்டிய தாயின் நினைவு ஆழமாக மனத்தில் பதிகின்றது. ஒன்பதாவது பாடல் வரும்பொழுது அத்தலைவன் மறைந்துவிடுகிறான். அந்த இடத்தில் அன்னை மட்டும் காட்சியளிக்கிறாள். கடைசிப்பாட்டின் கடைசி அடிக்கு வரும்பொழுது இறைவனின் இடப்பாகத்தில் ஒரு கூறாக இருந்த அன்னை, இப்பொழுது விஸ்வரூபம் எடுத்து இறைவனையே தன்னுள் அடக்கிக்

கொள்கிறாள். இப்பொழுது அடிகளாரின் மனத்திரையில் இறைவனோ உமையொருபாகனோ காட்சி தரவில்லை. பின்னர் யார் காட்சி தந்தார்? விஸ்வரூபம் எடுத்த அன்னையே காட்சி தருகிறாள். பாடலின் இரண்டாம் அடியில் 'முதலாய முதல்வன்' என்று பாடியவர், இந்த விஸ்வரூபக் காட்சியில் மூழ்கி, 'அம்மையேஅப்பா' என்று கூடப் பாடாமல் 'அம்மை எனக்கு அருளியவாறு' என்று பாடுகிறார்.

இதிலும் ஒரு வளர்ச்சி முறையைக் காணமுடிகிறது. 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' *(1-61)* என்று சிவபுராணத்தில் பாடியவர், இப்பொழுது தந்தையினும் சிறந்தவர் தாய் என்றுணர்ந்து 'அம்மை எனக் கருளியவாறு' என்று பாடுகிறார்.

'செம்மைநலம் அறியாத சிதடர்' என்ற தொகுதியில் அருளாளர்கள் தவிர, உலகில் வாழும் மக்கள் அனைவரும் அடங்குவர். இந்தக் கூட்டத்தாருக்குப் பிரதிநிதியாக இருக்கும் தன்மையைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு, இப்படி இருந்தாலும், கவலைப்படத் தேவையில்லை; தாய்த்தன்மையுடைய கூத்தன் தன்னுடைய கருணையாகிய சிவிகையில் தம்மை ஏற்றுவிப்பான் என்று பாடியுள்ளமை கற்றுக் கற்றுத் தெளிவடைய வேண்டிய பகுதியாகும்.

திருவாசகத்தில் பல பாடல்கள் காணாமல் போய்விட்டதுபோல, பிற பகுதிகளும் காணாமல் போய்விட்டாலும், அச்சோப் பதிகமும், இந்த இறுதிப் பாடலும் நிலைபெற்றிருக்குமாயின் நம் போன்று நொந்தவர்களுக்குக் கலங்கரை விளக்கமாக நம்பிக்கை நட்சத்திரமாக உலகம் உள்ளவரை நிற்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ௐ ௐ ௐ

# பின்னுரை

## குலாப் பத்து

*அடிகளார் பெற்ற இறையனுபவ நிலையில் ஒரு பகுதியை மிக அழகாக இப்பகுதியின் முதலாவது பாடலின் (559) மூன்றாவது அடியில் குறிப்பிடுகின்றார்.*

*கூடும், உயிரும் குதூகலித்துக் கும்மாளம் அடித்தன என்பது உலகியல் நிலையில் இயலாதது ஒன்றாகும். உடல், இன்பத்தை நுகருகிறது என்றால் அது பொறி, புலன்கள் வாயிலாகவே நடைபெறும். எல்லாப் பொறி புலன்களும் அடுத்தடுத்து வெகு விரைவாக மாறிமாறி அனுபவிக்கமுடியுமே தவிர, ஒரே நேரத்தில் ஒரே காரணத்தால் இன்பமடைதல் ஏறத்தாழ இயலாத காரியம். காரணம் ஒன்றுண்டு, இப்பொறி, புலன்கள் மனத்தின் உதவியின்றி எந்த ஒன்றையும் செய்ய இயலாது. அந்த மனந்தானும் ஒரு பொறியோடு இயைந்து, ஈடுபட்டு இன்பம் அனுபவிக்கத் தொடங்கினால், ஏனைய நான்கு பொறிகளும் அந்த நேரத்தில் செயலிழந்து நிற்குமே தவிர, அந்த இன்பத்தில் பங்குகொள்ள முடியாது. கண்ணாகிய பொறி அனுபவிக்கும் இன்பம் வேறு; காதாகிய பொறி அனுபவிக்கும் இன்பம் வேறு. ஐந்து பொறிகளும் அனுபவிக்கும் இன்பம் வெவ்வேறாயினும் மனமாகிய ஒன்று இல்வழி எந்தப் பொறியும் எந்த இன்பத்தையும் தர முடியாது. மனம் ஒன்றேயாயினும் அந்த மனம் கண்ணோடு சேரும்பொழுது காட்சி இன்பத்தையும், காதோடு சேரும்போது கேட்கும் இன்பத்தையும், நாவோடு சேரும்போது சுவைக்கும் இன்பத்தையும் தனித்தனியே அனுபவிக்கின்றது.*

என்றாலும், மனம் ஏதோ ஒரு பொறியுடன் இணையும்போது மற்றைப் பொறிகள் செயலிழந்து விடுகின்றன. மனித உடலுடன் இருக்கின்ற வரையில் இதுவே பொதுவான நியாயமாகும்.

'ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள' (பெ.பு.தடு. ஆட்:106) என்று சேக்கிழார் பாடுவதும் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்.

இந்த உடம்போடு இருப்பினும் இறையனுபவம் கைகூடிவிட்டால் மேலே கூறிய முறை அடிபட்டுப் போய்விடுகிறது. ஐந்து பொறிகளும் மனத்தின் உதவி இல்லாமலேயே இன்பத்தை அனுபவிக்கின்றன. ஐந்தும் ஒன்றுசேர்ந்து ஒரே நேரத்தில், ஒரே இன்பத்தைப் பங்கு கொள்ளும் இந்த நிலையைத்தான் 'கூடும் உயிரும் குமண்டையிட' என்கிறார் அடிகளார்.

இதிலும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. பொறி, புலன்கள் மனத்தின் உதவி கொண்டு எவ்வளவு உலக இன்பத்தை அனுபவித்தாலும் உயிர் உடம்புடன் இணைந்திருக்கும் பொழுதுதான் பரு உடலாயினும், சூக்கும உடலாயினும் இந்தப் பொறி, புலன்கள் இன்பத்தை அனுபவிக்க முடிகிறது. ஆனால், உயிர் தனித்து அதில் ஈடுபடுவதில்லை. உயிர், இன்பத்தை அனுபவிக்கிறது என்றால் அந்த இன்பம் இறையனுபவமாக இருக்க வேண்டுமே தவிரப் பொறி புலன் சம்பந்தப்பட்ட உலக இன்பமாக இருத்தல் இயலாது.

எனவே, அடிகளார் 'கூடும் உயிரும் குமண்டையிட' என்று பாடினார் என்றால், அது இறையனுபவத்தில் திளைத்ததைக் கூறுகிறதே தவிர, வேறு எதனையும் குறிப்பிடவில்லை.

தம் அனுபவ நிலையை மூன்றாவது அடியிற் கூறினாரேனும் அது கிடைப்பதற்குத் தேவையான படி நிலைகள் மூன்றை முதல் இரண்டு அடிகளில், படிப்படியாகக் கூறுகிறார்.

*முதல் நிலை 'ஓடும் (பிட்சாபாத்திரம்) கவந்தியுமே (கோவணம்) உறவு' என்றிருக்கும் நிலை. ஓடு, கவந்தி என்ற இரண்டுமே அஃறிணைப் பொருள்களாகும். அஃறிணைப் பொருள்களை உறவு என்று கொள்வது இயலாத காரியம். தன்னை ஒத்த மனிதர்களைத்தான் உறவினர் என்று கூறுவார்களே தவிர, மிக அன்போடு வளர்க்கும் நாயைக்கூட உறவு என்று யாரும் சொல்வதில்லை. அப்படியிருக்க, ஓடும், கவந்தியும் உறவு என்று சொல்வதின் நோக்கமென்ன?*

*'இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே, துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்' (திருவாச :2:7-5) என்றும், 'உற்றாரை யான் வேண்டேன்' (558) என்றும் பாடியுள்ளார் ஆதலின் சக மனிதர்களை உறவு என்று கொள்ளும் நிலையை அடிகளார் என்றோ கடந்துவிட்டார் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இங்கு உறவு என்று அவர் கூறுவது, தம்மோடு தொடர்புடையது என்ற பொருளிலேயே ஆகும். ஓடும், கவந்தியும் அவரைவிட்டு நீங்காதிருத்தலின் அவற்றைத் தம் உறவு என்று கூறுகிறார். 'வேண்டின் உண்டாகத் துறக்க' (342) என்ற குறளுக்கு இலக்கியமாக வாழும் நிலைதான் ஓட்டையும், கவந்தியையும் உறவாக நினைக்கும் நிலை. இது முதல் நிலையாம்.*

*மனம் ஏதாவதொரு பற்றுக்கோடின்றித் தனித்து இயங்கும் ஆற்றலுடையது அன்று. ஒரு பற்றை விடவேண்டுமானால் இன்னொரு பற்றைப் பற்றித்தான் ஆகவேண்டும் என்பதையே 'பற்றுவிடற்குப் பற்றுக பற்றற்றான் பற்றினை' (குறள் :350) என்று வள்ளுவர் கூறுகிறார். ஆக, ஓட்டையும் கவந்தியையும்மட்டுமே உறவு என்று சொல்லுகின்ற அளவிற்கு, அகப்பற்று, புறப்பற்று ஆகிய இரண்டையும் அடிகளார் துறந்துவிட்டார் என்றால், அது எவ்வாறு, முடிந்தது? வேறு ஒன்றைப் பற்றிக் கொண்டார்; அதனால் மனத்திலுள்ள இப்பற்றுக்களைத்*

துறக்க முடிந்தது. எதைப் பற்றிக்கொண்டார் என்பதை மூன்றாவது நிலையாகப் பாடல் அறிவிக்கின்றதேனும் அந்தப் பற்றை நாம் அறியமுடியாது. ஆதலால், அதை அறிவதற்குரிய ஓர் அடையாளத்தை இரண்டாவது நிலையாகப் பேசுகிறார் அடிகளார். அந்த இரண்டாவது நிலை 'உள்கசிகின்ற' நிலையாகும். உள்ளந்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய் உருகுதல் (25) என்பதுதான் உள் கசிகின்ற நிலை.

உள் கசிவு ஏற்படுகின்ற அதே நேரத்தில் மனம் பற்றற்றான் பற்றினைப் பற்றிக்கொள்கிறது என்பதை அறிதல் வேண்டும். அதுவே 'தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்த' என்று சொல்லப்படும் மூன்றாவது நிலை.

இரண்டாவது பாடலில் (560) பொறி புல இன்பங்களில் தலைமையிடம் பெற்றுள்ள பால் உணர்வு பற்றிப் பேசுகிறார். தமிழர்கள் என்றுமே பெண் உறவை இழித்தோ, அது முன்னேற்றத்திற்குத் தடையென்று பழித்தோ கூறியதே இல்லை. அதனாலேயே இறைவனை உமையொருபாகன் என்றும், திருமாலைத் திருமங்கை உறை மார்பன் என்றும் கூறிப்போயினர்.

தமிழர்கள் வழிபடும் கடவுளர்களே பெண்ணோடு சேர்ந்துள்ளார்கள் என்றால், பெண்ணையோ அவள் தரும் இன்பத்தையோ பழித்துப் பேசுதல் எவ்வாறு முடியும்?

இந்த நுணுக்கத்தைப் புரிந்துகொள்ளாத இடைக்காலப் போலி வேதாந்திகள் பெண்ணை இழித்துப் பேசினர். இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு இப்பாடலின் முதலிரண்டு அடிகளைக் காணல் வேண்டும். 'துடி ஏர் இடுகு இடைத் தூமொழியார் தோள் நசையால், செடி ஏறு தீமைகள் எத்தனையும் செய்திடினும்' என்ற அடிகளில் 'நசை' என்ற சொல்லும் 'தீமைகள் செய்திடினும்' என்ற சொற்களும் சிந்திப்பதற்குரியன.

இயல்பானதும் வரம்பிற்கு உட்பட்டதுமான விருப்பத்தைத் தமிழர் நசை என்று கூறுவதில்லை. வரம்பு மீறியதும் அளவு மீறியதுமான ஒன்றையே நசை என்று கூறினர். 'தோள் நசையால்' என்று அடிகளார் குறிப்பிடும்பொழுது, நாள் முழுவதும் தோள்களையே நினைத்து ஆசைப்பட்டுக்கொண்டிருக்கும் மனநிலையையே குறிப்பிடுகின்றார்.

நியாயமான விருப்பம் எல்லைகடந்த ஆசையாக மாறி, அந்தப் பேரெல்லையையும் கடந்து, நசையாக மாறும்போது தன்னைத் தான் கட்டிஆளும் ஆற்றலை மனிதன் இழந்துவிடுகிறான். அந்த இழப்பு ஏற்பட்டவுடன் எதனையும் செய்யத் தயாராகிவிடுகிறான். தான் செய்யப் போகின்ற செயல் குற்றமுடையது, தீமை பயக்கக்கூடியது, இம்மை மறுமைத் துன்பங்களைத் தரக்கூடியது என்று தெரிந்திருந்தும் அவைபற்றிக் கவலைப்படாமல் அவற்றையே செய்கிறான். இது நசையுடையார் வாழ்க்கை முறையாகும்.

இப்படி நசையுடையாராக இருந்தும்கூடத் திடீரென்று இவ்வாழ்க்கை முறையில் உவர்ப்பு ஏற்பட்டு, அருணகிரியாரைப்போல, ஒரே விநாடியில் மனம் மாறுபவர்களும் உண்டு. இப்படி மாறும் மனம் எங்கே தஞ்சமடைகிறது என்பதுதான் வினா. இந்த நசை மற்றொரு பொருளிடத்துக் கொண்ட நசையாக மாறினால் அது நற்பயனை விளைக்காது. உதாரணமாக- அதீதமான பெண்ணாசை உடையார் மனம்மாறி பொன்னாசையில் வீழ்ந்துவிடுவதும் உண்டு. இது தலைவலி போகத் திருகுவலி வந்த கதையாகும்.

இவ்வாறில்லாமல் இந்த நசை மாறி இறைவன் திருவடிகளில் சரணடையத் தொடங்கினால், அம்மாற்றம் பழைய பிழைகள் அனைத்தையும் மன்னிக்கும். இதனையே அடிகளார் 'எனைத் தன தாள் முயங்குவித்தான்' என்கிறார்.

'எத்தனையும் செய்திடினும்' என்ற தொடர் அளவுள் நிற்பதேயன்றி அளவுமீறிச் செயற்படுவதையே குறிக்கின்றது.

உலகையும் மக்களையும் படைத்த இறைவன் மக்களுக்கு ஐந்து பொறி புலன்களைத் தந்துள்ளான். அவை அனுபவிப்பதற்குரிய தனு, கரண, புவன, போகங்களையும் படைத்துள்ளான். இவை இரண்டையும் படைத்தவன் இறைவன்தான். அப்படியிருக்க, 'பொறிபுலன்களைப் பயன்படுத்தி இன்பம் அனுபவியாதே' என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. 'ஐந்தும் அடக்கும் அமரரும் அங்கில்லை' *(திருமந்திரம்-2009)* என்பது திருமூலர் வாக்கு.

எனவே, பெண் இன்பம் உள்பட எந்த இன்பத்தையும் அளவோடு, வரம்பு மீறாமல் அனுபவிப்பதில் எவ்விதத் தவறும் இல்லை. வரம்பு, அளவு ஆகியவற்றை மீறுவதைத்தான் 'எத்தனையும் செய்திடினும்' என்கிறார் அடிகளார்.

மூன்றாவது பாடலில் *(561)* உள்ள முதல் மூன்று அடிகளில் ஐந்து செயல்கள் நிகழ்ந்தனவாகப் பேசப்பெற்றுள்ளன. செய்யுளாகலின் இச்செயல்கள் முன்பின்னாகப் பேசப்பெற்றுள்ளன. இவற்றைப் பின்வரும் முறையில் வரிசைப்படுத்திக்கொள்ளலாம்.

துன்பங்களைதல் முதல் செயல்; துவந்துவங்களைத் தூய்மை செய்தல் இரண்டாவது செயல்; இருவினையை ஈடு அழித்தல் மூன்றாவது செயல்; என்பு உள்உருகுதல் நான்காவது செயல்; முன்பு உள்ளவற்றை முழுதும் அழித்தல் ஐந்தாவது செயல்: இவை முறையாக ஒன்றன்பின் ஒன்றாகச் செய்யப்பட வேண்டியவை ஆகும்.

உலகியல் முறையில், இன்ப துன்ப வேறுபாடுகளை மனத்தில் தாங்கினாலும் துன்பத்தில் துவள்கின்றவர்களை முன்னேற்ற முடியாது. ஆதலின், பெருந்துறை நாயகன் துன்பத்தை முதலிற் களைந்தான்.

பற்று என்பது மனத்தில் இயல்பாக இருக்கின்ற ஒன்று. அதனைப் போக்குதல் இயலாது ஆதலின், அற்பமானதும் அழிகின்றதுமான பொருளிடத்துப் பற்று வைக்காமல் உயர்ந்த பொருளிடத்து அப்பற்றை மடைமாற்றம் செய்தலையே 'துவந்துவங்கள் தூய்மை செய்து' என்கிறார்.

துன்பம் களைதல் என்றவுடன் துன்பத்தை ஏதோ ஒரு மூட்டையைத் தூக்கி அப்பாற் போடுவதுபோலப் போட்டுவிடுவது என்று நினைக்கின்றோம்; அது தவறு. துன்பம் என்பது தனிப்பட்ட பொருளன்று; அது ஒரு மனநிலை. துன்பத்தை உண்டாக்கும் பொருள் எதிரே இருக்கின்றபோதுகூட அதுபற்றித் துன்பப்படாமல் இருக்கும் மனநிலையே 'துன்பம் களைந்து' என்று சொல்லப்பட்டது. எனவே, நன்மை தீமை என்ற இரண்டிலும் ஈடுபடாமலும் அவை நம்மைத் தாக்கவிடாமலும் இருப்பது சமதிருஷ்டி நிலை என்று சொல்லப்பெறும். இந்தச் சமதிருஷ்டி நிலை ஒருவனுக்கு வந்துவிட்டால் இருவினைகள் அவனை விட்டு நீங்கிவிடும்.

மேலே சொன்ன முறைப்படி இவை நடைபெற்றால் எஞ்சியிருக்கும் அன்பு காரணமாக உள்ளம் உருகிவிடும். அது மீதூர்ந்த நிலையில் எலும்புகள் மென்மைத் தன்மை அடையும். இதனையே 'என்பு உள் உருக்கி' என்று கூறுகிறார்.

என்பு உள் உருகும் என்ற நான்காவது நிலை, ஏனைய மூன்று நிலைகளும் படிப்படியாக வளர்ந்து கடைசியாக ஏற்படுகின்ற ஒன்றாகும். இதனையடுத்து அடிகளார் சொல்வது 'முன்புள்ளவற்றை முழுதழிய' என்பதாகும். இருவினையை ஈடழித்து என்று சொல்லிவிட்ட பிறகு, இவ்வாறு சொன்னால் அதன் பொருளென்ன? மேலே கூறிய நான்கு நிலையில் இந்தப் பிறவி எடுத்தபின் நடைபெறுகின்றவற்றைக் கூறியுள்ளார் ஆயினும், இப்பிறவியின் முன்னர்த் தொகுத்து வைக்கப்பெற்றுள்ள

சஞ்சிதம், பிராரத்துவத்தின் ஒரு பகுதி என்பவற்றைப்பற்றி மேலே கூறிய நான்கு நிலைகளில் எதுவும் பேசப்படவில்லை. இருவினையை ஈடழித்து என்பது இந்தப் பிறப்பில் செய்யப்படுகின்ற ஆகாமியவினை பற்றியதே ஆகும். இந்த நான்குநிலை வளர்ச்சி ஏற்படாமல் இருந்தால், சஞ்சிதம் பிராரத்துவத்தின் ஒரு பகுதி என்பவை இருந்தபடியே இருந்து மேலும் எடுக்கப்போகும் பிறவிக்கு வித்தாய் அமைந்துவிடும்.

படிப்படியாய் வரவேண்டிய நான்கு நிலைகளையும் ஒரே விநாடியில் கடக்கச்செய்த குருநாதர் எஞ்சியிருக்கும் ஒன்றையும் மறக்கவில்லை. என்பு உள் உருகும் நிலை வந்தாலும்கூடப் பழவினையின் தொடர்ச்சியைப் போக்கா விடில் உருகும்நிலை மாறி, கட்டியாகும் நிலை தோன்றிவிடும். எனவே, குருநாதர் என்ன செய்தார் என்பதை மூன்றாவது அடியில் வரும் 'முன்புள்ளவற்றை முழுது அழிய'க் காரியம் செய்தான் என்றதால் விளக்கினார். அது என்ன காரியம்?

மேலே உள்ள நான்கு நிலைகளையும் அடிகளார் கடக்க வேண்டி அருள் புரிந்த குருநாதர், புறத்தே இருந்தபடியே இவற்றைச் செய்துவிட்டார். ஆனால், ஐந்தாவது செயலைச் செய்வதற்குக், குருநாதர் ஒரு புது வழியை மேற்கொண்டார். திருவடி தீட்சை, நயன தீட்சை என்பவற்றின் மூலமே குருநாதர் இதனைச் செய்திருக்கலாமேனும் என்ன காரணத்தாலோ அந்த வழிகளை மேற்கொள்ளாமல் ஒரு புது வழியை மேற்கொண்டார். 'முன்புள்ளவற்றை' என்றதால் இந்தப் பிறவியில் செய்யப்படாமல் பழைய பிறவிகளில் செய்யப்பெற்றனவாகிய சஞ்சித பிராரத்துவ வினைகளைக் குறித்தாராயிற்று. அவற்றை முழுவதும் அழிப்பான்வேண்டி உட்புகுந்தான். அவ்வாறு அவன் புகுந்ததை அடிகளார் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலின், அன்பு காரணமாக முன்புள்ளவற்றை 'முழுது அழிய உட்புகுந்த' என்றார்.

நான்காம் பாடலின் (562) முதலிரண்டு அடிகளில் மனித சமுதாயத்தை இரண்டு தொகுப்பினுள் அடக்கிவிடுகிறார் அடிகளார். முதலாவது தொகுப்பினர் தமக்கென்று ஒரு குறிக்கோள், வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய வழி, சத்துவ குண ஈடுபாடு ஆகிய எதுவுமின்றிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இருப்பவர்கள்.

பெரும்பாலோர் இத்தொகுப்பினுள் அடங்குவர். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற முறையில் அவ்வப்பொழுது கிடைக்கும் அற்ப சந்தோஷங்களுக்காக வாழ்க்கையைச் செலவிடுபவர்கள் இவர்கள். எவ்விதக் குறிக்கோளும் இல்லாமல் அந்தந்த விநாடிக்குரிய வாழ்க்கையை மேற்கொள்ளும் இவர்களைத்தான் 'குறியிலாக் குழாங்கள்' என்கிறார் அடிகளார்.

ஏதேனும் ஒரு குறிக்கோளை வாழ்க்கையில் மேற்கொண்டால்தான் அதற்குரிய வழியை ஆராய்ந்து அவ்வழியில் செல்லுதலை மேற்கொள்ள முடியும். இந்த நெறி அந்தக் குறிக்கோளை அடையப் பெரிதும் உதவும்.

குறி, நெறி என்ற இரண்டும் இருந்தாலும், அவை எவ்வளவு உயர்ந்திருந்தாலும்- அந்த நெறியிற் சென்று குறிக்கோளை அடைய வேண்டியவர் தாமத குணத்தராய் இருந்துவிட்டால் குறியும் நெறியும் பயனற்றுப் போகும். எனவே, குணமும் சிறப்புடையதாக அமைந்தாலன்றிக் குறியும் நெறியும் இருந்து பயனில்லை. ஆகவேதான், இந்த மூன்றையும் ஒன்றாக நிறுத்தி இவை மூன்றும் இல்லாத கூட்டத்தாரிடமிருந்து பிரிந்து நிற்கின்றனர் மற்றொரு சாரார். இவ்வாறு பிரிந்து நிற்பவர்களும் முதற் கூட்டத்தாரைப்போல மனிதர்களே ஆயினும், வடிவால் அவர்களை ஒப்பாரேனும், இவர்கள் முற்றிலும் தனியானவர்கள்.

முதற் கூட்டத்தாரிடம் இல்லாத மூன்றும் இரண்டாவது தொகுப்பினரிடம் நிறைந்துள்ளன. இப்படிப் பட்டவரிடையே இருப்பதையே இறைவன் விரும்புகிறான். அவர்களைவிட்டு அவன் பிரிவதே இல்லை என்பதைப் 'பிறிவு அரிய பெற்றியன்' என்ற தொடரால் குறிப்பிடுகின்றார்.

குறிக்கோள் முதலிய மூன்றைச் சொல்லி- இவற்றை உடையவர், இல்லாதவர் என்ற வேறுபாட்டையும் சொல்லி- இவற்றை உடையார் பக்கமே இறைவன் பிரியாமல் இருப்பான் என்று அடிகளார் கூறுகிறார். இந்த இரண்டு கூட்டத்தாரையும் எப்படி இனங்கண்டு கொள்வது? புறத்தோற்றத்தில் எவ்வித வேறுபாடும் இல்லாத இந்த இரண்டு கூட்டத்தாரையும் பிரித்துவைப்பது அவர்களுடைய மனநிலைதான். அதனையே அடிகளார் 'பிறியும் மனத்தார்' என்ற தொடரால் எடுத்துக் காட்டுகிறார். இவ்வாறு கூறுவதன் நோக்கமென்ன?

குறிக்கோள் முதலியவற்றை உடையவர்கள் ஏனையோரிடமிருந்து பிரிந்து காடு முதலியவற்றிற் சென்று தனித்து வாழ்பவர்களா என்றால், இல்லை என்பதே விடையாகும். ஓர் ஊர் என்று எடுத்துக்கொண்டால் அந்த ஊரில் மக்கள் நிறைந்து வாழ்கிறார்கள். அவர்களிடையே மேலே கூறிய இரு திறத்தாரும் உண்டு. குறிக்கோள் முதலியவற்றை உடையவர்கள், அது இல்லாதவர்களை விட்டுப் பிரிந்து சென்று தனியே வாழ்வதில்லை. அப்படியானால் இவர்களுடைய வேறுபாடு எங்கே தோன்றுகிறது?

ஊர், வீடு என்ற முறையில் இரு திறத்தாரும் ஒன்றாயிருப்பினும், இரண்டாவது வகையினர் முதல் வகையினர் மனநிலையிலிருந்து பிரியும் மனத்தராய் உள்ளனர். முற்றிலும் வேறுபட்ட மனநிலையுடையவர்கள் எப்படி ஒன்றாக இருக்க முடிகிறது? தாமரை இலையும்,

தண்ணீரும் ஒன்றாகத்தானே உள்ளன! அந்த இலையில் தண்ணீர் என்றேனும் ஒட்டுவதுண்டா? அதுபோலத்தான் இவ்விரு திறத்தாரும். ஒரே வீட்டில் ஒன்றாயிருப்பினும் மனத்தால் வேறுபட்டவர்கள்.

வியாபாரத்தில் பெரும்பொருள் ஈட்டவேண்டும் என்ற ஓர் எண்ணம்தவிர வேறு எதுவும் இல்லாதவன் பரமதத்தன். அவன் மனைவியாகிய புனிதவதியார் குறி, நெறி, குணம் ஆகிய மூன்றும் உடையவர். என்றாலும், முற்றிலும் மனத்தால் மாறுபட்ட இவ்விருவரும் பல்லாண்டுகள் குடும்பம் நடத்தவில்லையா? இரண்டாவது பிரிவைச் சேர்ந்த அம்மையாரிடம் 'பிறிவரிய பெற்றிய'னாக இறைவன் இருக்கவில்லையா? இதனையே அடிகளார் இப்பாடலில் குறிப்பிடுகின்றார்.

565 ஆம் பாடலில் வியப்பான செய்தியொன்றை அடிகளார் பேசுகின்றார். ஒரே திருவடி இருவருடைய தலைமேலும் பட்டது. என்ன வியப்பு! இரண்டு மாறுபட்ட செயல்களைச் செய்தது. இராவணன் கயிலையைத் தூக்கியபொழுது, இறைவன் தன் திருவடியில் ஒரு பகுதியாகிய கட்டை விரலை அழுத்தினான். இராவணன் தோள் நெரிந்தது. அதே இறைவன் திருப்பெருந்துறையில் திருவாதவூரர் தலையில் அதே கட்டைவிரலை வைத்தான். அழுத்தக்கூட இல்லை. இங்கு அடிகளாரின் பசு பாசங்கள் நெரிந்தன.

பசுபாசத்தை நெரிக்கும் ஆற்றல் திருவடிக்கு இருந்திருந்தும் அது ஏன் இராவணனுக்கு அவ்வாறு செய்யவில்லை? எல்லையற்ற ஆணவம் இராவணன் தலைகளில் நிறைந்திருந்தமையின் இறைவன் திருவடி நேரிடையாக அவன் தலையில் படும் பேறு கிட்டவில்லை. அடிகளாரைப் பொறுத்தமட்டில் திருவடி சம்பந்தம் நேரிடையாகக் கிடைத்தது. எனவே, இவர் பசு பாசம் ஒழிந்தது.

தில்லையைப் பற்றி இதுவரை எத்தனையோ பாடல்கள் பாடியிருப்பினும் கூத்தனின் சிலம்பொலிபற்றி முதன்முதலாக இப்பாடலில்தான் (565) குறிப்பிடுகின்றார். அதிர்தல் என்பது அதிர்ந்து ஒலியெழுப்புதல் என்ற பொருளைத் தரும். 'அதிர்க்கும்' என்றதால் சிலம்பொலியை எழுப்பி, ஒரு சிலரைக் கேட்கவைக்கும் 'தில்லை ஆண்டான்' என்ற பொருளைத் தந்து நிற்கிறது. சிலம்பு எந்நேரமும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதில் தோன்றுகின்ற ஒலி இந்த உலகத்தில் ஒலியை நாம் அளவிடும் டெசிபல் (decibel) என்ற கணக்கிற்குள் வராதது. எனவே, நாம் அனைவரும் அதனைக் கேட்டல் இயலாத காரியம்.

ஐயனின் சிலம்பொலியைக் கேட்கவேண்டுமேயானால் இந்தப் பருவுடலின் கருவி கரணங்கள் மாறி, பதி கரணங்களாக ஆக வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சிலம்பொலியைக் கேட்கமுடியும்.

'அதிர்க்கும் குலாத்தில்லை' என்று அடிகளார் கூறுவதால் இந்தச் சிலம்பொலியை அவர் கேட்டார் என்று தெரிகிறது. அப்படியானால் இந்தப் பருவுடலுக்குரிய பசு கரணங்களோடு இருக்கையில் கேட்டாரா? இல்லை, இக்கருவி கரணங்கள் பதி கரணங்களாக மாறியபின் கேட்டாரா- என்ற வினாவை எழுப்புவதற்கு நமக்கு உரிமையில்லை என்பது தெளிவு. ஆனாலும். கருணை வள்ளலாகிய அடிகளார் நம்முடைய மனத்தில் தோன்றக்கூடிய இந்த ஐயத்தைத் தாமே சிந்தித்து அதற்கு விடை கூறுவார்போலப் பாடலின் மூன்றாவது அடியில் 'கதிக்கும் பசுபாசம் ஒன்றும் இலோம்' ஆதலால் அதிர்க்கும் சிலம்பொலியைக் கேட்டோம் என்று பாடுகிறார்.

கதிக்கும் பசு பாசத்தைப் போக்கியவர்கள் அரசராக இருப்பினும் ஆண்டியாக இருப்பினும் 'அதிர்க்கும்'

சிலம்பொலியைக் கேட்கமுடியும் என்பதற்குச் சான்று அரசரான சேரமான் பெருமாளும் ஆண்டியான மணிவாசகரும் ஆவர். இருவரும் இந்தப் பூதவுடலுடன் இருக்கும்போதே தம்முடைய பசு கரணங்கள் பதிகரணங்களாக மாற்றப் பெற்றவர்கள்.

566ஆம் பாடலில் ஐவரை அதாவது ஐந்து பொறிகளைக் 'கண்டகர்' (கொடியவர்) என்று கூறுவதுடன், அவர்கள் செயல்களை 'வல் அரட்டை' (கொடுமை விளைக்கும் குறும்பு) என்றும் கூறுகிறார். பொறிகளின் உண்மையான சொரூபம் இது என்றால், இவர்களை எவ்வாறு அடக்குவது? ஒவ்வொன்றாக அடக்கத் தொடங்கினால் ஒருவருடைய வாழ்நாள் முழுவதுமே அதற்குச் செலவாகிவிடும். மேலும் எவ்வளவு மன உறுதி இருப்பினும் ஐந்தையும் அடக்குதல் இயலாத காரியம் என்பதை இளவயதினராகிய நம்மாழ்வார், காழிப்பிள்ளையார் என்பவர்கள் கூற்றாலும், நாவரசர், அடிகளார் போன்றவர்கள் கூற்றாலும் நன்கு அறியலாம்.

நம்முடைய ஆற்றலால் இவற்றை அடக்க முடியாது என்றால், வேறு வழிதான் என்ன? அந்த வழியை அடிகளார் இதோ குறிக்கின்றார். 'திருவடி என்தலைமேல் நட்டமையால், கண்டகர்தம் வல் அரட்டை அடக்கும்' என்ற தொடரால் இறை அருள் கிட்டாதபோது புலனடக்கம் என்பது கற்பனையே என்பதை எடுத்துக் கூறுகிறார்.

567 ஆம் பாடலில் 'செய்' என்ற நிலம் உழவு (விளாவி) செய்தபிறகும், பயனற்றுப் பாழ்நிலமாகவே இருந்துவிட்டதைக் குறிக்கின்றார். உழவு செய்தபிறகும் பாழ்நிலமாகவே இருந்தது என்றால், எவ்வளவு பாடுபட்டு அந்த நிலத்தில் விதைத்தாலும் எவ்விதப் பயனையும் தராததுபோலத் தம்முடைய வாழ்க்கை அமைந்துவிட்டதைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

ஆன்ம முன்னேற்றம் இல்லாமல் அமைச்சராகமட்டும் இருந்தபோது ஏனையோர் இவரைப் போற்றியதுபோல, அந்தப் பாழ்நிலத்தையும் செய் என்ற பெயரால் அழைத்தனர். ஆனால், அமைச்சராக இருந்த இவர் ஆன்ம முன்னேற்றம் பெறும் வாய்ப்பைப் பெற இல்லை. பாழாய்ப்போன அந்த நிலத்தில் எவ்வளவுதான் உழவு செய்து பயிர் வைத்தாலும் எவ்விதப் பயனும் கிட்டாதது போலத் திருவாதவூரர் வாழ்க்கையும் எவ்விதப் பயனையும் விளைக்காமல் திருப்பெருந்துறை நிகழ்ச்சிவரை இருந்துவிட்டது.

இந்தப் பாழ் நிலைத்திற்குச் சொந்தக்காரன் ஒருநாள் நடந்து செல்கையில் எதிர்பாராமல் ஒரு பொற்கிழி (கிழியீடு) ஒன்று வழியிற் கிடைத்து, அவனுடைய வாழ்க்கையையே மாற்றிவிட்டது.

அந்த நிலச் சொந்தக்காரனைப் போன்ற திருவாதவூரர், குதிரை வாங்கவேண்டு மென்ற எண்ணத்துடன் தொண்டிக்குச் செல்லும் வழியில், திருப்பெருந்துறையில் பொற்கிழி போன்ற குருநாதரை எதிர்பாராமல் சந்தித்தார். பொற்கிழி விவசாயியின் வாழ்க்கையை மாற்றிற்று; பொற்கிழி போன்ற குருநாதர் வாதவூரரின் வாழ்க்கையையே மாற்றிவிட்டார்.

## அற்புதப்பத்து

எட்டுப் பாடல்களில் 'அற்புதம் அறியேனே' என்றும் இரண்டு பாடல்களில் 'அற்புதம் விளம்பேனே' என்றும் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. சில நிகழ்ச்சிகள் நடைபெறும்பொழுது அதனுடைய சிறப்பும் தனித்தன்மையும் ஓரளவு அறியப்படுமே தவிர அதன் முழுத்தன்மையும் அந்த நேரத்தில் நம்மால் அறியப் படுவதில்லை. குருநாதர் வடிவும், அந்த வடிவில் தோன்றிமறைந்த பிறவடிவங்களும் மனிதக் காட்சியில்

நடக்க முடியாதவை, மனிதர்களுக்குக் கிட்டாதவை என்று அடிகளார் அந்த நேரத்தில் நினைக்கவில்லைபோலும். மிகச் சிறப்புடையதாயினும், அது ஏதோ நடைபெற வேண்டிய ஒன்று என்று போகிறபோக்கில் அதை ஏற்றுக் கொண்டார்போலும். அவ்வாறு நினைத்தது பெருந்தவறு என்ற நினைவு பின் நாட்களில் அவரை ஆட்டிப்படைத்ததனால்தான்போலும் 'வந்தெனைப் பணிகொண்டபின் மழக் கையிலங்கு பொற்கிண்ணம் என்றலால் அரியை என்றுனைக் கருதுகின்றிலேன்' (96) என்று பாட நேர்ந்தது.

குருநாதர் முதலிய காட்சிகள் எல்லாம் மறைந்து, தாம் தமியராய் விடப்பட்ட நிலையில் எல்லையற்ற துயரத்திற்குள்ளாகி, நடந்தவற்றை பின்னோக்கிச் சிந்திக்கிறார். அப்பொழுதுதான் எல்லாம் கடந்த ஒருவன் மெய்யனாய் வெளிகாட்டி நின்றது ஒரு மாபெரும் அற்புதம் என்ற நினைவு மெள்ள மெள்ளப் புலர்கின்றது. ஆனால் இந்த அற்புதம் இப்பொழுது நடைபெறவில்லை; என்றோ நடந்தது. 'அன்று, அது நடைபெறமுடியாத அற்புதம் என்பதை அறியாமல் இருந்துவிட்டேனே' என்ற பச்சாதாப உணர்ச்சி இப்பொழுது ஏற்படுகிறது. அதனால்தான், 'இது அற்புதம் என்பதை அன்று அறியாமல் போய்விட்டேனே' என்று பாடுகிறார்.

பதிகத்தின் முதல் இரண்டு பாடல்கள் 'அற்புதம் விளம்பேனே' என்று முடிந்து, ஏனைய பாடல்கள் 'அற்புதம் அறியேனே' என்று முடிவதிலும் ஓர் அற்புதம் அமைந்துள்ளது. ஒரு பொருளைக் கண்டமாத்திரத்தில் அதுபற்றி முழுவதும் அறியாமல்கூட, அதனை வியந்து பேசலாம். அவ்வாறு பேசுதல் அக்காட்சி நடைபெறும் பொழுதே நடைபெறக்கூடிய ஒன்று. எதற்கும் வெளிப்படாமல், உருவம் வடிவு என்பவற்றைக் கடந்து நிற்கும் ஒரு பொருள், மெய்யனாய் நின்றது.

எப்படியெல்லாம் நின்றது என்பதை இரண்டு பாடல்களில் பேசுகின்றார். நாம, ரூபம் கடந்த பொருள் மெய்யனாய் வந்து நின்றது; திருவருள் தந்தது. அந்தத் திருவருளுக்கு அடையாளமான பொன்னடியினைக் கண்ட அந்தக் கணத்திலேயே இவையெல்லாம் மறைந்து, பரவெளிதரிசனம் (வெளிகாட்டி) தந்தது. ஒரே விநாடியில் பருவடிவுடனும், பரவெளியாகவும் காட்சி தந்த அந்த அற்புதத்தை அன்றே உலகறிய எடுத்து விளம்பாமல் போய் விட்டேனே என்ற முறையில் முதல் இரண்டு பாடல்கள் தோன்றின. பின்னர், பேசுதல் பற்றிய நினைவு முற்றிலும் அடங்கிவிடுகின்றது. வெளிப்பட்டு நின்ற பொருளின் பெருமையை அறியமுற்படவில்லையே என்ற பச்சாதாப உணர்ச்சியில் எஞ்சிய பாடல்கள் 'அறியேனே' என்று முடிகின்றன.

விளம்புதல் அடங்கிய நேரத்தில் அறிதல் தொழிதல் தொடங்குகிறது.

'நாட்கள் செல்லச் செல்ல வெளிகாட்டி நின்று அடியனாய் என்னை ஆட்கொண்டதை எவ்வளவோ சிந்தித்துப் பார்க்கிறேன். என் தகுதி என்ன? எனக்கு ஏன் இது நிகழ்ந்தது என்றெல்லாம் சிந்திக்கிறேன். நடந்தது அற்புதம் என்ற அளவில்தான் தெரிகிறதே தவிர, இதன் அடிப்படைத் தத்துவம் என்ன, அது ஏன் எனக்கு நடைபெறவேண்டும் என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கியபொழுதுதான், அற்புதம் நடந்த அன்றுமட்டுமல்ல, இன்றும்கூட, இந்த நிகழ்ச்சியின் அடிப்படையை என்னால் அறியமுடியவில்லை' என்கிறார். இதனையே 'அற்புதம் அறியேனே' என்ற தொடரில் குறிப்பிடுகின்றார். 'அறியேனே' என்பதில் உள்ள ஏகாரம், இன்றுகூடத் தெரியவில்லையே என் செய்வேன் என்ற பச்சாதாப உணர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஒரு நாட்டின் அமைச்சரை ஒரே விநாடியில் அடியாரிடை அமரச்செய்தது அதிசயம். ஏன்? இங்கு

அடியார்கள் என்று கூறப்பெற்றவர்கள் யார்? பிறவா நிலையை அடைந்தவர்கள் இவர்கள். எத்தனை பிறப்புக்களில் என்ன தவம் செய்தார்களோ, தெரியாது. இப்பொழுது இறைவன் திருவடியை அண்டி அதில் லயித்திருப்பவர்கள் இவர்கள். இந்த அடியார்களைக் காண்கின்ற நேரத்தில் இவர்களுடைய வாழ்க்கை முறைக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தவர் அமைச்சர். உலக பந்த பாசங்கள், அதிகாரம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றோடு வாழ்ந்திருந்த ஒருவர் இவற்றையெல்லாம் விட்டொழித்து அடியார்கள் கூட்டத்தில் எவ்வாறு அமரமுடிந்தது?

இந்த அடியார் கூட்டத்திடை அமரக்கூடிய தகுதி அல்லது வாய்ப்பு ஏதேனும் தமக்கு இருந்ததா என்ற வினாவை அடிகளாரே எழுப்பிக்கொண்டார்போலும். தருக்க ரீதியாக இந்தத் திடீர் மாற்றத்திற்கு விடைகூற முடியாமையின் இந்நிகழ்ச்சியை அற்புதம் என்று பாடிவிட்டார்.

அடியரிற் கூட்டிய குருநாதர் அத்தோடு விடவில்லை. பிறவி நீங்கிய அடியார்மட்டுமே சதாகாலமும் கண்டு தரிசனம் பண்ணக் கூடிய அந்தத் திருவடிக்காட்சியைத் தமக்கும் தந்தார். மனித உடம்போடு அமைச்சர் பதவியில் சுற்றித்திரியும் தமக்கு எவ்வாறு, ஏன் அதனைத் தந்தார் என்ற வினாவை எழுப்பிக்கொண்டார் அடிகளார். அவருக்கு விடை ஒன்றும் கிடைக்கவில்லை. தருக்க ரீதியாக விடை காண முடியாதபோது இதனை அற்புதம் என்று கூறுகின்றார்.

ஒருவருக்கு ஒரு பொருள் கிடைக்கவேண்டுமானால் அதனைப் பெறக்கூடிய தகுதி அவர்மாட்டு ஓரளவாவது இருத்தல் வேண்டும். அதனைப் பெறுவதற்குரிய முயற்சியில் அவர் ஈடுபட்டிருத்தல் வேண்டும். சுருங்கக்கூறினால், தகுதிமட்டும் இருந்து முயற்சி இன்றேல் பயன் விளையாது.

எவ்வளவு முயற்சி செய்தும் பொருளைப் பெறுவதற்குரிய தகுதி இல்லையென்றாலும் பயன் விளையாது.

தகுதியும் முயற்சியும் இல்லாத தமக்குத் திருவடிக் காட்சி கிடைத்தது அற்புதம் என்று அடிகளார் கூறுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

இவை இரண்டுமில்லாத அவருக்கு அற்புதம் என்று கூறப்பெற்ற வகையில் என்னென்ன கிடைத்தன? நாம, ரூபம் கடந்த ஒருவன்- மனிதருடைய அறிவு கற்பனை என்பவற்றைக் கடந்துநிற்கும் ஒருவன்- தகுதி முயற்சி என்ற இரண்டுமில்லாத திருவாதவூரர் என்ற மனிதருக்காக, மானிட வடிவு தாங்கி, வழியில் அமர்ந்து, அவரை வலிய ஆட்கொண்டான்.

அமைச்சர் கோலத்தில் வருகின்ற ஒருவர் குருநாதர் வடிவிலிருந்த ஒருவரைக் கண்டவுடன் துறவு பூண்ட ஒரு மனிதர் என்றுதானே நினைத்திருக்க வேண்டும்! அவ்வாறில்லாமல் ‘புவனியில் சேவடி தீண்டினன், சிவன் என யானும் தேறினன்’ (3-61,62) என்று சொல்ல எவ்வாறு துணிவு பிறந்தது? மிகச் சாதாரணமான தேவர்கள்கூடப் புவனியில் சேவடி தீண்டமாட்டார்கள் என்பது இந்நாட்டார் நம்பிக்கை. அப்படியிருக்க, புவனியில் சேவடி தீண்டிக் குருநாதர் வடிவுடன் அமர்ந்திருந்த ஒரு மனிதரை அமைச்சர் கோலத்திலிருந்த ஒருவர் சிவன் என்று தேறினார் என்றால் இது எவ்வாறு முடிந்தது?

இதனையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் மூன்று அற்புதங்கள் நிகழ்ந்ததை அறிய முடிகிறது.

சிவனாக இருந்தும் புவனியில் சேவடி தீண்டி அமர்ந்திருந்தது முதலாவது அற்புதம்

புவனியில் சேவடி தீண்டி அமர்ந்திருந்த ஒரு மனிதரை அவர் சேவடியைக் கொண்டே சிவன் என அடிகளார் தேறினது இரண்டாவது அற்புதம்.

மானுட வடிவில் இருந்த ஒருவரை ஒரே வினாடியில் சிவன் என அடிகளார் தேறுமாறு செய்தது அமர்ந்திருந்தவரின் சேவடியேயாகும். அந்த வினாடியிலேயே திருவாதவூராின் வாழ்க்கைப் பயணம் முடிந்து மணிவாசகரின் பயணம் தொடங்கிவிட்டது. அந்தப் புதுப்பயணம் தொடங்கக் காரணமாய் இருந்த சேவடியை இறுதிவரை அடிகளார் மறந்தாரில்லை. நூற்றுக்கணக்கான பாடல்களில் சேவடிப் பெருமையை அடிகளார் பாடக் காரணமாக இருந்தது இந்த முதற்காட்சியின் விளைவேயாகும்.

குருநாதராய் அமர்ந்திருந்தவர் தாம் மனிதரல்லர் என்பதை அறிவித்ததுடன், தாம் இன்னார் என்பதையும் மெய்யனாய் வெளிப்பட்டு அமைச்சர் உணருமாறு செய்தது மூன்றாவது அற்புதம்.

அந்தணக் கோலம், துறவுக்கோலம் எதிரே அடியார் கூட்டம், இவற்றிடைத் தம் புறக்கண்களையும் கவனத்தையும், அறிவையும், உணர்வையும்கூட ஒருமுகமாகச் செலுத்தியிருந்தார் அடிகளார். அடியார் கூட்டத்திடை அமர்ந்திருந்த அடிகளாருக்கு, குருநாதர் மறைந்து உமையொருபாகனும், அவனும் மறைந்து தில்லைக் கூத்தனும் தொடர்ந்து காட்சியளித்தனரே! இத்தனை காட்சிகளிலும் ஈடுபட்டிருந்த அவருக்கு இறுதியாக நெஞ்சில் நிலைத்திருந்த காட்சி எது தெரியுமா? குருநாதரோ, உமையொரு பாகனோ கூத்தனோ அல்லர்; அதற்குப் பதிலாகக் குருநாதரின் திருவடிக்காட்சி மட்டுமே நிலைத்துவிட்டது.

இதிலும் ஒரு வியப்பு உண்டு. திருவாதவூரர் என்ற அமைச்சருக்கு முதலில் கிடைத்த காட்சி எது? புவனியில் தீண்டிய சேவடிதானே? இறுதியாக எல்லாக் காட்சிகளும் முடிந்த பிறகு நெஞ்சில் நிலைபெற்றிருந்த காட்சி எது? அதுவும் திருவடிக்காட்சிதான் என்று சொல்லத் தேவையில்லை.

*இந்த அடிப்படையில்தான் அற்புதப் பத்தில் (571, 574, 576) ஆகிய மூன்று பாடல்கள் தவிர ஏனைய ஏழு பாடல்களிலும் திருவடிக்காட்சி இடம்பெறுகிறது. அதனை அற்புதம் என்றும் அடிகளார் பேசுகிறார்.*

*அழகும் பொலிவும் துறவுக்கோலமும் உடைய ஒருவரை, ஒருவர் கண்டுவிட்டால் மனத்தில் எது நிற்கும்? அந்தத் துறவியின் முகமண்டலம்தானே நிற்கும்!*

*எதிரேயுள்ளவரை நன்றாக முழுவதுமாகக் கண்டார் அடிகளார். அப்படிக் காணுகின்ற பொழுதே எதிரேயுள்ளவர் தாம் யாரென்பதை அடிகளாருக்கு உணர்த்திவிட்டார் என்பதை 'மெய்யனாய் வெளிகாட்டி முன்நின்றதோர் அற்புதம்' (569) என்று அடிகளாரே பாடுகின்றார். இதற்கு அடுத்த பாடலிலும் 'வேந்தனாய் வெளியே என்முன் நின்றதோர் அற்புதம்' என்றும் அடிகளாரே பாடியுள்ளார்.*

*முழுவதுமாகத் தம்மை வெளிப்படுத்திக்கொண்டு எதிரே நின்ற ஒருவரை 'மெய்யன்' என்றும் 'வேந்தன்' என்றும் அடிகளாரே கூறியுள்ளார். அத்தோடு அவர் வேந்தனாய் வெளியே என்முன் நின்றார் என்றும் இஃது ஓர் அற்புதம் என்றும் அடிகளாரே கூறியுள்ளார்.*

*இந்த அற்புதத்தின் முழுத்தன்மை என்ன? எதிரே நின்றவர் முழு வடிவுடன் அடிகளாரின் புறக்கண்கள் காணக்கூடிய வகையில் வெளிப்பட்டு நின்றதுதான் இந்த அற்புதம். இதைக் கூறும்போதுகூடத் தம்மைக் கவர்ந்ததை மிக நுணுக்கமாக அடிகளார் வெளிப்படுத்துகின்றார்.*

*'மெய்யனாய் வெளி காட்டி முன் நின்றார்' (569) என்றும், 'வேந்தனாய் வெளியே என்முன்நின்றார்' (570) என்றும் கூறினால் பொருளென்ன? வெளிகாட்டி என்பதற்குப் பரவெளி தரிசனம் என்று பொருள் கொண்டாலும் எதிரேயுள்ளவர் தம் முழுவடிவையும் காட்டினார் என்பதுதானே பொருள்!*

அந்த முழுவடிவைப்பற்றிக் கூறிக்கொண்டுவரும் அடிகளார், 'பொன்னடி இணைகாட்டி.....' 'மெய்யனாய் வெளி காட்டி நின்றார்' என்றல்லவா பேசுகிறார்! அடுத்த பாடலிலும் 'பொற்கழல் இணைகாட்டி வேந்தனாய் வெளியே என்முன் நின்றான்' என்றல்லவா பேசுகிறார்.

எதிரே நிற்கும் ஒருவரைப்பற்றிப் பாடும்போது முதன்முதலில் 'பொன்னடி காட்டி' என்றும் 'பொற்கழல் இணைகாட்டி' என்றும் பாடுவது வியப்பல்லவா? எதிரே உள்ளவரின் முழுவடிவத்தில் இவர் ஈடுபட்ட பகுதி திருவடி என்றல்லவா தெரிகிறது!

நாம் கூறும் இந்த முடிபு உண்மைதான் என்பதை இப்பதிகத்தில் வரும் பிற ஐந்து பாடல்கள் நிரூபிக்கின்றன. 'திருந்து சேவடி' *(572)* 'மென்மலர்க்கழல்' *(573)*, 'மலரடி இணை' *(575)* 'விரைமலர்க் கழல்' *(577)* 'இணைமலர்க் கழல்' *(578)* எனவரும் ஐந்து தொடர்களும் மேலே கூறிய கருத்தை வலுவடையச் செய்கின்றன.

அழகிய திருமேனிகொண்டு மானுட வடிவுடன் குருநாதர் எதிரே வீற்றிருந்தார். அப்படி இருந்துங்கூட அத்திருவடி அடிகளாரின் முழு ஈடுபாட்டையும் தன்பால் ஈர்த்துக் கொண்டது அற்புதம்.

இவ்வாறு வெளிப்படையாகக் கூறுவதன்றிக் குறிப்பாகவும் ஓர் அற்புதத்தை வெளியிடுகின்றார் அடிகளார்.

வீடுபேறு அடைய வேண்டுமானால் பெண்ணைத் துறந்து, காடுகள் சென்று, கனசடை வைத்துத் தவம் புரிவது ஒன்றே வழி என்று பல சமயத்தவரும் கூறியுள்ளனர். ஆனால், தமிழர்களின் தொன்மைச் சமயங்களாகிய சைவம், வைணம் இரண்டும் இக்கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. இல்லறத்தில் வாழ்ந்து உலக இன்பங்களை அனுபவித்துக்கொண்டேகூட உய்கதி அடையமுடியும் என்று கருதினர்; கூறினர்.

இதனை ஏற்றுக்கொண்டாற்கூட ஒரு பிரச்சினை தொன்றுதொட்டே எல்லா நாடுகளிலும், இருந்துவருதலைக் காணலாம். அதுவே பல பெண்கள் தொடர்பாகும். பணம்,. பதவி என்ற இரண்டும் இருந்துவிட்டால் கேட்கவே வேண்டியதில்லை. பாலுணர்ச்சியின் வெளிப்பாடாகிய இதனைக் களைவது கடினமாகும். இறையருள் என்ற ஒன்று இருந்தாலொழிய இதனை வென்று மீள்வது ஏறத்தாழ இயலாத காரியம்.

மூவர் தேவாரங்களில் மகளிர் தொடர்பினால் ஏற்பட்ட குறைபாடு அதிகம் பேசப்பெறவில்லை. காரணம், மூவருள் இருவர் மேட்டுக்குடி மக்களாக இருந்ததாகத் தெரியவில்லை. இந்த மூவருள் நாவரசர்மட்டுமே மேட்டுக்குடியைச் சேர்ந்தவராகவும் பெரும்பொருள் படைத்தவராக இருந்ததாகவும் பெரிய புராணம் பேசுகிறது. பெருஞ்செல்வத்தோடு வாழத் தொடங்கிய நாவரசருக்குத் தாய் தந்தையர் கட்டுப்பாடும் மிக இளமையிலேயே போய்விட்டது. இந்த நிலையில் அவர் தூய்மையாக வாழ்ந்தார் என்பது குறிப்பிடவேண்டிய சிறப்பாகும். இளமைக் காலத்தில் புறத்துறவைப் பெரிதுபடுத்தும் சமண சமயத்தில் இருந்துவிட்டார். ஆதலின், மகளிர் தொடர்புபற்றிய பிரச்சினை அவர் வாழ்க்கையில் எழவில்லை. சமணத்திலிருந்து மீண்டவுடன் இறையருளைப் பெற்றுவிட்டார் ஆதலின் பாலுணர்வினால் எந்த விளைவும் ஏற்படவில்லை.

அடிகளாரைப் பொறுத்தமட்டில் மேட்டுக்குடிகளில் ஒன்றாகிய ஆமாத்திய குலத்தில் பிறப்பு, பெருங்கல்வி பெற்ற சிறப்பு, அதனைத் தொடர்ந்துவந்த பதவிச் சிறப்பு ஆகிய அனைத்தும் இளமையிலேயே இருந்துவிட்டமையின் மகளிர்தொடர்பு சற்று அதிகமாகவே இருந்திருக்க வாய்ப்பு உண்டு. அதில் அவ்வளவு ஈடுபட்டிருந்த ஒருவர் திடீரென்று ஒரே நாளில் மணிவாசகராக மாறியது ஓர் அற்புதம்.

*குணங்குறி கடந்த ஒருவன், வடிவு தாங்கி இவருக்கு நேரே காட்சி தந்தது ஓர் அற்புதம். குருநாதரின் திருவடிகளில் அடிகளார் எல்லையற்ற ஈடுபாடு கொண்டது ஓர் அற்புதம்.*

*இவை தவிர மேலும் ஓர் அற்புதத்தையும் அற்புதப் பத்தின் எட்டுப் பாடல்களில் அடிகளார் பாடுகிறார்.*

தையலார் எனும் சுழித்தலைப் பட்டு நான்
தலைதடு மாறாமே (569)

சாந்தம் ஆர் முலைத் தையல் நல்லாரொடும் தலைதடுமாறு
ஆகி, போந்து யான் துயர் புகாவணம் (570)

கருங்குழலினார் கண்களால் ஏறுண்டு
கலங்கியே கிடப்பேனை (572)

மங்கையர் தம்மோடும் கூடி அங்குள
குணங்களால் ஏறுண்டு குலாவியே திரிவேனை (573)

மங்கையர் தம்மோடும் பிணைந்து வாய் இதழ்ப்
பெருவெள்ளத்து அழுந்தி நான் பித்தனாய்த் திரிவேனை
(574)

தடமுலையார் தங்கள் மைப்பு உலாம் கண்ணால்
ஏறுண்டு கிடப்பேனை (575)

இச்சையாயின ஏழையார்க்கே செய்து அங்கு
இணங்கியே திரிவேனை (577)

செறிகுழலார் செய்யும் கிறியும் கீழ்மையும்
கெண்டை அம்கண்களும் உன்னியே கிடப்பேனை (578)

*என்பவற்றால், இத்தனை இருந்தும் அவன் அருள்பாலித்தான் என்பதை வலியுறுத்துகிறார்.*

*அற்புதப் பத்து என்று பெயரிடக்கூடிய முறையில் தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களைப் பட்டியலிட்டுக் கூறும் அடிகளார் பூரண வடிவு*

தரிசனத்தை இரண்டு பாடல்களிலும் (569, 570) திருவடி தரிசனத்தை ஐந்து பாடல்களிலும் (572, 573, 575, 577, 578) கூறியதுடன் தையலார் . மயக்கத்திலிருந்து தம்மை விடுவித்தது அற்புதம் என்ற கருத்துத் தொனிக்கும்படி மேற்காட்டிய எட்டுப்பாடல்களில் கூறுகிறார். புலன் உணர்வில் தோய்ந்து அல்லற்பட்டு, ஆற்றாது, வெளிவரும் வழி தெரியாமல் புலம்பும் மானிட சாதிக்கு நம்பிக்கையூட்டும் ஒரு கலங்கரை விளக்கமாக இப்பத்தைப் பாடியுள்ளார் என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை.

அவன் திருவடிகளில் நம்பிக்கை வைத்து முன்னேற முயன்றால் வெல்லமுடியாத பாலுணர்ச்சியையும் வெல்ல முடியும் என்பதை அறிவுறுத்தவே இந்த அற்புதப் பத்து அமைந்ததோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இவ்வாறு கூறுவதால் மணிவாசகப் பெருமானின் உயர்வுக்குத் தாழ்வு கற்பித்துவிட்டோம் என்று யாரும் நினைக்கவேண்டா. அடிகளார் போன்ற பெருமக்களின் பாடல்கள் தவிர அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும் சில உணர்வுகளுடன் போராடி வெல்வதற்கு அவர்கள் கையாண்ட வழியும் நமக்கு வழிகாட்டிகளாகும் என்று நினைப்பதில் எவ்விதத் தவறும் இல்லை.

இப்பத்தின் முதற்பாடலில் (569) இரண்டு உருவகங்கள் பேசப்பெறுகின்றன. இரண்டு உருவகங்களும் ஆழ்ந்த சிந்தனைக்குப்பின் அடிகளாரால் உருவகிக்கப்பட்டவை யாகும். மண்ணிடை வாழும் உயிர்வாழ்க்கையை 'ஆழி' (கடல்) என்று உருவகிக்கின்றார். கடல் என்பது பரந்தும், விரிந்தும், ஆழ்ந்தும் இருக்கின்ற ஒன்றாகும். கடலில் வீழ்ந்தவர் மடிந்தே தீரவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒரு படகு, ஒரு சுரைக்குடுக்கை, அல்லது ஒரு மரக்கட்டை என்பவற்றுள் ஏதேனுமொன்று கிடைத்துவிட்டால் அமிழ்ந்து போக வேண்டிய அவசிய மில்லை. இவற்றைப் புணை என்று கூறுவர். சாதாரணக்

கடலிலிருந்து மீள இப்புணைகளுள் ஏதேனும் ஒன்றின் துணையிருந்தால் போதுமானது.

பிறவியாகிய கடலிலிருந்து மீள மேலே கூறப்பட்ட புணைகள் எவையும் பயன்படா. பிறவிக் கடலிலிருந்து மீள ஒரே ஒரு புணைதான் உண்டு. அந்தப் புணைக்கு ஐந்தெழுத்து என்ற பெயரும் உண்டு. இதனையே அடிகளார் 'ஐந்தெழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேனை' (31) என்று பாடியுள்ளார்.

பிறவியாகிய கடலிலிருந்து வெளியேறுவதே கடினம் என்றால் அக்கடலினுள் யாரும் அறியாமல் புறத்தே அதிகம் காணப்படாமல் இருக்கும் சுழல்களும் உண்டு என்பதை அறிதல் வேண்டும். கடலிலிருந்து தப்பித்தாலும் சுழலில் மாட்டிக்கொண்டால் வெளியேறுவது மிகமிகக் கடினமாகும். சுழலிலுள்ள ஆபத்து தனித்தன்மை வாய்ந்தது. சுழலில் அகப்பட்டவர்களைக் காப்பாற்றச் செல்பவர்களையும் உள்ளே இழுத்துவிடும் ஆற்றல் வாய்ந்தது இச்சுழலாகும். இந்த அருங்கருத்தையே 'தையலார் எனும் சுழித்தலைப்பட்டு' என்று பாடுகிறார் அடிகளார். இதுவே இரண்டாவது உருவகமாகும்.

சுழித்தலைப்பட்டு என்ற தொடரின் பின்னர் வரும், நான் தலை தடுமாறாமே என்ற சொற்கள் மிக நுண்மையான அனுபவப்பொருளைக் குறிப்பவையாகும். சுழலில் சிக்கியவர்களைக் கண்டவர்களுக்கே இச்சொல்லமைப்பின் அருமைப்பாடு நன்கு விளங்கும். நட்டமாக அதாவது தலைமேலும் கால் கீழுமாகச் சுழலில் சிக்கினாலும், அதில் குதித்தாலும் ஒரே விநாடியில் குதிப்பவரின் தலையைச் சுழற்றி அத்தலை கீழும், கால் மேலுமாகச் செய்துவிடும். இதனையே அடிகளார் 'தலை தடுமாறாமே' என்று குறிக்கிறார்.

மகளிர் வலையில் சிக்கியவர்கள் கதியும் இதுதான் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம். மிக உயர்ந்த

நிலையில் உள்ளவர்கள், பெரும்பதவி வகிப்பவர்கள், பிறரால் மதித்துப் போற்றப்படும் நிலையில் உள்ளவர்கள் என்பவர்கள்கூட மகளிர் சுழலில் அகப்படுவார்களேயானால் தலைதடுமாறிப்போவர் என்பதை இன்றைக்கும் நாம் காண்கிறோம்.

இந்த அருமைப்பாடுகளை உள்ளடக்கி, இதிலிருந்து ஒருவன் மீளவேண்டுமேயானால் இறைவன் திருவருளைப் பெறுவது ஒன்றே வழி என்பதை அனுபவ ஞானியாகிய அடிகளார் 'நான் தலை தடுமாறாமே........ திருவருள் தந்து தன் பொன் அடி இணைகாட்டி (என்) முன்னின்றது ஓர் அற்புதம்' என்று அருளிச்செய்கிறார்.

அடிகளாரின் வாழ்க்கையில் இன்றுநாம் அறிந்து கொள்ள முடியாத சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்குமோ என்று ஐயப்பட அடிகளாரின் பல பாடல்கள் இடந்தருவதை முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். 571ஆம் பாடலில் வரும் 'அடித்துஅடித்து அக்காரம் முன்தீற்றி' என வரும் தொடர் நம் ஐயத்தையும் சிந்தனையையும் தூண்டுவதாக அமைந்துள்ளது. சர்க்கரை கலந்த பண்டத்தை யாரும் விரும்பி உண்பர். குழந்தைகள் முதல் பெரியோர்வரை அனைவரும் செய்யும் செயலாகும் இது. அப்படியிருக்க, அடித்து அடித்து அக்காரம் தீற்றவேண்டிய தேவை என்ன? இந்த உவமையில் அக்காரம் என்பது, திருப்பெருந்துறையில் அடிகளாருக்குக் கிடைத்த இறையனுபவமே ஆகும்.

இந்த உவமையை முழுவதுமாய் ஏற்றுக் கொள்வதானால் கிடைத்த இறையனுபவமாகிய அக்காரத்தை அடிகளார் கைவிட்டுவிட்டார் என்று சொல்லவேண்டி உள்ளது. இந்த அனுபவம் கைவிட்டுப் போனதும் அடிக்கடி தோன்றி மறைந்ததும் உண்மைதான் என்பதை முன்னரே பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளோம்.

இது கைநழுவிப்போகாமல் இருந்திருந்தால், அடிகளாரின் வாழ்க்கையில் பேரின்பம் இடைவிடாது நிலைபெற்றிருந்திருக்கும்; அவர் அதில் தோய்ந்து துளையமாடியிருப்பார். அவ்வாறு நடைபெற்றிருந்தால் அடிகளார் அதனால் பயன் பெற்றிருப்பாரே தவிர, உலகத்தார்க்கு எவ்விதப் பயனும் விளைந்திராது. அவர் மூலம் திருவாசகம் என்னும் பரா அமுதைத் தோற்றுவிக்க வேண்டித் தில்லைக்கூத்தனே இந்த அனுபவத்தை அடிக்கடி அவரை விட்டுக் கைநழுவிப் போகுமாறு செய்தான்.

இதுவரை உள்ள பாடல்களைக் கொண்டு மேலே கூறியமுறையில் பொருள் கூறி வந்துள்ளோம். ஆனால், இப்பொழுது அடிகளார் கூறும் உவமை இந்த எண்ண ஓட்டத்தை ஓரளவு தடைசெய்வதாக உள்ளது.

'சர்க்கரைப் பண்டத்தை உண்க' என்று கையில் குச்சி எடுத்துக்கொண்டு அடித்து மிரட்டவேண்டிய தேவை என்ன? வேப்பங்காயை யாரையாவது உண்ணச் செய்ய வேண்டுமானால், மிரட்டியும் அடித்தும் உண்ணச் செய்வார்கள். ஆனால், சர்க்கரைப் பண்டத்திற்கு இந்த முறை தேவையில்லை. அடிகளாரோ சர்க்கரைப் பண்டமாகிய இறையனுபவத்தைத் தாம் அனுபவிக்குமாறு அடித்தடித்துப் புகட்டினார் குருநாதர் என்றல்லவா கூறுகிறார். அப்படியானால் சர்க்கரைப் பண்டமாகிய இறையனுபவத்தைப் பெற்றுவிட்ட பிறகு அதனுள் மூழ்கியிருப்பதற்குப் பதிலாக அதனைவிட்டு வெளியே வந்து உலகியல் நினைவில் ஓரிருமுறை அடிகளார் சுழன்றிருப்பாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட நேரங்களில் அவரைப் பிடித்து இழுத்து இறையனுபவம் என்ற சர்க்கரைப் பண்டத்தை மறுபடியும் மறுபடியும் அடிகளார் உண்ணுமாறு தில்லைக்கூத்தன் செய்தான் என்றுதான் பொருள்கொள்ள வேண்டியுள்ளது.

குருநாதர் அருளைப்பெற்று இறையனுபவத்தில் மூழ்கியிருந்த அடிகளார், ஓரிரு சமயங்களில் அந்த நிலையிலிருந்து சிறிது வெளிப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட நேரங்களிலெல்லாம், வெளிப்பட்ட நேரங்கள் மிகுந்துவிடாமல், தில்லைக்கூத்தன் அவரை இழுத்துப்பிடித்து மறுபடியும் மறுபடியும் இறையனுபவத்தில் மூழ்கச் செய்திருக்க வேண்டும். இதனையே 'அடித்தடித்து அக்காரம் தீற்றி' என்ற வாய்பாட்டால் குறிப்பிடுகின்றார்.

இங்குக் கூறப்பெற்றபடி சிந்திக்கத் தொடங்கினால் இற்றைநாள் வாழ்கின்ற நம்போன்றவர்களுக்கும் ஒரு பிடிமானம் கிடைப்பதைக் காணலாம். மிக உயர்ந்த நிலையை அடைந்துவிட்ட ஒருவர்கூட, ஒரு சில நேரங்களில் அதனை இழக்க நேர்ந்தால், கவலைப்படத் தேவையில்லை; திருவருளிடத்து வலுவான நம்பிக்கை இருக்குமேயானால் அத்திருவருள் இவர்களைத் தறிகெட்டுப் போக விட்டுவிடாது. பிடித்து இழுத்து மறுபடியும் அக்காரம் தீற்றும் என்ற நம்பிக்கையைத் தருவதே இப்பாடலின் உயிர்நாடியாகும்.

நாத தரிசனம், சோதி தரிசனம் என்ற இரண்டும் முறையே ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைப்பவையாம். ஆன்ம யாத்திரையில் முன்னேறிச் செல்லும் அடியவர்கட்கு முதலில் கிடைப்பது நாத தரிசனம். பொதுவாக நாதம் என்று கூறியவுடன் நம்முடைய காதுகளால் கேட்கப்படும் ஒலியையே மனத்தில் கொள்கிறோம். இவ்வுலகத்தில் பொருள்களின் அசைவால் உண்டாக்கப்படும் அதிர்வுகளே ஒலி, ஓசை என்ற இரண்டையும் தருகின்றன. ஆனால் இதிற்கூடப் பல வேறுபாடுகள் உண்டு.

நம்முடைய காதுகள் கேட்கக்கூடிய ஒலியும், நாம் கேட்கமுடியாத- ஆனால், எலிகளும் நாய்களும் கேட்கக்கூடிய- அதிக அதிர்வுகள் கொண்ட ஒலியும்

உண்டு. ஆனால் இவற்றினும் மிகப் பன்மடங்கு அதிகமான அதிர்வுகளையுடைய ஒலிகளும் உண்டு. அவற்றை 'அல்ட்ரா சவுண்ட்' (ultra sound) என்று கூறுவர். இந்த அதிர்வுகள் அழித்தல் தொழிலையும் செய்யக்கூடியவை.

இவையெல்லாம் இந்த உலகத்தில் தோன்றக்கூடிய-தோற்றுவிக்கக்கூடிய ஒலிகளேயாம். அசுத்த மாயா காரியமாகிய இந்த உலகத்தில் தோன்றும் இந்த ஒலிகளும் இந்தப் பிரபஞ்ச எல்லைக்கு உட்பட்டவையே ஆகும்.

இவையெல்லாம் தோன்றுவதற்கு, ஏன், இந்தப் பிரபஞ்சமே தோன்றுவதற்குக் காரணமாகவுள்ள மூல ஒலியை 'ஆதி நாதம்' என்று பெரியோர் கூறுவர். அந்த ஆதிநாதம் மக்கள் செவிப்புலனுக்கும் கற்பனைக்கும் அப்பாற்பட்டது ஆகும். ஆன்மிகத் துறையில் தலைநின்றவர்கள், அருளாளர்கள் ஆகியோருக்கு இந்த ஒலியைக் கேட்கும் வாய்ப்பு ஒரோவழி கிடைத்தல் கூடும். அதனையே நாத தரிசனம் என்பர்.

இந்த ஆதி நாதத்திற்குச் சைவப்பெருமக்கள் தந்த மற்றொரு பெயர் சிலம்பொலி என்பதாகும். அந்தச் சிலம்பொலியைக் கேட்கும் வாய்ப்புச் சேரமான் பெருமாள் நாயனார், அடிகளார் போன்றவர்களுக்கே கிட்டியது;. அதனையே அடிகளார் 'திருந்துசேவடிச் சிலம்பவை சிலம்பிட அருந்துணைவனாய்- (வந்து) ஆண்டுகொண்டு' (572) அருள்செய்தான் என்கிறார்.

சிலம்பு சிலம்புதலையே நாத தரிசனம் என்று குறிப்பிட்டோம்.

573ஆம் பாடலில் இருவகைப் போக அனுபவங்களைப் பேசுகிறார் அடிகளார். இந்த உலகில் மானிட உடம்பை எடுத்த ஓர் உயிர், இந்த உடம்பின் மூலமாகமட்டும் அனுபவிக்கின்ற போகங்களை வரிசைப்படுத்துகின்றார் அடிகளார். அதையும் இரண்டாகப் பிரித்துப் பேசுகிறார்.

சுற்றம் முதலியவர்களுடன் சேர்ந்து உண்ணல், வசித்தல் ஆகியவற்றால் தோன்றும் போகங்களை அனுபவிப்பதற்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒன்று செல்வம் ஆகும். எனவே, அடிகளார் இந்தப் போகத்தைப் பற்றிப் பேசவரும்போது 'மாடு' என்ற சொல்லில் தொடங்குகிறார். மாடு என்பது பொருட் செல்வமாகும். அது நிறையவே, சுற்றம் தேடிக்கொண்டுவரும். இவை இரண்டும் நிறைய பல்வேறு வகைப்பட்ட போகங்களை இந்த உடல் அனுபவிக்கின்றது. இந்த அனுபவத்திற்குச் செல்வம் தேவைப்படுகிறது. ஆதலால்தான் அடிகளார் மாடு என்று தொடங்கினார்.

இந்தச் செல்வம் இல்லாமலும் அனுபவிக்கப்படும் போகம் மகளிர்பால் பெறுகின்ற போகமாகும்.

இப்போகங்கள் அனைத்துமே உடல்பற்றி வருகின்ற போகங்களாகும். இவற்றிலேயே கிடந்து ஊறித் திளைக்கின்ற நமக்கு இதனினும் வேறுபட்ட மற்றோர் போகம் உண்டு என்பதை நினைக்கக்கூட நேரமில்லை.

முதல் இரண்டு அடிகளிற் கூறிய போகங்களை அனுபவித்த அடிகளார், இடையிலேயே குருநாதர் அருளால் வீட்டின்பத்தை அனுபவிக்கும் பேற்றைப் பெற்றார். அதனையே பாடலின் பின்னிரண்டு அடிகளிற் கூறுகின்றார்.

576ஆம் பாடலில் சிந்திக்கவேண்டிய ஒரு பகுதி இரண்டாம் அடியில் பேசப்பெற்றுள்ளது. 'ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்' என்பது ஒரு பகுதியாகும்.

மிகப் பழங்காலந் தொடங்கி இன்றுவரை நம்முடைய சமுதாயத்தில் மட்டுமல்லாமல் பிற நாடுகளிற்கூட ஒரு நம்பிக்கை இருந்துவருகிறது. மந்திரங்களை உச்சாடனம் செய்வதன் மூலம் உயர்நிலையை அடைய முடியும்

ஒரு நம்பிக்கை. குறிப்பிட்ட ஒரு மந்திரத்தைப் பல்லாயிரமுறை உச்சாடனம் செய்வதால் அந்த மந்திரத்திற்குரிய தேவதைகளை நேரிடையாகத் தரிசனம் செய்யும் வாய்ப்புக் கிட்டும் என்பது மற்றொரு நம்பிக்கை. இக்கூற்றுக்களில் ஒரு பெருமளவு உண்மை உள்ளது என்பதை மறுத்தற்கில்லை. ஆனால், சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் இந்த உச்சாடனமுறை பெரிதாகப் போற்றப்படவில்லை. உச்சாடனம் என்று வரும்போது பழக்கவசத்தால் அந்த மந்திரங்கள் மனத்துக்குள் உருளத் தொடங்கிவிடும். இது நடைபெறும்போது பொறி புலன்கள் மனம் ஆகியவை இந்த உச்சாடனத்தில் ஈடுபடாமலும் போகலாம். இக்குறையைப் போக்க நம்முடைய முன்னோர்கள் ஒரு வழியைக் கண்டனர்.

காழிப்பிள்ளையார் ஒரே பாடலில் இவ்வழியை எடுத்து விளக்குகின்றார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

(திருமுறை :3:49-1)

என்ற பாடலில் அடிகளார் கூறிய 'ஓசையால் உணர்வார்' என்பதைக் காழிப்பிள்ளையார் 'வேதம் நான்கினும்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். எனவே, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஐந்தெழுத்தை ஓதுபவர்கள் உணர்வுக்குள் சிக்கிக்கொள்கிறான் இறைவன்.

இவ்வாறில்லாமல் வெறும் ஓசையளவில் உச்சாடனம் செய்பவர்களுக்கு இறைவன் எளிதில் கிட்டமாட்டான் என்பதை அடிகளார் 'ஓசையால் உணர்வார்க்கு உணர்வு அரியவன்' என்கிறார்.

## சென்னிப்பத்து

சென்னிப் பத்து என்ற பெயருடன் விளங்கும் இப்பத்துப் பாடல்களையும் ஒரே நேரத்தில் படித்து முடித்தால் என் போன்றவர்களுக்கு இத்தலைப்பைப்பற்றிய ஓர் ஐயம் தோன்றத்தான் செய்கிறது. 'சென்னி மன்னி' என்று பாடல்தோறும் வருவதால் மேலோட்டமாகப் பார்க்கும்போது தம் சென்னிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடியுள்ளார் என்று பலரும் நினைப்பதில் ஓரளவு பொருள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், ஆழ்ந்து நோக்கினால் இப்பத்துப் பாடல்களிலும் சென்னியைவிடச் சேவடியும் அதன் சிறப்பும்தான் மிக அதிகமாகப் பேசப்படுகின்றன என்பது நன்கு விளங்கும்.

தமிழகத்தில் தோன்றிய சைவம், வைணவம் ஆகிய இரு சமயங்களும் இறைவனுடைய திருவடிப் பெருமை பேசுவதில் இணையற்று விளங்குகின்றன. உயிர்களை உய்விக்க வல்லது இறைவனுடைய கையோ, கண்ணோ அல்ல திருவடியே என்ற கருத்து இந்த இரு சமயத்தாரிடை வலுவாக நிலைபெற்று இருந்து வருகிறது. 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் இரு தாள் மலர்க்கீழ் மூவகை உலகும் முகிழ்த்தன முறையே' (ஐங்குறு-1) என்ற சங்கப்பாடல் தொடங்கித் திருவடிப்பெருமை பேசப் பெறுவதைப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய பெரிய புராணத்தில் வரும் 'மலர்சிலம்பு அடி வாழ்த்தி வணங்குவாம்' (பெ.பு :-1) என்பதுவரை நீண்டு செல்வதைக் காணமுடியும்.

மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் 'பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல், சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்' (அற்புதத்திரு-1) என்பது போன்று பல இடங்களில் பாடுவதையும் கா்ணலாம்.

ஆறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வாழ்ந்த நாவரசர் பெருமான், பதிகத்திற்குப் பத்துப் பாடல் என்ற மரபையும் மீறி, இருபது பாடல்கள் கொண்ட ஒரு பதிகத்தைப் பாடியுள்ளார். திருவையாற்றில் பாடப்பெற்ற இப்பதிகத்தின் சிறப்பு என்னவென்றால், இருபது பாடல்களும் 'ஐயாறன் அடித்தலமே' என்று முடிவதே ஆகும். இந்தத் திருவடி, உயிர்களுக்குப் பாதுகாப்பாகவும் துணையாகவும் கைதூக்கிவிடும் நண்பனாகவும் துயரைத் தடுக்கும் குடையாகவும் உள்ளது என்ற கருத்தை இருபது பாடல்களிலும் சொல்லிச்செல்வதைக் காணலாம்.

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டு சென்னிப் பத்தில் வரும் பாடல்களைப் பார்த்தால் இத்தலைப்புச் சரியோ என்று எண்ணத் தோன்றுகிறது. சென்னி என்ற ஒரு சொல்லைத் தவிரச் சென்னிபற்றிய வேறு எவ்விதக் குறிப்புமில்லை. ஆனால், இச்சென்னிக்கண் தங்கி மலர்கின்ற திருவடியைப்பற்றி ஒவ்வொரு பாடலும் நான்கடியில் மூன்றே முக்கால் அடிவரையில் திருவடிப்பெருமை பேசுகின்றது.

சைவ அடியார்கள் பாடல் மரபு அடிப்படையில் இந்தப் பதிகத்திற்குப் பெயரிடவேண்டுமானால் 'திருவடிப் பத்து' என்ற தலைப்பே பொருத்தமாக இருக்கும்.

பராபரனுடைய மூன்று வேறுபட்ட நிலைகளை இப்பதிகத்தின் நான்காம் பாடல் (582) பேசுகிறது. 'பராபரன் பக்தர் சூழ் பார்ப்பான் எனப் பாரில் வந்து' திருப்பெருந்துறையில் காட்சி தந்தான். இந்த இடத்தில் அவன் மேற்கொண்ட வடிவம் மானுட வடிவேயாகும். அடுத்த நிலையில் சித்தர் சூழத் தில்லையில் கூத்தாடுகிறான். மானிட வடிவத்திற்கும் கூத்திடும் இந்த வடிவத்திற்கும் தொடர்பேயில்லை. மூன்றாவது நிலை அடிகளாரின் சித்தத்தின் எத்தனாய் உள்புகுந்த நிலை. அந்த உள்புகுந்த நிலையில் எவ்வித வடிவுமில்லாமல்

சோதி சொரூபனாகவே உள்புகுந்தான் என்று முன்னரும் பல இடங்களில் கூறியுள்ளார்.

மானிட குரு, கூத்த வடிவம், சோதி சொரூபம் என்ற மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை. இந்த மூன்று வடிவங்களும் ஒருவனுடைய வடிவங்களே என்று அடிகளார் எப்படிக் கண்டுபிடித்தார்? உலகியல் முறையில் ஒருவரை அடையாளம் காண்பதற்கு இன்றியமையாத உறுப்பு முகமேயாகும். அப்படியானால் மாறுபட்ட முகங்களையுடைய குருநாதர், கூத்தன், சோதி என்ற மூன்றும் ஒன்றே என்று எவ்வாறு கூறினார்? இதன் ரகசியம் ஒன்றுண்டு. முகங்கள் மாறுபட்டனவே தவிர திருவடியில் எவ்வித மாற்றமும் இல்லை. அடிகளாரோ இந்த மூன்று வடிவங்களிலும் அவற்றின் திருவடிகளிலேயே மனத்தைச் செலுத்தினார்.

புவனியில் சேவடி தீண்டிய குருநாதர் திருவடியும், கூத்தாடும் திருவடியும், சோதி சொரூபனின் திருவடியும், தம் சென்னிக்கண் வந்து தங்கிய திருவடியும் ஒன்றே என்பதை நன்கு உணர்ந்துவிட்ட காரணத்தால் 582ஆம் பாடலில் பராபரன் சேவடியும், கூத்தன் சேவடியும், திருட்டுத்தனமாகத் தம்முள் புகுந்த சேவடியும், சென்னிக்கண் மன்னி மலரும் சேவடியும் ஒன்றே என்பதை அற்புதமாக விளக்கியுள்ளார்.

## திருவார்த்தை

இறைவனது பெருமையையும் தம்மாட்டுக் கருணை கொண்டு, குருநாதர் வடிவு தாங்கித் தமக்குச் செய்த அருளையும் ஓயாது நினைந்து அவனுடைய புகழை வாய்விட்டுப் பேசத் தொடங்குகிறார். நன்றிப் பெருக்கால் நாவானது குழறுகின்றது. இறைவனின் பல பெயர்களையும் சொல்லிச்சொல்லி இறும்பூது எய்துகிறார். உணர்ச்சி மேலிடமேலிடப் பலபெயர்களைச் சொல்லிப்புகழும் நிலை

மாறிவிடுகிறது. இந்நிலையில் அலறல் தொடங்கிவிடுகிறது. தம்மை மறந்து, பொறி புலன்கள் அடங்கி ஒடுங்க, உணர்வு ஒருமுகப்பட்டு பேசும் நிலை மாறிவிடுகிறது.

பல்வேறு செயல்களைச் சிந்திக்கும்போதுதான் பல்வேறு சொற்களால் அவற்றுக்கு வடிவு கொடுக்கவேண்டியுள்ளது. இந்த நிலையை விட்டுவிட்டு அவன் கருணை ஒன்றையே சிந்திக்கும்போது சொற்களுக்கு இடமேயில்லை. அலறல் உணர்ச்சியின் வெளிப்பாடாகும். உணர்ச்சி, அலறல் ஆகிய இரண்டின் அடித்தளத்தில் ஒரேயொரு எண்ணம் ஊசலாடுகிறது.

பொறி புலன்கள் அடங்கிவிட்டனவேனும், தற்போதம் முழுவதுமாக அடங்காத நிலை இது. அதுவும் அடங்கி விட்டால் இறையுணர்வில் அமிழ்ந்து கட்டைபோல் கிடக்க நேரிடும். இது 'காஷ்ட சமாதி' எனச் சொல்லப்படும்.

இதற்கு முந்திய நிலைதான் அலறுகின்ற நிலை. இந்த நிலையில் வேறு எண்ண ஓட்டங்களுக்கு இடமேயில்லை. தற்போதம் முழுவதும் அடங்காமையின், தமக்கும் அவனுக்குமுள்ள தொடர்பை அதாவது இந்த நிலை வருவதற்கு முன்னிருந்த தொடர்பு, இப்போது புதிதாக ஏற்பட்ட தொடர்பு என்ற இரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாக நினைக்கும் நிலை ஏற்படுகிறது. இந்த முதல் நிலையில், அதாவது பழைய தொடர்பு நிலையில், இந்த 'நான்' தனியே நின்று அவனுடைய புகழை ஒவ்வொன்றாகச் சொல்லிப் பரவுகின்றது.

அப்படிப் பரவிக்கொண்டிருக்கும்போதே புதிய தொடர்பு தன் பணியைத் தொடங்குகிறது. இப்பணியின் முதற்படியில் 'நான்' பெரும்பகுதி மடங்கிவிடுகிறது. அது மடங்கிவிட்ட காரணத்தால் பல்வேறு பெயர்களைச் சொல்லிப் புகழும் நிலை மறைந்துவிடுகிறது.

இரண்டாவது நிலையில் இந்த 'நான்' மேலும் அடங்கிவிட, ஒரே சொல்தான் வெளிவருகின்றது. அதுவே 'எம்பெருமான்' என்ற சொல்லாகும். இந்தச் சொல்லிலுள்ள 'எம்' பகுதியில் 'நான்' மறைந்துவிட, எம்பெருமான் எம்பெருமான் என்று 'அரற்றுகின்றவர்' எங்கோ மறைந்து விடுகிறார். எம்பெருமான் என்ற சொல்மட்டும் இந்த மறைந்துவிட்ட 'நானில்' தொடங்கி, பிரபஞ்சம் முழுவதிலும் எதிரொலிக்கின்றது.

இந்த நிலையிலிருந்து சற்றுக் கீழிறங்கும்போது மறுபடியும் 'நான்' ஓரளவு விழிப்படைகிறது. 'எம்பெருமா'னில் இருந்து வெளிப்பட்ட 'நான்' இப்பொழுது தனியே நின்று பெருமானைப் பார்க்கின்றது. அவன் தலைவன்; தான் அடிமை, அவனுடைய சொத்து என்ற எண்ணம் 'நானில்' முகிழ்க்கின்றது. இந்த எண்ணத்தின் வெளிப்பாடே 'எம்பிரான்' என்ற சொல்லாகும்.

ஆண்டான்— அடிமைத் திறத்தை மிக நுண்மையாக வெளிப்படுத்தும் 'எம்பிரான்' என்ற சொல் இறைவன் ஒருவனுக்கே உரியதாகும். இந்தச் சொல்லை அடிகளார் வேறு யாருக்கும் பயன்படுத்தியதில்லை.

இந்தச் சொல்லின் சிறப்பையும் நுணுக்கத்தையும் அறிந்த நம் முன்னோர் பாடல்தோறும் இச்சொல்லைத் தாங்கிவரும் பதிகத்திற்குத் 'திருவார்த்தை' எனப் பெயரிட்டனர்போலும். இறைவன் புகழை விரிக்கும் பல சொற்களை அடிகளார் பயன்படுத்தியிருப்பினும் அவற்றைத் திருவார்த்தையென்று ஒருமைச்சொல்லால் குறிப்பிடவில்லை. அதனால் திருவார்த்தை என்ற ஒருமைச்சொல் எம்பிரான் என்ற சொல்லையே குறிக்கின்றது என்று நினைப்பதில் தவறில்லை.

எம்பிரான் என்பது ஆண்டானைக் குறிக்கும் சொல் என்றால், அது நியாயமானதே. ஒரே ஓர் ஆண்டான்தான் உண்டு; அவனுக்குப் பல அடிமைகள் இருக்கலாம். அப்படியிருக்க 'எம்பிரான் ஆவாரே' என்று சொல்வது எவ்வாறு பொருந்தும்? இதில் ஒரு நுணுக்கம் அமைந்துள்ளது.

பூத உடலுடன் சுற்றித்திரியும் சில அடியவர்களை அடிகளார் காண்கின்றார். திருவாதவூரராக இருக்கின்றவரையில் இவர்களையெல்லாம் சிவனடியார்கள் என்றே அமைச்சர் சாதாரணமாகக் கருதியிருந்தார். திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு அடிகளாருக்கு இரண்டு ஆற்றல்கள் கிடைத்தன என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அவற்றுள் ஒன்று, எதிரே இருப்பவர்களை ஊடுருவிக் கண்டு, அவர்கள் எத்தகையவர்கள் என்பதை அறிந்துகொள்ளும் ஆற்றலாகும். சுற்றித் திரியும் சிவனடியார்களில் ஒரு சிலர் ஆதிப்பிரமத்தை (589) அறிந்தவர்கள். அது மட்டுமா? வலை வீசுகின்ற ஒருவனை இன்னான் என (591) அறிந்தவர்கள்; ஏடர்களை ஆண்டுகொண்ட இயல்பு (592) அறிந்தவர்கள்; பால்கொடுத்த கிடப்பை (594) அறிந்தவர்கள்; பேதம் கெடுத்து அருள்செய்பெருமை (595) அறிந்தவர்கள்; கேதம் கெடுத்து ஆண்ட கிடப்பு (597) அறிந்தவர்கள் என்றெல்லாம் கூறுமுகத்தான் அந்த ஒரு சிலர் எத்தகையவர் என்பதை அடிகளார் விளக்கிக் காட்டுகிறார்.

வலை வீசியவன், தாய்ப்பன்றி யானவன், ஏடர்க்கு அருள் செய்தவன், பேதம் கெடுத்தவன் என்ற பல கோலங்களைக் கொண்டவன், வெவ்வேறு வடிவில் நின்று, வெவ்வேறு உருவைத் தாங்கி, வெவ்வேறு காலங்களில் இவற்றைச் செய்தான் எனினும் இத்தனையையும் செய்தவன் பெருந்துறையான் ஒருவனே என்பதை அறிந்து உணரும் ஆற்றல் உடையவர்கள் அந்த ஒரு சிலர் ஆவர்.

இதனை அறிந்துவிட்ட காரணத்தால், மானிட உருவில் வாழ்ந்தாலும், இவர்கள் அனைவரும் தம்மால் எசமானர்கள் (பிரான்) என்று ஏற்றுக்கொண்டு வணங்கத்தக்கவர்கள் என்று கூறுகிறார் அடிகளார்.

இந்த அடியார்கள் சிலரின் உண்மையான இயல்பை, ஊடுருவி நோக்கும் தம் சக்தியால் அடிகளார் அறிந்துகொண்டார். ஆதலின், 'தம்முடைய எசமானோடு ஒப்பவைத்து எண்ணத் தகுந்தவர்கள் இவர்கள்' என்பதையே 'எம்பிரான் ஆவாரே' என்று பாடுகிறார். அதனாலேயே இப்பதிகம் திருவார்த்தை என்ற பெயரைப் பெற்றதுபோலும்.

எந்தக் குறிப்பிட்ட ஒரு பெயராலும், எந்த ஒரு வடிவத்தாலும் முழுமுதற் பொருளை அடக்கிக் காட்ட முடியாது; அது நாம, ரூபம் கடந்தது; வாக்கு, மனோலயம் கடந்தது என்றெல்லாம் கூறுவதை இந்த அருளாளர்கள் நன்கு அறிந்திருந்தனர். இப்படி இலக்கணம் வகுத்துவிட்டால் மனித மனம் அதைப் பற்ற முடியாமல் விட்டுவிடும் என்பதை அறிந்திருந்த இந்த அருளாளர்கள் முழுமுதற்பொருளுக்கு ஒரு வடிவு கற்பித்தனர். பின்னர் மனித மனம் பல்வேறு நிலைகளில் இருப்பதை அறிந்த இவர்கள் அந்த அந்த நிலைகளுக்கு ஏற்பப் பல்வேறு வடிவங்களைக் கற்பித்தனர். உருவ வழிபாட்டின் சிறப்பே மனித மனத்திற்கு அது உகந்ததாக இருப்பதுதான்.

எங்கும் நிறைந்திருக்கின்ற அப்பொருள், கருணையே வடிவானது ஆதலின், மனிதர்கள்மாட்டுக் கொண்ட கருணையால் தன் நிலையை விட்டுக் கீழிறங்கி வந்து மானிட உருவைத்தாங்கி உயிர்களுக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்கின்றது என்றும் கூறினர்.

அந்த அளவில் நில்லாமல் உயிர்வர்க்கம் அனைத்தும் ஒன்றாக இருத்தலின் விலங்குகட்கு அருள்செய்யப்

பரம்பொருள் விலங்காகவும் வடிவெடுத்து வருகின்றது என்றும் கூறினர். இந்த அடிப்படையில்தான் திருவாதவூரருக்கு உபதேசம் செய்த குருநாதர்வடிவம் முதற்கொண்டு பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்த பன்றி வடிவம்வரை, வந்தவன் ஒருவனே என்று கூறினர்.

உயிர்கட்குக் கருணைபுரியப் பல்வேறு வடிவங்களை ஏற்றுப் பரம்பொருள் வருகின்றது என்பதுவரையில் சைவம், வைணவம் என்ற இரண்டும் ஒத்துச் செல்கின்றன. அப்படி வருகின்ற பொருள் வேண்டுமிடத்து வேண்டுருக் கொண்டு வருகின்றது என்றனர் சைவர். மீனில் தொடங்கிப் பல அவதாரங்கள் எடுத்ததாகக் கூறினர் வைணவர். மானிட வடிவு தாங்கி அப்பொருள் வருவதைக் குறிக்கும்போதுமட்டும் மானிடத் தாய் தந்தையர்க்குப் பிறந்ததாகக் கூறினர்.

அடிகளாரைப் பொறுத்தவரை அம் முழுமுதற் பொருள் குருநாதர் வடிவு தாங்கித் தம்மை ஆட்கொண்டது ஆதலின், மானிட வடிவு தாங்கி உயிர்களுக்கு அருள்செய்ததாக வரும் அத்தனை கதைகளையும் மனத்தில் வாங்கிக்கொண்டு தம் பாடல்களில் அவற்றுக்கு இடம்தருகிறார்.

குருவாக வந்தவனும், பன்றியை விரட்டிச் செல்லும் வேடனாக வந்தவனும், மீன்வலை வீசிய வலைஞனாக வந்தவனும், பன்றிக்குட்டிகளின் பசிபோக்கத் தாய்ப் பன்றியாக வந்தவனும் ஒருவனே ஆதலால் இப்பதிகத்தில் இந்நிகழ்ச்சிகட்கு இடம்தந்து பாடுகிறார்.

குருநாதராக வந்தது, குதிரைச்சேவகனாக வந்தது, மண் சுமக்கும் கூலியாளாய் வந்தது ஆகிய நிகழ்ச்சிகள் அடிகளார் கண்காண நடைபெற்றவை. ஏனையவை செவி வழிக்கதைகள். கீர்த்தித் திருவகவலிலும் பிற பாடல்களிலும் இக்கதை நிகழ்ச்சிகள் பெரிதாக இடம்பெற்றுள்ளன. அதன் தொடர்ச்சிதான் இப்பதிகத்தில் வரும் கதை நிகழ்ச்சிகள்.

இக்கதைகளை இப்பதிகத்தில் கூறுவதன் நோக்கமொன்று உண்டு. இத்தனை கதைகளிலும் வருபவன் திருப்பெருந்துறையான் என்பதை அடிகளார் அறிந்திருந்தார். அதேபோல இந்த நுணுக்கத்தை அறிந்தவர்களைத் தாம் வணங்கத்தக்க பிரான்களாக இப்பதிகத்தில் பேசுகிறார்.

இப்பதிகத்தின் உட்தலைப்பு 'அறிவித்து அன்புறுதல்' என்று உள்ளது. ஒருவர்க்கு ஒன்றை அறிவித்தால் சொல்லியவர்க்கு இன்பம் உண்டாதல் இயல்பு. இறைவனுடைய புகழையும் அதனை உணர்ந்த அருளாளர்களையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்தல் (அறிவித்தல்) மிகச் சிறந்த பணியாகும். இறைவன் தமக்கு இன்னருள் செய்தான் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றார் அடிகளார். தமக்கு அருள் செய்தவன் பன்றிக் குட்டிகளுக்கும் அருள் செய்தான் ஆதலால் அவனுடைய அருளைப் பெற எல்லோருக்கும் ஒரு வாய்ப்பு உண்டு என்பதை மன்பதைக்கு அறிவிப்பதன்மூலம், ஓரளவு தம் கடமையை நிறைவேற்றியதாக அடிகளார் மகிழ்கின்றார். அதனை உட்தலைப்பாகத் தர விரும்பிய முன்னோர், 'அறிவித்து இன்புறுதல்' என்று ஓலையில் எழுதியிருக்க வேண்டும். படியோலை எழுதுவோர் அகரத்திற்கும் இகரத்திற்கும் அதிக வேறுபாடு தோன்றாமையால் இன்புறுதல் என்பதை 'அன்புறுதல்' என்று எழுதினர்போலும்.

## எண்ணப் பதிகம்

இப்பகுதிக்கு 'எண்ணப் பதிகம்' என்று யார் பெயரிட்டார்கள் என்று தெரியவில்லை. எண்ணம் என்பது மூளையிலும் மனத்திலும் ஒருசேரத் தோன்றுகின்ற ஒன்றாகும்.

ஒருவர் பேசும் ஒரு சொல், ஒரு தொடர், ஒரு பாடல் அனைத்துமே முதலில் முகிழ்ப்பது அவருடைய

எண்ணத்திலாகும். எண்ணம் தோன்றாதபோது சொல்லோ, தொடரோ பாடலோ தோன்ற இடமேயில்லை.

எண்ணம் என்பதே சொற்களின் பகுதியாகும். சொற்களின்றேல் எண்ணமில்லை. அறிவு, மனம் என்ற இரண்டும் ஒருங்கிணைந்து தொழிற்படும்போது சொற்கள் வெளிப்படுவனவாகும்.

இதன் எதிராக, பசி, சினம் போன்ற உணர்ச்சிகள் அன்பு, காதல் போன்ற உணர்வுகள் மனத்திடைத் தோன்றவும் வெளிப்படவும் சொற்கள் தேவையில்லை. அன்பு, காதல் என்பவற்றின் முதிர்ந்த நிலையில் சொற்களுக்கு இடமேயில்லை என்பர்.

உணர்ச்சிகள் தோன்றச் சொற்கள் தேவையில்லை. என்றாலும், அந்த உணர்ச்சிகளை வெளியிட சொற்கள் நிச்சயமாகத் தேவைப்படும். எண்ணங்கள் தோன்றுவதும் அவைகளை வெளிப்படுத்த உதவுவதும் சொற்களால்தான் நடைபெறுகின்றன.

இந்தச் சொற்களும் இரு வகைப்படும். ஒன்று, பொருள்கள், செயல்கள், பண்புகள் என்பவற்றைப் பெயர் மாத்திரையாய்க் குறிப்பிடும் சொற்கள், மற்றது உணர்வோடு கலந்து பொருள்களிடத்தும் அவைபற்றிப் பேசும்போதும் வெளிப்படும் சொற்கள். இந்த இரண்டாவது வகைச் சொற்களே உணர்வு கலந்து வெளிப்படும். பொருள்களைக் குறிக்கும் சொற்கள் பண்புகளைக் குறிக்கும் சொற்கள் ஆகியவற்றில் உணர்வுக் கலப்பு இல்லை. அன்பு செய்யப்பட்ட பொருளிடத்து அல்லது அந்தப் பொருளைப்பற்றிப் பேசும்போது சொற்கள் பயன்படுகின்றன. அந்தச் சொற்களின் மூலம் உள்நின்ற உணர்வு கொப்பளித்துக்கொண்டு வெளிவருதலைக் காணமுடியும்.

'தாதாய் மூவேழ் உலகிற்கும் தாயே' *(446)* 'நானேயோ தவம் செய்தேன்' *(555)* 'என்னை அப்பா அஞ்சல் என்பவர்

இன்றி நின்று எய்த்தலைந்தேன்' (120) 'வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' (448) என்பன போன்ற தொடர்களில் வரும் சொற்கள் அடிகளாரின் எண்ண ஓட்டத்தைமட்டும் வெளிப்படுத்தும் சொற்களாக அமையாமல், அவர் உள்ளத்தில் முகிழ்த்து எழும் இறையன்பின் பெருக்கத்தை, ஆழத்தை வெளியிடும் சொற்களாக அமைந்துள்ளதைக் காண்கின்றோம்.

உதாரணத்திற்காகச் சில தொடர்களை மேலே காட்டியுள்ளோமே தவிர, திருவாசகம் முழுவதுமே ஆழ்ந்த உள்ளத்து உணர்வை, இறையனுபவத்தைச் சொற்களின் மூலம் வெளிப்படுத்தும் ஒப்பற்ற பாடல்களின் தொகுதியேயாகும்.

இதிலிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். சொல்லுக்கு இரு வகை ஆற்றலுண்டு. ஒன்று பொருளைக் குறிப்பதோடு நின்றுவிடுவது; மற்றொன்று உணர்ச்சியையும் உணர்வையும் தாங்கிவரும் வாகனமாக அமைவது. திருவாசகத்தைப் பொறுத்தமட்டில் திருச்சாழல், திருத்தசாங்கம் என்பன போன்ற ஒரு சில பாடல்கள் உணர்வுக்கு இடமின்றி, சொல்லின் முதற் பணியை நிறைவேற்றும் பாடல்களாக அமைந்துள்ளன. மிகப் பெரும்பாலான ஏனைய பகுதிகள் சொல்லை மூழ்கடித்துப் பொங்கிவரும் உணர்வை வெளிப்படுத்தும் இயல்புடையவை.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு பார்த்தால் எண்ணப் பதிகம் என்ற தலைப்புள் காணப்பெறும் ஆறு பாடல்களும் மேலே சொன்ன இருவகைகளுள் எந்த வகையைச் சேர்ந்தன என்பதைச் சிந்திக்கவேண்டியுள்ளது.

எத்தனை முறை படித்தாலும் ஏனைய திருவாசகப் பாடல்களோடு இந்த ஆறு பாடல்களும் ஒட்டுவதாகத் தெரியவில்லை. ஆனால், பாடல்கள் அடிகளார் தம் பிழைக்கு இரங்கி வருந்துவதை வரிசையாகக் கூறிச்செல்கின்றன. ஆறு பாடல்களில் தம்முடைய

பிழைகளையெல்லாம் அடிகளார் அடுக்கிக் கூறினாலும், ஏனோ என்போன்றவர் எண்ணத்தில் அது எவ்வித உணர்வையும் எழுப்பவில்லை.

'குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால் என்தான் கெட்டது இரங்கிடாய்' (498) 'என்பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதிகண்டாய்' (154) 'அருளா தொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பார் யாரிங்கு' (385) என்பன போன்ற தொடர்களைப் படிக்கும்போது நாமும் அதில் இணைந்துவிடுகிறோம். ஆனால், என்ன காரணத்தாலோ எண்ணப் பதிகத்தில் அவ்வாறு செய்ய முடியவில்லை.

திருவாசகம் முழுவதிலும் எண்ணப் பதிகத்தில் கூறப்பெறும் செய்திகள் குறிப்பாகக்கூட வேறு எங்கும் பேசப்பெறவில்லை. திருவடிதீட்சை பெற்று அடியார்களிடையே அமர்ந்திருந்த சில விநாடிகளில் பிரிவுபற்றிய நினைவு அடிகளார் மனத்தில் தோன்றியிருக்க நியாயமில்லை. எனவே, குருநாதர் 'பிரியேன்' என்று கூறினார் என்று இந்த ஒரேயொரு இடத்தில் (600) அடிகளார் கூறுவது நமக்கு மயக்கத்தை உண்டாக்குகிறது. எண்ணப் பதிகம் முழுவதுமே இடைச்செருகலோ என்று நினைக்கவும் தோன்றுகிறது. இதுபற்றிய விரிவான ஆராய்ச்சி செய்யப்பெறவேண்டும்.

'பிறப்பு அறுப்பாய்' (602) என்று எதிர்கால வாய்பாட்டில் கூறியதுபற்றி உரையில் குறிப்பிட்டுள்ளோம். பிறப்பை அறுக்கும் செய்தி முன்னரே பலப்பல பாடல்களில் கூறப்பெற்றதேயாயினும் அங்கெல்லாம் இறந்தகால வாய் பாட்டிலேயே கூறியுள்ளார். அதாவது குருநாதரின் திருவடிதீட்சை பெற்ற அந்தக் கணத்திலேயே பிறப்பு அறுபட்டுவிட்டது என்ற துணிவுடன் அப்பாடல்கள் பாடப்பெற்றன். இது அடிகளாரின் தனி முத்திரையாகும். காரணம், பிறப்பை அறுத்துவிட்டான்

என்று பாடும்பொழுதேகூட இந்தப் பிறப்பு (திருவாதவூரராகத் தோன்றிய இந்தப் பிறப்பு) இன்னும் இருந்துகொண்டேதான் இருக்கிறது. அப்படி இருந்தும் பிறப்பை அறுத்துவிட்டான் என்று இறந்த கால வாய்பாட்டில் கூறியுள்ளார். அப்படிக் கூறிய அவர் இப்பாடலில் திடீரென்று 'பிறப்பை அறுப்பாய்' என்ற எதிர்கால வாய்பாட்டால் கூறுவாரா என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் இப்பாடலும் 'பிரியேன்' என்று கூறும் முந்தைய பாடலும் அடிகளார் பாடிய பாடல் இல்லையோ என்ற ஐயம் வலுப்பெறுகிறது.

இப்பதிகத்தின் மூன்றாவது பாடலின் இறுதி அடியில் ஒரு புதுமையான கருத்தை வெளிப்படுத்துகிறார். 'நன்பே அருளாய் என்னுயிர் நாதா நின்னருள் நாணாமே' (601) இந்த அடிக்கு நேராகப் பொருள் செய்வதானால் 'என் உயிர்க்குத் தலைவனே! அருள் செய்வதற்குத் தகுதியற்றவன் என்று கருதி நாணமடையாமல் (வெட்கப்படாமல்) நல்ல (நன்பே) முறையில் எனக்கு அருள் புரிவாயாக' என்று கூறவேண்டும். சில பிரதிகளில் நன்பே என்பதற்குப் பதிலாக 'நண்பே' (நண்பனே) என்ற பாடபேதம் உள்ளது. அந்தப் பாடத்தைக் கொண்டவர்கள் அடிகளார் இறைவனை 'நண்பனே, எனக்கு அருள்செய்வாயாக' என்று சொல்வதாகப் பொருள் கூறியுள்ளனர். அதாவது இறைவனை 'நண்பனே' என்று அழைப்பது ஒன்று; 'சற்றும் வெட்கப்படாமல் எனக்கு அருள்செய்வாயாக' என்ற முறையில் அந்த அடிக்குப் பொருள் கூறுவது மற்றொன்று.

திருவாசகம் முழுவதிலும் இறைவனைப்பற்றிய பல்வேறு விளிகள் உள்ளன. ஆனாலும் அவை அனைத்தும் ஓர் அடிமை ஆண்டானை விளிக்கும் விளிகளாகவே உள்ளன.

இதற்கு முற்றிலும் மாறாக, திடீரென்று இறைவனிடம் சமத்துவம் கொண்டாடி 'நண்பனே' என்று அழைப்பதும் 'நீ ஒரு சிறிதும் வெட்கப்படாமல் எனக்கு அருள்வாயாக'

என்று பேசுவதும் இந்த அடியில் வந்துள்ளன. திருவாசகத்தைப் படிப்பவர்கள் 'நாயினும் கடையேன்' என்று ஓயாமல் தம்மைக் கூறிக்கொள்ளும் ஒருவர் திடீரென்று 'நண்பனே!' என்று அழைப்பாரா? 'நீ வெட்கப்படாமல் எனக்கு அருள் புரிவாயாக' என்று கூறுவாரா என்பதைச் சிந்தித்தால், இப்பாடலும் முந்தைய பாடலோடு சேர்த்து இடைச் செருகலோ என்று நினைக்க இடம் தருகிறது.

## யாத்திரைப்பத்து

திருவாசகத்தில் இதுவரை காணப்பெறும் பாடல்களைப் படித்துப் பார்த்தால், இவ்வுலகிடை பருவுடம்புடன் வாழும் அடியார்களை அடிகளார் நினைத்துப் பேசியதாகத் தெரியவில்லை. அடியார்கள் என்று குறிப்பிடும் இடங்களிலெல்லாம், திருப்பெருந்துறையில் குருநாதர் முன்னர் அமர்ந்திருந்த அடியார்களையே குறிப்பிடுகின்றார் என்பது தெளிவாகத் தெரியும். 'அடியாரெல்லாம் தாள் சேர்ந்தார்', 'இச்சைக்கு ஆனார் எல்லாரும் வந்து உன் தாள் சேர்ந்தார்' என்று கூறிவிட்டு, 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்' என்று பாடுவது திருப்பெருந்துறை அடியார் கூட்டத்தையே என்பது நன்கு விளங்கும்.

இந்த முறைக்கு முற்றிலும் மாறாக யாத்திரைப் பத்து அமைந்துள்ளது. 'சிவபுரம் செல்ல உறுதி கொண்டவர்கள் அனைவரும் கூட்டமாக வாருங்கள். கயிலை புக இதுவே தருணம்' என்று யாரைப் பார்த்துப் பேசுகிறார்? இதுவரை அவர் குறிப்பிட்ட அடியார்கள் முன்னரே சிவபுரத்தில் இருப்பவர்கள்; குருநாதரோடு இறங்கிவந்து, குருநாதரோடே திரும்பிச் சென்றுவிட்டவர்கள்.

எப்படியாவது அந்த அடியாருடன் சேரவேண்டும், அவர்களிடையே இருக்கவேண்டும், இதற்குக் குருநாதர்

அருள்புரியவேண்டும் என்றெல்லாம் பாடுகையில் தம்மைத் தவிர வேறு யாரையும் அடிகளார் நினைந்து பாடினார் என்று சொல்வதற்கில்லை. நாயினும் கடையனாகிய யான் அழுங்குகின்றேன், அலமருகின்றேன், துயரக்கடலில் ஆழ்கின்றேன், அப்படிப்பட்ட என்னை ஆண்டுகொள்ளும் முறையில் 'கயிலை புகுநெறி இது காண்!போதராய்' என்று அருளவேண்டும் என்றுதான் வேண்டிக்கொண்டுள்ளார்.

இத்தனை பாடல்களிலும் தம்மை நினைந்து, தம் குறைகளை எண்ணி, அவற்றை மன்னித்து இறைவன் ஆட்கொள்ளவேண்டும் என்று பாடியுள்ளாரே தவிர, பிறரைக் கூவி அழைப்பதாகவோ சிவபுரம் செல்ல வாருங்கள் என்று அழைப்பதாகவோ எந்தப் பாடலும் கூறவில்லை.

இந்த நிலைக்கு முற்றிலும் மாறாக யாத்திரைப் பத்து அமைந்துள்ளது. இப்பதிகத்திற்கு முன்னர் அமைந்துள்ள எண்ணப் பதிகத்திலும் பிறர்பற்றிய பேச்சில்லை. 'என் பிறப்பற வேண்டும்' என்றுதான் எண்ணப் பதிகம் தொடங்குகிறது.

அப்படியிருக்க, யாத்திரைப் பத்தில் பருவுடம்போடு வாழ்கின்ற அடியார்களை எல்லாம் வருக என்று கூவித் தன்மைப்பன்மையில் பேசுகிறார். 'சிறியோமை........... உள்ளம் கலந்து உருக்கும் வெள்ளக் கருணையினால் ஆவா என்னப்பட்டு அன்பாய் ஆட்பட்டீர் வந்து ஒருப்படுமின்' என்று அவர்களை அழைத்ததற்கான காரணத்தையும், அவர்களுக்குள்ள தகுதியையும் எடுத்துக்கூறுகிறார் அடிகளார். இப்பொழுது தம்பால் வந்துகூடிய அவர்களை நோக்கி, 'காலம் வந்தது காண் பொய்விட்டு உடையான் கழல் புகப்போவோம்' என்று முடிக்கின்றார்.

ஒரு சேனைத்தலைவன், தன்பால் உள்ள சேனைகளை இனி மேற்கொள்ளப்போகும் போருக்குத் தேவையான முறையில் தயார்செய்கிறான். குறிப்பிட்ட போரைச் செய்ய

என்ன கவசம் அணியவேண்டும்; என்ன ஆயுதங்களை எடுத்துச்செல்லவேண்டும் என்றெல்லாம் சிந்தித்து, அவர்களுக்குத் தந்துவிட்டு, 'புறப்பட வேண்டிய நேரம் வந்துவிட்டது; புறப்படுங்கள்' என்று சொல்வதுபோல அடிகளார் இப்பாடலில் உலகத்தவரை அழைக்கின்றார்.

இந்த அழைப்பு, பொதுவாக எல்லோரையும் அழைப்பதுபோலத் தோன்றினாலும் ஆழ்ந்து நோக்கினால், புறப்படவேண்டியவர்கட்குச் சில அடிப்படைத் தேவைகளை அடிகளார் இப்பாடலில் குறிக்கிறார் என்பது தெரியும். 'சிறியோம்' என்ற சொல்லினால் மானிடச் சாதி முழுவதையும் குறிப்பிடுகிறார் என்பதில் ஐயமில்லை. அந்தக் கூட்டத்தில் ஆவா எனப்பட்டீர் என்று ஒரு குறிப்பிட்ட தொகுதியைப் பிரிக்கின்றார். அப்படி ஆவா எனப்படுவதற்குச் சில அடிப்படைத் தகுதிகளையும் நிகழ்ச்சிகளையும் குறிக்கின்றார். தலைவனாக உள்ள இறைவன் எல்லோருடைய உள்ளத்திலும் உறைகின்றான் என்பதில் ஐயமில்லை. ஆனால், அஞ்ஞானம், ஆணவம் முதலிய திரைகள் அவனை மறைக்கின்றன. கூட்டத்தில் பெரும்பகுதியானவர்கள் இந்தத் திரையை நீக்காதவர்கள். ஒரு சிலர் தாங்கள் சிறியவர்கள் என்பதை உணர்ந்து மனத்தில் உள்ள ஆணவம் முதலிய குப்பைகளையெல்லாம் அகற்றி, உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தலின், அவர்கள் உள்ளத்தில் உணர்வு வடிவாக உள்ளே கலந்து நிற்கின்றான். அப்படி அவன் உட்கலத்தற்குக் காரணம் ஆணவம் முதலியவற்றை நீக்குதல் ஆகிய செயல்மட்டும் அன்று இவர்களுடைய முயற்சி தேவைதான், மனக் குப்பைகளை அகற்றுவதும் உள்ளத்தைத் திறந்துவைப்பதும் இந்த ஒரு சிலருடைய முயற்சி என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சியைச் செய்துவிட்டால் உள்ளத்தை உருக்கும் பெருமான் உடனே வந்துவிடுவான் என்று நினைப்பது தவறு. அப்படியானால் என்ன செய்தால் அவன் வருவான்? அதற்கு விடைகூறுமுகமாகத் தனது வெள்ளக்கருணையினால்

உணர்வதுவாய் உள்புகுந்து நிறைகின்றான் என்று குறிக்கின்றார். அவன் உள்ளே நிறைந்துவிட்ட காரணத்தால் இந்த ஒருசிலர் அவனுக்கு ஆட்பட்டவர்களாய் ஆகிவிடுகின்றனர்.

குறிப்பிட்ட போருக்கு, குறிப்பிட்ட உடை, படைக்கலங்கள் முதலியவற்றைத் தேர்ந்தெடுப்பதுபோல் இங்கேயும் சில செயல்கள் நடைபெறுகின்றன. தூய்மைப்படுத்தப்பட்ட மனம், சித்தம் என்பவை அடிப்படைத் தேவை; இது முதல்நிலை. இப்பொழுது, பெருமான் தன் வெள்ளக் கருணையினால் இவர்கள் உள்ளத்தே புகுந்தான்; இது இரண்டாவது நிலை. புகுந்தவன் உணர்வதுவாய் நின்று உள்ளத்தை உருக்கும் செயலைச் செய்கின்றான்; இது மூன்றாவது நிலை. இந்த மூன்றாவது நிலையை அடைந்தவர்களே அவருடைய கருணைக்கு ஆட்பட்டவர்கள் என்று சொல்லவேண்டும். இவர்களைத்தான் அடிகளார் 'பொய்விட்டு உடையான் கழல்புக ஒருப்படுமின்; காலம் வந்ததுகாண்' என்று அழைக்கின்றார்.

பல்வேறு வகைப்பட்ட மக்களிலிருந்து வடித்தெடுத்து, ஆட்பட்டவர்கள் என்று பெயரும் சூட்டப்பெற்று, ஒரு தொகுதியாகத் தனியே நிற்கும் இவர்கள் ஒருபுறம். இவர்கள் அனைவரையும் ஒரேநிலையில் உள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. உள்ளத் தூய்மையோடு இறைவனை உள்நிறுத்திக் கொண்டவர்கள்கூட சில நேரங்களில் வழுக்கி விழுந்து விடுகின்றனர். காரணம், சிவபுர யாத்திரை மிக நீண்ட பயணமாகும். இந்த நீண்ட பயணத்தில் இடைக்கண் முரிந்தவர் பலருண்டு என்பதை நாமறிவோம். ஏனைய வாழ்க்கையில் முன்னேறிச் செல்பவர்கள், பல காரணங்களால், முன்னேற்றம் தடைப் பட்டுக் கீழே விழுவதுபோல் சிவபுர யாத்திரையிலும் இதுநடைபெறுகிறது. அதை இப்பதிகத்தின் பின்னர் வரும் பாடல்களில் அடிகளார் வரிசைப்படுத்திக்காட்டுகிறார்.

உலகியல் முயற்சிகளில்கூட எதிர்பார்த்த பயன், எதிர் பார்த்த நேரத்தில் கிட்டாதபொழுது மனம் தளர்வடைந்து முயற்சியை விட்டுவிடுபவர் பலர். இத்தளர்ச்சிக்குக் காரணம் அவர்கள் முயற்சிக்கு இடையே தோன்றும் இடையூறுகளே ஆகும். இதனையே, 606வது பாடலில் சிவபுர யாத்திரை செல்பவர்களுக்கு வரும் இடையூறுகளை வரிசைப்படுத்துகின்றார் அடிகளார். இந்த அடியார்கள் இந்த உலகில் பொறி புலன்களோடு கூடிய பூத உடம்புடன் வாழ்பவர்கள். இந்தப் பொறி புலன்கள் எத்தனை வலிமையானவை, மறைந்திருந்து தாக்கும் பேராற்றல் வாய்ந்தவை என்பதைக் காழிப்பிள்ளையார்முதல், நம்மாழ்வார்வரை பல அருளாளர்களும் பாடிச் சென்றுள்ளனர். சிவபுர யாத்திரையில் செல்லத் தொடங்கியவர்கட்குத் தாம் பணிவதுபோல, இப்பொறி புலன்கள் தொடக்கத்தில் பணிபுரிகின்றன. 'இவை அடங்கிவிட்டன; இனி இவற்றால் தொல்லை இல்லை' என்ற நினைவு தோன்றியவுடன் தம்முடைய ஆன்மிகப் பயணத்தை மனத்தென்புடன் கொண்டுசெலுத்தலாம் என்று நினைக்கின்றனர் அடியார்கள்.

ஆனால், இந்தப் பொறி புலன்கள் எதிர்பாராத நேரத்தில் அப்படியே கவிழ்த்துவிடும். ஆகவேதான், இத்தகைய யாத்திரையில் அனுபவப்பட்ட அடிகளார், புறப்படத் தயராகுங்கள் என்று கூறியவுடன் தாம் தேர்ந்தெடுத்துக் கூட்டிய அடியார் கூட்டத்திற்குச் சில எச்சரிக்கைகளை விடுக்கின்றார். முதலாவது எச்சரிக்கை: 'நீவிர் புலன்களில் புகவே வேண்டா' என்பதாகும். நாம் புகாவிட்டாலும், சரியானபடி புலன்களுக்குப் பணிகளைத் தராவிட்டால் அவை தாறுமாறாகச் சென்று கவிழ்த்துவிடும். ஆகவே, புலன்களில் புகவேண்டா என்று முதல் எச்சரிக்கை விடுத்த அடிகளார், 'புயங்கப்பெருமான் பூங்கழல்கள் மிகவே நினைமின்' என்று புலன்களில் புகாமல் இருக்க வழியைக் கூறுகிறார். புயங்கப்பெருமான் பொன்னடிகளை ஓயாது

நினைக்கும் பணியை மனத்திற்கு அளித்துவிட்டால், மனத்தின்வழி தொழிற்படும் புலன்கள் செயலற்றுவிடும். இப்பணி இருபத்துநான்கு மணிநேரமும் செய்யப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்தவே நினைமின் என்றுமட்டும் கூறாமல், மிகவே நினைமின் என்று கூறுகிறார்.

எவ்வளவுதான் இறைவன் திருவடிகளை நினைக்கும் பணியை மனத்திற்குத் தந்தாலும் இந்த அடியார்கள் பருவுடலுடன் இந்த உலகத்தில்தானே வாழ்கிறார்கள்? எனவே, உலகிடை இயல்பாக உள்ள நிகழ்ச்சிகள், செயல்கள், மக்கள் முதலியவற்றால் வரும் தாக்கங்கள் இவர்களை விட்டு வைக்குமா? இவற்றிற்கு ஒரு பொதுப்பெயராக 'மிக்கவெல்லாம்' என்ற தொடரைப் பயன்படுத்துகிறார் அடிகளார். இவர்கள் வேண்டாவென்றாலும், அவைகள் இவர்களை சுலபமாக விடுவதில்லை. அப்படியானால் இவற்றை என்ன செய்வது? அடுத்து நிற்பன மூன்று சொற்கள். மிகமிக ஆழமான பொருளுடையவை அவை. 'வேண்டா போகவிடுமின்கள்' என்பவை அச்சொற்கள். மிக்க என்ற சொல்லால் குறிப்பிடப்பெற்ற மேலேகாட்டிய மூன்று தாக்கங்களையும் வேண்டா என்று ஒதுக்கிவிட்டால் போதுமே! வேண்டா என்று கூறிவிட்டு,'போகவிடுமின்கள்' என்று ஏன் கூறவேண்டும்? வேண்டா என்று கூறிவிட்டு அப்பொருள் பக்கத்தில் இருக்குமாறு இடங்கொடுத்தால் என்ன நிகழும் என்பதைத் தமிழ்நாட்டில் வழங்கும் 'கோவணத்தைக் காப்பாற்றக் குடும்பஸ்தன் ஆயினான்' என்ற பழமொழி நன்கு விளக்குகிறது. இந்த நுட்பத்தை அறிந்த அடிகளார் அதனை அறிவுறுத்தவே, 'மிக்கவெல்லாம் வேண்டா' என்று கூறுவதோடு அமையாமல், 'போகவிடுமின்கள்' என்றும் கூறுகின்றார்.

முதல்பாட்டில் கூறப்பெற்ற அடியார்களை ஒத்தவர்கள் அல்லர் இவர்கள். அக்கூட்டத்திடை இவர்களும்

காணப்பெற்றாலும் இவர்கள் தொடக்க நிலையில் உள்ள சாதகர்கள் ஆவார்கள். அதனால்தான் பொறி, புலன்களோடு வாழும் இவர்கள் சாதகஞ் செய்யும்பொழுது எதிர்ப்படும் பொறி, புல அபாயங்களை எடுத்துக்கூறி அவற்றைப் போக்குதற்கு வழியும் கூறினார். அடிகளார் கூறிய வழியைப் பின்பற்றிச் செல்லும் சாதகர்க்கு உடனே கைமேல் பலன் கிட்டிவிடுவதில்லை. மிக நீண்ட யாத்திரையில் எதிர்பார்த்தது உடனே கிட்டாதபோது தளர்ச்சி தோன்றுவது இயற்கை. அத்தகைய தளர்ச்சி தோன்றும் பொழுதெல்லாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பின்னிரண்டு அடிகளில் குறிப்பிடுகின்றார். 'சாதகர்களே! தளர்ச்சி அடையவேண்டாம். தளர்ச்சி தோன்றும் பொழுதெல்லாம் ஒன்றை நினைந்து பாருங்கள். எங்கோ சிவபுரத்தில் இருக்கும் ஒருவன் நம்பாற் கொண்ட கருணை காரணமாகக் கீழ் இறங்கி வந்து இந்தப் பூமியில் நம் போன்றவர்களை ஆண்டுகொண்ட செய்தியை நினைத்துக் கொள்வீர்களேயானால் உங்களுடைய தளர்ச்சி போய்விடும்' என்கிறார் அடிகளார். அனுபவ ஞானியாகிய அடிகளார் கூறுகின்ற பாடல் ஆன்மிக வழிச்செல்லும் சாதகர்களுக்கு இணையற்ற வழிகாட்டியாகும்.

அடுத்துவரும் 607ஆவது பாடலில், சாதகர்கள் செய்யவேண்டிய இரண்டாவது பணி பேசப்பெறுகின்றது. பொறி, புலன்களைத் திசைதிருப்பிச் செலுத்தும் பணி நடைபெறுகையில் 'மிக்க' என்ற சொல்லால் குறிப்பிடப்பெற்ற தாக்கம்பற்றிப் பேசுகிறார் அடிகளார். 'சாதகனே! உன்னைச் சுற்றியுள்ள உறவினர்கள் என்பவர்கள் இந்த உடம்பிற்குத்தான் உறவினர்களே தவிர உனக்கு உறவினர்கள் அல்லர். அப்படியானால், உனக்கு யார் சுற்றம் என்று கேட்கிறாயா? நீதான் உனக்குச் சுற்றம். உன் உள்ளம் என்ன வழியை வகுக்கின்றதோ அதுவே உனக்குரிய வழி. இப்பொழுது உன்னைச் சுற்றி உள்ள பொருள்கள் என்பவற்றிடத்து உன்னையும் அறியாமல்

பற்றுச் செல்லும்; அதற்குப் பெயர்தான் பாசம் என்பது. இந்தப் பாசம் தோன்றும்பொழுது, 'நான் யார், எனது என்று சொல்லப்படும் இப்பொருள்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு என்ன, இது என்ன மாயை' என்று சிந்திக்கத் தொடங்கினால் அவற்றினின்று நீ விடுபடுவாய்.

'பொய்யானது இந்த உடம்பு. பொய்யானவை இந்தப் பொறி, புலன்கள். எனது என்று சொல்லப்படும் இந்த உடைமைகளும் பொய். தொண்டரோடு வந்து ஆண்ட அவன் கருணையை இந்த உறுதிப்பாட்டோடு, ஓயாது நினைப்பாயேயானால் நீ முன்னேற முடியும்' என்று கூறுவதன்மூலம் இரண்டாவதாகத் தோன்றும் ஆபத்தைக் கடக்க வழிகூறுகின்றார்.

அடுத்த பாட்டில் (608) சாதகனுடைய முன்னேற்ற வழியில் தோன்றும் மற்றோர் ஆபத்தை விரித்துக் கூறுகிறார். 'அடியார் ஆனீர் எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை' என்பதுதான் அந்தப் புதிய ஆபத்து. அடியார்கள் ஆகிவிட்ட பிறகுங்கூட பொறி புலன்களோடு கூடிய இந்த உடம்புடன் இருத்தலால் சிலவற்றைக் காரண, காரியமில்லாமல் விளையாட்டாகச் செய்யத் தொடங்கி இறுதியாக இதில் அகப்பட்டுக்கொள்ளும் நிலைமை தோன்றிவிடும். 'இப்பொழுது நீங்கள் ஒரு எல்லைக்கு வந்து விட்டீர்கள்; ஆதலால் இனி உங்கட்கென்று எதுவுமில்லை. ஆகவே, அவனுடைய திருக்குறிப்பு என்ன என்பதை எதிர்பார்த்து, ஒரே மனநிலையில் இருக்கப் பழகுங்கள்' என்கிறார். தவறிக்கூட இந்த விளையாட்டில் இறங்காதிருக்க வேண்டுமானால். அதற்குரிய ஒரே வழி இந்த உடம்பைப் போக்குவதுதான். அதனைத்தான் அடிகளார் இங்கே குறிப்பிடுகிறார்.

பொறி புலன்களில் மனம் செல்லாமல் ஒருநிலைப்படுத்தி இறைநினைவு தவிர எஞ்சிய எல்லாவற்றையும் வேண்டா என்று ஒதுக்கி, அவை

நீங்குமாறு செய்துவிட்டுக் கடைசிப் படிக்கு வருகின்றவரையில் இந்த உடல் தேவைப்படுகின்றது. அவற்றையெல்லாம் செய்துமுடித்த சாதகன் இப்பொழுது உடலைத் துறக்கத் தயாராக உள்ளான். சாதகனுக்கு அதை நினைவூட்டவே 'செடிசேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமைவைப்பான்' என்று கூறுகிறார்.

605ஆம் பாடலில் மிக உயர்ந்த நிலையில் உள்ள அருளாளர்களுக்குச் சில வழிமுறைகளைக் கூறிய அடிகளார் 606, 607, 608ஆம் பாடல்களில் ஆன்மிகத் துறையில் புக விரும்பும் சாதகர்களுக்கு முன்னேறும் வழிமுறைகளையும், இடையே எதிர்ப் படும் இன்னல்களையும் எடுத்துக்கூறி முடிவான நிலைக்கு அவர்கள் வருகின்ற நிலையில் செய்யப்பட வேண்டியவற்றை வரிசைப்படுத்திக் கூறிவிட்டார்.

609 ஆவது பாடலில் அடிகளாரின் கருணை நிறைந்த மனம் எவ்வளவு விரிந்துள்ளது என்பதைக் காணமுடியும். இந்தப்படிகளையெல்லாம் வாழ்ந்து கடந்து சென்றவராதலின் தம் அனுபவத்தை யாத்திரைப்பத்தில் சாதகர்கள், சாதாரணப் பொதுமக்கள் ஆகிய இரு சாராருக்கும் எடுத்துக்கூறுகிறார். 'ஆற்றகில்லேன் அடியேன் அரசே அவனிதலத்து ஐம்புலனாய சேற்றில் அழுந்தாச் சிந்தை' (439) வேண்டும் என்று பாடிய நிலை மாறிவிட்டது. இந்த உலகத்தையோ பொறி புலன்களையோ எந்த மாயையையோ கண்டு அஞ்சும் நிலை கடந்துவிட்டது. தில்லைக்கூத்தன் திருவடி, மிக அண்மையில் நின்று தம்மை அழைக்கின்றது என்பதை உள்ளூர உணர்ந்த அடிகளார் அந்தத் திருவடிப் பேற்றை அடையுமுன்னர்த் தாம் பிறந்து வளர்ந்த இந்த மானுட சமுதாயத்திற்குச் சில அறவுரைகளைப் பகர விழைகின்றார்.

மானுட சமுதாயம் மூன்று வகையாகக் காட்சியளிக்கின்றது. அருளாளர் நிலையில்

உள்ளவர்களுக்கு இப்பதிகத்தின் முதல் பாடலில் (605) 'காலம் வந்தது காண போவோம் ஒருப்படுமின்' என்று பாடிவிட்டார். இரண்டாவது நிலையில் உள்ளவர்கள் சாதகர்கள். அவர்களுக்காக 606, 607, 608ஆம் பாடல்கள் பாடப் பெற்றன. இனி வரும் பாடல் மூன்றாவது வகையினரான நம் போன்றவர்களுக்காகும். காட்டில் உடையில்லாமல், விலங்குகள்போல் வாழ்ந்த மனிதனுக்கும் அணு யுகத்தில் வாழும் நமக்கும் என்ன அற்புதமான ஒற்றுமை! அவன் நடந்தே சென்றான். நாம் விமானத்தில் செல்கிறோம். ஒரே விநாடியில் பல கோடிக் கணக்குகளைப் போடக்கூடிய கணினிகளைக் கண்டுவிட்டோம். என்றாலும், ஆதிமனிதனுக்கும் நமக்கும் இடையே உள்ள பொதுத்தன்மை மறையவே இல்லை. மறையாதது மட்டுமன்று, ஆதிமனிதனைவிட நம்மிடத்து இமயம் போல் வளர்ந்துள்ளது அப்பொதுத்தன்மை. அதுதான் வெகுளி, சினம், கோபம் என்று பல சொற்களால் குறிக்கப்படும் ஓர் இயல்பாகும். தேவைப்பட்டபொழுது கோபப்பட்டான் ஆதிமனிதன். கோபம், அவனில் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால், இன்றைய மனிதன் கோபத்தின் ஒருபகுதியாக அல்லவா இருக்கிறான்? இந்த அணுக்குண்டு யுகத்தில் மனிதனுடைய இந்தக் கோபம் அவன் பகையைமட்டுமா அழிக்கின்றது. அவனையும் சேர்த்தல்லவா அழித்துக்கொண்டிருக்கிறது! இந்த உலகம் என்றாவது ஒரு நாள் அழிந்து சாம்பல் ஆகப்போகின்றதென்றால் அது மனிதனை அழிக்கும் கோபத்தாலேயே ஆகும். 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' (குறள்:306) என்றார் வள்ளுவர்.

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட அடிகளார் நம் போன்றவர்கள் உய்ய வேண்டிய வழியைச் சொல்லத் தொடங்குகிறார். அவர் முதற்சொல்லாக சொல்லுவது என்ன என்பதை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ஆன்மிக வளர்ச்சிக்கு இடையூறாக நிற்கும் இந்த வெகுளி (கோபம்)

மனித சமுதாய முன்னேற்றத்திற்கும் நிலைபேற்றிற்கும்கூட இடையூறாக இருத்தலின் அமைச்சராக இருந்து அருளாளராக மாறிய பெருமான் நமக்கு உபதேசம் செய்யும்பொழுது முதல் தொடராக 'விடுமின்' என்று பேசுகிறார். வெகுளியை விடுமின் என்பதற்கும், விடுமின் வெகுளியை என்பதற்கும் வேறுபாடு உண்டு. வெகுளியை விடுமின் என்றால் நம்மிடம் உள்ள பலவற்றில் வெகுளியும் ஒன்று, அதனை விடுங்கள் என்பது பொருளாகும். ஆனால் 'விடுமின் வெகுளியை' என்றால் முற்றிலுமாக விடப் படவேண்டியவற்றுள் முதலில் நிற்பது வெகுளி என்ற பொருளைத்தரும்.

அடுத்தபடியாக நிற்பது ஒன்றுண்டு. அதுதான் ஆசை என்பது. ஆசையை நோய் என்ற பொருளில் வேட்கைநோய் என்று பாடுகிறார் அடிகளார். அதனை நோய் என்று குறிப்பதற்கு ஒரு காரணமுண்டு. மாபெரும் விஞ்ஞானியாகிய அடிகளாருக்கு நோயின் இயல்பு தெரியும். இன்று மனித சாதியை அழிக்கும் பல நோய்கள் அனைவருடைய உடம்பிலும் இருக்கத்தான் செய்கின்றன. நம்மிடம் உள்ள எதிர்ப்புச் சக்தி காரணமாக அந்த நோய்கள் தலைதூக்கமுடியாமல் அடங்கிக் கிடக்கின்றன. சந்தர்ப்பம் ஏற்பட்டால் உள்ளே இருக்கும் அந்த நோய் விசுவரூபம் எடுத்துவிடும். ஆசையும் அப்படித்தான். ஆசை என்பது மனித மனத்திற்கு இயல்பான ஒன்று. அது எல்லையுள் அடங்கியிருக்கின்றவரையில் மனிதன் வளர்ச்சியடையமுடியும். அது எல்லை கடந்துவிட்டால் மனிதனை அழித்துவிடும். ஆகவே, ஆசையை நோய் என்றார். விடுமின் என்பதை முதலில் கூறி, முதலில் விடவேண்டியது வெகுளி என்றும், அதனுடன் கூடவே விடவேண்டியது வேட்கை என்றும் கூறுகிறார்.

வேட்கை எனப்படும் இதனைத் 'தவாப் பிறப்பு ஈனும் வித்து' (குறள்: 361) என்று வள்ளுவரும்,

புத்ததேவனும் கூறிச்சென்றனர். வெகுளியை விட்டால், வேட்கையை விட்டால் பிறப்பு நீங்கிவிடும் ஆதலால் 'விடுமின் வெகுளி வேட்கை நோய்' என்றார்.

நோயாளியைப் பரிசோதிக்கும் மருத்துவர் நோயாளியின் உடலில் புறத்தே தோன்றும் மாறுபாடுகளை (குறிகளை) முதலில் கூர்ந்து கவனித்துவிட்டு, இந்த மாறுபாடுகளைத் தோற்றுவிப்பது இன்ன நோயாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். அதாவது, உடலினுள் மறைந்துநிற்கும் நோயை அறிய உதவுவது புறத்தே தோன்றும் மாறுபாடுகளாகும். அதேபோல, மனத்தின் ஆழத்தில் புதைந்து நிற்கும் வேட்கை அல்லது ஆசையின் காரணமாகவே, அதை நிறைவேற்ற முடியாதபொழுது, சினம் பிறக்கிறது. உள்ளே உள்ள வேட்கைநோயைப் பிறரும் அறியுமாறு செய்யும் வெளிப்பாடு சினமாதலால் அதனை முதலிற் கூறினார் என்க.

பொருள்களின்மேல் ஏற்படும் பற்று எவ்வாறு சினமாக வெளிப்பட்டு அறிவை மழுங்கடித்துச் செய்யத்தகுவது இன்னது தகாதது இன்னது என்று பகுத்து உணரும் அறிவை மடக்கிவிடுதலால், மனிதன் தவறுகளைச் செய்து பாவங்களுக்கு உள்ளாகிறான் என்று கீதையும் பேசுகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழும் காலம் எவ்வளவு என்பது மறைக்கப்பட்டுள்ளது. எனவே, 'மிக ஓர் காலம் இனியில்லை' என்றார். ஆகவே, இப்பொழுது செய்யவேண்டியது என்ன என்பதை அடுத்துக் கூறுகிறார். இறைவன் திருவடியை அடைய ஒருப்படுமின் என்று கூறுகிறார். இவ்வாறு ஒருப்படுவதற்குத் தடையாக உள்ளது வெகுளியும், வேட்கையும் ஆதலால் அவற்றை விடுமாறு உபதேசித்துவிட்டு, இறைவன் திருவடி அடையச் சாத்தோடு (கூட்டத்தோடு) ஒருப்படுமின் என்றார். சாத்தோடு என்று சொல்லவேண்டிய காரணமென்ன?

தனிமனிதனாக இருக்கும்பொழுது எவ்வளவுதான் பொறி, புலன்களை அடக்க முயன்றாலும் மனம் தறிகெட்டு அலைவதை அடக்க முடிவதில்லை. அதுவும் அடங்க வேண்டுமானால் அதற்கு ஒரே வழி அந்த நிலையில் உள்ள மக்கட்கூட்டத்திடைத் தானும் ஒருவனாகக் கலந்துவிடுவதுதான்.

'மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்து உளதாகும் அறிவு (குறள்:454 )

என்றார் வள்ளுவர். 'தொண்டரோடு கூட்டு கண்டாய்' (தாயுமான: சுகவாரி-7) என்று தாயுமானவப் பெருந்தகை கூறுவதும் இதனையே ஆகும். அடிகளார், மன இயலையும் நன்கு அறிந்த விஞ்ஞானி ஆதலின் 'சாத்தொடு ஒருப்படுமின்' என்றார். சாதகர்களைப் பற்றிக் கூறும் 606, 607, 608ஆம் பாடல்களில் சாத்தைப்பற்றிப் பேசவில்லை. காரணம், சாதாரண மனித நிலையிலிருந்து பல நிலைகள் கடந்து சாதக நிலையை அவர்கள் அடைந்துவிட்டவர்கள் ஆதலின் சாத்தைப் பற்றிக் இங்குக் குறிப்பிடவில்லை. ஆனால், இப்பாடல் (609) பொதுமக்கட்கு ஆதலின் சாத்தோடு ஒருப்படுமின் என்று இங்கே பேசுகிறார். சாத்தோடு கூடியவர்கள் என்ன செய்யவேண்டும்? புயங்கன் ஆள்வான் புகழ்களைப் புடைபட்டு (சாத்தினிடையே இருந்து) போற்றுங்கள் என்கிறார்.

ஐந்தாம் பாடலில் (609), 'உங்கள் ஒத்த மனநிலை உடையவர்களோடு சேர்ந்து அவன் புகழைப் பாடுங்கள்' என்று கூறிய அடிகளார், இப்பொழுது இன்னும் ஒரு படி மேலே செல்கிறார். தம்மை ஒத்த அடியவர் கூட்டத்தினிடையே நின்று அவன் புகழ் பாடினால் மட்டும் போதாது. மிக முக்கியமான ஒன்றை இரண்டாவது அடியில் பேசுகிறார். புகழ்தல், பூப் புனைதல், தொழுதல் ஆகியவற்றில் மொழி, மெய் என்ற இரண்டிற்கும் உரிய பணியைத் தந்தாகிவிட்டது. எஞ்சியுள்ளது மனம்

ஒன்றுதான். அந்த மனம் குரங்குபோல் தாவும் இயல்புடையதாதலில் அதில் புயங்கன் தாளை வைக்கவேண்டும் என்கிறார். இவ்வாறு கூறியதால் மனம் என்பது ஏதோ ஒரு பருப்பொருள் என்றும், தாள் என்பது ஒரு வடிவுடைய பருப்பொருள் என்றும் நினைத்து விடக்கூடாது. மனம் என்பது வடிவில்லாத நுண்பொருள். புயங்கன்தாள் என்பதும் வடிவுகடந்த நுண்பொருள். மனம் என்ற நுண்பொருளில், தாள் என்ற மற்றோர் நுண்பொருளை 'வைத்திட்டு' என்று அடிகளார் பேசுவது கவனிக்கவேண்டிய ஒன்றாகும். ஒரு பருப்பொருளில் மற்றொரு பருப்பொருளை வைக்கலாம். ஆனால், ஒரு நுண்பொருளில் மற்றொரு நுண்பொருளை எப்படி வைக்கமுடியும்? மாபெரும் அறிஞராகிய அடிகளார் வைத்திட்டு என்ற சொல்லையும் அதன் பொருளையும் அறிந்துதானே பயன்படுத்தியுள்ளார்? அப்படியானால் அவர் சொல்வதன் கருத்து என்ன என்பதைச் சிந்திக்கத் தொடங்கினால், உண்மை விளங்கிவிடும்.

'வைத்தல்' என்பது 'தல்' விகுதி பெற்ற தொழிற்பெயராகும். இந்தத் தொழில் அல்லது வினை நடைபெறவேண்டுமேயானால் இதனைச் செய்வதற்குரிய வினைமுதல் அல்லது கர்த்தா வேண்டும். ஒரு பருப்பொருளில் மற்றொரு பருப்பொருளை வைப்பதற்கு எந்தக் கர்த்தாவாலும் முடியும். அடியில் உள்ள பொருளும் அதனுள் வைக்கப்படும் பொருளும் ஒன்றுக்கொன்று இணையாத வடிவுடையனவாக இருப்பின் கர்த்தா என்ன செய்கிறான்? வைக்கப்படும் பொருளின் வடிவத்தை சேர்த்தோ, குறைத்தோ, மாற்றியோ ஒரு வழிசெய்து இந்தப் பொருள் அந்தப் பொருளில் நுழைந்து செல்லுமாறு செய்துவிடுகிறான் அல்லவா? கர்த்தாவின் அறிவு வளர்ச்சி, உறுதி என்பவற்றிற்கு ஏற்ப ஒன்றினுள் ஒன்றை வைத்தல் எளிதாக நடைபெறுகிறது.

வைத்தல் என்ற சொல்லுக்கு உள்ள இந்த ஆழமான பொருளை மனத்துள் வாங்கிக்கொண்டால் புயங்கன் தாளை புந்தி (புத்தி) வைத்திட்டு என்பதன் நுணுக்கத்தைப் புரிந்துகொள்ளமுடியும். இங்கு ஒரு வேறுபாடு: யானை முதல் எறும்பு ஈறாய எல்லா உயிர்களிடத்தும் இணைந்தும் வெளிப்பட்டும் நிற்கும் இயல்புடையது புயங்கன் தாள். எதற்குள் வேண்டுமானாலும், அதற்குள் செல்லக்கூடிய இயல்பு அந்தத் தாளுக்கு உண்டு. அடியார்களுடைய புந்திக்குள் செல்வதில் தாளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை. பிரச்சினையெல்லாம் நம்முடைய புந்தியில்தான். பலருடைய புந்தி அடிப்பாகமில்லாத ஓட்டையான பாத்திரம் போன்றது. மேலும் பலருடைய புந்தி விநாடிக்கு விநாடி மாறிக்கொண்டேயிருக்கிறது. அடிப் பாகம் இல்லாமலும், வடிவு மாறிக்கொண்டும் இருக்கின்ற பாத்திரத்தைப் போன்ற புந்தியில், தாளை எப்படி வைப்பது? தாளை உடையவன் புந்தியுள் தாளை நுழைக்க எப்பொழுதும் தயாராக உள்ளான். புந்தியை உடையவர்களாகிய நாம் என்ன செய்யவேண்டும்? முதலில் புந்திக்கு ஒரு அடிப்பாகம் இட்டு உள்ளே நுழைந்த பொருள் வெளியே போய்விடாமல் இருக்கச் செய்யவேண்டும். அடுத்த படியாக விநாடிக்கு விநாடி மாறிவரும் அதன் வடிவைச் செப்பஞ்செய்து ஒரே வடிவுடன் இருக்குமாறு செய்யவேண்டும். இவ்வாறு செய்துவிட்டால் உள்ளே சென்ற திருவடி அங்கேயே தங்கிவிடும். இந்த முழுப்பணியையும் செய்யவேண்டியது புந்தியைப் பெற்றுள்ள நம்முடைய பணியே தவிர, இச்செயலில் திருவடியின் பணி ஒன்றுமில்லை. இத்தனை கருத்துக்களையும் உள்ளடக்கியே 'தாளே புந்தி வைத்திட்டு' என்கிறார். 'தாளே' என்பதன் ஏகாரம் இந்தத் திருவடிகளைத் தவிர வேறு எதுவும் புந்தியின் உள்ளே நுழைய இடம்தராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை அறிவிக்கின்றது.

609ஆம் பாடல் நம்போன்ற சாதாரண மக்களுக்காகச் சொல்லப்பட்டது என்று கூறியுள்ளோம். 'விடுமின் வெகுளி' தொடங்கி 610ஆம் பாடலில் உள்ள 'பூப்புனைமின்' என்பதுவரையிலுள்ள பகுதி சாதாரண மக்களுக்கே கூறப்பட்டது. என்றாலும் அடுத்துவரும் 'புயங்கன்தாளே புந்தி வைத்திட்டு' என்ற பகுதி சாதாரண மக்களுக்கு மட்டுமல்லாமல் சாதகர்களையும் உளப்படுத்திக் கூறியதாகும். சாதகர்களுக்கும் வரும் பல்வேறு இடையூறுகளை வெல்வதற்கு தாளைப் புந்தியில் வைப்பது இன்றியமையாததாகும்.

இந்தப் பணியைச் செம்மையாகச் செய்துவிட்டால் புகழ்தல், தொழுதல், பூப் புனைதல் ஆகிய செயல்கள் வெறும் சடங்குகளாக இல்லாமல் உண்மையான பூசனையாக இருக்கும். நம்மில் பலரும் தாளைப் புந்தியில் வைக்கும் செயலை விட்டுவிட்டு ஏனைய சடங்குகளை மட்டும் செய்வதால் அது நாவரசர் பெருமான் கூறிய 'பொக்கம் மிக்கவர் பூசனை'யாகவே முடியும்.

தாள் புந்தியில் வந்து தங்கிற்றா, இல்லையா என்பதை அறிய அடிகளார் ஒரு சுலபமான வழியினை 610ஆம் பாடலின் இரண்டாம் அடியில் தருகின்றார். எல்லா அல்லலையும் இகழ்மின் என்கிறார். அல்லல் எதிரே வரும்போதோ அல்லது அதனிடைச் சிக்கியபோதோ அதனைத் துச்சம் என்று இகழ்ந்து தள்ளக்கூடிய மனத் திட்பம் வந்துவிட்டதா? இகழக்கூடிய திடம் மனத்தில் வந்துவிட்டால் புயங்கன் தாள் புந்தியில் வந்துவிட்டது என்பதற்கு அடையாளம்.

இந்த நிலைக்கு அடுத்தபடி எந்த இடையூறும் நம்மை நோக்கி வரத் துணிவு பெறாது. வந்த அல்லலை இகழ்ந்துவிட்டோம்; இனி இடையூறு வரப்போவதில்லை; புந்தியில் புயங்கன் தாள் தங்கிவிட்டது. பூப் புனைதல், தொழுதல், புகழ்தல் ஆகியவற்றைச் செய்கின்றோம். இதன்

முடிவு என்ன தெரியுமா? திகழுஞ் சீரார் சிவபுரத்துச் சென்று சிவன்தாள் வணங்கி நிகழும் அடியார் முன்சென்று நாம் நெஞ்சம் உருகி நிற்போம் என்பதாகும்.

606, 607, 608ஆம் பாடல்களில் சாதகர்களுக்குரிய வழிமுறைகளைச் சொன்னாரே தவிர, 609, 610ஆம் பாடல்களைப் போல் அடிகளார் தாமே முன்னின்று நடத்திச்செல்லும் முறையில் அப்பாடல்களை அமைக்கவில்லை. 609ஆம் பாடலில் தாமே நடத்திச்செல்லும் முறையைத் தொடங்குகின்றார். நாம்போய்ச் சிவபுரத்துள் புடைபட்டுருகிப் போற்றுவோம் என்று தொடங்கியவர், புறப்படும் அடியார்களைத் திரும்பிப்பார்க்கிறார். புறப்பட்டுச் சில தப்படிகள் வைத்தவர் சிலர்; இடத்தை விட்டு எழுந்திராமல் போகலாமா, வேண்டாமா என்ற இரண்டாட்டத்தில் இருப்பவர் சிலர். அப்படி. புறப்படலாமா, வேண்டாமா என்று இருப்பவர்களைப் பார்த்து 'நிற்பார் நிற்க' என்று பேசுகிறார். இவர் இவ்வாறு கூறியவுடன் அரைகுறை மனத்தோடு எழுந்தவர்களுக்குப் போவதா வேண்டாவா என்ற இரண்டாட்டம் அதிகமாயிற்று. அவர்கள் முகம் அவர்கள் மனப்போராட்டத்தை எடுத்துக்காட்ட, அதனைக் கண்ட அடிகளார் சற்றுக் கடுமையாக 'நிற்பீர் எல்லாம் நிற்கும் பரிசே தாழாதே ஒருப்படுமின்' என்ற முடிவான கட்டளையை எடுத்து வீசுகிறார். அரைகுறை மனமுடையாருக்கு இப்பொழுது சந்தேகம் வந்துவிட்டது. அடிகளாரும் தங்களுடன் சேர்ந்து தங்கிவிடுவாரோ என்ற ஐயம் தோன்றலாயிற்று. அதனைப் போக்குபவர்போல 'நில்லா உலகின் நில்லோம் இனிநாம் செல்வோமே' என்று உடன் வருகின்ற ஒருசிலருடைய உறுதிப்பாட்டை எடுத்துக் பேசுகின்றார். அப்படியானால் எங்கே இவர் புறப்பட்டுவிட்டார் என்ற ஐயம், தங்கிவிடும் எண்ணம் உடைய சிலருக்குத் தோன்றுமல்லவா? அதற்கு

விடைகூறுவதுபோல, புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கு, இனி நாம் செல்வோமே என்று கூறி முடிக்கின்றார்.

இரண்டாட்டமாக உள்ள மனநிலைக்கு ஒரு விநோதமான சமாதானம் தோன்றுவதுண்டு. தாம் எங்கே போகிறார் என்பதை அடிகளார் கூறிவிட்டமையின் 'இன்று அவர் போகட்டும், போகவேண்டிய இடத்தைத் தெரிந்து கொண்டோம் ஆதலால் இன்று ஓய்வெடுத்துக்கொண்டு நாளை அல்லது நாளை மறுநாள் போனால் என்ன, குடியா முழுகிவிடும், என்று நினைக்கின்ற அந்த முழுச்சோம்பேறிகட்கு இறுதியாக ஓர் எச்சரிக்கைச் செய்கிறார் அடிகளார். இப்பொழுது புறப்படாமல் நாளைத் தள்ளிக்கொண்டு இருந்துவிட்டு, பின்னர் நீங்கள் புறப்பட்டுச்சென்றால், பெருமான் பெறுதற்கு அரியனாகிவிடுவான். 'நீங்கள் நினைத்தது நடவாதபொழுது அங்கே நின்று கவலைப்பட்டுப் பயனில்லை' என்ற கடுமையான எச்சரிக்கையை, 'பிற்பால் நின்று பேழ்கணித்தாற் பெறுதற்கரியன் பெருமானே' என்று கூறி முடிக்கின்றார்.

'இறைவன் தருகின்ற பேரானந்தத்தை இடைவிடாது உண்டு சுவைக்கின்றவர்களே! இப்பொழுது சிவபுரத்துக் கதவுகள் திறந்துள்ளன. அது எப்பொழுது மூடும் என்று தெரியாது, ஆகையால், திறந்திருக்கும்பொழுதே நுழைந்துகொள்ளுங்கள். இந்தக் கதவுத் தடையைத் தவிர வேறு தடையில்லை; ஆதலால் இதனுள் புகுந்துவிட்ட நமக்கு என்ன கிடைக்கப்போகின்றதென்பதை இதோ சொல்கிறேன். திருமாலும் அறியாத திருப்பாதங்கள் நமக்கு எளிதாகக் கிட்டிவிடும்' என்கிறார்.

முதலடியில் கூறப்பெற்றது, அதாவது பேரானந்தத்தை உண்டு சுவைக்கின்ற நிலை இந்த உலகத்தில் இந்த உடம்போடு இருந்துகொண்டு புயங்கன் ஆள்வான் பொன்னடியைப் புந்தியில் இருக்குமாறு செய்து

கொண்டவர்கள் அனுபவிக்கும் பயனாகும். மூன்று, நான்காம் அடிகளில் சொல்லப்பட்டது, இந்த உடம்பை நீத்த பிறகு செய்யப்படவேண்டிய கடமையும், கிடைக்கப் போகின்ற பயனும் என்ன என்பதாகும்.

முதலடியில் சொல்லப்பெற்ற சுவையை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் அடுத்தபடிக்குச் செல்ல முயல வேண்டுமே தவிரத் தளரக்கூடாது. மனம் தொய்வு அடையப்பெற்றால் என்ன நிகழும் என்பதை இரண்டாமடியில் கூறுகிறார். அதுவே 'அருமாலுற்று அழுங்கி அரற்றுதலாகும்'.

பொய்யான இந்த உலகத்தில் கிடந்து புரள்வதில் இன்பம் காண்கின்றவர் பலர். 'இதை விட்டுவிட்டு, அவன் திருவடியைச் சேரக் கருதி உறுதிப்பாட்டுடன் சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திப்பீர்களாக' என்கிறார். பல்வேறு எண்ணங்களால் உந்தப்பெற்று மனம் தறிகெட்டு அலைவதுபோல் அலையும் இயல்பு சிந்தனைக்கு இல்லை. என்றாலும், அந்தச் சிந்தனைக்குக் கூடச் சில சமயங்களில் வழுக்கிவிழும் இயல்பு உண்டு. சிந்தனை வழுக்கிவிழாமல் இருக்கவேண்டுமேயானால் அதற்கென்று ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும். திருவடியைச் சேரக் கருதுவதுதான் அந்தக் குறிக்கோள். குறிக்கோள் இதுதான் என்ற முடிவு வந்தவுடன் அந்தச் சிந்தனை அந்தக் குறிக்கோளைத் தவிர வேறு இடம் செல்லாமல் திருந்த வைத்து, குறிக்கோளையே சிந்திக்கவேண்டும்(சிந்திமின்). 'இந்த ஒரே குறிக்கோளுடன், ஏகாக்ர சித்தத்துடன் சிந்திக்கத் தொடங்கினால் என்ன கிடைக்கும் தெரியுமா? புயங்கன் அருளமுதத்தை ஆரப் பருகி அழுந்த முடியும். எனவே, தெளிந்த சிந்தனையுடன் குறிக்கோளை நோக்கிச் செல்வீர்களாக' என்கிறார்.

இந்த உலகின் நிலைமை, நம்முடைய குறிக்கோள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு இன்றே வந்து அவன்

திருவருளுக்கு ஆளாகாமல் இவ்வுலகிடை வாழ்வே. பெரிதென்று நினைந்து இருந்தால் மயக்கம்தான் உங்களுக்கு மிஞ்சும் (மருள்வீர்). இப்படி நீங்கள் மயக்கமடைந்தால் உங்களை யார் மதிக்கப்போகிறார்கள்? புத்தி கலங்கிச் செய்வதறியாது மயங்குகின்றவர்களே! இதனால் நீங்கள் பெறப்போவது, உலகிடை வாழ்வு. மகிழ்ச்சி தருகின்றது என்றுதானே இவ்வாழ்வைத் தொடங்கினீர்கள்? அதுமட்டுமல்ல, உங்களுடைய அறிவு, செல்வம், பதவி என்பவற்றைக் கொண்டு உங்களை எல்லோரும் மதித்துப் போற்றுகிறார்கள் என்று நினைத்தீர்களே, இவை அனைத்தும் நிலையில்லாமல் போனவுடன் உங்களை யார் மதிக்கப்போகின்றார்கள்? பிறர் காட்டும் மதிப்பே பெரிதென்று இறுமாந்திருந்த உங்கட்கு அந்த மதிப்புப் போனவுடன் அறிவு கலங்கி மயக்கந்தான் எஞ்சும். இந்த அறியாமையிலிருந்து நீங்கள் தெளிவு பெறவேண்டுமேயானால் இதனைச் செய்யவேண்டும். எதனை? புகழ்தல், புரள்தல், தொழுதல் ஆகியவற்றைச் செய்துகொண்டிருக்கும் உண்மை அடியார்களைக் கண்டு மனம் தெளிந்து நீங்களும் இதனைச் செய்யுங்கள்.

இறைவனால் படைக்கப்பட்ட நீங்களே, கடல்போல் விரிந்துள்ள அவனருளுக்குப் பாத்திரமாகாவிட்டால், ஐயோ பாவம்! வேறு யார் இதனைப் பெறப் போகிறார்கள்?

இப்பதிகத்தின் ஐந்து முதல் பத்துவரை உள்ள பாடல்கள், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று உலகிடை வாழும் சாதாரண மக்களையும் தட்டி எழுப்பி அவர்கள் அடையவேண்டிய குறிக்கோள் என்ன என்பதை விளக்கி 'உலகிடை வாழ்ந்ததுபோதும், உடனே புறப்படுங்கள்' என்று எதிர்நின்று கூறி அவர்களையும் அழைத்துச் செல்ல அடிகளார் கூறும் சொற்களாகும்.

நாயினும் கடையேன் என்று ஓயாமல் தம்மைச் சொல்லிக்கொண்டிருந்த அடிகளாருக்கு, கூத்தன் ஒரு மாபெரும் தைரியத்தை உள்ளத்துள் உண்டாக்கினான். அவனுடைய எண்ணப்படியே பராஅமுதாகிய திருவாசகம் புனையப்பட்டுவிட்டது; இவ்வுலகிடை அடிகளார் வந்த வேலை முடிந்துவிட்டது; ஓர் எட்டில் அவன் திருவடிகளை அடையும் நிலைக்கு வந்தாகிவிட்டது; இந்த நிலையில் அடிகளாருடைய பரந்து விரிந்த மனத்தில் உலக மக்களின் காட்சி தென்படுகிறது. போவதற்குமுன்னர் அவர்களுக்குச் சில அறவுரைகள் கூறி, வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பதை எடுத்துக் கூறி, 'உடனே புறப்படுங்கள்; பிறபால் நின்று பேழ்கணித்தால், பெம்மான் பெறுதற்கரியன்' என்பதையும் நினைவூட்டுகிறார்.

திருவாசகத்திலுள்ள 658 பாடல்களிலும் இந்த யாத்திரைப் பத்தின் பத்துப் பாடல்கள் தனித்து விளங்குகின்றன. அருளாளர்கள், சாதகர்கள், சாதாரண மக்கள் ஆகிய மூன்று தரத்தாருக்கும் பத்தே பாடல்களில் வழி கூறிய பெருமை யாத்திரைப் பத்து ஒன்றிற்குமட்டுமே உண்டு.

## திருப்படைஎழுச்சி

மனிதர்களாகப் பிறந்துவிட்டால் அஞ்ஞானம், துன்பம் என்ற இரண்டும் அவ்வாழ்க்கையில் பெரியதோர் இடத்தைப் பற்றிநிற்கும். ஐந்நூறு ஆண்டுகள் தவம் செய்து இறுதியாக ஒரு பெண்ணின் பொருட்டாக அத்தனையையும் இழந்த விசுவாமித்திரன் கதை, அஞ்ஞானத்தின் செயற்பாட்டுக்கு உதாரணமாகும். சுந்தரர் உற்ற நோய், நாவரசர் பெற்ற வயிற்று வலி முதலியவை அடியார்களையும் அல்லல் விட்டுவைப்பதில்லை என்பதற்கு உதாரணங்களாகும். அஞ்ஞானம், துன்பம்

ஆகியவற்றைக் கடந்துதான் சிவபுரம் ஆகிய குறிக்கோளை அடைய முடியும். தற்காலத்தார் இதனை வாழ்க்கை முழுதுமே போராட்டம் என்று கூறுவர். உலகியற் பொருளை அடையவேண்டிச் செய்யப்படும் கடுமையான உழைப்பையும் அதனைப் பெறுதலுக்குச் செய்யும் போராட்டத்தையும் இது குறிக்கும்.

ஆன்ம முன்னேற்றத்திலும், அஞ்ஞானம், அல்லல் என்ற இரண்டும் உண்டு. கண்ணப்பர் போன்ற ஒருசிலர் இந்த அஞ்ஞானம், அல்லல் என்பவற்றைச் சிந்திக்காமலேயே ஆறு நாளில் சிவபுரம் அடைந்தார்கள். இவர்கள் புறநடையே அன்றிப் பொது இலக்கணம் ஆகமாட்டார்கள்.

மிகப் பெரும்பாலானவர்கள் இந்தப் பொது இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். ஆதலின், ஆன்ம முன்னேற்றம் அடைந்து சிவபுரம் செல்ல அவர்கள் விழைவார்களாயின் என்ன செய்யவேண்டும் என்பதைத் திருப்படையெழுச்சியின் இரண்டு பாடல்களில் விளக்கமாகக் கூறுகிறார் அடிகளார்.

பக்தியில் ஈடுபட்டு நான், எனது என்ற அகங்கார மமகாரங்களை ஒரே விநாடியில் துறந்தவர்கள், அன்பே வடிவாய் ஆனவர்கள், இறைவன் திருவடிகளை உள்ளத்திருத்தி 'எனை நான் என்பது அறியேன் பகல் இரவாவதும் அறியேன்' (508) என்ற மனநிலையிலுள்ள பக்தர்கள் ஆகியோர்பற்றி இந்த இரண்டு பாடல்கள் பேசவில்லை.

தன்னலத்தோடு வாழ்ந்தாலும் ஒரு குறிக்கோளோடு வாழ்ந்து, ஆன்மிக வாழ்க்கையில் அடியெடுத்துவைக்கும் சாதகர்களுக்காகக் கூறப்பட்டவையே இவ்விரு பாடல்களுமாகும்.

## திருவெண்பா

மானிட உடம்பெடுத்த உயிர்கள் அனைத்திற்கும் வினை என்ற ஒன்று தவறாமல் அவ்வுயிரைப் பற்றிநிற்கும். வினைக்கு ஒரு தனிச்சிறப்புண்டு. அது இருப்பதை அறிந்துகொள்வதே கடினம்; அதைவிடக் கடினம் அதனைப் போக்க வேண்டும் என்ற நினைவு தோன்றுவது; அதைவிடக் கடினம் அந்த நினைவைச் செயலாக்கி வினையைப் போக்க முற்படுவது. பல சமயங்களில் இந்த முயற்சியில் வெகுதூரம் சென்றவர்களைக்கூட வினை குறுக்கிட்டுப் பரமபதப் படத்திலுள்ள பாம்புபோலப் புறப்பட்ட இடத்திற்கே கொண்டுவிட்டுவிடும்.

விசுவாமித்திரர் பன்னூறு ஆண்டுகள் தவம் செய்தும் மேனகையைக் கண்ட ஒரு விநாடியில் புறப்பட்ட இடத்திற்கு வந்துவிடுகிறார். எனவே, அடிகள் இதனை வெய்ய வினை என்கிறார்.

தவம் செய்து வினைகளைப் போக்க முயல்பவர்களும் உண்டு. இவ்வழியில் செல்பவர்களுக்குப் பல இடையூறுகள் ஏற்படும். அவர்களுடைய பொறி, புலன்கள், சுற்றுச்சூழல்கள் என்பவற்றைத் துணையாகக் கொண்டு அந்தப் பழவினை இவர்களைக் கீழே தள்ளிவிட முயலும், இவ்வாறெல்லாம் நிகழாமல் இருக்கவேண்டுமானால் அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு.

இறைவன் திருவருள் என்ற தீயில் இட்டு இவ்வினைகளைப் பொசுக்கினால் ஒழிய, அவை மீண்டும் மீண்டும் தலையெடுப்பதைத் தவிர்க்க முடியாது. இந்த நுணுக்கத்தைத்தான் அடிகளார், 'வெய்ய வினை இரண்டும் வெந்து அகலத் திருவார் பெருந்துறையான் தேன் உந்து செந்தீ'யை (617) மனத்தால் மருவவேண்டும் என்கிறார்.

பெருந்துறையானைச் செந்தீ என்று கூறியதால் அது வினையைச் சுட்டெரிக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால்,

வினையோடு இரண்டறக் கலந்த நாமுமல்லவா சுடப்படுவோம். எனவே, தீயின் சூட்டுக்கு அஞ்சி, 'இந்த வினை இருந்தால் இருந்துவிட்டுப் போகிறது' என்றே பலரும் நினைவர். மனித மனத்தின் இந்தக் குறைபாட்டை எண்ணிய அடிகளார் 'தேன் உந்து' என்ற சொல்லைச் 'செந்தீ'யோடு சேர்ப்பதால் செந்தீயின் உக்கிரத்தைக் குறைக்கின்றார்.

தேனை உண்ணவேண்டும் என்ற ஆசை உடையவர்கள் அது சூடாக இருந்தாற்கூட வாயில் ஊற்றிக்கொள்வர். இந்தத் தன்மையை, சிந்தாமணி ஆசிரியர் 'வெய்ய தேன் வாய்க் கொண்டாற்போல் விழுங்கலோடு உமிழ்தல் தேற்றான்' (சீவக:2072) என்று பாடுகிறார். ஆகவே, தேனுந்து செந்தீ என்று கூறிய அடிகளார், செந்தீக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை மருவுதல் வேண்டும் என்று கூறுகிறார்.

ஒரு பொருளை மருவினால் அச்செயலில் பெரிதும் ஈடுபடுவது மார்பேயாகும். மார்பை ஒட்டியிருக்கும் மனத்தில் வினை தோன்றுவதற்குரிய நிலைக்களன் இருத்தலின், வெய்யவினை இரண்டும் வெந்து அகலத் தேனுந்து செந்தீயை மருவ வேண்டும் என்றார்.

இப்பகுதியின் இரண்டாம் பாடல் (618) பெரும்பாலான அருளாளர்கள் வாழ்க்கையில் இயல்பாக நடைபெறும் ஒரு செய்தியைக் கூறுகின்றது. பட்டினத்துப் பிள்ளைக்குக் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' (திருப்பாடற்றிரட்டு:10,11) என்ற தொடர் உபதேசமாயிற்று. அருணகிரிப் பெருமானுக்குச் 'சும்மா இரு சொல்லற' (கந்தரனுபூதி:12) என்ற தொடர் அவரது வாழ்க்கையையே மாற்றிவிட்டது. இப்பெருமக்கள் எதிர்பாராமல் கிடைத்த இந்த உபதேசங்களையே தம் வாழ்வின் திருப்புமையங்களாகக் கொண்டு முன்னேறியுள்ளனர்.

அடிகளார் வாழ்க்கையில் பெருந்துறை நாயகன் மால் ஏற்றி, வாரா வழியருளி அவருடைய போக்கையே மாற்றிவிட்டான். பிற்காலத்தில் இந்த நிகழ்ச்சியை நினைந்து பார்க்கின்ற அடிகளார், அதில் பெரிதும் ஈடுபடுகிறார். இத்தகைய புனர்ஜென்மம் யாரால் வந்தது? பெருந்துறை நாயகனால்தானா அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா என்ற ஆராய்ச்சியில் ஒருவேளை ஈடுபட்டிருத்தல்கூடும். குருநாதரைச் சந்தித்து அவருடன் இருந்த நேரம் ஒருசில விநாடிகளே ஆகும். அந்த விநாடி நேரத்தில் இவ்வளவு பெரிய மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்ற வினாவை எழுப்பிக்கொண்டு சிந்தனையில் ஈடுபட்டார் போலும்.

தம் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கின்ற அடிகளாருக்கு இந்த ஒரு நிகழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் தம் வாழ்க்கையைத் திருப்பவில்லை என்ற முடிவான எண்ணம் உறுதிப்படுகிறது. அந்த மனநிலையில் பாடப்பட்ட பாடலாகும் இது.

யாரேனும் ஒருவர் தம்மிடம் வந்து, 'மணிவாசகரே! இத்தனை சிறப்புக்களையும் நீர் பெற, கடவுட்பித்து ஏற உமக்கு அருள் செய்தவர்கள் வேறு யாருமில்லை. உம் வினைகூட இதனைச் செய்யவில்லை.திருப்பெருந்துறையான் தான் இதனைச் செய்தான்' என்று உறுதிபடக் கூறுவார்களேயாயின், அதனைக் கேட்டவுடன் எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் 'ஆர்ப்பேன் அரற்றுவேன்' என்கிறார்.

இதனைப் படிக்கும்போது ஒரு சிறு சிக்கல் மனத்திடைத் தோன்றத்தான் செய்கிறது. பெருந்துறையான் அருளை நேரிடையாகப் பெற்று இறையனுபவத்தில் மூழ்கிய அடிகளார், 'யாரேனும் ஒருவர் வந்து என்னிடம் கூறினால்' என்று ஏன் பாடவேண்டும்? இதுவும் மனித மனத்தின் ஒரு விந்தையான கூறாகும். ஒரு குறிப்பிட்ட

செயல் அல்லது நிகழ்ச்சிபற்றி எவ்வளவு வலுவான முடிவை நாம் கொண்டிருந்தாலும் புறத்தேயுள்ள ஒருவர் அந்த முடிவு சரியானது என்பதைக் கூறுவார்களேயானால், அதனால் ஏற்படும் மகிழ்ச்சி தனிப்பட்டதுதான். இந்த இயல்பைத்தான் அடிகளார் பேசுகிறார். வள்ளுவப் பேராசான்

ஈன்ற பொழுதில் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (குறள்: 69 )

என்று பாடியதும் இந்த நுண்மையான கருத்தை அறிவுறுத்தவேயாகும். 'கேட்ட' என்ற சொல்லை மிக அற்புதமாக வள்ளுவர் பயன்படுத்தியுள்ளர். இதனை நன்கு அறிந்த மகாகவிபாரதியார் 'கண்ணம்மா- என் குழந்தை' என்ற தலைப்பில் பாடும்போது, 'மெச்சி உனை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி' என்று குறிப்பிடுகின்றார்.

இளமைதொட்டே ஒரு குறிக்கோளை முன்னிறுத்திக் கொண்டு அதனை நோக்கி முன்னேறுபவர் சிலர். ஒரு சிலர் இந்த முறையில் செல்லாமல் சராசரி வாழ்வில் ஈடுபட்டு உலக இன்ப துன்பங்களை அனுபவித்து வாழ்ந்துகொண்டே செல்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் யாரோ ஒருவர் சொல்லிய சொல், அல்லது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி வாழ்வையே திசை திருப்பும் ஒரு கருவியாக அமைந்துவிடுதலும் உண்டு. வளர்ந்துவிட்ட அந்த நிலையிலிருந்து தங்களுடைய பழைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும் இயல்பு இத்தகைய பெருமக்களிடை உண்டு. இவ்வளவு அரிய சிறப்பைப் பெற நான் என்ன செய்தேன் என்ற வினாவை அவர்கள் எழுப்பிக் கொள்கின்றனர். உயர்ந்தவர்கள் ஆதலால், எங்கோ எப்பொழுதோ செய்த தினையளவு குற்றம் பனையளவாகக் காட்சியளிக்கிறது. அதையே பெரிதுபடுத்தி இப்பெருமக்கள் பாடுகின்றனர். இதனையே அடிகளார், 'செய்த பிழை

அறியேன் சேவடியே கை தொழுது உய்யும் வகையின் உயிர்ப்பு அறியேன்' (619) என்று பாடுகின்றார்.

சேவடி கை தொழாமலா இருந்திருப்பார்? வரகுணன் போன்ற சிவ பக்தனிடம் அமைச்சராக இருந்த ஒருவர் சேவடி கை தொழாமலா இருந்திருக்க முடியும்! ஆனால், என்றோ ஒருநாள் அல்லது சில நாட்கள் வேலைப் பளுக் காரணமாகக் கைதொழ மறந்திருக்கலாம். இப்பொழுது அதனைப் பெரிதுபடுத்திப் பாடுகிறார். சேவடி தொழும் நிலை மூச்சுக் காற்றுப்போல் ஒரு விநாடியும் இடைவிடாமல் நடைபெற்றிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. பின்னர் எவ்வாறு இந்த நிலை கிடைத்தது? அடுத்தபடியாக, அதற்கு விடை கூறுகிறார். 'வையத்து இருந்து உறையுள் வேல்மடுத்து என் சிந்தனைக்கே கோத்தான்' என்பதே அந்த விடையாகும்.

நானாக முயன்று செய்யாத ஒரு காரியத்தை பெருந்துறை நாயகன் குருவடிவு தாங்கி இவ்வையத்து வந்து, உறையுள் இருக்கும் வேலை எடுத்து என் மார்பில் பாய்ச்சியதுபோல என் சிந்தனையில் மெய்ஞ்ஞானத்தைப் (வேல்) புகுத்தினான் என்க.

உலகில் சில செயல்கள் நம் கண்முன்னர் நேரிடையாக நடைபெறுவதில்லை. அதற்குப் பதிலாக நாம் காணாத முறையில் நமக்குப் பின்புறத்தில் நடைபெறுகின்றன. வினையையோ அது செய்யும் செயல்களையோ நாம் கண்ணால் காண முடிவதில்லை. ஆனால், அவற்றின் பயனை அனுபவித்தே தீருகின்றோம். பல சமயங்களில் இந்தப் பயன்களையும் அதனைத் தரும் வினைகளையும் வேரொடு களைந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று சிந்திக்கின்றோம். ஆனால், கண்ணுக்குத் தெரியாத வினையை எவ்வாறு அறுப்பது? இதனை யாரேனும் செய்யக்கூடுமேயானால் அவருக்கு வாணாள் முழுதும் நன்றிக்கடன்பட்டிருப்போம். இதனையே

அடிகளார் 'முன்னை வினை இரண்டின் வேர் அறுத்தவன்' (620) இதோ என் முன் நிற்கின்றான் என்று பாடுகின்றார். இருவினை என்று அடிகளார் குறிப்பிடுவது சஞ்சித, பிராரத்துவ வினைகளையாகும்.

முன்னை வினைகள் இரண்டையும் வேர் அறுத்ததோடு விட்டானா அவன்? பிறப்புக்குரிய வேர்களில் இரண்டை அறுத்துவிட்டான். ஆனால் ஆகாமியம் என்ற மூன்றாவது ஒரு வேர் இருக்கிறதே! இதனை என்ன செய்வது? பின்னே இருந்த வினைகளை அறுத்த அவன் இப்போது ஏன் முன்னே நிற்கின்றான் என்று தெரிகிறதா? வாழ்க்கையில் நாள்தோறும் நடைபெறுகின்ற செயல்களால் வருவதன்றோ ஆகாமியம்? அதனைப் போக்கவே முன்னர் நிற்கின்றான். அவன் முன்னே நிற்பதால் என்ன பயன் என்று கேட்கிறீர்களா? இந்த ஆகாமிய வினை வளரவளர எதிரே இருப்பவன் அந்தந்த விநாடியில் அதனை அறுத்துவிடுகிறான். அதனையே 'பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்' என்கிறார்.

'பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்' என்று நான்காம் பாடலில் (620) கூறினாரல்லவா? அது எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை ஐந்தாம் பாடலில் (621) விளக்குகின்றார்.

மாபெரும் மன்னன் ஒருவன் ஓர் இடத்தில் அமர்ந்திருக்கிறான் என்றால் அவனுடைய கண்ணசைப்போ அல்லது வாய்மொழி ஆணையோ இல்லாமல் அங்கு எதுவும் நடைபெறாது. அதுபோல அடிகளார் உள்ளத்தில் இப்பொழுது அமர்ந்திருப்பவன் யார் தெரியுமா? 'பெருந்துறையுள் மேய பெருமான்' என்கிறார். உள்ளத்துள் அவன் வந்து தங்கிவிட்டால் அவனை மீறி ஆகாமிய வினை எதுவும் நடைபெறப்போவதில்லை.

பேராற்றல் படைத்தவன்தானே இதனைச் செய்யமுடியும்! ஆகாமிய வினையையே போக்கக்கூடிய ஒருவன் என்றால், அவன் எவ்வளவு பேராற்றல் வாய்ந்தவனாக இருத்தல் வேண்டும்! பெருந்துறையுள் மேய பெருமான் என்று கூறிவிட்டால் எல்லோரும் அதனைப் புரிந்துகொள்ள முடியுமா? அதற்காகவே முதலிரண்டு அடிகளில் 'அனைத்து உலகும் ஈன்ற மறையோனும் மாலும் மால் கொள்ளும் இறையோன்' என்று அவனது இலக்கணத்தை விளக்குகின்றார்.

இத்தகைய ஒருவன் என்னுள் 'பிரியாது இருந்து உறைகின்றான்'. ஆதலாலும், அவ்வப்பொழுது என் ஆகாமிய வினையைச் சுட்டெரிக்கின்றான் ஆதலாலும் 'பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்' (620) என்று கூறினார்.

பெருந்துறை நாயகன் மூன்று செயல்களைத் தமக்குச் செய்ததாக ஆறாம் பாடலில் (622) அடிகளார் பேசுகிறார். அவன் செய்த மூன்று செயல்களாவன: பித்து என்னை ஏற்றிய செயல், பிறப்பு அறுத்த செயல், என் மனத்தை மத்தமே ஆக்கிய செயல் ஆகியவையாம். இம்மூன்று செயல்களும் வெவ்வேறானவை. பிறப்பு அறுத்தல் என்ற நடுவேயுள்ள செயல் இனி என்றோ ஒருநாள் நடை பெறவேண்டிய செயலாகும். இப்பொழுது அடிகளார் வாழ்ந்துகொண்டுதானே இருக்கிறார்! உடனடியாக அவருள் பித்தை ஏற்றினான். ஏற்றப்பட்ட ஒன்று உடனேயோ, சற்றுக் கழித்தோ, இறங்கிவிடும் இயல்புடையதாதலின், தான் ஏற்றிய பித்தை இறங்கி விடாமல் நிலை பெறுமாறு செய்தல் இரண்டாவது செயலாகும். அதாவது அவருடைய உள்ளம் திருவடிகளையே பற்றிக்கொண்டு உன்மத்தம் பிடித்து நிலைபெற்று இருக்குமாறு செய்தான். உடனடியாகச் செய்யப்பட்ட செயல்கள் இரண்டு. பின்னர் என்றோ

ஒருநாள் நிகழவேண்டிய செயல் ஒன்று. ஆக இந்த மூன்றையும் ஏதோ பெரு முயற்சி செய்து, கடின உழைப்பால் செய்தான் என்று நினைக்கிறீர்களா? இம்மூன்று செயல்களும் எடுத்து விளக்கமுடியாத (பேச்சரிதாம்) மாபெரும் செயல்கள் என்பது புரிகிறதல்லவா? அப்படியிருந்தும் பெருந்துறை அத்தன் இதனை எவ்வாறு செய்தான்? எவ்வளவு நாட்களில் செய்தான்? அதுதான் வேடிக்கை! தம்மைப் பார்த்த ஒரே பார்வையில் இந்த மூன்று செயல்களும் நிகழ்ந்துவிட்டன என்கிறார்.

இதுமட்டுமா செய்தான்? இவற்றைச் செய்ததோடு நில்லாமல், பேரருள் செய்து ஆட்கொள்ளவும் செய்தான் என்கிறார்.

உலகிடை வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உபகாரத்தை மறக்கக்கூடாது என்பதோடுமட்டுமன்றி நன்றியையும் பாராட்ட வேண்டும் என்று கருதினர் இந்நாட்டவர். இந்த நிலையில் உபகாரத்தைப்பற்றி நினைக்கும்பொழுதே இதனைச் செய்தவன் யார் என்ற வினாத் தோன்றுகிறது. அடுத்தபடியாக இந்தச் சிறப்பைப் பெற எனக்கென்ன தகுதி என்ற வினாத் தோன்றுகிறது. இந்த அடிப்படையில் தான் எட்டாம் பாடல் (624) தோன்றுகிறது. செய்யப்பெற்ற உபகாரம் 620, 621, 622 ஆகிய பாடல்களில் விரிவாகப் பேசப்பெறுகிறது. இவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தவன் என்றவுடன் யாரவன் என்ற வினாத் தோன்றுமன்றோ! அதற்கு விடையாக 624ஆம் பாடலின் முதலடி அமைகின்றது. 'யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீர் உடையான்' என்பதே அந்த அடியாகும்.

அவ்வளவு பெரியவன் இவ்வளவு பெரிய உபகாரத்தை யாருக்குச் செய்தான் தெரியுமா? அதுவே வியப்புக்குரியதாகும். 'யாவர்க்கும் கீழாம் அடியேனை'

என்பதால் பெற்றுக்கொண்டவரின் இலக்கணத்தையும் பேசிவிட்டார். முதலில் மூன்று பாடல்களில் விரிவாகச் சொல்லியவற்றை இங்கே சுருக்கி யாவரும் பெற்று அறியா இன்பத்துள் வைத்தான் (624) என்று முடிக்கின்றார்.

சாதாரண உபகாரத்திற்கு நன்றி சொல்லலாம். கைம்மாறுகூடச் செய்யலாம். ஆனால், யாரும் பெற்றறியா இன்பத்துள் வைத்த ஒருவனுக்கு எப்படி நன்றி சொல்வது, எவ்வாறு கைம்மாறு செய்வது என்று அங்கலாய்க்கிறார்.

தொடக்கத்திலிருந்தே அடிகளாரின் உள்ளம் ஈடுபட்டது குருநாதர் வடிவில் என்று முன்னரும் கூறியுள்ளோம். குருநாதர் என்று கூறியவுடன் அவருடைய முகமண்டலத்தில் ஈடுபட்டதைக்காட்டிலும், திருவடிகளில்தான் அடிகளாரின் மனம் அவருடைய அதிகம் ஈடுபட்டது. ஆக, சென்ற எட்டுப் பாடல்களில் பெருந்துறை நாயகன் பற்றிப் பேசிவந்த அடிகளாரின் எண்ணம் பெருந்துறையைக் கடந்து மதுரைக்கு வந்து, குதிரைச்சேவகனிடம் நின்று, அச்சேவகனின் திருவடிகளில் லயித்துவிடுகிறது.

குதிரைச் சேவகனுடைய தேஜோமயமான முக மண்டலத்தில் பலர் ஈடுபட்டனர். பாண்டியன்கூட அப்படித்தான். ஆனால், அடிகளாரின் ஈடுபாடு அங்கவடிக்குள் நுழைந்திருந்த அக்குதிரைச் சேவகனுடைய திருவடிகளிலேயே செல்கின்றது.

திருவடிப் பேறு அல்லது திருவருட் பேறு என்பதைச் சைவர்கள் பெரிதும் போற்றுவார்கள் என்றாலும் அடிகளார் ஈடுபட்டது திருவடி வடிவாகவுள்ள திருவருளில் அன்று; உண்மைத் திருவடியிலேயே ஆகும். காரணம், குருநாதரைவிட அவர் திருவடி சிறந்தது என்று கருதியதுபோல இங்கும் குதிரைச் சேவகனைவிட அவன் திருவடி சிறந்தது என்று கருதுகின்றார். அதனையே 'மா

ஏறி வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள்' (625) என்று பாடுகின்றார்.

பெருந்துறையில் இருந்த பெருமான் நெஞ்சத்து வந்திருந்தான். எப்படி இருந்தான்? பிறவியைப் போக்கும் மருந்து உருவாய் (626) வந்து இருந்தான்.

பிறவியைப் பிணி என்றே பலரும் கூறுவர். எங்கோ இருந்துகொண்டு இந்த மருத்துவன் தன் அருளைச் செலுத்துவதன்மூலம் பிணியைப் போக்காமல், பிணியாளனின் படுக்கையிலேயே மருந்துவடிவாக வந்து இருந்துவிட்டான். மருந்து வேறு மருத்துவன் வேறு என்று இல்லாமல் மருத்துவனே மருந்தான விந்தை தம்முடைய நெஞ்சில் நடைபெற்றுவிட்டது என்று கூறிய அடிகளார், இப்பொழுது அந்த நெஞ்சைப் பார்த்து, நீ செய்வது நியாயமா என்று கேட்கின்றார். 'ஏ நெஞ்சே அவன் யார் தெரியுமா? எங்கோ இருக்கவேண்டிய அவன் உன்பால் மருந்து வடிவாக வந்து தங்கிப் பிறவியையும் போக்கத் தயாராகவுள்ளான். நீ அங்கு இங்கு ஓடிவிடாமல், வந்து தங்கியுள்ள அவனுடைய இணை அடிகளையே சிந்தித்து உனக்கு வேண்டியவற்றையெல்லாம் இரந்து கேட்பாயாக! எல்லாம் தரும் காண்' என்ற கூறுவதன்மூலம் ஒரு நுணுக்கமான கருத்தைத் தெரிவிக்கின்றார்.

எங்கோ இருக்கின்ற அவனை இங்கு உள்ள நெஞ்சு நினைந்து சிந்தித்து தொழுது வழிபட்டு, இன்னது வேண்டும் என்று கேட்பதுதான் மரபு. ஆனால், இங்கு என்ன நிகழ்ந்தது? அவ்வனே இங்கு வந்துவிட்டான். நெஞ்சின் பக்கத்திலேயே மருந்துவடிவாக இருக்கின்றான். பக்கத்தில் வந்துவிட்டதால் அவன் அருமைப்பாடறியாத இந்த முட்டாள் நெஞ்சம் இங்குமங்கும் அலைகிறது. அச்செயலை விட்டுவிட்டு வேண்டுமானவற்றை இரந்து பெற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார்.

திருப்பெருந்துறை நாயகன் நீண்டகாலம் தங்கியிருந்த பெருந்துறையை விட்டு யாரேனும் ஒருவருடைய உள்ளத்தில் குடிபுக வேண்டும் என்று நினைத்தான்போலும். குருந்தமரத்தடியிலிருந்து நெடுங்காலம் காத்துக் கொண்டிருந்த அவனுக்குத் திருவாதவூரர் என்ற அமைச்சர் வசமாகச் சிக்கினார். அவருடைய உள்ளத்தில் குடிபுகவேண்டும் என்று பெருந்துறை நாயகன் முடிவு செய்துவிட்டான். ஆனால், வாதவூரரின் நெஞ்சத்தில் இவன் புக இடமின்றி எத்தனையோ குடிபுகுந்திருந்தன. பெருந்துறை நாயகனுக்கு வேறு வழியே இல்லை. அவன் குடிபுக வேண்டுமானால் இவற்றையெல்லாம் அப்புறப்படுத்தி அந்தச் சிந்தையை தமக்குரிய ஊராகச் செய்துகொள்ள வேண்டும். என்ன செய்தான் தெரியுமா? முதலில் அந்த உள்ளத்தில் குடியிருந்த அஞ்ஞானமாகிய இருளை அகற்றினான். இந்த அஞ்ஞானம் இருக்கின்றவரையில் அதனோடு தொடர்புடைய துன்பம் இரட்டைப் பிறவிபோல் அங்கேயே குடியிருந்தது. இருளை அகற்றிய நாயகன் அந்தத் துன்பத்தை வேரொடு களைந்தான். வீட்டை இவ்வாறு தூய்மை செய்த பிறகு இருளிருந்த இடத்தில் ஒளிபுக வேண்டுமே! அதற்காகச் சோதி வடிவாக இருந்த தான் உள்புகுந்தான். அவன் வந்து அமர்ந்ததால் காய்ந்த கல்போன்றிருந்த நெஞ்சம் மென்மைத்தன்மை பெற்று அன்பை எங்கும் மலரச் செய்தது. அதன் பயனாகத் துன்பம் இருந்த இடத்தில் இன்பம் பெருக்கெடுத்தது (627).

இத்தனையும் அடிகளார் நெஞ்சில் நிகழ்ந்தவை ஆகும். இவ்வளவு சிறப்பையும் செய்த பெருந்துறை நாயகன் அடிகளார் உள்ளத்தில் நிலையாகக் குடிபுகுந்துவிட்டான் என்க.

## பண்டாய நான்மறை

இத்தலைப்பிலுள்ள பல பாடல்களிலும் சில கருத்துக்கள் ஒரு தொடர்ச்சியுடன் பேசப்பெற்றுள்ளன.

முதற்பாடல் (628) இந்த முறையில் அமையாமல், நான்மறைகளும், மால் முதலானவர்களும் காணமுடியாத அப்பரம்பொருள் திருப்பெருந்துறையில் எழுந்தருளி, தம்மைக் கூவியழைத்துப் பணிகொண்டதாகக் கூறுகிறார். 'கடையேனைத் தொண்டாகக் கொண்டருளும் கோகழி எம் கோமான்' என்ற தொடரிலுள்ள நயத்தைக் காண்டல் வேண்டும்.

அவனோ கோகழிக்குக் கோமான். ஒரு கோமானிடம் தொண்டு செய்யவேண்டுமானால் தானாக அவனிடம் முண்டிக்கொண்டு சென்று 'என்னை ஏற்றருள்க' என்று சொல்லும் உரிமை அடிமைக்கு இல்லை. அவனுக்குத் தேவையான பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவனாகவே பணியில் அமர்த்த வேண்டுமே தவிர வேறு வழியில்லை. அவனாகவே தேர்ந்தெடுக்கிறான் ஆதலின் அப் பணியாளர்கள் தகுதி மிக்கவர்களாய்ச் சிறந்த முறையில் பணியாற்றுவர் என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்தக் கோகழி நாயகன் செய்த வேலை மேலே சொன்ன முறையில் அமையவில்லை. அவன் ஏற்றுக்கொண்ட தொண்டராகிய தம்மைக் 'கடையேன்' என்று பேசுகின்றார்.

கடையேனை என்று தம்மைச் சுட்டியதால் அவரைத் தவிர ஏனையவர்கள் எல்லாம் முதல் நிலை, இரண்டாம் நிலையில் நிற்பவர்கள் என்பது தெரிகிறது. அவர்களையெல்லாம் விட்டுவிட்டுக் கடையனாக இருக்கும் ஒருவரை எவ்வாறு ஏற்றுக்கொண்டான்? ஒருவேளை தம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இவர் அழுது மன்றாடி வேண்டிக்கொண்டாரா? அப்படியும் இல்லை.

'கொண்டருளும்' என்ற சொல் அவனே தேர்ந்தெடுத்தான் என்ற பொருளைத் தந்துநிற்கின்றது. 'புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய்' உள்ளவர்களும் 'அண்டவாணரும் பிறரும்' (399) மலரடி காணாமலே திகைக்க, அந்த மலரடி, கோகழி என்ற பெயருடைய திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் வந்தமர்ந்து என்ன காரியம் செய்தது தெரியுமா? மேலே காட்டிய யாரையும் ஏற்றுக்கொள்ளாமல் கடையேனைத் தொண்டு கொண்டது என்கிறார் அடிகளார்.

இதனை அவனுடைய எளிவந்த தன்மை என்று சொல்வதா? பயித்தியக்காரத்தனம் என்று சொல்வதா? இரண்டும்தான்! இப்படிப்பட்ட செயல்களைப் பலகாலமாகச் செய்துவருதலின் பித்தன் என்று ஒரு பெயர் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது. பித்தன் என்ன செய்வான்? தன்னைப் போலவே பிறரையும் பைத்தியமாக அடிப்பான். இதனையே அடிகளார் பல இடங்களில் 'பித்து ஏற்றி' என்று பாடுகிறார். அடிகளார் ஒருவரைமட்டுமா பித்தேற்றினான்? குதிரைச் சேவகனாக வந்து 'பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றினான்' (649) என்கிறார்.

இறையனுபவத்தில் மூழ்க்கித் திளைக்கின்றவர்களை இனம் கண்டுகொள்ளுதல் மிகமிக அரிதான காரியமாகும். எனவே, நம்மைப்போல் இல்லாமல் எதிர்த்திசையில் செல்லும் இவர்களைப் பார்த்துப் பித்தர்கள் என்று உலகோர் கூறுவது சகசமாக உள்ளது. 'பித்து என்று எனை உலகவர் பகர்வது ஓர் காரணம் இது கேளீர்' (431) என்று தொடங்கும் பாடலில் அடிகளாரே இதற்கு விளக்கம் கூறியுள்ளார்.

கருணையே வடிவான இறைவன் எல்லா உயிர்களுக்கும் கருணை பாலிக்கின்றான் என்பது பொதுநிலை. இவ்வாறன்றிச் சிறப்பாக ஒரு சிலரை ஒரே

பிறவியில் முன்னேற்றிவிடுகிறான். பொதுநிலையில் உள்ள எல்லா மக்களும், பல பிறவிகள் எடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, இறுதியாக வீடுபேற்றை அடைகின்றனர். இவர்கள் கட்டை வண்டியில் பிரயாணம் செய்பவர்களைப் போன்றவர்கள் ஆவர். இதன் எதிராக, ஒரு சிலர், ஒலியைவிட வேகமாகச் செல்லும் 'சூப்பர் சானிக்' (Supersonic) விமானத்தில் ஏறிப் பல்லாயிரம் மைல்களைச் சில மணி நேரங்களில் கடந்துவிடுவர். அருளாளர்களின் நிலை இதுபோன்றதுதான்.

இந்த அருளாளர்களை இறைவன் ஆட்கொள்வதில் பல்வேறு வழிகள் மேற்கொள்ளப்படினும் இரண்டு வழிகள் சிறப்பாகக் கருதப்பெற்றனவாகும். ஒன்று, இறைவன் குரு வடிவிலோ வேறு ஏதேனும் ஒரு வடிவிலோ இந்த ஒரு சிலரின் முன்னர்த் தோன்றி, திருவடி தீட்சை, நயன தீட்சை, மந்திர உபதேசம் என்பவற்றில் ஏதோ ஒன்றைச் செய்து இவர்களை முன்னேற்றுகிறான்.

இதன் எதிராக- ஏதோ ஓர் உருக் கொண்டு எந்த ஒரு குறிப்பிட்ட மனிதரையும் சந்திக்காமல் அவன் தன் வழியோடு செல்கிறான். நூற்றுக்கணக்கானவர் அவ்வாறு செல்கின்றவனைப் பார்க்கின்றனர். அவர்களுள் யாரோ ஒருவர்மட்டும் வழியோடு செல்கின்ற உருவத்தைப் பார்த்தவுடன் குணங்குறி கடந்து நிற்கும் பொருள்தான் இந்த உருக்கொண்டு, இவ்வாறு செல்கிறது என்பதை உள்ளுணர்வு மூலம் உணர்ந்துகொள்கின்றார்.

மதுரையில் நடந்த கதை இதுதான். நூற்றுக்கணக்கான குதிரைகளும் அவற்றைச் செலுத்துபவர்களும் பின்தொடர, அவர்கள் தலைவனாக இருப்பவன் தானும் ஒரு குதிரையின்மேல் அமர்ந்து தன் கால்களை அங்கவடியில் செருகிக்கொண்டு செல்கிறான். அவன் குறிப்பாக யாரையும் பார்க்கவில்லை. அரசன் உள்ளிட்ட அந்தப் பெருங்கூட்டம் அந்தத் தலைவனைக் குதிரைச்சேவகன்

என்றும் அந்தக் குதிரைச் சாத்தின் தலைவன் என்றும் நினைத்தார்களே தவிர வேறொன்றுமில்லை. ஆனால், இவர்களிடையே மணிவாசகராக மாறிய முன்னாள் அமைச்சர் திருவாதவூரர் இப்பொழுது அரசனின் அண்மையில் நிற்கின்றார். என்ன அதிசயம்! அரசனுக்கும் மக்களுக்கும் தென்படாத காட்சி அடிகளாருக்குத் தென்படுகிறது; இந்தக் குதிரைச் சேவகன் பெருந்துறை வள்ளல் என்பதை உடனே புரிந்துகொண்டார். அந்த வள்ளல் அடிகளாரைக் குறிப்பாகப் பார்த்தானா? இல்லை. அடிகளார்தான் அவனைக் குறிப்பாகப் பார்த்தார். என்ன அதிசயம்! தம்முள் இருந்து தம் உயிரைப் பற்றிநின்ற மும்மலங்கள் பொலபொல என்று உதிர்வதை உணர்கின்றார். அதுமட்டுமா? தேனருவி உள்ளத்தில் குபுகுபு என்று பாய்வதையும் உணர்கின்றார். இந்தச் செயல்கள் நிகழவேண்டுமானால் எதிரே உள்ள குதிரைச் சேவகன் பெருந்துறை நாயகனாகத்தான் இருக்க வேண்டும் என்பதை உணர்கின்றார். அதனையே ‘உள்ள மலம் மூன்றும் மாய, உகு பெரும்தேன் வெள்ளம் தரும், பரியின் மேல் வந்த வள்ளல், மருவும் பெருந்துறை’ (629) என்று பாடுகிறார்.

இதுபோன்ற நிகழ்ச்சி உலகிடை நடைபெறுவதுண்டு என்பதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். வனத்திடை நூற்றுக்கணக்கான தோழிகளுடன் தலைவி நிற்கின்றாள். எவனோ ஒரு குதிரைவீரன் அவ்வழியே வந்து, செல்லவேண்டிய வழி எது என்பதை நின்று, கேட்டுத் தெரிந்துகொண்டு அவன் போக்கில் போய்விட்டான். அவன் யாரையும் குறிப்பாகப் பார்க்கவில்லை. மாலைப்பொழுதில் தோழிமார்களுடன் வீடு திரும்பினாள் தலைவி. வந்து நின்று வழிகேட்டவனைப்பற்றி யாரும் நினைக்கவில்லை. நன்றாகத் தூங்குகின்றார்கள். தலைவி ஒருத்திக்குமட்டும் தூக்கம் வரவில்லையாம். இதனையே பின்வரும் பாடலால் தலைவி பேசுகின்றாள்:

மலர்தார் மார்பன் நின்றோற் கண்டோர்
பலர்தில், வாழி – தோழி !– அவருள்,
ஆர் இருட் கங்குல் அணையொடு பொருந்தி,
ஓர் யான் ஆகுவது எவன்கொல்... *(அகநா:82)*

*நூற்றுக்கணக்கானவர் இருக்கவும் தலைவி ஒருத்திக்கு மட்டும் மனமாற்றம் ஏற்பட்டதை இப்பாடல் தெரிவிக்கின்றது அல்லவா? அதேபோன்று ஆயிரக்கணக்கானவர் குதிரைச் சேவகனைப் பார்த்தாலும் அடிகளார் ஒருவருக்குமட்டுமே இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதை அறிகின்றோம்.*

*இப்பரந்த உலகின் பெரும்பகுதி கடல்நீரால் சூழப்பெற்றுள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நாடு என்றும் காடு என்றும் இரண்டாகப் பிரிக்கலாம். காடாக இருந்த பகுதிதான் மனித முயற்சியால் நாடாக விளக்கம் பெறுகிறது. ஆனால், நாடாக மாறியவுடன் காட்டின் தொடர்பு முற்றிலும் அற்றுவிடுகிறது. ஆகவே இந்த மண்ணைக் காடு, நாடு, கடல் என்று மூன்றாகப் பிரிக்கிறார் அடிகளார். இம்மூன்றிலும் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைமுறை வெவ்வேறாக உள்ளது. இந்த அடிப்படையை மனத்திற்கொண்டதுபோல் 630ஆம் பாடல் அமைந்துள்ளது. கயிலையை விட்டு மண்ணிடை வந்த பெருமான் காட்டில் வேட்டுருக் கொண்டு சில அற்புதங்கள் நிகழ்த்தினான்; அதே பெருமான் குதிரைச் சேவகனாக வந்து தன்னைக் கண்டவர்களையெல்லாம் பயித்தியமாக அடித்தான்; அதே பெருமான் வலைஞனாக வடிவேற்று வலை வீசினான் என்று பேசுகிறார். இந்த உண்மையைத்தான் 'காட்டகத்தே வேடன், கடலில் வலை வாணன், நாட்டிற் பரிப்பாகன்' (630) என்கிறார் அடிகளார்.*

*இந்த மூன்று இடங்களிலும் மானிட உருத் தாங்கி அற்புதங்களை நிகழ்த்துகிறான் பெருமான். அது ஏன்? மூன்று இடங்களிலும் வாழ்கின்றவர்கள் வெவ்வேறான*

மனநிலை உடையவர்கள். காட்டிலும் கடலிலும் அந்த அந்தப்பகுதி மக்களுள் தானும் ஒருவனாக ஏன் மாறினான்? ஒரு துறவியாக இருந்து காட்டிடை எதனைச் செய்தாலும் அங்கு வாழும் மக்கள் அதனைக் கண்டு வியப்படைவார்கள். துறவியுடன் உறவுகொள்ள மாட்டார்கள். ஆனால், வேடனாக இருந்து எதனைச் செய்தாலும் அந்த வேட்டுவர்கள் இவனைத் தம்முள் ஒருவனாகக் கருதி நெருக்கம் கொள்வர். மக்கள் மேற்கொள்ளும் இந்த நெருக்கத்தைத்தான் இறைவன் விரும்புகிறான். ஆதலின், அந்தந்தப் பகுதி மக்களுக்கு ஏற்றமுறையில் காட்டிடை வேடனாகவும், நாட்டிடைக் குதிரைச்சேவகனாகவும், கடலிடை வலைஞனாகவும் வந்தான் என்பதை அறிதல் வேண்டும்.

இறை வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் இருவகைப்படுவர். விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலர் அவன் திருவடி நீழலை அடைவதைத் தவிர வேறு எதனையும் வேண்டமாட்டார்கள். மிகமிகப் பலர் இம்முறையிலிருந்து மாறுபட்டவர்கள். இந்த உலகத்தில் எல்லாவித சுக போகங்களையும் அனுபவித்துக்கொண்டு, அதே நேரத்தில் தம்மைப் பிறர் போற்றிப் புகழ்ந்து வணங்கவேண்டும் என்றே விரும்புவர்.

நான்காம் பாடலில் (631) அடிகளார் இந்த இரண்டாவது வகையினர்க்கே சிலவற்றைக் கூறுகிறார். திருப்பெருந்துறையில் சென்று பெருந்துறை நாயகனை வழிபட்டவர்கள், வாழ்ந்தார்கள் ஆவர். அதாவது இந்த உலகத்தில் எல்லா நலங்களையும் அனுபவித்துக்கொண்டு எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழ்ந்தவர்கள் ஆவர்.

சாதாரண வாழ்க்கை வாழும் சராசரி மனிதன்கூடத் தன்னிடம் எவ்விதத் தகுதியும் இல்லாவிட்டாலும் நான்கு பேர் தன்னைப் போற்றவேண்டும் என்று நினைப்பது

உலகியற்கை. இதனை மனத்துட் கொண்ட அடிகளார் 'வாழ்ந்தார்கள் ஆவார்' என்று கூறியதோடு நிறுத்தாமல் 'உலகம் தாழ்ந்து ஏத்தும் தகுதியைப்' பெறுவார்கள் என்றும் கூறினார்.

மேலே கூறிய இரண்டு நலன்களும் இவ்வுலகிடைப்பட்ட நலன்களாகும். பெருந்துறை நாதனை வழிபட்டவர்க்கு இவை இரண்டுமட்டுந்தான் கிட்டுமா என்ற வினாவிற்கு விடை கூறுவார்போல, சுகமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் போதேகூட வல்வினையை மாய்க்க அவர்களால் முடிகிறது என்ற கருத்தையும் பேசுகிறார்.

நாயகனை வழிபட்டால் இம்மை, மறுமைப் பயன்கள் முழுவதும் கிட்டும் என்க.

மற்றொரு வகையாகக் கூற வேண்டுமானால், இத்தமிழ்நாட்டுக்கே உரிய ஒரு தனிச்சிறப்பை இப்பாடல் கூறுகிறது. வல்வினையை மாய்க்க வேண்டுமானால் காடுகள் சென்று, கன சடை வைத்து, புற்றுமாய் மரமாய் நின்று, காற்றையும் தண்ணீரையும் ஆகாரமாக உட்கொண்டுதான் அதனைச் செய்யமுடியும் என்று கூறுவோர் கூற்றை மறுத்து இந்த அருளாளர்கள் பாடினர்.

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை' (திருமுறை :3-24-1) என்று காழிப்பிள்ளையார் பாடியதும் இக்கருத்தையே வலியுறுத்தும். இதே கருத்தை வலியுறுத்திச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்

**இம்மையே தரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடர்கெடலுமாம்**
**அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவில்லையே (திருமுறை :7–34–1)**

என்று பாடியுள்ளார்.

பண்டாய நான்மறையின் ஐந்தாம் பாடலிலும் (632) கோகழி என்ற சொல் அமைந்துள்ளது. திருவாசகத்தில் கோகழி என்ற சொல் மூன்று இடங்களில் இடம்பெறுகிறது. உரை எழுதிய பலரும் எங்கெங்கோ இருக்கின்ற திருப்பதிகளுள் கோகழியும் ஒன்று என்று எழுதிப் போயினர்.

யோக முறையில் பொருள் எழுதியவர்கள் ஆறு ஆதாரங்களில் விசுத்தி என்ற இடமே கோகழி என்றெல்லாம் எழுதிப்போயினர். ஆனால், திருப்பெருந்துறைக்கு இது மற்றொரு பெயர் என்பதை முதன் முதலில் கூறியவர் அமரர் அருணைவடிவேல் முதலியார் அவர்களே ஆவர். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதே ஆகும்.

ஆறாம் பாடலில் (633) வரும் 'காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பம் எனப் பேணும் அடியார்' என்ற பகுதியை ஆழ்ந்து சிந்தித்தாலொழிய விளங்கிக்கொள்வது கடினம். 'காணும் கரணம்' என்ற சொற்கள் ஐம்பொறிகளையும் அந்தக்கரணங்கள் நான்கினையும் புலப்படுத்தி நிற்கின்றன. பொறிகளும் கரணங்களும் ஏதோ ஒன்றைப் பற்றி நின்று தொழிற்படுகையில் அதன் பயனாக இன்பம் அல்லது துன்பம், மகிழ்ச்சி அல்லது துயரம் ஏற்படுகின்றது.

'நான்' என்ற ஒன்று வலுவாக ஒருவரைப் பற்றியிருக்கின்றவரையில் இந்த இன்ப, துன்ப அனுபவங்களை ஏற்று அனுபவிக்காமல் இருக்க முடியாது. ஆழ்ந்த மயக்கம் முதலியவற்றால் இந்த 'நான்' தொழிற்படாமல் மடங்கிவிடும் பொழுது உடல் எந்தத் தொடுஉணர்ச்சியையும் அனுபவிப்பதில்லை. ஏனைய பொறிகளும் தொழிற்படுவதில்லை. இதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். 'நான்' நானாகத் தொழிற் படும்போதுதான் கருவி கரணங்கள் செயற்பட்டு இன்ப துன்பங்கள் அனுபவிக்கப்படுகின்றன. மயக்க நிலையில் நான் தொழிற்படாமையால் இவை நடைபெறுவதில்லை.

இவை அனைத்தையும் கடந்த நிலை ஒன்றுள்ளது. அந்த நிலையில் 'நான்' தொழிற்படுகின்றதேனும் அது பழைய நானாக இருப்பதில்லை. அதற்குப் பதில் இறையனுபவத்தில் தோய்ந்து எழுவதால் இந்த நானின் தன்மை முற்றிலும் மாறிவிடுகிறது. அப்பொழுது பொறி, புலன்கள் மூலம் அனுபவிக்கப்படும் எல்லா அனுபவங்களும் எல்லையற்ற ஆனந்தத்தைத் தருகின்றன. இப்பொழுது அந்த 'நான்' முற்றிலும் மாறி, இறையுணர்வோடு கலந்து விட்டமையின் பொருட்களை வேறுபடுத்திக் காண்பதில்லை.

அப்படியானால் இந்த நிலையை அடைந்து விட்டவர்களின் கண்கள் பொருள்களைக் காணாவா, பொருள்களின் இடையேயுள்ள வேறுபாட்டைக் காணாவா என்ற வினாத் தோன்றினால் விடையிறுத்தல் எளிது. வேறுபட்ட பொருட்களைக் காணும் இவர்கள் அவற்றினூடே ஊடுருவி நிற்கும் ஒன்றையும் காண்கிறார்கள்.

தாயுமானவர் நந்தவனம் சென்று மலர்களைப் பறித்து இறைவனை வழிபடவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் சென்றார். மலர்கள் பூத்துக் குலுங்கின. ஏதோ மலரைப் பறிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் அருகே செல்கிறார். குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மலர் என்றுதான் அதனிடம் சென்றார். தூரத்திலிருந்து பார்க்கும்போது மலராகத் தெரிந்த அது, அருகிற் சென்று பார்க்கும்போது மலரை ஊடுருவி நிற்கும் ஒன்றையும் காட்சிக்கு நல்கியது. அதனையே தாயுமானவர், 'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்' (தாயு:கருணாகர-6) ஏன்று பாடுகிறார்.

நான் 'தற்போத நானா'க இல்லாமல் இறையனுபவத்தில் தோய்ந்த நானாக மாறும்பொழுது, மலரூடு அவன் இருப்பதைக் காணமுடியும். இந்த நிலையில் இருப்பவர்களுக்குப் பொருட்களின் இயல்புகள் தட்டுப்படுவதில்லை.

*திருமாலிடத்துப் பேரன்பு பூண்டு அவன் வயப்பட்ட பெண்ணின் செயல்களை நம்மாழ்வார் இதோ பாடுகிறார்: 'மண்ணை இருந்து துழாவி, வாமனன் மண் இது என்னும்' (நாலாயிரம்: 2477) என்றும், 'அறியும் செந்தீயைத் தழுவி, அச்சுதன் என்னும், மெய்வேவாள் எறியும் தண் காற்றைத் தழுவி, என்னுடைக் கோவிந்தன் என்னும்' (நாலாயி :2449) என்றும் பாடியுள்ளமையைக் காணலாம். இப்பெண் இது செந்தீ என்பதை அறிவாள். 'அறியும்' என்ற சொல்லால் இதனை அறிவிக்கின்றார். செந்தீயென்றுமட்டும் அறிந்திருந்தால் இது சுடும் என்பது விளங்கியிருக்கும். ஆனால், செந்தீயைத் தழுவுகிறாளே இவள்! அந்தச் செந்தீ இவளைச் சுடவில்லை என்கிறாரே ஆழ்வார்! இதன் உண்மை என்ன?*

*செந்தீயைச் செந்தீயாகமட்டும் காணாமல், ஊடுருவி நிற்கும் அச்சுதனை அல்லவா அதனுள் அவள் காண்கிறாள். அதனாற்றான் தீ.சுடவில்லை என்பதை மெய் வேவாள் என்ற தொடரால் குறிப்பிட்டார். புதுச்சேரியில் வாழும் காலத்தில் குள்ளச்சாமியின் கருணையால் இந்த நிலையை அடைந்துவிட்ட மகாகவி பாரதி இதோ பாடுகிறான்:*

**தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா நின்னைத்**
**தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா**
*(பாரதியார் பாடல்கள்- தமிழ்ப்பல்கலைக்கழகப் பதிப்பு: 2361)*

*என்று பாடிய அவன், மற்றொரு பாடலில் இதற்கு ஒரு விளக்கமும் தருகிறான்.*

**தின்னவரும் புலி தன்னையும் அன்பொடு**
**சிந்தையில் போற்றிடுவாய்**
**அன்னை பராசக்தி அவ்வுரு ஆயினள்**
**அவளைக் கும்பிடுவாய்** (1882)

*என்ற பாடலில் இப்பெருமக்களுக்கு பொறிபுலன்களால் வரும் அனைத்து அனுபவங்களும் பேரின்பத்தையே*

விளைக்கின்றன என்பதை அறிவுறுத்துகின்றான். இந்த அடிப்படையை நன்கு புரிந்துகொண்டால்தான் அடிகளாரின் 'காணும் கரணங்கள் எல்லாம் பேரின்பமெனப் பேணும் அடியார்' என்ற தொடரின் பொருளை விளங்கிக்கொள்ள முடியும்.

திருப்பெருந்துறை என்பது ஓர் ஊர். இறைவன் உறையும் தலம் என்று எடுத்துக்கொண்டாலும் இதுபோன்ற தலங்கள் தமிழகத்தில் நூற்றுக்கணக்கில் உள்ளன. அப்படியிருக்க, பெருந்துறை நாயகன் என்று சொல்லிப் பிறப்பு அறுத்தேன் என்று சொல்லியிருந்தால் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. அவ்வாறில்லாமல் 'பெருந்துறையே என்று (சொல்லிப்) பிறப்பறுத்தேன்' (634) என்று அடிகளார் கூறுவது என்ன பொருளில் பேசப்பட்டது?

இலக்கணத்தில், இடத்து நிகழ் பொருளின் பெயர் இடத்துக்கே ஆவது என்பது ஆகுபெயரின் ஒரு பகுதியாகும். அதேபோன்று பெருந்துறை நாயகன் என்பது பெருந்துறை என்றே குறிக்கப்பெற்றது. அல்லாமலும் பெருந்துறை என்ற ஊரில்தான் இவருடைய வாழ்க்கை திசைமாறிற்று; எனவே, தமது வளர்ச்சிக்கு மூலமான அந்த இடத்தை அடிகளார் போற்றிப் புகழ்வது பொருத்தமேயாகும்.

அன்றியும் பெருந்துறை என்ற பெயர் அந்த ஊரிலுள்ள நிலம், மண், மரம், செடி, குளம் என்பவற்றைக் குறிக்காமல் பெருந்துறை நாயகனையே குறித்துள்ளது. எனவே, அடிகளார் பெருந்துறையே என்று (சொல்லிப்) பிறப்பறுத்தேன் என்பது நியாயமேயாகும்.

ஏழு பாடல்களுடன் உள்ள இப்பகுதியில் 'நெஞ்சே வாழ்த்து' (630) என்றும், 'அவனைக் காண்' (632) என்றும், 'நெஞ்சே! வாயாரப் பேசு' (633) என்றும் வருவதால் கண், வாயாகிய இரண்டு பொறிகளுக்கும் தக்க பணியைக் கொடுத்தாராயிற்று. இப்பகுதியின் இரண்டாம், மூன்றாம்

பாடல்களில் 'வாழ்த்துமின்கள்' என்றும் 'நெஞ்சே வாழ்த்து' என்றும் வருதலைக் காணலாம்.

வாழ்த்துதல் என்ற தொழிலைச் செய்கின்ற உறுப்பு வாய் என்பதனை அனைவரும் அறிவர். பல சமயங்களில், நெஞ்சின் ஆழத்தில் உணர்வு நிறையாமலுங்கூட வாழ்த்துதல் நடைபெறுவதை இன்றும் காண்கிறோம். பழக்கவசத்தாலோ, அன்றி, உடனிருப்பவர்கள் நீங்களும் வாழ்த்துங்கள் என்று சொல்லும்பொழுதோ உணர்வுக் கலப்பின்றி இவ்வாழ்த்து நடைபெறுகின்றது. இறைவன் நாமத்தை, அவன் தமக்குச் செய்த பேருபகாரத்தைப் பலமுறை வாழ்த்தும் இயல்புபெற்றவர்கள் நெஞ்சக்கலப்பு இல்லாமல் இவ்வாழ்த்தலைச் செய்தலும் கூடும். பழக்கத்தால் வரும் அத்தகைய வாழ்த்தலுக்கும் இறைவன் அருள்புரிவான் என்று இந்நாட்டவர் நம்பினர். 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' (திருமுறை 7:48-1) என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடல் பழக்கவசத்தால் இச்செயல் நடைபெறுவதைக் குறித்துச் செல்கிறது. அடிகளார் 'வாழ்த்து' என்று சொல்லும்பொழுது இந்த நிலை வரக்கூடாது என்று எண்ணினார் போலும். அதனாலேயே 'வாழ்த்து' 'பேசு' என்று வரும் இரண்டு இடங்களிலும் (630,633) நெஞ்சை உடன்சேர்த்து 'நெஞ்சே வாழ்த்து' என்றும் 'நெஞ்சே வாயாரப்பேசு' என்றும் கூறுகிறார்.

629ஆம் பாடலில் 'வாழ்த்துமின்கள்' என்று உடனிருப்போரை நோக்கி ஆணையிட்ட அடிகளார் அடுத்துவரும் பாடல்களில் நெஞ்சை உடன்சேர்த்துப் பேசுவதிலும் ஓர் அடிப்படை உண்டோ என்று நினைக்கத் தோன்றுகிறது. 'வாழ்த்துமின்கள்' என்று ஆணையிட்டார்; அவர்களும் வாழ்த்தினார்கள்; ஆனால் அவர்களின் அந்த வாழ்த்தொலி உள்ளீடற்றதாய், நெஞ்சக்கலப்பற்றதாய் அடிகளாருக்குத் தோன்றியிருக்கும் போலும். நெஞ்சோடு

கலந்துதான் வாழ்த்தலும் பேசலும் இருக்கவேண்டும் என்பதை நேரே அவர்களுக்கு எடுத்துச்சொல்லாமல், தமக்கே கூறிக்கொள்வதுபோல 'நெஞ்சே, வாழ்த்து' என்றும் 'நெஞ்சே, பேசு' என்றும் பேசுகிறார். எதிரே உள்ளவர்களை முன்னிலைப்படுத்தி 'வாழ்த்துமின்கள்' என்று கூறிய அவர், பின்னர் உள்ள இரண்டு பாடல்களில் தம்முடைய நெஞ்சையே முன்னிலைப்படுத்திப் பாடுவதன் காரணம் இதுவாக இருக்குமோ என்று நினைக்கத்தோன்றுகிறது.

பாடல்கள் அந்தாதித்தொடையாக இருத்தலின் இந்த வரிசைமுறை மாறுபட்டிருக்க நியாயமில்லை.

இறைவனைப் பற்றிய புகழ்மொழியாக இருப்பினும் அது நெஞ்சத்துணர்வு கலந்து வெளிவரும்பொழுது என்ன நிகழும் என்பதை திருவெம்பாவையின் முதற் பாடலில் (155) அடிகளார் கூறுகிறார். 'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி' போய்த் தெரு முழுவதும் நிரம்பிற்று. அதனைக்கேட்ட ஒருத்தி உறக்கத்திலிருந்து விழிக்கும் நிலையிலிருந்தாள். இந்த வாழ்த்தொலி வீட்டின் புறத்தே வீதியில் ஒலித்தது; இவளைக் குறித்தோ இவளுக்காகவோ அது ஒலிக்கவில்லை. அதனைக் குறிக்கவே 'வீதிவாய்க் கேட்டலுமே' என்றார். அவ்வொலி இவளைக் குறிக்காவிடினும் உணர்வு நிறைந்து வெளிப்பட்டதாதலின் அதனைக் கேட்ட இவள் விம்மினாள்; மெய் மறந்தாள்; ஏதேனும் ஆகாளாய்க் கிடந்தாள் என்பதால் அவள் சமாதி நிலையை அடைந்தாள் என்பதைக் குறித்தாராயிற்று.

பகவான் இராமகிருஷ்ணர் வரலாற்றில் இதனை நன்கு அறியமுடியும். எதிரே உள்ளவர்கள் உள்ளத்துணர்வு நிறைந்து நாமாவளியைப் பாடினால் இராமகிருஷ்ணருக்கு உடனே சமாதி கூடிவிடும். நாமாவளி பாடுகின்றவர்கள் தம்மை மறந்து பாடினரே தவிர, இராமகிருஷ்ணரை நோக்கிப் பாடவில்லை. ஆனால், அது நெஞ்சோடு கலந்து

வந்தமையின் திருவெம்பாவையில் வரும் பெண்ணையும் இராமகிருஷ்ணரையும் சமாதியில் ஆழ்த்திவிட்டது. தம் அனுபவ ஞானத்தால் இதனை அறிந்த அடிகளார் 'வாழ்த்து' என்ற சொல்லின் முன்னரும் 'பேசு' என்ற சொல்லின் முன்னரும் 'நெஞ்சு' என்ற சொல்லைச் சேர்த்ததால் இந்த அருமைப்பாட்டை விளக்கினாராயிற்று.

தம்முடைய தகுதிபாராது, தன் கருணை ஒன்றே காரணமாக இறைவன் ஆட்கொண்டான் என்று நினைந்து நன்றிப் பெருக்கில் விம்முகின்றார் அடிகளார். நல்ல பண்புடையார் நன்றி மறப்பதில்லை அல்லவா? எனவே, தம்பொருட்டு இவ்வளவு அரும் பெரும் செயல்களைச் செய்தவனுக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும் என்று ஆதங்கப்படுகிறார். அதனையே முதற் பாடல் 'உண்டாமோ கைம்மாறு உரை' (628) என்று பேசுகிறது.

## திருப்படையாட்சி

இறைநம்பிக்கையுடைய எல்லாச் சமயத்தினரும் அவரவர்கள் கருதும் கடவுள் இந்த உலகத்தை உய்விப்பது கருதி இறைத் தூதர்களை இவ்வுலகிடை அனுப்புகிறான் என்ற கொள்கையில் வலுவான நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இந்நாட்டில் தோன்றிய மிகப் பழைய சமயங்களாகிய சைவம், வைணவம் இரண்டும் இறைத் தூதர் என்று யாரையும் தனிப்படக் கருதியதோ கூறியதோ இல்லை. இறைவனிடம் மகன்மை உறவுபூண்டு அதனை வெளிப்படையாகவும் கூறிய ஒரு சில அருளாளர்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டிலும் உளர்.

வைணவ சமயத்தில் நம்மாழ்வாரும், சைவ சமயத்தில் திருஞானசம்பந்தரும் தாங்கள் பேசும் பேச்சுக்கள் எல்லாம் தங்கள் மூலமாக இறைவன் பேசும் பேச்சுக்களேயாகும்

என்பதை வெளிப்படையாகக் கூறியுள்ளதை முன்னரும் எடுத்துக்காட்டியுள்ளோம். அன்றியும் 'தலைமகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன்' என்று காழிப்பிள்ளையார் தம்மைக் கூறிக்கொள்வதை அவருடைய தேவாரத்தில் காணலாம்.

மற்றொரு சமயத்தார் தங்கள் சமயத்தைத் தோற்றுவித்தவர் இறைவனுடைய ஒரே பிள்ளை என்று கூறிக்கொள்வதும் ஒப்பு நோக்கத்தக்கது.

இந்த அருளாளர்கள் அனைவரும் தத்தம் காலத்தில் தங்களுடைய பாடல்களாலும் நிகழ்த்திய அற்புதச் செயல்களாலும் தங்கள் கொள்கையை வலியுறுத்திப் போயினர். சைவம், வைணவம் ஆகிய இரண்டு சமயங்களும் என்று தோன்றின என்று தெரியமுடியாத பழைமையுடையன. அப்படியானால் அந்தப் பழைய சமயங்களில் புதிதாகத் தோன்றிய இந்த அருளாளர்கள் எதனை நிர்மாணித்தார்கள் என்ற வினாத் தோன்றுமேயானால் அதற்கு விடை கூறுவது ஒருவகையில் எளிதாகும்.

வேத காலத்திலும் அதனை அடுத்த காலத்திலும் சடங்குகள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. சில மந்திரங்களை ஓதி, யாகத் தீ வளர்த்துப் பலியிடுவதாலேயே தேவருலகத்தை அடைய முடியும் என்று அவர்கள் கருதினர். வாஜபேயம் முதலாக இருபத்தொருவகை யாகங்கள் பெரிதாக வளர்ச்சியடைந்தன. அரசர்கள் பலரும் இவ்வகை யாகங்களைச் செய்வதன்மூலம் பகையை வெல்ல முடியும், தேவருலகம் செல்ல முடியும் என்ற கருத்தில் இந்த யாகங்களில் பெரிதும் ஈடுபட்டனர். நாளாவட்டத்தில் இந்த யாகங்களின் அடிப்படைத் தத்துவம் மறைந்து, வெறும் சடங்குகள்மட்டும் மிஞ்சிவிட்டன.

இந்த நிலையில் பஞ்சாப், ஹரியானா பகுதியில் தோன்றிய வேதவழக்கொடுபட்ட வைதிக சமயம்,

மேற்குக்கரை வழியாகத் தெற்கு நோக்கி இடம் பெயரலாயிற்று. தமிழகத்திலும் சங்க காலத்திற்கு முன்னரே இதன் செல்வாக்குப் பரவிற்று. இடம்பெறும் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி, ராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி போன்றவர்கள் இந்த யாகங்களில் பெரிதும் ஈடுபட்டனர் என்பதைப் புறநானூறு மூலம் அறிகிறோம்.

அக்காலத்தில் தமிழகத்தில் பரவிய சமண சமயம் இந்தக் கொலை வேள்வியை எதிர்த்துத் தன் கொள்கைகளைப் பரப்பிற்று. இதன் பயனாக யாகங்களின் எண்ணிக்கை சுருங்கிற்று.

இது ஒருபுறமிருக்க, சைவர்கள், சமணர்கள், வைணவர்கள் ஆகிய அனைவரும் தமிழர்கள் ஆதலால் இவர்களிடையே ஒற்றுமை நிலவிற்று. அவரவர் தத்தம் மதங்களைப் பின்பற்றியதால் பூசலுக்கு இடமில்லாமல் இருந்தது.

இந்த ஒருமைப்பாட்டிற்கு எதிர்பாராத இடத்திலிருந்து ஆபத்து வரலாயிற்று. எருமை நாடு என்று கூறப்பெற்ற மைசூர்ப் பிராந்தியத்திலிருந்து ஒரு கொலைக் கும்பல் கி.பி.இரண்டாம் நூற்றாண்டுவாக்கில் தமிழகத்தில் நுழைந்தது. இவர்கள் களப்பிரர் என்று கூறப்பெற்றனர். தமிழர் அல்லாத இந்தக் கொள்ளைக் கூட்டத்தார் ஜீவகாருணியத்தை உயிர்நாடியாகக் கொண்ட சமணர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொண்டது வியப்பேயாகும்.

மைசூரிலிருந்து சத்தியமங்கலம் வழியாகத் தமிழகத்தில் புகுந்த இக்கூட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிந்தது. ஒரு கூட்டம் நேரே தெற்குநோக்கிச் சென்று பாண்டி நாட்டைப் பிடித்தது. மற்றொரு கூட்டம் நேர் கிழக்கில் சென்று பல்லவ நாட்டைப் பிடித்தது. ஏறத்தாழ மூன்றரை நூற்றாண்டுகள் இவர்கள் செல்வாக்கு, பாண்டிநாட்டிலும் பல்லவ நாட்டிலும் கொடிகட்டிப் பறந்தது.

இவர்கள் தமிழர்கள் அல்லர்; தமிழ் மொழியை வெறுப்பவர்கள். அதனால் இந்த மூன்று நூற்றாண்டுகளில் சிறந்த தமிழிலக்கியம் எதுவுமே தோன்றவில்லை. இவர்கள் 'கொல்லாமை மறைந்து உறையும்' மக்கள் ஆதலின் பாண்டி நாட்டிலோ பல்லவ நாட்டிலோ பெருந்திரளாக மக்கள் வாழும் பகுதியில் அவர்கள் வாழ முடியவில்லை. அரசனை மட்டும் கைக்குள் போட்டுக்கொண்டு மதுரையை அடுத்த ஆனைமாமலை போன்ற இடங்களில் இவர்கள் தங்கி வாழ்ந்தனர்.

ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவர்கள் செல்வாக்குப் பெரிதும் குறையலாயிற்று. வீழ்ந்து கிடந்த சைவத்தைத் தூக்கி நிறுத்த முன்வந்தார் நாவரசர் பெருமான். அதன் பயனாகச் சமணனாக இருந்த மகேந்திர மன்னன் சைவனாக மாறினான். அதேபோலப் பாண்டியனும் ஞானசம்பந்தரால் மறுபடியும் சைவனாக மாறினான். இந்த நிலையில் பிற சமய வழக்கொழிந்து சைவமும் வைணவமும் துளிர்க்கலாயின.

இப்புதிய துளிர்ப்பு சைவ, வைணவங்களை வளர்ப்பதற்கு ஒரு புதுவழியைக் கையாண்டது. சடங்குகளுக்கு அதிக இடந்தராமல், பக்தி ஒன்றையே அடித்தளமாகக் கொண்டு, இவ்விரு சமயங்களும் வளர்க்கப்பெற்றன.

ஆறாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் முடிவுவரை இரண்டரை நூற்றாண்டுகள் மூவர் முதலிகள், ஆழ்வார்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில் சைவமும் வைணவமும் ஓகோ என்று வளர்ந்தன. திருக்கோயில்கள் பல்கிப் பெருகின. யார் வேண்டுமானாலும் கோயில் உட்சென்று மூலவருக்கு அபிடேகம், அர்ச்சனை முதலியவற்றைத் தாமே செய்யலாம் என்ற நிலை ஏழாம் நூற்றாண்டிலும் இந்நாட்டில் பரவியிருந்தது என்பதைச்

செந்தமிழர் தெய்வ மறை நாவர்
செழுநற் கலை தெரிந்தவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அரனூர்... (திருமுறை: 3-80-4)

என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தால் அறியமுடிகிறது. யாவரும் சென்று நேரிடையாக அருச்சனை செய்யலாம் என்பதை இப்பாடல் விளக்குகிறதல்லவா?

இதுவே ஒன்பதாம் நூற்றாண்டு முடிய தமிழகத்தில் பரவியிருந்த பக்தி இயக்கமாகும்.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மணிவாசகப் பெருமான் தோன்றுகிறார். அவருக்கு ஒரு நூற்றாண்டு முற்பட்டுத் திருமூலர் தமிழ்நாட்டில் நுழைகின்றார். இப்பெருமக்கள் இருவரும், பக்தி இயக்கத்திற்கு ஒரு புதிய வழியை வகுத்துவிட்டனர். பக்தி இயக்க காலத்தில் சைவம், வைணவம் இரண்டிலும் குரு அல்லது ஆச்சாரியன் என்ற ஒருவருக்கு இடமேயில்லை. திருமூலர்தான் குரு என்றதொரு தத்துவத்தை தமிழகத்தில் முதன்முதலில் புகுத்தினார். முதல் குருவுக்கு நந்தி என்ற பெயர் கொடுத்து அதனை இறைவன்பெயர் என்றே திருமூலர் கூறிச்சென்றார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் (திருமந்திரம்:139)

என்ற முறையில் முதன்முதலில் பாடியவர் திருமூலரே ஆவார். குருவின் துணை கொண்டுதான் முன்னேறி உய்கதி அடையமுடியும் என்ற புதிய கருத்து, சைவத்தில் புகுத்தப்பட்டது. ஆனால், எவ்வளவுதூரம் பரவிற்று என்று சொல்வதற்கு ஏவ்விதச் சான்றும் இல்லை. குரு என்ற தத்துவத்தைப் புகுத்தியதோடு நில்லாமல், அதுவரை சைவத்தில் இடம்பெறாத சக்கரங்களையும் (யந்திரங்களையும்) அவற்றுள் பொதிந்துள்ள

மந்திரங்களையும் புகுத்திய பெருமை திருமூலரையே சாரும். யோக மார்க்கத்தைப் பெரிதுபடுத்திக் கூறியவரும் திருமூலரே ஆவார்.

என்ன காரணத்தாலோ திருமூலரின் இப்புதியமுறை தமிழகத்தில் வேர்கொள்ளாமலே போயிற்று.

இதற்கு ஒரேயொரு புறநடை மணிவாசகரே ஆவார். திருமூலர் காட்டிய முறையில் குருவே அனைத்தும் என்று கருதிப் பாடிய பெருமை அடிகளாருடையதாகும். 'குரு பரம்பரையின் முதற்குரு நந்தி என்று அழைக்கப்பட்ட சிவபெருமானே' என்ற திருமூலர் கருத்துக்கு விளக்கவுரை போன்று அமைந்தன திருவாசகத்தின் பல பாடல்கள்.

புவனியில் சேவடி தீண்டிய குருநாதரைச் சிவனென யானும் தேறினன் என்று அடிகளார் பாடுவது மேலே கூறிய கருத்தை வலியுறுத்தும்.

குருநாதர் வடிவில் வந்த சிவபெருமான் பல்வேறு வடிவங்களை மேற்கொண்டு பல்வேறு திருவிளையாடல் களைச் செய்தான் என்பதைத் திருவாசகத்தில் கீர்த்தித் திருவகவல் தொடங்கிப் பல பாடல்கள் பேசிச்செல்கின்றன. மானிட வடிவில் இறைவன் வந்தாலும் அவனை இனங் கண்டுகொள்வது அவ்வளவு எளிதான காரியமன்று என்பதை ஒருவகையில் விளக்குவதே திருப்படையாட்சியாகும்.

மீன்வலை வீசிய கானவனாக வந்தாலும் ஏனைய கானவர்களிலிருந்து அவனை வேறுபடுத்தி அவன் திருவடிகளைக் கண்டுகளிக்கும் ஆற்றல் எல்லோருக்கும் வந்துவிடுவதில்லை.

இனங் கண்டுகொண்டாலும் அவன் திருவடிகளை ஈடுபாட்டுடன் தரிசிக்காவிட்டால் என்ன நிகழும் என்பதைத் திருப்படையாட்சியின் முதற்பாட்டில் (635)

கூறினார் அடிகளார். இரண்டாம் பாடலில் (636) இனம் கண்டுகொண்ட பிறகு அவன் தன்னுள்ளே புகுவதால் என்ன நிகழும் என்பதை மிக அற்புதமாக விளக்குகிறார். ஒவ்வொரு சராசரி மனிதனுக்கும் உயிர், உடம்பு, கன்மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் ஆகியவை தனித்தனியாகப் பணிபுரிகின்றன. இவை ஒன்றுக்கொன்று இணங்கிப்போவதில்லை. வாழ்க்கை முழுவதும் முரண்பாடே நிறைந்துநிற்கும். ஆனால், 'ஏறுடையான் எனை ஆளுடை நாயகன்' உள்ளே புகுந்துவிட்டால் மேலே கூறிய பன்னிரண்டும் தொழிற்படாமல் வீழ்ந்துவிடும் (உயிர்பு அறும்) என்றார். அதன்பிறகு நடைபெறுவனவற்றை முன்னும் பின்னுமாக பாடல் முழுவதிலும் கூறினார்.

மூன்றாவது பாடலிலும் (637) நாயகன் எதிர்ப்பட்ட போது தம்முள் நிகழ்ந்த ரசவாதங்களை எடுத்துப் பேசுகிறார்.

நான்காவது பாடலில் (638) ஆளுடையான் எதிர்ப்பட்டபோது நிகழும் ஒரு மாபெரும் மாற்றம் பேசப்பெறுகிறது. மாதர் தொடக்கு எளிதில் அற்றுவிடும் ஒன்றன்று. எத்தனை யோகப் பயிற்சியிலும், பக்தி முன்னேற்றத்திலும் திடீரென்று மனத்திடைத் தோன்றி பரமதப் படத்தின் பாம்புபோல இந்தப் பாலுணர்வு ஒருவரைப் புறப்பட்ட இடத்திற்கே கொண்டுவந்து விட்டுவிடும். ஆளுடையான் எதிர்ப்பட்டு, அவனுக்கு அடிமையாகிவிட்டால் மாதர் தொடக்குப்பற்றிய நினைவு அற்றுப்போகும் என்ற எதிர்மறைப் பொருளில் 'என்னணியார் முலை ஆகம் அளைந்துடன் இன்புறுமாகாதே' என்று பாடுகிறார். இந்தத் தொடரில் வரும் 'ஆகாதே' என்ற சொல்லுக்கு முன்னர்ப் பொருள் கண்டதுபோல ஆகும் என்று பொருள்கொண்டாலும் தவறில்லை. நாயகன் உட்புகுந்து, அவனுக்கு அடிமையாகி விட்டால் மகளிர் இன்பம் துய்த்தல் அதற்கு முரணாகாமல்

இருக்கும் என்பதைச் சுந்தரர் போன்ற பெருமக்களின் வாழ்க்கை அறிவுறுத்துகின்றது. ஆதலின், ஆகும் என்று உடன்பாட்டுப் பொருள்கொள்வதிலும் தவறில்லை.

ஐந்தாம் பாடலில் (639) மாலறியா மலர்ப் பாதம் வணங்குவதும் ஆகும் என்கிறார். இது எப்பொழுது? அருளுடையவனும் எனை ஆண்டவனுமாகிய இறைவன் வெளிப்படுகிறான். அந்நிலையில் அவனுடைய திருவடிகள் திருமாலாலும் அறியப்படாதவை என்பதைத் தெரிந்துகொண்டு, அந்தத் திருவடிகளை வணங்கினால் ஒரே நேரத்தில் பல பேறுகள் சித்திக்கும். மண்ணிடைத் தோன்றும் மனமயக்கம் அறுபடும் என்பது முதலான பல நிலைகள் கைகூடும் என்பதைச் சொல்லிவந்த அடிகளார், எண்ணிலி ஆகிய சித்திகள் தாமே வந்து தம்மை அடையும் என்று பாடுகிறார். பொதுவாக அட்டமா சித்திகள் என்று கூறுவதுதான் மரபு. ஆனால், அடிகளார் எண்ணிலி ஆகிய சித்திகள் என்று கூறுவதைக் கவனித்தல் வேண்டும். நான்கு வேதங்கள் என்று கூறப்பெற்றாலும் 'எண்ணிலி வேதம் சொன்னார்' என்று தேவாரம் பாடிச்செல்கிறது.

அடிகளார் போன்ற அருளாளர்கள் இந்தச் சித்திகள் முதலானவற்றைச் சட்டை செய்ததாகவே தெரியவில்லை. சித்திகளை இவர் தேடிச்செல்லாமல் இருக்கும்போதே அவை தாமாகவே வந்து தம்மை அடையும் என்கிறார்.

பொறி, புலன்கள், மனம் ஆகியவை இந்த ஆன்மாவிற்குக் கிடைத்த படைகள் என்று முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். இந்தப் படைகள் தறிகெட்டுப் போகாமல் அவற்றை ஆளும் திறம் பெற்றுவிட்டால் மால் அறியா மலர்ப்பாதத்தை வணங்குவதற்குரிய வழி தெரியும். அந்த வழியிற் சென்றால் உலக மயக்கம் தெளிதல் முதல், எண்ணரிய சித்திகளும் ஒருவரை வந்து அடையும். இதில் ஒரு வேடிக்கை அமைந்துள்ளது. இந்தச் சித்திகளை அடையவேண்டுமென்று ஊண் உறக்கம் தவிர்த்து,

மாபெரும் தவம் இயற்றுவோர் மிகப் பலராவர். அவர்கள் எடுத்த பிறப்பின் முடிவிற்கூடச் சித்திகள் வந்தனவா என்றால் உறுதியாக ஆம் என்று சொல்வதற்கில்லை. ஆப்பிள் பழத்தை வரவழைத்தல் போன்ற யட்சிணி வித்தைகளையெல்லாம் சித்திகள் என்று சொல்வது மிகத் தவறானதாகும். இங்கு அடிகளார் குறிப்பிடும் எண்ணிலியாகிய சித்திகள் யட்சிணி வித்தைக்கு முற்றிலும் மாறுபட்டவை.

இப்பதிகத்தின் நிறைவுப்பாடலில் (642) உள்ள சிறப்பு முதலடியிலேயே உள்ளது. ஆதி நாதத்தின் ஒலியை அருளாளர்கள்மட்டுமே கேட்கமுடியும். அப்படிக் கேட்ட அருளாளர்கள் யாரும் அது எவ்வாறிருக்கும் என்று கூறவில்லை. இவர்களிலும் மாறுபட்டு அடிகளார் அந்த ஆதிநாதத்தின் ஒலி எப்படிப்பட்டது என்பதை ஓர் உருவகத்தின்மூலம் விளக்குகின்றார். 'சங்கு திரண்டு முரன்று எழும் ஓசை' என்பதற்குப் பல சங்குகள் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்கும் ஒலி என்று பொருள் கூறியது அவ்வளவு முழுமையானதாகப் படவில்லை. அக்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் சங்கு ஊதுபவர் பலர் இருந்தனர். அனைத்துச் சங்குகளும் ஒன்றுதிரண்டு ஒரே நேரத்தில் ஒலியெழுப்புவது இயல்பாக நடைபெற்றுவந்த ஒன்றாகும். அதை அடிகளார் பாடினார் என்று கூறுவது சரியென்று படவில்லை. அவ்வாறானால் சங்குகள் திரண்டு ஒலிக்கும் ஒலியை இங்கு ஏன் பேசவேண்டும்? அன்றியும் சங்கின் ஒலி தொடக்கத்தில் விறுவிறுப்புடன் தொடங்கி ஊதுபவரின் மூச்சுக்காற்றுக் குறையக் குறைய ஒலி அளவை இறங்கிக்கொண்டே செல்லும். ஆனால், அடிகளார் 'முரன்றெழும் ஓசை தழைப்பன'என்றல்லவா கூறுகின்றார்! தழைத்தல் என்றால் நாளும் வளர்ச்சியடையும் ஒன்றையல்லவா அது குறிக்கும். சங்கின் ஓசை சென்று தேய்ந்து இறுமே தவிரத் தழைக்கும் இயல்புடையதன்று. இந்த உண்மையைப் புரிந்துகொண்டால் 'சங்கு திரண்டு

முரன்று எழும் ஓசை' என்பது உவமைக்காக வந்ததே தவிர வேறில்லை என்பது தெளிவாகும். இந்த முரன்றெழும் ஓசை தளர்ச்சியடையாமல் மேலும்மேலும் தழைப்பதாக இருப்பின் அது எவ்வாறிருக்குமோ அதுபோல, ஆதிநாதம் முரன்று எழும் ஓசையாய்த் தழைக்கும் என்று பொருள் காண்பதே சரியானதாகும்.

## ஆனந்த மாலை

ஆனந்த மாலை என்ற பெயரில் வழங்கும் இப்பாடல் களுக்குக் கொடுக்கப்பட்ட இத்தலைப்புப் பொருந்தாது என்று முன்னரே கூறியுள்ளோம். கிடைத்துள்ள ஏழு பாடல்களில் காணப்பெறும் திரண்ட கருத்து தம்முடைய தகுதியின்மை காரணமாகக் குருநாதர் விட்டுப் போய் விட்டார் என்று புலம்புவதேயாகும். அடுத்துத் தம் வேண்டுதலை இறங்குமுறையில் பேசியுள்ளதைக் காணலாம். இந்த அடிப்படையைக் கொண்டு பார்த்தால் அச்சோப் பத்தின் முன்னரும் யாத்திரைப் பத்தின் பின்னரும் இப்பதிகத்தை அமைத்தவர்கள் இந்த வைப்புமுறையின் பொருத்தமின்மையைச் சிந்திக்க வில்லை யென்றே தோன்றுகிறது.

இதுபற்றிச் சிந்திக்கச் சிந்திக்கப் பல புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. முப்பத்தொன்பதாவது பதிகத்திற்குத் தரப்பெற்றுள்ள, 'திருப்புலம்பல்' என்ற தலைப்பு, ஐம்பதாவது பதிகமாகிய இதற்குத் தரப்பட்டிருத்தல் வேண்டும்.

திருப்புலம்பல் என்ற தலைப்பில் காணப்பெறும் மூன்று பாடல்ளும் மிக்க பெருமிதத்தோடு 'பூங்கழல்கள் அவை அல்லாது எவை யாதும் புகழேனே' (556) என்றும், 'உடையானே உனை அல்லாது உறுதுணை மற்று அறியேனே' (557) என்றும், 'கற்றாவின் மனம்போலக்

கசிந்துருக வேண்டுவனே' (558) என்றும் முடிகின்றன. இந்த ஒன்றைத்தவிர வேறு எதையும் விரும்பவோ சட்டை செய்யவோ மாட்டேன் என்று பாடுதல் அவருடைய பெருமித மனநிலையைக் குறிக்கின்றது.

ஆனந்தமாலை என்ற தலைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்றால் திருப்புலம்பலின் அந்த மூன்று பாடல்களுக்கு அதனைத் தந்திருக்க வேண்டும்.

இன்றைய பதிப்புகள் அமைந்துள்ள முறையில் தம் இழிநிலையை நினைந்து பெருவருத்தத்தை வெளிப்படுத்தும் ஏழு பாடல்களும் 'ஆனந்தமாலை' என்ற தலைப்பில் ஐம்பதாவது பதிகமாக இந்த இடத்தில் இடம்பெறுவது ஒருசிறிதும் பொருந்துவதாகத் தெரியவில்லை.

'நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே' (615) என்று பாடியவர் மறுபடியும் தாம் கழிக்கப்பட்டுவிட்டதாகப் பாடுவது எவ்விதத்தில் பொருந்தும்? இந்தப் பகுதியின் ஏழு பாடல்களும் கோயில் மூத்த திருப்பதிகத்தின் முன்னர் எங்கோ ஓர் இடத்தில் அமைந்திருக்க வேண்டும்.

பல பத்துக்களைப்பற்றி முன்னர்ப் பேசியபொழுதே வைப்புமுறை சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளோம். இப்பொழுது தலைப்பும் சரியில்லை, வைப்புமுறையும் சரியில்லையென்று ஆனந்தமாலைபற்றி நினைக்க வேண்டியுள்ளது.

இது எவ்வாறாயினும், இங்குக் காணப்பெறும் ஏழு பாடல்களும் என்ன சிந்தனையைத் தூண்டுகின்றன என்பதைப்பற்றி இப்பொழுது காணலாம்.

ஆனந்தமாலையின் முதற்பாடலின் (643) முதலிரண்டு அடிகளும் ஒரு புதிய கருத்தை வெளியிடுகின்றன. மனிதர்களைவிடத் தேவர்கள் உயர்ந்தவர்கள் என்றும்

புண்ணியம் செய்தவர்கள் தேவலோகம் செல்கின்றனர் என்றும் ஒரு நம்பிக்கை இந்நாட்டைப் பொறுத்தவரையில் தொன்றுதொட்டு இருந்துவருகிறது. இதனைத் தகர்க்கும் முறையில் இப்பாடலின் முதலிரண்டு அடிகள் அமைந்துள்ளன.

அகன்று 'பரந்து விரிந்துள்ள இந்த உலக மாயையிலிருந்து விடுபட்டவர்கள் தேவர் உலகம் செல்வதில்லை. அதற்குப் பதிலாக இறைவனின் 'மின்நேர் அனைய பூங்கழல்களை அடை'கின்றார்கள். தேவர்களோ எனில், இன்னும் மலர்பறித்து அவன் திருவடிகளில் இட்டு வழிபாடு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். அவர்கள் ஏன் பூங்கழல்களை அடையவில்லை என்ற வினாவை எழுப்பினால், உண்மை விடை கிடைக்கும்.

உலகிலுள்ள பலரை மயக்கும் இந்த மாயை, தேவர்களையும் விட்டுவைக்கவில்லை. மாயையோடு வாழ்கின்ற இந்தத் தேவர்கள், இறைவன் திருவடிகளை வழிபட்டு என்ன பயன் அடைகிறார்கள் தெரியுமா? மறுபடியும் இந்த மண்ணிடை வந்து பிறக்கிறார்கள். இம்மண்ணிடைப் பிறந்தாலும், முன்னர் செய்த வழிபாட்டின்காரணமாக இந்த மாயையில் சிக்குவதில்லை. சிக்காமையால் மின்நேர் அனைய பூங்கழலை அடைகின்றார்கள். அடிகளாரின் இந்த நுணுக்கமான கருத்தை அறிந்துகொண்டால், நாவரசர் பெருமானின் 'வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' (திருமுறை: 4—81—5) என்ற தொடருக்கும், 'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' (திருமுறை:4-81-4) என்ற தொடருக்கும் உண்மையான பொருளைக் காணமுடியும்.

பாடலின் முதலிரண்டு அடிகளில் இக்கருத்தைக் கூறிய அடிகளார், பின்னிரண்டு அடிகளில் வியன் உலகம் கடப்பவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை

எதிர்மறை முகத்தால் தம்மேல் ஏறட்டுக்கொண்டு பாடியருளுகின்றார். தாம் கடையனாய் இருப்பதற்குக் காரணத்தைக் கூறுகிறார். 'கல் நேர் அனைய மனம்' என்றதால் கல்லை ஒத்த, ஒரு சிறிதும் உருகாத மனம் தம்பால் இருத்தலின் தாம் கடையனாக ஆகிவிட்டதாகச் சொல்கின்றார். அப்படிக் கல்போன்ற மனத்தைப் பெற்றவர்கள் என்ன ஆகின்றார்கள்? அவலக்கடலில் வீழ்கின்றார்கள் என்பதே அடிகளாரின் விடையாகும்.

வியனுலகம் கடந்து பூங்கழல்கள் அடையவேண்டுமானால் ஒன்றைப் பெறவேண்டும்; ஒன்றைத் தாண்ட வேண்டும். கல்நேர் அனைய மனத்தைத் தவிர்த்து, உருகும் மனத்தைப் பெறவேண்டும்; அவலக் கடலைத் தாண்டவேண்டும். உருகும் மனத்தைப் பெறுவது மானிடப் பிறவி ஒன்றுக்கே உரியதாகும்.

திருப்பெருந்துறையில் காணப்பெற்ற அடியார்கள் கூட்டத்தோடும் குருநாதரோடும் செல்லமுடியாமைக்குக் காரணம் இந்தச் செடிசேர் உடலம்தான் என்று பலமுறை பாடியுள்ளார். ஆனால், அக்கருத்தை மாற்றித் தாம் இங்கு தங்கிவிட்டதற்குக் காரணம் தம்முடைய தகுதியின்மையும், பக்குவம் இன்மையுமே என்பதை 'என்னால் அறியாப் பதம் தந்தாய்' (644) என்ற பாடலில் விளக்குகின்றார்.

தாம் அறிந்துகொள்ள முடியாத பதத்தைத் திருவடி மூலம் குருநாதர் தந்தார். கொடுத்த குருநாதர் அரைகுறையாகக் கொடுக்கவில்லை. முழுமையாகத் திருவடிப் பேற்றைத் தந்தார். ஆதலின் 'உன்னால் ஒன்றும் குறைவில்லை' என்றார். அப்படியானால் இடர்ப்பாடு எங்கே நேர்ந்தது? அது அறியமுடியாத பதம் என்பதையும், அது தமக்குக் கிட்டியுள்ளது என்பதையும் நன்கு தெரிந்து கொள்ளாமையால் அவற்றை இழந்தார் என்பதை விளக்கிட 'யான் அது அறியாதே கெட்டேன்' என்றார்.

கெட்டேன் என்று அடிகளார் கூறுவதற்கு என்ன பொருள்? 'பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும் பழைய அடியாரொடும் கூடாது பிற்பட்டு இங்கிருந்ததையே 'கெட்டேன்' என்ற சொல்லால் குறிப்பிட்டார்.

இப்பதிகத்தின் நான்காம் பாடலில் (646) திருவாசகத்தில் வேறெங்கும் காணப்பெறாத ஒரு கருத்துப் பேசப்பெறுகிறது. அடிகளார் இறைவனைக் குருநாதராகக் கொண்டு, தாம் அவருடைய அடிமை என்றும், அடைக்கலப் பொருள் என்றும் பலஇடங்களில் பாடிவந்துள்ளார். நன்று நேர்ந்தாலும் பிழை நேர்ந்தாலும் தமக்கு அதில் எவ்விதப் பொறுப்பும் இல்லை என்ற கருத்தில் 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' (502) என்று பாடியவர், இப்பொழுது அடிமைத்திறத்தை மாற்றிக்கொண்டு 646 ஆம் பாடலைப் பாடுகிறார்.

இப்பாடல் 'கெடுவேன் கெடுமா கெடுகின்றேன் கேடு இலாதாய் பழி கொண்டாய்' எனத் தொடங்குகிறது. இதிலுள்ள சிறப்பு என்னவென்றால் ஆயிரம் நாமங்கள் இறைவனுக்கிருப்பினும் 'கேடு இலாதாய்' என்று விளித்தமையேயாகும். 'தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்பது இந்நாட்டு முதுமொழி. அதை அடிகளார் மனத்திற் கொண்டார்போலும், அதனாலேயே 'கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்' என்று கூறி அமையாமல், 'கேடு இலாதாய்' என்று விளிக்கின்றார். நான் கெட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கின்றாய். 'கெடுகின்றேன் என்பதன் பொருள் 'உனக்கு எங்கே ஐயா தெரியப்போகிறது? நீயோ கேடில்லாதவன்; பிறர் கெடுகின்றார்கள் என்பதைப்பற்றிக் கேடில்லாதவனாகிய நீ எங்கே அறியப்போகின்றாய்? கேடு என்பதை என்றாவது நீ அனுபவித்திருந்தால்தானே, அதனால் வரும் இடர்ப்பாட்டை அறிந்து, பிறர் கெடும்போது கைகொடுத்து உதவ முன்வருவாய்' என்றார்.

கேட்டின் விளைவை ஒருவர் அறிந்திருந்தாலும் கெடுகின்றவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று அவர்களைத் திருத்திப் பணிகொள்ள வேண்டுமா என்ன! ஆக, கேடில்லாதவனாகிய இறைவன், கெடுகின்றவர்கள் ஒவ்வொருவரையும் திருத்திப் பணி கொள்ளவேண்டும் என்று எங்கே சொல்லியிருக்கிறது என்று குருநாதர் வினா எழுப்பியிருக்கலாம் அல்லவா? அதற்குரிய விடையை நேரே தரவில்லை அடிகளார். அவருடைய வருத்தம் எல்லை கடந்து உள்ளது; ஆதலின் நேரடியாகப் பதிலிறுக்காமல், (நீயே) 'பழி கொண்டாய்' என்று பேசிவிடுகிறார்.

இவ்வாறு கூறியவுடன் எதற்காகத் தம்மேல் பழிபோடுகிறார் என்பதைக் குருநாதர்தான் நினைத்துப் பார்க்கவேண்டும். அப்படி நினைத்தால் குருநாதருக்கே விளங்கியிருக்கும்.

வழியோடு போன அமைச்சரை இழுத்துப் பிடித்தது யார்? தம் திருவடியில் வந்து வீழுமாறு செய்தவர் யார்? அடியார் கூட்டத்திடையே அமரச்செய்தவர் யார்? திருவடி தீட்சை செய்தவர் யார்? அற்புதமான அமுததாரைகள் ஏற்றியவர் யார்? பொதுவினில் வருக என்று கூறியவர் யார்? பரா அமுது ஆக்கவேண்டும் என்று ஆணையிட்டவர் யார்? இவ்வளவையும் செய்தவர் குருநாதர்தானே!

இவ்வளவும் செய்து, 'எனை நான் என்பது அறியேன்' என்று சொல்லும் அளவிற்கு உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஏற்றுக்கொண்ட ஒருவர் திடீரென்று கைவிட்டுவிட்டார். 'கெடுமா கெடுகின்றேன்' என்று நொந்து பேசும் அளவிற்கு இவரைக் கைவிட்டால் மேலே சொன்னவற்றைச் செய்த குருநாதர் தம் பொறுப்பை எப்படித் தட்டிக்கழிக்க முடியும்? ஆகவேதான், 'பழிகொண்டாய்' என்று அடிகளார் பேசுகிறார். பாட்டின்

அடிப்படையில் நின்று பார்த்தால் 'பழிகொண்டாய்' என்று அவர் பேசுவது நியாயமே என்று தோன்றுகிறது.

இதன் எதிராகத் தோழமை உறவில் ஈடுபட்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் செய்துகொடுத்த சத்தியத்தை மீறியதால் கண்ணை இழந்தார். தம்முடைய பிழையை நினைந்து பல பாடல்கள் பாடி, காஞ்சியில் ஒரு கண்ணைப் பெற்றார். ஒரு கண்ணைப் பெற்றபிறகும் திருவாரூர் சென்றபிறகு 'நீரே பழிப்பட்டீர்' என்று பாடுவது வியப்பை உண்டாக்குகிறது.

**விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்**
**குற்றம் ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்**
**எற்றுக்கு அடிகேள் என்கண் கொண்டீர் <u>நீரே பழிப்பட்டீர்</u>**
**மற்றைக் கண்தான் தாராது ஒழிந்தால் வாழ்ந்துபோதீரே**
**(திருமுறை:7–95–2)**

சத்தியம் செய்து கொடுத்ததை மீறும் தவற்றைச் செய்திருந்தாலும் குற்றம் ஒன்றும் செய்தது இல்லை என்று பாடுகிறார் நம்பியாரூரர். இது சரியா என்று சிந்தித்தால், பாடலின் முதலடியில் இதற்குரிய விளக்கம் தருகிறார் ஆரூரர். குற்றம் செய்தவர் யார்? நம்பியாரூரர் என்ற தனிமனிதரா? இல்லை, அப்படி ஒருமனிதர் இல்லவே இல்லை ஆவணம் காட்டி அடியனாக என்றைக்கு ஏற்றுக்கொண்டாரோ அன்றிலிருந்தே தன்னுரிமை பெற்ற நம்பியாரூரர் என்ற ஒருவர் மறைந்துவிடுகிறார். இப்பொழுது இருப்பவர் இறைவனின் அடிமை. அந்த உடைமையை (அடிமையை) உடையவனாகிய இறைவன் என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். அந்த உடைமை என்ன செய்தாலும் அதற்குப் பொறுப்பு, செய்தனவே தவமாக்கும் உடையவனையே சேரும், இந்த அடிப்படையில்தான் 'குற்றம் ஒன்றும் செய்ததில்லை' என்று பாடுகிறார். நம்பியாரூரர் குற்றமற்றவர் என்றால் அவருக்குத் தண்டனை கொடுத்தவன் பழிக்கு ஆளாகிறான்.

மணிவாசகர், சுந்தரர் ஆகிய இருவரும் 'பழிகொண்டாய்' என்றும் 'பழிப்பட்டீர்' என்றும் பாடுவது முற்றிலும் பொருத்தமானதே என்பது நன்கு விளங்கும்.

இப்பகுதியில் ஐந்தாம் பாடலின் *(647)* 'நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ' என்ற ஈற்றடி சிந்திக்கற்பாலது. உலகத்தில் மனிதர்களிடையே இன்றும் காணப்பெறும் ஒரு இயல்பாகும் இது. எந்த ஒரு மனிதனுக்கும் எந்த ஒரு மனிதரையோ அல்லது எந்த ஒரு பொருளையோ முழுவதுமாக ஏற்றுக்கொள்ளும் இயல்பு இல்லை. ஏற்றுக் கொள்ளும் பகுதியோடு ஏற்றுக்கொள்ள விரும்பாத சில பகுதியும் உண்டு. அதை நினைவுகூர்ந்து 'பழிகொண்டாய்' என்று இதற்கு முந்தைய பாடலில் பேசிய அடிகளார், இன்னும் கொஞ்சம் சினம் மிகுந்தவராய் 'ஐயா! நீயே என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டாய். இப்பொழுது என்ன செய்கிறாய்? என்னுடைய அடிமைத் திறத்தை மட்டும் நீயே வைத்துக்கொண்டு என்னைமட்டும் ஒதுக்குவது எந்த வகையில் நியாயம்?' இந்த அடிப்படையை மனத்தில் கொண்டுதான் இதற்கு முந்தைய பாடலில் *(646)* உன் நடுவு நிலைமை என்னாயிற்று என்று கேட்கிறார்.

இந்த ஏழு பாடல்களையும் அவற்றின் ஈற்றில் வரும் தொடர்களையும் ஒருங்குவைத்துப் பார்த்தால். அடிகளாரின் ஆறாத் துயரம் எந்த அளவிற்கு மிகுந்துள்ளது என்பதை அறியமுடியும். 'இருந்தேன் நோய்க்கு விருந்தாயே' *(644)* என்றும், 'கொடியேன் என்றோ கூடுவதே' *(645)* என்றும், 'கூடும் வண்ணம் இயம்பாயே' *(643)* என்றும், 'நடுஆய் நில்லாது ஒழிந்தக்கால் நன்றோ' *(646)* என்றும், 'நான்தான் வேண்டாவோ' *(647)* என்றும்,

'இனித்தான் தேற்றாயே' (648) என்றும், 'செய்வது ஒன்றும் அறியேனே' (649) என்றும் பாடியுள்ளமை சிந்திக்கற்பாலது.

'ஐயா! நோய்க்கு விருந்தாக என்னை இங்குத் தங்கும்படி செய்துவிட்டாய். இப்பொழுது நீ செய்ய வேண்டியது ஒன்றுண்டு. ஒரு கணமும் இனித் தாமதித்துப் பயனில்லை. கொடியேனாகிய யான் எப்பொழுது உன் திருவடி வந்து அடையப்போகிறேன்'-என்ற தம் விருப்பத்தைத் தெரிவித்தவர், குருநாதர் பதில் ஒன்றும் சொல்லாததால் 'ஐயா! நீயாக என்னைக் கூட்டிக் கொள்ளாவிட்டாலும் சரி. நானாகப் புறப்பட்டு வந்து உன்னைக் கூடும் வழியையாவது சொல்லக்கூடாதா?' என்கிறார்.

இதற்கும் குருநாதர் விடை கூறவில்லை. ஆதலால் இப்பொழுது அடிகளாரின் நொந்த மனம், குருநாதரின் நடுவுநிலைமையையே வினாப்பொருள் ஆக்குகிறது. 'உன் நடுவு நிலைமை ஐயத்துக்குரியதாகிறது' என்று அடிகளார் வேண்டியும்கூட அந்தக் குருநாதர் இரக்கம் காட்டவில்லை. மேலே கூறிய நடு நிலை இன்மையை விளக்குவார்போல 'ஐயா! என்னை அடிமையாக ஏற்றுக்கொண்ட நீ, என் அடிமைத்திறத்தைமட்டும் வைத்துக்கொண்டு என்னை ஒதுக்கியது எந்த முறையில் நியாயமாகும்' என்று வினவினார். அதற்கும் விடை வராமற் போகவே நம்பிக்கை இழந்த நிலையில் 'மேலே கூறிய எதனையும் செய்யாவிட்டாலும் துயரில் ஆழ்ந்துகிடக்கும் என்னை ஏதேனும் சொல்லித் தேற்றக்கூடவா உன்னால் முடியாமல் போய்விட்டது' என்று பேசிமுடித்தார். அவர் வேண்டுகோள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இறுதியாக நம்பிக்கை இழந்த நிலையில், ஆழமான புலம்பல், ஏழாம் பாட்டின் (649) இறுதி அடியின், இறுதித் தொடராகச் 'செய்வது ஒன்றும் அறியேனே' என்று வெளிப்படுகிறது.

## அச்சோப் பதிகம்

இன்று காணப்பெறும் எல்லாத் திருவாசகப் பதிப்புகளிலும் அச்சோப் பதிகம்தான் கடைசியாகவுள்ளது. ஆழ்ந்து சிந்தித்தால் இப்பதிகம் இறுதியாக வைக்கப்பெற்றது நியாயமே என்பது தெரியவரும்.

திடீரென்று இருதயக் கோளாறு, விபத்து போன்றவற்றால் உயிர்விடுகின்றவரைத் தவிர, ஏனையோர் அனைவரும் மெள்ள மெள்ளத்தான் உயிர் நீப்பர். இவ்வாறு மெள்ள மெள்ள இறப்பவர்களை அருகிலிருந்து பார்த்தால் சில உண்மைகளை அறிந்துகொள்ள முடியும். பேசும் சக்தியை இழக்காதவர்கள் முணுமுணு என்று ஏதோ பேசிக் கொண்டேயிருப்பர். ‘கோமா’ (coma) போன்ற மயக்கத்திலிருப்பவர்கள் பேசும் சக்தி இன்மையால் அவர்களுடைய முகத்தில் பல்வேறு மாறுதல்கள் தோன்றித் தோன்றி மறைவதைக் காணமுடியும். இவ்வாறு நடை பெறுவதற்கு ஒரு காரணம் உண்டென்று நம் முன்னோர் கூறினர்.

இறக்கப்போகும் தறுவாயில் உள்ளவர்கள் அவரவர் களுடைய வாழ்வு முழுவதையும் சில மணித்துளிகளில் படம்போலக் காண்பர் என்றும் அக்காட்சியையே வாய்விட்டு முணுமுணுப்பர் என்றும் கூறுவர். இந்த முணுமுணுக்கும் சக்தியை இழந்துவிட்டவர்கள்கூடத் தம் வாழ்க்கைப் படக்காட்சியை மனத்தளவில் காண்கின்றனர். உறக்கத்தில் வரும் கனவுபோல் இவர்கள் பழைய வாழ்வைக் காண்கின்றார்கள் ஆதலின் அந்தக் காட்சிக்கு ஏற்ப முகத்தில் பல மாறுதல்கள் தோன்றி மறைவதைக் காணலாம். இதுவரையில் கூறப்பெற்றவை சாதாரண சராசரி மனிதர்களுக்குரிய இயல்பாகும்.

அடிகளார்போன்ற அருளாளர்கள் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாகும். விருப்பு - வெறுப்பு, வேண்டுதல்-வேண்டாமை, ஆசா-பாசம் ஆகியவற்றைக் கடந்தவர்கள் இப்பெருமக்கள். அச்சோப் பதிகத்தில் வரும் ஒன்பது பாடல்களையும் இந்த அடிப்படையை மனத்துட்கொண்டுபார்த்தால், ஒவ்வொரு பாடலையும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கமுடியும் என்பதைக் காணலாம்.

ஒவ்வொரு பாடலிலும் முதற்பகுதி திருவாதவூரர் வாழ்க்கையைப் படம்போலச் சித்தரிக்கின்றது. பிற்பகுதி குருநாதர் அருள்பெற்ற மணிவாசகர் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றைச் சித்தரிக்கின்றது. இந்த முறையில் முன்னரும் சில பாடல்கள் உண்டேனும் அச்சோப் பதிகப் பாடல்கள் அவற்றினும் வேறுபட்டுத் தனித்தன்மையுடன் விளங்குகின்றன.

முதலிரண்டு அடிகளில் கூறப்பெறும் திருவாதவூரர் வாழ்க்கையையும் பின்னிரண்டு அடிகளில் கூறப்பெறும் மணிவாசகரின் வாழ்க்கையையும் காண்பவர் யார்? இந்த இரண்டுக்கும் வடிவு கொடுக்கும் பாடல்களைப் பாடியவர் யார்? மிகக் கவனமாகச் சிந்திக்கவேண்டிய இடமாகும் இது. மணிவாசகரே இவை இரண்டையும் கண்டு, இரண்டுக்கும் வடிவு கொடுக்கும் முறையில் பாடினார் என்றுதான் நம்மில் பலரும் கூறுவர். ஆனால், என்னைப் பொறுத்தவரை இந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இப்பதிகத்தைத் தவிர முன்னுள்ள பாடல்கள் இறையனுபவத்திலிருந்து இறங்கிவந்த அடிகளார் அந்த அனுபவத்தைப் பின்னோக்குப் பார்வையில் கண்டு பாடியவையாகும்.

ஆனால், அச்சோப் பதிகத்தின் நிலைமை வேறு. ஒவ்வொரு பாடலிலும் முன்னிரண்டு அடிகள் திருவாதவூரர் வாழ்க்கையையும், பின்னிரண்டு அடிகள் அருள்பெற்ற மணிவாசகரின் வாழ்க்கையையும் குறிக்கின்றன என்று முன்னரே கூறியுள்ளோம். இவை இரண்டையும் மணிவாசகரே கண்டு பாடினார் என்று கூறினால், இது சராசரி மனிதரின் வாழ்க்கை போலாகிவிடும். சராசரி மனிதர்களைவிட முற்றிலும் வேறுபட்டு மிகமிக உயர்ந்த நிலையில் இருக்கின்ற ஒருவர், அடிகளார் என்பதை மறத்தலாகாது.

எனவே, இந்த இரண்டு வாழ்க்கையையும், அதில் சற்றும் சம்பந்தப்படாமல், புறத்தே நின்று ஓர் அருளாளர் பார்க்கின்றார்.

திருவாதவூரர் வாழ்க்கையில் ஒரு வெறுப்போ மணிவாசகர் வாழ்க்கையில் ஒரு விருப்போ இதனைக் காண்கின்ற அருளாளருக்கு இல்லை. புறநிலையில் நின்று நடந்ததை அப்படியே எடுத்துச் சொல்வதுதான் பாடலைப் பாடும் அருளாளரின் வேலை.

இங்கு ஒரு நியாயமான ஐயம் தோன்ற இடமுண்டு. ஒன்பது பாடல்களிலும் முதலிரண்டு அடிகள் தன்மை ஒருமையாகவும் பின்னிரண்டு அடிகளும்கூடத் தன்மை ஒருமையாகவுமே வருகின்றன. அப்படியானால் இவற்றைப் பாடுகின்றவர் தம்மைச் சுட்டித்தானே இவற்றைப் பாடியிருக்க வேண்டும்.

'சிவமாக்கி எனை ஆண்ட அத்தன் எனக்கு அருளியவாறு' (650) என்றுதானே பாடல் வருகிறது? எமை ஆண்ட என்றோ, எமக்கு அருளியவாறு என்றோ தன்மைப் பன்மையிற்கூடப் பேசப்பெறவில்லையே? அப்படியானால் முன்னிரண்டு அடிகளில் பேசப்பெற்றவரும், பின்னிரண்டு அடிகளில் பேசப்பெற்றவரும், இதனைப் பாடுபவரும்

ஒருவராகத்தானே இருக்கவேண்டும்! அப்படியிருக்க. பாடியவர் வேறொருவர் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என்ற வினாத் தோன்றினால், அதற்குரிய விடையை எனக்குத் தோன்றிய அளவில் பின்வருமாறு தருகின்றேன்.

மொழியின் வளக்குறைவினால், பாடியவர்க்குத் தனிப் பெயர் கொடுக்க முடியவில்லை. முதலிரண்டு அடிகளில் குறிக்கப்பெற்ற திருவாதவூரடிகள் வாழ்க்கையையும், பின்னிரண்டு அடிகளில் குறிக்கப்பெற்ற மணிவாசகர் வாழ்க்கையையும் இப்பொழுது புறத்தே நின்று பார்த்துப் பாடுபவருக்கு என்ன பெயர் தருவது? இரண்டாவது மணிவாசகர் என்று கூறலாமோ என்றுகூடத் தோன்றுகிறது.

குருநாதரின் அருளை முழுவதுமாகப் பெற்ற திருவாதவூரர் மணிவாசகராக மாறி, பரா அமுதாகிய திருவாசகப் பாடல்களைப் பொழிந்துவிட்டு, கூத்தன் திருவடிகளில், இதோ, இணையப்போகிறார். சாதாரண மனிதர்களுக்கு இணையப்போகின்ற நேரமோ, பிறவோ தெரிய வாய்ப்பில்லை. ஆனால், அருளாளர்கட்கு இந்த வாய்ப்பு இறைவனால் தரப்பெறுகிறது. ஆகவேதான், ‘போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்டு உடையான் கழல்புகவே’ (605) என்று பாட முடிந்தது.

இப்படிச் சொல்லிக்கொண்டு புறப்பட்டவர் மணிவாசகப் பெருமான்தான்! இந்தப் புறப்பாடு ஏதோ உடம்பை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குச் செலுத்துவது என்று பொருள் கண்டு இடர்ப்படத் தேவையில்லை. இந்த யாத்திரை ஆன்ம யாத்திரை.

யாத்திரைப் பத்துப் பாடும்போது மணிவாசகரும் அவருடைய ஆன்மாவும் ஒன்றாகத்தான் இருந்தன. அச்சோப் பதிக்த்தின் தொடக்கத்தில் மணிவாசகருடைய ஆன்மா புறத்தே தனித்து நின்று திருவாதவூரர் வாழ்க்கை

மணிவாசகர் வாழ்க்கை, என்ற இரண்டையும் அடுத்தடுத்துக் காண்கிறது. அடிகளார் கண்ட காட்சிக்கு ஒரு வடிவு கொடுக்க முற்படுகிறது அந்த ஆன்மா. துரதிருஷ்ட வசமாக இந்த வடிவைச் சொற்களால் வடிக்கும் ஆற்றல் அந்த ஆன்மாவிற்கு இல்லை.

எனவே, அந்த ஆன்மா தான் கண்ட காட்சிக்கு வடிவு கொடுக்க மணிவாசகரையே துணைக்கு அழைக்கிறது.

அச்சோப்பதிகத்தின் பாடல்கள் அனைத்தும், அடிகளாரின் அந்தராத்மாவின் ஏவலின்படி அடிகளார் பாடியவையாகும். அடிகளாரின் உதவியை நாடியதால், இது அந்தராத்மாவின் ஏவல் என்பதை வெளிப்படையாகக் கூறாமல், அடிகளார் தாமே பாடியதுபோல் தன்மை ஒருமையைப் பயன்படுத்திப் பாடியுள்ளார். இந்த அந்தராத்மா, திருவாதவூரர் வாழ்க்கையையும், மணிவாசகரின் வாழ்க்கையையும், திரும்பிப் பார்க்குமாறு கட்டளையிட்டது. அதன்படியே, அடிகளார் திரும்பிப்பார்த்து, வாதவூரர் வாழ்க்கையையும் மணிவாசகரின் வாழ்க்கையை யும் அணித்தணித்தே வைத்துப் பேசுகின்றார்.

திரு அஞ்சைக் களத்தில் வெள்ளை யானை வந்து அழைக்க, அதில் ஏறிச்சென்றவர் யார்? இந்த உடம்போடு கயிலை சென்றார் என்று அவரைக் கூறுபவர்களும் உண்டு. ஆனால், சுந்தரரே இதற்கு விடை கூறியுள்ளார். முதற்பாடலிலேயே 'ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை உத்தமனே' (திருமுறை: 7-100-1) என்று கூறியமையால், சுந்தரர் என்று பேர்தாங்கிய உடல் வேறுபடுத்தப்பட்டது என்பதை அவரே கூறுகிறார். அப்படியானால் பாடலைப் பாடியவர் யார்? நம்மால் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிலையாகும் இது. இதே பதிகத்தின் ஐந்தாவது பாடலில் 'யானையின்மேல் என் உடல் காட்டுவித்தான் நொடித்தான் மலை உத்தமனே' என்று அவரே பாடுகிறார். இங்குக் கூறப்பெற்ற உடல் எது?

'ஊன், உயிர் வேறு செய்தான்' என்று முன்னரே கூறப்பெற்றமையின் இங்குக் கூறப்பெற்ற உடல் ஊன் உடம்பு அன்று என்பது வெளிப்படை.

இப்பொழுது அடுத்த வினாத் தோன்றுகிறது. வேறு 'செய்தான்' 'காட்டுவித்தான்' என்ற இரண்டு சொற்களும் இறந்த காலத்தை அறிவிக்கும் சொற்களாகும். எனவே, இந்தப் பாடல் தோன்றியது எந்த உடம்பிலிருந்து என்ற வினாவை எழுப்பினால் விடை கூறுவது கடினம்.

சுந்தரரின் இந்தப் பதிகத்தின் மூன்றாவது பாடல் 'மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன் சுந்தர வேடங்களால் துரிசே செயும் தொண்டன்' (திருமுறை: 7-100-3) என்றும், நான்காவது பாடல் 'மடவார்கள் தங்கள் வல்வினைப் பட்டு ஆழ முகந்த என்னை' என்றும் பாடுவதன் நோக்கம் என்ன?

வெள்ளை யானையில் ஏறி, இந்திரன், மால், அயன் முதலானவர்கள் வந்தனை செய்கின்ற நிலையில் கயிலை செல்லும் சுந்தரர், பழைய வாழ்க்கையை இப்பொழுது நினைத்துப் பேசுவதன் நோக்கமென்ன?

இதே போன்று அடிகளாரும் அச்சோப் பதிகத்தின் ஐந்து பாடல்களில் 'பொய் எல்லாம் மெய் என்று புணர் முலையார் போகத்தே மையல் உறக் கடவேனை' (652) என்றும், 'பஞ்சு ஆய அடி மடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு நெஞ்சு ஆய துயர் கூர நிற்பேன்' (654) என்றும், 'வினை பெருக்கிக் கொந்து குழல் கோல் வளையார் குவிமுலைமேல் விழுவேனை' (655) என்றும், 'தையலார் மையலிலே தாழ்ந்து விழக் கடவேனை' (656) என்றும், 'காதலின் மிக்கு அணியிழையார் கலவியிலே விழுவேனை' (657) என்றும் பாடியுள்ளமை இங்கு நோக்கத் தக்கது.

சுந்தரரின் நொடித்தான் மலைப் பாடல்களையும், அடிகளாரின் அச்சோப் பதிகத்தின் இப்பகுதிகளையும் நோக்கும்பொழுது முன்னர்க் கூறிய கருத்து வலுப்படுதலைக் காணலாம்.

மணிவாசகரின் அந்தராத்மா புறத்தே நின்று திருவாதவூரர் வாழ்க்கையையும் மணிவாசகரின் வாழ்க்கை யையும் அணித்தணித்தே வைத்துப் பார்ப்பது போலச், சுந்தரரின் அந்தராத்மாவும் புறத்தே நின்று அவரின் பழைய வாழ்க்கையையும் ஊன், உயிர் வேறு செய்த பிறகு வெள்ளையானையில் செல்லும் நிலையையும் அணித்தணித்தே வைத்துப் பாடுவதைக் காணலாம்.

தையலார் மையல்பற்றிப் பாடப்பெற்ற தொடர்கள் போக எஞ்சிய தொடர்களை ஒருங்கிணைத்துப் பார்ப்பது நலம். 'முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேன்' (656) என்றும், 'நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேன்' (651) என்றும், 'மண் அதனில் பிறந்து, எய்த்து, மாண்டு, விழக்கடவேன்' (653) என்றும், 'வெந்து விழும் உடல் பிறவி மெய்யென்று வினைபெருக்கியவன்' (655) என்றும், 'சாதல் பிறப்பு என்னும் தடம் சுழியில் தடுமாறியவன்' (657) என்றும், 'செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை' (658) என்றும் பாடியுள்ளதை வரிசைப்படுத்திப் பார்த்தால் இன்று உலகிடை வாழும் ஒரு சராசரி மனிதனின் வாழ்வையே படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன இந்த ஒன்பது பாடல்களின் முதலிரண்டு அடிகள் என்பது நன்கு விளங்கும்.

இப்பொழுது ஓர் ஐயம் இயல்பாகத் தோன்றும். 'நீக்கிமுன் எனை' (435) என்று தொடங்கும் அதிசயப் பத்தின் எட்டாம் பாடலையும், 'உருத்தெரியாக் காலத்தே' (477) என்று தொடங்கும் கண்ட பத்தின் மூன்றாம்

பாடலையும் 'மானேர் நோக்கி மணவாளா' (499) என்று தொடங்கும் குழைத்த பத்தின் நான்காம் பாடலையும் பாடிய அடிகளாரா அச்சோப் பதிகத்தைப் பாடுகிறார் என்ற வியப்புத் தோன்றாமலிராது. ஆனால், மேலே காட்டிய மூன்று பாடல்களும் திருவாதவூரராக இருந்து மாறிய மணிவாசகர் பாடிய பாடல்கள் அல்ல. கூத்தன் திருவருளால் மணிவாசகர் என்ற மனிதர் தம்மை முற்றிலுமாக இழந்து, பின்நோக்குப் பார்வையில் தம்முடைய பூர்வ ஜன்மம்பற்றி அறிந்து பாடியதாகும் என்று அந்த அந்தப் பகுதியில் கூறியுள்ளோம். ஆனால், இந்த நினைவு கணநேரத்தில் தோன்றி, பாடலாக வெளிப்பட்டவுடன் அந்நினைவும் மறைந்துவிடுகிறது. அடுத்த கணத்தில் மணிவாசகர் அங்கே தோன்றுகிறார். இந்தப் பின்நோக்குப் பார்வை அவரை விட்டு அகலுமாறு செய்துவிட்டான் கூத்தன்.

இந்த அடிப்படையை மனத்துட் கொண்டு பார்த்தால், அச்சோப் பதிகத்தில் வரும் பாடல்களின் முற்பகுதியில் அடிகளார் கூறியவை அனைத்தும் மெய்யாக நடைபெற்றவை என்று கூறத்தேவையில்லை. இவற்றுள் சில அனுபவங்கள், சில நிகழ்ச்சிகள் திருவாதவூரர் வாழ்க்கையில் என்றோ நடைபெற்றிருக்கலாம். அப்படியானால் திருவாசகத்தின் இறுதிப் பகுதியில், அச்சோப் பதிகத்தில், இவ்வளவு விரிவாகத் தம்முடைய பழைய வாழ்க்கையில், இவை நிகழ்ந்தனபோல அடிகளார் ஏன் பாடவேண்டும்? ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை விளங்காமற் போகாது.

திருவாசகம் என்ற பரா அமுதைப் படைக்க விரும்பிய கூத்தன், திருவாதவூரரை அதற்கென்றே படைத்தான். அமைச்சர் வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களைப் பெறுமாறு செய்தான். அப்படியே அந்த வாழ்நாள்

கழிந்துவிடாமல் அவருடைய வாழ்க்கையைக் கூத்தன் திசை திருப்பினான்.

திருவாதவூரரென்ற தனிமனிதரை ஆட்கொண்டு வீடுபேற்றை அருள்வதுமட்டும் கூத்தனின் திருவருட் குறிப்பன்று. இதுதான் அவனுடைய திருவருட் குறிப்பு என்றால், திருப்பெருந்துறையில் திருவடி தீட்சை செய்தவுடனேயே அடிகளாரை உடனழைத்துச் சென்றிருக்கலாம். அப்படிச் செய்யாமல் தில்லைக்கு வருக என்று ஆணையிட்டுவிட்டு மறைந்ததன் நோக்கம் என்ன? அவனுடைய ஆணையின்படி தில்லையை அடைந்த அடிகளாருக்கு, அவர் எதிர்பார்த்த எதையும் கூத்தன் செய்யவில்லையே! ஏன்?

திருவாசகம் முற்றிலுமாக வெளிவரவேண்டும் என்பது கூத்தன் திருவுள்ளம் ஆதலால், அடிகளாரை அழைத்துக் கொள்ளவில்லை. யாத்திரைப் பத்து, அச்சோப் பதிகம் என்ற இரண்டும் தவிர ஏனைய பாடல்கள் யாவும் இறையனுபவத்தை இழந்த அடிகளார் அதனை மீட்டும் பெற அவாவிய பாடல்களாகவே அமைந்துள்ளன.

இந்த நிலைமை முற்றிலும் மாறி யர்த்திரைப் பத்தும், அச்சோப் பதிகமும் வெளிவருகின்றன. ஒரு ஊருக்குச் சென்றவர், அங்குச் செய்யவேண்டிய பணியை முடித்தவுடன் திரும்பவும் தம்முடைய ஊருக்குப் புறப்பட ஆயத்தம் செய்வதைப்போல் அமைந்துள்ளது யாத்திரைப் பத்து. அதிலேயே, 'நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனிநாம் செல்வோமே' (611) என்றும், 'போவோம் காலம் வந்தது காண் பொய்விட்டு உடையான் கழல் புகவே' (605) என்றும் பாடியுள்ளார் ஆதலின், சாதி சமய, வேறுபாடுகளையெல்லாம் கடந்து மனித சமுதாயம் முழுவதையும் உடன் செல்ல அழைக்கின்றார். இனி, இந்த உலகில் வாழவேண்டிய சூழ்நிலையோ, திருவாசகம் பாடவேண்டும் என்ற கடப்பாடோ தமக்கு இல்லை

என்பதை உணர்ந்த அடிகளார் புறப்படச் சித்தமாகி விட்டார். தம்முடைய முன்னேற்றம் ஒன்றையே கருதிப் புறப்படாமல், எவ்வளவு மிகுதியான மக்களை அழைத்துச் செல்ல முடியுமோ, அவ்வளவு மிகுதியானவர்களை அழைக்கின்றார்.

யாத்திரைப் பத்தோடு திருவாசகம் நின்றிருக்கலாம். இந்த அளவிலேயேகூட அடிகளாரின் பரந்த உள்ளமும், உயிர்கள் மாட்டுப் பொங்கி வழியும் கருணையும் முழுவதுமாக வெளிப்படக் காண்கிறோம். அப்படியானால் அச்சோப் பதிகம் எதற்கு? திருவாசகத்தின் உயிர்நாடியாக விளங்கும் இந்த அச்சோப் ' பதிகம் அடிகளாரின் கருணைக்குத் தனியான ஓர் எடுத்துக்காட்டாகும். அதைப்பற்றிச் சற்றுச் சிந்திப்பது நலம்.

யாத்திரைப் பத்தில் உடனுறையும் மக்களை விளித்து, 'போமாறு அமைமின்' (607) என்றும், 'சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்' (609) என்றும், 'திருத்தாள் சென்று சேர்வோமே' (612) என்றும், 'போர(போத)ப் புரிமின்' (613) என்றும் வரும் தொடர்களை இணைத்துப் பார்ப்போமேயானால் மக்களையெல்லாம் ஒன்றுதிரட்டி, அதற்குத் தலைமை வகித்து நடாத்திச் செல்லும் ஒரு பெருவீரராக அடிகளார் காட்சியளிப்பதை நாம் காணமுடிகிறது.

இப்பொழுது ஒரு புதிய பிரச்சினை தோன்றுகிறது. அடிகளாரால் அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒரே மனநிலையில் உள்ளவர்கள் அல்லர். உலக வாழ்க்கையே பெரிதென்று கருதி, அடிகளார் அழைப்பை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பலர் இவ்வுலகிடை உள்ளனர். ஆனால், புறப்படத் தயாராக இருப்பவர்கள்கூட அனைவரும் ஒரே மனநிலையில் உள்ளவர்களா என்றால், ஆம் என்று உறுதியாகக் கூறமுடியாது. அவருள் பலருடைய மனத்தில் அடிகளாருடன் போவதற்குத் தங்களுக்குத்

தகுதியுண்டா என்ற ஐயம் விசுவரூபம் எடுக்கிறது. அவரவர்கள் வாழ்வில் பாலுணர்விலிருந்து மீளமுடியாதவர்கள் பலர்; முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு வேண்டியோ வேண்டாமலோ சேர்ந்து பழகவேண்டிய நிலையில் உள்ளவர் சிலர்; 'நெறியல்லா நெறியை' இதுவே சிறந்த நெறி என்று சிலர் கூற, அதுவே நன்னெறி என்று நினைப்பவர் சிலர்; ஏதோ பிறந்துவிட்டோம் வெந்ததைத் தின்று வேளை வந்தபோது சாகலாம் என்று நினைப்போர் சிலர்; 'செம்மை நலம் அறியாத சிதடரொடு' பழகிவிட்டு அந்த உறவை முறித்துக் கொள்ள முடியாமல் அலமருகின்றவர் சிலர் என்ற முறையில், அடிகளாரின் பின்னேயுள்ள சாத்து (கூட்டம்) அலமருகின்றது.

தலைமை வகித்துச் செல்லும் அடிகளார், அதீத நிலைக்கு வளர்ந்துவிட்டமையின், இந்த அலமருகின்ற மக்களை நோக்கி 'ஒரு சிறிதும் அஞ்சத் தேவையில்லை; இவ்வளவு குற்றங்கள் நம்மிடம் இருந்தாலும் நம்மை மன்னித்து ஆட்கொள்ளத் தயாராக உள்ளான் தலைவன்' என்ற கருத்தை அச்சோப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் 'யார் பெறுவார் அச்சோவே' என்று பல்லவிபோலத் திருப்பித் திருப்பிப் பாடுகிறார். அப்படிச் சொல்வதன் மூலம், ஐயமுற்று அலமருகின்றவர்கள் மனத்தில் ஒரு தென்பு உண்டாக்க வேண்டும் என்னும் கருத்தில், இக்குற்றங்களெல்லாம் தம்மிடம் இருந்ததுபோலவும், அவற்றைப்பற்றி ஒருசிறிதும் கவலைப்படாமல் குருநாதர் தம்மை ஆண்டுகொண்டார் என்றும் இப்பதிகத்தின் ஒன்பது பாடல்களிலும் பாடியுள்ளார்.

அமைதியாக நின்று ஒன்பது பாடல்களிலும் அடுக்கப்பெற்றுள்ள குற்றங்களை ஒருசேர எண்ணிப் பார்த்தால், மக்கள் சமுதாயம் முழுவதும் இதனுள்

*அடங்கிவிடக் காணலாம். ஆகவே, அஞ்சித் தளர்ந்து 'இனி என்னே உய்யுமாறு' என்று எண்ணி, அலமரும் மனித சமுதாயம் முழுவதையும் உளப்படுத்தி அவர்கட்கு ஒரு நம்பிக்கையை உண்டாக்க வேண்டி, இறைவன் அருளால் இப்பதிகத்தை அடிகளார் பாடியருளினார் என்று நினைப்பதில் தவறில்லை.*

*சாதி சமயப் பிளவுகளாலும், பண்பாட்டு வேறுபாடுகளாலும் அன்றும் இன்றும் என்றும் உலகிடை வாழும் மக்கட் சமுதாயம் குற்ற உணர்வு மேலிட்டு வாழ்ந்துவருகிறது. இந்த நிலையில் 'இவ்வளவு குற்றங்களை நீங்கள் செய்திருந்தாலும் உங்களை மன்னித்து ஆட்கொள்வான்' என்று கூறவிரும்பிய அடிகளார் சற்றுச் சிந்தித்தார். அவ்வாறு கூறினால் பலர் மனம் புண்படும். எனவே, அடிகளார் கூறும் வழியில் வருவதற்கு அவர்கள் முன்வரமாட்டார்கள். இதையல்லாமல் ஒவ்வொரு வருக்கும் அகங்காரப் பிரச்சினை* (ego problem) *என்ற ஒன்று உண்டல்லவா? 'இவ்வளவு குற்றங்களைச் செய்தவர்களே' என்று அவர்களை விளித்துக் கூறினால் அவர்களுடைய அகங்காரம் அதை ஏற்றுக்கொள்ளாமல் சீறி எழும். இவற்றையெல்லாம் மனத்துட் கொண்ட அடிகளார் இத்தனை குற்றங்களையும் தாமே செய்ததாகப் பாடியுள்ளமைதான் அச்சோப் பதிகத்தின் தனிச்சிறப்பாகும்.*

*இப் பதிகத்தின் இறுதியில் வரும் யார் பெறுவார் என்ற தொடருக்கு என்னையன்றி யார் பெறுவார் என்று பொருள் கொள்ளாமல் 'யாரும் பெறுவார்' என்று உம்மை விரித்துப் பொருள் கொள்வதே சால்புடையதாகும்.*

*குற்றமே புரிந்துழலும் கடையனும் கடைத்தேற வழிகாட்டுவது அச்சோப் பதிகமாகும். அதனால்தான் அதனைத் திருவாசகத்தின் முடிமணி என்று கூறுகிறோம்.*

## முடிவுரை

'திருவாசகம்- சில சிந்தனைகள்' என்ற நூல் இந்த ஐந்தாவது பகுதியோடு நிறைவுபெறுகின்றது. இதனை எழுதத் தொடங்கிய காலத்தில் இரண்டு பகுதிகளில் முடித்துவிடலாம் என்று கருதியிருந்தேன். என்னையும் மீறி ஐந்து பகுதிகளாக விரிந்துவிட்டது.

இதனை என் அறிவின் துணை கொண்டோ கற்ற கல்வியின் துணை கொண்டோ ஆராயும் ஆற்றலைக் கொண்டோ எழுதினேன் என்று சொன்னால், அது பெருந்தவறாகும். இந்நூலை எழுதும்போது மேலே கூறிய எதுவும் எனக்குப் பெருமளவு கைகொடுத்து உதவவில்லை என்பது முற்றிலும் உண்மை. ஏதோ தோன்றியதையெல்லாம் ஆங்காங்கே எழுதியுள்ளேன். பல பாடல்களுக்கு, பொழிப்புரையும் கருத்துரையும் கலந்தமுறையில் எழுதப்பெற்றுள்ளது போலத் தோன்றினாலும் உண்மையில் அவையும் மனத்தில் தோன்றிய சிந்தனைகளுக்கு வடிவுகொடுத்தமையே ஆகும்.

ஒவ்வொரு பகுதியையும் எழுதி முடித்தபிறகு அந்தப் பகுதிப் பாடல்களைத் தொடர்ந்து படிக்கச் சொல்லிக் கேட்டதால் மனத்தில் தோன்றிய சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கும் வகையில் எழுதப்பெற்றதே பின்னுரை என்ற தலைப்பின்கீழ் வருபவையாகும். சில சமயங்களில் ஒவ்வொரு பாடலுக்கும் எழுதப்பெற்றுள்ள சிந்தனை பின்னுரையில் வரும் சிந்தனையோடு மாறுபட்டு நிற்பதையும் என்னால் அறியமுடிகின்றது. உதாரணமாக, திருவெம்பாவைப் பாடல்களுக்கு அடியில் எழுதப் பெற்றுள்ள சிந்தனையில் பெரும்பகுதி வாலாயமாகப்

பொருள்காணும் முறையில் எழுதப்பெற்றதாகும். இதனை எழுதி முடித்தபிறகு இருபது பாடல்களையும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் படிக்கச்சொல்லிக் கேட்டபோது முன்னர்க் கூறியதற்கு முற்றிலும் மாறுபட்ட சில சிந்தனைகள் தோன்றின. பின்னுரை என்ற தலைப்பில் இவைகளே இடம்பெற்றுள்ளன. இதேபோல, சிவபுராணத்தை எழுதிமுடித்து நான்கு அகவல்களும் முதல் பகுதியாக வெளிவந்துவிட்டது. அந்த நிலையில் சிவபுராணத்தின் கடைசிப் பத்து வரிகள் சில புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தன. காழிப்பிள்ளையாரின் 'எனதுரை தனதுரை' என்ற தொடர் ஆழ்மனத்தில் இருந்தமையாற்போலும் சிவபுராணம் அடிகளாரின் திருவாயைக் கருவியாகக் கொண்டு தில்லைக் கூத்தனே பாடினான் என்ற சிந்தனை தோன்றவே, அதற்கேற்பக், கடைசிப் பத்து வரிகளுக்குப் புதிய பொருள் தோன்றிற்று. இவ்வெண்ணம் தோன்றுகின்ற நேரத்தில் 'திருவாசகம்-சில சிந்தனைகள்' முதற்பகுதி அச்சாகி விட்டபடியால், இரண்டாவது பகுதியின் முன்னுரையில் இதனை எழுதியுள்ளேன்.

இந்த அடிப்படையில் பார்த்தால் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளதைக் காணலாம். முன்னுக்குப்பின் முரண்படுதலை இந்நூலின் பல இடங்களில் காணலாம். சிந்தனையில் தோன்றியவற்றை அப்படியே எழுதவேண்டும் என்ற முடிவுடன் இந்நூல் தொடங்கப் பெற்றமையின் முரண்பாடுகளைப்பற்றிக் கவலைப்படாமல் அப்படி அப்படியே எழுதியுள்ளேன்.

பிறர் எழுதி வெளிவந்த சில உரைகளைப் பார்க்கும் பொழுது ஒன்று தெளிவாகப் புலனாயிற்று. உரை கண்ட பெருமக்கள் தனிப்பட்ட பாடலுக்கு உரை எழுதும்பொழுது அதில் வரும் சொற்களுக்கும் தொடர்களுக்கும் அப்படி அப்படியே பொருள்கூறிச் சென்றனர். இவர்கள் தனி

மரங்களைக் கவனித்தார்களேயன்றி மரங்கள் நிறைந்த தோப்பைக் கவனிக்கவில்லை என்பது தெரிகிறது. தனி மரம் தோப்பின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி என்பதை ஏனோ இவர்கள் கவனிக்கவில்லை. தனிப்பட்ட பாடல்களுக்கு இவர்கள் எழுதிய உரைகள் அந்தப் பதிகத்தோடு பல இடங்களில் பொருந்துமாறில்லை. இவ்வுரையாசிரியர்கள் மணிவாசகரின் தனித்தன்மையை மனத்தில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. மூவர் முதலிகள், ஆழ்வார்கள் ஆகிய அனைவரும் பக்தி வலையில் பட்டவர்கள் என்பதில் ஐயமேயில்லை. ஆனால், இறைப்பிரேமை (divine ecstasy) என்பதில் இப்பெருமக்கள் எவ்வளவு தூரம் மூழ்கினார்கள் என்பதைத் தெரியமுடியவில்லை.

திருவாசகம் பெற்றுள்ள தனிச்சிறப்பு எதுவென்றால் இந்த இறைப்பிரேமையில் மூழ்கித் திளைத்த ஒரு பெருமகனார் அதிலிருந்து விடுபட்டு வந்து அந்த அனுபவத்தைத் திரும்பிப் பார்த்துப் பாடியதேயாகும். இந்த அடிப்படையில் பார்த்தால் ஏழு திருமுறைகளும் திருவாசகத்தினின்றும் பெருமளவு மாறுபட்டவை என்பது நன்கு விளங்கும். ஆழ்வார் பெருமக்கள் அருளிய நாலாயிரம் பாடல்களில் ஆண்டாள் நாச்சியார் பாடியவை தனித்து நிற்பதைக் காணலாம். ஆழ்வார் பெருமக்கள் எல்லையற்ற பக்தியில் ஆழங்கால்பட்டு நின்றவர்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால், இந்தப் பக்தி உணர்வு எத்தனை பேருக்கு இறைப்பிரேமையாக மாறிற்று என்று சொல்வதற்கில்லை. இதன் மறுதலையாக, ஆண்டாள் நாச்சியாரின் பாடல்கள் அவர் இறைப்பிரேமையில் பலமுறை அமிழ்ந்து வெளிவந்தவர் என்பதை அறிவிக்கின்றன. பெண்ணாகப் பிறந்துவிட்ட காரணத்தால் இந்த உணர்வில் ஆழங்கால் பெறுதல் அவருக்கு எளிதாக அமைந்துவிட்டது போலும்.

## அடிகளார் காலம்

தமிழர்களைப் பொறுத்தமட்டில் மாபெரும் கவிஞர்கள், காப்பியப் புலவர்கள், நீதிநூல் வல்லவர்கள் என்போர் பலர் இருந்தும் அவர்களுடைய நம்பத்தக்க உண்மையான வரலாற்றை எழுதிவைக்கும் பழக்கத்தைத் தமிழர்கள் ஏனோ மேற்கொள்ளவில்லை. அதனுடைய பயன்- இளங்கோவடிகள், திருவள்ளுவர், கம்பர் போன்ற தமிழறிஞர் யாரைப் பற்றியும் ஆதாரபூர்வமாக ஒன்றும் தெரியாமல் போய்விட்டது. இப்பெருமக்களின் இயற்பெயர்கள், இவர்கள் வாழ்ந்த காலம் என்பவற்றை அறிய நேரடிச் சான்றுகள் எதுவுமில்லை. வரலாற்றறிவு மிகுந்திருந்த சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் மூவர் முதலிகள் வரலாற்றைப் பாடியமையால் அவர்களுடைய காலத்தை ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மணிவாசகப் பெருமான் பெரிய புராணத்தில் இடம்பெறவில்லை.

இந்த நிலையில் மறைமலை அடிகள் போன்றவர்கள் அடிகளாரைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குக் கொண்டு சென்றுவிட்டனர். திருவாசகப் பாடல் அமைப்பு, ஆகமங்களுக்கு அடிகளார் கொடுத்த இடம், திசைச் சொற்களைப் பயன்படுத்திய முறை, தில்லையைப் பற்றிப் பல பாடல்கள் இயற்றியமை ஆகிய அனைத்தும் மூன்றாம் நூற்றாண்டு என்ற கொள்கைக்கு முற்றிலும் முரணானவை. திருமுருகாற்றுப்படையை விட்டுவிட்டால் பக்தி இலக்கியத் திற்குப் பிள்ளையார்சுழி இட்ட காரைக்கால் அம்மையார் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் ஆவார். அவர் காலத்தில் கூத்தன் ஊர்த்துவ தாண்டவம் செய்யும் திருவாலங்காடு இருந்ததேதவிரத் தில்லை என்பது இல்லை. ஐந்தாம் நூற்றாண்டில்தான் தில்லை தோன்றிற்று என்பதைத் திருவாலங்காட்டுத் தல புராணமும் ஏனைய சான்றுகளும் உறுதியாகத் தெரிவிக்கின்றன. இந்த நிலையில்

தில்லைக் கூத்தனை அதிகம் பாடும் அடிகளார் மூன்றாம் நூற்றாண்டில் இருந்திருக்க நியாயமேயில்லை.

தேவார காலத்திற்கூட ஆகமங்கள் அதிகம் சிறப்புப் பெறவில்லை. 8250 பாடல்களையுடைய ஏழு திருமுறைகளில் ஆகமம் என்ற சொல்லே நான்கு (கங்கை பதிப்பகம் வெளியிட்டுள்ள மூவர் அருளிய தேவாரத்திருப்பதிகங்கள் பாடல் 5377, 8083, 8204, 8248) இடங்களில் மட்டுமே பேசப்பெறுகிறது. அந்த நான்கில் ஒரே ஒரு முறைதான் நாவரசர் பேசுகிறார்; ஏனைய மூன்றும் நம்பியாரூரரால் பேசப்பெற்றுள்ளன. இதில் ஒருவகைப் பொருத்தம் உள்ளது. திருக்கோயிலில் இறைவனைத் தொட்டு வழிபடும் சிவாசாரியார்கள் குடியில் தோன்றியவர் நம்பியாரூரர் ஆதலின், அவருடைய ஆயிரம் பாடல்களில் மூன்று முறை ஆகமம் என்ற சொல் பயன்படுத்தியுள்ளது பொருத்தமானதேயாகும். நாவரசருக்குப் பின் 150 ஆண்டுகள் கழித்து நம்பியாரூரர் 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியவர். ஆகமகங்கள் அக்காலத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றன என்று நினைப்பதில் தவறில்லை.

**ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் (1-4)**

என்றும்,

**மன்னும் மாமலை மயேந்திர மதனிற்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும் (2-9,10)**

என்றும் பாடுவதால் அடிகளார் காலத்தில் ஆகமம் என்பது பெருவழக்கினதாய் வளர்ந்துவிட்டது என்பதை அறிய முடிகிறது.

'அது எந்துவே' என்ற திசைச்சொல்லைப் பயன்படுத்தும் ஒருவர், மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்று சொல்வது பொருத்தமற்றது.

**நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்**
**பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி (4:213,214)**

என்று தம் காலத்து இருந்த பாண்டியனை அடிகளார் குறிப்பிடுகிறார் என்றால், அவன் எத்தனை சிறப்பு வாய்ந்த மாபெரும் சிவபக்தனாக இருந்திருக்க வேண்டும்! திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் ஒரு பாண்டிய மன்னன் மாபெரும் சிவபக்தனாக வாழ்ந்தான் என்பதை விரிவாகக் கூறிவரும் பட்டினத்துப் பிள்ளையார்

**பெரிய அன்பின் வரகுண தேவரும் (28-55)**

என்று பாடுகையில் பாண்டியனின் **பெயரையே** குறிப்பிடுகின்றார். ' பரகதி பாண்டியற்கருளினை போற்றி' என்று அடிகளாரால் சிறப்பிக்கப்பெறும் பாண்டியனும் பட்டினத்துப் பிள்ளையார் 'பெரிய அன்பின் வரகுணதேவரும்' என்று குறிக்கும் பாண்டியனும் ஒருவனேயாவான் என்று கொள்வது பொருத்தமேயாகும்.

இரண்டாம் வரகுணன் எல்லையற்ற இறையன்பு காரணமாக அரசாட்சியைத் தன் தம்பியாகிய அவனிநாராயணன் என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு, திருக்கோயில் வழிபாட்டிலேயே பொழுதைச் செலவழித்தான். அவன் எவ்விதப் போரிலும் ஈடுபடாமையால் பொதுவாக அரசர்களுக்கு அவர்கள் வெற்றியைப்பற்றிப் பேசும் மெய்க்கீர்த்தி எதுவும் இரண்டாம் வரகுணனுக்கில்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த அவனிநாராயணன், தான் செய்யும் செயல்களையெல்லாம் அரசன் பேரிலேயே செய்ய வேண்டிய கடப்பாடுடையவனாய் இருந்தான். அவன் அளித்த, பிரசித்திபெற்ற, 'தளவாய்புரம் செப்பேடுகள்' வரகுணனைப் பற்றிப் பேசவரும் பொழுது ஒரு புதிய முறையில் அவன் புகழைப் பேசுகின்றன, அச்செப்பேடு 'பிள்ளைப் பிறை சடைக்கு அணிந்த பினாகபாணி உளத்துஇருத்தி உலகம் காக்கின்ற நாளில்' என்று தொடங்குகின்றது. இரண்டாம் வரகுணனுக்கு

எவ்வித மெய்க்கீர்த்தியும் சொல்லாமல் அவன் சிவபக்தியையே மெய்க்கீர்த்தி போலச் சொல்கிறது. பட்டினத்துப் பிள்ளை குறித்த வரகுணனும், அடிகளார் குறித்த பாண்டியனும், தளவாய்புரச் செப்பேடு குறித்த பாண்டியனும் இரண்டாம் வரகுணனேயாவான் என்பது உறுதியாகிறது. இந்த இரண்டாம் வரகுணன் கி.பி. 862 முதல் 880 வரை ஆண்டவனாவான்.

இத்தனை சான்றுகளுக்கும் மாறாக அடிகளாரை மூன்றாம் நூற்றாண்டினர் என்று கூறும் மறைமலை அடிகள் போன்ற ஒரு சிலரின் கொள்கைக்கு ஆதாரமாக நிற்பவை நாவரசர் பெருமானின் இரண்டு பாடல்களாகும். அவை,

> **நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவுசெய்வானும்**
> **விரதங் கொண்டாடவல்லானும் விச்சின்றிநாறுசெய்வானும்**
> **......................ஆரூர் அமர்ந்த அம்மானே**
> **(திருமுறை: 4-4-2)**

என்பதும்

> **வைகைத் திருக்கோட்டில் நின்றதோர் திறமும் தோன்றும்**
> **(திருமுறை:6:18-9 )**

என்பதும் ஆகும். முதலில் காட்டிய உதாரணத்தில் நரியைக் குதிரை செய்வான் என்று வந்துள்ளது. நரி பரியாக்கிய செயல் அடிகளாருக்காகச் செய்யப்பட்டது என்று ஏற்றுக்கொள்ளும் இவர்கள், இதனை நாவரசர் பாடினார் என்றதால் அடிகளார் அவருக்கும் முற்பட்டவர் ஆவார் என்ற முடிவுக்கு வந்தனர். இதிலுள்ள சிக்கல் நன்று கவனிக்கப்பட வேண்டும். இவர்கள் கருத்துப்படி இதுமுன்னரே நடைபெற்றதானால் 'நரியைக் குதிரை செய்தானும்' என்று இறந்த கால வாய்ப்பாட்டில் இருந்திருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் செய்வான்

என்றிருப்பதால், அவன் செய்யக்கூடியவன் என்ற பொருளையே தரும். அடுத்து வரும் 'நரகரைத் தேவு செய்வான் விரதங் கொண்டு ஆட வல்லான் விச்சின்று நாறுசெய்வான்' என்னும் மூன்று தொடர்களும் எதிர்கால வாய்பாட்டில் அமைந்திருத்தலைக் காண்டல் வேண்டும். முதற் பகுதிக்கு மதுரையில் நரி பரியாக்கிய கதை என்றால் நரகரைத் தேவு செய்வான் என்பதற்கு எந்தக் கதையைச் சொல்வது? விரதங் கொண்டு ஆட வல்லான் என்பதற்கு எந்தக் கதையைச் சொல்வது? இந்த நான்கையும் எதிர்கால வாய்பாட்டால் கூறிய நாவரசர் பெருமான் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறும்போது இறந்த கால வாய்பாட்டால் கூறுவது நோக்கத்தக்கது. மன்மதனை எரித்த கதையைக் 'கொம்பு நல் வேனிலவனைக் குழைய முறுவல் செய்தானும்' *(திருமுறை :4-4-4)* திரிபுரம் எரித்த செயலை, 'செம்புனல் கொண்டு எயில் மூன்றும் தீயெழக் கண் சிவந்தானும்' *(திருமுறை:4-4-4)* என்று இரண்டு இடங்களிலும் 'செய்தானும்', 'சிவந்தானும்' என்ற இறந்த கால வாய்பாட்டால் குறிக்கப்பட்டமை நோக்கத்தக்கது. எனவே, 'நரியைக் குதிரை செய்வானை' என்பதை நரி பரி யாக்கிய கதை என்று கொண்டு இடர்ப்படாமல் இறைவனுடைய மாபெரும் ஆற்றலை (அகடி தகடினா சக்தி) எடுத்துக் கூறும் தொடர்கள் என்றே கொள்ளவேண்டும்.

இதே போன்று 'வைகைத் திருக்கோட்டில் நின்றது ஓர் திறம்' என்பதற்கு வெள்ளத்தால் என்றுமே மதுரை அழிந்துபடாமல் வெள்ளம், கரையோடு நின்றுவிட்டது என்ற ஒரு செய்தியைக் குறிப்பது என்றே கொள்ள வேண்டும். இதன் எதிராக அடிகளார் காலத்தில் வையை உடைப்பெடுத்துக்கொண்டு ஊரை அழிக்க முற்பட்டதே தவிரத் திருக்கோட்டில் நிற்கவில்லை. உடைப்பு எடுத்ததால்தானே வந்தியின் பங்கை அடைக்கச் சொக்கன் மண் சுமந்தான்.

ஆதிசங்கர பகவத்பாதர் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் என்பது இன்றைய அறிஞர்கள் ஏற்றுக்கொள்கின்ற ஒன்றாகும். அப்பெருமகனார் அத்துவைதக் கொள்கையை மக்களிடையே வெகுவாகப் பரப்பினார். பிரமம் ஒன்றைத் தவிர ஏனைய அனைத்தும் மித்தை என்பது சங்கரர் கொள்கையின் அடிப்படை ஆகும். ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய அடிகளார் காலத்தில் மாயாவாதம் வெகுவாகப் பரவத் தொடங்கிற்று என்று கொள்வதில் தவறில்லை. அதனையே அடிகளார் 'மிண்டிய மாயாவாதம் என்னும் சண்ட மாருதம் சுழித்து அடித்தது' (4:54-55) என்று கூறுகிறார். மாயாவாதத்தைச் சண்டமாருதம் என்று குறிப்பிட வேண்டுமானால், அது சங்கரரைப் பற்றியதே என்பதில் ஐயமில்லை. இத்தகைய காரணங்களால் அடிகளார் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியவர் என்று கொள்வதே சிறப்புடையதாகும்.

நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்ற பெருமக்கள் பரப்பிய பக்தி இயக்கம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மெள்ள மெள்ளச் சக்தி குறையலாயிற்று. பல்லவர்களுடைய ஆட்சி வீழ்ச்சியடையத் தொடங்கிய காலமாகும் இது. மகேந்திரவர்மன் காலத்தில் தொண்டை மண்டலத்திலும் ஏறத்தாழ அதே காலகட்டத்தில் தெற்குப் பகுதியில் பாண்டிய நாட்டிலும் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த சமண சமயம் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செல்வாக்கு இழந்துவிட்டது. என்றாலும், பிற சமயங்கள் ஆங்காங்கே சிறுசிறு துண்டுகளாக நிலைபெற்று நின்று சைவ சமயத்திற்கு ஊறு விளைவிப்பன ஆயின.

இது புறச்சமயங்கள் ஆகிய சமணம், பௌத்தம் என்பவற்றால் தோற்றுவிக்கப்பட்ட நிலை. இவற்றை அல்லாமல் அறுவகைச் சமயங்களுள் ஒன்றாகிய

வைணவமும் பாண்டி நாட்டுப் பகுதியில் வளர்ந்து நின்றது. பெரியாழ்வாரும், அவர் மகளாராகிய ஆண்டாள் நாச்சியாரும் தீவிரமாக வைணவத்தைப் பரப்ப முயன்றனர். இவர்களுக்கு உறுதுணையாக ஸ்ரீமாறன்ஸ்ரீவல்லபன் என்ற ஒரு பாண்டியச் சிற்றரசன் பரம வைணவனாக இருந்துகொண்டு ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பகுதியை ஆட்சி செய்துவந்தான்.

பாண்டி நாட்டில் பரவியிருந்த சமணம் ஞானசம்பந்தருக்குப் பின் வழக்கு ஒழிந்தது. ஆனால், பெரியாழ்வார் பரப்பிய வைணவம் ஓங்கி நின்றது. இந்த நிலையில் அடிகளார் தோன்றுகிறார். பாண்டி நாட்டுப் பகுதி இந்தச் சமயப் பூசல்களால் என்ன நிலையை அடைந்தது என்பதை அடிகளார் பேசுகிறார்:

ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர் (4:46.47)

விரதமே பரம் ஆக வேதியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவதாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதம் சுழித்து அடித்து ஆஅர்த்து
உலோகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
கலா பேதத்த கடுவிட மெய்தி (4:50-57)

என்று பாடியுள்ளமையால் அவர் காலத்தில் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்த பல்வேறு சமயங்கள், அவற்றிடையே நிகழ்ந்து வந்த உட்பூசல்கள் என்பவை தெளிவாகத் தெரிகின்றன.

அடிகளாரை மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கூறுவதற்குத் தமிழகத்தில் அன்று காணப்பட்ட இந்த நிலை முற்றிலும் பொருந்தாததாகும்.

ஆறாம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தோன்றிய பக்தி இயக்கம், உணர்வை அடிப்படையாகக் கொண்டது. அந்தக் காலத்திலேயே அறிவுவாதம், தருக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சைன, பௌத்த சமயங்கள் சைவத்தோடு மாறுபட்டு நின்றன. இவை இரண்டும் அடங்கியவழி, அறிவுவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஏகான்ம வாதமும் உபநிடதக் கொள்கைகளும் எட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சங்கரரால் வீறு கொண்டு எழுந்தன.

இவையெல்லாம் ஒரு புறமிருக்க, இதுவரை தமிழகத்தில் அதிகம் பேசப்பெறாத யோகம், சக்கரம் என்பவை பற்றிப் பேசும் திருமூலரும் இந்தக் காலகட்டத்தில் தோன்றினார். ஆனால், சைவ சித்தாந்தத்தையும், அதில் ஒரு பகுதியாக யோகம் முதலியவற்றையும் கூறிய திருமூலர் என்ன காரணத்தாலோ தமிழகத்தில் அதிகச் சிறப்புப் பெறவில்லை. ஆனால், திருமூலரின் செல்வாக்கு அடிகளாரைப் பொறுத்தமட்டில் ஒருவகையில் பயன்பட்டது. குருவைப்பற்றியோ குருதான் ஆன்மாக்களை வழிநடத்திச் செல்பவர் என்பது பற்றியோ தேவாரங்களிலோ பிரபந்தங்களிலோ எங்கும் பேசப் பெறவில்லை. திருமூலர்மட்டுமே தம்முடைய திருமந்திரத்தின் முதல் தந்திரத்தில் குருவின் சிறப்பை விரிவாகப் பாடுகிறார். குருவை 'நந்தி' என்று அழைக்கும் திருமூலர், சிவபெருமானுக்குரிய இலக்கணங்களையே குருவுக்கும் கூறுகிறார். இவர் மானிட குருவைக் குறிக்கிறாரா அல்லது இறைவனைக் குறிக்கிறாரா என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதையும் வைத்துப் பார்க்கும்பொழுது, அடிகளார் 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தார் என்று கொள்வதே சிறப்புடையதாகத் தெரிகிறது.

குருவின் திருவடிகளை அண்டி உய்கதி அடைதல் என்ற புதுவழியைத் திருமூலரையடுத்து அடிகளார்தான்

பேசுகிறார். இதில் வியப்பு என்ன என்றால், குருவை அண்டி உய்கதி அடையும் நிலை இவர்களுக்கு முன்னரோ பின்னரோ யாரும் மேற்கொண்டதாக நூல்வழியில் தெரியவில்லை. தனிப்பட்டவர்கள் இப்பயனைப் பெற்றிருக்கலாம்.

மேலே கூறிய காரணங்களல்லாமல், 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையில் அடிகளார் இடம்பெறாததால் சுந்தரர் காலத்துக்குப் பிற்பட்டவர் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

## அடிகளார் குலம்

அடிகளார் வரலாற்றைச் செம்மையான முறையில் அறிய எவ்வித வாய்ப்பும் இல்லை. முதன்முதலில் தோன்றிய பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணம், அடுத்துத் தோன்றிய வேப்பத்தூர் நம்பி திருவிளையாடல், அடுத்துத் தோன்றிய கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூரடிகள் புராணம் என்ற மூன்றுமட்டுமே அடிகளார் வரலாற்றை ஓரளவு சொல்கின்றன. திருவிளையாடல்கள் இரண்டும் இறைவன் திருவிளையாடல்களைப்பற்றிக் கூறுகின்ற முறையில் நரி பரியாக்கியது (குதிரை) கயிறு மாறியது பிட்டுக்கு மண் சுமந்தது என்ற பகுதிகளைச் சொல்லும் வகையில் திருவாதவூரரைப் பற்றியும் சில குறிப்புகளைத் தந்துசெல்கின்றன.

அடிகளார் வரலாற்றை முழுவதுமாகச் சொல்ல முற்பட்டது திருவாதவூரடிகள் புராணமேயாகும். இப்புராணந்தான் அடிகளார் ஆமாத்திய குலத்தில் பிறந்தார் என்று சொல்கிறது. இந்தக் குலம்பற்றி அதிகம் அறிய வாய்ப்பு ஒன்றும் இல்லை. சேக்கிழாருடைய பெரியபுராணம் சிறுத்தொண்டர் வரலாறு கூறும்பொழுது அவர் ‘மலர்புகழ் மாமாத்திரர்தம் குலம் பெருக

வந்துள்ளார்' (பெ.பு.சிறுத்தொண்ட-2) என்று பாடிச் செல்கிறது. இந்தக் குலத்தைப் பற்றிக் கூறவந்த சேக்கிழார் 'உலகில் வளர் உயிர்க்கெல்லாம் உயர் காவல் தொழில் பூண்டு' (பெ.பு.சிறுத்தொண்ட-2) என்று பாடுவதைக் காணலாம்.

தமிழக வரலாற்றில் வாழ்ந்த பெரியோர்களில் ஆமாத்திய குலத்தைச் சேர்ந்தவர்கள் இருவர் காணப் பெறுகின்றனர். ஒருவர் காழிப் பிள்ளையார் காலத்தில் வாழ்ந்த பரஞ்சோதி என்ற சிறுத்தொண்டர் ஆவார். அடுத்துக் காணப்பெறும் ஆமாத்தியர் திருவாதவூரர் ஆவார். இவர் ஆமாத்திய குலத்து உதித்தார் என்பதற்குத் திருவாதவூரடிகள் புராணம் தவிர வேறு சான்று ஒன்றும் இல்லை. ஆனால், திருவாதவூரர் பாண்டி மன்னனுக்கு அமைச்சராக இருந்தார் என்பதை இரண்டு திருவிளையாடல்களும் வாதவூரர் புராணமும் கூறிச்செல்கின்றன. எனவே, வாதவூரர் அமைச்சராக இருந்தார் என்பதையும் சிறுத்தொண்டர் சேனாதிபதியாக இருந்தார் என்பதையும் இவ்விருவரும் ஆமாத்தியர் குலத்தில் உதித்தவர்கள் என்பதையும் இருவருடைய வரலாறுகளும் பேசுகின்றன. இவ்விருவரைத் தவிர இக்குலம்பற்றித் தமிழ்நாட்டு வரலாற்றில் வேறு எவ்விதக் குறிப்பும் இல்லை. அப்படியானால், ஆமாத்தியர் குலம் தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு வரும் குலம் அல்லது குடி என்பவற்றுள் ஒன்றா என்ற வினாத் தோன்றுகிறது. இந்தக் குலம்பற்றி வேறு எவ்விதக் குறிப்பும் கிடைக்காமையால் இவர்கள் தமிழர் பழங்குடியைச் சேர்ந்தவர் அல்லர் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்த நிலையில் கிறிஸ்துவுக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கௌடில்யனுடைய அர்த்த சாஸ்திரத்தில் வரும் ஒரு பகுதி வியப்பைத் தருகிறது. அக்காலத்தில் வாழ்ந்த மக்களைக் குலம் பிரித்துப் பேசும்

கௌடில்யன் ஆமாத்திய குலம் என்னும் ஒன்றைத் தனியே பிரித்துப் பேசுகின்றான். இக்குலத்தாரைப்பற்றிக் கூறவந்த அவன், இவர்கள் இரண்டு தொழில்களில்தான் ஈடுபடுவர் என்று கூறுகிறான். அடுத்து அந்த இரண்டு தொழில்களைப் பற்றிக் கூறுகின்ற அவன் ஒன்று அமைச்சர் தொழில்; மற்றொன்று படைத்தலைவர் தொழில் என்று குறிப்பிடுகின்றான். கௌடில்யன் கூறிய இந்தக் குலத்தார் வடநாட்டில் வாழ்ந்தவர் என்பது நன்கு தெரிகிறது. நீண்ட காலத்திற்கு முன்னரே இக்குலத்தார் சிலர் தமிழகத்தில் வந்து குடியேறியிருக்க வேண்டும். சிறுத்தொண்டரிடம் வந்த சிவனடியார், வடநாட்டுப் பைராகிக் கோலத்தில் வந்ததும், பிள்ளைக்கறி வேண்டும் என்று கேட்டதும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. பரஞ்சோதியார் நரசிம்ம பல்லவனுக்குச் சேனைத் தலைவராக இருந்து வடக்கே படையெடுத்துச் சென்று சாளுக்கிய நாட்டு வாதாபியை அழித்தார் என்று பெரிய புராணம் பேசுகிறது.

அடுத்தபடியாக நாம் காணும் ஆமாத்தியர் அடிகளாரே ஆவார். இவர் பாண்டியனிடம் அமைச்சுத் தொழில் பூண்டிருந்தார் என்று இரு திருவிளையாடல்களும் புராணமும் பேசுகின்றன. ஆதலால், இதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

## அடிகளார் பற்றிய அகச்சான்றுகள்

திருவாசகப் பாடல்களில் அடிகளாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்தனவாகப் பல செய்திகள் கூறப்பெறுகின்றன. பாண்டியனிடம் குதிரைகளைத் தந்த குதிரைச்சேவகன் அவற்றுக்குள்ள விலையைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை

**பாண்டியன் தனக்குப் பரிமா விற்று ஈண்டு கனகம்**
**இசையப் பெறாது (2:38-39)**

என்ற தொடரில் குறிப்பிடுகிறார். ‘பிட்டு நேர்பட மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே’ (469) என்ற தொடரால் பிட்டுக்கு மண் சுமந்ததைப் பேசுகிறார். ‘நரியைக் குதிரைப் பரியாக்கி’ (649) என்ற தொடராலும் ‘நரியை பரியாக்கிய நன்மையும்’ (2:36) என்ற தொடராலும் நரி பரியாக்கிய நிகழ்ச்சியைக் குறிக்கின்றார். தமக்கு அருள் செய்ய வந்த குருநாதர் மரத்தடியில் திருவடி நிலந்தோய அமர்ந்திருந்தார் என்பதைப் ‘புவனியில் சேவடி தீண்டினன் காண்க’ (3:61) என்ற தொடராலும், ‘நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி’ (1:59) என்ற தொடராலும் குறிப்பிடுகிறார். தம் வினையைப் போக்கி, பிறவிவேர் அறுத்து அந்தக் குருநாதர் ஆட்கொண்டார் என்ற செய்தியை நூற்றுக்கணக்கான இடங்களில் சொல்லிச் செல்கிறார். இவையெல்லாம் அகச்சான்றுகள் என்று கூறப்பெறும்.

தம் வாழ்க்கையில் நடந்த இத்தனை செய்திகளையும் நிகழ்ச்சிகளையும் கூறிய அடிகளார், தாம் அமைச்சராக இருந்ததுபற்றி ஏனோ ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. தம்முடைய பழைய வாழ்வுபற்றிப் பேசிய இடங்களிலெல்லாம் மகளிர் தொடர்பால் தாம் பட்ட அல்லலைக் கூறினாரேயன்றித் தம் பதவியைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. திருவடி தீட்சைக்குப் பிறகு மாணிக்கவாசகராக உருவெடுத்த பெருமான், ஓயாது தம் சிறுமையை நினைந்து ‘நாயினும் கடையேன்’ என்று பல இடங்களில் பாடிச் செல்கிறார். ஆதலின், தாம் வகித்த அமைச்சர் பதவி அவர் நினைவை விட்டே கழன்றுவிட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

இவர் பாடல்களில் மற்றொரு புதுமையையும் காணமுடிகின்றது. திருவாதவூரர் என்ற பெயருடன் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஒருவர், ஓயாது ‘சுற்றம்’ ‘சுற்றம்’ என்று பாடிச் செல்வது புதுமையாக உள்ளது.

பெரும் பதவியில் இருந்த காரணத்தால் நெருங்கிய சுற்றத்தார் என்று கூறிக்கொண்டு பலர் இவரைச் சூழ்ந்திருக்க வேண்டும். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது இவர் ஏதோ அமைச்சர் போன்ற பெரும் பதவியை வகித்திருப்பார் என்று கொள்வதில் தவறில்லை.

'பாண்டி நாடே பழம்பதியாகவும்' (2:118) என்றும், 'அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த' (185) என்றும் பல இடங்களில் பாண்டிய நாட்டின் பெருமையைப் பேசுவதில்கூட அந்நாடு பல வெற்றிகளைக் கண்டது என்றெல்லாம் கூறாமல் இறைத் தொடர்போடு கூடியது என்பதையே வலியுறுத்திச் செல்கிறார். தென்னன் என்ற பழஞ்சொல் பாண்டியனுக்கு உரியது என்பதில் ஐயமில்லை. ஆனால், அடிகளார் தென்னன் என்ற சொல்லைப் பாண்டியனுக்குப் பயன்படுத்தாமல் சொக்கனுக்கே பயன்படுத்துகிறார். பாண்டியர்களைப் பொறுத்தமட்டில் அரிகேசரி, பரகேசரி என்ற பட்டப் பெயர்கள் தந்தைக்கும் மகனுக்கும் மாறி மாறி வரும். வரலாற்றில் காணப்பெறும் 'அரிகேசரி' என்ற பட்டப் பெயரை எடுத்து 'கலையார் அரிகேசரியாய் போற்றி' (4:190) என்ற தொடரில் இறைவனுக்கே பயன்படுத்துகிறார். இந்த அளவுக்குத் தாம் பிறந்த நாட்டையும் அந்நாட்டு மன்னனையும் இறைவனுடன் தொடர்புபடுத்திப் பாடும் அடிகளார் அப்பாண்டி நாட்டில் ஒரு பெரும் பதவியை வகித்திருக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. இவற்றையெல்லாம்விடத் திருவாசகத்தில் காணப்பெறும் திருப்படையெழுச்சி என்ற தலைப்பில் வரும் இரண்டு பாடல்கள் சிறந்த போர்த்திறம் அறிந்த ஒருவராலேயே பாடப்பெற்றிருக்க முடியும் என்று நினைப்பதில் தவறில்லை. ஒரு பெரும் படை புறப்படும்பொழுது தூசிப்படை, சூழ்ந்துசெல்லும் படை, இடையிலிருக்கும் படை, இறுதியாகப் பின்னணியில் உள்ள படை

என்றெல்லாம் வேறு பிரித்துப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. பறையறைந்து கொண்டு முன்னே செல்லும் படையை அடுத்து அரசர் முதலானோர் தனிக் குதிரைகளின்மேல் செல்வது அன்றையப் படை அணிவகுப்பு முறையாகும். அன்றியும், இக்குதிரைப்படையில் வரும் அரசர் முதலானவர்க்கு தலைக்கு மேல் வெண்கொற்றக்குடை விரிந்து நிற்கும்.

ஒரு படையின் அணிவகுப்பை, இன்ன இன்ன பகுதியினர் இன்ன இன்ன இடத்தில் இருக்க வேண்டும் என்ற நுணுக்கத்தை இரண்டே பாடல்களில் ஒருவர் பாடினார் என்றால், அவர் போர்த்திறமும் அணிவகுப்பின் நுணுக்கமும் நன்கறிந்தவராக இருத்தல் வேண்டும். இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது அடிகளார் அமைச்சராக இருந்திருப்பார் என்ற முடிவுக்கு வருவதில் தவறொன்றும் இல்லை. நேரடியாக அகச்சான்று ஒன்றும் இன்றேனும், இந்த முடிபு மிகவும் பொருத்தமானது என்று அறியப்படும்.

## செய்திகள் கூறுவதிற் குழப்பம்

திருப்பெருந்துறை நிகழ்ச்சி சில விநாடிகளே நடைபெற்றது என்று முன்னரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறையருள் ஒரு விநாடி நேரத்தில், தான் செய்ய வேண்டியதைச் செய்துவிடும் என்பதற்குத் திருப்பெருந்துறை நிகழ்ச்சி உதாரணமாகும். இந்த நுணுக்கத்தைப் புரிந்துகொள்ளாத திருவாதவூரடிகள் புராணக்காரர், குருநாதர் அடியார்களோடு சில நாட்கள் தங்கியிருந்தார் என்றும் சர்க்கரைப் பொங்கல் செய்து அடிகளார் படைத்தார் என்றும் அப்போதுதான் குருநாதர் திருவடி தீட்சை செய்தார் என்றும் பாடிச்செல்வது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இனி, அடுத்தபடியாக நம்முடைய கவனத்தைக் கவர்வது திருப்பெருந்துறைபற்றிய ஒரு செய்தியாகும்.

இரண்டு திருவிளையாடல்களும் வாதவூரடிகள் புராணமும் திருவாதவூரார், பெரிய அளவில் பொன்னை எடுத்துக் கொண்டு குதிரை வாங்குவதற்குத் தொண்டியை நோக்கிச் சென்றார் என்றும் வழியில் திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடைபெற்றது என்றும் கூறுகின்றன. அம்மட்டோடு இல்லாமல், பெருமானார் தாம் கொண்டுசென்ற பொன் அனைத்தையும் திருப்பெருந்துறைக் கோயில் கட்டுவதற்குச் செலவிட்டுவிட்டார் என்று கூறுகின்றன. இச்செய்தியைக் கேள்வியுற்ற பாண்டியன் அவரை அழைத்துவருமாறு பணியாளர்களை அனுப்பினான் என்றும் கோயிலில் வழிபட்டுக்கொண்டிருந்த திருவாதவூரரை அரசன் ஆணையைக் கூறி வருமாறு அழைத்தார்கள் என்றும் நம்பி திருவிளையாடல் பேசுகிறது. அந்த இடத்தில் வரும் நம்பி திருவிளையாடற் பாடல் கவனிக்கத் தக்கது. பணியாளர்கள் வந்து அழைக்கின்றவரையில் அடிகளார், தம் பழைய நிலையை அறவே மறந்து இருந்தார் என்றும் அவர்கள் அழைத்தவுடன்தான் தாம் அமைச்சர் என்ற நினைவும் குதிரைகள் வாங்கப் புறப்பட்ட நினைவும் அவருக்கு வந்தது என்றும் புலப்படுத்தி

> **தென்னவன் அமைச்சனே யான் என்ன காரியம் செய்தேன்**
> **இவுளி கொள்வதற்கே வந்தேன்**
> **பொன்னினை அழித்தேன் அந்தோ புகல ஓர் மாற்றம் உண்டே**

என்ற முறையில் திருவிளையாடற் பாடல் செல்கிறது.

குதிரைகள் வாங்கத் தாம் புறப்பட்டு வந்ததாகவும் கொண்டுவந்த பொன்னைச் செலவிட்டுவிட்டதாகவும் அடிகளார் வருந்திக் கூறினார் என்ற முறையில் இந்தப் பாடல் அமைந்திருப்பினும் இதனை நிலைநாட்ட எவ்விதச் சான்றும் இல்லை. அடிகளார் திருப்பெருந்துறையில் கோயில் கட்டினார் என்றால், அது ஒரு நாள் அல்லது இரு நாளில் முடிகின்ற காரியமன்று. பல மாதங்கள்

நடைபெறவேண்டிய ஒரு செயல் என்பதை அறிதல் வேண்டும். அப்படியானால் அத்தனை மாதங்கள் அடிகளார் திருப்பெருந்துறையிலேயே தங்கிவிட்டாரா என்பது சிந்தித்தற்குரியது. மண் ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகவே காணும் நிலையை அடிகளார் அடைந்துவிட்டார். திருவடி தீட்சை கிடைத்தபின் உண்டான முதற்பயன் இது. இந்த நிலையை அடைந்துவிட்ட அடிகளார் பொன்னை வைத்துக் கொண்டு பணியாளர்களுக்குக் கூலி கொடுத்துப் பல மாதங்களுக்குக் கோயில் கட்டினார் என்றால், அது சற்றும் பொருந்தாக் கூற்றேயாகும். இத்தகைய பணியில் ஈடுபடும் மனநிலை, திருவடி தீட்சை பெற்ற அந்தக் கணத்தில், அடிகளாரை விட்டு எங்கோ போய்விட்டது.

எனை நான் என்பது அறியாமல், பகல் இரவாவதும் அறியாமல் வாழத் தொடங்கிய அடிகளார், பொன் மூட்டையை வைத்துக்கொண்டு, கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டார் என்று கூறுவது, இறையனுபவம் பற்றி அறியாதவரின் கூற்றேயாகும்.

அப்படியானால் இந்தத் திருப்பெருந்துறையில் ஈடு இணையற்ற பொலிவுடன் விளங்கும் திருக்கோயிலைக் கட்டியது யார்? இங்குள்ள திருக்கோயிலில் கருவறையில் சிவலிங்கம் இல்லை. அதற்குப் பதிலாக முக்கால் அடி உயரமுள்ள ஒருமேடைதான் இருக்கின்றது. குருந்த மரத்தடியில் இருந்த குருநாதரைச் சிவபெருமான் என்றே அடிகளார் கருதிப் பாடினார். அந்தக் குருநாதர் மறைந்துவிட்டதை அறிவிக்குமுகமாகவே இலிங்கத் திருமேனி நிறுவப்படாமல் வெறும் பீடம்மட்டும் உள்ளது என்று விளக்கம் கூறப்படுகிறது. இந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால், இந்தக் கோயிலை அடிகளாரே கட்டினார் என்று கூறுவதில்தான் பிரச்சினை தோன்றுகிறது. அடிகளார் வரலாற்றை

நன்கறிந்திருந்த பாண்டிய மன்னர் எவரேனும் இத்திருக்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும்.

இது அடிகளாரால் கட்டப்படவில்லை என்பதற்கு வலுவான மற்றொரு சான்றும் உண்டு. சந்நிதியின் வலப்புறத்தில் அமைச்சரின் உடையுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் திருவாதவூரர் சிலை ஒன்று இருக்கிறது. இச்சிலையைப் பிற்காலத்தார் ஒருவேளை வைத்திருக்கலாம் என்று யாரும் கூறமுடியாது. ஏனென்றால், இந்த அற்புதமான சிலை மண்டபத் தூணிலேயே செதுக்கப்பெற்றுள்ளது. இதனை அடுத்துத் துறவுக் கோலத்தில் உள்ள மணிவாசகர் சிலையும் உள்ளது. கோயிலை அடிகளார் கட்டியிருந்தால், இறைவன் கோயிலில் தம்முடைய சிலையை வைக்கும் எண்ணம் அவருக்கு நிச்சயமாக வந்திராது. இவற்றையெல்லாம் நோக்கும்போது, அடிகளார் காலத்திற்குப் பின்னர், அவர் வரலாற்றை நன்கறிந்திருந்த யாரோ ஒரு பாண்டி மன்னன் இக்கோயிலை நிறுவியிருக்க வேண்டும் என்று சொல்வதில் தவறில்லை.

அப்படியானால் அடிகளார் காலத்தில் திருப்பெருந்துறையில் திருக்கோயில் ஏதேனும் ஒன்று இருந்ததா? இந்த வினாவிற்கு விடை கூறுவது போல அடிகளார் பாடலில் வரும் சில அடிகள் அமைந்துள்ளன. திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் முழுவதும் திருப்பெருந்துறைக் கோயிலையே சுற்றி நிற்கின்றது. அன்றியும்

**திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி ( 375)**

என்று வரும் தொடரும் இக்கருத்துக்கு அரண் செய்கின்றது.

முன்னரே திருக்கோயில் இருந்தது என்றால், என்ன காரணத்தாலோ அது நன்கு அறியப்பட்டிருக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. திருஉத்தரகோசமங்கை

போலவோ திருவாசகப் பதிகங்களில் காணப்பெறும் திருவண்ணாமலை, தில்லை, திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர்களைப் போலவோ திருப்பெருந்துறை, அடிகளாருக்கு முன்னர்ப் பிரசித்தி பெற்றிருந்தது என்று நினைக்க வாய்ப்பில்லை.

அடிகளாருக்கு முன்னரே திருப்பெருந்துறையில் ஒரு திருக்கோயில் இருந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டி உள்ளது.

அடிகளார் வரலாற்றை அறிந்திருந்த பிற்காலத்தார் அந்த வரலாற்றுக்கு இடம்கொடுக்கும் முறையில் இன்றைய ஆவுடையார் கோயிலைக் கட்டியுள்ளனர். அப்படியானால் பழைய கோயில் என்ன ஆயிற்று? அடிகளார் கூற்றுப்படி அங்கே ஒரு திருக்கோயில் இருந்திருப்பது உறுதி. ஒரு வேளை அந்தக் கோயில் சேதமடைந்து, அது இருந்த இடத்தில் இன்றுள்ள புதிய கோயிலைப் பிற்கால மன்னர்கள் கட்டியிருக்கலாம்.

இஃது எவ்வாறாயினும் மூன்று கருத்துக்கள் நம் சிந்தனைக்குரியன. ஒன்று- அடிகளார் பாடும்போது திருப்பெருந்துறையில் ஒரு திருக்கோயில் இருந்திருக்க வேண்டும். இரண்டு- அடிகளார் காலத்துக்கு பின் வந்தவர்கள் அவர் வரலாற்றை அடித்தளமாகக் கொண்டு இன்றுள்ள ஆவுடையார்கோயிலைக் கட்டியிருக்க வேண்டும். மூன்றாவது- அடிகளார் காலத்துத் திருக்கோயில் சேதமடைந்துவிட, அக்கோயில் இருந்த இடத்திலேயே இப்புதிய கோயிலை நிறுவியிருக்க வேண்டும்.

## திருமணமானவரா?

ஒரு காலத்தில் சைவப் பெருமக்கள் பலராலும் விரிவாகப் பேசப்பட்ட ஒன்று பின்னர் என்ன காரணத்தாலோ அடங்கிவிட்டது. விரிவாகப் பேசப்பெற்ற பிரச்சினை, அடிகளார் திருமணமானவரா இல்லையா

என்பதுதான். மறைமலை அடிகள் உள்பட ஒருசிலர் அவர் திருமணமானவர் என்று கூறினர். வேறு சிலர் அவ்வாறு கூறுவதே பெரும்பாவம் என்று காதைப் பொத்திக் கொண்டனர். ஆனால், பலப்பல பாடல்களில் தமக்கிருந்த மகளிர் தொடர்புபற்றி அடிகளார் பேசியுள்ளாரே யென்றால், அவை உண்மையல்ல; ஏனையோர் வாழ்க்கையில் நடைபெறுவதை அடிகளார் தம்மேல் ஏறட்டுக்கொண்டு பாடினார் என்று இவர்கள் கூறினர். இதுபற்றி என்னுடைய சிந்தனைகளை முன்னர்க் கூறியுள்ளேன். எந்த ஓர் இடத்திலும் தம் மனைவியைச் சுட்டும் வகையில் ஒருமையாக எந்தப் பெண்ணையும் அடிகளார் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. எல்லா இடங்களிலும் 'தையலார்' 'வெஞ்சேல் அனைய கண்ணார்' என்பன போன்ற பன்மைச் சுட்டுகளே இடம்பெற்றுள்ளன. பல மகளிர் தொடர்பை இவை குறிக்கின்றன என்று கொள்வதில் எவ்விதத் தவறும் இல்லை. இலக்கணத்திலேயே மருதத்திணை என்ற ஒன்றிற்கு இடம் கொடுத்த இத்தமிழர், பல மகளிர் தொடர்புபற்றிக் கடிந்து உரைத்தனர் என்று கூறுவதற்கில்லை. அன்றியும், மிக உயர்ந்த பதவியில் இருந்த திருவாதவூரருக்கு இத்தகைய தொடர்புகள் இருந்திருத்தலில் வியப்பு ஒன்றுமில்லை. மேலும், திருவாதவூரரோடு தொடர்பு கொண்ட பல மகளிர் ஒவ்வொருவரும் அவர் தமக்கே உரியவர் என்று கூறி அவர்மாட்டுச் சினந்து கலகம் விளைத்தனர் என்பதை

**வெஞ்சேலனைய கண்ணார்தம் வெகுளிவலையில்**
**அகப்பட்டு**
**நைஞ்சேன் நாயேன்......... (427)**

என்பது போன்ற பாடல்களால் அறியமுடிகிறது. அடிகளார் வகித்திருந்த பதவி காரணமாக இச்சூழ்நிலை உருவாயிற்றோ என்று நினைப்பதில் தவறில்லை.

வாழ்க்கையில் ஒரு காலத்தில் பல மகளிர் தொடர்புடன் வாழ்ந்த ஒருவர் திடீரென்று ஒரே நாளில் அத்தனையும் துறந்தொழிதல் முடியுமா என்ற வினாவை எழுப்புபவர்கள் இன்றும் உண்டு. எல்லோருடைய வாழ்க்கையிலும் இது நிகழும் என்று சொல்வதற்கில்லை. ஆனால், அருணகிரியார், அடிகளார் போன்றவர்கள் வாழ்க்கையில் இது நிகழ்ந்தது என்பதை நாம் அறிய முடிகிறது.

அப்பழங்காலத்தில் பல மகளிர் தொடர்பை நீதிநூலோர் தவிர யாரும் பெருந்தவறாகக் கருதவில்லை. இத்தகைய வாழ்க்கையில் உழன்று நொந்துபோகிறவர்கள்கூட மனம் வருந்தி, 'இனி என்னே உய்யுமாறு என்று எண்ணி ஐந்தெழுத்தின்' புணை பிடிப்பார்களாயின் காம வான் சுறவின் வாயிலிருந்து விடுதலை பெறமுடியும் என்பதற்கு இவ்வரலாறுகள் கலங்கரை விளக்கமாய் ஒளிவீசி நிற்கின்றன. இந்த நிலையில் இருந்தவர்களும் இறைவனால் ஆட்கொள்ளப் பெறுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாய் இவை அமைந்தன. இந்த அடிப்படையைப் புரிந்துகொண்டால் இச்செய்திகளைப் பூசி மெழுகவேண்டிய தேவையில்லை என்பதை நன்கறியலாம்.

## நிகழ்ந்ததும் நிகழவேண்டியதும்

திருவாசகத்தை உள்ளன்போடு படிக்கின்றவர் களுக்குங்கூடச் சில நியாயமான ஐயங்கள் தோன்றி விடுகின்றன. மிகப் பல இடங்களில் தம் பிறவியை வேரறுத்தான் தம்வினையைச் சுட்டுப் பொசுக்கினான் பழவினை இரண்டையும் போக்கியதல்லாமல் ஆகாமிய வினையும் இல்லாமல் செய்துவிட்டான் என்று பாடியுள்ளார் அல்லவா?

'பிறவியை வேரறுத்தான்' 'இனிப்பிறவாமல் காத்தாண்டு கொண்டான்' என்று இறந்தகால

வாய்பாட்டில் கூறும் அடிகளார், திடீரென்று 'செடிசேர் உடலம் இது சிதையச் செய்யாய்' என்று எதிர்கால வாய்பாட்டாலும் 'உன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்' என்று நிகழ்கால வாய்பாட்டாலும் பாடுவது எவ்வாறு பொருந்தும்? முதலிற் கூறியது உண்மை என்றால், பின்னர் கூறிய இரண்டும் பொருந்தா; பின்னர்க் கூறியவை உண்மை என்றால் முதலில் சொன்னவை பொருந்தா. இவற்றுள் எது உண்மை என்று மிக்க தைரியத்துடன் சிலர் கேட்கின்றார்கள். இவ்வாறு வெளிப்படையாகக் கேட்டால், தம்முடைய பக்தியைக் குறை கூறுவார்கள் என்று நினைக்கும் சிலர் வெளிப்படையாகக் கேட்பதில்லை. ஆனால், அவர்கள் மனத்திலும் இந்த ஐயம் இருந்துகொண்டு இருக்கலாம். இதன் உண்மையைச் சற்று ஆராயலாம்.

காலம் என்பது அவரவர் மனநிலையைப் பொறுத்து மாறுபடும் இயல்புடையது. காதலர்கள் கூடிய இடத்து ஊழி ஒரு கணமாகவும் பிரிந்த இடத்து ஒரு கணம் ஊழியாகவும் தென்படும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முத்தொள்ளாயிரம் பேசுகிறது.

இதனைப் புரிந்துகொண்டால் திருவாசகத்தில் ஐயம் எழாது. பிறவியை வேரறுத்தான், வினையைச் சுட்டெரித்தான் என்பவை உறுதியாக நிகழ்ந்தவை. அதனை அடிகளார் நன்கு அறிகிறார். ஆனால், இவை நடைபெற்றவுடன் வீடுபேற்றை அடைந்திருக்க வேண்டுமே, அது இன்னும் நடைபெறவில்லையே; அது நடைபெறாதிருக்க, இந்த உடல்தான் காரணம். ஆகவே அதைப் போக்கவேண்டும் என்று வேண்டுகிறார். அதேபோல இறையனுபவத்தில் மூழ்கித் திளைக்கின்ற ஒருவருக்கு ஒரு விநாடி அதை விட்டு வெளியே வந்தாலும் அது ஓர் ஊழியாகத் தெரிகிறது. ஆகவேதான், 'அருளாளர் அமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்; விக்கினேன் வினையேன் விதியின்மையால்' (417) என்று பாடுகிறார். வினை

குருநாதரால் சுட்டெரிக்கப்பட்டுவிட்டது என்பதை நன்றாக உணர்ந்திருந்தாலும்கூட அந்த இடைநேரத்தில் வினை தம்மிடம் இருப்பதாகவே நினைத்து 'வினையேன்' என்று கூறி வருந்துகிறார். பல்லாண்டுகள் நம்முடன் ஒன்றாகவே இருப்பவர்கள் இறந்துவிடுகிறார்கள்; நாமே அவர்களைக் காட்டில் கொண்டு சென்று சிதையில் வைத்துவிட்டு வந்துவிடுகிறோம். ஆனாலும், ஒரு பதினைந்து அல்லது இருபது நாட்கள்வரை அவர் நம்கூட இருப்பதுபோலவும் அவர் வழக்கமாக அமரும் இருக்கையில் அமர்ந்திருப்பது போலவும் தோன்றுவது இன்றும் உண்மை. இம்மட்டோடன்று. இறந்துபோனவர்கள் நம்மைக் கூப்பிடுவதாக எண்ணி எட்டிப் பார்க்கிறோம். இதெல்லாம் மனப் பிரமையின்பாற் படும்.

வினையைச் சுட்டெரித்துவிட்டான் பிறவியை வேரறுத்தான் என்பதை நன்கறிந்த அடிகளார் மனப்பிரமை காரணமாக 'வினையேன்' என்றும் 'விக்கினேன்' என்றும் 'செடிசேர் உடலம் இன்னும் இருக்கிறது' என்றும் வருந்துவதில் தவறோ வியப்போ ஒன்றுமில்லை. மருத்துவமனையில் உள்ளவருக்கு ஒரு நிமிடம் ஒரு மணியாய்த் தெரிவதுபோலத் திருவருள் பெற்ற அடிகளாருக்கு வீடுபேற்றை அடைவதற்குரிய காலம் வருவதற்கு முன்னுள்ள காலம் ஒரு யுகமாகத் தெரிகிறது.

## புகுதலும் ஆளுதலும்

திருவாசகப் பாடல்களில் பல இடங்களில் வரும் தொடர் 'புகுந்து ஆண்டான்' என்பதாகும். புகுதல், ஆட்கொள்ளுதல் என்ற இரண்டு செயல்கள் இந்தத் தொடரில் பேசப்பெறுகின்றன. பலருக்கு ஐயத்தைத் தருகின்ற பகுதி 'புகுந்து' என்ற சொல்லுக்குரிய பொருளாகும். 'புகு' என்ற பகுதியின் அடியாகப் பிறந்து, 'தல்' என்ற விகுதி பெற்ற தொழிற்பெயராகும் இது. ஒரு

பொருள் நம் கண் காணவோ, அல்லாமலோ, புறத்தே இருந்து ஒரு வீட்டினுள் அல்லது அறையினுள் சென்று சேர்தலையையே 'புகுதல்' என்ற சொல்லால் அறிவிக்கின்றோம். காற்று உட்புகுந்தது, ஒளி உட்புகுந்தது, முனியன் அறையினுள் புகுந்தான் என வரும் தொடர்களைக் கவனித்தால், புகுந்து என்ற சொல்லின் பொருள் நன்கு விளங்கும். 'புகுதல்' என்று கூறியவுடன், புறத்தே இருக்கும் ஒரு பொருள் உள்ளே புகுதலைத்தான் குறிக்கின்றோம். முனியன் என்பவன் புறத்தே இருக்கும்போது உள்ளே இல்லை; உள்ளே புகுந்தபோது புறத்தே இல்லை. முனியன் என்ற பருப்பொருளுக்கு இந்த விதி பொருந்தும். காற்று உள்ளே புகுந்தது என்று சொல்லும்பொழுது காற்று வெளியேயும் உள்ளது. அதன் ஒரு பகுதி உள்ளே புகுவதற்குமுன்னர் காற்றின் ஒரு பகுதி உள்ளேயும் இருந்தது. எங்கும் நிறைந்திருக்கின்ற காற்று, வெளியே இருக்கின்ற அதே நேரத்தில் உள்ளேயும் இருக்கின்றது. அதே நேரத்தில் வெளியே இருக்கும் காற்றின் ஒரு பகுதி உள்ளேயும் புகுகின்றது. அதேபோல எங்கும் நிறைந்தவனாகிய இறைவன் புறத்தேயும் உள்ளான் அகத்தேயும் உள்ளான். அறையினுள் இருப்பவர் காற்றினிடையேதான் இருக்கிறார். அதே நேரத்தில் புறத்தேயிருந்து வீசுகின்ற காற்று மேலே வீசுவதையும் உணர்கிறார். அதேபோல, இறைவன் உள்ளேயும் இருக்கின்றான். புறத்தே இருக்கின்ற இறைவன் உள்ளே புகுவதுபோல அடிகளார் உணர்கின்றார். இந்த உணர்வு அடிகளார் போன்றவர்களுடைய தனிப்பட்ட அனுபவம்.

'வருதல்' என்ற சொல்லை எடுத்துக்கொண்டு பார்ப்போம். ஒரு பொருள் புடைபெயர்ந்து, நகர்ந்து, உள்ளே புகுதலை, 'வருதல்' குறிக்கும். புடைபெயர்தலுக்கு நடத்தல் அல்லது நகர்தல் இன்றியமையாதது. ஆனால், இறைவன் புடைபெயர்தலோ, நடத்தலோ, நகர்தலோ, இல்லாமலேயும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு

வந்துவிடுவான். இதனையே கம்பநாடன் 'வாராதே வரவல்லாய்' (கம்ப:2570) என்று பேசுகிறான். அதாவது, வருதலாகிய (புடைபெயர்தலாகிய) செயல் நடைபெறவில்லை. ஆனால், வந்துவிட்டான். இதன் எதிராக 'வந்தாய் போல வாராதாய்' (நம்.திருவாய்:6-10-9) என்றும் பெரியோர் கூறுவர். இங்கே புடைபெயர்ச்சிச் செயலில்லாமலும் இறைவன் வந்ததுபோலப் பக்தன் உணர்ந்தான்; ஆனால் உண்மையில் அவன் வரவில்லை.

அடிகளார் புகுந்து என்று சொல்வதற்கு முன்னர், உள்ளேயும் அவன் இருந்தான், வெளியேயும் அவன் இருந்தான். வெளியே இருந்த அவன், உள்ளே புகுந்ததை அடிகளார் உணர்ந்தார். ஆனால் என்ன அதிசயம்! புகுந்தது என்னவோ உண்மை. ஆனால் புறத்தே நின்று கொண்டிருந்தானே அவன் இப்போதும் அங்கே நின்று கொண்டுதான் இருக்கிறான். 'வாராதே வரவல்லாய்' என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும் இது.

இந்த நுணுக்கத்தை உபநிடதம் பின்வருமாறு பேசுகிறது: 'இது பூரணம்; அது பூரணம்; அந்தப் பூரணத்திலிருந்து இந்தப் பூரணம் வந்தது; என்ன அதிசயம். இதுவும் பூரணம் அதுவும் பூரணம்'

அடுத்து வரும் 'ஆண்டான்' என்ற சொல் இறைவனைக் குறிப்பதாகும். 'புகுந்து' என்ற சொல்லுடன் 'ஆண்டான்' சேர்ந்து வரும்பொழுது 'புகுந்த பிறகுதான் ஆண்டானா, ஆட்கொண்டபின் புகுந்தானா' என்ற முறையில் ஐயங்கள் தோன்றுகின்றன. உண்மையில் இவை இரண்டும் ஒருங்கே நிகழ்கின்ற இரண்டு செயல்களாகும். ஆள்வதற்குப் புகவேண்டிய தேவையில்லை. சிவபுரத்தில் இருந்தேகூட அடிகளார் போன்ற ஆன்மாக்களை ஆண்டுகொள்ள முடியும். 'புகுந்து' என்ற எச்சம் 'ஆண்டான்' என்ற வினை கொண்டு முடிவதாக நினைத்து, புகுதலாகிய செயல் முன்னரும் ஆளுதலாகிய

செயல் அடுத்தும் நிகழ்ந்ததாகக் கொண்டு இடர் படத் தேவையில்லை. ஆண்டுகொண்டதைவிட அடிகளார் அறியுமாறு உள்ளே புகுதல் அடிகளாருக்கு எல்லையற்ற பேரானந்தத்தை விளைக்கின்றது. எனவே, புகுந்ததையும் உணர்ந்தார், ஆட்கொண்டதையும் உணர்ந்தார். ஒருங்கு நிகழ்ந்த இவ்விரு செயல்களையும் ஒன்றாக அடுக்கிப் 'புகுந்து ஆண்டான்' என்று பாடியுள்ளார்.

## சீவன் சிவனாகுமோ?

'சிவமாக்கி எனை ஆண்டான்' என்ற தொடர் இரண்டு இடங்களில் வருகின்றது. சற்றுச் சிக்கலான பகுதியாகும் இது. மணிவாசகரைச் சைவசித்தாந்தக் குப்பிக்குள் அடைக்க விரும்புபவர்கள் 'சிவமாக்கி' என்பதற்குச் சிவபெருமானின் வியாபகத்தில் இவரை உட்படுத்தினான் என்று பொருள் கூறுவர். ஆனால், ஆக்கி என்ற சொல்லுக்கு இவ்வாறு பொருள் கொள்வது கடினம். ஆக்கல் என்ற சொல் முன்னரே வேறொரு வடிவில் இருந்த ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாற்றுவதைக் குறிப்பதாகும். 'சோறு ஆக்கினான்' என்றால், அரிசியைச் சோறாக மாற்றினான் என்ற பொருளையே தரும். அந்த முறையில் பார்த்தால், சீவனாக இருந்த இவரைச் சிவனாக ஆக்கிவிட்டான் என்ற பொருளையே இத்தொடர் தந்துநிற்கின்றது. 'சீவன்' 'சிவன்' ஆகலாம். ஆனால், அந்த 'ஆதல்' அவனுடைய திருவடியில் தங்கித் திருவருளில் கலந்து விடுதலை பெற்ற சீவனாக இருத்தலையே குறிக்கும். ஆனால் சிவனோடு ஐக்கியமாகி அவன் இயற்றும் ஐந்தொழிலில் இதுவும் பங்குகொள்ளும் என்று நினைப்பது தவறு. சோறாக ஆக்கப்பட்ட அரிசி மறுபடியும் அரிசியாக மாறுவது இல்லை. அதுபோல, சிவனாக ஆக்கப்பட்ட சீவன், சீவனுக்குரிய தன்மையை மீண்டும் பெறுவதில்லை. எனவே, 'சிவமாக்கி' என்ற சொல்லுக்குச் சீவனுக்கு

விடுதலையைத் தந்து என்ற அளவில்தான் பொருள் கொள்ள வேண்டும்.

சிவமாக்கி ஆளுதல் என்ற குறிப்பு, தேவாரம் முதலியவற்றில் இடம் பெற்றதாகத் தெரியவில்லை. அடிகளார் வடநாட்டிலிருந்து வந்த ஆமாத்திய குலத்தைச் சேர்ந்தவர் என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அப்பகுதிகளில் வழங்கிய கருத்தாகவும் இது இருக்கலாம்.

## இறைப்பிரேமையும் இறையனுபவமும்

390ஆவது பாடல், இறைப் பிரேமையில் மூழ்கி எழுந்து வெளிப்பட்ட இந்த அருளாளர்கள் இறையனுபவத்தில் திளைக்கின்றனர் என்று கூறுகிறது. இறைப்பிரேமையை divine ecstasy என்றும், இறையனுபவத்தை divine experience என்றும் குறிக்கலாம். இந்த இரண்டிற்கும் அடிப்படை வேற்றுமை ஒன்றுண்டு. எல்லாம் அடங்கிய நிலையில் ஆனந்த சாகரத்தில் மூழ்கி 'நான்' 'எனது' என்ற அகங்கார மமகாரங்கள் அறவே அற்று, இன்னது செய்கிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் திடீரென்று 'எம்பெருமான்' 'எம்பெருமான்' என்று அரற்றுவதும் கண்ணீர் ஆறாகப் பெருகுவதும் இறைப் பிரேமையின் இயல்புகளாகும். இந்த நிலையிலிருந்து படிப்படியாக இறங்கும்போது சிரித்தல், களித்தல், தம்மையொத்த பிற அருளாளர்களோடு கலந்து உரையாடி மகிழ்தல் என்ற நிலைகள் படிப் படியாகத் தோன்றும். இதனை இறையனுபவம் என்று குறிக்கலாம். இறைப் பிரேமைக்கும் இறையனுபவத்திற்கு முள்ள ஒரே ஒரு வேற்றுமை முன்னதில் 'நான்' இல்லை; பின்னதில் 'நான்' ஓரளவு தலைதூக்கி நிற்கும். 'நான் அனுபவிக்கிறேன்' என்ற எண்ணம் அடிப்படையில் இருப்பதால்தான் இதனை முன்னையதிலிருந்து பிரித்து இறையனுபவம் என்று பெயரிட்டுள்ளோம். அனுபவம் என்று கூறினவுடனேயே அனுபவிப்பவன் ஒருவன் உண்டு

என்பது பெறப்படும். பாலனுபவம் என்பது ஒருவனும் ஒருத்தியும் அனுபவிக்கின்ற அனுபவத்தைக் குறிக்கும். உயர்ந்த காதல் தலையானதாய் சிறப்புடையதாய் இருக்கும்பொழுது இந்த 'நான்' பெரும்பகுதி செயலற்று நின்றுவிடும். அதன் பயனாக அவன்-அவள் என்ற வேற்றுமை பெரிதும் குறைந்துவிடும். இது தலையாய காதலுக்குச் சொல்லப்படுவதாகும். என்றாலும், நான் அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் அடிப்படையில் இருந்துகொண்டே இருக்கும். இறைப் பிரேமையில் இந்த நிலை முற்றிலும் அடிபட்டுப் போய்விடும். 'நான்', 'அனுபவம்', 'அனுபவிக்கப்படுகின்ற பொருள்', என்ற மூன்றும் அனுபவத்துள்ளேயே அடங்கிவிடுதலின் அதனை இறைப் பிரேமை என்று கூறுகிறோம்.

இதை ஓரளவு விளங்கிக்கொண்ட பிறகு அடிகளார் பாடலில் வரும் சில தொடர்களை மறுபடியும் சிந்திப்பது நலம். உதாரணமாக 390 ஆவது பாடலில் காணப்படும். நான்காவது அடி இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த அடியில் 'உணர்வு' என்ற சொல் மூன்று இடங்களில் பெய்யப்பெற்றுள்ளது. இந்த மூன்று சொற்களும் சொல்வடிவால் ஒன்றாயினும் பொருளவில் ஒன்றுக்கொன்று மாறுபட்டு நிற்பவையாகும். இந்த வேறுபாட்டை அறிந்து உணர்ந்த அருளாளராகிய அடிகளார், இந்த மூன்றையும் வேறுபடுத்த எளிதான ஒரு முறையைக் கையாள்கிறார்.

மூன்று இடங்களில் காணப்பெறும் உணர்வு என்ற ஒரே சொல்லுக்கு முதல் இரண்டு இடங்களில் அடைமொழியைப் புணர்த்துவதன் மூலம் வேறுபடுத்தி விடுகிறார். முதலில் நிற்பது 'உரை உணர்வு'; இரண்டாவது நிற்பது 'இறந்து நின்றதோர் உணர்வு'; மூன்றாவது இந்த இரண்டு உணர்வுகளையும் கடக்கக்கூடிய அருளாளர்கள் மட்டுமே உணரக்கூடிய உணர்வாகும்.

பசி, தாகம், பாலுணர்வு என்பவை உரைக்குள் அடங்குமேனும் அவற்றிலும் ஒரு வேறுபாடுண்டு. பசி, தாகம் என்பவை இத்தகையது என்று எடுத்துக்கூறும் உரைக்கடங்கியதாகும். பாலுணர்வு என்பது அவ்வளவு எளிதாக உரைக்குள் அடங்காவிடினும், 'நான் அனுபவிக்கிறேன்' என்ற உரைக்குள் ஓரளவு அடங்கிவிடுதலின் அதனையும் 'உரை உணர்வு' என்ற தொகுதியில் அடக்கிவிடலாம்.

இனி இரண்டாவதாக உள்ளது இந்த நிலையைக் கடந்து (இறந்து) நிற்கின்ற ஓர் உணர்வாகும். இதனை நிற்கின்ற உணர்வு என்று அடைகொடுத்துக் கூறியமையால் முதலில் கூறப்பெற்றது நிலையில்லாதது என்பது பெறப்படும். இந்த உணர்வு நிலையானது என்பதைத் தவிர இதனைப்பற்றி வேறு ஒன்றும் சொல்ல இயலாது. இது சொல்லுக்குள் அடங்காதது. 'ஆதலால்' 'உரை இறந்த உணர்வு' என்றும் நிலைபேறுடையது ஆதலின் 'நின்றதோர் உணர்வு' என்றும் இதனைக் குறித்தார் அடிகளார்.

இந்த இரண்டாவது நிலையிலும் 'நான்' ஓரளவு இருக்கத்தான் செய்கிறது. 'நான்', 'உணர்வு', 'உணரப்படும் பொருள்' என்ற மூன்றும் இந்த இரண்டாவது உணர்வில் இருக்கத்தான் செய்கின்றன. இந்த உணர்வு முதிரமுதிர, மெள்ள மெள்ள 'நானும்' உணரப்படும் பொருளும் உணர்விற்குள் ஐக்கியமாகி விடுகின்றன. முழுவதுமாக இவை ஐக்கியமாகின்றவரையில் இந்த உணர்வை இரண்டாவது நிலை உணர்வு என்றே சொல்லவேண்டும். முழுவதும் ஐக்கியமாகின்றவரையில் இந்த 'நானும்' உணரப்படும் பொருளும் அவற்றின் தலையை வெளியே நீட்டிக்கொண்டுதான் இருக்கும். இதனை விளங்கிக் கொள்வது கடினம்.

ஓர் உதாரணத்தால் இதனைப் புரிந்துகொள்ள முயலலாம். 'எனை நான் என்பதறியேன்' என்ற தொடரை எடுத்துக்கொண்டு பார்க்கலாம். 'எனை நான் என்பது அறியேன்' என்பதன் பொருள் என்ன? 'மணிவாசகர் என்ற பெயரால் என்னைச் சுட்டிப் பேசகிறார்கள்; அந்தப் பேச்சு என் காதில் விழும்போது என்னைத்தான் சுட்டிப் பேசுகிறார்கள்; அந்தச் சுட்டுக்குரியவன் நான்தான் என்று உணர்கின்றேன். இந்த அறிவின் அடிப்படையில் பிறந்த உணர்வுதான் இத்தொடரில் பேசப்பெறுகிறது. அடிகளாரின் அனுபவம் மீதூரமீதூரப் பிறர் சுட்டிய சுட்டும் அதற்குரிய பொருளாகிய 'நானும்' மறையத் தொடங்குகின்றன. அந்த நிலையில் 'மணிவாசகரே' என்று யாரேனும் அழைத்திருந்தால், திரும்பிப் பார்த்திருக்க மாட்டார். இதுவே 'எனை' 'நான்' என்பதை அறியாத நிலை. ஆனால், இதுவும் முழுநிலையன்று. 'எனது' என்பதும் 'நான்' என்பதும் பெரும்பகுதி மறைந்துவிட்டாலும் இன்னும் கொஞ்சம்-மிகச் சிறிய அளவில் 'நான்' இருக்கிறது என்பதையே இது உணர்த்துகின்றது. அது எப்படித் தெரிகிறது? 'அறியேன்' என்ற சொல்லின் மூலம் அது வெளிப்படுகிறது. 'அறியேன்' என்னும் தன்மை ஒருமை வினைமுற்றுக்குத் தோன்றா எழுவாயாக இருப்பது 'நான்' என்பதாகும். மணிவாசகர் என்ற பெயருக்குரியவன் 'நான்' என்பதை 'நான்' அறியவில்லை என்றால், இத்தொடரில் இரண்டு 'நான்' இருப்பதை அறியலாம். முதலாவதாக இருப்பது சுட்டப்பட்டதாகிய 'நான்'; இரண்டாவதாக இருப்பது அதனை அறிந்துகொள்ளும் 'நான்'. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை வியாபித் இருக்கும் 'நான்', முதல் 'நான்' ஆகும்; இந்த 'நான்' மறக்கப்படுவதை, அறிகின்ற 'நான்' இரண்டாவது 'நான்' ஆகும். இந்த இரண்டாவது 'நான்' பொறி புலன்களையும் அந்தக்கரணங்களில் மூன்றையும் கடந்து நிற்பது ஆகும். அந்த 'நானை'யே

'அறியேன்' என்ற சொல்லுக்கு எழுவாயாக அமைத்துள்ளார். எனவே, இத் தொடரின்படி பார்த்தால் 'எனை' 'நான்' என்பதை இன்னது என்று அறியாத 'நான்' ஆகும். பொறி புலன்களோடு ஒன்று, மனத்தோடு பெரிதும் தொடர்புள்ள 'நான்' இதுவாகும். இப்பாடலின் முதல் அடியில் இந்த 'நான்' மறைந்துவிட்டதைத்தான் 'எனை நான் என்பதை அறியேன்' என்று பாடுகிறார். 'அறியேன்' என்ற சொல்லைப் பயன்படுத்தியதன் மூலம், இந்த 'நானை'க் கடந்த ஒரு 'நான்' உண்டு என்பதை உணர்த்திவிட்டார். அந்த நுண்மையான நான், 'அறியேன்' என்ற சொல்லின் எழுவாயாக நிற்கின்றது.

'உரை இறந்து நின்ற உணர்வு' இதுபோலத்தான். முதலில் உள்ள உணர்வு, உரைக்குள் அடங்கிய உணர்வு; நிலையில்லாத உணர்வு. இரண்டாவது உணர்வு உரைக்குள் அடங்காததும் நிலைபேறுடையதும் ஆகும். ஆனாலும் இந்த உணர்விலும் நான், பெரும்பகுதி பலமிழந்தாலும், இருக்கத்தான் செய்கிறது. 'அறியேன்' என்ற சொல்லில் 'நான்' மறைந்திருப்பதுபோல இந்த இரண்டாவது உணர்விலும் நான் மறைந்திருக்கிறது.

இரண்டாவது உணர்வு வளர்ச்சி அடைய அடைய இந்த 'நானும்' உணரப்படும் பொருளும் முற்றிலுமாக உணர்வுக்குள் அடங்கிவிடுகின்றன. இங்கு நானும் இல்லை, உணரப்படும் பொருளும் இல்லை. இவை இரண்டுமே உணர்வுக்குள் அடங்கி, முற்றிலும் உணர்வே வடிவாய் நிற்கின்ற நிலையாகும் இது. இதனையே 'உணர்வதோர் உணர்வு' என்றார். அதாவது, இரண்டாவது உணர்வையும் கடந்து நிற்பதோர் உணர்வு என்பதை வலியுறுத்துகிறார்.

இந்த மூன்றாவது உணர்வுநிலையை, அதாவது, 'நானு'ம் உணரப்படும் பொருளும் உணர்வுக்குள் அடங்கிவிட்ட நிலையைச் சேக்கிழார் பெருமான்,

கண்ணப்பர் புராணத்தில் மிக அற்புதமாகப் பாடிச் செல்கிறார்.

திண்ணன் என்ற வேடனுக்கு 'நான்' இருந்தது; அதன் பயனாக இரு வினைகள் இருந்தன; மும்மலங்களும் இருந்தன. குடுமித்தேவர் இருக்கும் மலையைக் கண்டு, அதுபற்றிக் கேட்டு, அங்கே செல்ல வேண்டும் என்று நினைக்கின்ற வரையில் இருந்த அன்பை 'உரை உணர்வு' என்று கூறலாம். மலையின்மேல் ஏறி, குடுமித்தேவரைப் பார்த்து, 'நீ இங்கே தனியே இருக்கக்கூடாது; என்னுடன் வந்துவிடு; ஐயோ, உனக்குப் பசிக்குமே; உணவை யார் தருவார்கள்?' என்று பேசுகின்றவரையில் உரை உணர்வு கடந்து, நிலைபேறான இரண்டாவது உணர்வுநிலை வளர்கின்றது. இந்த நிலையிலும் 'நான்' சிறிய அளவில் இருக்கத்தான் செய்கிறது. நான் வேட்டையாடிக் குடுமித் தேவரை உண்பிக்க வேண்டும் என்ற நினைவில், நான் ஓரளவு இருப்பினும் அது முன்னர்க் கூறிய 'நானி'லும் வேறுபட்டதாகும். இதில் திண்ணனுடைய நான் இருக்கிறது. குடுமித்தேவர்பால் கொண்ட அன்பு என்ற உணர்வு வளர்ந்துகொண்டே வருகின்றது. திண்ணனுடைய நானும் அவனுடைய அன்பும் குடுமித்தேவரும் ஒரே நேர்கோட்டில் உள்ளனர். ஐந்தாவது நாள்வரை உள்ள நிலை இது. இந்த ஐந்து நாளிலும் குடுமித்தேவர் இருந்தநிலையில்தான் இருக்கிறார். ஆனால், திண்ணனுடைய நான் சுருங்கிக்கொண்டே செல்கிறது. இடையேயுள்ள அவனுடைய அன்பு மிகவேகமாக வளர்ந்துகொண்டே செல்கின்றது. ஆறாவது நாளில் இந்த அன்பின் பெருவளர்ச்சியில் திண்ணனுடைய நான் முற்றிலும் மறைந்துவிடுகிறது. இந்த வளர்ச்சி நிலை எங்கே தோன்றி எங்கே முடிகிறது என்பதைக் கூறவந்த சேக்கிழார் மிக அற்புதமாக இதனை விளக்குகிறார். காளத்தி மலையை முன்பின் பாராத திண்ணன் அது காளத்தி மலை என்று அறிந்து கொண்டவுடன் அவனையும் அறியாமல்

இரண்டாவது 'நான்' மெள்ள வளரத் தொடங்குகிறது என்பதைக் கூறவந்த சேக்கிழார்.

> ஆவது என் இதனைக் கண்டு?
> இங்கு அணைதொறும் என்மேல் பாரம்
> போவதொன்று உளது போலும்!
> ஆசையும் பொங்கி மேன்மேல்
> மேவிய நெஞ்சும் வேறு ஓர்
> விருப்பு உற விரையா நிற்கும்,
>
> (பெ,பு. கண்ணப்ப—97)

என்று பாடிச் செல்கிறார்.

இப்பாடலின் மூன்று அடிகளும் திண்ணனுடைய கூற்றாகவே வெளிப்படுகின்றன. இந்தத் திண்ணன், இதனைப் பேசும்பொழுது, நாகன் மகன் திண்ணனாக இல்லை. அவனையும் அறியாமல் தன்மேலுள்ள பாரம் இறங்குகிறது என்று பாடுவதால், பாடிய பின்னர் பழைய திண்ணன் இல்லை. முதலாவது திண்ணன், உரை உணர்வு நிலையில் இருந்தவன் ஆவான். இதனைச் சொல்கின்ற திண்ணன் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சிபெறும் இரண்டாவது உணர்வில் (உரை இறந்த உணர்வில்) நின்று இதனைச் கூறுகிறான், எனவே, இப்பகுதியில் வரும் 'நான்' முதல் 'நானி'னும் வேறுபட்டு, மூன்றாவது 'நிலை' நோக்கிச் செல்லும் இரண்டாவது 'நான்' ஆகும். இதனைச் சேக்கிழார் மேவிய நெஞ்சும் வேறு ஓர் விருப்பு உற என்று கூறியதால் முதல் 'நானு'க்குள்ள விருப்புகள் ஒடுங்கிவிட இரண்டாவது 'நானு'க்குள்ள விருப்புகள் வளர்கின்றன என்பதைக் குறிக்கவே 'வேறு ஓர் விருப்பு' என்றார். இனி இந்த விருப்பம் இரண்டாவது 'நானோ'டு தொடர்புடையதாதலின், அதனையும் விட்டு நீங்கி, மூன்றாவதாக உள்ள 'நானி'ல் கரையப்போகிறது என்பதை 'விரையா நிற்கும்' என்று பாடினார்.

இரண்டாவது 'நானை'க் கடந்து, மூன்றாவது 'நானில்' புகுகின்றவரையில் அங்கு இருந்தது யார்? காளத்தி மலையைக் காண்பதற்கு முன்னர் இருந்த நாகன் மகன் திண்ணனுக்கு தன் பரிசு, வினை இரண்டும், மலம் மூன்றும் இருந்திருக்கும். இந்த இரண்டாவது 'நானி'லும், வினை இரண்டும் மலம் மூன்றும் அற்றுவிடினும் தன்பரிசு ஓரளவு ஒட்டிக் கொண்டிருக்கிறது. மூன்றாவது 'நானில்' இதுவும் மூழ்கிவிடுகிறது என்று கூறவந்த சேக்கிழார்,

> **............ யாக்கை**
> **தன்பரிசும் வினையிரண்டும் சாரும், மலம் மூன்றும் அற**
> **அன்பு பிழம் பாய்த் திரிவார்.**

என்று பாடுகிறார்.

இரண்டாது 'நானு'ம் மூழ்கிவிட்டால் அது இருந்த இடத்தில் என்ன மிஞ்சுகிறது என்ற வினாத் தோன்று மன்றே! அதற்கு விடைகூறுவார்போல, 'நான்', முற்றிலும் அழிந்த நிலையை 'அற' என்ற சொல்லால் சொல்லிவிட்டு எஞ்சியிருப்பது யார் என்ற வினாவிற்கு அன்புப் பிழம்பே, ஒரு வடிவுபெற்று நிற்கின்றது என்கிறார் சேக்கிழார். இந்த அன்பின் விசாலத்தில் குடுமித்தேவரும் சிக்கிக்கொள்கிறார். இப்போது எஞ்சியது திண்ணனும் இல்லை, குடுமித்தேவரும் இல்லை; இடையே நின்ற அன்பு என்ற ஒன்றேதான்.

அன்பின் விசாலத்தில் இறைவனும் சிக்கிக்கொள்வான் என்பதைப் 'பக்தி வலையில் படுவோன் காண்க' (3.42) என அடிகளாரும், 'அன்பு எனும் பிடியுள் அகப்படும் மலையே' (திருவருட்பா. பரசிவ வணக்கம் 3269) என வள்ளற் பெருமானும் கூறியிருப்பதைக் காண்டல் வேண்டும்.

வேட்டைக்குப் புறப்பட்ட முதல் நாளில் குடுமித்தேவரைக் காண்கின்றவரையில் திண்ணனும் பெரிதாக நிற்கிறான்; குடுமித்தேவரும் பெரிதாக நிற்கிறார்.

திண்ணனுடைய அன்பு மலரத் தொடங்குகிறது. ஆறு நாளில் திண்ணனுக்கும் குடுமித்தேவருக்குமிடையே தோன்றிய அன்பெனும் விதை பெரிய ஆலமரமாக வளர்ந்து, திண்ணனையும் குடுமித்தேவரையும் தன்னுள் அடக்கிக்கொண்டது. ஆறாவது நாளில் திண்ணனும் இல்லை, குடுமித்தேவரும் இல்லை. அன்பு ஒன்றே மலைபோல் வளர்ந்து திண்ணனையும் குடுமித்தேவரையும் உள்ளடக்கி நிற்கின்றது.

## காட்டியதும் கண்டதும்

திருவாசகப் பாடல்களில் மிகப் பல இடங்களில் 'காட்டி' என்ற சொல் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

இச்சொல் பெரும்பாலும் சேவடியோடு தொடர்புபடுத்தியே பேசப்பெற்றுள்ளது. 'மலர்க்கழல்கள் அவை காட்டி' (31) என்பதுபோன்ற இடங்கள் தவிர திருவடி சம்பந்தம் அல்லாமல் காட்டி என்ற சொல்லைப் பயன்படுத்தும் சில இடங்களும் உண்டு.

'செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி, அந்தணன் ஆவதும் காட்டி, திருப்பெருந்துறையுறை கோயிலுங்காட்டி' (375) என்ற தொடர்கள் திருப்பள்ளியெழுச்சியில் இடம்பெறுகின்றன. திருப்பெருந்துறையில் உறைகின்ற இறைவனைப் பள்ளியிலிருந்து எழவேண்டும் என்று பாடுவது நியாயமானதுதான். ஆனால், அதைப் பாடிக் கொண்டு வரும்பொழுது குருநாதருடைய நினைவு வருகின்றது. ஒரே பாடலில் (375) மூன்றைக் காட்டியதாக அடிகளார் பாடுகிறார். செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி, திருப்பெருந்துறையுறை கோயிலும் காட்டி, அந்தணனாவதுங் காட்டி என்று பாடியதில் இந்த மூன்றிற்கும் ஏதேனும் தொடர்புண்டோ என்று நினைக்கத் தோன்றுகிறது. செந்தழல் புரை திருமேனியைத் திருப்பெருந்துறைக் கோயிலில் காட்டி என்றும் குருந்த

மரத்தடியில் குருநாதர் வடிவில் இருந்த ஒருவர் திடீரென்று அந்த வடிவை மறைத்துக்கொண்டு அந்தணனாவதும் காட்டினான் என்றும் பொருள் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது. ஆவதும் என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருப்பதால் முன்னர்க் குருநாதராகக் காட்சியளித்தவர் பின்னர் அந்தணனாகிக் காட்சி தந்தார் என்று கொள்வதற்கும் இடமுண்டு.

## எட்டாம் திருமுறையா?

அடிகளாருடைய திருவாசகம் எட்டாம் திருமுறையென்று பலராலும் பேசப்பெறுகிறது. மூவர் முதலிகள் அருளிய தேவாரங்களை ஏழு திருமுறைகளாக யார் பிரித்தார்கள் என்று தெரியவில்லை. தேவாரங்கள் சிதம்பரத்தில் ஏதோ ஒரு அறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்தன என்றும் முதலாம் இராஜராஜன் அதனை வெளிக்கொணர்ந்து, நம்பியாண்டார் நம்பி என்ற சிவ வேதியரைக் கொண்டு ஏழு திருமுறைகளாகத் தொகுத்தான் என்றும் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. அறிவுக்கோ ஆராய்ச்சிக்கோ தமிழ் இலக்கிய வரலாற்றிற்கோ ஒரு சிறிதும் பொருந்தாத இந்தக் கட்டுக்கதை, திருமுறை கண்ட புராணம் என்ற பெயரில் உள்ளது. இது யாரோ ஒருவரால் இயற்றப்பெற்று, உமாபதிசிவம் அருளியது என்ற ஒரு தொடரையும் தாங்கி நிற்கிறது.

உமாபதி சிவத்திற்கும், திருமுறை கண்ட புராணத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இன்னும் கூறவேண்டுமேயானால், நம்பியாண்டார் நம்பிக்கும் திருமுறைத் தொகுப்பிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. முதலாம் இராஜராஜன் காலத்தில்தான் திருமுறைகள் தொகுக்கப்பெற்றன என்பதும் அவற்றைக் கோயில்களில் பாடுவதற்கு அவன்தான் முதன்முதலில் ஏற்பாடு செய்தான் என்பதும் அத்தைப்பாட்டிக் கதையேயாகும்.

இராஜராஜனுக்கு இருநூறு ஆண்டுகள் முற்பட்ட பல்லவர் காலத்திலேயே தேவாரத் திருப்பதிகங்கள் திருக்கோயில்களில் ஓதப்பெற்றன. பக்கவாத்தியங்களுடன் இவை ஓதப்பெற்றன. இதனைத் திருவல்லம் கல்வெட்டிலும் (கி.பி. 750), அடுத்துத் திருஎறும்பியூர் (திருவரம்பூர்) கல்வெட்டிலும் விரிவாகக் காணலாம். இக்காலங்களில் திருப்பதிகம் என்ற பெயரில்தான் இவை வழங்கப்பெற்றனவே தவிர, தேவாரம் என்ற பெயரே அப்பொழுது இல்லை.

இதன்பிறகு இருநூறு ஆண்டுகள் கழித்து இராஜராஜன் பட்டத்துக்கு வருகிறான். தெற்குப் பீகாரைச் சேர்ந்த சதுரானன பண்டிதர் என்ற கோளரி சைவரை அவன் குலகுருவாகக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னர் இருந்ததுபோல அவனும் சில கோயில்களில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வார் என்ற பெயரில் கல்வெட்டுக்கள் தந்துள்ளான். எனவே, இவன்தான் தேவாரத்தைக் கண்டுபிடித்தான் என்பது முற்றிலும் கட்டுக்கதை. இந்தக் கட்டுக்கதையில் ஒரு சிறிது உண்மை இருந்திருக்குமாயின் சேக்கிழார் ஒரு நூறு பாடல்களாவது பாடியிருப்பார்.

இந்த நிலையில் அங்கங்கே தேவாரத் திருப்பதிகங்கள் பாடப்பெற்றதுடன் திருவாசகமும் பாடப்பெற்றிருக்க வேண்டும். ஆனால், திருப்பதிகம் என்ற பெயர் மூவர் தேவாரங்கட்கு வழங்கியதேதவிரத் திருவாசகத்திற்கு வழங்கியதாகத் தெரியவில்லை. இராஜராஜன் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு முன்னரே திருவாசகம் தோன்றிவிட்டது. ஆனால், திருப்பதிகம் விண்ணப்பம் செய்பவர்கள் திருவாசகத்தையும் சேர்த்துப் பாடினரா என்று அறிய வாய்ப்பில்லை.

இராஜராஜன் காலத்தில் வாழ்ந்தவர் என்று கருதப்படும் கருவூர்த்தேவர் திருவிசைப்பாவில் தொண்ணூறுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றுள்

முக்கியமானவை சிதம்பரம், இராஜராஜேச்சுவரம், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய மூன்றையும் பற்றியதாகும். கங்கைகொண்ட சோழபுரம் பற்றிப் பாடியதால் இப்பதிகம் இராஜராஜச்சோழன் மகனான இராஜேந்திரன் காலத்தில் பாடப்பெற்றிருக்க வேண்டும். காரணம் அவன்தான் இந்தக் கோயிலைக் கட்டியவன். இவையும் திருவிசைப்பாவில் இடம்பெறுவதால் ஒன்பதாம் திருமுறையென்று சொல்லப்பெறும் திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகியவை பதினொன்றாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டே தோன்றியிருக்க வேண்டும்.

எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியோடு மூவர் முதலிகள் காலம் முடிந்துவிட்டது. ஒன்பதாம் திருமுறை பதினொராம் நூற்றாண்டில் தோன்றிற்று. அப்படியானால் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றிய திருவாசகம் எப்பொழுது எட்டாம் திருமுறை என்ற பெயரில் தொகுக்கப்பெற்றது என்பது ஆராய்ச்சிக்குரியது. இதுபற்றிய முடிவான கருத்து எதுவும் எட்டப்படவில்லை. தேவாரங்கள் மட்டும் கி.பி. 750 முதல் திருப்பதிகம் என்ற பெயரில் வல்லம், எறும்பியூர் போன்ற சில கோயில்களில் பாடப்பெற்றன என்பதை அறிகிறோம்.

திருமந்திரமும், திருவாசகமும், அடுத்தடுத்து முன்பின்னாகத் தோன்றியவை. அப்படியிருக்க, திருவாசகத்தை எட்டு என்று கணக்கிட்டது சரி. திருவாசகத்திற்கு அறுபது எழுபது ஆண்டுகள் முன்னர்த் தோன்றிய திருமந்திரம் எவ்வாறு பத்தாம் திருமுறை என்று கணக்கிடப்பெற்றது? பதினொராம் நூற்றாண்டில் தோன்றிய திருவிசைப்பா ஒன்பதாம் திருமுறை என்று வைக்கப்பெற்றது எவ்வாறு பொருந்தும்? காலவரிசையில் முதல் ஏழு திருமுறைகள் வைக்கப்பெற்றுள்ளன. இந்த முறைவைப்புத் தொடர்ந்திருக்குமேயானால் எட்டாவது இடத்தைத் திருமந்திரத்திற்கும், ஒன்பதாவது இடத்தைத்

திருவாசகத்திற்கும் பத்தாவது இடத்தைத் திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆகியவற்றுக்கும் அல்லவா தந்திருக்க வேண்டும்! இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தால் எந்த அடிப்படையிலும் இல்லாமல் யாரோ சிலர் எட்டு, ஒன்பது, பத்து என்ற கணக்கைத் தந்திருக்க வேண்டும் என்ற முடிவிற்குத்தான் வரவேண்டியுள்ளது.

திருமுறைகள் தொகுக்கப்பெற்ற காலத்தில் காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டுத் திருப்பதிகம், இரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய நூல்கள் கிடைத்திலதுபோலும். பதினோராம் நூற்றாண்டுவாக்கில் இவை கிடைத்திருக்கலாம். இசையோடு பாடப்பெறும் தேவாரத் திருப்பதிகங்கள் போலவே மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அம்மையார் திருவாலங்காடுபற்றி இரண்டு திருப்பதிகங்கள் பாடியுள்ளார். தேவாரத் திருப்பதிங்களுக்கு மூன்று நூற்றாண்டுகள் முன்னர்த் தோன்றிய இந்த இரண்டு பதிகங்களும் தேவாரப் பதிகங்கட்கு முன்னோடியாகும். எனவே, இதனைக் கண்டெடுத்த பெரியவர்கள் இந்த இரண்டு பதிகங்களுக்கும் இந்த முறைவைப்பில் இடமில்லையாதலால் மூத்த திருப்பதிகம் என்ற பெயரைச் சூட்டி, அம்மையாரின் ஏனைய பாடல்களோடு இதனையும் சேர்த்து ஒரு தொகுப்பாக்க முனைந்தனர் போலும். அதே காலகட்டத்தில் சேரமான்பெருமான் நாயனாருடைய திருக்கைலாய ஞான உலாவும் பொன் வண்ணத் தந்தாதியும் திருவாரூர் மும்மணிக் கோவையும் கிடைத்திருக்க வேண்டும். அவற்றையும் இத்தொகுப்பினுள் சேர்த்தனர். இவற்றைமட்டும் தனியே ஒரு திருமுறை என்று சொன்னால்,அது அளவால் மிகமிகச் சிறியதாக இருந்துவிட்டிருக்கும். இந்த நிலையில் பதினோராம் திருமுறை என்று பெயரிடாமல் இவற்றைத் தனியே தொகுத்து வைத்திருக்க வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில் தமிழர்களுக்கே உரிய தனிப்பண்பு வேலை செய்யலாயிற்று. யாரோ ஒருவர் திருமுருகாற்றுப்படையை மனமுருகிப் பாடிக்கொண்டிருந்து விட்டு, அதன்முடிவில் தம் மனத்தில் தோன்றிய கருத்துக்களை வெண்பா வடிவில் வடித்திருக்கின்றார். 'குன்றம் எறிந்தாய்' என்று தொடங்கும் வெண்பாவும் அதைத் தொடர்ந்து வரும் ஒன்பது வெண்பாக்களும் இதனைப் பாடியவர் கைச்சரக்காகும். இது பரவப் பரவ இதுவும் திருமுருகாற்றுப்படையைச் சேர்ந்ததென்றே கருதி ஓலையில் எழுதிவிட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒன்பது, பத்தாவது திருப்பாக்களில் இதனைப் பாடியவர் நக்கீரரைப் புகழ்கின்றார். அப்படியிருக்க இப்பாடல்கள் நக்கீரருடைய முருகாற்றுப்படையை அடுத்துவருவது எவ்வளவு பொருத்தமில்லாதது என்பது நன்கு விளங்கும்.

சைவத் திருமுறைகளில் இன்று காணப்பெறும் ஒன்றுமுதல் பத்துவரையுள்ள பகுதிகளில் முருகனுக்கென்று தனிச்சிறப்போ, பாடல்களோ இல்லை. பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள திருமுருகாற்றுப்படை திருமுறைத் தொகுப்பில் பதினோராம் திருமுறையில் எப்படி எவ்வாறு புகுந்தது என்பது தெரியவில்லை. அன்றியும் நம்பியாண்டார் நம்பி பாடிய முன்னூற்று எண்பதுக்கு மேற்பட்ட பாடல்களில் பெரும்பகுதியானவை மூவர் முதலிகளைப் பற்றியுள்ளன. ஆதலின் இதனையும் திருமுறைத் தொகுப்பினுள் அடக்கவேண்டும் என்று பதினோராம் நூற்றாண்டில் ஒரு சில சைவப்பெருமக்கள் நினைத்திருக்கக்கூடும்.

அம்மையார் பாடல்களும் சேரமான் பாடல்களும் அளவால் சுருங்கியிருத்தலின் தனித் திருமுறையென்று தொகுக்கமுடியாமல் அவதிப்பட்டவர்களுக்கு

நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் கைகொடுத்தன. எனவே, அம்மையார் பாடல்கள் சேரமான் பாடல்கள் என்பவற்றோடு நம்பியாண்டார் நம்பி பாடல்களையும் சேர்த்து ஒரு திருமுறையாகத் தொகுக்க முற்பட்டனர். அந்த நிலையில் பலராலும் பாராயணம் செய்யப்பெற்ற திருமுருகாற்றுப்படையையும் இத்தொகுப்பினுள் சேர்க்க முற்பட்டனர். பல காலங்களில் வாழ்ந்த பல பெரியவர்களுடைய, ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத பாடல்கள் இத்தொகுப்பினுள் இடம்பெற்றபோது திருமுறைத் தொகுப்பில் பதினோராம் திருமுறை என்று பெயரிட்டனர். இந்த நூல் உதிரிப் பாடல்களின் சேர்க்கையாக இருந்தமையின் பலரும் தங்களுக்கு விருப்பமான பாடல்களை இத்தொகுப்பினுள் திணிக்கத் துணிந்தனர். அதன் பயனாகக் கபிலர், பரணர் என்ற பெயருடைய மிகப் பிற்காலத்தார் பாடிய பாடல்களும் இதில் இடம்பெற்றன. பட்டினத்துப் பிள்ளையின் ஐந்து நூல்களும் இதில் இடம்பெறலாயின.

ஆழ்ந்து சிந்தித்தால், இந்தப் பதினோராம் திருமுறை எந்தக் கட்டுப்பாட்டிலும், எந்த வரன்முறையிலும் அடங்காது நிற்றலைக் காணலாம்.

சேக்கிழார் பெருமான் திருமுறை என்ற பெயரைக் கணநாதர் புராணத்தில் பயன்படுத்துவதால் அவர் காலத்தில் இப்பெயர் வழக்கில் வந்துவிட்டது என்று தெரிகிறது. திருமூலரின் 'ஏடங்கை' என்றுதொடங்கும் 1057 ஆம் பாடலில் திருமுறை என்ற சொல் பயன்படுத்தப் பெற்றாலும் இத்திருமுறைகட்கும் அந்தச் சொல்லுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தேவாரம் என்ற பெயரும் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையில் வழங்கப்பெற்றதாகத் தெரியவில்லை. அதுவரையில் வழங்கிய பெயர் திருப்பதியம் (திருப்பதிகம்) என்பதேயாகும்.

திருமுறைகளின் வைப்புமுறைக் கதை இது என்றால், திருவாசகத்தின் இடம் எங்கே என்று ஆராயத் தொடங்குவதில் தவறில்லை.

நம்பியாண்டார் நம்பிகள் பதினோராம் நூற்றாண்டில் சேக்கிழாருக்குச் சற்று முன்னிருந்தவர். நிச்சயமாக அவருடைய காலத்தில் திருவாசகம் மக்களிடைப் பரவி யிருந்திருக்க வேண்டும். அப்படியிருக்க, நம்பியாண்டார் நம்பி மூவரையும்பற்றிப் பாடிவிட்டு, மணிவாசகரைப் பற்றிக் குறிப்புக்கூடத் தராதது ஏன்? தமிழகம் முழுவதையும் சுற்றித் திரிந்து, ஆய்வுசெய்து அடியார்கள் வரலாற்றை இவ்வளவு துல்லியமாகப் பாடிய சேக்கிழார் பெருமான் திருவாசகத்தை அறிந்திருக்கவில்லையா என்ற வினாவிற்கு விடையிறுப்பது கடினம்.

நின்றசீர் நெடுமாறனையும் பாண்டி நாட்டையும் பாடும்பொழுது சேக்கிழார் பெருமானுக்கு மணிவாசகர் எப்படி நினைவுவராமல் போய்விட்டார்? பெரிய புராணத்தில் மணிவாசகருக்கு இடமில்லையென்றாலும் பாண்டி நாட்டைப் பாடும்பொழுது மணிவாசகர் பிறந்த நாடு என்றாவது சொல்லியிருக்கலாமே? அப்படியானால் சேக்கிழார் வாழ்ந்த பன்னிரண்டாம் நூற்றாண்டில் தேவாரப் பதிகங்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததுபோலத் திருவாசகம் வழக்கில் இல்லாமல் போய்விட்டதா என்ற ஐயத்திற்குப் பதிலிறுக்க முடியவில்லை.

இவற்றையெல்லாம் நோக்கும்போது திருமுறைகள் வகுக்கப்பட்ட காலம் மிகமிகப் பிற்காலத்தில் இருக்குமோ என்ற ஐயம் வலுவடைகிறது. சோழர்கள் காலத்தில் தேவாரம் பெருஞ்செல்வாக்குப் பெற்றிருந்தது. அடுத்த நிலையில் .. திருவிசைப்பா இடம்பெற்றிருந்தது. என்ன காரணத்தாலோ திருவாசக்ம் அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. இக்கருத்து மேலும் சிந்திப்பதற்குரியது.

## பாடும்பொழுதே படியெடுத்தல்

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகிய பெரும் நூல்கள் இன்றளவும் இருந்துவருகின்றன. திருக்குறளைப் போல இவற்றுள் பெரும்பகுதியானவை பத்து அல்லது பதினொரு பாட்டுக்களால் ஆக்கப் பெற்றிருத்தலின் இடைச்செருகல்களுக்கு இடமில்லாமல் போய்விட்டது. இந்தப் பாடல்களைப் பற்றிச் சிந்திக்கும்போது இவற்றின் தனிச்சிறப்பை அறிதல் நலம்.

புத்த தேவனும் இந்த நாட்டில் தோன்றியவன்தானே. ஆனந்தன் முதலிய பல சீடர்கள் புத்தனுடன் கூடவே இருந்தனர். என்றாலும், அப்பெருமகனுடைய வார்த்தைகளை அவ்வப்போது யாரும் பதிவுசெய்ததாகத் தெரியவில்லையென்றே பலரும் நம்புகின்றனர். புத்ததேவன் பரிநிர்வாணம் அடைந்த பிறகு சீடர்கள் ஒன்றுகூடித் தங்கள் குரு கூறியவற்றைத் தங்கள் நினைவில் இருந்தவரையில் எழுதித் தொகுத்தனர். மேலை நாட்டைப் பொறுத்தவரை ஏசுநாதர் கூறியவற்றை யாரும் உடனுக்குடன் எழுதிவைக்கவில்லை. கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து அவர் மேலே சென்ற பிறகு இந்தச் சீடர்கள் ஒன்றுகூடித் தம்முடைய குருநாதர் கூறியவற்றைத் தத்தம் நினைவில் இருந்த முறையில் ஹீப்ரு மொழியில் பதிவு செய்தனர். அதன் விளைவாக இவர்கள் கூற்றிடையே முரண்பாடுகள் மிகுதியாக இருந்தன.

ஆனால், இம்முறைக்கு மாறாக மூவர் முதலிகள் ஆழ்வார்கள் போன்ற அருளாளர்களுடன் இருந்த பக்தர்கள் இவர்கள் பாடியவற்றைப் பாடும் பொழுதே உடனுக்குடன் எழுத்தில் வடித்து விட்டனர். எனவே, இச்சொற்கள் அவருடைய கூற்றுத் தானா என்ற ஐயத்திற்கு

இடமேயில்லாமல் போய்விட்டது. அதன் பயனாக இந்த ஆயிரம் ஆண்டுகளாக, இப்பாடல்கள் பழக்கத்திலிருப்பினும் பெருமாற்றங்கள் ஏதும் தோன்ற இடமில்லாமல் போய்விட்டது. ஏடெழுதுவோரின் கவனக்குறைவு காரணமாக எழுத்துப் பிழைகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்படலாம். இதனால் மன்னிக்க முடியாத பெருந்தவறு எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. தேவாரங்களும் இப்படி எழுதப்பட்டவைதான்; திருவாசகமும் அப்படியே.

அமைச்சர் பதவியைத் துறந்து ஆடிப் பாடிக்கொண்டு ஆண்டிபோலத் திரிந்தமையின் அடிகளார் காலத்தில் அவரைப் பயித்தியமென்று பலரும் பேசினர். என்றாலும் ஒரு சிலர் இப்பெருமகனின் உண்மைச் சொரூபத்தைப் புரிந்துகொண்டு அவரைத் தொடர்ந்து சென்றிருக்க வேண்டும். அங்ஙனம் சென்ற பெருமக்களே அடிகளார் பாடப் பாட அப்படியே அவற்றைப் படியெடுத்துக் கொண்டனர். இந்த அடிப்படையில்தான் பிற்காலத்தார் அடிகளாரைத் திருவாசகம் பாடச்செய்து தில்லைக் கூத்தனே படியெடுத்துக் கொண்டான் என்று கதையாகக் கூறினர்.

## பக்திப் பாடல்களுள் திருவாசகத்தின் தனி இடம்

தேவாரப் பாடல்களைப்போல் அல்லாமல் திருவாசகப் பாடல்களின் அமைப்புமுறையே முற்றிலும் வேறுபட்டு நிற்கின்றது. சுந்தரர் காலம்வரையில் பண்முறை பழக்கத்தில் இருந்துவந்தது. மாபெரும் அறிஞராகிய திருவாதவூரர் இவற்றைப் படித்திருத்தல் கூடும். அப்படியானால் சுந்தரரை அடுத்து, அறுபது அல்லது எழுபது ஆண்டுகள் கழித்துவரும் அடிகளார் பண் முறையை ஏன் கையாளவில்லை?

பண் முறையில் இசைக்கும் தாளத்திற்கும் மிக முக்கியமான இடமுண்டு. பல இடங்களில் இசையமைப்பிற்கு ஏற்பச் சொல்லை அமைக்கவேண்டிய நிலை உருவாகிறது. இவற்றையல்லாமல் திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை திருவிருத்தம் தவிர ஏழு திருமுறைகளிலுள்ள பாடல்கள் அனைத்தும் பெரும்பாலும் இசைப் பாக்களே யாகும். சுந்தரருடைய தக்கேசிப் பண்கள் சுத்தாங்கமாகப் பாடப்படலாமேனும் அவை அடிப்படையில் இசைப் பாக்களே யாகும். அன்றியும் தேவாரங்களை ஊன்றிப்படித்தால் இந்தப் பண் அமைப்புக்களுக்கேற்பச் சொல் அமைப்புகளும் இடம்பெற்றிருத்தலைக் காணலாம்.

ஒரு குறிப்பிட்ட ஊரில், ஒரு குறிப்பிட்ட பண்ணில் இப்பெருமக்கள் பாடினார்கள் என்றால் எந்தப் பண்ணை உபயோகப்படுத்தவேண்டுமென்று எப்படி அவர்களுக்குத் தெரிந்தது? நடுவுநிலைமையில் நின்று சிந்தித்தால் ஒரு முக்கியமான உண்மையைக் காணமுடியும். பெரும்பாலான பாடல்களில் அந்தந்த ஊர்ப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. புறம்பயம் என்ற இரு சீரில் வரும் ஊர்ப் பெயர் தொடங்கிப் பழமண்ணிப்படிக்கரை என்ற பல சீர்களையுடைய ஊர்ப்பெயர்வரை ஊர்ப் பெயர்கள் அமைந்துள்ளன.

ஒரு பதிகத்தின் பல பாடல்களில் அந்த ஊரின் பெயர் இடம்பெற வேண்டுமானால் அதற்கு ஏற்பச் சொல்அமைப்பு அமையவேண்டும். இந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, எந்த இராகத்தில் அல்லது பண்ணில் சொல் உடையாமல் பாடலாம் என்பதை இந்த அருளாளர்கள் விநாடி நேரத்தில் கண்டுகொண்டனர். ஆகவே, தேவாரங்கள் பண்முறையில் அமையப் பொருத்தமாக இருந்தன.

காரைக்கால் அம்மையார் தொடங்கிச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்வரையுள்ள ஆறுநூறு ஆண்டுகளில் இந்த அடிப்படையும் கட்டுக்கோப்பும் கலையாமல் இருந்ததால் தேவாரப்பண்கள் உதயமாயின. அம்மையாருக்குப் பிறகு களப்பிரர் இடையீட்டால் (கி.பி. 250 முதல் 500 வரை) தமிழில் எவ்வகை நூலோ பாடல்களோ தோன்றியதாகத் தெரியவில்லை. மறுபடியும் நாவரசர் காலத்தில்தான் (ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி) பண்முறையில் பாடும் பழக்கம் மீண்டும் தொடங்குகிறது.

தேவாரப் பண்களில் இறைவனுடைய பெருமைகள் அடியார்பொருட்டு அவன் நிகழ்த்திய செயல்கள் என்பவை ஒருபுறமிருக்க, இந்த அடியார்கள் தம் குறைகளை வரிசைப்படுத்தி அவற்றைப் போக்குமாறு அவனை வேண்டும் பகுதியே எஞ்சிய இடத்தை ஏற்றுக்கொண்டது.

மணிவாசகர் காலத்தில் இந்த நிலைமை முற்றிலும் வேறுபட்டுவிட்டது. குரு வடிவில் இறைவன் வந்து ஆட்கொள்கிறான் என்ற புதிய சிந்தனை திருமூலர் காலத்திலிருந்து தொடங்கியதே யாகும். தேவர்கள்கூடப் புவனியில் சேவடி தீண்டமாட்டார்கள் என்ற நம்பிக்கை வலுவாக இருந்த காலத்தில், குருந்த மரத்தடியில் இருந்த குருநாதரைச் சிவனே என்று தாம் முடிவு செய்ததாக, 'புவனியில் சேவடி தீண்டினான் காண்க, சிவனென யானும் தேறினன் காண்க' (3:61—62) என்ற அடிகளில் அடிகளாரே பேசுகிறார். குருந்த மரத்தடியில் மானிட வடிவிலிருந்த குருநாதர் திருவாதவூரரை ஏற்றுக்கொண்டு மணிவாசகராக மாற்றி அருள்கிறார். இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி மணிவாசகருக்கு முன்னோ பின்னோ நடந்தது என்று சொல்வதற்கு இலக்கியச் சான்றுகள் எதுவுமில்லை.

சுந்தரருடைய திருமணத்தைத் தடுத்து ஓலைகாட்டி ஆட்கொண்ட இறைவன், மானுட வடிவு தாங்கி வந்து

வழக்குரைத்து, சுந்தரரை அடிமை கொண்டானேனும் அந்தக் கிழவேதியரைக் குரு என்று சுந்தரர் கருதவோ மதிக்கவோ இல்லை.

பெரிய புராணத்தில் வரும் ஒரு சில அடியவர்களெதிரே இறைவன், மானுட வடிவில் தோன்றிப் பல அருட்செயல்களைச் செய்தானேனும், அப்படித் தோன்றியவனை இந்த அடியார்கள் குருவாகச் சிந்திக்கவும் இல்லை; கொள்ளவும் இல்லை; அடியார் வேடத்தையும் அடியார்களையும் சிவனெனவே இவர்கள் கருதியமையின் குரு என்று சிந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாகவேயில்லை.

பெரிய புராண அடியார்களுள் சுந்தரர், நாவரசர் ஆகிய இருவர் தவிர வேறு யாருக்கும் இறைவன் திருவடி தீட்சை செய்ததாக வரலாறு இல்லை. ஒருமுறைக்கு மேலாகப் பலமுறை சுந்தரர் திருமுடிமேல் இறைவனது திருவடி பட்டாலும் இறுதிவரையில் சுந்தரர் இது யாருடைய திருவடியென்று அவராகவே தெரிந்து கொள்ளவில்லை.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது மணிவாசகப் பெருமானின் வாழ்க்கை முறை, அருள்பெற்ற முறை, திருவடி தீட்சை பெற்ற முறை என்பவை முற்றிலும் புதுமையாகவே உள்ளன. குருநாதர் ஆசனத்தில் அமர்ந்து தம் திருவடிகளை நிலத்தில் ஊன்றிக்கொண்டு அமர்ந்திருந் தாராக, இதனைக் கண்டவுடன் இவர் மானுடரல்லர்; இறைவனே இவ்வாறு எழுந்தருளியுள்ளான் என்று கண்டு கொண்டதாக அடிகளாரே பாடியுள்ளார். புவனியில் சேவடி தீண்டினன் காண்க சிவனென யானும் தேறினன் காண்க. (3-61,62) என்று பாடக்கூடிய சிறப்பு, தமிழ்நாட்டு அடியார்கள் வரலாற்றில் அடிகளார் ஒருவருக்கே அமைந்திருந்தது என்று கூறினால் அதில் வியப்பொன்றும் இல்லை.

தேவாரப் பாடல்களுக்கும் திருவாசகத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிய முற்படுவது நலம். வேறுபாடு என்று கூறியவுடன் ஒன்றை உயர்ந்தது என்றும் மற்றொன்றைத் தாழ்ந்தது என்றும் கூறுவதாக யாரும் நினையவேண்டா. சிவப்பும் பச்சையும் மாறுபட்ட நிறங்கள் என்றாலும், இவற்றிடையே உயர்வு தாழ்வு எதுவுமில்லை. தேவார திருவாசகங்கள் இடையேயுள்ள வேறுபாடும் இதுபோன்றதுதான்.

தேவாரப் பாடல்களையும் அவற்றைப் பாடியவர்களையும் எடுத்துக்கொண்டு பார்த்தால் பாடியவர், பாடல் என்பவற்றோடு பாடுபொருளாக அமைந்துள்ளவன் இறைவன் என்பதை எளிதில் அறிந்துகொள்ள முடியும். பாடியவர்களாகிய இவர்கள், இறைபக்தியில் ஆழங்காற்பட்டவர்கள் என்பதிலோ அவன் அருளை முழுவதும் பெற்றவர்கள் என்பதிலோ எந்த ஐயப்பாடும் இல்லை. என்றாலும், தேவாரப் பாடல்களில் மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருப்பதைக் காணமுடியும். பாடிய அடியார்கள், பாடிய பாடல்கள், பாடு பொருளாகிய இறைவன்-அதாவது அடியார்கள், பாடல்கள், இறைவன்-என்ற மூன்றும் ஒரே நேர்கோட்டில் இருப்பதைக் காணலாம். இந்த மூன்றினிடையே பெருத்த இடைவெளி எதுவுமில்லை என்றாலும், இம்மூன்றும் தனித்தனியேதான் இருந்தன. மற்றொரு வகையாகக் கூறினால் இப்பாடல்களைப் பாடியவர்கள் எல்லாப் பாடல்களிலும் கரைந்துவிடவில்லை. இடைவெளியே இல்லையென்று சொல்லுமளவிற்கு, இம்மூன்றும் நெருங்கியிருந்தாலும் அடியார்கள், பாடல்கள், இறைவன் என்ற மூன்றும் தனித்தனியே உள்ளன என்பதை ஆய்பவர்கள் அறியமுடியும்.

இந்த நிலையில் திருவாசகப் பாடல்கள், அதனைப் பாடிய அடிகளார், பாடுபொருளாகவுள்ள

தில்லைக்கூத்தன் ஆகிய மூன்றையும் தனியே பிரித்துக் காண்டல் கடினம். பாடிய அடிகளாரும், பாடு பொருளாகவுள்ள இறைவனும், திருத்தசாங்கம் போன்ற சிலபாடல்கள் தவிர ஏனைய பாடல்களுள் மறைந்து விடுகின்றனர். ஆதலால், திருவாசகப் பாடல்கள் ஏனைய பக்திப் பாடல்களைப்போல் அல்லாமல் தனித்து விளங்குகின்றன. இப்பாடல்களில் சொல், சொல் தரும் பொருள், அப்பொருள் தோற்றுவிக்கும் உணர்வு என்ற முறையில் தொடங்கி, சொல்லும் பொருளும் மறைந்து உணர்வு ஒன்று மட்டுமே நின்றுவிடுகிறது. இதுவே திருவாசகத்தின் தனிச்சிறப்பாகும்.

சொல்லையும் அது குறிக்கும் பொருளையும் புரிந்து கொண்டுதான் இந்த உணர்வைப் பெறவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. தொடக்கத்தில் இந்த உணர்வைத் தோற்றுவிக்கச் சொல்லும் அதன் பொருளும் பயன்பட்டிருக்கலாம். ஆனால், அடுத்தடுத்த முறைகளில் சொல்லும் பொருளும் மறைய உணர்வு ஒன்றே எஞ்சி நிற்கிறது என்பதை அறிவு கொண்டு அறியமுடியா விட்டாலும் உணர்வு கொண்டு உணர்ந்துகொள்ளமுடியும்.

இந்த அடிப்படையை நன்கு உணர்ந்துகொண்ட வள்ளற் பெருமான் 'வாட்டமிலா மாணிக்க வாசக' என்று தொடங்கும் பாடலில் மிகப் புதுமையானதும் சிந்திக்க வேண்டியதுமான ஒரு கருத்தை வெளியிடுகிறார். அப்பாடலில் 'நின் வாசகத்தைக் கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும் வேட்டமுறும் பொல்லா'விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டமுறும் எனில் இங்கு நான் உறுதல் வியப்பன்றே' (திருவருட்பா - 3266) என்று பாடியருளினார்.

உயிரினங்களில் கீழ்ப்பட்டதாகக் கூறப்படும் பறவைகளும் வேட்டையாடும் விலங்குகளும் திருவாசகப் பாடல்களைக் கேட்டால் மெய்ஞ்ஞான நாட்டமுறும்

என்று கூறுகிறாரே, இதன் அடிப்படையென்ன? விலங்குகளும் பறவைகளும் சொல்லையும் சொற்பொருளையும் புரிந்துகொள்ளும் ஆற்றல் உடையயவனவல்ல. இந்த ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே உரியதாகும். பறவை முதலிய விலங்கினங்கட்குச் சொல்லைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இன்றேனும் உணர்வைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் மனிதனைவிட அதிகமுண்டு. தம்மை வளர்ப்பவன் வாய் விட்டு ஒரு வார்த்தையும் பேசாதபோதுகூட அவன் மனத்தில் நிறைந்திருக்கும் அன்பு, அதிர்வுகளாகப் புறப்பட்டுச் சென்று எதிரேயுள்ள பிராணிகளை ஈர்க்கின்றது. உணர்வைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உண்டு என்பதை நாம் அறிவோம். திருவாசகப் பாடல்கள் முழுவதும் சொல்லையும் பொருளையும்விட உணர்வே வடிவாக இருத்தலின் அதனைக் கேட்கின்ற விலங்கினங்கள் கூட அவற்றின்பால் ஈடுபடும் என்கிறார் வள்ளலார். இதனைப் புரிந்துகொண்டால் இப்பாடல்களுக்குரிய தனிச்சிறப்பு நன்கு விளங்கும். இதனையே பாடுபவர், பாடல், பாடுபொருள் என்ற மூன்றாக இருந்தநிலை மாறிப் பாடுபவரும் பாடுபொருளும் பாடலுக்குள் மூழ்கிவிட்டனர் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம்.

## திருவாசகப் பாடல்களில் காணும் சில புதுமைகள்

அடிகளாரைப் பொறுத்தவரையில் மானிட வடிவிலிருந்த குருநாதர் தரிசனத்தில் தொடங்கி உமையொருபாகன், தில்லைக்கூத்தன் என்ற பல்வேறு வடிவங்களை நேரே கண்டு தரிசித்தவர் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளோம். ஏனைய அருளாளர்களைப்போலவே இம்மூர்த்தங்களையல்லாமல், உண்மையான சொரூபத்தைக் கண்டு அடிகளாரும் வழிபட்டவராவார். ஆனால், இறைப்பிரேமையில் மூழ்கியெழுந்து, இந்தப் பிரேமையில் தாம் பெற்ற அனுபவத்தை அடிகளார்ப் போல வேறு

யாரும் பாடவில்லை. வாதவூரர் மணிவாசகராக மாறிய விநாடியிலிருந்து, அச்சோப் பதிகம் பாடுகின்றவரையில் பெருவளர்ச்சி அடைகின்றார் என்பதை அறியமுடிகிறது.

திருவாசகம் இன்று பதிக்கப் பெற்றுள்ள முறையில் எந்தப் பகுதி முன்னர்ப் பாடப்பட்டது, எதனையடுத்து எது பாடப்பெற்றது, குறிப்பிட்ட பதிகம் எந்த ஊரில் பாடப்பட்டது என்பதை அறிந்துகொள்ளல் கடினமாகும். பெரும்பகுதிப் பதிகங்களுக்குத் 'தில்லையில் அருளியது' என்று குறிப்பைத் தந்திருக்கிறார்கள். உரையெழுதிய பெருமக்களும் இதுபற்றிச் சிந்தித்ததாகத் தெரியவில்லை. முழுவதும் திருப்பெருந்துறைபற்றிப் பாடும் இருபத்தி ரண்டாவது பதிகத்தை 'கோயில் திருப்பதிகம்' என்று பெயரிட்டு தில்லையில் அருளியது என்று கூறியது ஏதோ குருட்டுத்தனமாகத் தலைப்புத் தந்தமையை அறிவிக்கின்றது. இந்த அமைப்பு முறை பற்றிப் பின்னர் விரிவாகக் காணலாம்.

அடிகளார் பாடியருளிய முறைவைப்பு உண்மையாகத் தெரியுமானால், திருவடி தீட்சையிலிருந்து அச்சோப் பதிகம் பாடுகின்றவரையுள்ள நாட்களில் அவர் எத்தகைய வளர்ச்சியை அடைந்தார் என்பதை அறிய வாய்ப்பு உண்டு. திருவாசகத்தைத் தொகுத்தவர்கள் உண்மையறிய வாய்ப்பின்மையின், பாடல்களின் வகை, பாடல்களின் எண்ணிக்கை என்பவற்றை வைத்து இதனைத் தொகுத்துவிட்டனர். இதையும்கூடச் செம்மையாகச் செய்ததாகத் தெரியவில்லை. திருவெம்பாவை முதல் திருவுந்தியார்வரை ஒவ்வொன்றும் இருபது பாடல்களைக் கொண்டதாகும். அதற்குப்பின் வரும் தோள் நோக்கத்தில் பதினான்கு பாடல்களே உள்ளன. அடுத்துவரும் பொன்னூசலில் ஒன்பது பாடல்களே உள்ளன. இது இறங்குமுறைவைப்பு என்று ஏற்றுக்கொண்டால், அடுத்துவரும் அன்னைப் பத்து முதல் அச்சோப் பதிகம் வரை பாடல்களின் எண்ணிக்கை ஒன்பதிலும்

குறைந்துகொண்டே சென்றிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறில்லை. இதனைச் சிந்திப்பதற்கு ஒரு காரணம் உண்டு.

இறைப்பிரேமையில் ஆழங்காற்பட்டுப் பெரும் பொழுதைச் செலவழித்த அடிகளார், எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காணுகின்ற வாய்ப்பைப் பெற்றிருந்தார். அப்படியிருந்தும் திருமால், நான்முகன் என்பவர்களைக் குறைத்துப்பேசும் பழக்கம் மிகப் பல பாடல்களில் இருப்பதைக் காணமுடிகின்றது. அதிலும் ஏறத்தாழ எல்லா இடங்களிலும் அடிமுடி தேடிய கதையே பேசப்பெறுகிறது. திரிபுரம் எரித்த கதை, தக்கன் வேள்விக் கதை என்பவை ஆங்காங்கே பேசப்பெற்றாலும் அக்கதைகளில் பிற தெய்வங்களைக் குறைத்துப்பேசும் செய்தியொன்றும் இல்லை. ஆனால் ‘அடிமுடி தேடிய கதை’யில் நாரணன்’ நான்முகன் இருவரும் தேவர்கள் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். பாடல்கள்தோறும் இதை விடாமல் கூறவேண்டிய காரணமென்ன? இறைப்பிரேமையில் மூழ்கியிருந்த நேரம் போக ஏனைய நேரங்களில் மணிவாசகர் திருவாதவூரராகவே இருந்தார்போலும், அக்காலத்தைய தாக்கம் அவரையும் ஆட்கொண்டுவிட்டது என்று கூறுவது ஒருவகை.

இதனையல்லாமல் மனோ தத்துவ ரீதியாகவும் ஒரு விளக்கத்தைக் கூறலாம். அடிகளாரைப் பொறுத்தமட்டில் குருநாதரே உமையொருபாகன். அவரே தில்லைக்கூத்தன் என்பதை உடனே விளங்கிக்கொண்டார் என்றாலும் குருநாதரைவிட அவருடைய திருவடிகளே அடிகளாரின் மனத்தில் நிரம்பியிருந்தது. இதற்கு விளக்கம் தேடி அதிக தூரம் செல்லவேண்டியதில்லை. குருநாதருடைய முழுவடிவைச் செந்தழல் புரைதிரு மேனியும் காட்டி என்றும், அந்தணன் ஆவதும் காட்டி என்றும், திருப்பள்ளியெழுச்சியில் (375) பாடியதுடன், குயிற்பத்தில்

அந்தணனாகி வந்து (357) என்றும் ஒரோவழிப் பாடியுள்ளமை நோக்கற்குரியது. ஆனால், திருவடியைப்பற்றி நூற்றுக்கணக்கான பாடல்கள் பேசுகின்றன. குருநாதர் வடிவைப்பற்றிப் பேசும் குயிற்பத்தின் மேற்சொன்ன பாடலடியிற்கூடச் சேவடி காட்டி என்றுதான் முடிக்கின்றார். இந்த அளவிற்குச் சேவடியில் ஈடுபட என்ன நிகழ்ந்தது என்பதைச் சிந்திப்பது நலம்.

அமைச்சர் குதிரையினின்றும் இறங்கியவுடன் அவருடைய கண்களில் முதலில் பட்டது குருநாதர் வடிவமன்று; புவனியில் தீண்டிய சேவடியே யாகும். அன்றியும் இவர் கீழே வீழ்ந்து வணங்கியவுடன் குருநாதர் திருவடி தீட்சை செய்தார், அடுத்த விநாடியே மணிவாசகர் தோன்றுகிறார். உறக்கத்தில் கடைசியாக இருந்த நினைவு விழிக்கின்ற காலத்தில் முதலாவதாகத் தோன்றும் என்று கூறுதல் மரபு. அந்த முறையில் திருவாதவூரர் என்ற அமைச்சருக்குக் கடைசியாகத் தோன்றிய காட்சியும் நினைவும் குருநாதரின் திருவடிகளே யாகும். திருவாதவூரர் மறைந்து, மணிவாசகர் தோன்றியவுடன் தம்மை உய்வித்து மணிவாசகர் என்ற புதுப் பிறவியைத் தந்த திருவடியே காட்சியாகவும் நினைவாகவும் முதலில் நிற்கின்றது. ஆகவேதான் குருநாதரைவிட, தில்லைக்கூத்தனைவிட, அத் திருவடிகள் அவருக்கு மிக முக்கியமானவையாய் அமைந்துவிட்டன.

இவ்வளவு தூரம் திருவடியில் ஈடுபடும் பொழுதெல்லாம் அத்திருவடி எவ்வளவு உயர்ந்தது என்பதும் அது எவ்வளவு எளிதாகத் தமக்குக் காட்சி தந்தது என்பதும், எவ்வளவு எளிதாகத் தம் கைகளால் பற்றிக்கொள்ள முடிந்தது என்பதும் அவருடைய மனத்தில் நிறைந்திருந்தது. இந்த நினைவு தோன்றும்போதெல்லாம் தொடர்புடைப் பொருளைச் சிந்தித்தல் (association of ideas) இயல்பாகிறது. தமக்கு எளிதாகக் கிடைத்த அத்திருவடி

நாரணனுக்கும் நான்முகனுக்கும் கிட்டாமல்போனது அவருக்குப் பெருவியப்பைத் தருகிறது. அதனாலேயே ஓயாமல் பல பாடல்களில் அவர்கள் இருவரும் காணாத் திருவடி என்று பேசிச்செல்கிறார்.

இப்பொழுது சிலர் மனத்தில் இயல்பான சில ஐயங்கள் தோன்ற இடமுண்டு, திருவாசக பக்தரான ஜி.யு.போப்பும் திருவாசகம் பற்றி ஆராய்ச்சியுரை எழுதிய யோக்கம் (Yocum) என்ற மேலை நாட்டவரும், திருமாலை மற்றொரு சமயத்தின் முழுமுதற் பொருள் என்று அடிகளார் ஏற்றுக்கொள்ளவில்லையாதலால் அவர் வளர்ச்சி முழுத்தன்மை பெற்றதன்று; குறைபாடுடையது என்று கூறிப்போயினர். இவ்விருவருடைய கூற்றும் சற்றும் பொருத்தமற்றதேயாகும். கத்தோலிக்கப் பாதிரியாரான ஜி.யு.போப்பும், யூதரான யோக்கமும் முறையே புராடெஸ்டன்ட்டைகளையும் (protestants) ஏனைய கிறிஸ்தவர்களையும் தங்களுக்குச் சமமானவர்கள் என்று ஏற்றுக் கொள்வார்களா? எனவே, அடிகளார் பாடலைக் கொண்டு அவர் முழுவளர்ச்சி அடையாதவர் என்று கூறுவது அறியாமையின் விளைவேயாகும்.

மனிதராகிய தம்மால் காணக்கூடிய திருவடி தேவர்களிலும் மேம்பட்ட திருமாலுக்கும் காட்சி தரவில்லை என்று கூறும்போது, திருவடியின் கருணைப் பெருமை அடிகளார் மனத்தில் நிறைந்திருக்கிறதேயொழிய, திருமாலைப்பற்றிய உயர்வு தாழ்வு நினைவு அடிகளார் உள்ளத்தில் இல்லை. இந்த நுணுக்கத்தைப் புரிந்துகொள்ளாவிட்டால் திருவாசகத்தின் மிகப் பல இடங்களில் வரும் இக்கதையின் அடிப்படையைப் புரிந்துகொள்ள முடியாது. அடிகளாரின் மனவியல்பற்றிய ஒரு பிரச்சினையாகும் இது. எளிதாகக் காட்சிக்கு எட்டிய திருவடியை நினைக்கும்போதெல்லாம் திருவடியோடு தொடர்புடைய அடிமுடிதேடிய கதை நினைவிற்கு வருகிறது.

# பதிக வைப்புமுறை

இதுவரை வெளிவந்துள்ள திருவாசகப் பதிப்புகள் அனைத்தும் பதிகங்கள் வைப்புமுறையில் ஒரேமுறையைப் பின்பற்றி வந்துள்ளன. அவை ஏன் அவ்வாறு அமைக்கப்பட்டன என்பதுபற்றி அறிய எவ்வித வாய்ப்பும் இல்லை. பிற்காலத்து உரையாசிரியர்கள் பலரும் பாடல்களின் வகை, எண்ணிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டன என்று கூறியுள்ளனர். அதாவது, நான்கு அகவல்கள், அடுத்து நூறு பாடல்களைக் கொண்ட சதகம், பின்னர் ஐம்பது பாடல்கள் கொண்ட நீத்தல் விண்ணப்பம், அடுத்து இருபது பாடல்கள், பத்துப்பாடல்கள் என்ற முறையில் இவை வைக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த விளக்கமும் சரியென்று தோன்றவில்லை. அடிகளார் எந்தப் பதிகத்தை எங்கே எப்போது ப்பாடினார் என்று அறிய வாய்ப்பே இல்லை.

அடிகளார் வரலாற்றை முழுமையாகச் சொல்வதற்காக எழுந்த திருவாதவூரடிகள் புராணம் குழப்பத்திற்கு ஒரு கொள்கலம் என்று சொன்னால் மிகையாகாது. இதனைப் பாடிய கடவுண்மாமுனிவர் சிறந்த சிவபக்தர், மணிவாசகரிடம் பேரன்பு பூண்டவர் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஒரு வரலாற்றைப் பாடலாகப் பாடவேண்டுமானால் பல்வேறு விவரங்களையும் முதலில் தொகுத்துக்கொள்ள வேண்டும். அந்த வரலாற்றுக்குரியவர் எங்கெங்கே எப்பொழுது சென்றார், என்ன பாடினார் என்ற வரிசைமுறையைச் சேக்கிழார் பெருமான்போல நன்கு அறிந்திருக்க வேண்டும்.

மேலே கூறியவற்றைப் பெருமளவு பெற்றிராத கடவுண் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணம் நம்முடைய ஆராய்ச்சிக்கு எவ்விதத்திலும் பயன்படாது. இவற்றையெல்லாம் மனத்திற் கொண்டு பார்க்கும்பொழுது இன்றுள்ள பதிப்புகளில் மிகுதியாகக் காணப்பெறும் 'தில்லையில் அருளியது' என்ற குறிப்பு நம் குழப்பத்தை இன்னும் அதிகப்படுத்துகிறது. இப்பதிப்புகளின்படி பார்த்தால் பாதிப் பதிகங்கள் தில்லையில் அருளியனவாகவே கொள்ள நேரிடும். எங்கே அருளப்பெற்றது என்ற வினாவிற்குச் சரியான விடையின்றி அப்படியே நின்றுவிடுகிறது.

அடுத்துக் காணப்பெறுவது பதிகத் தலைப்புகளாகும். நான்கு அகவல்கள், குயில்பத்து, கோத்தும்பி, அம்மானை, பொற்சுண்ணம், பூவல்லி போன்ற பகுதிகளுக்குத் தலைப்பிடுவது எளிதானதே ஆகும். அந்தப் அந்தப் பதிகங்களில் இத்தலைப்புகள் இடம் பெற்றிருத்தலின் தலைப்பிடுவது எளிதாகிவிட்டது. ஆனால், இத்தகைய முத்திரைகள் இல்லாத பல பகுதிகள் உண்டு. அவற்றிற்குத் தலைப்பிடுவது அவ்வளவு எளிதன்று.

அம்மாதிரி இடங்களில் ஏதோ ஒரு பெயரை இட்டு, அது திருவாசகத்தில் இடம்பெற்றுள்ளது என்ற காரணத்தால் ஒரு 'திரு'வையும் சேர்த்துவிட்டனர். எல்லாவற்றிற்கும் 'திரு'வைச் சேர்க்கவேண்டுமென்று இடைக்காலத்தில் ஒருசிலர் கருதியிருக்க வேண்டும். அதன் பயனாகக், கூடுமானவரை, முடிந்த இடங்களில் எல்லாம் 'திரு'வைச் சேர்த்தனர். பல சந்தர்ப்பங்களில் இந்தத் 'திரு' பொருத்தமற்றதாகவும் சில இடங்களில் நகைப்பைத் தருவதாகவும் அமைந்திருக்கிறது. திருப்பொற்சுண்ணம், திருஅம்மானை, திருத்தெள்ளேணம், திருத்தோணோக்கம், திருக்கோத்தும்பி, திருவெண்பா, திருஏசறவு, திருவுந்தியார் என்பன போன்ற இடங்களில் 'திரு'வைச் சேர்த்தது எவ்வளவு பொருத்தமற்றது என்பது தெரியவரும்.

அம்மானை, தெள்ளேணம், உந்தி என்பவை மகளிர் விளையாடிய விளையாட்டுக்களின் பெயர்களாகும். அந்த விளையாட்டுகளின் அடிப்படையில் அடிகளார் பாடல்கள் பாடியுள்ளார். அப்படியானால் 'திரு'வை எப்படி எங்கே சேர்ப்பது? அம்மானைத் திருப்பாடல்கள், தெள்ளேணத் திருப்பாடல்கள், உந்தியார் திருப்பாடல்கள் என்று தலைப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு அம்மானைக்கும், தெள்ளேணத்துக்கும், உந்திக்கும் 'திரு'வைச் சேர்ப்பது பொருத்தமுடையதா என்பது சிந்திப்பதற்குரியது.

தும்பி என்பது ஒருவகை வண்டுக்குரிய பெயர். அதில் அரச வண்டு இருக்குமேயானால் அதனைக் கோத்தும்பி என்று சொல்வதில் தவறில்லை. ஆனால், எந்த அடிப்படையில் கோத்தும்பிக்குத் 'திரு'வென்று அடை தரப்பெற்றது? எல்லாவற்றிற்கும் திருவைச் சேர்க்கவேண்டும் என்று கருதியிருந்தால் திருக்குயிற்பத்து என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்? இதேபோல, சற்றும் பொருத்தமில்லாத முறையில் 'திரு'வைச் சேர்த்த சில தலைப்புகளும் உண்டு, திருப்புலம்பல், திருஏசறவு, திருவெண்பா இதற்கு உதாரணங்களாகும்.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தால், பதிகத்தில் கிடைக்கும் சொல்லை வைத்துக்கொண்டு, பதிகத்திற்குத் தலைப்பிடுவது சிறந்த முறை என்று தோன்றுகிறது. அப்படி இல்லையானால், முதற்பாடலில் முதலடியில் வரும் ஒரு தொடரைத் தலைப்பாக வைக்கும் பழக்கம் தொன்று தொட்டே இருந்துவருகின்றது. இடைக்காலத்தில், இத்தலைப்புகள் இட்டவர்கள் இதனையும் நன்கு அறிந்திருந்தார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுத்தான் பண்டாய நான்மறை என்ற தலைப்பு.

பொருத்தமுடைய தலைப்புக்கள் பெற்றுள்ள பதிகங்கள் போக, எஞ்சியவற்றிற்கு அந்த அந்தப்

பதிகத்தின் முதற்பாடலில் வரும் ஒரு தொடரைத் தலைப்பாகத் தந்திருக்கலாம். இவ்வாறு செய்திருந்தால் ஒருசிறிதும் பொருத்தமில்லாத திருப்புலம்பல் போன்ற தலைப்புகள் தோன்றியிரா. இறையருள் பெற்று எல்லை யில்லாத மனத் திடத்துடன் நிமிர்ந்து நின்று 'உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன்' (558) என்று பாடும் பகுதிக்குத் திருப்புலம்பல் எனப் பெயரிட்டது எவ்வளவு பொருத்தமற்றது என்பதை அறியலாம்.

பதிகத் தலைப்புகள் நிலைமை இவ்வாறாக, ஒவ்வொரு பதிகத்திற்கும் ஓர் உட்தலைப்பை யாரோ சிலர் தந்துள்ளனர். இதுவும் இடைக்காலத்திலேயே நடைபெற்றிருக்க வேண்டும். இடைக்காலத்தில் தோன்றிய வேதாந்த சித்தாந்தத் தத்துவங்களை அறிந்தவர்க்கு 'ஆத்ம இலக்கணம்', 'ஆத்தும சுத்தி', 'சிவனோடைக்கியம்', 'சிவனோடடைவு', 'மாயாவிசய நீங்குதல்', 'பிரபஞ்ச சுத்தி', 'அருட்சுத்தி', 'ஆத்தும பூரணம்' என்பன போன்ற தொடர்கள் நன்கு பழக்கப்பட்டவை. திருவாசகப் பாடல்களுக்கு ஒரு சிறிதும் பொருத்தமில்லாமல் ஒரு காத தூரத்திற்கும் அப்பால் நிற்க வேண்டியவைகளாகும் இவை. ஒரு சிறிதும் பொருத்தமில்லாமல், மேலே கண்ட தொடர்களைத் திருவாசகத்தில் உட்தலைப்புகளாக இடைக் காலத்தார் எழுதியுள்ளனர், பிற்கால உரையாசிரியர்கள் இத்தலைப்புகளுக்கு விளக்கமும் கூற முயன்றுள்ளனர்!

திருவாசகத்தின் சில பதிப்புகளையும் இந்த நூலையும் ஒருசேரப் பார்க்கின்றவர்களுக்குக் குழப்பம் ஏற்படக் கூடாது என்பதற்காக இத்தலைப்புக்களையும் உள்ளே அச்சிட்டுள்ளோம். அந்த அந்தப் பதிகத்தின் முன்னுரையில் இத்தலைப்புக்களின் பொருத்தமின்மை எத்தகையது என்பதை விளக்கியுள்ளோம்.

பதிகங்கட்குப் பெயரிட்ட சூழ்நிலையையும் உட்தலைப்புக்கள் தந்த இடைக்காலத்தார் ஆவலையும் இதுவரை விளக்கியுள்ளோம்.

இனி அடுத்தபடியாகக் காணவேண்டியது இப்பதிகங்களின் வைப்புமுறையாகும். நூறு, ஐம்பது, இருபது, பத்து என்ற முறையில் கோவை செய்தது பொருத்தமற்றது என்று தோன்றுகிறது. ஆதலின் இதுபற்றிய ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, இந்த வைப்புமுறையை மாற்றி, எந்தப் பதிகத்தின் முன் எந்தப் பதிகம் வந்தால் பொருத்தமாக இருக்கும் என்ற நினைவுடன் பின்காணும் வரிசைமுறையில் மாற்றியமைக்க முயன்றுள்ளேன்.

அடிகளார், திருப்பெருந்துறையில் திருவருளை முழுவதுமாகப் பெற்றது தொடங்கி அவர்பெற்ற இறையனுபவம் வளர்ந்துவளர்ந்து இறைப்பிரேமையாக எவ்வாறு வடிவெடுக்கிறது என்ற சிந்தனையின் பயனாக விளைந்ததே அடியிற் காணும் தொகுப்புமுறை.

திருவாசகம் முழுவதையும் அடியிற் காணும் 13 தொகுப்புகளில் பிரிக்கலாம் என்பதே இம்முயற்சியின் முதற்படி.

## பதிக வைப்பு முறை

இன்றுள்ள திருவாசகப் பதிப்புகளில் காணப்பெறும் பதிக எண்கள் அடைப்புக் குறிக்குள் தரப்பெற்றுள்ளன.

## I. இணையாத பாடல்கள்

1) திருத்தசாங்கம் (19)

2) அச்சப்பத்து (35)

3) திருப்படையாட்சி (49)

## II. நீத்தல் விண்ணப்பம்

1) நீத்தல் விண்ணப்பம் (6)

## III. இறைவன் பெருமை பேசுதல்

*1) கீர்த்தித் திருஅகவல் (2)*

*2) திரு அண்டப் பகுதி (3)*

*3) திரு ஏசறவு (38)*

*4) போற்றித் திரு அகவல் (4)*

## IV. உறுதிப்பாடு உணர்த்தல்

*1) திருச்சதகம் (5)*

*2) திருப்பாண்டிப் பதிகம் (36)*

*3) குலாப் பத்து (40)*

*4) திரு வார்த்தை (43)*

*5) உயிருண்ணிப் பத்து (34)*

*6) திருப் புலம்பல் (39)*

*7) சென்னிப் பத்து (42)*

*8) பிடித்த பத்து (37)*

## V. கூடிப்பாடி ஆடுதல்

*1) திரு அம்மானை (8)*

*2) திருத்தெள்ளேணம் (11)*

*3) திருத்தோணோக்கம் (15)*

*4) திருப்பொற்சுண்ணம் (50)*

*5) திருப்பூவல்லி (13)*

*6) திருப்பொன்னூசல் (16)*

*7) திருச்சாழல் (12)*

*8) திரு உந்தியார் (14)*

*9) திருவெம்பாவை (7)*

*10. திருப்பள்ளியெழுச்சி (20)*

## VI. ஆண்டுகொண்ட அதிசயம்

*1) அதிசயப்பத்து (26)*

*2) அற்புதப்பத்து (41)*

*3) கோயில் திருப்பதிகம் (22)*

*4) திருவெண்பா (47)*

## VII. உயிர்வர்க்கத்தை விளித்தல்

*1) திருக்கோத்தும்பீ (10)*

*2) குயிற்பத்து (18)*

## VIII. இறையுணர்வில் ஈடுபட்ட தலைவியின் கூற்று

*1) அன்னைப்பத்து (17)*

## IX. ஆழமான ஏக்கம்

*1) ஆனந்தமாலை (50)*

*2) அடைக்கலப் பத்து (24)*

*3) வாழாப் பத்து (28)*

*4) செத்திலாப் பத்து (23)*

## X. மிகு அவா

*1) கோயில் மூத்த திருப்பதிகம் (21)*

*2) புணர்ச்சிப்பத்து (27)*

## XI. காட்டியதும் கண்டதும்

*1) திருக்கழுக்குன்றப் பதிகம் (30)*

*2) கண்டபத்து (31)*

## XII. பிரார்த்தனை

*1) ஆசைப் பத்து (25)*

*2) பிரார்த்தனைப் பத்து (32)*

*3) எண்ணப் பதிகம் (44)*

*4) அருட் பத்து (29)*

*5) குழைத்த பத்து (33)*

*6) பண்டாய நான்மறை (48)*

## XIII. புதிய திருப்பம்

*1) யாத்திரைப் பத்து (45)*

*2) திருப்படையெழுச்சி (46)*

*3) சிவபுராணம் (1)*

*4) அச்சோப்பதிகம் (51)*

இவ்வாறு தலைப்புகள் தந்து அத்தலைப்பினுள் சிலபல பதிகங்களை அடக்குவது என்ன முறை என்று சிலர் வினவலாம். ஒரே கருத்து பல பதிகங்களில் இடம் பெற்றுள்ளது. ஆனால், அவை ஒன்றன்பின் ஒன்றாக

அமையவில்லை. ஒரு கருத்து ஒரு பதிகத்தில் பேசப்பெற்று மற்றொரு பதிகத்தில் அதே கருத்து வளர்ச்சிபெற்று வருவதைக் காணலாம். ஆனால் இப்போதுள்ள வைப்பு முறையில் இவ்விரண்டு பதிகங்களும் வெவ்வேறு இடங்களில் அமைந்துள்ளன. வேறு கருத்துக்களைப் பேசும் பதிகங்கள் இடையே அமைக்கப் பெற்றுள்ளன. அதனாலேயே ஒத்த கருத்துடைய பாடல்களை ஒன்றாகச் சேர்க்கும் முறையில் இத்தலைப்புகளுள் அப்பதிகங்களைத் தொகுக்க முயன்றுள்ளேன். இங்கு காணப்பெறும் ஒவ்வொரு தொகுப்பினுள்ளும் இருக்கும் பதிகங்களில் முன்னர்ப் பாடப் பெற்றவை எவை பின்னர்ப் பாடப்பெற்றவை எவை என்றோ எங்கே பாடப்பெற்றவை எவை என்றோ தோன்றும் வினாக்களுக்கு இத்தொகுப்பு விடை தராது.

இந்த வைப்புமுறை சரியென்றோ இதனைப் பிறர் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றோ நான் நினைக்கவும் இல்லை; சொல்லவும் இல்லை. எனது 85 வயதில் திருவாசகம் காட்டும் திருநெறி இதுவாகும். இன்னும் சில ஆண்டுகள் உயிருடன் இருப்பின் நானேகூட இந்த முறைவைப்பை மாற்றும் நிலைக்கு ஆளாகலாம். இது முடிந்த முடிபென்று யாரும் நினைக்கத் தேவையில்லை. மூடிய பெட்டிக்குள் திருவாசகம் என்ற நூலை வைத்துவிட்டுத் தூபதீபம் காட்டி அமைதியடையும் நிலை இந்த வளரும் சமுதாயத்திற்கு ஏற்றதன்று.

சைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் ஒரு சிலருக்கு மட்டுமல்லாமல், மனித சமுதாயம் முழுவதுக்கும் இன்றைக்குமட்டு மல்லாமல், இனி வரப்போகும் எந்த நூற்றாண்டுக்கும் பொருத்தமாக அமைந்துள்ளது திருவாசகம். இதனைப் படிக்கின்றவர்கள் தம்முடைய கலக்கமடைந்த வாழ்விற்கு ஒரு வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கம் என்று இதனைக் கருதுவர்.

இப்பாடல்களில் காணப்பெறும் சிவன் என்ற சொல்லிற்குப் பதிலாக, இறைவன் என்ற பொதுப்பெயரைத் தந்துவிட்டால், இந்த உலகத்திலுள்ள எல்லாச் சமயத்தாரும் இதனைப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்வர்.

இந்த அடிப்படையை மனத்துட்கொண்டு, மேலே கூறிய 13 தலைப்புக்களில் இப்பாடல்களைப் பிரித்துத் தொகுக்க முயன்றுள்ளேன்.

## I. இணையாத பாடல்கள்

மேலே காட்டப்பெற்றுள்ள 13 தலைப்புக்களில் முதலாவதாக உள்ளது இணையாதபாடல்கள் என்பதாகும். இந்த தலைப்பு சிலருக்குக் குழப்பத்தைத் தரலாம்.

திருவாசகத்தில் காணப்பெறும் 51 பதிகங்களில் அந்நூலின் திரண்ட பொருளுக்கு எவ்விதத் தொடர்பும் இல்லாமல், மூன்று பதிகங்கள் அமைந்துள்ளன. அவையாவன:

1. திருத்தசாங்கம் (19)
2. அச்சப்பத்து (35)
3. திருப்படையாட்சி (49)

இம் மூன்றனுள் திருத்தசாங்கம் எவ்விதத்திலும் திருவாசகப் பாடல்களோடு இணையாது நிற்கின்றது. அச்சப் பத்து அடிகளார் காலத்தில் வீறுடன் பரவிய மாயாவாதம், வைணவம் என்ற சமயங்களையும் அதனைப் பின்பற்றுபவர்களையும் மறுத்துப் பேசுகிறது. அடிகளாரது நிலையை அடைந்து விட்டவர்களை அச்சமென்பது நெருங்கவே இயலாது. அப்படியிருந்தும் 'அம்ம நாம் அஞ்சுமாறே' என்று பாடுகிறார் என்றால், அதில் ஏதோ ஆழமான கருத்து இருக்க வேண்டும். பிற சமயவாதிகளைச் சுட்டுகிறார் என்பதைக் காட்டிலும் சைவசமயத்தில் உள்ள

போலிகளைமனத்தில் நினைந்தே இதனைப் பாடுகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. அது எவ்வாறாயினும் திருவாசகத்தின் போக்கிற்கு அச்சப் பத்து பொருந்துவதாகத் தெரியவில்லை.

மூன்றாவதாக உள்ளது திருப்படையாட்சி என்பதாகும். இதற்கு வாலாயமாகக் கூறும் பொருளை ஒதுக்கிவிட்டு, படை ஆட்சி என்பது பொறிபுலன்களை ஆள்வதாகும் என்ற முறையில் பொருள் கூறியுள்ளோம். இறைவன் வெளிப்பட்டால் இப்பொறிபுலன்கள் அவன்பால் ஈடுபடவேண்டும்; இன்றேல் இன்னல்களையே அடைய நேரிடும் என்பது இப்பகுதியின் திரண்ட பொருளாகும். இப்பதிகம் திருவாசகப் போக்கிற்கு முழுவதும் ஏற்புடையது அன்று ஆயினும், ஓரளவு பொருத்தமென்றே கூறவேண்டும். ஆகையால்தான் இதனை இத்தொகுப்பில் இறுதியாக வைத்துள்ளேன். திருவாசகத்தில் உள்ள 658 பாடல்களில் இந்த 28 பாடல்களும் இணையாது நிற்கின்றன. ஆகையால்தான் இணையாத பாடல்கள் என்ற தலைப்பு தரப்பெற்றுள்ளது.

## II. நீத்தல் விண்ணப்பம்

1. நீத்தல் விண்ணப்பம் (6)

இன்றுள்ள பதிப்புகளில் திருச்சதகத்தை அடுத்து 'நீத்தல் விண்ணப்பம்' இடம் பெற்றுள்ளது. இதில் உள்ள 50 பாடல்களும் இறைவன் தம்மை ஒதுக்கிவிட்டு மறைந்து விடக்கூடாது என்ற கருத்தில் அடிகளாரால் பாடப்பெற்றவையாகும். இப்பகுதியை முதலில் வைத்து எண்ணுவதற்குச் சில காரணங்கள் உண்டு. அடிகளார் வரலாற்றை அறிந்து கொள்வதில் எத்தனை குழப்பங்கள் இருந்தாலும் ஒன்றுமட்டும் நிச்சயம். அமைச்சர் ஒருவர் குதிரைமீது இவர்ந்து திருப்பெருந்துறைவழி வருகிறார். இறையடியார்கள் புடைசூழக் குருந்தமரத்தடியில் ஒரு

குருநாதர் அமர்ந்துள்ளார். அவருடைய தெய்வீக அலைகள் அமைச்சரை ஈர்த்து அவருடைய திருவடிகளில் விழுமாறு செய்கிறது. ஒரே விநாடியில், திருவடி தீட்சை பெற்றவுடன், அமைச்சர் மறைகிறார்; மணிவாசகர் தோன்றுகிறார். அந்த விநாடியில் தமக்குக் கிடைத்த இறையனுபவம் எத்தகையது என்பதையும் தம் உடலுக்குள் ஏற்பட்ட மாற்றம் எத்தகையது என்பதையும் அடிகளாரே விரிவாகப் பாடியுள்ளார். இந்தப் புதிய பிறப்பில், புதிய அனுபவங்களும் புதிய உணர்ச்சிகளும் புதிய ஆற்றலும் அந்தப் பழைய உடம்பிலேயே ஒரே விநாடியில் ஏற்றப்பெற்றுவிட்டன. கண்களை இறுக மூடிக்கொண்டு, இந்த இறையனுபவத்தில் மூழ்கித் திளைக்கின்ற அடிகளார், கண்களைத் திறந்தவுடன் ஒரு பேரதிர்ச்சிக்கு உள்ளாகிறார்.

எதிரே இருந்த குருநாதர், அவரைச் சுற்றியிருந்த அடியார்கள் யாவரும் மாயமாக மறைந்துவிட்டனர். இது கனவன்று, நனவு என்று அடிகளாரால் உணரமுடிகின்றது. அற்புதமான அமுத தாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றப்பெற்ற இந்த மாற்றம் இன்னும் அப்படியே இருக்கின்றது. இறையனுபவத்தில் திளைத்த மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்கனுள், மனம் மட்டும் அனுபவத்தை விட்டு வெளியே வந்துவிட்டது. குருநாதர் திருவுருவத்தையும் அடியார் கூட்டத்தையும் தம் ஊனக்கண்களால் கண்டதை எப்படிக் கனவு என்று கூறமுடியும்? குருநாதர் திருவடிகள் தம் தலைமேல் வைக்கப்பட்டிருந்ததையும் அத்திருவடிகளைத் தம் இரண்டு கைகளாலும் இறுகப் பற்றிக்கொண்டிருந்ததையும் எப்படிக் கனவு என்று கூறமுடியும்? அது கனவு அன்று;, நனவுதான் என்பதை அறிந்திருந்த மனம், இப்போது அவை காணப்படாமையால் பெரும் கலக்கத்தை அடைகிறது.

இந்த நிலையில் அடிகளார் மனத்தில் சில வினாக்களும் விடைகளும் தோன்றி மறைந்திருக்க வேண்டும். தாம் செல்லும் வழியில், திருப்பெருந்துறையில்,

குருந்த மரத்தடியில் ஒரு குருநாதர் இருப்பார், அவரெதிரே சிவனடியார்கள் அமர்ந்திருப்பார்கள் என்பதைத் திருவாதவூரர் நினைந்துகூடப் பார்த்ததில்லை. திடீரென்று தோன்றிய காட்சியையும், தம்மைக் குருநாதர் ஆட்கொண்ட சூழ்நிலையையும் நினைந்துபார்த்தபொழுது, இந்நிகழ்ச்சி தம் விருப்பத்தாலோ வேண்டுகோளாலோ கிடைத்ததன்று என்பதை அடிகளார் நன்கு உணர்ந்தார்.

குதிரைமேல் அமர்ந்து அமைச்சர் கோலத்தில் வந்த தம்மைச் சற்றும் எதிர்பாராத நிலையில் இழுத்துப் பிடித்து ஆட்கொண்டவர் குருநாதர் என்றால், இது எப்படி நடந்தது? நடைபெற்றவற்றிற்குத் தாம் ஒரு சிறிதும் பொறுப்பல்லர், குருநாதர் அருளாலேயே இவை நடைபெற்றன என்பது தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறது. இப்படி ஈர்த்து ஆட்கொண்ட குருநாதர் மறைந்து விட்டார் ஆதலால் 'ஐயா, நீ எங்கே போய்விட்டாய்? என்னை விட்டுவிட்டுப் போய்விடாதே' என்று கூறிக் கதறுகிறார்.

ஆக, திருப்பெருந்துறை நிகழ்ச்சி நடந்து முடிந்தவுடன் முதன்முதலாக அடிகளார் வாய்விட்டு அரற்றியது நீத்தல் விண்ணப்பமாக வெளிவந்தது. முதற்பாடலிலேயே தாம் கடையவன் என்றும் குருநாதர்தான் கருணை காரணமாகத் தம்மை ஆட்கொண்டார் என்றும் முதலிரண்டு அடிகளில் கூறிய அடிகளார் நான்காவது அடியில் தம்முடைய நிலையை ஒரே சொல்லில் மிக அற்புதமாக வெளிப்படுத்து கிறார். 'தளர்ந்தேன்' என்பதே அச்சொல்லாகும்.

'தளர்ந்தேன்' என்ற இச்சொல்லின் விரிவுதான் நீத்தல் விண்ணப்பத்தின் முதல் நாற்பத்தேழு பாடல்களில் *(105-151)* பேசப்பெறுகின்றது. அடுத்த இரண்டு பாடல்களில் *(152, 153)* இவருடைய மனநிலையில் ஒரு மாற்றத்தைக் காண முடிகிறது. தாம் தளர்ந்ததாகவும், தம்மை அவன் தாங்கிக் கொள்ளவேண்டும் என்று கெஞ்சிக் கூத்தாடுவதாகவும் பாடிக்கொண்டு வந்த அடிகளார், *152, 153* ஆம் பாடல்களில்

இந்த வழியையே மாற்றிவிடுகின்றார். 47 பாடல்கள் பாடுகின்றவரையில் அவன் எதிர்ப்படவும் இல்லை, தம்மைத் தாங்கிக் கொள்ளவும் இல்லை. எனவே கெஞ்சும் பாணியை விட்டுவிட்டு, புதிய முறையில் அவனை அச்சுறுத்துகிறார். 'நீ என்னை ஆட்கொள்ளாவிட்டால் உலகவர்முன் உன் மானத்தை வாங்கிவிடுவேன்' என்ற முறையில் பாடுகிறார். இவை இரண்டு பாடல்களும் நம்பிக்கை முற்றும் இழந்த நிலையில் தோன்றும் ஒரு புதுத் தைரியத்தில் (desperate courage) எழுந்த பாடல்களாகும்.

இந்த இரண்டு பாடல்களில் காணப்பெறும் தைரியம் 50வது பாடல் தொடங்குகையில் வடிந்துவிடுகின்றது. தம்மைத் தாமே நொந்துகொண்டு பழைய முறையில் கெஞ்சும் பாடலாக இறுதிப் பாடல் (154) வெளிப்படுகிறது. இதுவரை கூறியவற்றால் திருப்பெருந்துறை நிகழ்ச்சியை அடுத்து, ஏற்பட்ட அதிர்ச்சியால் பாடப் பெற்றவை நீத்தல் விண்ணப்பப் பாடல்கள் என்று அறியமுடிகின்றது. ஆகவே, திருவாசகம் நீத்தல் விண்ணப்பத்துடன்தான் தொடங்க வேண்டும் என்பதே இந்த ஆசிரியனின் சிந்தனையாகும்.

## III. இறைவன் பெருமை பேசுதல்

இதனுள் தொகுக்கப்பெறும் பதிகங்கள்:

1. கீர்த்தித் திருஅகவல்(2)
2. திருஅண்டப்பகுதி (3)
3. திருஏசறவு (38)
4. போற்றித் திருஅகவல் (4)

திருவாசகம் முழுவதுமே இறைவன் பெருமை பேசுகின்ற பாடல்கள்தாமே? அப்படியிருக்க இப்படி ஒரு தலைப்பைத் தந்து அதனுள் மேலே கூறிய நான்கைமட்டும்

அடைப்பதன் நோக்கமென்ன என்ற வினாத் தோன்றுவது சரியே. அடிகளாருக்கு இறையனுபவத்திலிருந்து மீண்டவுடன் முதலில் தோன்றியது அதிர்ச்சி என்று கூறினோம். அந்த அதிர்ச்சியின் வெளிப்பாடே நீத்தல் விண்ணப்பம் என்று கூறினோம்.

நீத்தல் விண்ணப்பத்தை அடுத்து மதுரைத் திருவிளையாடல்கள் நடைபெறுகின்றவரையில் கலங்கிய நிலையிலேயே அடிகளார் இருந்திருக்க வேண்டும். தம் சிறுமை கண்டும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் இறைவன் தம்மை ஆண்டுகொண்டான் என்ற நினைவு தோன்றியவுடன் தராதரம் பாராமல் பிற உயிர்களையும் அவன் ஆண்டுகொண்ட சிறப்பு நிகழ்ச்சிகள் அவர் மனத்திடைத் தோன்றுகின்றன. அதுவே கீர்த்தித் திருஅகவலாக வெளிப்படுகின்றது. அவன் கருணையை வெளிப்படுத்தும் பல கதைகள் கீர்த்தித் திருஅகவலின் முற்பகுதியில் இடம் பெறுகின்றன.

மானுட வடிவில் தமக்கு அருள் செய்த குருநாதர், மூலப் பரம்பொருளே என்பதை எளிதில் அறிந்து கொண்ட அடிகளார் பலருக்கும் பல இடங்களில் வெளிப்படாமல் தன்னை ஒளித்துக் கொண்டவன், திருப்பெருந்துறையில் தமக்கு எதிரே வெளிப்பட்டுக் காட்சி தந்தான் என்ற கருத்தை 'ஒளிக்கும் சோரனைக் கண்டனம்' (3-141) என்ற தொடரால் திரு அண்டப் பகுதியில் பேசுகிறார். இதனால் இறைவன் பெருமை பேசுதல் என்ற தலைப்பில் திரு அண்டப் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

ஒளிக்குஞ் சோரனைத் திருப்பெருந்துறையில் கண்டு விட்டதால் அடிகளாரின் பொறிபுலன்களில் ஏற்பட்ட மாற்றம் அளவிடற்கரியது. சுருங்கக் கூறின் காணாதன வெல்லாம் காணும் வாய்ப்பும் கேளாதனவற்றையெல்லாம் கேட்கும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டிவிட்டன. கருணையுடையவன், எளிவந்த தன்மையுடையவன் என்று

பேசும் தன்மையை விட்டுவிட்டு, புதிய காட்சியின்மூலம் அவனைக் காண்கிறார். அண்டம் அவருடைய காட்சிக்கு உட்படுகிறது. அந்த அண்டம் விரிந்து கொண்டே செல்வதும் அவருடைய காட்சிக்குத் தென்படுகிறது. வெகுவேகமாக விரிந்து பெரிதாகிக் கொண்டே செல்லும் இந்த அண்டத்தின் காட்சி கிடைத்தவுடன் அதனைவிடப் பன்படங்கு பெரியவனாகக் காட்சியளிக்கும் இறைவன் காட்சி கிட்டுகிறது. அவனோடு அண்டத்தை ஒப்பிட்டால் இந்த மாபெரும் அண்டம் இல்நுழை கதிரின் துன் அணுவாகச் சிறுத்துவிடுகிறது. அவன் பெருமையைப் பேசத் தொடங்குகையில் அவன் எளிமையாகக் கீர்த்தித் திரு அகவலிலும் அவன் பெருமையை அண்டப்பகுதியிலும் கூறினாராயிற்று. அவன் எவ்வளவு பெரியவனாய் இருந்தால் என்ன? சிற்றுயிர்களாகிய நமக்கு அவனால் ஏதேனும் பயன் உண்டா என்ற வினாவை எழுப்புபவருக்கு விடை கூறுவது போலத் திரு ஏசறவுப் பாடல்கள் அமைந்துள்ளன.

தம்முடைய பழைய வாழ்க்கையையும் இப்போது கிடைத்துள்ள புதிய வாழ்க்கையையும் அடிகளாரால் ஒப்பிடாமல் இருக்க முடியவில்லை. அமைச்சராக இருந்தபொழுது கடமையுணர்ச்சியால் உந்தப்பெற்ற அவருடைய மனத்தில், இரும்பு போன்ற திண்மை இருந்ததே தவிர, மென்மைக்கும் அன்புக்கும் அங்கு அதிக இடம் இல்லை. எனவே பழமையை நினைத்தவுடன் முதலில் அவருக்கு நினைவில் வருவது இரும்புபோன்ற மனம். அந்த முறையிலேயே 'இரும்புதரு மனத்தேனை' (546) என்று தொடங்கும் பாடலுடன் திருஏசறவுப் பதிகம் தொடங்குகிறது. இப்பாடலில் அடுத்துவரும் தொடர் 'என்பு உருக்கி' என்பதாகும். திருவாதவூரருக்குக் குருநாதர் திருவடியில் வீழ்கின்ற வரையில் இருந்தது இரும்புமனம். அந்த இரும்புமனத்தைக் குருநாதர் என்ற காந்தம்

கொஞ்சம் கொஞ்சமாக இழுத்தது. இழுத்தவுடன் என்ன ஆயிற்று? அந்த இரும்பு தரு மனம் உருகிற்று. அதுமட்டுமா உருகிற்று? அந்த மனம் குடிகொண்டுள்ள உடலின் எலும்புகள்கூட உருகிற்று. இப்படி உருகியதன் விளைவாக மணிவாசகர் என்ன கண்டார்? கரும்புதரு சுவையல்லவா கண்டதாகச் சொல்கிறார்? அப்படிக் கரும்புதரு சுவையாக இன்பம் தந்தது எது தெரியுமா? குருநாதரின் கழலிணைகள்.

கழலிணைகள் மூலம் கரும்பு தரு சுவையைத் தமக்குத் தந்தான் என்றால், இரும்புதரு மனத்தைக் கனிவித்தான் என்றால், எலும்பை உருக்கினான் என்றால், அவனுக்கு, தாம் என்ன செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு விடைகூறும் முகமாக போற்றித் திருஅகவலைப் பாடுகிறார். இந்த முறையில் முறைவைப்புப் செய்வதன்மூலம் தொடர்ந்துவரும் ஒரு காட்சி கிட்டுகிறதல்லவா? அதனால்தான் இந்த மூன்றாவது தொகுப்பில் கீர்த்தித் திருஅகவலை முதலாவதாகவும், அண்டப்பகுதியை இரண்டாவதாகவும், திரு ஏசறவை மூன்றாவதாகவும், போற்றித் திருஅகவலை நான்காவதாகவும் அமைத்துள்ளோம்.

## IV. உறுதிப்பாடு உணர்த்தல்

நான்காவதாக உள்ளது உறுதிப்பாடு உணர்த்தல் என்ற தலைப்பாகும். இதனுள் எட்டுப் பதிகங்கள் இடம்பெறுகின்றன.

1. திருச்சதகம் (5)
2. திருப்பாண்டிப் பதிகம் (36)
3. குலாப் பத்து (40)
4. திருவார்த்தை (43)
5. உயிருண்ணிப் பத்து (34)

6. திருப்புலம்பல் (39)

7. சென்னிப் பத்து (42)

8. பிடித்த பத்து (37)

நீத்தல் விண்ணப்பத்தில் அஞ்சி நடுங்கி நொந்த மனத்துடன் 'என்னை விட்டுவிடாதே, ஐயா' என்று தொடங்கினார், அவனுடைய எளிவந்த தன்மை முதலியவற்றை அறிந்து, கீர்த்தித் திருஅகவல், அண்டப்பகுதி என்பவற்றைப் பாடினார். அடுத்துத் திருஏசறவையும் பாடிமுடித்தபின் தாம் செய்யவேண்டியது என்ன என்பதை நன்கு உணர்ந்துகொண்டராதலின், 'போற்றி போற்றி' என்று வணங்குவதைவிட வேறு செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்ற முடிவுடன் திருச்சதகத்தைத் தொடங்குகிறார். தொடக்கத்தில் இரண்டு செயல்கள் நடைபெறுகின்றன. கைகள் தலைமேல் ஏறி நெகிழாமல் கோத்து நிற்கின்றன.

இத்தொகுப்பினுள் முதலாவதாக நிற்பது திருச்சதகம். திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப்பின்னர் நரி பரியாகிய நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும். மூன்று அகவல்களில் மணிவாசகரின் வளர்ச்சியைக் காணமுடிந்தது அல்லவா? இப்பொழுது அந்த வளர்ச்சிக்கு எவ்விதத் தளர்ச்சியும் ஏற்படாமல் ஓர் உறுதிப்பாடு அவர் மனத்திடைத் தோன்றிவிட்டது. திருச்சதகத்தின் முதற்பாடலில் (5) சித்தத்தின் உள்ளே தோன்றிய உறுதிப்பாட்டையும் அதன்பின் உடம்பில் தோன்றிய மாறுபாட்டையும் வரிசைப்படுத்திப் பேசுகிறார். இறையன்பில் தோய்ந்த ஒருவருடைய உடல் என்ன என்ன மாற்றங்களை அடையும் என்பதை வரிசைப்படுத்தி இப்பாடலில் கூறுகிறார். உறுதிப்பாடு உடலில் எங்கே வெளிப் படுகிறது என்ற வினாவிற்கு விடைகூறுவார்போல் 'கைதான் நெகிழவிடேன்' என்ற தொடரைப் பயன் படுத்துகிறார்.

கூப்பிய கைகளை நெகிழ விடமாட்டேன் என்ற சொற்கள் உள்ளத்தில் தோன்றிய உறுதிப்பாட்டின் வெளிப்பாடாகும்.

'கையை நெகிழ விடமாட்டேன்' என்ற உறுதிப் பாட்டை வெளிப்படுத்திவிட்டு 'என்னைக் கண்டுகொள்ளே' என்ற விண்ணப்பத்தையும் வைக்கின்றார். இந்த உறுதிப்பாடும் விண்ணப்பமும் என்ன பயன் தந்தன என்பதையும் திருச்சதகத்தின் 99 ஆம் பாடலில் 'மாலும் நான்முகத்தொருவன் யாரினும் முன்ன எம்பிரான் வருக என்னெனை' (103) என்ற தொடரில் வெளிப்படுத்துகிறார்.

உறுதிப்பாடு என்னும் தலைப்பில் இரண்டாவதாக அமைவது திருப்பாண்டிப் பதிகம் ஆகும். திருப்பெருந் துறையில் மானுட வடிவில் இருந்த குருநாதரையும் அவர் திருவடிகளையும் கண்டு வணங்கினாரல்லவா? பின்னர் நூற்றுக்கணக்கான குதிரைகளோடு குதிரைச்சேவகன் ஒருவன் வருகின்றான். அவன் யார் என்பது மக்களுக்கோ மன்னனுக்கோ தெரியவில்லை. ஆனால், அடிகளாருக்குக் குதிரைச் சேவகன் யார் என்று புரிந்துவிட்டது. குருநாதர் திருவடிகள் நிலத்தில் தோய்ந்திருந்தன. ஆனால், குதிரைச் சேவகன் திருவடிகள் குதிரையின் அங்கவடியில் நுழைக்கப்பட்டிருந்தன. அதனைக் கண்டவுடனேயே இது பழைய திருவடிதான் என்று அடிகளாரின் உள்ளம் உணர்த்திற்று. ஆகவே, இப்பரிமேல் வந்த சேவகனார் 'ஒருவரையன்றி உருவறியாது என்றன் உள்ளமதே' என்று பாடுகிறார். எத்தகைய உறுதிப்பாடு உள்ளத்தே இருந்தால் இவ்வாறு பாடமுடியும்!

அடுத்தபடியாக, உறுதிப்பாடு வெளிப்படுவது குலாப் பத்திலாம். இப்பொழுது அடிகளார் புறவுலகிலுள்ள எந்தப் பொருளையும் பற்றிய இயல்பு, தன்மை என்பவற்றை அறியும் அறிவை இழந்துவிட்டார். கையிலிருப்பது ஓடு, கவந்தி என்னும் இரண்டே இரண்டு பொருள்கள்தான். குலாத்தில்லை ஆண்டவனின் அருளால் பெற்ற பயன்

என்ன? ஓடு, கவந்தி என்ற இரண்டுமட்டுமே எஞ்சிய பொருள்கள் என்பதை அறிய முடிந்தது; உள்ளம் கசிய முடிந்தது; தேடும் பொருள் ஒன்று இருக்குமேயானால் அது சிவன்கழலே என்ற உறுதி பிறந்தது என்ற முறையில் இப்பதிகம் செல்வதால் இதனை மூன்றாவதாக வைத்தோம்.

இனி, அடுத்து வைத்திருப்பது திருவார்த்தை என்ற பதிகமாகும். எல்லையற்ற உறுதிப்பாடும் உருகும் உள்ளமும் கொண்ட அடிகளாருக்கு, முன்னர் இருந்த பசுகரணங்கள் நீங்கி இப்போது பதிகரணங்களாக மாறிவிட்டன. கருவிகளில் ஒன்றாகிய கண்ணின்மூலம் புறத்தே உள்ள பிறரைக் காண்கிறார் அடிகளார். திருவாதவூரராக இருந்தபொழுது பதவி, செல்வம், அதிகாரம் என்பவற்றால் சூழப்பெற்றிருந்த மக்களை உயர்ந்தவர்கள் என்றும் அவை இல்லாதவர்களைச் சாதாரண மக்கள் என்றும் கருதியிருந்தார். இந்த வேறுபாட்டைத் தவிர வேறு எத்தகைய வேறுபாடும் அவர் மனத்திலோ உள்ளத்திலோ தோன்றியதில்லை. அந்த நிலையில் பிரான் என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பெற்றவன், இறைவன் ஒருவனைத்தவிர, அரசன் ஒருவனே ஆவான். காரணம் அவரால் மதிக்கப்படவேண்டியவர்கள் வேறு யாருமில்லை.

இப்போது நிலைமை மாறிவிட்டது. பசுகரணப் பார்வையில் பிரான் என்று ஏற்றுக்கொள்ளப்பெற்றவன் இப்பொழுது பொருளாகவே மதிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, பல பிரான்கள் காட்சியளிக்கின்றனர். இவரைப்போலவே ஓடும் கவந்தியுமே உறவு என்று இருப்பவர்கள் அவர்கள். இது அவர்களுடைய புறத்தோற்றம். மாதிவர் பாகன், மறை பயின்ற நாயகன் எங்கோ கயிலையில் இருக்கிறான் என்று பலரும் கருதுகிறார்கள். திருப்பெருந்துறையில் மண்ணிடை வந்திருந்து மானுட வடிவத்தில் குருந்த மரத்தடியில் இருந்தவன் வேறு யாருமல்லன் - அவனே ஆதிபிரம்மம்; அவனே மாதிவர் பாகன்; அவனே மறைபயின்ற நாயகன்

என்பதை இவரைப் போலவே தெரிந்து கொண்டவர்கள் இவர்கள். தெரிந்துகொண்டாலும் இவர்கள் அதனை யாரிடமும் வெளிப்படுத்திப் பேசுவதில்லை.

ஏனையோர் இவர்களை இனங்கண்டுகொள்வதும் கடினம். ஆனால், அடிகளார் இந்த இனத்தைச் சேர்ந்தவர் ஆதலால் இவர்களை இனங்கண்டுகொண்டார். அவ்வாறு கண்டுகொண்டபிறகு அவர்களுடன் சமத்துவமாக உரிமை பாராட்ட அடிகளார் தயாராக இல்லை. அதற்குப் பதிலாக அவர்களைப்பற்றித் தாம் என்ன நினைத்தார் என்பதை 'ஆதிப்பிரம்மம் வெளிப்படுத்த அருளறிவார் எம்பிரானாவாரே' (589) என்று பேசிச் செல்கிறார். 'மண்ணிடை வந்த ஒருவனை ஆதிபிரம்மம் என்று அறிந்தவர்களை தம்மால் வணங்கப்படும் பிரான்' என்று அடிகளார் கூறுவது அவர் உறுதிப்பாட்டின் மற்றொரு வளர்ச்சி நிலையைக் குறிக்கிறது. மானுடம் பாடாத அடிகளார் ஒரு சிலரைமட்டும் பார்த்து, இவர் எம் பிரானாவார் என்று கூறுவாரேயானால் அந்த ஒரு சிலர் எத்தகையவராக இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு பாடலிலும் பாடுகிறார். மதுரையில் வந்தியின் பிட்டை உண்டு அவளுக்கு வீடு அளித்தவனை, மதுரையின் மங்கையர் மனங்கவர்ந்த குதிரைச்சேவகனை, மீன்வலை வீசிய கானவனை யார் என்று அறிந்தவர்கள் எம் பிரானாவார் என்று அடிகளார் கூறுவதில் வியப்பொன்றுமில்லை.

அடுத்து நிற்பது உயிருண்ணிப் பத்தாகும். இதில் வரும் சில தொடர்கள் அடிகளாரின் உறுதிப்பாடு வளர்ந்து எந்த நிலையை அடைந்துள்ளது என்பதை அறிவிக்கின்றன. 'வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்' (512) என்ற தொடராலும் 'சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறை தாள் பூண்டேன் புறம் போகேன் இனிப் புறம்போகலொட்டேனே' என்ற தொடர்களாலும் உறுதிப்பாட்டை நன்கு அறியலாம்.

உயிருண்ணிப் பத்தில் 'செல்வம் முதலியவற்றை வேண்டேன்' என்றும், திருப்புலம்பலில் 'உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்' என்றும் கூறியவர் உயிருண்ணிப் பத்தில் திருப்பெருந்துறையில் உறைபவன் ஆகிய இறை தாள்களைப் பூண்டேன் என்று வலுவாகக் கூறியமையால் இதனை அடுத்துச் சென்னிப் பத்தை வைக்கின்றோம். 'தாள் பூண்டேன்' என்று கூறினால், குருநாதர் திருவடிகளை எங்கே பூண்டார்? அவர் திருவடிகளைச் சில வினாடிகள் தம் தலையில்தானே ஏற்றுக்கொண்டிருந்தார்? அந்தத் திருவடி அடிகளார் தலைமீது அமர்ந்திருந்தது சில வினாடிகள்தான் என்றாலும், அது எப்போதும் தலைமேல் இருப்பதுபோன்ற ஓர் உணர்வை அடிகளாரிடம் உண்டாக்கிவிட்டது.

ஒவ்வொரு வினாடியும் அத்திருவடிகள் தலைமேல் தங்கியிருந்ததை நினைத்துக்கொண்டே இருக்கின்றார். அப்பொழுது ஒரு புதிய பரவசம் அவர் உள்ளத்தில் தோன்றுகிறது. அதனையே 'என் சென்னிக்கண் திருவடி மன்னி மலருமே' என்று ஒவ்வொரு பாடலிலும் பாடுகிறார். இத்தொடரில் உள்ள ஒரு நுணுக்கத்தையும் மனத்தில் கொள்ளுதல் நலம். மலரைத் தாங்கிய தாமரைத் தண்டு நல்ல வளப்பம் பொருந்திய சேற்றில் ஆழப்பதிந்திருந்தால்தான், மேலே உள்ள தாமரை மலர் நன்கு மலர்ந்து மணம் பரப்பும். மற்றொரு வகையாக இதனைக் கூறுமிடத்து மலர் நன்கு மலர்ந்திருக்கிறது என்றால், தண்டு பதிந்துள்ள சேற்றுப் பகுதி வளமானது என்பது பெறப்படும். அதேபோலச் சென்னிக்கண் திருவடியாகிய மலர் நிலைபெற்று மலர்ந்து உள்ளது என்றால், அதன் பொருள் என்ன? அந்தத் திருவடி தங்கியுள்ள இவரது தலை அத்திருவடிகள் மலர்வதற்குத் தக்க இடமாக அமைந்துள்ளது என்பதுதானே பொருள்? சென்னிக்கண் திருவடி மன்னி மலருமே என்று கூறியதால் தலையில் தங்கியபொழுது அத்திருவடி மலர்கின்றது

என்பதை அடிகளாரே உணர்ந்துள்ளார் என்ற கருத்துப் புலானாகின்றது. இறையனுபவத்தில் தோய்ந்து, நீங்காது நிற்கும் நிலையில்தான் அடிகளாரின் தலை, இறைவன் திருவடி தங்குவதற்கும் மலர்வதற்கும் பொருத்தமுடையதாக அமைகின்றது. எனவே, அவர் உறுதிப்பாட்டின் வளர்ச்சியில் இதுவும் ஒரு படியாகும்.

உயிருண்ணிப் பத்துக்கு அடுத்துக் காணப்பட வேண்டியது திருப்புலம்பல் ஆகும். இந்தத் தலைப்பு சற்றும் பொருத்தமில்லாதது என்பதை இப்பதிகத்தின் முன்னுரையில் கூறியுள்ளோம். உயிருண்ணி 7ஆம் பாடலில் (512) புகழ் முதலியவற்றை வேண்டேன் என்று கூறியவர், இன்னும் ஒரு படி மேலே சென்று உற்றார் உறவினர் முதலியவர்களையும் வேண்டேன் என்று ஒதுக்கிவிட்டார். சாதாரண நிலையிலுள்ள சராசரி மனிதனிலிருந்து மிக உயர்ந்த நிலையை அடைந்திருக்கும் மனிதன்வரை அடிகளார் கூறிய புகழ் (fame), செல்வம், மண், பிறப்பு, இறப்பு, உற்றார், ஊர், பேர்(name) ஆகியவற்றிலிருந்து விடுபடுதல் ஏறத்தாழ இயலாத காரியம். துறவு நிலையை அடைந்தவர்கள்கூடப் புகழ் என்னும் பொன் தூண்டிலிலிருந்து விடுபடுவது கடினம். இந்த இரண்டு பாடல்களிலும் இவற்றை வரிசைப்படுத்திக் கூறி, வேண்டேன் என்று முடிவாகக் கூறிவிட்டமையின் அடிகளாரின் உறுதிப்பாட்டு வளர்ச்சியை நன்கு அறியமுடிகிறது. இவற்றிலிருந்து விடுபட்ட ஆன்மாவும், அதனோடு தொடர்புடைய உடம்பு, தலை என்பனவும் எவ்விதப் பந்தமும் இன்றி விடுதலை பெற்றுத் திகழ்கின்றதாதலின், அத்தலை இறைவன் திருவடி தங்கி மலரச் சிறந்த இடமாக அமைகின்றது.

குருநாதரின் திருவடிகள் எல்லா நேரத்திலும் தம்முடைய சென்னிக்கண் மலர்வதை உணர்ந்துவிட்டார்; ஆதலின், இப்பொழுது வாக்கு மனோலயம் கடந்து நிற்கும்

அத்திருவடியைக் கைகளால் பிடித்துக்கொள்ள முயல்கிறார். திருவடி எங்கோ இருந்தால் அதனைப் பற்றிக் கொள்வது கடினம். ஆனால், சென்னிக்கண் நிலைபேறாகத் தங்கி எப்போதும் மலர்ந்து நிற்கும் அத்திருவடிகளைக் கைகளால் பற்றிக்கொள்வது எளிதாகிவிட்டது. கீழே தொங்கும் கைகளை மேலே தூக்கி, அத்திருவடிகளைப் பற்றவேண்டும் என்ற முயற்சிகூட அடிகளாருக்குத் தேவைப்படவில்லை காரணம் கைகள் முன்னரே தலைமேல் கோக்கப்பட்டிருந்தன..

திருச்சதகத்தின் முதற்பாடலில் 'கைதான் நெகிழ விடேன்' என்றல்லவா பாடியுள்ளார்? தலைமேல் கோக்கப்பட்ட கைகள் என்றும் விடுபடப்போவதில்லை என்பதைத்தானே 'நெகிழவிடேன்' என்று கூறினார்? அப்படியானால் இந்தக் கைகள் எங்கே கோக்கப்பட்டிருந்தன? இதற்கு விடையும் அந்தப் பாடலிலேயே 'கைதான் தலைவைத்து' என்ற தொடரால் குறிப்பிட்டுவிட்டார்.

இந்தப் புறச்செயலுக்கு ஈடாக அகத்திலும் ஒரு செயல் நடைபெறுகின்றது. 'உள்ளம் பொய்தான் தவிர்ந்து போற்றி செயசெய' என்று வாய் வாழ்த்துகிறது. அதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றும் ஒரே திசையில் செல்கின்றன என்பதைச் சதகத்தின் இந்த முதற்பாடல் விளக்கிவிட்டதாகலின் இதனை உறுதிப்பாட்டின் தொடக்கம் என்று கூறினோம்.

மனம், மொழி, மெய் என்ற மூன்றும் ஒரே செயலில் ஈடுபடுகின்றன என்றாலும் இவையனைத்தும் அடிகளாரின் உள்ளத்தையும் உடலையும் பொறுத்தனவேதவிர, வேறு ஒருவருக்கும் இங்கு இடமில்லை. கையை நெகிழ விடமாட்டேன் என்று தம் உறுதிப்பாட்டை வெளிப்படுத்திய அடிகளார், தொடர்ந்து அதே பாடலில் 'உடையாய் எனைக் கண்டுகொள்ளே' என்ற வேண்டுகோளையும் இறுதியில் வைக்கின்றார்.

இந்த வேண்டுகோள் நிறைவேறியதா? அடிகளாரின் உறுதிப்பாட்டின் வளர்ச்சியில் இந்த வேண்டுகோள் எந்த அளவிற்கு நிறைவேறியது என்பதை அறிவிப்பதே பிடித்த பத்தாகும்.

நெகிழவிடாமல் தலைமேல் குவித்திருந்த தம் கையிருந்த இடத்தில் திருவடி மன்னி மலர்வதைக் கண்டார். உடனே அதனை இறுகப் பற்றிக்கொண்டார். திருச்சதகத்தின் முதற் பாடலில் அடிகளாரின் நிலை மூன்று அடிகளில் பேசப்பெற்றது. இப்பொழுது பிடித்த பத்தில் அவருடைய நிலை மாறவேயில்லை. ஆனாலும், என்ன புதுமை! நெகிழவிடாத இவர் கைகளினுள் ஏதோ ஒன்று சிக்கிக்கொண்டது. இப்போது அடிகளார் என்ன செய்தார்? சாதாரண மனிதர்களைப் பொறுத்தமட்டில் முன்பின் தெரியாத ஒன்று கைக்குள் அகப்பட்டால் நம் முதலாவது செயல் கைகளை உதறி அப்பொருளை எறிந்து விடுவதே ஆகும். ஆனால், அடிகளார் நம்மிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர் அல்லவா? அவர் என்ன செய்தார்? தலையின்மேல் நெகிழவிடாதிருந்த கைகளுக்குள் குருநாதரின் திருவடி சிக்கிக்கொண்டது என்பதை உணர்கின்றார். அந்தத் திருவடிகளைச் 'சிக்கெனப் பிடித்தேன்' என்று சொல்லிக்கொண்டே இறுகப் பற்றிக்கொள்கிறார். இவ்வாறு கூறியது சரி! அத்திருவடிகளையும் அவற்றையுடைய அத்தலைவனையும் பார்த்து 'என்னை விட்டு நீ எங்கே போய்விடமுடியும்?' 'எங்கெழுந்தருளுவது இனியே' என்று பாடுவது முறையா?

தம்முடைய கூப்பிய கரங்களுக்குள் திருவடி வந்து சிக்கியவுடன் இறுகப் பற்றிக்கொண்ட அடிகளார் திருவடிக்குரியவனைப் பார்த்து, 'எங்கே, என் பிடியிலிருந்து தப்பிவிடு, பார்க்கலாம்' என்று கூறுவதுபோலச் சவால் விடுதல் முறையா என்ற வினாத் தோன்றினால், 'அது முறைதான்' என்ற விடையே கிடைக்கும். பொய் தவிர்ந்த

உள்ளம்; செயசெய போற்றி என்னும் வாய்; சென்னிமேல் அமைந்துள்ள நெகிழாத கைகூப்பு; - வியர்த்து நடுங்கும் உடல்; அருவிபோல் நீர்பெருகும் கண்கள்; - இறைவனின் விரையார் கழலைப் பதித்த நெஞ்சு; இந்த முறையில் ஒரு பக்தர் நிற்கிறார் என்றால், பக்தி வலையிற் படுபவனாகிய இறைவன் இவரைவிட்டு எங்கே போகமுடியும்? அடிகளாரின் வலைப்பின்னலில் வசமாக் மாட்டிக்கொண்டான் அவன். ஆதலால்தான், 'உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே' என்று பிடித்த பத்தின் பத்துப் பாடல்களிலும் அருளிச் செய்கின்றார்.

அடிகளாரின் உறுதிப்பாட்டின் வளர்ச்சியைத் திருச்சதகம், திருப்பாண்டிப் பதிகம், குலாப் பத்து, திருவார்த்தை, உயிருண்ணிப் பத்து, திருப்புலம்பல், சென்னிப் பத்து, பிடித்த பத்து என்ற வரிசை முறையில் வைத்துக் காணலாம்.

## V. கூடிப்பாடி ஆடுதல்

இத்தொகுப்பினுள் கீழ்க்காணும் பத்துப் பதிகங்கள் இடம் பெற்றுள்ளன:-

1. திருஅம்மானை (8)
2. திருத்தெள்ளேணம் (11)
3. திருத்தோணோக்கம் (15)
4. திருப்பொற்சுண்ணம் (9)
5. திருப்பூவல்லி (13)
6. திருப்பொன்னூசல் (16)
7. திருச்சாழல் (12)

*8. திருவுந்தியார் (14)*

*9. திருவெம்பாவை (7)*

*10. திருப்பள்ளியெழுச்சி (20)*

*திருபள்ளியெழுச்சி தவிர மற்ற அனைத்தும் மகளிர் விளையாட்டேயாகும்.*

*ஆறு அல்லது ஏழு வயதுச் சிறுமியில் தொடங்கி 17, 18 வயதுக் குமரிவரை உள்ள பெண்கள் விளையாடும் விளையாட்டுக்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. அம்மானை விளையாட்டைச் சற்று முதிர்ந்த வயதுடைய பெண்களும் ஆடுவார்களேயாயினும் மிக இளம் சிறுமி களுக்குமட்டும் உரிய விளையாட்டு என்றே இதனைக் கூறவேண்டும். இச்சிறுமிகளுக்கு அடுத்த பருவத்தில் உள்ள சிறுமிகள் பறை போன்ற ஒரு வாத்தியத்தைக் கையில் வைத்துத் தட்டிக்கொண்டு விளையாடும் விளையாட்டே திருத்தெள்ளேணம் ஆகும். அடுத்துள்ள தோணோக்கம் மூன்றாவது நிலையிலுள்ள ஓரளவு வளர்ச்சி பெற்ற சிறுமிகள் விளையாடும் விளையாட்டாகும். இனி அடுத்துள்ள பொற்சுண்ணம், பூவல்லி, பொன்னூசல் என்பவை உலக்கை பிடித்து இடிக்கும் உடல் வன்மையும், ஊஞ்சலில் ஏறிக் காலைத் தரையில் ஊன்றி விளையாடும் ஆற்றலும் பெற்ற மகளிர் விளையாடும் விளையாட்டாகும். மரத்தில் பற்றிப் படர்ந்துள்ள கொடிப் பூக்களை எம்பிப் பறிக்கும் உடற்கூறு உடையவர்களே பூவல்லி விளையாட்டிற்குத் தகுதியானவர்கள் ஆறு வயதில் தொடங்கி 14 அல்லது 15 வயதுவரை உள்ள சிறுமிகள் விளையாடும் விளையாட்டுக்களே இந்த ஆறிலும் இடம்பெற்றுள்ளன.*

*இவர்களைவிட வளர்ச்சியடைந்தவர்கள் விளையாடும் விளையாட்டுக்கள் சாழல், உந்தியார் என்பவையாகும். இவையிரண்டும் வெறும் உடல் விளையாட்டோடு*

நில்லாமல் உரையாடலிலும் தேர்ச்சி பெற்றவர்கள்மட்டுமே விளையாடும் விளையாட்டுக்கள் ஆகும். அடுத்துள்ள திருவெம்பாவை திருமணப் பருவத்திலுள்ளவர்கள் மட்டுமே விளையாடும் விளையாட்டாகும்.

இவை ஒருபுறமிருக்க, 658 பாடல்கள் உள்ள திருவாசகத்தில் சிறுமிகள், மகளிர் என்பவர்களுடைய விளையாட்டுக்களுக்காக 163 பாடல்கள் பாடப் பெற்றுள்ளன என்றால், இதைப்பற்றிச் சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்த எண்ணிக்கைகூடச் சரியானது என்று சொல்வதற்கில்லை. திருத்தோள் நோக்கத்தில் 20 பாடல்களுக்குப் பதிலாகப் பதினான்கே கிடைத்துள்ளன. திருப்பொன்னூசலில் பத்தாவது இருந்திருக்க வேண்டும். அதிலும் ஒன்று குறைந்திருக்கிறது. எது எவ்வாறாயினும் திருவாசகத்தில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி சிறுமி களுக்கும் மகளிர்க்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்பாற் பிள்ளைத் தமிழ் தவிர வேறு எந்த நூலிலும் மகளிர்க்காக நூலில் நான்கில் ஒருபகுதி ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திருவாசகத்தின் தனித்துவத்திற்கு இதுவும் ஒரு சான்றாகும். இந்த நிலையில் மகளிர் விளையாட்டு அடிப்படையில் இத்தனை பாடல்களை அடிகளார் பாடியுள்ளார் என்றால் - இதுபோன்ற அமைப்புமுறை அந்நாளில் தோன்றிய நூல்களில் இல்லை என்றால், அடிகளார் ஏன் இவற்றைப் பாடினார் என்ற வினாவை எழுப்பிக்கொண்டு விடைகாண முற்படுவதில் தவறில்லை.

தமிழும் சைவமும் இணைந்து வளர்ந்த மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டில் ஆலவாய்ச் சொக்கனே தனக்குரிய பழம்பதியாகக் கொண்ட பாண்டிநாட்டில் சைவ சமயம் 9ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தளர்ந்து மெலிந்துபோயிருந்தது. சங்கரருடைய அத்வைதம், மகளிர்க்குச் சமத்துவம் தராத சமணம் ஆகியவை பெருவழக்கில் இல்லாவிட்டாலும் ஆங்காங்கே தலைதூக்கி நின்றன.

இந்தக் கால கட்டத்தில் பெரும் கல்வியாளராகவும் பாண்டி நாட்டின் அமைச்சராகவும் இருந்த திருவாதவூரர் நாட்டைச் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பைப் பெற்றிருக்க வேண்டும். சோழர்கள் பெரிய அளவில் இன்னும் தலைதூக்கவில்லை என்றாலும், சோழ நாட்டிலிருந்த சைவ ஆதிக்கம் பாண்டி நாட்டில் இல்லாமல் இருந்திருக்க வேண்டும். இது ஒருபுறமிருக்க, அடிகளாருக்கு ஒரு நூற்றாண்டு முன்னர் வாழ்ந்த பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் என்ற வைணவப் பெரியார்கள் பாண்டிநாட்டிலே தோன்றி வளர்ந்து வைணவ சமயத்திற்கு ஆக்கம் சேர்த்தனர். அன்றைய பாண்டி நாட்டின் சமயநிலை இதுதான்.

இந்தச் சூழ்நிலையில் 'அருபரத்தொருவன் அவனியில் வந்து குருபரனாகி' (4:75-76) ஆண்டுகொண்டதால் அமைச்சராகிய திருவாதவூரர், மணிவாசகராக மாறினார். இறையனுபவத்தில் முங்கித் திளைத்த அடிகளார் மனத்தில் உறுதிப்பாடு தோன்றி வெகுவேகமாக வளரத் தொடங்கியது. அருள் பெற்ற நிலையில், பாண்டி மக்களையும் யாத்திரை செய்யும்போது சோழ நாட்டு மக்களையும் கண்ட அடிகளார், ஒரு வகையில் திகைப்படைகிறார். சொக்கன் மண் சுமந்த மதுரையும், மூவர் முதலிகள் ஏராளமான பண்கள் பாடிய சோழநாடும் சமய வாழ்க்கையில் கவனம் செலுத்தாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று சுற்றித் திரிந்தது. வலுவான பாண்டி மன்னனோ இல்லை. சோழ நாட்டில் பல்லவர் காலம் முடிந்து சோழர்கள் இன்னும் வலுவாகக் கால் ஊன்றவில்லை. இந்த நிலையில் சைவசமயத்தைக் கட்டிக் காக்க வலுவான ஆட்சி இரண்டு இடத்திலும் இல்லை.

மக்களிடையே சைவசமயத்தைப் பரப்புவதற்கு இரண்டு வழிகள் உண்டு. மூவர் முதலிகள்போல்

செயற்கரும் செயல்களைச் செய்து, மக்கள் கவனத்தை ஈர்த்துத் திருக்கோயில்களுக்குச் சென்று பாடிச் சமயத்தை வளர்க்கும் முறை ஒன்று. நாவரசர் பெருமான் காரணமாக மகேந்திர வர்மன் தான் பின்பற்றியிருந்த சமயத்தைவிட்டு சைவத்திற்கு மாறியதை உலகறிய திருச்சிராப்பள்ளி மலையின் அடிவாரத்தில் உள்ள குகைக்கோயிலில் குறித்தான். அதேபோலப் பாண்டியன் நெடுமாறனும் திருஞானசம்பந்தர் காரணமாகச் சைவ சமயத்திற்கு மாறியதால், சைவ சமயம்பற்றிய புத்துணர்ச்சியும் உத்வேகமும் தோன்றலாயின. மூவர் முதலிகள் காலத்தில் பல்லவர்களும் பாண்டியரும் இருந்தார்களேதவிரப் பெயர் சொல்லத்தக்க சோழர் யாரும் இல்லை. அப்படி இருந்தும் மூவர் முதலிகளின் செல்வாக்கால் சைவம் தழைத்தது.

அடிகளார் தோன்றிய ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்நிலை மாறிவிட்டது. எனவே, மக்கள் மனத்தில் இறையுணர்வைத் தோற்றுவிக்க வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. இந்நிலையில் அடிகளாரைப் பொறுத்தமட்டில் இரண்டு வழிகள் தென்படலாயின. மூவர் முதலிகளைப்போல ஊர் ஊராகச் சென்று திருக்கோயிலில் மக்களைக் கூட்டி இறைவன் புகழைப் பாடுவது ஒரு வகை. அப்படிப் பாடுகின்றவர்கள் இறையருளால் மாபெரும் ஆற்றல் பெற்றவர்களாய் இருந்தனர். அடிகளாருடைய வரலாற்றில் மக்களை ஈர்க்கும் முறையில் எந்த ஒரு செயற்கரும் செயலையும் செய்ததாகத் தெரியவில்லை. திருவாசகத்திலும் அதற்குரிய சான்றுகள் எதுவும் இல்லை. நரி பரியாகியதும் வைகையில் வெள்ளம் வந்ததும், சொக்கனுடைய திருவிளையாடல்களாகக் கருதப்பெற்றனவேதவிர அடிகளார் இவற்றில் நேரடித் தொடர்பு கொண்டவர் என்பதை மக்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இம்மட்டோடில்லாமல் ஓர் அரசரின் தலைமை அமைச்சராக இருந்த ஒருவர் அதனைத் துறந்து

ஆண்டியானார் என்றால், பெரும்பாலான மக்கள் இதன் உட்கருத்தைப் புரிந்துகொள்ளாமல் அடிகளார் காது கேட்கும்படியாகவே அவரைப் பைத்தியம் என்று எள்ளி நகையாடினர். இந்த மனநிலையிலுள்ள மக்களைத் திருத்திப் பணிகொள்ளுதல் முடியாத காரியம். அன்றியும் அவருக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் புறத்தாருக்குத் தெரியும்படியாக நிகழவில்லை. நாவரசர் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை மக்கள் கண்கூடாகக் கண்டனர். ஆனால் அடிகளார் வாழ்க்கையில் நடந்த மாற்றத்தை அவரைத் தவிர வேறு யாரும் காணவில்லை.

இத்தகைய காரணங்களால் மக்களை ஈர்த்து, தம் வயப்படுத்தி, சமயநெறியில் செலுத்தும் வழியை அடிகளார் மேற்கொள்ளாததில் வியப்பொன்றுமில்லை. அப்படியானால், இந்த மக்களைத் திசைதிருப்ப வேறு எந்த வழியைக் கையாளுவது? வேறு எந்த நூலிலும் காணப்பெறாத முறையில் தாம் பெற்ற இறையனுபவத்தை, இறைப்பிரேமையை அடிகளார் பாடியுள்ளது உண்மைதான். இதனைப் படிக்கின்ற மக்கள்கூட ஈடுபாட்டைப் பெறவில்லை. காரணம், இப்பாடல்களைப் பாடியவர் பைத்தியம் என்று மக்கள் கருதியிருந்ததால், இப்பாடல்களின் அருமைப்பாட்டை அப்பொழுது அவர்கள் அறியவில்லை.

இப்படியுள்ள மக்கள் கூட்டத்தை மாற்றுவழியில் திருப்ப வேண்டும் என்றால், புதியதொரு உத்தியைக் கையாள வேண்டும். அமைச்சராக இருந்து நாடு முழுவதும் சுற்றித் திரிந்த அடிகளார், ஒரு மனவியல் உண்மையை நன்கு அறிந்துகொண்டார். வயது வந்தவர்களைத் திருத்துவதைக் காட்டிலும், மிக இளஞ்சிறுமிகளைப் பயன்படுத்தினால் இது எளிதில் நடைபெறலாம். ஒரு சிறுமியைத் திருத்துவதன்மூலம் ஒரு குடும்பத்தையும் சுற்றியுள்ளவர்களையும் திருத்தமுடியும் என்ற உண்மையை

அறிந்துகொண்ட அவர், தம்முடைய அருட்பாடல்களில் நான்கில் ஒரு பங்கைச் சிறுமிகளுக்கும் வயதுவந்த மகளிர்க்கும் ஒதுக்கிவிட்டார்.

மிகப் பெரிய தத்துவங்களையும் இறைவன் பெருமையையும் நேரடியாகச் சொன்னால் சிறுமிகள் அதனை விளங்கிக்கொள்வது கடினம். இதனை அறிந்த அடிகளார் இதிலும் ஒரு புதிய உக்தியைக் கையாண்டார். சிறுமிகளைக் கூர்ந்து கவனித்த அவர் 6 அல்லது 7 வகை விளையாட்டுக்களில் சிறுமிகள் பெரிதும் ஈடுபாடு கொள்வதை நன்கறிந்தார். அந்த விளையாட்டுக்குரிய பாடல்களையும் அவற்றின் ஓசைப்போக்கையும் நன்கு அறிந்துகொண்ட பெருமான் அந்த விளையாட்டுக்களின் பெயர்களோடு சேர்த்து அந்த விளையாட்டுப் பாடல்களின் இசைப்போக்கிலேயே தாமும் பாட முனைந்தார். பாடுதுங்காண் அம்மானாய், தோள்நோக்கம் ஆடாமோ, தெள்ளேணம் கொட்டாமோ என்ற முறையில் பாடல்களை வைத்தார்.

வளர்ச்சியடைந்த பெண்கள் விளையாட்டில் சாழல், உந்தி என்ற பாடல்களை அமைக்கும்பொழுது இறைவன் பற்றிய பல தத்துவங்களையும் நுணுக்கங்களையும் அப்பாடல்களில் பெய்து பாடினார். இத்தனை பாடல்களும் ஏனைய பாடல்களில் காணப்பெறாத புதிய இசை அமைப்புகளைக் கொண்டிருந்தனவே தவிர, தாளம் போட்டுப் பாடும் வகையில் அமையவில்லை. இருவர் எதிர் எதிர் நின்று உரலில் இடிக்கும்பொழுது தாளகதியோடு இவை அமையவேண்டும். இல்லாவிட்டால் இரண்டு உலக்கைகளும் ஒன்றுடன் ஒன்று மோதும் நிலை ஏற்படும். எனவே, பொற்சுண்ணத்தை மட்டும் தாளகதியில் அமைந்த பாடலாகப் பாடியுள்ளார்.

தெள்ளேணத்தில் தொடங்கி உந்தியார்வரை பாடி வருகின்ற இப்பெண்கள் நல்ல பருவ வளர்ச்சி

அடைந்தபொழுது என்ன பாடுகிறார்கள் தெரியுமா? 'என் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க' (173) என்றும், 'நின் அடியார் தாள் பணிவோம் அன்னவரே எங்கணவர் ஆவார், அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்' (163) என்றும் பாடும் அளவிற்கு அந்தச் சிறுமிகள் வளர்ச்சியடைந்துவிட்டனர். இந்தச் சிறுமியரின் மனவளர்ச்சி சரியானமுறையில் சென்றுள்ளது என்பதை அறியத் திருவெம்பாவையில் வரும் மேலே காட்டப்பெற்ற இரண்டு தொடர்கள்போக, மற்றொரு வளர்ச்சிப் புதுமையையும் அடிகளார் காட்டுகிறார். இவர்கள் வளர்ச்சி செம்மையாக அமைந்தமையால் ஏனையோர் காணமுடியாத இரு உண்மைகளை அந்த இளவயதிலேயே கண்டுவிட்டனர்.

முதலாவது, 'செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக' ஆயிற்று என்பதை உணர்ந்ததாகும். வளர்ச்சியில் இது ஒரு படி. இத்தோடு நிற்கவில்லை. இறைவன் 'இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளி, நம்தம்மைக் கோதாட்டி, செங்கமலப் பொற்பாதம் தந்தருள' வருகின்றான் என்பதை உணர்ந்ததே இரண்டாவது உண்மையாகும். அம்மானை ஆடத் தொடங்கிய ஆறு வயதுச் சிறுமி இப்போது அடைந்துள்ள வளர்ச்சி இமாலய வளர்ச்சியாகும். இப்படிப்பட்ட ஒருத்தியின் குடும்பம் எவ்வாறு அமைந்திருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அவள் வாழும் ஊர் முழுவதையும் திருத்தும் ஆற்றலை இந்த ஒருத்தியே மேற்கொள்கிறாள். இப்படிப்பட்டவர்கள் நிறைதலால் தமிழகம் முழுவதும் சிறப்பெய்தி ஒரு குறிக்கோள்தன்மை பெற்ற சமுதாயமாக மாறும் என்ற எண்ணத்தில் மகளிர்க்காகவே நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை அடிகளார் பாடினார் என்று எண்ணத் தோன்றுகிறது.

விளையாட்டின் தொடக்கமாக அமைவது அம்மானை என்று கூறினோம். அது ஆறு வயதுச் சிறுமியர்க்குரியது என்றும் கூறினோம். அந்த வயதில் விளையாட்டில் ஈடுபடும்பொழுது கண்ணால் பார்க்கக்கூடிய சில காட்சிகள் குழந்தைகளைக் கவர்வது இயல்பு. இதனை அறிந்துகொண்ட அடிகளார் இருபது பாடல்களில் ஆறு பாடல்களைக் காட்சியில் முடியும்படியாகப் பாடியுள்ளார். அவையாவன: 'மீன்விசிறும் பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்' (176) 'சிற்றம்பலம் மன்னும் ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்' (179) 'கோவால் மொத்துண்டு புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்' (182) 'ஆட்கொண்ட அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்' (184) 'வேதியனை ஐயாறமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்' (187) 'அனலேந்தி ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்' (191) என்பனவாம். கருத்தால் ஒன்றைப் பற்றுவதைக் காட்டிலும் கண்ணால் கண்டு பற்றுவது குழந்தைகட்கு எளிது. ஆதலால்தான் இளஞ்சிறு மியர் விளையாட்டாகிய அம்மானை பற்றிய பாடல்கள் இறைவன் காட்சி பற்றிப் பல இடங்களில் பேசுகின்றன.

இந்த முறையில் தொடங்கி வளர்கின்ற பெண்கள் நன்கு வளர்ந்த நிலையில் 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' (163) என்று பாடும் நிலைமையை அடைகின்றனர். சிறுவயதிலிருந்து அவர்கள் குதித்துக் கும்மாளமிட்ட குளம் இப்பொழுது 'எங்கள் பிராட்டி எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவா'க் காட்சியளிக்கிறது (167).

இதுவரை கூறியவற்றால் 658 பாடல்களில் சிறுமியர், மகளிர் என்பவர் விளயாட்டுக்காக 163 பாடல்கள் ஏன் ஒதுக்கப்பெற்றன என்பதை அறியமுடிகின்றது. அந்த

விளையாட்டையும்கூட ஆறு வகையாகப் பிரித்து, 6 வயதுச் சிறுமிகள் தொடங்கி 18வயதுக் குமரிவரை படிப்படியாக உயர்த்திச் செல்கிறார்.

இத்தகைய வளர்ச்சியைப் பெற்று இறைவன் இல்லங்கள் தோறும் எழுந்தருள்கிறான் என்னும் உணர்வைப் பெண்கள் பெற்றுவிடுகிறார்கள். இவர்களை மணந்து கொள்கிற ஆண்களோ அடியார்களாக இருக்கின்றார்கள். குறிக்கோள்தன்மை பெற்ற ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து அமைந்த குடும்பம் இது. இதுபோன்ற பல குடும்பங்கள் திருப்பெருந்துறையைச் சுற்றி அமைந்துள்ளன. எனவே, இவர்கள் அனைவரும் விடியற்காலை நேரத்தில் திருக்கோயிலைச் சென்று அடைகின்றனர். அவர்களுள்தான் எத்தனை வகை! 'பிணைமலர்க் கையினர் ஒரு பால், தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால், சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒரு பால், இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால், தோத்திரம் இயம்பினர் ஒரு பால்' (371) என்ற முறையில் அலைமோதித் திரண்டு செல்லும் அக்கூட்டம் திருப்பெருந்துறையானைப் பள்ளியெழுப்புகின்றது.

ஆண்களும் பெண்களுமாக இவ்வளவு பெரிய கூட்டம் ஓர் ஊரில் நிறைந்துள்ளது என்றால் அது திடீரென்று தோன்றியிருக்க முடியாது. இளவயதிலிருந்தே இப்பயிற்சியைப் பெற்று வளர்க்கின்றவர்களே திருக்கோயிலில் உள்சென்று துவள்தல், தொழுதல், அழுதல் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அம்மானை விளையாட்டில் தொடங்கிய சிறுமியர், அடிகளார் கற்பித்த விளையாட்டுக்களில் ஈடுபட்டு, அறிவு முதிர்ச்சி பெற்று சாழல் விளையாட்டில் வினாவிடை மூலம் அறிவை வளர்த்துக்கொள்கின்றனர். அந்தவினா விடைக்குப் பிறகு இறைவனுடைய பேராற்றலை அறிய உந்தீபற என்று முடியும் பாடல்களில் ஈடுபடுகின்றனர்.

அறிவு வளர்ச்சி ஆன்மீக வளர்ச்சி என்ற இரண்டும் பெற்ற நிலையில் கூடிநின்று விளையாடியதுபோக கூடிநின்று அவன் பெருமைகளைப் பேசிக்கொண்டு வீதிவலம் செய்யும் நிலைமைக்கு வளர்கின்றனர். அந்த வளர்ச்சியின் முத்தாய்ப்புத்தான் திருப்பள்ளியெழுச்சியாகக் காட்சியளிக்கிறது.

## VI. ஆண்டுகொண்ட அதிசயம்

அடுத்துள்ள தலைப்பு ஆண்டுகொண்ட அதிசயம் என்பதாகும். இத்தலைப்பில் நான்கு பதிகங்கள் இடம் பெறுகின்றன. அவையாவன:

1. அதிசயப்பத்து (26)
2. அற்புதப் பத்து (41)
3. கோயில் திருப்பதிகம் (22)
4. திருவெண்பா (47)

இந்த அமைப்பு முறைக்கு ஒரு காரணம் உண்டு. இதில் முதற்கூறிய மூன்று பதிகங்களும் ஆண்டுகொண்ட நிகழ்ச்சியில் அடுத்து அடுத்து நடைபெற்றவைபற்றிக் கூறும் பதிகங்களாகும். அடுத்து அடுத்து என்று கூறியதாலும் மூன்று பதிகங்களாக இருப்பதாலும் இவை கால இடையீடு பெற்று நிகழ்ந்தவை போலும் என்று யாரும் கருதிவிடவேண்டா. இதில் கூறப்பெற்ற நிகழ்ச்சிகள் சில விநாடிகளுள் நிகழ்ந்தவையாகும். அவை நிகழும்பொழுது அடிகளார் ஆனந்த சாகரத்தில் மூழ்கி, தான் என்ற நினைவேயில்லாமல் இறையனுபவத்தில் துளையமாடிக்கொண்டிருந்தார்.

இது நிகழ்ந்து சில காலம் கழிந்த பின்னரே, இப்பதிகங்கள் பாடப்பெற்றிருக்க வேண்டும். ஆனந்தத்தில் திளைக்கும்பொழுது பாட்டு வெளிப்படுவதில்லை.

எனவேதான், சில காலம் கழித்து அந்த அனுபவத்தையும் அதனால் பெற்ற பயனையும் அது நிகழ்ந்த வரிசைக் கிரமத்தையும் எண்ணிப் பார்க்கும்பொழுது அவை பாடலாய் வெளிப்படுகின்றன.

குதிரைமேல் ஏறிவந்த திருவாதவூரர் முதலில் கண்டது குருநாதரைத்தான். அடுத்துக் கண்டது குருநாதரின் திருவடிகளையேயாகும். அடுத்து நிகழ்ந்தது அடியார் கூட்டத்திடை இருக்கச்செய்தது ஆகும். எந்தக் காரணத்தாலோ கோயில் மூத்த திருப்பதிகத்தின் பத்துப் பாடல்களிலும் அதிசயப் பத்தின் பத்துப் பாடல்களிலும் தனித்தனியாகப் பல்வேறு இடங்களிலும் அடியார் கூட்டத்திடை இருந்த சிறப்பை விடாது பாடிவருகின்றார்.

'அடியார் கூட்டத்திடை இருக்கும் இந்த வாய்ப்புத் தமது தகுதி காரணமாகவோ யதேச்சையாகவோ கிடைத்த ஒன்று அன்று; குருநாதர் ஆட்கொண்டதால்தான் இது கிடைத்தது' என்ற நினைவும் நன்றிப் பெருக்கும் அவரை விட்டு நீங்கவேயில்லை.

ஆகவேதான் அதிசயப் பத்தின் பத்துப் பாடல்களிலும் 'அடியாரில் கூட்டிய அதிசயம்' என்றே பாடிச் செல்கிறார். அப்படிப் பாட நினைத்தபொழுதே இரண்டு வகை எண்ண ஓட்டங்கள் அவர் மனத்திடை ஓடுகின்றன. தாம் இருந்த இருப்பு, தம் மனம் இருந்த நிலை, தாம் வாழ்ந்த வாழ்க்கை இவையெல்லாம் நினைவுக்கு வருகின்றன. இந்த நினைவின் முடிவில் அடியார் கூட்டத்திடை இருக்கச் செய்த நிலை நினைவிற்கு வருகின்றது.

ஒன்றுக்கொன்று முற்றிலும் பொருந்தாத முரண்பட்ட நிலைகள் அல்லவா இவை? இரத்த சோகை, பசியின்மை வயிற்றுக் கோளாறு என்பவற்றில் நீண்ட காலமாக உழன்றுகொண்டிருக்கும் ஒருவன் திடீரென்று எழுந்து பெரிய தலைவாழை இலையின் முன்னே அமர்ந்து

பலப்பல காய்கறிகளோடு, வடை பாயசம் முதலியவற்றோடு சர்க்கரைப் பொங்கலையும் உண்டான் என்றால், இது எப்படி முடியும்? மேலே குறித்த நோய்களை உடையவன் ஒரு குவளைக் கஞ்சியை உட்கொள்வதே பெரிய காரியம் என்றுதான் நாம் நினைக்கின்றோம். ஆனால், உண்மையில் நிகழ்ந்தது என்ன? அந்த நோயாளி மாபெரும் விருந்தை உண்டது உண்மை.

இத்தகைய நோய் உடையவன் உண்ணவே முடியாது என்றுதானே நாம் நினைப்போம்? ஆனால், அதற்கு முற்றிலும் மாறான ஒரு நிகழ்ச்சி கண்ணெதிரே நடந்தால் அது அதிசயம் என்று கூறாமல் வேறு என்ன என்று கூறுவது? அதனைத்தான் அடிகளார் பாடுகிறார்.

தம்முடைய பழைய வாழ்க்கைமுறையை, மனநிலையை, இதோ பேசுகிறார்:

1) நீதியாவன யாவையும் நினைக்கிலேன் நினைப்பவரொடும் கூடேன் (429)

2) பரவுவார் அவர்பாடு சென்று அணைகிலேன் பன்மலர் பறித்து ஏத்தேன் (432)

3) எண்ணிலேன் திருநாம அஞ்செழுத்தும்...... நண்ணிலேன் கலைஞானிகள் தம்மொடு (433) - என்பவையாம் அவை,

மேலே காட்டியவை மூன்றும் செய்யவேண்டியதைச் செய்யாதிருந்தமையைக் குறிக்கும். இவற்றைச் செய்யாமல் இருந்தாலே அருநரகிடை விழுவது உறுதியாகும். ஆனால் இவற்றோடு நிற்கவில்லை அவர். செய்யாதன ஒரு புறமிருக்க, தாம் செய்தவை என்ன என்று இதோ கூறுகிறார்:

1) மடவரலியர்தங்கள் திறத்திடை நைவேன் (428)

2) குரவுவார் குழலார் திறத்தே நின்று குடிகெடுகின்றேன் (432)

இப்படி வாழ்ந்தால் என்ன கிடைக்கும் என்பதை அடிகளாரே பேசுகிறார்:

*1) பொய்க்கூரை இத்தை மெய்யெனக் கருதி............ இடர்க்கடல் சுழித்தலைப் படுவேன் (434)*

*2) இருள் திணிந்து எழுந்திட்டதோர் வல்வினைச் சிறுகுடில் இது இத்தைப் பொருளெனக் களித்து அருநரகத்திடை விழப்புகுகின்றேன் (437)*

இப்படிப்பட்ட ஒருவர் அருநரகிடை வீழ்தல் உறுதி என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? ஆனால், நடந்தது என்ன? இத்தகைய ஒருவரைப் பெருந்துறை நாயகன் தன் அடியரில் அல்லவா கூட்டினான்? இதை அதிசயம் என்று சொல்லாமல் வேறு என்ன என்று கூறுவது? சும்மாவா அடியரில் கூட்டினான்? முதலில் ஆண்டுகொண்டு, அடுத்து அல்லவா தம் அடியரில் கூட்டினான்? இது அதிசயத்தின் மேல் அதிசயம். ஆண்டுகொண்டதால் விளைந்த நன்மைகளைக் கூறும் இப்பதிகத்தை இத்தொகுப்பில் முதலாவதாக வைத்துள்ளோம்.

அடுத்து வைக்கப்பெறுவது அற்புதப் பத்தாகும். தம்மை ஒத்த ஒருவரை ஆண்டுகொண்டதும், அடியரில் கூட்டியதும் அதிசயம் என்று கூறிய அடிகளார், அடுத்து ஓர் அற்புதத்தையும் கூறுகிறார். மானிட வடிவில் இருந்த குருநாதர் அடிகளாரை அடியரிற் கூட்டினார். அடியார்களிடையே அமர்ந்திருந்த அடிகளார் தமக்கு இந்தப் பேருதவியைச் செய்த குருநாதரை நன்றிப்பெருக்கோடு பார்த்து மகிழ்கிறார். மானிட வடிவுடன் குருந்த மரத்தடியே அமர்ந்திருந்த குருநாதர் என்ன செய்தார் தெரியுமா! 569ஆம் பாடலின் பின்னிரண்டு அடிகளை மறுபடியும் பார்க்க வேண்டும். 'பொய்யெலாம் விடத் திருவருள் தந்துதன் பொன்னடி இணைகாட்டி, மெய்யனாய் வெளிகாட்டி முன் நின்றதோர்

அற்புதம்' என்று பாடியுள்ளாரே! இதன் பொருள் என்ன? வெளிகாட்டி என்பது 'முப்பாழும் தாண்டி நிற்கும் அப்பாழை, பரவெளியைக் காட்டி' என்ற பொருளைத் தரும்.

'மெய்யனாய்' என்ற அடைமொழி எதற்கு? கருத்தளவில்மட்டும் கருதக்கூடிய சத்தியம் அல்லது மெய் என்பதற்கு உருவம் இருக்கமுடியாது. கருதுபொருளாக மட்டும் இருக்கக்கூடிய ஒன்றைக் காட்சிப் பொருளாகவும் மாற்றக்கூடியவன் இறைவன் ஒருவனே ஆவான். அதனையே அடிகளார் 'மெய்யனாய்' என்று பாடுகிறார்.

குருநாதர் வடிவினுள் அம்மையப்பன் வடிவினையும் தில்லைக்கூத்தன் வடிவினையும் கண்டாரே, அதைத்தான் இவர் சொல்கிறாரா என்றால், இல்லை என்றுதான் கூறவேண்டும். நாம ரூபமற்ற அந்தப் பரம்பொருள் குருநாதர் வடிவத்தையும் அம்மையப்பன் வடிவத்தையும் ஏற்றுக்கொண்டு நிற்பது உண்மைதான். ஆனால், அடிகளார் அவ்வடிவங்களை இங்கே குறிக்கவில்லை என்று ஊகிக்க இடம் உண்டு. அப்படியானால் வெளி காட்டி நின்றது யார்? என்ன வடிவுடன் நின்றான்? இந்த இரண்டு வினாக்களுக்கும் அடிகளார் விடை கூறவில்லை. 'மெய்யனாய் வெளிகாட்டி நின்றது' என்று கூறினாரே தவிர, அது யார் என்றோ எந்த வடிவுடன் நின்றான் என்றோ இந்த அருள் ஞானி விளக்கிக் கூறவில்லை. இறையுணர்வின் அதீத நிலையில் கிடைத்த பரவெளிக் காட்சியை நாம் பேசும் சொற்களால் கூறமுடியாது என்ற கருத்திற்போலும் விளக்கம் எதுவும் கூறாமல் 'மெய்யனாய் வெளிகாட்டி நின்றது' அற்புதம் என்று கூறிவிட்டார்.

இவ்வாறு கூறிநிறுத்துவதில் அடிகளாருக்கே அமைதி ஏற்படவில்லைப் போலும். தம்முடைய பாடல்களாகிய பரா அமுதை மக்களுக்குத் தரவேண்டும் என்று கருதித்தானே குருநாதர் இவரை விட்டுச் சென்றார்?

அப்படியானால், சொற்களால் விளக்க முடியாத ஒன்றை எப்படிச் சொற்களால் விளங்கவைப்பது? விளக்க முடியாதது என்பதை முதற்பாடலில் கூறிவிட்டார். இரண்டாவது பாடலில்(570) நம்மாட்டுக் கொண்ட இரக்கம் காரணமாக விளக்கமுடியாததை விளக்க முயல்கிறார். நாம ரூபம் கடந்த அவனை விளங்கிக்கொள்ள முடியாதேனும் ஏதோ ஒரு முறையில் விளக்க முற்படுகிறார். அறிந்ததைக் கொண்டு அறியாததை விளக்கல் என்ற பழக்கம் இந்நாட்டில் தொன்றுதொட்டே இருந்துவருகின்றது. அந்த முறையில், அறிந்த ஒரு சொல்லை இரண்டாவது பாடலில் பயன்படுத்துகிறார் முதற்பாடலில் இன்னார் என்று கூறமுடியாத ஒரு பொருளை இரண்டாவது பாடலில் நாம் அனைவரும் அறிந்த, 'வேந்தன்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் விளக்குகிறார். வேந்தன் என்ற சொல்லைக் கேட்டவுடன் தலைவன் என்ற எண்ணம் நம் அனைவருக்கும் தோன்றுமல்லவா? அந்த எண்ணத்தைத் தோற்றுவிக்கவே காணுமாறு வெளியே நின்ற பொருளை வேந்தன் என்ற சொல்மூலம் அறிவிக்க விரும்புகிறார். இந்த இரண்டு பாடல்களிலும் 'அற்புதம்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். நாம ரூபத்தால் குறிக்கப்படாத அந்தப் பொருளும் நாம ரூபமுடைய வேந்தன் என்பவனும் எளிதில் வெளிப்பட்டுக் காட்சி தருவதில்லை. அப்படிக் காட்சி தந்தால்—அதுவும் எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத முறையில் காட்சி தந்தால்— அதனை அற்புதம் என்ற சொல்லால் குறிப்பதில் தவறில்லை.

அடுத்து நிற்பது 'சிலம்பவை சிலம்பிட அருந்துணைவனாய் ஆண்டு கொண்ட'தாகும். இதிலும் ஓர் அற்புதம் உண்டு. நாம ரூபமற்ற ஒரு பொருளை அருந்துணைவனாய் இருந்து ஆண்டுகொண்டான் என்று கூறினால், அதனை எப்படி அறிவது? ஒரு துணைவன்

என்றால், அவனைக் காணவும் கையால் தொடவும்கூடிய நெருங்கி நிற்கும் நிலையில் அல்லவா அவன் இருத்தல் வேண்டும்? ஆனால், இவை ஒன்றும் இல்லாவிடினும் வழியோடு செல்பவனுக்கு மற்றொரு துணை இருத்தல் கூடும். இதனை அறிவிக்க ஏதாவது ஓர் ஒலி கேட்டுக் கொண்டே இருந்தால் துணை உள்ளது என்ற தென்பு மனத்திடைப் பிறக்கும். இந்த அருந்துணைவன் காட்சிக்கும் தொடு உணர்ச்சிக்கும் அப்பாற்பட்டவனாயினும் தான் துணையாக இருப்பதை எப்படித் தெரிவிக்கிறான் தெரியுமா? தான் அணிந்திருக்கும் சிலம்பின் ஓசையைப் பிறர் கேட்குமாறு ஓயாது ஒலிக்கிறான். ஆதலின் கண்ணால் காணாவிடினும் ஒரு துணை உள்ளது என்ற தென்பு மனத்திடைப் பிறக்குமாறு செய்கிறான். இந்தக் கருத்தையே 'சிலம்பவை சிலம்பிட' என்று பாடுகிறார். இறைவனால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் புதுமையான வழியை அற்புதம் என்று சொல்கிறார் அடிகளார்.

'நீக்க முடியாத சில எண்ணங்கள் என் மனத்திடை நிறைந்து நின்றன. அவை, மாடு சுற்றம் மற்றுள போகம் மங்கையர் கூட்டம் என்பனவாம். இவை நிறைந்து நிற்கையிலேயே தன் மென்மலர்க் கழல் காட்டி (என்னை) ஆடுவித்து என் அகம்புகுந்து ஆண்டது அற்புதமல்லவா?' (573) என்கிறார்.

சிவபூசையில் ஈடுபடவேண்டிய நேரத்தில் மங்கையர் மார்பிடைக் கிடந்த தம்மை ஆண்டது ஓர் அற்புதம் என்கிறார்(575).

அதிசயப் பத்தைப் போலவே அற்புதப் பத்திலும் மூன்றாம்(571) எட்டாம்(576) பாடல்கள் நீங்கலாக எஞ்சிய எட்டுப் பாடல்களிலும் தையலார் தொடர்பையே பேசுகின்றார். இந்த வகையில் பொழுதைக் கழித்த தம்மை ஆண்டுகொண்டதை அற்புதம் என்று கூறுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

இத்தொகுதியில் மூன்றாவதாக உள்ளது கோயில் திருப்பதிகமாகும். கோயில் என்று அழைக்கப்படும் தில்லை பற்றிய எச்செய்தியும் இப்பதிகத்தில் இல்லை. அதற்குப் பதிலாகத் திருப்பெருந்துறை நிகழ்ச்சியே பத்துப் பாடல்களிலும் இடம்பெறுகிறது.

கோயில் திருப்பதிகம் என்ற இப்பதிகம் திருப்பெருந்துறை நிகழ்ச்சியையே சுற்றிச் சுற்றி வந்தாலும் அந்த நிகழ்ச்சி நடைபெற்ற உடனேயோ அல்லது சில காலம் கழித்தோ பாடியது என்று நினைக்க மனம் இடம் தரவில்லை. அந்த நிகழ்ச்சியால் திருவாதவூரர் மணிவாசகராக மாறி இறையனுபவத்தில் தோய்ந்து துளையமாடிய பின்னர் மனத்தில் தோன்றிய உறுதிப் பாட்டைத் திருச்சதகம் முதலான பல பதிகங்களில் பாடியுள்ளதை முன்னரே கண்டோம். ஆண்டுகொண்டதன் விளைவுதான் இந்த மனஉறுதியும் வளர்ச்சியும் என்பதை அடிகளார் நன்றாக அறிந்திருந்தார்.

நாட்கள் செல்லச் செல்ல, அடிக்கடி இறையனுபவத்தில் தோய்ந்து எழும் மனநிலை வளர்ந்து கொண்டே வந்திருக்கவேண்டும். நல்ல வளர்ச்சியை அடைந்த பிறகுகூட ஒரோவழி பழமையை நினைந்துபார்க்கும் இயல்பு மனத்திற்கு உண்டு. அந்த இயல்பின் அடிப்படையில் என்றோ ஒரு நாள் அந்நிகழ்ச்சியை நினைந்து பாடியதாகும் இப்பதிகம். அவன் ஆண்டுகொண்டதை எத்தனைமுறை நினைந்தாலும், அந்த நிகழ்ச்சி நடந்து எத்தனை காலம் ஆனாலும் ஆண்டு கொண்டதை நினைக்கும் பொழுதெல்லாம் அவரையும் அறியாமல் ஒரு வியப்பு மனத்திடைத் தோன்றுகிறது. 'மாறிநின்று'(388) என்று தொடங்கும் முதற்பாடலில் பொறிபுலன்களை அடைத்து ஆண்டு கொண்டமையைப் பேசுகிறார். அப்படிப் பேசும்பொழுதேகூட ஒரு புதிய விருப்பத்தை வெளிப்படுத்துகிறார். 'என்னுள் ஊறிநின்று

எழுபரஞ்சோதி' என்று விளித்தவர், திடீரென்று 'காணவந்தருளாய்' என்று பாடுவதன் நோக்கமென்ன? காணவந்தருளாய் என்பது எதிரே வருதலையே குறிக்கும். சோதி என்று விளித்ததால் அது எல்லாத் திசைகளிலும் வெளிப்படுவது என்பது தெளிவு. உள் எழுபரஞ்சோதி என்றதால் உள்ளத்தின் உள்ளே தோன்றுகின்ற பரஞ்சோதி என்றாராயிற்று. அப்படி உள்ளே எழும் ஒன்றை உணரமுடியுமே தவிரக் காணமுடியாது. அப்படியிருக்க 'காணவந்தருளாய்' என்பது ஏதோ ஒரு நிகழ்ச்சியை மீண்டும் காணவிரும்புகிறார் என்ற பொருளைத்தான் குறிக்கிறது. அதாவது திருப்பெருந்துறையில் குருநாதராக எழுந்தருளியவரும் இப்போது உள்ளே ஒளி வடிவாக இருப்பவரும் ஒருவர்தான் என்பதை உணர்ந்தாலும் மறுபடியும் அந்தச் சோதி, குருநாதர் வடிவுடன் வெளிப்பட்டுப் புறக்கண்கள் காணுமாறு எதிரே வரவேண்டும் என்ற புதிய விருப்பத்தைத் தெரிவிக்கின்றார்.

ஆண்டுகொண்டு பன்னாட்கள் ஆகிவிட்டன; பல இறையனுபவங்களைப் பெற்றாகிவிட்டது; என்றாலும் குருநாதர் காட்சியளித்த முதல் நாள் அனுபவத்தை மீண்டும் பெறவிரும்புவது ஒரு புதுமையாகும்.

சாதாரணச் சுடர் புற இருளைப் போக்கும். பொய்யாகிய அகஇருளைப் போக்க வேண்டுமானால் அந்தச் சுடர் ஏனைய சுடரினும் மாறுபட்டதாக இருக்க வேண்டும். அப்படியானால் அந்தச் சுடரை எப்படி அடையாளம் காண்பது? அதனைக் குறிக்கவே சுடர் என்பதற்குமுன் 'மெய்' என்ற அடைமொழியைப் பெய்து 'மெய்ச்சுடர்' (390) என்றார்.

திருப்பெருந்துறையில் குருநாதர் திருவடிதீட்சை செய்ததைப் புறத்தே நின்றவர் பலர்கூடக் கண்டிருக்கலாம். அதன்பிறகு, திருவாதவூரர் என்ற அமைச்சர் எல்லாவற்றையும் துறந்து ஆண்டியாகித் திரிந்த புற

வேறுபாட்டையும் பலர் கண்டிருக்கலாம். புறத்தே உள்ள மக்களைப் பொறுத்தமட்டில் திருவடி தீட்சையின் பயனை அறிந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆண்டுகொண்டதால் விளைந்த பயனை ஆட்கொள்ளப்பட்டவரே பேசுகிறார். 'அன்பினால் அடியேன் ஆவியோடுஆக்கை ஆனந்தமாய்க் கசிந்து உருக, என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்' (389) என்பதே அவருடைய விளக்கமாகும்.

ஆட்கொள்ளப்பெற்றபின் மனித வாழ்க்கையில் காணமுடியாத ஓர் அமைதி கிட்டியது என்பதை 'உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே'(391) என்ற சொற்களால் வெளிப்படுத்துகிறார்.

ஆட்கொள்ளப்பெற்றதில் ஒரு புதிய அனுபவம் கிட்டுகிறது. அதனை 'இறைவனே நீ என் உடல் இடங்கொண்டாய்' (392) என்று பேசுகிறார். ஆண்டுகொண்டதில் மற்றோர் புதிய அனுபவம் 393 ஆம் பாடலில் பேசப் பெறுகிறது. 'நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீகால் ஆய் அவை அல்லையாய் ஆங்கே, கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக் கண்ணுறக் கண்டுகொண்டு இன்றே' என்பதே அது.

அதாவது ஐம்பெரும் பூதங்களிலும் ஒருவனே கரந்து நிற்கின்றான். ஐம்பெரும் பூதங்களிற்கூட நிலம் நீர் தீ இவை மூன்றும் போக எஞ்சிய இரண்டையும் கண்ணால் காண்பது இயலாத காரியம். இந்த இரண்டையுமே காணமுடியாதென்றால் இவற்றுள் கலந்து நிற்கின்ற ஒருவனை எவ்வாறு காணமுடியும்? இறையனுபவம் முதிர்ந்த நிலையில் அந்த ஒருவனை உள்ளத்தில் உணரலாம். ஆனால், அடிகளார் என்ன பாடுகிறார்? ஐம்பெரும் பூதங்களிலும் கரந்த உருவுடைய ஒருவனை உள்ளத்தில் உணர்ந்தேன் என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும்? அவ்வாறில்லாமல், உன்னைக் கண்ணுறக் கண்டுகொண்டு இன்றே களித்தனன் என்றல்லவா

பாடுகிறார்? கரந்து நிற்கின்ற ஒரு பொருளைக் கண்டு கொண்டனன் என்று கூறுவது வியப்பைத் தருகிறது. இந்தக் காட்சி உண்மையானது என்பதை விளக்க களித்தனன் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இதுவும் ஆண்டு கொண்டதால் நிகழ்ந்த அதிசயம்.

சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாய் நிற்கின்ற ஒன்றைக் கருத்தளவிற்கூடச் சிந்திப்பது கடினம். ஆனால், ஆண்டுகொள்ளப்பட்ட காரணத்தால் அந்த ஒன்றை 'நினைப்பற நினைக்க' முடிந்தது என்கிறார். அப்படி நினைந்தபொழுது அதன் முடிவாக ஒரு பேருண்மை வெளிப்பட்டது. அது என்ன தெரியுமா? 'ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்றில்லை' (394) என்பதேயாகும்.

பதிகத்தின் முடிவில் 'தந்தது உன் தன்னைக் கொண்டது என்தன்னை' (397) என்று பாடுவது ஆட்கொள்ளப்பட்டதன் முழுத்தன்மையை விளக்கும் முறையில் அமைந்துள்ளது. அடிகளாரை ஒரு சில விநாடிகளில் ஆட்கொண்டு, மணிவாசகராக மாற்றி உலவவிட்டார் குருநாதர். இப்பொழுது ஓர் ஐயம் தோன்றுகிறது. உலவ விடப்பட்ட மணிவாசகர் யார்? பழைய திருவாதவூரரின் மறு அவதாரமா? அது இல்லையென்றால், இந்தப் புதிய வடிவம் யார்? ஆழ்ந்து நோக்கினால் திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு அடிகளாருடைய உடலில் குடிகொண்டிருந்தது அவருடைய ஆன்மாவா மற்றொன்றா என்ற வினாவிற்கு விடை கூறுபவர்போலத் 'தந்தது உன்தன்னை' என்று பாடுகிறார். 'உன்தன்னை' என்று கூறியதால், கொடுத்தவன் முழுவதுமாகத் தன்னைக் கொடுத்துவிட்டான் என்பதை விளக்கிவிட்டார். அப்படியானால் இப்பொழுது அடிகளாருடைய உடலில் இவருடைய சொந்த ஆன்மாவும் உள்ளே புகுந்த குருநாதரும் ஆகிய இருவரும் ஒன்றாக ஓரிடத்து உள்ளனர் என்று நாம் நினைக்கத் தொடங்கினால், அது தவறு என்கிறார் அடிகளார்?

அதாவது ஆட்கொண்டவன் இலவசமாகத் தன்னைத் தந்துவிடவில்லை. ஒரு பண்டமாற்றுச் செய்துகொண்டுதான் தன்னைத் தந்தான் என்கிறார். 'கொண்டது என்தன்னை' என்ற தொடரால் இவருடைய இடத்தில் எப்பொழுது அவன் புகுந்தானோ அதே நேரத்தில் அவன் இருந்த இடத்தில் இவர் புகுந்துவிட்டார். இப்படி ஓர் அற்புதமான நிகழ்ச்சி ஆண்டுகொண்டதால் விளைந்ததாகும்.

இப்பதிகத்தின் இரண்டாம் (389) பாடலில் 'நீ செய்த உபகாரத்திற்கு ஒரு கைம்மாறு செய்யக்கூடிய நிலையில் நான் இல்லையே' என்று வருந்திப் பாடிய அடிகளார் பதிகத்தின் பத்தாவது (397) பாடலில் அந்த நிலையை மாற்றிக்கொள்கிறார். இரண்டாம் பாடல் தோன்றுகின்ற நேரத்தில் ஆட்கொண்டவன் ஒருவன், ஆட்கொள்ளும் செயல் ஒன்று, ஆட்கொள்ளப்படுபவர் ஒருவர் என்று மூன்றாகப் பிரிந்து நின்ற காரணத்தால் ஆட்கொள்ளப்பெற்றவர் 'என்னால் கைம்மாறு செய்ய முடியவில்லையே' என்று வருந்தினார். அந்த மூன்றில் இரண்டு இடம்மாறிவிட்டது. இப்பொழுது இவரில் புகுந்தவன் அவன் ஆதலால் அவனுக்குக் கைம்மாறு செய்ய முடியாது என்பதை, 'யான் இதற்கு' (நீ என்னுள் புகுந்து தங்கியதற்கு) கைம்மாறு செய்ய இயலாதாகையால் 'இலன் ஓர் கைம்மாறு' என்கிறார்.

இந்தப் பத்துப் பாடல்களில் ஆண்டுகொண்ட நிகழ்ச்சியும் அது விளைந்து பயன்தந்த முறையும் அழகாக எடுத்து இயம்பப் பெற்றுள்ளன.

அடுத்துள்ள திருவெண்பாவில் மேலே குறிப்பிட்ட பத்துக்களைப்போல் இல்லாமல், குருநாதர் அருள் செய்ததைமட்டும் பேசுகிறார். எவ்வாறு அருள்செய்தார் என்பதையெல்லாம் திருவெண்பாவில் விளக்கமாகக் கூறியுள்ளார் அடிகளார். 'இவ்வளவு உபகாரம் செய்த அவனுக்கு எப்படி கைம்மாறு செய்யமுடியும்' என்பதை

நினைத்தவுடன் அது இயலாது என்பதை உணர்ந்து பாடலில் தம்மை மறந்து, 'ஆர்க்கோ அரற்றுகோ' (618) என்று பாடுகிறார்.

## VII. உயிர் வர்க்கத்தை விளித்தல்

இத்தொகுப்பில் பின்வரும் பதிகங்கள் இடம் பெறுகின்றன.

1) திருக்கோத்தும்பி (10)

2) குயிற்பத்து (18)

உலகியலில் மனிதர்களுக்குரிய இயல்பு ஒன்றைப் பரக்கக் காணலாம். ஒரு மனிதன் மிக அதிகமாக நேசிப்பது தன்னைத்தான். இதனை நாவரசர் பெருமான் 'என்னில் யாரும் எனக்கு இனியார் இலை' (திருமுறை-5:21-1) என்று பாடிச்செல்கிறார். தன்னையே நேசிக்கும் மனிதன், அதிலிருந்து சற்று வளர்ந்து பிறரை நேசிக்கத் தொடங்கும் பொழுதும் தன்னை ஒத்த பிற மனிதர்களைத்தான் பெரிதும் நேசிக்கிறான். நாட்டு வரலாறுகள் என்ற பெயரில் இன்று வெளிவரும் நூல்கள் அனைத்தும் ஒவ்வொரு நாட்டின் மக்களைப்பற்றியனவே ஆகும். மக்களல்லாத விலங்கினங்கள், ஏனைய ஓரறிவு உயிர்கள் என்பவற்றைப் பற்றி எதுவும் பேசப்படுவதில்லை. இதன் காரணம் என்ன? சராசரி மனித வளர்ச்சி தன்னைத் தான் நேசித்தல், அடுத்தபடியாகத் தன்னை ஒத்த பிற மனிதர்களை நேசித்தல் என்பதோடு முடிந்துவிடுகிறது. அதையும் மீறிச்செல்லும் சிலர் தமக்குப் பயன்படும் ஆடு, மாடு நாய், குதிரை என்பவற்றை ஓரளவு நேசிக்கிறார்கள். ஆனால், இந்த நேசத்தின் அடிப்படையில் தன்னலம் மட்டுமே நிலைத்துள்ளது.

இந்தச் சராசரி மனிதர்களிலிருந்து மிகமிக உயர்ந்து நின்று விளங்கும் அருளாளர்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஓரறிவு உயிர் முதல் ஐயறிவு உடைய விலங்குகள்

வரை, பஞ்ச பூதங்கள், சூரியன், சந்திரன் விண்மீன்கள் ஆகிய அனைத்தையும் சமமாகக் கருதி அவற்றிடத்தும் பேரன்பு செய்பவர்கள் இந்த அருளாளர்கள். இது முடியுமா என்று ஒரு வினாத் தோன்றும். அதற்கு ஓர் எளிதான விடை உண்டு. இவற்றை இனம் பிரித்து ஓரறிவு முதலாக ஐயறிவுவரை உள்ள விலங்குகள், கல், மண் தண்ணீர் என்றெல்லாம் இந்த அருளாளர்கள் பார்ப்பதில்லை. எல்லாவற்றையும் இறை சொரூபம் என்று அவர்கள் கருதியதால்தான் இது முடிந்தது.

இத்தகைய அருளாளர்கள் எக்காலத்திலும் இருந்தனர்; இன்றும் உளர்; நாளையும் இருப்பர். ஆனால், இவர்களை இனங்கண்டுகொள்ளுதல் மிகமிகக் கடினமாகும்.அடிகளார் காலத்திற்கு ஒரு நூற்றாண்டுமுன்னர் வாழ்ந்த நம்மாழ்வார் இதே கருத்தை

மண்ணை இருந்து துழாவி 'வாமனன் மண்ணிது'என்னும்

(நாலாயிர :2447)

என்றும்,

'செய்யதோர் ஞாயிற்றைக்காட்டி 'சிரீதரன் மூர்த்தி' ஈது
என்னும்' (நாலாயிர:2448)

என்றும்

'அறியும் செந் தீயைத் தழுவி அச்சுதன் என்னும்;
மெய்வேவாள்!' (நலாயிர:2449)

என்றும் பாடியுள்ளமை நோக்கத் தக்கது.

நம் காலத்தில் வாழ்ந்த மகாகவி பாரதியார்

'காக்கை குருவி எங்கள் சாதி — நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை'

என்றும்,

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா
நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதையே நந்தலாலா

என்றும் பாடியுள்ளமையும் நோக்கத்தக்கது.

அருளாளர்கள் நிலை இது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை என்றாலும், இதில் ஒரு சிக்கலும் உள்ளது. வண்டையும் குயிலையும் பாடிய அடிகளாரைப் பித்தன் என்று உலகவர் பேசினர். இன்று, வானளாவப் புகழ்ந்தாலும் பாரதி வாழ்ந்த காலத்தில் அருளாளர்களுள் அவனும் ஒருவன் என்பதை யாரும் கண்டுகொள்ள வில்லை. அதற்குப் பதிலாக, பைத்தியம் என்றே அவனை ஏசினர். அருளாளர்களை அவர்கள் காலத்தில் இனம் கண்டுகொள்ளாமல் இருப்பது மனித சமுதாயத்தின் தனிஇயல்பாகும். தமிழர்களாகிய நம்மைப் பொறுத்தவரை அடிகளார் காலத்தில் வாழ்ந்து, அவரைப் பைத்தியம் என்று சொன்ன நம் முன்னோர்களைப் போலவே ஒரு சிறிதும் வளர்ச்சியில்லாமல் இன்றுவரை நாம் உள்ளோம் என்றால், இதைவிடத் தனிச்சிறப்பு வேறு என்ன வேண்டும்!

அடிகளாரைப் பொறுத்தவரை, திருவாதவூரராக வாழ்க்கையைத் தொடங்கியவர், மணிவாசகராக வளர்ச்சி பெற்று, ஒரு பழுத்த அருளாளராக மாறிவிடுகிறார். இந்த மாற்றம் நிலைபெற்றவுடன், அது எதனால் வந்தது என்று எண்ணிப்பார்க்கையில், சென்ற தொகுப்பில் காணப்பெறும் அதிசயப் பத்து, அற்புதப் பத்து, கோயில் திருப்பதிகம், திருவெண்பா ஆகியவற்றில் அந்த வளர்ச்சிக்குக் காரணத்தைக் காணமுடிகிறது.

வளர்ந்துவிட்ட நிலையில் உயிரினங்களிடையே உள்ள வேறுபாடு மறைந்துவிடுகிறது. வண்டும் குயிலுங்கூட இறையனுபவத்திற்குப் பாத்திரமாகலாம் என்ற உண்மை

பளிச்சிடுகிறது. பன்றிக்கு முலை கொடுத்தவன், வலைஞனாக வந்து மீன்வலை வீசியவன், கரிக்குருவிக்கு உபதேசம் செய்தவன், வண்டு குயில் என்பவற்றின் வேண்டுகோளை நிராகரித்துவிடுவானா, என்ன? அவனுடைய பரங்கருணைத் தடங்கடலில் பன்றிக் குட்டிகளுக்கு இடம் இருப்பதுபோல, வண்டுக்கும் குயிலுக்குங்கூட இடமுள்ளது.

அவன் எப்போதும் தயாராக உள்ளான்; அவன் உதவி தேவை என்பதை இச்சிற்றுயிர்கள் உணர்ந்துகொண்டு அவனை அழைத்தால், அவன் உடனே வருவான் என்பதுதான் திருக்கோத்தும்பி, குயிற்பத்து என்பவற்றின் அடிப்படையாகும். இது கருதியே, இவ்விரண்டு பதிகங்களும் ஆண்டுகொண்ட அதிசயத்திற்குப் பின்னர் வைக்கப்பெற்றுள்ளன.

திருவாசகம் முழுவதிலும் மக்களையல்லாமல் ஏனை உயிரினங்களை விளித்துப் பாடும் பதிகங்கள் இரண்டு மட்டுமே உள்ளன. அவை திருக்கோத்தும்பி, குயிற்பத்து என்பவையாம்.

திருவாசகப் பதிகங்கள் பெரும்பாலானவற்றிற்குத் 'திரு'வைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பொருந்துமா பொருந்தாதா என்றுகூடப் பாராமல் திருவெண்பா, திருவார்த்தை என்று தலைப்புகள் வைத்ததுபோலத் திருக்கோத்தும்பி என்ற தலைப்பையும் வைத்துள்ளனர். வண்டு இனங்களுள் பெரிய உடலமைப்பும் உச்ச ஸ்தாயியில் ரீங்காரமிடும் இயல்பும் கொண்ட ஒருவகை வண்டினத்திற்கு அரச வண்டு என்று பெயரிட்டனர். அதுவே கோத்தும்பி ஆயிற்று. 'வெண்பா'விற்குத் 'திரு' சேர்த்தது போல, கோத்தும்பிக்கும் ஒரு 'திரு'வைச் சேர்த்தனர்.

தும்பியைத் தூதாக அனுப்புதல் இலக்கியத்தில் பயின்றுவரும் ஒன்றாகும். இதனைக் மனத்துட் கொண்ட

உரையாசிரியர் பலரும் திருக்கோத்தும்பிப் பதிகம் முழுவதும் தலைவி, வண்டைத் தூதாக அனுப்பும் செய்தியைக் கூறுவதாகும் என்ற கருத்தில் உரை எழுதினர். 215ஆம் பாடல்முதல் 234ஆம் பாடல்வரை உள்ள இருபது பாடல்களில் 227, 233 ஆகிய இரண்டு பாடல்களைத் தவிர ஏனைய பாடல்களில் வண்டினைத் தூதாக அனுப்பும் செய்தி இடம்பெறவே இல்லை.

அதற்கு மாறாக எல்லாப் பாடல்களும் 'அரசவண்டே! நீ சென்று அவன் புகழைப் பாடுவாயாக' என்ற கருத்தில் 'சென்றூதாய் கோத்தும்பி' என்றே முடிகின்றன. இப்பாடல்களில் எங்கோ சென்றுகொண்டிருந்த தம்மை, பதவி முதலிய இன்பவேட்டையில் சுழன்றுகொண்டிருந்த தம்மைப் பெருந்துறை நாயகன் இழுத்துப் பிடித்து ஆட்கொண்ட சிறப்பைப் பல இடங்களில் பாடியுள்ளார். இதனையல்லாமல் கோயில் திருப்பதிகம், அதிசயப் பத்து, அற்புதப் பத்து என்ற பகுதிகளில் மிகமிக விரிவாகப் பாடியுள்ளார். அப்படிப் பாடிவரும் நிலையில் தம்மையும் ஒருபொருட்டாக மதித்து ஆட்கொண்ட பெருமான் இதே கருணையை ஐயறிவு உயிர்களுக்குக்கூடக் காட்டுவான் என்ற நினைவு தோன்றவே, கோத்தும்பிப் பதிகம் தோன்றுகிறது. இப்பதிகத்தைத் தொடங்கும்பொழுது தம்மைப் பற்றிய சிந்தனையில்லாமல் 'பூஏறு கோனும்' என்று தொடங்கி எல்லாத் தெய்வங்களையும் வரிசைப்படுத்தி, 'இவர்கள் யாரும் அறியாத திருவடியைச் சென்று ஊதுவாயாக' என்று பாடியுள்ளார்.

ஆனால் 'வானவரும் தாம் அறியாச் சேவடி' என்று நேரடி உதாரணம் எதுவுமில்லாமல் கூறினதால், அச்சேவடியைச் சென்று ஊதினால், தமக்கு என்ன பயன் கிட்டும் என்ற நினைவில் வண்டுகள் அடிகளார் கூற்றில் ஈடுபாடு கொள்ளவில்லை போலும். ஒரு வினாடியில் இதனை உணர்ந்துகொண்ட அடிகளார் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார். உயிர்கள் ஒன்றில் ஈடுபட

வேண்டுமேயானால் இரண்டு சூழ்நிலைகள் இருத்தல் வேண்டும். ஒன்று— ஈடுபடுவதால் கிட்டும் உடனடிப் பயன்; இரண்டு— இந்த உடனடிப்பயனை முன்னர்ப் பெற்றவர்களின் உதாரணத்தை எடுத்துக்காட்டுதல். இந்த இரண்டும் இருந்தால் உயிர்கள் இதில் ஈடுபடுவது உறுதி.

உடனடிப்பயன் கிட்டும் என்பதைத் 'தினைத்தனை உள்ளதோர்' (217) என்று தொடங்கும் பாடலில் விரிவாகப் பேசுகிறார். ஒவ்வொரு பூவிலும் சென்று, சொட்டுச் சொட்டாகத் தேனை எடுத்து அல்லல் படும் வண்டைப் பார்த்து, 'தேன் சொரியும் குனிப்புடையான்' என்று குறிப்பிடுவதால் வண்டுக்குக் கிடைக்கும் உடனடிப்பயன் அளவிடற்கரியது என்பதைக் கூறினாராயிற்று.

தேன் சொரியும் குனிப்புடையானிடம் போவது என்று முடிவு செய்துகொண்ட வண்டு, அவனை எப்படி அடையாளம் கண்டுகொள்வது என்று தனக்குள் சிந்திக்கலாயிற்று. 'தோலும் துகிலும்' (232) என்று தொடங்கும் பாடலில் மிக விரிவாக அதற்கு விடை கூறுகிறார். உடனடிப்பயன்பற்றி இந்த இரண்டு பாடல்களில் கூறிவிட்ட அடிகளார், ஏதேனும் முன் உதாரணம் காட்டினால் வண்டின் மனத்தில் திடம் உண்டாகும் எனக் கருதுகிறார். எனவே, தூது அனுப்பும் முறையில் அமைந்த 227, 233 என்ற இரண்டு பாடல்கள் தவிர எஞ்சிய 18 பாடல்களில் தம்முடைய வாழ்க்கையில் நிகழ்ந்த செய்திகளைக் கூறுகிறார். 'நாயிற் கடையாய்க் கிடந்த' தம்முடைய பிழைகளையெல்லாம் தான் பொறுத்து (226), 'சித்த விகாரக் கலக்கம் தெளிவித்தான்' (220) என்று கூறுகிறார். அத்தோடு நில்லாமல், மாலும் அயனும் ஏமாறி நிற்க (234) அடியேன் இறுமாக்கச் செய்தான் என்றும் கூறுகிறார். தனிப்பட்ட உயிர் ஒன்றுக்கு இவ்வளவு செய்தவன் உறுதியாகத் தனக்கும் அருள்செய்வான் என்ற மனத் திட்பம் வண்டிற்கும் உண்டாகிறது.

உலகியலில் ஒரு நிகழ்ச்சியை இன்றும் காணலாம். வெளிநாடு சென்றுவந்த அனுபவமுடையவர்கள் தம்முடைய புத்திமதியைக் கேட்டுவரும் புதிதாக வெளிநாடு செல்வோர்க்கு அந்த யாத்திரையின் நெளிவு சுழிவுகளை விவரமாக எடுத்துக்கூறுவர். ஒரு வகையாகப் புதியவர் வெளிநாடு செல்லப் புறப்படுகையில் 'நீ போனவுடன் இன்ன இடத்திலுள்ள என் நண்பரிடம் தயைகூர்ந்து இதைக் கொடுத்துவிடுக' என்று ஒரு மூட்டையை அவரிடம் தருதலைக் காணலாம். அதேபோலச் செல்ல வேண்டிய இடம், சென்றால் கிடைக்கும் பயன் ஆகியவற்றைப் பதினெட்டுப் பாடல்களில் கூறிய அடிகளார் வண்டைப் பார்த்து 'ஏ வண்டே! நீயோ போவதற்கு உறுதியாக முடிவு செய்துவிட்டாய். அப்படிச் சென்று அவனைக் காண்பாயேயானால் எனக்காக ஒரு சின்ன உபகாரம் செய்ய வேண்டும். பெரிதாக ஒன்றும் ெய்யவேண்டியதில்லை. என் துயரத்தை அவனிடம் சென்று சொல்வது ஒன்றுதான் நீ எனக்குச் செய்யவேண்டிய உபகாரம். சாலப் பெரியவன், எனவே என்னுடைய முறையீடுகளை உன்னுடைய உச்ச ஸ்தாயி ரீங்காரமூலம் அவனுடைய காதுகளிடம் சென்று சொல்லிவிடாதே. அப்படியானால் 'என்ன செய்ய வேண்டும்?'என்று கேட்கிறாயா? இதோ சொல்கிறேன். என் உள்ளத்தில் தோன்றிய துயரங்களையெல்லாம் போக்க அவன் இன்னும் வரவில்லை என்ற செய்தியை அவனுடைய திருவடியில் சொல்வாயாக. அப்படி கூறும்பொழுதேகூட உன்னுடைய உச்ச ஸ்தாயியில் இல்லாமல், மிக மென்மையான குரலில் (குளிர்ந்து) ஊதுவாயாக' என்ற பொருளில் 'உள்ளத்து உறுதுயர் ஒன்று ஒழியா வண்ணமெல்லாம் தெள்ளுங் கழலுக்கே' *(233)* 'குளிர்ந்து ஊதாய்' *(227)* என்று பாடுகிறார்.

சிற்றுயிர்களை நோக்கிப் பாடிய இரண்டு பதிகங்களுள் முதலாவதாக உள்ள திருக்கோத்தும்பியைப்பற்றி இவ்வளவு

விரிவாகப் பேசியதற்கு ஒரு காரணமுண்டு. பதிக வைப்பு முறையில் இவை இரண்டைத் தனியே பிரித்ததற்கும் ஒன்றையடுத்து ஒன்றை வைப்பதற்கும் உள்ள காரணங்களைச் சிந்திக்கும்பொழுது தோன்றிய சிந்தனைகள் ஆகும் இவை.

கோத்தும்பியினிடம் உடனடிப்பயன், சுற்றுச் சூழ்நிலை, தமக்கு ஏற்பட்ட பயன் என்றெல்லாம் இவ்வளவு விரிவாகக் கூறியவர் குயிற்பத்தில் இந்த அடிப்படையையே மாற்றி விடுகிறார். எந்த ஓர் இடத்திலும் சில வினாடிகளுக்கு மேல் தங்காமல் பகல் முழுவதும் சுற்றித் திரியும் இயல்புடையது வண்டு. அதனுடைய இயல்புக்கேற்பக் கோத்தும்பிப் பாடல்களை அமைத்தார். வாழ்நாள் முழுவதும் அமைதியே இல்லாமல் சுற்றித்திரியும் வண்டிற்கு இது சரி.

இந்த இயல்பிற்கு முற்றிலும் மாறுபட்டது குயில். பிறரெல்லாம் காணச் சுற்றித் திரியும் வண்டிற்கு எதிராக நெடிய மரக்கிளையில் தன்னை யாரும் காணாதபடி அமர்ந்துகொண்டு கீதம் இசைக்கும் இயல்புடையது குயில். உச்ச ஸ்தாயியில் ஓயாது ரீங்காரமிடும் வண்டின் குரலை நீண்ட நேரம் தொடர்ந்து கேட்க முடியாது. இதன் எதிராக எங்கோ மறைந்து நிற்கும் குயிலின் குரலைக் கேட்பவர்கள் காலம் போவது தெரியாமல் கேட்டுக்கொண்டே இன்புறுவர்.

குயிலுக்கு ஒரு பழக்கம் உண்டு. நீண்ட தூரம் பறந்து செல்லும் இயல்புடையதன்று அது. எனவே, ‘சென்று ஊதாய்’ என்று வண்டைப் பார்த்துக் கூறும் அடிகளார் குயிலைப் பார்த்துப் பேசும்பொழுது ‘வரக் கூவாய்’ என்று பாடுகிறார்.

‘வரக் கூவாய்’ என்று பாடுவதால் குயிலுக்கு ஓர் ஐயம் உண்டாகுமே? முதற் பாடலிலேயே ‘பாதம்

இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால், சோதி மணிமுடி சொல்லின் சொல்லிறந்து நின்ற தொன்மை, ஆதி குணமொன்றும் இல்லான்' (348) என்று கூறிவிட்டு அப்படிப்பட்ட ஒருவனை 'நீ வரக் கூவாய்' என்று கூறினால், அது எப்படிப் பொருந்தும்? இந்த ஐயத்தைப் போக்குவதற்காகவே 'வான் பழித்து இம் மண் புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்' (351) 'அந்தரத்தே நின்று இழிந்து, இங்கு, அடியவர் ஆசை அறுப்பான்' (352) 'பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசம் அறுத்து எனை ஆண்டவன்' (356) 'எம் தமர் ஆம் இவன் என்று இங்கு என்னையும் ஆட்கொண்டு' (357) அருள்பவன் என்றும் கூறினார். இவ்வளவு தூரம் மண்ணிடை வந்தவனை நீ வரக் கூவினால், உறுதியாக வருவான் என்று கூறுவதன் மூலம் குயிலுக்கு ஒரு துணிவை உண்டாக்கினார்.

இப்போது குயிலுக்குப் புதியதோர் ஐயம் தோன்றலாயிற்று. அடிகளார் கூறிய செய்திகள் மனிதனை ஆட்கொள்வதற்காக அவன் வந்தான் என்றுதானே கூறுகின்றன? அப்பாவிக் குயிலாகிய தனக்கு இது எவ்வாறு பொருந்தும் என்ற ஐயம் நியாயமானதுதானே? அதனைப் புரிந்துகொண்ட அடிகளார் 'அஞ்சாதே! உன்னை உகப்பன் குயிலே உன்துணைத் தோழியும் ஆவன்' (354) என்று கூறுவதன் மூலம் குயிலின் மனத்தில் ஒரு தென்பை உண்டாக்குகிறார். வண்டையும் குயிலையும் மட்டும் விளித்துப் பாடுவதின் நோக்கம் ஒன்று உண்டு. ஒன்று ஓயாது திரிந்துகொண்டே இருப்பது; மற்றொன்று இருந்த இடத்திலேயே அமைதியாக இருப்பது. உயிர்கள் அனைத்தும் இந்த இரண்டு தொகுப்புகளில் அமையும். இதனால் இவ்விரு பதிகங்களும் உயிர்வர்க்கம் முழுவதற்கும் வழி கூறுவனவாய் அமைந்துள்ளன. எனவே இவ்விரண்டு பதிகங்களும் ஒரு தலைப்பின்கீழ் வைக்கப் பெற்றுள்ளன.

## VIII. இறையுணர்வில் ஈடுபட்ட தலைவியின் கூற்று

இத்தொகுப்பினுள் ஒரே ஒரு பதிகம் மட்டும் வைக்கப் பெற்றுள்ளது:

*அன்னைப் பத்து (17)*

இந்நாட்டு அருளாளர்களின் தனிச்சிறப்பை எடுத்துக் காட்டுவது, அவர்கள் பாடிய பக்திப் பாடல்களில் உள்ள அகத்துறைப் பாடல்களேயாகும்.

அழிவிலாத பேரின்பம், இறையனுபவம், இறைக் காட்சி என்பவைபற்றிப் பாடப்பெறும் பக்திப் பாடல்களில் சிற்றின்பம் எங்கே புகுந்தது என்ற வினா நியாயமானதே ஆகும். மேனாட்டு அறிஞர்களான ஜி.யு.போப் போன்றவர்கள் இந்த வினாவிற்கு விடை காணத் தவறிவிட்டனர். எனவே, அகத்துறைபற்றி வரும் பாடல்களை ஒதுக்கித் தள்ளினர்.

இதன் தத்துவத்தைத் தமிழர்கள் நன்கு புரிந்து வைத்திருந்தனர். ஒருவன் ஒருத்தி என்ற இருவரின் மனம், கருத்து என்பவை ஒருமித்து ஒன்றுகூடி வாழ்வதே காதல் வாழ்க்கை எனப்பெறும். ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுகூடி வாழ்வதை உலகில் உள்ள பலரும் அறிவர். அப்படியானால் தமிழன் கண்ட அந்த அகவாழ்வின் தனிச்சிறப்பு என்ன என்ற வினாத் தோன்றுமன்றோ? அதற்கு விடை காணவேண்டுமேயானால் மிகப் பழமையான தொல்காப்பியத்திலிருந்து அருளாளர்கள் பாடிய பாடல்கள்வரை ஊன்றிக் கவனித்தல் வேண்டும். அவ்வாறு கவனிக்கும்போது ஒன்றை விளங்கிக்கொள்ள முடியும்.

காதல் வாழ்க்கையில் இருவர் இன்றியமையாதவர்கள். ஒரு தலைவனும் ஒரு தலைவியுமே இவர் ஆவர். தொடக்கத்தில் இவன் வேறு; அவள் வேறு; 'யாயும் ஞாயும் யாராகியரோ' (குறுந்தொகை -40) என்று தொடங்கும் குறுந்தொகைப் பாடல் இந்தக் காதல் வாழ்க்கைக்கு

இலக்கணம் வகுக்கின்றது. தொடக்கத்தில் அவன் ஒரு தனி அலகு (unit); அவள் ஒரு தனி அலகு. இவர்கள் இருவருள்ளும் அன்பு தோன்றி வளர்கின்றது. பின்னர் அந்த அன்பு இருவரிடையே மாறிப் பாய்கின்றது. தொடக்கத்தில் அவன் வேறு, அவள் வேறாக இருப்பினும் சில காலத்தில் இந்த இரண்டு அலகுகளும் மாறிப்பாய்கின்ற அன்புவெள்ளத்தில் அமிழ்ந்துவிடுகின்றன. இதனை, மேலே காட்டிய குறுந்தொகைப் பாடலும் 'அன்புடை நெஞ்சம், தாம் கலந்தனவே' என்று கூறிச்செல்கிறது. அவன் என்ற தனி அலகை எடுத்துக் கொள்வோமேயானால், இந்தக் காதல் தோன்றுவதற்கு முன்னர் அந்தத் தனி அலகு வீறுகொண்டு நிமிர்ந்து நின்றது. ஆனால் காதல் தோன்றி வளர்கையில் இந்த வீறும் நிமிர்ந்து நிற்கும் நிலையும் தலைசாய்ந்துவிடுகின்றன.

..........................................................................போருள்
அடல் மாமேல் ஆற்றுவேன் என்னை மடல்மாமேல்
மன்றம் படர்வித்தவள் (நெய்தல்கலி:24—8,9,10),

..........................................................................வடிநாவின்
வல்லார் முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டியவள் (மேற்படி —18,19,20)

என்று வரும் கலிப்பாடல் அடிகள் இந்த அன்பு, மாறிப்பாய்கின்ற காலத்தில் அவனுடைய 'நான்' அடங்கிவிடுதலை எடுத்துக்காட்டுகின்றன. காதல் முதிர முதிர இவை சாய்வதோடு அல்லாமல் இவற்றை உடையவனும் சாய்ந்துவிடுகிறான். இன்னும் வளர்ந்த நிலையில் அவனுடைய 'நான்' மறைந்துவிடுகிறது. 'நான்' முற்றிலுமாக மறைந்த நிலையே காதலின் உச்சகட்டம் ஆகும். இங்கு அவனுக்குச் சொல்லிய அனைத்து இலக்கணங்களும் அவளுக்கும் பொருந்தும். அதுவே

அன்புடை நெஞ்சம், தாம் கலந்த நிலையாகும். இதிலிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ளலாம். காதலின் உச்சகட்டத்தில் ‘நான்’ முற்றிலுமாக மறைந்துவிடுகிறது. அவன் அவளுள்ளும், அவள் அவனுள்ளும் மறைந்து, நாம் என்ற சொல்லினுள் இரண்டு நான்களும் தம்மை இழந்த நிலையே குறிக்கோள்தன்மை பெற்ற காதலாகும். இதனையே கம்பநாடன் ‘இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்’(கம்ப:மிதிலை—37) என்று பாடியுள்ளான். பக்தியிலும் இதே நிலைதான் என்பதை நாவரசர் பெருமானின் ‘முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்’ (திருமுறை:6:25—7) என்று தொடங்கும் பாடல்மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

ஒன்றாக முளைத்து எழும் ‘நான்’ விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டு அந்த வடிவழகில் இன்பம் அடைகிறது. இப்பொழுது பக்தி மேலும் வளர்கிறது. வடிவழகையும் தாண்டி ஆனந்த சொரூபமாக இருக்கும் இறைவனிடம் ஈடுபடத் தொடங்குகிறது. அந்த ஈடுபாடு வளரவளர, ‘நான்’ கொஞ்சம் கொஞ்சமாகக் கரைகிறது. எந்த நேரத்தில் இந்த ‘நான்’ செயலிழந்து இறையனுபவ ஆனந்தத்தில் மூழ்கித் திளைக்கிறதோ அந்த நேரமே பக்தியின் உச்சகட்ட நிலையாகும்.

அதாவது காதலின் உச்ச கட்டமும், பக்தியின் உச்ச கட்டமும் ஒன்றுதான். இரண்டிலும் ‘நான்’ முற்றிலுமாக அடங்கிவிடுகிறது. மடங்கிவிடும் இடம் காதலில் அவளாகவும், பக்தியில் அவன் ஆகவும் அமைகின்றது. இந்த இரண்டிற்கும் பொதுத்தன்மை ‘நான்’ மறைவதேயாகும்.

தலைவன் தலைவியிடம் தன்னை ஒப்படைத்துவிட்டு ஈருடல் ஓருயிர் என்ற முறையில் வாழ்க்கையை நடத்துகிறான். உடல் இரண்டு; உயிர் ஒன்று. இதனையே

அடிகளார் திருக்கோவையாரில் 71ஆம் பாடலில் 'காகத்து இரு கண்ணிற்கு ஒன்றே மணி கலந்தாங்கு,.............. தோகைக்கும், தோன்றற்கும் ஒன்றாய் வரும் இன்ப துன்பங்களே' என்று பாடியுள்ளார். இதிலிருந்து ஒன்றை உறுதியாக அறிந்துகொள்ள முடியும். தலையாய பக்தி, தலையாய காதல் இந்த இரண்டிலும் 'நான்' என்பது முற்றிலுமாக மறைவதே அவற்றின் இலக்கணமாகும். எனவே, இந்தப் பொது இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்ட பக்திப் பாடல்களில் அகத்திணை பற்றிய பாடல்கள் இடம்பெறுவது முறையேயாகும். காதல், பக்தி என்ற இரண்டிலும் தமிழர் கண்ட தனிச்சிறப்பு 'நான்' என்பதன் மறைவேயாகும்.

இவ்வாறு கொள்ளாவிட்டால் மூன்று வயது நிரம்பிய காழிப்பிள்ளையார் அவருடைய முதல் பதிகத்தின் பாடலிலேயே 'உள்ளங்கவர் கள்வன்' என்றும், 'பின்னர்ச் 'சிறையாரும் மடக் கிளியே....... ஈசன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே' (திருமுறை:1-60:10) என்றும் பாடுவதும், அதேபோல் மூன்று வயதுடையவரும், புளிய மரப்பொந்திலிருந்து வெளிவராதவரும் ஆகிய நம்மாழ்வார் திருவாய்மொழி இரண்டாம் பத்தின் முதற்பாடலாக,

> 'வாயும் திரைஉகளும் கானல் மடநாராய்
> ஆயும் அமருலகும் துஞ்சிலும் நீ துஞ்சாயால்
> நோயும் பயலைமையும் மீதூர எம்மேபோல்
> நீயும் திருமாலால் நெஞ்சம் கோட்பட்டாயே' (நாலாயிர:2192)

என்று பாடுவதும் வியப்பை விளைவிக்கும்.

இந்த நிலையில் மற்றொன்றை நினைவிற்குக் கொண்டு வருவது பொருத்தமுடையது என்று தோன்றுகிறது. பக்தியில் ஈடுபட்டவர்கள், 'நான்' என்பதை இழந்து இறையனுபவத்தில் ஈடுபடும்பொழுது பெண்தன்மையை அடைகின்றனர் என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அவர்கள் கூறக்கேட்டுள்ளேன். இதற்கு உதாரணமாக, வள்ளலாரின் படத்தைக் காட்டி, அந்த முகம் பெண்மைத் தன்மை உடையதாக இருப்பதைச் சுட்டியதையும் நினைவு கூர்கிறேன். ஆண்மகனாகப் பிறந்து வளர்ந்த வள்ளலார்,

‘கையுற வீசி நடப்பதை நாணிக்
கைகளைக் கட்டியே நடந்தேன்,
மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்
மெய் எலாம் ஐயகோ மறைத்தேன்’
(திருஅருட்பா:3461)

என்றும் பாடுவது பெண்களுக்குரிய இயல்பையேயாகும். இவற்றை யெல்லாம் மனத்துட் கொண்ட தமிழ்த்தென்றல் அவர்கள், இறைவன் ஒருவனே ‘தலைவன்’ என்றும், உயிர்கள் அனைத்தும் ‘தலைவி’ என்றும் இந்நாட்டவர் கொண்ட கொள்கை, வள்ளலார் போன்ற அருளாளர்கள் வாழ்வில் நன்கு விளங்கியது என்றும் கூறியதை நினைவு கூர்கிறேன்.

மணிவாசகப் பெருமானும் இதே மனநிலையில் இருந்துகொண்டு பாடியதே அன்னைப் பத்தாகும். உலக வாழ்வில் நன்கு ஈடுபட்டு அமைச்சராக இருந்து பல சுகபோகங்களை அனுபவித்த அடிகளார், ஓர் இளம் பெண்ணாகத் தம்மைப் பாவித்துக்கொண்டு, காதல் வயப்பட்டு, கிளர்ந்து எழும் உள்ளத்து உணர்ச்சிகளை அன்னைப் பத்தில் பாடினார். மணிவாசகர் ‘நான்’ என்பதை அறவே இழந்து ஒரு புதிய உலகத்தில் புகுந்து, முழுவதும் பெண்ணாகவே மாறிப் பாடியதாகும் அன்னைப் பத்து.

## IX. ஆழமான ஏக்கம்

இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளவை:

1) ஆனந்தமாலை (50)

2) அடைக்கலப் பத்து (24)

3) வாழாப் பத்து (28)

4) செத்திலாப் பத்து (23)

இறையுணர்வில் ஈடுபட்ட தலைவியின் கூற்று என்ற தலைப்பை அடுத்துவரும் தலைப்பு 'ஆழமான ஏக்கம்' என்பதாகும். இதில் கோக்கப்பட்டுள்ள நான்கு பதிகங்களும் எல்லையற்ற மனத்துயரத்தை, நம்பிக்கை இழந்த நிலையை வெளியிடும் பகுதிகளாகும். இந்த நிலை வளர்வதற்கு மூலமாக உள்ளது முதன்முதலில் காதல் வயப்பட்ட பெண்ணின் மனநிலையாகும். 'உள்நின்று உருக்குவர்' (339) 'போதலும் என் உள்ளம் நையும் இது என்னே அன்னே' (346) என்ற பகுதி இந்த வளர்ச்சிக்கு விதையாகும். உள்நின்று ஒருவர் உருக்குகின்றார் என்றால் இது பெண்ணின் காதல் வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அப்படி உருக்கினவர் எந்த அளவுக்கு அப்பெண்ணின் நெஞ்சில் இடம் கொண்டார் என்பதை 'அவர் போதலும் என்னுள்ளம் நையும்' (346) என்ற தொடர் எடுத்துக்காட்டும்.

போனவர் மீண்டு வாராமையால் தலைவியின் உள்ளத்தில் துயரம் மிகுந்து நம்பிக்கை இழப்பு ஏற்பட்டு 'வார்கடல் உலகில் வாழ்கிலேன்' (448) என்று சொல்லும் அளவிற்கு மனத்தளர்ச்சி ஏற்படுகிறது.

இந்த அடிப்படையில்தான் அன்னைப் பத்தை முன்னர் வைத்து, இந்த நான்கு பதிகங்களையும் அதற்குப் பின்னர் வைத்துள்ளோம்.

முன்னர்ப்பின்னர்த் தெரியாத ஒரு பொருளைப் பெறவேண்டும் என்ற ஏக்கம் மனத்திடைத் தோன்றுவது இல்லை. ஒரு பொருள் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் தோன்றவேண்டுமேயானால், அது இரண்டே வகையில்தான்

தோன்றமுடியும். முதலாவது, - அப்பொருளைப் பாரா விட்டாலும், அதுபற்றிப் பிறர் விவரமாகவும் விரிவாகவும் பேசுவதைக் கேட்டு, அப்பொருளினிடத்து ஈடுபாடு தோன்ற முடியும். அந்த ஈடுபாடு அதனைப் பெற வேண்டும் என்ற ஆசையையே தோற்றுவிக்கின்றது. அந்த ஆசை வளர்கின்ற முறையில் அப்பொருள் கிடைக்கா விட்டால் அது ஏக்கமாக முடிகின்றது.

இரண்டு - பொருளைப் பெற்றுச் சிலகாலம் அனுபவித்து, அந்த அனுபவத்தில் தன்னை இழக்கின்ற நிலையில், மேலும் அதனை அனுபவிக்க வேண்டும் என்ற நினைவு வளர்கின்ற நேரத்தில், அப்பொருள் கைநழுவிவிட்டால் அது பெரிய ஏக்கமாகிவிடுகிறது. இதுவே இரண்டாவது வகையாகும்.

அடிகளாரைப் பொறுத்தவரையில் அவருடைய ஏக்கம் இரண்டாவது வகைகயைச் சேர்ந்தது. வெறும் கேள்வி மாத்திரையாய் நின்ற ஒன்றன்று அவர் அனுபவம். திருப்பெருந்துறையில் பொருளை நேரே பெறவும் தம்முடைய தலையில் திருவடி சொரூபமாக அந்த அனுபவம் தொடர்பு கொள்ளவும் அதே கணத்தில் அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றப் பெறவும் கிடைத்த அனுபவமாகும் இது. இந்த அனுபவம் முதிர்ந்த நிலையில் ‘எனை நான் என்பது அறி’யாமல், ‘பகல் இரவாவதும் அறியாமல்’ (508) சிலகாலம் வாழ்கிறார் அடிகளார்.

திடீரென்று அனைத்தும் மறைந்துவிடுகின்றன; அனுபவமும் கைநழுவிவிடுகிறது. மனம் நோகிறார்; அரற்றுகிறார்; ‘செய்வதொன்று அறியேனே’ என்று புலம்புகிறார். கொஞ்சம் கொஞ்சமாக அமைதி ஏற்படுகின்றது. அந்த அனுபவத்தை நினைந்து நினைந்து பரா அமுதாகிய திருவாசகம் பொங்கி வெளிப்படுகிறது.

மணிவாசகர் பெற்ற அனுபவத்தைப் புறத்தே நின்று பாடிக்கொண்டு வரும் அடிகளாருக்குத் திடீரென்று சலிப்புத் தட்டிவிடுகின்றது. புறத்தே நின்று அனுபவத்தைப் பாடிக்கொண்டிருப்பதைவிட மறுபடியும் அதனுள்ளே புகுந்து, தம்மை மறக்கும் பழைய நிலையை அடைய வேண்டும் என்ற ஏக்கம் மலைபோல வளர்ந்துவிடுகிறது. அந்த ஏக்கத்தின் எதிரொலிதான் இத்தொகுப்பில் காட்டப்பெற்ற நான்கு பதிகங்களும் ஆகும்.

'என்னால் அறியாப் பதம் தந்தாய்' (644) என்பதால் இப்பதம் முன்னரே தரப்பெற்றது என்பதும் 'யான் அது அறியாதே கெட்டேன்' என்பதால் அதனை இழந்து நிற்கின்றேன் என்பதும் பெறப்பட்டன. அதனை இழப்பதற்குக் காரணம் தாமே என்பதை விளக்க 'உன்னால் ஒன்றும் குறைவில்லை' என்றும் பாடுவதால் இந்த ஏக்கம் எவ்வளவு ஆழமானது என்பதை அறியமுடிகின்றது. எனவே, இந்த ஏக்கத்தின் தொடக்கத்தைப்பற்றிப் பேசும் ஆனந்த மாலை இத்தொகுப்பில் முதலாக வைக்கப்பெற்றுள்ளது.

அடுத்து நிற்பது அடைக்கலப் பத்தாகும். ஆனந்த மாலையில் 'இனி உன்னைக் கூடும் வண்ணம் இயம்பாயே' (643) என்றும், 'பிற்பட்டிருந்தேன் நோய்க்கு விருந்தாயே' (644) என்றும், 'கோலங் காட்டி ஆண்டானைக் கொடியேன் என்றோ கூடுவதே' (645) என்றும் புலம்பிய அடிகளார், இவை கைவராமல் போகவே அவனிடம் கேட்டோ முறையிட்டோ பயனில்லை, அவனாகச் செய்தாலன்றித் தம் விருப்பம் நிறைவேறாது என்பதை உணர்ந்ததாற்போலும், இவ்வேண்டுதலை எல்லாம் விட்டுவிட்டு 'உடையாய் அடியேன் உன் அடைக்கலமே' என்ற முறையில் அடைக்கலப் பத்து என்ற பதிகத்தையே வைக்கின்றார்.

'உடைமைக்கு ஒரு முழுக்கு உடையானுக்குப் பத்து முழுக்கு' என்ற வைணவ முதுமொழிக்கிணங்க

அடைக்கலமாக வந்துவிட்ட தம்மை, தக்க வழிகாட்டி ஆட்கொள்ள வேண்டியது அவனுடைய பொறுப்பு என்பதை வெளிப்படையாகக் கூறாமல், 'அடியேன் உன் அடைக்கலமே' என்று கூறி விட்டுவிட்டார்.

அடிமைக்குரிய இலக்கணப்படி உடையானிடம் இன்னது செய்க என்று கட்டளையிடுவதோ, தமக்கு இன்னது வேண்டும் என்று கேட்பதோ தவறாகும். அந்த அடிப்படையில் கேட்கவோ உரிமையில்லை, தாம் கேளாமலிருக்கையில் அவன் கொடுப்பதாகவும் தெரியவில்லை என்ற நிலையில், இனி என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கின்றார்.

அந்த நிலையில்தான் மூன்றாவதாக உள்ள வாழாப்பத்து இடம்பெறுகிறது. அவனும் கவனிக்காமல், தாமும் வெளிப்படையாக ஒன்றை வேண்டும் நிலையும் இல்லாமல் இருக்கும் இந்த அவலநிலையை நினைந்தவுடன் 'வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்' (448) என்று பாடுகிறார். எத்தனையோ பேருக்கு எத்தனையோ காரணங்களால் உலகில் வாழ விருப்பம் இல்லாமல் போகலாம். வாழ்கிலேன் கண்டாய் என்றுமட்டும் பாடியிருந்தால், வேறு ஏதோ காரணத்தால் இவருக்கு வாழ விருப்பமில்லை என்று பொருள்பட்டுவிடும் அல்லவா? இந்த இக்கட்டை நீக்க 'வாழ்கிலேன் கண்டாய்' என்பதற்கு முன்னும் பின்னுமாக இரண்டு அற்புதமான தொடர்களை வைத்துப் பாடலை முடிக்கின்றார்.

'ஆண்ட நீ அருளிலையானால்' என்ற தொடரை முதலில் கூறுவதன் மூலம் வாழ விருப்பமின்மைக்கு விளக்கம் கூறினாராயிற்று. இதனைக் கூறிய அடிகளார் வாழ்க்கை முடிவதற்குமுன் கடைசி விருப்பமாக ஒன்றை வெளியிடுகிறார்.'நீயோ அருளில்லாதவனாக ஆகிவிட்டாய். எனவே, இந்த வாழ்க்கை எனக்குப் பிடிக்கவில்லை. அடைக்கலமாக இருப்பினும், என்னுடைய கடைசி

விருப்பத்தை இதோ சொல்லிவிடுகிறேன். அதற்கு மேல் உன் விருப்பம்' என்று கூறுவார்போல 'வருக என்று அருள்புரியாயே' என்று கூறுகிறார்.

இத்தொகுப்பில் அடுத்து நாம் வைத்துள்ளது செத்திலாப் பத்தாகும். 'வாழ்கிலேன்' என்றும் 'வருக என்று அருள்புரியாய்' என்றும் வாழாப் பத்தில் பாடியமையால் செத்திலாப் பத்தை இதன்பின்னர் வைத்துள்ளோம். இது கொஞ்சம் புதுமையானது. வாழ விருப்பமில்லாத ஒருவர், வாழ்வைத் துறக்க வேண்டியதுதானே! அதனைச் செய்யாமல் 'செத்திடப் பணியாய்' என்று கூறுவதன் நோக்கம் என்ன?

அடைக்கலப் பத்து, வாழாப் பத்து, செத்திலாப் பத்து என்ற மூன்று பதிகங்களையும் ஒன்றாக வைத்துப் படித்துப்பார்த்தால் 'செத்திடப் பணியாய்' என்று ஏன் கூறினார் என்பது விளங்கும்.

உடையவன் கவனக்குறைவாக இருந்துவிட்டதால், என்ன செய்வது என்ற நினைவில் 'உடையாய்' என்று விளித்து 'அடியேன் உன் அடைக்கலம்' என்றார். விளிக்கப்பட்டதால் உடையவன் திரும்பிப் பார்க்கிறான்போலும், உடனே திரும்பிப் பார்த்தவனுக்கு நினைவூட்டுவதுபோல 'ஐயா, நீ மறந்துவிட்டாய்போலும். நீதான் முன்னர் என்னை ஆண்டவன். இப்போது பராமுகமாய் உள்ளாய். இந்த நிலையில் அடைக்கலமாகிய நான் என்ன செய்யமுடியும்? இந்த உலகில் நான் வாழவிரும்பவில்லை' என்ற வகையில் பாடிவிட்டார்.

இப்பொழுது ஒரு புதிய நினைவு தோன்றுகிறது. 'வாழ விரும்பாதவர் போகவேண்டியதுதானே' என்ற நினைவு வந்தவுடன் தாம் அடிமை என்ற நினைவு வருகிறது. தமக்கோ வாழ விருப்பமில்லை; உடம்பைப் போக்கிக்கொள்ள, அடைக்கலப்பட்ட, உடைமைப்பொருளுக்கு

உரிமையும் இல்லை. இந்த இரண்டும் நினைவுக்கு வந்தபொழுது, 'இனிக் கூடும் வண்ணம் இயம்பாயே' என்ற வேண்டுகோளையோ 'வருக என்று அருள்புரியாய்' என்ற வேண்டுகோளையோ மறுபடியும் விடுக்காமல் 'செத்திடப் பணியாய் திருப்பெருந்துறை மேவிய சிவனே' *(400)* என்று பாடுகிறார்.

'செத்திடப் பணியாய்' என்று கேட்டதிலும் ஒரு சிறப்பைக் காணமுடிகிறது. இறையனுபவத்தைக் கொடுத்தவரோ ஒருவர். அது போய்விட்டது என்ற காரணத்தால் வேறு ஒருவரிடம் போய் 'எனைச் செத்திடப் பணியாய்' என்று வேண்டிக்கொண்டால் அது பொருத்தமாயிராது. அதற்குப் பதிலாக எந்த ஒருவர், வழியோடு போன தம்மை அழைத்து, ஆட்கொண்டு, திருவடி தீட்சை செய்து, உலப்பிலா ஆனந்தத்தை அருளினாரோ அவரிடமே சென்று 'ஐயா, நீ கொடுத்ததெல்லாம் காணாமல் போய்விட்டது. மறுபடியும் எத்தனையோ முறை வேண்டினேன். நீ மனம் இரங்குவதாகத் தெரியவில்லை. உன்னிடமே வேண்டிக் கொள்கிறேன். அதனைக் கொடுத்த நீ இதனையும் கொடுப்பாயாக' என்ற பொருள்படத் 'திருப்பெருந்துறை மேவிய சிவனே, எனைச் செத்திடப் பணியாய்' என்று முடிக்கின்றார்.

## X. மிகு அவா

இந்தத் தொகுப்பினுள் கீழ்வரும் பதிகங்கள் இடம்பெறுகின்றன:

1. கோயில் மூத்த திருப்பதிகம் *(21)*

2. புணர்ச்சிப் பத்து *(27)*

மிகு அவா என்பது பேராசை என்று இக்காலத்தில் வழங்கப்பெறுகிறது. அவா அல்லது ஆசை என்பது எல்லா

உயிர்களையும் பற்றிநிற்கும் ஒன்றாகும். விலங்குகளைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கும் ஆசையுண்டு, அந்த ஆசை உணவு, பாலுணர்ச்சி என்பவற்றோடு நின்றுவிடும். ஆனால், மனிதர்களைப் பொறுத்தமட்டில் அவர்களிடம் தோன்றும் ஆசைகளுக்கு அளவேயில்லை. 'ஆசைக்கோர் அளவில்லை' என்று தாயுமானவப் பெருந்தகையும் பாடுகின்றார். அடிகளாரும் 'பேராசையாம் இந்தப் பிண்டம்' (284) என்று பாடுகிறார். அப்படியானால் ஆசை என்பது எது? பேராசை என்பது எது? இந்த வினாவிற்கு விடை காண்பது கடினம். ஆசையையும் பேராசையையும் பிரிக்கும் கோடு மிக நுண்மையானது; இடம் மாறிக்கொண்டேயிருப்பது.

மனிதனுடைய மனத்தில் தோன்றும் பல்வேறு உணர்ச்சிகளுள் ஆசையும் ஒன்று. ஒரு பொருளிடத்து ஆசை ஏற்படும்பொழுதும் அம்மனத்தின் ஏனைய பல்வேறு பணிகள் நடைபெற்றுக்கொண்டேயிருக்கும்; இந்த ஆசை காரணமாக எந்தப் பணியும் நின்றுவிடுவதில்லை. இது இயல்பான ஆசை அல்லது அவா எனப்படும்.

இதன் மறுதலையாகப் பேராசை என்பது, மனத்திடைத் தோன்றிய ஆசை, ஆலமரம்போல் எல்லைமீறி வளர்ந்து, அந்த மனத்திடை வேறு எண்ணங்களுக்கே இடமில்லாமல் செய்துவிடும் ஒன்றாகும். எந்த ஒன்றும் தனக்குரிய அளவுக்குமேல் வளரத்தொடங்கினால் ஏனையவற்றிற்கு இடமில்லாமல் போய்விடும். உலகப் பொருட்களைப் பொறுத்தமட்டில், எந்த ஒன்றின்மேலாவது தோன்றிய ஆசை, பேராசையாக வளருமேயானால் அது அவனுக்கு நலம் செய்யாமல் அவனை அழிப்பதும் அல்லாமல் அவனைச் சார்ந்துள்ள குடும்பம், சமுதாயம் என்பவற்றையும் அழித்துவிடும்.

பேராசையின் இலக்கணம் இது என்றாலும், இதற்கு ஒரு புற நடை உண்டு. ஆசை, பேராசை என்ற இரண்டுக்கும் அடியில் இருப்பது 'நான்' தான் என்றாலும்

ஆசை பேராசையாக வளரும்போது இந்த நானையே மூடிக்கொண்டு பேராசை வளர்ந்துவிடுகிறது. அதன் பயனாக 'நானுக்'குரிய பல இயல்புகள் மறைந்துவிடுகின்றன. 'நான்' என்பது சாதாரண நிலையில் இருக்கும்போது, சுற்றுச் சூழ்நிலைபற்றிய நினைவு, அவற்றை இனங்கண்டு அறியும் ஆற்றல், வேண்டியவர்-வேண்டாதார் என்ற வேறுபாட்டு உணர்ச்சி, பிற உயிர்கள்பற்றிய சிந்தனை, தனக்கும் பிற உயிர்கட்குமுள்ள தொடர்பு என்பவை வெளிப்படையாவும், உள்முகமாகவும் நின்று பணிபுரியும். ஆனால், பேராசை வளரும்போது 'நான்' பேராசையால் மூடப்படுவதால் இந்தப் பேராசை ஒன்றைத்தவிர வேறு எதுவும் நினைவில் வருவதுமில்லை; அவை பணிபுரிவதும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் 'நானு'க்கு இயல்பாக அமைந்துள்ள பசி, தாகம் போன்ற உணர்ச்சிகள்கூடச் செயலிழந்துவிடுகின்றன. நாளாவட்டத்தில் இந்தப் பேராசை அவனையே அழித்து விடுகிறது.

அடுத்து பேராசைக்குரிய புறநடைபற்றிக் காணலாம். ஒரு கொள்கை, குறிக்கோள் என்பவற்றிலும் ஆசை தொடங்கிப் பேராசையாக வளர்வதுமுண்டு. அப்பொழுது இதற்குப் பேராசை என்ற பெயரில்லை. வாழ்க்கையில் தன்னலமற்று, பிறர்பொருட்டாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நினைவே குறிக்கோள் என்று சொல்லப்பெறும். 'உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்' (குறள்:596) என்ற குறளும் இதுபற்றி வந்ததேயாகும். அந்தக் குறிக்கோள் சிறிதா-பெரிதா, பயனுடையதா-அல்லாததா என்று நாம் வினவுவதற்கு இடமுமில்லை; உரிமையுமில்லை. பிறர் வேண்டுவதையெல்லாம், அவை தம்பால் இருப்பின் கொடுத்துவிடுவது என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர்களே அடியார்கள். கொடுக்கப்படும் பொருள், நெய்யப்பட்ட துணியாக இருக்கலாம்; பிச்சையெடுக்கும் ஓடாக இருக்கலாம்; தான் பெற்ற பிள்ளையின் கறியாக இருக்கலாம். ஏன்? மனைவியாகக்கூட இருக்கலாம்.

அடியார்கள் எது கேட்டாலும் மறாமல், முழுமனத்துடன் அகமகிழ்ந்து தருவது என்பதுதான், இந்த அடியார்களின் குறிக்கோளேதவிர, தரக்கூடியது எது தரக்கூடாதது எது என்ற பாகுபாடு இவர்களுக்குத் தோன்றுவதேயில்லை. மண் ஓடானாலும், செம்பொன்னா னாலும் அவற்றை ஒருபடித்தாகப் பார்க்கின்ற இந்த அடியார்கட்குத், துணி, பிச்சை ஓடு, பிள்ளைக்கறி, மனைவி என்பவற்றிடை எவ்வித வேறுபாடும் தோன்றுவதில்லை. தங்கள் குறிக்கோள் ஒன்றைத்தவிர இவர்கள் சிந்தனை வேறு எங்கும் செல்வதில்லை. அந்தக் குறிக்கோளை விடாது பற்றிநிற்கும் அவாவைத்தான் மிகு அவா என்று இங்குச் சொல்கிறோம்.

குமரகுருபரர் இந்தக் கருத்தையே பின்வருமாறு பாடியுள்ளார்:—

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார் (நீதிநெறிவிளக்கம்–52)

உலகப் பொருள்களில் பேராசை கொண்டு தம்மையே மறந்து திரிபவர்களுக்கும் கடவுட்பித்து, குறிக்கோட் பித்துக் கொண்டு திரியும் அருளாளர்களுக்கும் இப்பாடல் பொருந்துவதாகும். உலகியலாரின் பேராசை பெரியோர்களால் இழித்துரைக்கப்பட்டது; குறிக்கோள் நாட்டமுடையோர் பேரவா பெரியோர்களால் போற்றி வரவேற்கப்பட்டது.

உலகப் பொருட்களிடத்து ஒருவனுக்குப் பேராசை தோன்றுமேயானால் அதுவே அவனை அழிக்கும். கொண்ட குறிக்கோளிடத்து மிகு அவா தோன்றுமேயானால் இந்தப் பேரவா இந்தப் பிறப்பிலேயே அவரை வீடுபேறு அடையச் செய்யும்.

அமைச்சராக இருந்த திருவாதவூரருக்கு நூற்றுக் கணக்கான ஆசைகள் இருந்திருக்கும். அந்த ஆசைகள் வெறும் ஆசை அளவில் நின்றுவிட்டனவா, அல்லது பேராசையாக வளர்ந்து விட்டனவா என்று சொல்ல ஆதாரங்கள் ஏதுமில்லை.

திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு அடிகளாரின் மனத்தில் எல்லா ஆசைகளும் அறவே ஒழிந்துவிட்டன. இந்தப் பல்வேறு ஆசைகள் குடியிருந்த இடத்தில் இரண்டு பேரவாக்கள் தோன்றி, அவர் மனம் முழுதும் வியாபித்து மலைபோல் வளர்ந்துவிட்டன. அதனால் எந்த நேரமும் இந்த இரண்டு அவாக்களின் பிடியில் சிக்கியே இருக்கின்றார்.

தம்மைச் சில விநாடிகளில் மணிவாசகராக மாற்றிய குருநாதரை ஓயாமல் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும்; தம்மை ஆட்கொண்ட திருவடிகளை இறுகத் தழுவிக்கொள்ள வேண்டும் என்ற அவா மலைபோல் வளர்ந்துவிட்டது. இரண்டாவது பேரவா, திருப்பெருந் துறையில் குருநாதர் எதிரே அமர்ந்திருந்த அடியார் கூட்டத்திடைத் தாம் மீட்டும் அமர வேண்டும் என்பதாகும்.

எதிரே காணப்பெற்ற குருநாதரைப் பார்த்துக் கொண்டே இருத்தல், அவர் திருவடிகளைப் பற்றித் தழுவிக்கொண்டேயிருத்தல் இவை இரண்டும் எங்கே, எப்போது நடைபெறவேண்டுமென்றால், அடியார் கூட்டத்திடை தாம் இருக்கும்பொழுது நடைபெறவேண்டும் என்பதே அவர் பேரவாக்களாகும்.

குருநாதர் தரிசனம் மீட்டும் வேண்டும் என்பதைப் பல இடங்களில் பாடியுள்ளார். ஆனால், தூரத்தே அமர்ந்து குருநாதரைத் தரிசித்திருப்பதைக் காட்டிலும், நெருங்கி

யிருந்து அவர் திருவடிகளை நெஞ்சாரத் தழுவிக் கொண்டே இருத்தல்வேண்டும் என்ற பேரவா, குரு தரிசன அவாவைவிட ஒருபடி அதிகமாகவே வளர்ந்துவிட்டது. திருவடிகளைப் பற்றிக்கொண்டிருந்தபொழுது, தொடக்கத் தில் மூன்று பொருள்கள் இருந்தன. அவையாவன: அடிகளார், திருவடி, பற்றுதலாகிய செயல். சற்று நேரத்தில் திருவடி பற்றுதலாகிய செயலில் மறைகின்றது. அடுத்த விநாடி அடிகளாரும் பற்றுதலாகிய செயலில் மறைகின்றார். மூன்று இருந்த இடத்தில் பற்றுதலாகிய செயல்மட்டுமே எஞ்சி நின்றது.

அடிகளாருக்குப் பேரவா இரண்டு நிலைகளில் வளர்ந்தது என்று கண்டோம். அடியாரிடையே தாமும் இருக்க வேண்டும் என்ற அவருடைய இரண்டாவது மிகு அவா கோயில் மூத்த திருப்பதிகத்தில் இடம்பெறுகிறது. அதிலுள்ள பத்துப் பாடல்களில் இருபாடல்கள் (380,387) தவிர ஏனைய பாடல்களில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அடியார் கூட்டம் பற்றிய கூற்று இடம்பெறுகிறது. இப்பதிகத்தின் முதல் பாடலில்(378), 'அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்' என்று வெளிப்படையாகவே தம்முடைய மிகு அவாவைப் பாடுகிறார். 'அடியேற்கு உன் முகந்தான் தாராவிடின் முடிவேன்' (380) என்ற இடத்து மீட்டும் குருநாதர் காட்சி கிடைக்கவேண்டும் என்ற தம் பேரவாவைத் தெளிவு படுத்துகிறார். இப்பதிகத்தின் இறுதிப்பாடலில் (387) மேலே கூறிய வேண்டுகோளை அடுத்து அந்த இரண்டு மிகு அவாக்களும் நிறைவேறும் என்ற உறுதிப்பாடு பேசப்பெறுகிறது. 'நல்காது ஒழியான் நமக்கு என்று உன் நாமம் பிதற்றி நயனநீர் மல்கா வாழ்த்தா வாய்குழறா' என்ற சொற்றொடரில் குருநாதர் காட்சியும் அடியார் கூட்டக் காட்சியும் எப்படியும் தமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை துளிர்விடுவதைக் காண்கிறோம்.

குருநாதர் காட்சி கிடைத்தவுடன் அவருடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டிருந்த அந்த ஆனந்த அனுபவம் மீட்டும் கிடைக்கவேண்டும் என்ற மிகு அவா விசுவரூபம் எடுக்கிறது. அதனை வெளிப்படுத்துவதே புணர்ச்சிப் பத்தாகும்.

......அள்ளூறு உள்ளத்து அடியார்முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி
விரையார் மலர்தூவி (உன்திருவடியை)
பூண்டுகிடப்பது என்றுகொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே...... (440)

என்ற தொடரில் இரண்டு அவாக்களும் பேசப்பெறுதைக் காணலாம்.

இதன் காரணமாகவே 'மிகு அவா' என்ற தலைப்பில் இந்த இரு பதிகங்களையும் வைத்துள்ளோம்.

## XI. காட்டியதும் கண்டதும்

இத்தலைப்பில் பின்வரும் பதிகங்கள் தொகுக்கப்பெற்றுள்ளன.

1. திருக்கழுக்குன்றப் பதிகம் (30)

2. கண்ட பத்து (31)

இதற்கு முந்தைய தலைப்பாக உள்ள மிகு அவாவில் அடிகளார் மனத்தில் தோன்றி வளர்ந்த இரண்டு பெரிய மிகு அவாக்களைப்பற்றிக் கண்டோம். அதனையடுத்துக், 'காட்டியதும் கண்டதும்' என்ற தலைப்பு வைக்கப்படுவது பொருத்தமாகும்.

திருக்கழுக்குன்றம் சென்றபொழுதுகூட அடிகளாரின் நினைவு பெருந்துறை நிகழ்ச்சியில் தோய்ந்திருந்தது

என்பதைத் திருக்கழுக்குன்றப் பதிகத்தின் முதற்பாடலின் முதலடியிலேயே காணமுடிகிறது. கழுக்குன்றத்தில் தோன்றிய முதல் நினைவு பெருந்துறை நினைவே ஆகும். 'பிணக்கிலாத பெருந்துறைப் பெருமான்' (468) என்று தொடங்குவதால் அவருடைய உள்ளத்தை ஆட்கொண்டிருந்த பெருநினைவு இது என்பதை அறியமுடிகின்றது. இப்பதிகத்தில் இன்று கிடைத்துள்ள ஏழு பாடல்களில் (468-474) ஆறு பாடல்கள் பெருந்துறைபற்றிப் பேசுகின்றன என்றால், குருதரிசனம் மீட்டும் கிடைக்கவேண்டும் என்ற மிகு அவா அடிகளார் உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. இந்த நினைவைப் பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளாரே! அப்படியிருக்க, கழுக்குன்றப் பதிகத்தில் என்ன சிறப்பு என்ற ஐயம் பலருக்கும் தோன்றலாம். உண்மையைக் கூற வேண்டுமேயானால், அடிகளாரின் மிகு அவா முழுவதுமாக நிறைவேறிய இடம் கழுக்குன்றே என்று சொல்ல வேண்டும்.

திருப்பெருந்துறைக் குருதரிசனத்தில் குருநாதரை மட்டுமா கண்டார்? தம்மை ஆட்கொண்ட குருநாதரைக் கண்டார்; ஓர் அந்தணனைக் கண்டார்; செந்தழல் புரை திருமேனியுங் கண்டார்; உமையொருபாகனைக் கண்டார்; தில்லைக் கூத்தனையும் அல்லவா கண்டார். இத்தனை காட்சிகளும் அடிகளார் மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது உண்மைதான். திருக்கழுக்குன்றத்தில், திருப்பெருந்துறைப் பெருமான் காட்சி தொடங்கி தில்லைக்கூத்தன் காட்சிவரை நினைந்து, அவற்றை 'மீட்டும் பெறுவது என்று கொல்லோ' என்று வருந்தினார் போலும். அடியார் துயரைப் பொறுக்க மாட்டாத, கழுக்குன்ற நாதன் அடிகளார் மனத்தில் தோன்றிய பேரவா முழுவதையும் நிறைவேற்றத் திருவுளம் கொண்டான். பல திருக்கோலங்களை அடிகளாருக்குக் காட்டினான்.

கழுக்குன்றநாதனை, எதிரே நின்று வழிபடுகிறார் அடிகளார். என்ன அதிசயம்! ஒரு விநாடிக்கு முன்னர்க் கண்ட கழுக்குன்ற நாதன் எதிரே இல்லை. அந்த இடத்தில் பெருந்துறைப் பெருமான் அல்லவா இருக்கிறான்! அதுவும் ஒரு விநாடிதான். குருநாதர் முதல் அடியார் கூட்டம் வரைப் பல காட்சிகள் வந்து வந்து மறைகின்றன. அந்தக் காட்சிஆனந்தத்தில் ஈடுபட்ட அடிகளார், 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்க் கழுக்குன்றிலே' (468) என்று பாடுகிறார்.

ஏழாவது (474) பாடலில் 'அடியார் முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று பாடுவதால் மிகு அவாவின் முழு நிறைவேற்றத்தைத் திருக்கழுக்குன்றத்தில் அடிகளார் கண்டார் என்பது தெரிகிறது. 'கோலம் காட்டினாய்' என்ற தொடரைப் பயன்படுத்தியதால், என்றுமே உள்ள அத்திருக்கோலங்களை அடிகளார் ஊனக்கண்களாலும் காணுமாறு காட்டினான் என்பதையே இத்தொடர் விளக்கி நிற்கின்றது. குருநாதர் திருவருள் பெற்று இந்த அளவு வளர்ச்சியடைந்த நிலையிலும், அடிகளார்போன்றவர்கள் காணமுடியாத பல திருக்கோலங்கள் தமக்கு உண்டு என்பதைத் 'காணொணா'த கோலங்களைக் காட்டினான் (471) என்பதன் மூலம் குறிப்பிடுகிறார். இந்தக் காட்சி கிடைத்தவுடன், அடிகளாருக்கு ஒன்று புரிகிறது. தாம் முன்னர்க் கண்ட கோலங்கள், இப்போது காணுகின்ற புதிய கோலங்கள் என்பவற்றை வரிசைப்படுத்திப் பார்க்கும்பொழுது இப்புதிய கோலங்களில் இதுவரையில் காணஒண்ணாத பல திருக்கோலங்கள் இருப்பதை உணர்கின்றார். ஆதலால்தான் கணக்கிலாத் திருக்கோலம் என்று முதற்பாட்டில் பாடியவர், கணக்கிலா என்ற சொல் எண்ணிக்கையைக் குறிக்கின்றதே தவிர, தன்மையைக் குறிக்கவில்லை என்பதை உணர்த்தப்போலும் 'காணொணாத் திருக்கோலம்' என்று நான்காம் (471) பாடலில் பாடுகிறார்.

எந்த அளவு வளர்ச்சியைடந்தபோதிலும், உடல் தொடர்பு இல்லாமல் ஆன்மா தனித்து நிற்கும் பொழுதுகூட காணஒண்ணாத சில காட்சிகளை இந்த உடம்புடன் இருக்கும்பொழுதேகூட, தமக்குக் காட்டினான் என்பதையே 'காணொணாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய்' என்று பாடுகிறார்.

இப்பதிகத்தின் ஏழு பாடல்களிலும் 'காட்டினாய்' என்ற சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது. எத்தகைய அருளாளர்களும், வளர்ச்சியடைந்தவர்களும் இந்தப் பருவுடம்புடன் இருக்கின்றவரையில் கருத்தாலோ கண்ணாலோ காணஒண்ணாத இறைக்காட்சிகள் பல உண்டு என்பதை அறியமுடியும். கருத்தாலும் காணமுடியாத ஒரு பொருள் கண்ணாலும் காணக்கூடிய வகையில் தானே முன்வந்து தன்னைக் காட்டிக் கொண்டாலொழிய யாரும் காண ஒணாது. கருணையே வடிவான குருநாதர் தம்முடைய பல்வேறு திருக்கோலங்களை தாமே காட்ட முற்பட்டதால்தான் அடிகளாரால் காணமுடிந்தது. இதே கருத்தை நாவரசர் பெருமானும் 'காண்பார் யார் கண்ணுதலாய் காட்டாக்காலே' என்று பாடிப்போந்தார்.

அடுத்து நிற்பது கண்ட பத்தாகும். இப்பதிகத்தின் பெரும்பாலான பாடல்கள் 'தில்லை கண்டேனே' என்று முடிகின்றன. இதற்கு முன்னர் அடிகளார் கண்ட தில்லைக் காட்சிக்கும் இப்போது கண்ட தில்லைக் காட்சிக்கும் வேறுபாடு இருக்கின்றது. இதற்கு முன்னர்க் கண்ட காட்சியில் தில்லைக்கூத்தன் தரிசனம் தந்தான். அப்பொழுதும் அடிகளார் கண்டது ஐம்பொன் சிலையை யன்று. கூத்தனின் பல்வேறு நடனங்களில் ஆனந்த நடனத்தின் ஒரு பகுதியைக் கண்டார். 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக, குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக' (பெ.பு.தடுத்து: 106) அடிகளார் கண்டார்.

ஆனால், கண்ட பத்துப் பாடுகின்ற நிலையில் 'அணிகொள் தில்லை கண்டேனே' என்று பாடுகிறாரே! தில்லையில் எதனைக் கண்டார்? நடனமிடும் கூத்தனின் கூத்தின் ஒரு நிலையையா கண்டார்? இல்லை. கூத்தன், அதனைக் காண்கின்ற அடிகளார், காட்சி என்ற மூன்றும் மறைந்து அந்தமிலா ஆனந்தம் ஒன்றுமட்டுமே அங்கு நிலைபெறுகிறது. இந்த ஆனந்த அனுபவத்தினின்று வெளிவந்த நிலையில், இதனைப் பெற்றிருந்தது தாமே என்பதை உலகுக்கு உணர்த்த வந்த அடிகளார் 'கண்டேன்' என்ற தன்மை ஒருமை வினைமுற்றால் கூறுகிறார்.

ஆனந்தம் என்பது விவரிக்கவோ விளக்கவோ எடுத்துக்கூறவோ முடியாத உள்ளத்தின் ஒருநிலை ஆகும். மேல்மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, இன்பம் ஆகிய உணர்ச்சிகள் போன்றதன்று இது. இந்த ஆனந்தம், அடிச்சித்தத்தில் தோன்றுவதாகும். நம்முடைய முயற்சியால் இதனைத் தோற்றுவிக்கவோ உள்ளே செலுத்தவோ முடியாது. இந்த அடிப்படையில்தான் ஆனந்தத்தைக் கண்டேன் என்று பாடுகிறார் அடிகளார். ஆனந்தத்தை அனுபவிக்க முடியுமே தவிரக் காண்பது எப்படி? இந்த ஆனந்தத்தைச் சித்தத்தில் தோற்றுவித்தவன் எப்படி இருக்கிறான்? கூத்தன் வடிவிலா? இல்லை. கூத்தன் வடிவில், எடுத்த பொற்பாதம், அதனைச் சுட்டுகின்ற இடதுகை நீட்சி, அஞ்சேல் என்ற வலக்கரம் என்பவை இப்பொழுது காட்சியளிக்கவில்லை. பின்னர் எதனை அடிகளார் கண்டார்? கூத்தன் வடிவத்தையே முதலிற் கண்டார்; சில விநாடிகளில் இந்த வடிவம் மறைகிறது. அடிச்சித்தத்தில் தோன்றிய ஆனந்தம் இப்போது வெளியேயும் காட்சி தருகிறது.

சர்க்கரையில் செய்த மிளகாய், மிளகாயின் இயல்பு எதுவும் இல்லாமல் அதன் வடிவுமட்டும் பெற்றுச்

சர்க்கரையின் இயல்பை வெளிப்படுத்துவதுபோல் ஆனந்த சொரூபனாகிய கூத்தன் நடனமாடும் காட்சியை நல்குகிறான்.

மிகச் சாதாரண மக்கள் ஐம்பொன்னால் வடித்த சிலையைக் கண்டனர். சற்று உயர்ந்தவர்கள் சிலையின் வடிவத்தில் சில உட்பொருட்களைக் கண்டனர். இன்னும் உயர்ந்தவர்கள், சிலையைக் கடந்து நிற்கும் அவன் உண்மைச் சொரூபத்தை உணர்ந்தனர். அடிகளார் போன்ற அருளாளர்களுக்குத் தில்லைக்கூத்தனுக்குப் பதிலாக, கட்புலனுக்கு உட்படாத ஆனந்தம் என்னும் பண்பு இப்பொழுது வடிவு பெற்று எதிரே நிற்கின்றது. அடிகளாரின் நிலைக்குக் கீழே உள்ளவர்கள், இந்த ஆனந்தத்தை உணர்ந்தார்கள். அவர்களைவிடப் பல மடங்கு மேலே சென்றுள்ள அடிகளார் அந்த ஆனந்தத்தை உணர்ந்ததோடு, அனுபவித்ததோடு அந்தப் பண்பினைக் கண்ணாலும் பார்க்கிறார்.

மனிதர்களுக்குரிய பூத உடம்பிலுள்ள பசுகரணங் களெல்லாம் பதிகரணங்களாக மாறிய நிலையிலாவது இக்காட்சி கிட்டுமா? சந்தேகந்தான். அப்படியானால் ஆனந்தமாகிய பண்பை, அதனையே வடிவாகக் கொண்டுள்ள ஒருவனை எப்படிக் காண்பது? அதற்கு ஒரு வழி கூறுகிறார் அடிகளார்.

திருவாதவூரராகவோ மணிவாசகராகவோ உள்ள நிலையில் ஆனந்தத்தைக் கண்ணால் காணமுடியாது. ஆனால் 'கண்டேன்' என்று சொல்கிறாரே அடிகளார்! ஆழ்ந்து நோக்கினால் காண்பதற்குரிய வழியையும் அவரே கூறக் காணலாம். 'சிவமாக்கி எனையாண்ட' (475) என்ற தொடர் சிந்தனைக்குரியது. சிவமாக ஆக்கப்பட்ட நிலையில் எதிரே உள்ள ஆனந்த சொரூபத்தை அவரால் காணமுடிந்தது.

இப்பாடலுக்கு உரை எழுதிய காலத்தில் (பகுதி-4: பக்-137,138) 'கண்டேன்' என்பதற்குக் 'கண்ணால் கண்டேன்' என்று பொருள் கூறத் தேவையில்லை; கருத்தில், உணர்வில் கண்டேன் அல்லது 'உணர்ந்தேன் என்பது பொருளாம்' என்று கூறியுள்ளேன். இப்போது அதற்கு முரணாக இப்புதிய பொருளையும் எழுதியுள்ளேன்.

இறைவன் கூத்தன் வடிவைப் பெற்றுள்ளான். தொடக்கத்தில் அந்த வடிவில் ஈடுபாடு கொண்ட அடிகளார், மெல்ல மெல்ல வடிவு மறைந்து, பண்பு என்ற நுண்பொருள் அங்கே இருப்பதை உணர்ந்ததோடு மல்லாமல், கண்களாலும் கண்டார் என்றும் பொருள் கூறலாம்.

பசுகரணங்கள் பதிகரணங்களாக மாறின என்று சைவவாதிகள் அடிப்படையில் நின்று இதற்குப் பொருள் கூற நான் முன்வரவில்லை. அடிகளாரின் இறையனுபவ வளர்ச்சியின் முடிவில், அவர் சிவமாகவே ஆகிவிட்டார். தாமாக ஆனாரா? இல்லை என்கிறார் அடிகளார். 'சிவமாக்கி எனை ஆண்ட' என்ற தொடரால் இவரை ஆள்வதற்கு முன்னரே குருநாதர் கருணையால் இவர் சிவமாக ஆக்கப்பெற்றார். சிவமாக ஆக்கப்பெற்றமையின் ஆனந்தமாகிய பண்பைக் கண்களாலும் காணமுடிந்தது. எனவே, 'அந்தமிலா ஆனந்தத்தை' அணிகொள் தில்லையில் கண்டார் என்றால், கூத்தனுடைய வடிவத்தையும் கடந்துநிற்கும் ஆனந்த சொரூபத்தைக் கண்களால் கண்டார் என்று பொருள் கொள்வதே சிறப்புடையதாகத் தோன்றுகிறது. அதேபோல இப்பதிகத்தில் 'கோதில் அமுது ஆனானைக் கண்டேன்' (479) 'கிளரொளியைக் கண்டேன்' (484) என்ற தொடர்கள் பண்புப் பொருள்களை உணர்த்தி நிற்பதைக் காணலாம். இவற்றைக் கண்டேன் என்று கூறுவதால் பண்புகளையும் கண்ணால் காணும் ஆற்றலை அடிகளார் பெற்றுள்ளார் என்பதை அறியலாம்.

பண்பை அறிவதற்கோ உணர்வதற்கோ பதிலாகக் கண்களாலும் காணுமாறு செய்தவன் அவன் ஆதலால் 'காட்டினான்' என்ற சொல்லுக்கு அவனே பொருளாதல் காணலாம். இதனையே அடிகளார்

'காட்டாதனவெல்லாம் காட்டிப்பின்னும்
கேளாதனவெல்லாம் கேட்பித்து' (32)

என்று பாடுகிறார்.

இதனாலேயே இவ்விரண்டு பதிகங்களும் 'காட்டியதும் கண்டதும்' என்ற தொகுப்பில் வைக்கப்பெற்றுள்ளன.

## XII. பிரார்த்தனை

இத்தலைப்பினுள் பின்வரும் பதிகங்கள் இடம்பெறுகின்றன:

1. ஆசைப் பத்து (25)
2. பிரார்த்தனைப் பத்து (32)
3. எண்ணப் பதிகம் (44)
4. அருட் பத்து (29)
5. குழைத்த பத்து (33)
6. பண்டாய நான்மறை (48)

பிரார்த்தனை என்ற சொல் வேண்டிக்கொள்ளுதல் என்ற பொருளைத் தரும். உயிர்வர்க்கத்தில் உயர்ந்தது மனிதப்பிறவி என்பர். மனிதர்களைத் தவிரப் பிற உயிர்கள் தங்களுக்கு வேண்டும் பொருள் எங்கே உள்ளது என்பதை அறிந்து அங்கே சென்று அதனைத் துய்க்கின்றன. ஆனால், மனிதன் நிலை வேறு. அவனுடைய விருப்பங்கள், வேண்டுதல்கள் எண்ணில் அடங்காதவை. தனக்கு வேண்டும் என்ற ஒன்றைத் தன்னைவிடப் பெரியவர்களிடம்

சென்று அதனைத் தருமாறு வேண்டிக்கொள்ளுதல் ஒருமுறை. அதாவது வேண்டப்படுவர் தம்பால் உள்ள ஆற்றலால் எதிரே உள்ளவர் அதாவது வேண்டியவர், வேண்டும் பொருளைப் பெற்றுத் தருவர். ஆனால், இந்த வேண்டல் வேண்டப்படுவோரின் தகுதிக்கு மிக மேற்பட்டும் அவர்கட்குக் கிட்டாததாயும் இருக்குமேயானால் அவர்கள் அதனைத் தர முடியாது.

எனவே, வேண்டுபவர் மிக்க அறிவுக்கூர்மையுடன் ஒன்றைச் சிந்தித்துச் செய்ய வேண்டும். தாம் வேண்டும் பொருள் வேண்டப்படுபவரால் தரக்கூடியதா, அவர்கள்பால் இல்லையென்றாலும் அதனைப் பெற்றுத்தரும் ஆற்றல் அவரிடம் உள்ளதா என்பதையெல்லாம் சிந்தித்து, அவர்களால் முடியும் என்பதை அறிந்தபிறகே, தம் வேண்டுதலைத் தெரிவிக்க வேண்டும். இதுவே, பிரார்த்தனையின் அடிப்படையும் விளக்கமுமாகும்.

அடிகளார் தம்முடைய பிராத்தனையைப் பல பதிகங்களில் வெளியிடுகிறார். அவற்றைத் தொகுத்து வரிசைப்படுத்திக் கூறுவதே இத்தொகுப்பின் நோக்கமாகும்.

இப்போது அடிகளார் வேண்டுவனவற்றை இத் தொகுப்பில் உள்ள பல பாடல்களிலிருந்தும் காணமுடியும். 'பாருருவாய பிறப்பு அற வேண்டும், பத்திமை பெற வேண்டும்' (599) என்பது ஒரு வேண்டுகோள். தம்மிடமுள்ள இந்த உடம்பு எத்தகையது என்பதை 'மொய்ப்பால் நரம்பு கயிறாக' (419) என்ற பாடலிலும் 'சீவார்ந்து' (420) என்று தொடங்கும் பாடலிலும் 'மிடைத்தெலும்பு' (421) என்று தொடங்கும் பாடலிலும் வெளிப்படுத்துகிறார். இவ்வளவு கேவலமான உடலை வைத்துக்கொண்டிருப்பதைக் காட்டிலும் இந்தப் பிறப்பைப் போக்கி அவனுடைய அடியார் கூட்டத்திடைக் கூடும் வாய்ப்பைப் பெறவேண்டும்; இந்த அருளைப் புரிந்து அவன் ஆட்கொள்ள வேண்டும் என்று மனம் உருகி

அடிகளார் வேண்டும் பாடல்களையுடைய பதிகங்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இனி, இவற்றை ஒவ்வொன்றாகக் காணலாம்.

முதலாவதாக உள்ளது ஆசைப் பத்து என்பதாகும். இப்பதிகம் முழுவதும் 'ஆசைப்பட்டேன் கண்டாய்' என்று முடிவதைக் காணலாம். ஆசை என்பது மனிதர்களுக்கு எழும் இயல்பானதொன்றாகும். ஆனால், கேவலமானதும் அழியக்கூடியதும் நிலையற்றதும் ஆகிய பொருட்களின்மேல் ஆசை வைப்பதைக் காட்டிலும் இறப்ப உயர்ந்ததும், நிலைபேறுடையதுமான இறையருளில் நம்பிக்கை வைத்து, அது தனக்குக் கிடைக்கவேண்டும் என்று ஆசைப்படுதல் சிறப்புடையதாகும். ஆசை என்பது உடம்பு உள்ளவரை அதனுடன் ஒட்டிக்கொண்டிருக்குமாதலின் அதனைப் போக்குவது இயலாத காரியம். ஆனால், நீக்க முடியாத அந்த ஆசையை அது செல்லும் வழியைத் தவிர்த்து மற்றொரு வழியில் மடைமாற்றம் செய்யக் கூடுமேயானால், அது வாழ்வில் சிறந்த பயனை நல்கும்.

அடிகளாரின் ஆசை எத்தகையது என்பதை 'அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்' (418), 'அப்பா காண ஆசைப்பட்டேன்' (419), 'உன் திரு மலர்ப்பாதம் அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்' (421) முதலாய தொடர்கள் மூலம் அடிகளாரின் ஆசை எந்தத் திசையில் செல்கின்றது என்பதை அறியமுடிகின்றது.

ஒவ்வொரு பாடலிலும் 'அம்மானே' என்று விளித்து, 'ஆசைப்பட்டேன்' என்று கூறுகிறவர் 'கண்டாய்' என்கிற ஒரு சொல்லையும் தவறாமல் பெய்கிறார். அதாவது தம்முடைய ஆசையை மடைமாற்றம் செய்து, இந்த உயர்ந்த பொருளில் செலுத்த முயல்வதை 'நீ கண்டுகொண்டே இருக்கிறாய்; எனவே இதற்கு உதவவேண்டியது உன்னுடைய கடமை' என்பதைத் தம் தலைவனுக்கு நினைவுறுத்துவார்போல ஒவ்வொரு பாடலிலும் கண்டாய்

என்ற சொல்லைப் பயன்படுத்துவதைக் காணலாம். இக்கருத்தைத் தாயுமானவப் பெருந்தகையும் தம்முடைய முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கூறி இறுதியாகச் 'சாமீ! நீ அறியாததோ' (சச்சிதா:5) என்று பாடுவதைக் காணலாம்.

இயல்பாகவே மனிதரிடத்து அமைந்திருக்கும் ஆசையை அடிகளார் எப்படி மடைமாற்றம் செய்கிறார் என்பதை அறிந்துகொண்டால், இதனை ஏன் இத்தொகுப்பில் முதலில் வைத்துள்ளோம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அடுத்திருப்பது பிரார்த்தனைப் பத்தாகும். ஆசை மடைமாற்றம் செய்யப்படும்பொழுது அங்கே தன்னலமும், 'நானு'ம் கொஞ்சம் கொஞ்சமாக அழிகின்றன. அவற்றின் வலுக் குறையக் குறைய ஆசை பிரார்த்தனையாக மாறுகிறது. அடிகளாரின் பிரார்த்தனைப் பத்தை நம் போன்ற சாதாரண மக்கள் அன்றாடம் செய்யும் பிரார்த்தனையோடு வைத்து எண்ணக்கூடாது. நம் போன்றவர்கள் ஆசை, உலகப் பொருள்பற்றியதுதான். அது கிடைக்க வேண்டும் என்று அரைகுறை மனத்துடன் இறைவனிடம் வேண்டுகோள் விடுப்பதைப் பிரார்த்தனை என்று சொல்லக்கூடாது. இந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டால், அடிகளாரின் ஆசைப் பத்தின் பின்னர் ஏன் பிரார்த்தனைப் பத்தை வைத்தோம் என்பது நன்கு விளங்கும்.

இப்பத்தின் முதற்பாடல் எவ்வாறு முடிகிறது? 'உலவா இன்பச்சுடர் காண்பான் அலந்து போனேன்' (485) 'எவ்வளவு ஆசைப்பட்டும் அந்த இன்பச்சுடரைக் காணமுடியவில்லை என்றால் குறை என்மாட்டுள்ளது என்பதை உணர்ந்தேன். அக்குறை என்ன என்பதையும் அறிந்துகொண்டேன். அச்சுடரைக் காணவேண்டும் என்ற ஆர்வம் இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. ஆகவே, இப்பொழுது நான் உன்னிடம் பிரார்த்திப்பது ஒன்றே ஒன்றுதான். நின்னை அடையவேண்டும் என்ற என்

ஆர்வம் இன்னும் வளர்ந்து பெருக (கூர) நீ அருள் செய்ய வேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனையாகும்' என்கிறார்.

இங்குக் கூறப்பெற்ற கருத்து சரியானதே என்பதை அடுத்த பாடலில் வரும் 'அடியார் சிலர் அருள் பெற்றார் ஆர்வங்கூர' (486) என்ற தொடரால் விளக்குகின்றார். 'அருள் பெற்றவர்' என்பதால் அவர்கள் முன்னரே அருள் பெற்றுவிட்டார்கள் என்பது தெரிகிறது. எப்படி அருளைப் பெற்றார்கள் இவர்கள் என்ற வினாவிற்கு ஆர்வங் கூர்தலினால் (ஆர்வங் கூர) இவர்கள் அருளைப் பெற்றார்கள் என்று தெரிகிறது.

எனவே, இத்தலைப்பின்கீழ் நம் முறைவைப்பில் ஆசைப்பத்தின் பின்னர்ப் பிரார்த்தனைப் பத்து இடம் பெற்றுள்ளது.

பிரார்த்தனைப் பத்தில் ஆர்வங்கூர அருளவேண்டும் என்று பாடினார் அல்லவா? ஆர்வங் கூர்ந்தால் அருள் பெறமுடியும் என்பதையும் பிரார்த்தனைப் பத்தின் இரண்டாம் பாடலில் கூறினாரல்லவா? ஆர்வங் கூர்ந்து அருளைப் பெற்றால் அதன் பயனாக என்ன விளையும் என்பதை எண்ணப் பதிகத்தில் விரித்துப் பேசுகிறார் அடிகளார்.

திருவாசகம் முழுவதையும் படிக்காமல் எண்ணப் பத்து ஒன்றைமட்டும் படித்தால் சில ஐயங்கள் தோன்றும். 'பிறப்பு அற வேண்டும்' 'பத்திமையும் பெறவேண்டும்' (599) என்றால், இது இறைநெறியில் செல்லும் தொடக்கப் படியில் உள்ளவர்கள் வேண்டுவதுபோல அமைந்திருப் பதைக் காணலாம்.

முதற்பாடலில் பத்திமை பெறவேண்டும் என்று பாடியவர், இரண்டாவது பாடலிலேயே பரம்பொருள் குருநாதராக எழுந்தருளி வந்து தம்மைக்

கண்டுகொள்ளுமாறு பணித்து அருள்செய்ததை விரிவாகப் பாடுகிறார். அதுமட்டு மல்ல. அந்தப் பெரியோன் தம்மை ஆட்கொண்டு 'உன்னைவிட்டு என்றும் பிரியேன்' என்று உணர்த்தியதாகவும் பாடுகிறார். இது பெருந்துறையில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். அதன் பிறகு பல நாட்கள் கழித்துப் பாடப்பெற்ற எண்ணப் பதிகத்தில் 'பிறப்பற வேண்டும்' என்று பாடுவதின் நோக்கம் என்ன? இதன் முன்னர்ப் பல பாடல்களில் தம்முடைய பிறப்பு அற்றுவிட்டது என்றும் பிறப்பை அறுத்துவிட்டான் என்றும் பாடியுள்ளாரே! அப்படியிருக்க, ஏதோ புதிதாக ஒன்றை வேண்டுவதுபோலப் பிறப்பற வேண்டும், பத்திமையும் பெறவேண்டும் என்று பாடுவது பொருந்துமா? அடுத்த பாடலில் (601) தமக்கு அருள் செய்தமையை முழுவதுமாகக் கூறிவிடுகிறார். எனவே, இந்தப் பாடலுக்குப் பொருள் செய்வதில் புதிய கண்ணோட்டம் தேவை என்று தோன்றுகிறது.

முன்னர்த் தொகுக்கப்பெற்ற பத்துக்களை மறுபடியும் ஒருமுறை படித்தால் அதிலுள்ள வளர்ச்சிமுறை நம் கவனத்தை ஈர்க்கிறது. திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு பெரிதாக வளர்ந்து அருளாளர்கள் வரிசையில் முதல் வரிசையில் இடம்பெற்றுள்ள அடிகளார் பிறப்பற வேண்டும், பத்திமை வேண்டும் என்று பாடினால் வேறு யாரையோ மனத்துட் கொண்டு இவற்றைப் பாடியதாக நினைக்க இடம் உண்டு.

நாவரசர் பெருமான் நன்கு வளர்ந்துவிட்ட நிலையில் 'மனிதர்காள் இங்கே வம். ஒன்று சொல்லுகேன்' (திருமுறை: 5-91-7) என்று மனித சமுதாயத்தை அழைத்துப் பாடியதுபோல அடிகளாரும் பாடுகின்றாரோ என்று தோன்றுகிறது.

இதற்குப் பின்னர் நான்காவது பாடலில் (602) 'புத்திலனேனும் பணிந்திலனேனும் உன் உயர்ந்த

பைங்கழல் காணப் பித்திலனேனும் பிதற்றிலனேனும் பிறப்பறுப்பாய்' என்றும் 'காணும் அது ஒழிந்தேன் நின் திருப்பாதம் கண்டு கண் களி கூரப் பேணும் அது ஒழிந்தேன் பிதற்றுமது ஒழிந்தேன்' (603) என்றும் பாடியுள்ளதைக் கூர்ந்து நோக்க வேண்டும். இப்பதிகத்தில் இன்று கிடைத்துள்ள ஆறு பாடல்களின் மூன்று பாடல்களில் முதல் ஒன்றிரண்டு அடிகளில் இவ்வாறு பேசப்பெற்றுள்ளது. சற்று நின்று நிதானித்தால், நீத்தல் விண்ணப்பத்தில் இடம்பெறவேண்டிய கருத்துக்கள் இவை என்று எண்ணத் தோன்றுகிறது.

அப்படியிருக்க, எண்ணப் பதிகத்தில் இவை இடம்பெற்றுள்ளன என்றால் புதிய சிந்தனையுடன் இதனை நோக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்குகிறது.

இந்தப் புதிய சிந்தனையின் விரிவான விளக்கத்தை அடுத்துவரும் 'புதிய திருப்பம்' என்ற தலைப்பில் காணலாம். இப்போதைக்கு ஒன்றைமட்டும் கூறலாம். எண்ணப் பதிகம் மக்கள் சமுதாயத்தை நோக்கிப் பாடப்பெற்றதாகும். இதிலிருந்து அடிகளாரின் குறிக்கோளில் ஒரு புதிய திருப்பம் தொடங்குகிறது. 'இதைச் செய்வீர்களாக' என்று உடன்பாட்டு முறையில் ஆணையிட்டால் அதைக் கேட்பவர்கள் மனத்தில் எதிர்மறையான எண்ணந்தான் தோன்றும். இந்த நுணுக்கத்தை அறிந்த அடிகளார் ஏதோ தனக்காக ஒன்றை விரும்பிக் கேட்டுக்கொள்வதுபோலப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

இதற்கு அடுத்து வைக்கப்பெற்றுள்ளது அருட்பத்தாகும். மனித மனத்திற்கு ஒரு விந்தையான சுபாவம் உண்டு. எவ்வளவு நிறைவு பெற்றிருந்தாலும், அமைதி நிறைந்திருந்தாலும் யாரோ ஒருவர் மறுபடியும் நம்பிக்கையூட்டி அச்சம் தெளிவிக்க வேண்டும் என்ற

எண்ணம் அனைவர் மனத்திலும் தோன்றுவது ஒன்றாகும். தாம் செல்லும் வழி சரியானதுதான், தம்முடைய நம்பிக்கை உறுதியானதுதான், தமக்குக் கிடைத்துள்ள பெரும்பேறு நிலையானதுதான் என்பது அடிகளாரைப் பொறுத்தமட்டில் தெளிவான ஒன்றாகும். அப்படியிருக்க, இப்பொழுது மனத்திடைப் பழைய நிகழ்ச்சியின் புதிய படமொன்று ஓடுகின்றது. திருப்பெருந்துறை, குருந்த மரம், அதன் அடியில் குருதரிசனம் என்பவை மீட்டும் மனத்திடை வந்தவுடன் இது என்றோ நிகழ்ந்த ஒன்று என்பதை அடிகளார் மனம் மறந்துவிடுகிறது. முன்னொரு நாள் நிகழ்ந்ததாயினும் இன்று மீட்டும் அதனை நினைக்கும்பொழுது அன்று தோன்றாத ஒரு புதிய விருப்பம் இன்று தோன்றுகிறது. இந்நிகழ்ச்சி நேரடியாக நடைபெற்றபொழுது, அடிகளார் தம்மை மறந்து ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தமையின் குருநாதர் வாய் திறந்து பேசவேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை. 'தில்லைக்கு வருக' என்று குருநாதரின் ஆணை இவருக்குக் கேட்டது உண்மைதான். அதற்குமேல் அவர் எதுவும் பேசவேண்டும் என்று அன்று புதிதாகப் பிறந்த மணிவாசகர் எதிர்பார்க்கவில்லை.

இத்துணை நாட்கள் கழித்து, அந்த நிகழ்ச்சியை நினைக்கும்பொழுது குருநாதர் வாய் திறந்து, 'அது என்ன' என்று கேட்கவேண்டும் என்ற விருப்பம் மனத்திடைத் தோன்றுகிறது. 'அது என்ன' என்று நேரடியாகக் கூறாமல் 'அதெந்துவே' என்ற திசைச்சொல்லால் குறிப்பிடுவதிலும் ஒரு நுண்மையான பொருள் உண்டு. 'அது என்ன' என்ற இந்த வினாவைக் குருநாதர் கேட்க வேண்டுமென்று அடிகளார் நினைக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர் திருவாய்மலர்ந்து ஏதாவது இரண்டு சொற்கள் கூறினால், அதைக் கேட்கும் பேறு தமக்குக் கிட்டினால் அதுவே போதும் என்று எண்ணினார். அதனாலேயே பலருக்கும்

எளிதில் பொருள் விளங்காத ஒரு திசைச் சொல்லைப் பயன்படுத்தினார்.

இதனை அடுத்து நாம் வைத்துள்ளது குழைத்த பத்தாகும். இதுவும்கூட மக்கள் சமுதாயத்தை நோக்கிக் கூறியது என்று கொள்ளலாம். இவ்வாறு பிறருக்கு இன்னது செய்யவேண்டும் என்று மறைமுகமாகப் பேசும்பொழுது அடிகளார் கையாளும் முறை ஒன்று உண்டு. மனிதர்களை ஒன்று செய்க என்று வேண்டினால், அதைச் செய்தால் ஏற்படும் பயன் என்ன என்பதை அறிய விரும்புவர். இதனை மனத்திற்கொண்டே அடிகளார் நீங்கள் உரைப்பீர்களானால் அதன் பயன் உடனே கிட்டும் என்ற பொருள்பட 'உழைத்தால் உறுதி உண்டு' என்று பாடுகிறார். இதனைக் கேட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்று நினைப்பவர்கள் அவ்வழியிற் செல்லும்பொழுது விரும்பியோ விரும்பாமலோ, அறிந்தோ அறியாமலோ பிழைகள் பல செய்யக்கூடும். அதனால் மனம் கலங்கத் தேவையில்லை என்பதை அறிவுறுத்தவே 'பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ' (496) என்ற தொடரை வைக்கின்றார். இறைவனைப் பார்த்து 'உமையாள் கணவன்' என்று விளித்ததால், பிழைபொறுக்கும் தாயின் பங்கினன் என்பதை அவனுக்கு நினைவூட்டி, 'உயிர்களின் பிழைகளை நீ பொறுக்க வேண்டும்' என்று கூறுகிறார்.

இப்பதிகத்தின் இரண்டாவது பாடல் (497) மனித வாழ்வில் தோன்றும் ஒரு சிக்கலை அறிவுறுத்துகிறது. பல நாள் துன்பமுற்ற ஒருவன் திடீரென்று துன்பம் நீங்கிய பொழுது பெருமகிழ்ச்சி அடைகின்றான். இனி, தனக்குத் துன்பமே வராது என்று நினைக்கின்றான். இந்த விடுதலை நிரந்தரமானது என்று மகிழ்கின்றான். ஆனால், வினைச் சுழற்சியில் அகப்பட்டவனுக்கு நன்மை தீமை என்ற இரண்டும் மாறி மாறி வருமன்றே? அதனைச் சிந்திக்காமல்

நிரந்தரமான விடுதலை உண்டு என்று நினைத்து மகிழ்ந்தவனுக்கு இந்த மாற்றம் பெரும் அதிர்ச்சியைத் தருகிறது. அந்த மனநிலைதான் முதல் அடியில் பேசப் பெறுகிறது. 'அடியேன் அல்லல் எல்லாம் முன் அகல ஆண்டாய் என்றிருந்தேன்' என்று கூறிவிட்டு, மூன்றாவது அடியில் 'செடிசேர் உடலைச் சிதையாதது எத்துக்கு' என்று கேட்பது நம் மனநிலையைப் பிரதிபலிப்பதாகும். முன்னர்க் கூறியபடி துன்பம் எல்லாம் அகன்றுவிட்டது என்ற நினைவில் மகிழும்பொழுது மறுபடியும் துன்பம் நேர்ந்தால் 'சீ! இது என்ன வாழ்க்கை; இந்த வாழ்க்கையை விட்டுப் போய்விட்டால்கூடப் போதுமே' என்ற நினைவுதான் பலருடைய மனத்தில் தோன்றும். அதனையே அடிகளார் இப்பாடலில் பிரதிபலிக்கின்றார். இந்த உடல் இருந்ததால்தான் திருவாசகம் பாடமுடிந்தது; கணக்கிலாக் கோலத்தைக் காண முடிந்தது. அப்படியிருக்க, உடலம் சிதையாதது எத்துக்கு என்று பாடினால், அது நம்முடைய எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகத்தான் தோன்றுகிறது.

இந்தப் பத்தில் மனிதர்களுக்கு மற்றும் ஒரு புதிய வழியைக் காட்டித் தென்பு சேர்க்கிறார். நம்பொருட்டாக அவரே இறைவனிடத்து ஒரு வினாவைக் கேட்கின்றார். 'குன்றே அனைய குற்றங்கள் குணமாம் என்றே நீ கொண்டால் என்தான் கெட்டது' (498) என்று கேட்கும் பொழுது, அந்த வினா குற்றமே செய்யாத மணிவாசகர் தமக்காகக் கேட்கும் வினாவன்று; குற்றத்திலேயே பிறந்து உழலும் நம்பொருட்டாக அவர் கேட்ட வினா என்று கொள்ள வேண்டும்.

நம் பொருட்டாக இறைவனிடம் மன்றாடிய அடிகளார் இறுதியாக, தாம் மேற்கொண்ட வழியை விரிவாக எடுத்துரைக்கின்றார். 'அன்றே' என்று தொடங்கும் பாடலில் (502) 'ஆவி, உடல், உடைமை என்ற மூன்றும் உன்பால் அளித்துவிட்டேன் ஆதலின் நீ நல்லது

செய்தாலும் கெட்டது செய்தாலும் அதற்குத் தலைவன் நானல்லன். எனவே, அதுபற்றிக் கவலை எப்போதும் இல்லை' என்ற முழுச் சரணாகதித் தத்துவத்தை இப்பாடலில் விளக்கமாக எடுத்துரைக்கிறார். விருப்பு வெறுப்புக்களை நீக்கி, உறுதிப்பாட்டுடன் வாழத் தொடங்குவோர்க்குக்கூடச் சரணாகதி என்பது முழுத்தன்மை பெறாமல் இருக்கும்வரை ஓர் அச்சம் மனத்தின் அடித் தளத்தில் இருந்துகொண்டேதான் இருக்கும். அதுதான் சாவைப்பற்றிய அச்சம். ஆகவே சரணாகதித் தத்துவத்தை 502ஆம் பாடலில் பாடியவர் 503ஆவது பாடலில் 'இப்பிறவியும் உன்வசம்; அது வைத்திருக்கும் பொறுப்புத்தான் என்னுடையது' என்று கூறுகிறார். 'காயத்திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய்; எது செய்தாலும் அதுபற்றி எனக்குக் கவலை இல்லை' என்று மனித ஆன்மாவின் இறுதியான குறிக்கோள் எதுவாக இருத்தல் வேண்டும் என்பதை 502, 503ஆம் பாடல்களில் எடுத்து விளக்கியுள்ளார்.

எவ்வளவுதான் சரணமாகக் கொடுத்தாலும் இந்த உடலில் உயிர் ஒட்டிக்கொண்டிருக்கும்வரை வேண்டும் என்ற ஆசை மனத்தில் இருக்கத்தான் செய்யும். அறவே பற்றைத் துறந்தவர் கூட அப்பற்றை இறைவன் திருவடியில் வைக்கின்றனர். இதுகருதிய வள்ளுவப் பேராசான்

> பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு (குறள்: 350)

என்று பாடியுள்ளார். இது சற்றுக் கடினமான வழியாகும். 'குழந்தைக்கு என்ன வேண்டும்' என்பதைத் தாய் அறிந்து கொடுப்பதுபோல உயிர்களுக்குத் தாயாகிய இறைவன், உயிர்களுக்கு என்ன வேண்டும் என்பதை அறியமாட்டானா? தாயாக உள்ளவன் அறிந்து தருவான் என்ற எண்ணம் வலுப்பெற்றால் வாழ்வு சிறப்படையும் என்பதைக் கூறவந்த அடிகளார் 'வேண்டத்தக்கது

அறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ' (501) என்று பாடுகிறார்.

குழைத்த பத்துப் பதிகம் முழுவதும் அடிகளார் இறைவனடி சேர்வதற்குச் சில காலம் முன்னர் இந்த மக்கட் சமுதாயத்திற்காகப் பாடியதாகும். நம்பிக்கையூட்ட வேண்டும்; அமைதியாக வாழச் செய்ய வேண்டும்; குறிக்கோளோடு வாழக் கற்றுதர வேண்டும்; இறுதியாக வீடுபேற்றை அடையும் வழியையும் காட்டவேண்டும் என்று கருதிய அடிகளார் இவை அனைத்தையும் பத்தே பாடல்களில் மருந்துறைபோல (Capsule) குழைத்தபத்தில் பெய்து தந்துள்ளமைக்கு மனித சமுதாயம் என்றும் கடப்பாடுடையதாகும். திருவாசகம் முழுவதையும் பயில நேரமில்லாதவர்கள், பொருள்பற்றிக் கவலைப்படாமல் தினம் பாராயணம் செய்துவிட்டு மகிழ்ச்சியடைவோர்கள் ஆகியோர் குழைத்த பத்து ஒன்றைமட்டும் சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து படிப்பார்களேயானால் வாழ்க்கையின் பயனை எய்துவர். இங்குப் 'பொருளுணர்ந்து' என்று சொல்லியது வெறும் சொற் பொருளையன்று; அது குறிக்கும் குறிப்புப் பொருளையுமாம்.

இப்பகுதியில் கடைசியாக வைத்திருப்பது பண்டாய நான்மறை என்பதாகும். இதிலுள்ள ஏழு பாடல்களும் வெண்பாக்களாக அமைந்துள்ளன. வீடுபேற்றை அடையப் போகும் அடிகளார் தம்முடைய வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறார். திருவாதவூரராக இருந்த தாம் ஒரே பிறப்பில், மணிவாசகராக மாறிய விந்தையைப் பின்நோக்கிப் பார்க்கிறார். நான்மறையும் நான்முகனும் காணாத அத்திருவடிகள் தம்மைத் தேடிப் பிடித்து ஆட்கொண்டதை நினைத்தவுடன் இவ்வளவு பெரிய உபகாரம் செய்தவனுக்கு என்ன கைம்மாறு செய்யமுடியும் என்று சிந்திக்கிறார். செய்த உபகாரத்திற்குக் குறிப்பிட்ட கைம்மாறு செய்தாக வேண்டும் என்றிருந்தால் அந்தக் கைம்மாறு செய்ய

முடியாதவர்கள் அந்த உபகாரமே வேண்டாம் என்று இருந்துவிடுவார்கள். அத்தகைய நிலை இங்கு இல்லை என்பதை வலியுறுத்தவே அவன் செய்யும் உபகாரத்திற்கு கைம்மாறு இல்லை என்பதை அழுத்தம் திருத்தமாக 'நெஞ்சமே! கோகழி எம் கோமாற்கு உண்டாமோ கைம்மாறு உரை' (628) என்று கூறுகிறார். 'மனித சமுதாயமே, உனக்கொன்று சொல்கிறேன். உள்ள மலம் மூன்றும் மாயப் பிறவிக்காடு கருவும்கெட வள்ளல் மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள்' என்று இறுதியாக மனித சமுதாயம் முழுவதற்கும் ஒரு பெருநம்பிக்கையைத் தந்துள்ளார் அடிகளார். அதனாலேயே பண்டாய நான்மறை என்ற பகுதியை இத்தொகுப்பின் கடைசியில் அமைத்துள்ளோம்.

## XIII. புதிய திருப்பம்

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள பதிகங்கள் பின்வருமாறு:

1. யாத்திரைப் பத்து (45)
2. திருப்படையெழுச்சி (46)
3. சிவபுராணம் (1)
4. அச்சோப்பதிகம் (51)

புதிதாக அமைத்துள்ள வைப்புமுறையில் புதிய திருப்பம் என்பது இறுதியாக அமைக்கப்பெற்றுள்ளது. ஒரு திசையில் செல்பவர்கள் அத்திசையைவிட்டு மற்றொரு திசையில் செல்லத் தொடங்குவதைத் திருப்பம் என்கிறோம். திருப்பம் என்ற சொல் திசைமாற்றத்தைக் குறிக்குமே தவிர, சென்ற வழியில் திருப்பிவருதலைக் குறிக்காது. நாளா வட்டத்தில் திரும்பிவிட்டார் என்ற

சொல்லின் மூலம் பழைய இடத்திற்கு வருதலைக் குறிக்கத் தொடங்கினர்.

இங்குப் புதிய திருப்பம் என்று நாம் கூறுவது திருவாசக வளர்ச்சி முறையில் இதுவரையில் காணப்பெறாத புதிய வழி ஒன்றில் பாடல்கள் செல்வதையே குறிக்கின்றது. திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு, அடிகளார் வாழ்க்கை எவ்வித மாறுதலும் இன்றி ஒரே திசையில்தான் சென்றது. குருநாதரையும் அடியார்களையும் மீட்டும் காண வேண்டும் என்ற மிகு அவா ஒருபுறம்; எவ்வித நற்குணங்களோ நற்பண்புகளோ பக்தி ஈடுபாடோ இல்லாத நாய்போன்ற தம்மையும் குருநாதர் ஆட்கொண்டார் என்ற எண்ணம் ஒருபுறம். அம்மட்டோடில்லை; திருவடி தீட்சை செய்து தம்முடைய பரு உடம்பில் அமுத தாரைகளை எற்புத்தொளைதொறும் ஏற்றிப் புதிய உடம்பாகச் செய்துவிட்டார் என்ற எண்ணம் ஒருபுறம் என்ற முறையில் இந்த எண்ணஓட்டங்களின் இடைப்பட்டு, அவற்றின் பயனாகத் திருவாசகம் வெளிவரலாயிற்று. திருவடி தீட்சை பெற்றதால், அடிகளாரின் ஆன்மா எல்லையற்ற தென்புடன் புதிய மாற்றம் பெற்றது. அமுததாரைகள் ஏற்றப்பெற்றதால் திருவாதவூரரரின் பழைய உடம்பு புதிய உடம்பாக மாறிற்று. உடம்பே புது வடிவெடுத்ததென்றால், அந்த உடம்போடு தொடர்புடைய பொறி, புலன்கள், அந்தக்கரணங்கள் ஆகிய அனைத்தும் புது வடிவெடுத்தன என்பது பெற்றாம். எனவே, திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு, மணிவாசகர் என்ற புத்தம் புதிய மனிதர் வெளிப்படுகிறார். இதிலும் ஒரு தனிச் சிறப்புண்டு. முற்றிலும் புது மனிதராக வடிவெடுத்தாலும் தம்முடைய பழைய வாழ்க்கையை, பழைய பழக்க வழக்கங்களை, ஒரோவழி நினைவிற்குக் கொண்டுவரும் ஆற்றலும் அவர்பால் இருந்தது. இது சற்று வியப்பானதேயாகும். அந்தக்கரணங்கள் உள்பட முற்றிலும் புதிய மனிதராக

வடிவெடுத்த ஒருவருக்குப் பழமை எப்படி நினைவுக்கு வந்தது? அப்படியே வந்தாலும் பழமையில் நடந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு நினைவுக்கு வந்தன? இதுபற்றிச் சிந்திக்கும்பொழுது என் மனத்தில் தோன்றிய சிந்தனையைப் பெய்துள்ளேன்.

அறுநூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களையுடைய திருவாசகத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் மகளிர் தொடர்பால் தாம் பட்ட அவதிகளைக் குறிப்பிடு கின்றார். இது ஏன் என்ற வினாவைப் பலமுறை என்னுள் எழுப்பியபொழுது தோன்றிய சிந்தனை ஒன்றுண்டு.

எந்த ஒன்றும் நமக்குப் பயன்படவேண்டுமானால் நமக்கும் அதற்கும் ஒரு தொடர்பு அல்லது பொதுத்தன்மை இருத்தல் வேண்டும். சுவை ஒன்று நம்மை ஈடுபடுத்து கின்றது என்றால், அந்தச் சுவைதரு பொருளும் அந்தச் சுவையை உணரும் நாப் புலனின் அப்பகுதியும் நன்றாக இருத்தல் வேண்டும். அப்பகுதி கெட்டுவிட்டால் அச்சுவையை நாம் அறியமுடியாது. மக்களுக்காகவே திருவாசகம் இயற்றப்படவேண்டும் என்று கருதினான் தில்லைக்கூத்தன். கால, தேச, வர்த்தமானங்களைக் கடந்து, எல்லோருக்கும் எல்லாக் காலத்தும் பயன்படக் கூடியதாய் மக்கள் உள்ளத்தைப் பற்றி ஈர்த்துத் தன்பால் நிலைபெறச் செய்யும் ஆற்றலையுடைய பாடல்கள்கொண்டு திருவாசகம் அமைய வேண்டும் என்று கருதினான் தில்லைக்கூத்தன்.

முன்னியது முடிக்கும் அப்பெருமான் இக்கருத்தை நிறைவேற்றவே திருவாதவூரரைப் படைத்தான். மாபெருங் கல்வியாளராக அவரைச் செய்தான்; மாபெரும் கவிஞராக வும் அவரை ஆக்கினான். மக்கள் சமுதாயத்தில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் தொடங்கி, மிக உயர்ந்த நிலையில் உள்ளவர்கள்வரை அனைவருடைய மனநிலை யையும் அறிந்துகொள்ள, ஒரு வாய்ப்பாக அமைச்சர் பதவியில் திருவாதவூரரை இருக்குமாறு செய்தான்.

இவற்றிலெல்லாம் ஒரு குறிப்பிட்ட நிலையைத் திருவாதவூரர் அடைந்தவுடன் அவரை இழுத்து, ஆட்கொண்டு, புதிய தொரு பிறவியைத் தந்தான்.

புதிய பிறவி எடுக்கும்பொழுது பழைய பிறவி முற்றிலும் மறக்கப்படும். இதுவே இயற்கையின் நியதி. இதற்கு மாறாக, பழமையை ஒரோவழி நினைக்கும் புதிய பிறவியை அடிகளாருக்குத் தந்தான் கூத்தன். இந்தப் பழமை நினைவு ஓரளவு பெரிதாக வளர்ந்து, அவருடைய புதிய பிறவியை ஒரோவழி மறக்கச் செய்தது. இதன் பயனாக இந்த உடம்பையே ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம் எதிர்பாராமல் அடிகளார் மனத்தில் தோன்றி வளரத் தொடங்கிவிட்டது. கண்ட பத்துப் பதிகம் முழுவதிலும் இந்த உடம்பு ஒழிய வேண்டும் என்று பாடத் தொடங்கிவிட்டார். இந்த நிலையில் அவருடைய எண்ணப்போக்கை மாற்றி, திருவாதவூரராக கருவில் இருக்கும்பொழுதே நிகழ்ந்தவற்றைக் காணுமாறு செய்தான். இந்தப் பின்னோக்குப் பார்வை சில விநாடிகள்தான் நீடித்தது. அந்தக் கணத்தில் தோன்றிய ஒரு பாடல் ‘உருத் தெரியாக் காலத்தே’ (477) என்பதாம். கண்டபத்துப் பதிகத் தின் இப்பாடலுக்கு முன்னும் பின்னும் இழிநிலையை நினைந்து வருந்தும் அடிகளாரே காட்சியளிக்கிறார்.

ஆட்கொள்ளப்பெற்று இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்து இறைப் பிரேமையில் துளையமாடும் அடிகளா ருக்குப் பழைய வாழ்க்கையில் மகளிர் தொடர்பு என்ற ஒன்றுமட்டும் ஏன் நினைவுக்கு வரவேண்டும்? பல பாடல்களில் ஏன் அதனை விரித்துப் பாடவேண்டும்? ஏனையோரைப் போல இந்தப் பழைய நினைவுகள் அடிகளாரைக் கீழே இழுத்துவிட்டனவா? அவருடைய வளர்ச்சியைத் தடைசெய்துவிட்டனவா என்றால், இல்லவே இல்லை என்று உறுதியாகக் கூறலாம். அப்படியானால், முற்றிலும் புதியவராக வடிவெடுத்த அடிகளாரின்

உள்ளத்தில் இந்த எண்ணங்களைப் புகுத்தி, அவற்றைப் பாட்டாக மலரச்செய்தது எது? தில்லைக்கூத்தன் திருவருள்தான் அது. ஏன் தெரியுமா?

மனிதர்கள் எந்த வயதிலும் பாலுணர்விலிருந்து முற்றிலும் விடுபடுதல் இயலாத காரியம். அதனால் ஆன்மிகத்தில் முன்னேற முடியாமல் போய்விடுமோ என்று அஞ்சுவோர்களுக்கு ஒரு மனத்தென்பை ஊட்டக் கருதினான் தில்லைக்கூத்தன். 'அஞ்சவேண்டா, இந்த உணர்வுகள் எவ்வளவு உன்னைப் பற்றிநின்றாலும், என்னைப் பற்றவேண்டு மென்ற உறுதிப்பாட்டுடன் உன் ஆன்மிக யாத்திரையைத் தொடங்கினால் என் திருவருள், தோன்றாத் துணையாக நின்று உன்னைக் கைதூக்கிவிடும்' என்று மானிட சாதிக்கு அறிவுறுத்த விரும்பினான் கூத்தன். இதனை அறிவுறுத்தவே அடிகளாரைக் கருவியாகக் கொண்டான்.

இப்பாடல்களைப் படிப்பவர்கள் இப்படியெல்லாம் இருந்தும் ஒரே பிறவியில் அடிகளார் முன்னேறினார் என்பதைப் படிக்கும்பொழுது அவர்கள் உள்ளத்தில் அச்ச உணர்வு நீங்கி, ஒரு புதிய நம்பிக்கை ஒளிவிடும்.

மானிட சாதிக்கு இந்த நம்பிக்கையை ஊட்ட, கூத்தன் கையாண்ட வழிமுறை ஆகும் இது. திருவடி ஒன்றை மட்டும் கண்டு, சிவன் எனத் தேறிய ஒருவர்- 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்று அழுத்தம் திருத்தமாகப் பாடிய ஒருவர்-'தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை' என்று பாடும் ஒருவர்- 'உன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன்' என்று பாடிய ஒருவர்- 'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்' என்று பாடும் அளவுக்கு நெஞ்சு உரம் பெற்ற ஒருவர், இடைஇடையே 'வெஞ்சேல் அனைய கண்ணார்தம் வெகுளி வலையில் அகப்பட்டு நைஞ்சேன்' என்பதுபோன்ற பாடல்களைப் பாடுவாரேயானால்,

மானிட சாதிக்கு நம்பிக்கையூட்டக் கூத்தன் கையாண்ட வழி இது என்று கூறுவதில் தவறில்லை. இவைபோன்ற பாடல்கள் அடிகளாரின் வலுக்குறைவையோ துயரத்தையோ எடுத்துக் காட்டும் பாடல்கள் அல்ல என்பதைப் புரிந்துகொண்டால், கூத்தன் நிகழ்த்தும் நாடகத்தில் இதுவும் ஒரு பகுதி என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இந்த தொகுப்பிற்குப் 'புதிய திருப்பம்' என்ற தலைப்புக் கொடுக்க ஒரு வலுவான காரணம் உண்டு. 'நாயினுங் கடையேன்' என்று தம்மைப் பலகாலும் கூறிக்கொள்ளும் ஒருவர், அடியார் கூட்டத்தையும் குருநாதரையும் மறுபடியும் காணாமல் இந்தப் பிறவி செத்து ஒழிந்தால், ஊர் கைகொட்டி நகையாட ஏதுவாகும் என்றெல்லாம் பாடிவந்த ஒருவர், திடீரென்று தம்மைச் சுற்றிப் பார்க்கிறார். குறிக்கோள் அற்று, 'இனி என்னே உய்யுமாறு' என்று எண்ணி, செல்லும் திசையறியாது, சுற்றிச் சுற்றி வரும் மானுட சாதியைக் காண்கின்றார். அந்த விநாடி, தம்முடைய பழைய நிலை நினைவுக்கு வருகின்றது. 'நாமும் இப்படித்தானே இருந்தோம்! நம்முடைய பிரார்த்தனையை ஏற்று நம்மை ஆட்கொண்டவன், இவர்களையும் ஆட்கொள்ளாமலா விட்டுவிடுவான்' என்ற எண்ணம் தோன்றுகிறது.

அவருடைய வளர்ச்சி அவருக்கே தெரிகிறது. கணக்கிலாக் கோலத்தை, திருக்கழுக்குன்றத்தில் கண்ட அவருக்குத் தன்னம்பிக்கை மிகப் பெரிதாக வளர்ந்து விட்டது. மறுபுறம் திரும்பிப் பார்த்தால், தில்லைக் கூத்தனின் திருவடி கூப்பிடு தூரத்தில் அல்லாமல், தொடுதூரத்தில் இருப்பதைக் காணமுடிகிறது. இனி அவர் செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். தொடு தூரத்தில் இருக்கும் அத்திருவடியை நோக்கி ஒரு தப்படி எடுத்து வைத்தால், அத்திருவடி முன்னேறி வந்து, தம்மை ஆட்கொள்ளச் சித்தமாக உள்ளது என்பதை உணர்கின்றார்

அடிகளார். 'நாயிற் கடையேன்' என்று பாடிக்கொள்ளும் நிலை மாறிவிட்டது. தொடுதூரத்தில் உள்ள திருவடியை நோக்கிச் செல்லத் தயாராகிவிட்ட நிலையில், கடல்போல் விரிந்து கிடக்கும் மனித சமுதாயம் அவர் கண்ணில் படுகிறது. எத்தனை வகை மனிதர்கள்! ஒருசிலர், செல்லும் முயற்சியில் இரண்டொரு தப்படிகள் எடுத்து வைத்துள்ளனர். ஒருசிலர் அடிகளாரோடு செல்வதற்குச் சித்தமாகி உள்ளனர். அவர்களுக்குப் பின்னர் உள்ள சிலர் 'போகலாமா, வேண்டாவா' என்ற ஆராய்ச்சியில் இன்னும் ஒரு முடிவிற்கும் வரவில்லை. இவற்றையெல்லாம் பார்த்த அடிகளார் யாத்திரைப் பத்தைப் பாடுகிறார்.

'உடையான் கழல்புகக் காலம் வந்தது காண் பொய் விட்டுப் போவோம்' (605) என்ற தொடர் முதற்பாடலின் இறுதியில் இடம்பெறுகிறது. 'போவோம்' என்ற தன்மைப் பன்மை இப்போது உலகத்தை நோக்கி அடிகளார் பேசுகிறார் என்பதை அறிவிக்கின்றது. இதனை அடுத்துவரும் மூன்று பாடல்கள் (606-608) புறப்படுவதற்கு இரண்டு தப்படிகள் எடுத்து வைத்துவிட்டவர்களுக்குக்கூடப் புதிய தடைகள் காத்துக்கொண்டிருக்கின்றன என்பதை அறிவிக்கின்றன. அவர்களுடைய பொறி புலன்கள் அவர்களைப் பின்னுக்கு இழுக்கின்றன. அந்தத் தொகுதியினரை நோக்கி, 'புகவே வேண்டா புலன்களில்' என்று கூறுகிறார். அவன் 'பூங்கழல்கள் மிகவே நினைமின், மிக்கவெல்லாம் வேண்டா போகவிடுமின்' என்ற அறிவுரையைத் தருவதன் மூலம் தடைகளை சந்திப்பவர்களுக்கு அவற்றை வெல்லும் வழியென்ன என்றும் கூறுகிறார்.

போகலாமா வேண்டாமா என்ற முடிவு செய்யாதவரை நோக்கி 'நிற்பார் நிற்க; நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோம்' என்று கூறுகிறார். அத்தோடு அமையாமல், இரண்டாட்டத்திற்கு இடம்

கொடாமல் இரண்டுள், ஏதோ ஒரு முடிவை உடனே எடுக்க வேண்டும் என்ற கருத்தை 'நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்' (611) என்ற தொடரால் குறிப்பிடுகிறார். வாழ்க்கை முழுவதும் செய்யலாமா, வேண்டாவா என்ற இரண்டாட்டத்தில் வாழ்வையே போக்கிக்கொள்ளும் மனித சமுதாயத்திற்குக் கூறப்பெற்ற நல்லுரையாகும் இது.

இவ்வாறு கூறியபிறகு அடிகளாரின் மனம் சஞ்சலமடைகிறது. 'இப்படிக் கூறிவிட்டோமே, இவர்கள் இங்கு இருப்பதே சுகம், புறப்படவேண்டா என்ற முடிவிற்கு வந்துவிட்டால், இவர்கள் வாழ்வு அவமாகி விடுமே' என்று வருந்திய அடிகளார் 'நின்றுவிடுவது' என்ற முடிவுக்கு வந்துவிட்ட அத்தொகுதியினரை நோக்கி 'இறுதியாக ஓர் எச்சரிக்கை தருகிறேன்; அதன் பிறகு முடிவெடுங்கள்' என்று கூறுகிறார். 'இன்று புறப்படாமல் நின்றுவிட்டு, பிறகு உங்கள் தவற்றை நினைந்து எவ்வளவு அழுதாலும் அது கிடைக்காது' என்று கூறுவார்போல, 'பிற்பால் நின்று பேழ் கணித்தால், பெறுதற்கரியன் பெருமானே' (611) என்று கூறிமுடிக்கிறார்.

திருவாசகம் முழுவதிலும் காணப்பெறாத புதிய திருப்பமாகும் இது. தாம் போவது உறுதி என்ற முடிவுக்கு வந்தபிறகு உயிர்கள்மாட்டுக் கொண்ட பெருங் கருணையால் பாடப்பெற்ற பகுதியாகும் இது.

'போவோம் காலம் வந்ததுகாண்' (605) என்பதில் 'போவோம்' என்று கூறிவிட்டமையின் யார் யார் போவது, எப்படிப் போவது, எங்கே போவது என்ற வினாக்கள் எழுமன்றோ! இந்த வினாக்களில் 'எங்கே போவது' என்ற வினாவுக்கு 'உடையான் கழல்புக' என்பதில் விடை கிடைத்துவிட்டது. எஞ்சிய இரண்டு வினாக்களாகிய யார் யார் போவது, எப்படிப் போவது என்ற வினாக்களுக்கு விடை கூறுவதுதான் திருப்படை எழுச்சி என்ற பதிகம்.

உலக வாழ்க்கையில் ஓரூரிலிருந்து மற்றோர் ஊருக்குப் பயணம் செல்வது என்றால், எத்தனையோ முன்னேற்பாடுகள் செய்யவேண்டியுள்ளன. அப்படியிருக்க, வான நாடு ஆளப் போகும் நமக்குப் பல முன்னேற்பாடுகளும் துணையும் தேவைப்படுகின்றன. 'புறப்படுவோம்' என்று யாத்திரைப் பத்தில் கூறிய அடிகளார், தம்மோடு புறப்பட்டுவிட்ட மக்களுக்கு எவ்வித ஊறும் நேராமல் சிவபுரத்திற்கு அழைத்துச் செல்ல, ஒரு படையையே அணிவகுக்கின்றார். அமைச்சராக இருந்து படை நடாத்திய அனுபவம் அடிகளாருக்கு இங்குக் கை கொடுக்கின்றது. திருப்படை எழுச்சியில் உள்ள இரண்டு பாடல்களும் வான நாடு ஆளப் புறப்பட்டவர்களுக்கு எவ்வித இடையூறும் வாராமல் காத்துச் செல்லும் அடியார் படையைப் பற்றியதாகும்.

இத்தொகுப்பில் மூன்றாவதாக இடம்பெறுவது 'சிவ புராணம்' ஆகும். இன்று பதிக்கப்பெற்றுள்ள முறையில் திருவாசகத்தைப் பயின்றவர்களுக்கு முதலில் உள்ள சிவ புராணத்தை இங்கே கொண்டுவைப்பது என்னவோபோல் தோன்றலாம். ஆழ்ந்து சிந்தித்தால் திருப்பெருந்துறை நிகழ்ச்சியின்பின் பல காலம் கழிந்தபின்னர், பல அனுபவங்களைப் பெற்றபின்னர், இறையனுபவத்தில் பலமுறை தோய்ந்து எழுந்தபின்னர், இறுதிக் காலத்தில் 'இதோ திருவடியைச் சேரப் போகிறோம், அதற்குரிய காலம் வந்துவிட்டது' என்ற நினைவு தோன்றிற்று. இந்த நிலையில் யாத்திரைப் பத்தும், திருப்படையெழுச்சியும் பாடியாயிற்று; இது முதிர்ந்த நிலை. 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்' என்று தம்மைப்பற்றிப் பேசும் நிலை இங்கே இல்லை. உலக மக்களுக்கு அறிவுரை கூறுவதும், அவர்கள் குறிக்கோள் எதுவாக இருக்க வேண்டும் என்பதும் யாத்திரைப் பத்திலும் படையெழுச்சியிலும் கூறப்பெற்றுவிட்டன.

இந்த நிலையில் சிவ புராணம் பாடப்பெற்றது.

சிவன் அவன், என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான் (*1:17-20*)

இந்த நான்கு அடிகளும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டியவை. திருப்பெருந்துறையில் அடிகளாரின் சிந்தையுள் புகுந்தான்; புகுந்தவன் மீட்டும் வெளியே செல்லவில்லை. எனவேதான், சிந்தையுள் 'நின்ற' அதனால் என்று பாடினார். புகுந்தவன் கொஞ்சம் கொஞ்சமாக மணிவாசகரை விழுங்கி, இப்பொழுது அவனே அங்கே முற்றிலுமாக வியாபித்து விட்டான். அதனையே அடிகளார் 'சிவமாக்கி எனை ஆண்ட' என்று சொல்கிறார். இந்த நிலையில், அடிகளார் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும், எதைப் பாடினாலும் அதற்கு அவர் பொறுப்பல்லர். இதனை உணர்ந்தமையால்தான் அடிகளார் 'சித்தம் சிவமாக்கி, செய்தனவே தவமாகும் அத்தன்' (320) என்று பாடியுள்ளார்.

சிந்தையுள் புகுந்து நின்ற அவனை அவர் வணங்கினார். பின்னர் அங்கே வணங்குபவரும் இல்லை; வணங்கப்படுபவனும் இல்லை. அப்படியானால் யார் இருக்கிறார்கள்? மணிவாசகர் என்ற ஒருவர் இருந்த இடத்தில், அவர் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தனதாக்கிக் கொண்டவன் இப்பொழுது சிவபுராணத்தைப் பாடுகிறான். 'யான் உரைப்பன்' என்பதில் உள்ள தன்மை ஒருமை வினைமுற்றிற்கு, அடிகளாரைக் கர்த்தாவாக ஆக்காமல், அவரை விழுங்கி நின்றவனையே கர்த்தாவாக ஆக்க வேண்டும். அப்படியானால் 'சிந்தை மகிழ' என்பதற்கு மானிட சாதி முழுவதும் 'சிந்தை மகிழ' என்று பொருள் கொள்ள வேண்டும். உயிர்வர்க்கம் முழுவதும் சிந்தை மகிழுமாறு சிவபுராணத்தை உரைக்கின்றேன் என்று

அடிகளாரின் உள்ளே புகுந்தவன் அடிகளார் திருவாயைக் கருவியாகக் கொண்டு கூறுகிறான். 'சிந்தை மகிழ' என்பதில் ஒரு சிக்கல். மகிழ்ச்சி என்ற சொல் மனத்தோடு தொடர்புடையது. மனமகிழ்ச்சி, உள்ளக் களிப்பு, சிந்தையில் ஆனந்தம் என்று பிரித்துக் கண்டால் இது விளங்கும். சிந்தையில் தோன்றுவது ஆனந்தமே தவிர மகிழ்ச்சியன்று. பாடலில் 'மகிழ' என்று வந்தாலும், ஆனந்தம் என்ற பொருளையே இங்குக் கொள்ள வேண்டும்.

மணிவாசகரின் திருவாயைக் கருவியாகக் கொண்டு, சிவபுராணத்தைச் செய்தவன் மேலும் இரண்டைக் கூறுகிறான். ஏன் சிவபுராணத்தைக் கூறினான்? உயிர்களி னுடைய பழவினைகள் அனைத்தும் ஓயும்படியாக இதனைக் கூறினான்.

சிவபுராணத்தைக் கற்பவர் வினைமுழுதும் ஓயவேண்டு மேயானால் அதனை மனத்துள் படித்தோ, வாய்விட்டுக் கூறியோ, பஜனை செய்தோ பயனில்லை. பாடலில் வரும் தொடர்களுக்கு எழுவாய், பயனிலை என்ற இலக்கணக் குறிப்புகளும், பதவுரை, பொழிப்புரை என்ற விளக்கங்களும் எவ்விதப் பயனையும் தாரா. இவற்றை விரித்துக் கூறவேண்டிய இடத்தில் விரித்துக் கூறாமைக்குக் காரணம் அடிகளார் இதனைப் பாடாமைதான்: எனவே, பாடியவன் விளக்கமாகக் கூறாமல், ஒரே ஒரு சொல்லின்மூலம் இத்தனை விளக்கத்தையும் தந்துவிடுகிறான். சொல்லிய பாட்டின் பொருள் அறிந்து அல்லது தெரிந்து அல்லது விளங்கிக்கொண்டு என்றெல்லாம் கூறவில்லை. அவற்றிற்குப் பதிலாகப் பொருள் <u>'உணர்ந்து'</u> சொல்லுவார் (1-93) என்று கூறினான். அதாவது, சொற்களுக்கு அப்பால் இருக்கின்ற பொருளை அறிவுகொண்டு ஆராயாமல் உணர்வுகொண்டு உணர முற்படவேண்டும். அப்படி உணர்ந்த நிலையில்

சிவபுராணத்தை ஒருமுறை சொன்னால் அவர்கள் சிவபுரம் சென்று அங்கேயே இருப்பர்.

இறுதியடியில் 'பணிந்து' என்று ஒருசொல் இருப்பதைக் காணலாம். இச்சொல்லை இறுதியாக வைத்ததில் ஒரு நோக்கம் உண்டு. பாட்டின் சொற்பொருளை அறிந்து தெரிந்த பின்னர் உணரத் தொடங்கினால் சிந்தையில் ஆனந்தம் தோன்றும். இது ஒரு ஆபத்தான கட்டம். 'நான்' இந்த ஆனந்தத்தைப் பெற்றுவிட்டேன் என்ற நினைவு தோன்றுமேயானால் ஆனந்தம் போய்விடும். இந்த நிலையில் 'நான்' அடங்கிய பணிவு வேண்டும் என்பதைக் குறிப்பதற்காகவே 'பணிந்து' என்ற சொல் இறுதியில் வைக்கப்பெற்றுள்ளது.

யாத்திரைப் பத்து, திருப்படையெழுச்சி என்ற இரண்டும் அனுபவ முதிர்வில் திருவடி தொடுதூரத்தில் இருக்கும்பொழுது அடிகளார் பாடினார் என்று முன்னரே விளக்கியுள்ளோம். அவருடைய வாழ்க்கை முழுவதும் அடைந்த வளர்ச்சி காரணமாக மனித சமுதாயத்திற்கு உய்கதி காட்டும் ஒரு பகுதியைப் பாடவேண்டும் என்று அடிகளார் நினைத்திருக்கலாம். சிவபுராணத்தை அவரே பாடியிருப்பின் முழு வளர்ச்சி பெற்ற - ஈடுஇணையற்ற ஓர் அருளாளரின் பாடல்தான் இது என்று பலரும் கருதிவிடக்கூடும். அந்நிலை நேராமல் இருக்கவே தில்லைக்கூத்தன் அடிகளாரைக் கருவியாகக் கொண்டு, உயிர்களின் சிந்தை ஆனந்தமடைய அவனே சிவபுராணத்தைக் கூறிவிட்டான்.

அடிகளாரே இதனைப் பாடியிருந்தால் 'முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்' என்று பாடியிருக்க மாட்டார். 'நான் ஆர் என் உள்ளம் ஆர்' என்பதிலும் 'நானேயோ தவம் செய்தேன்' என்பதிலும் வரும் 'நான்' வேறு; உரைப்பன் யான் என்பதில் வரும் 'நான்' வேறு.

இறுதியாக இத்தொகுப்பில் வைக்கப்பெற்றுள்ளது அச்சோப்பதிகம் ஆகும். இப்பதிகம் முழுவதிலும் முற்பகுதியில் தாம் இருந்த பழைய நிலையை எடுத்துக்காட்டி, இப்படிப்பட்ட தமக்குக்கூட அத்தன் அருளினான் என்று பாடுகிறார். இப்பதிகத்தில் வரும் 'ஆர் பெறுவார்' என்பது கவனித்துப் பொருள்கொள்ள வேண்டிய ஒரு தொடராகும். எனக்குக் கிடைத்த இப்பேற்றை என்னைத் தவிர வேறு யார் பெறுவார் என்று கூறிவிட்டால் அனைத்தும் கெட்டுவிடும்.

பாடல்களின் முற்பகுதியில் தம் இழிநிலையைக் கூறி, இப்படிப்பட்ட தம்மைக்கூடச் சிவமாக்கி ஆட்கொண்டான் என்றால், யார்தான் இதனைப் பெறமுடியாது என்ற கருத்தில், 'யாரும் பெறுவார்' என்றுதான் பாடியிருக்க வேண்டும். யாரும் பெறுவார் என்பதிலுள்ள உம்மை தொக்கி நின்றது. எனவேதான் 'யார்பெறுவார் அச்சோவே' என்று பாடல் முடிகிறது.

நம்பிக்கை இழந்து அல்லலுறும் மானிட சாதிக்கு நம்பிக்கையூட்டும் வகையில், தமக்கேகூட இது கிடைத்தது என்றால், யார்தான் இதனைப் பெற முடியாது என்ற கருத்தில் அமைந்துள்ள இப்பதிகம், இத்தொகுப்பின் இறுதியில் வைக்கப்பெற்றுள்ளது சாலப் பொருத்தமே என்று தோன்றுகிறது.

வேர்ட்ஸ் வொர்த் (WordsWorth) என்ற ஆங்கிலக் கவிஞன் எழுதிய பிறிலூடு (Prelude) என்ற கவிதையைப் பற்றிப் பேசவந்த திறனாய்வாளர்கள், இந்த ஒரு கவிதையிலேயே அக்கவிஞனுடைய வளர்ச்சி முறையையும் முழு வளர்ச்சியையும் அறிய முடிகிறது என்பர். கம்பநாடனுடைய பால காண்டத்திற்கும் யுத்த காண்டத்திற்கும் இடைப்பட்ட பகுதிகள் அவனுடைய வளர்ச்சியை அறிய உதவுகின்றன என்றும் கூறுவர்.

திருவாசகம், திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் தொடங்கிப் 'போவோம் காலம் வந்தது காண்' என்பது வரை அனுபவப் பிழிவாய் வளர்ந்து செல்கிறது. பாடல்களை இன்றையப் பதிப்பிலுள்ள முறையில் வைக்காமல் மேலே அமைத்துள்ள 13 தொகுப்புகளில் முன்னும் பின்னுமாக வைத்துப் பார்த்தால் பெருந்துறையில் புதுவடிவெடுத்த அடிகளார் எப்படி முழுவளர்ச்சியடைந்து உலகத்தை உய்விப்பதற்குப் பாடியிருக்கிறார் என்பதை அறிய முடியும். இது கருதியே இதனைச் செய்துள்ளேன்.

இது முடிந்த முடிபென்று நான் கருதவுமில்லை; கூறவும் இல்லை. அறிஞர்கள் மேலும் இதுபற்றிச் சிந்திக்க இத்தொகுப்பு முறை உதவினால் அதுவே நான் விரும்பியதாகும்.

## முரண்பாடுகள்

அவ்வப்பொழுது பாடல்களைப் படிக்கச்சொல்லி, அந்த நேரத்தில் மனத்திடைத் தோன்றிய எண்ணங்களுக்கு வடிவு கொடுத்ததே இந்நூல் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இப்படிச் செய்வதில் பல சிக்கல்கள் வரும் என்பதை நான் உணராமல் இல்லை.

தொடக்கத்தில் ஒரு பாடலையோ பதிகத்தையோ எடுத்துக்கொண்டு எழுதும்போது ஒரு குறிப்பிட்ட கருத்து வலுவுடன் எழுதப்பெற்றிருக்கும். ஆனால் பல பாடல்கள் கழிந்தபிறகு ஏதோ ஒரு பாடலுக்கு எழுதும்போது முன்னர்க் கூறிய கருத்திற்கு முற்றிலும் முரண்பட்டோ ஓரளவு மாறியோ சில கருத்துக்கள் எழுதப்பெற்றிருக்கும்.

இவ்வாறு எழுதும்போது பல முரண்பாடுகள் இடம் பெற்றிருத்தல் கூடும். அந்த அந்தப் பாட்டைப்பற்றி எழுதும்போது சொல்லப்பட்ட கருத்து, மற்றொரு

பாட்டிற்கும் சொல்லப்பட வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அடிகளாரின் பாடல்களிற்கூட, மேலோட்டமாகப் பார்ப்பதற்கு, முரண்பாடுகள்போலத் தோன்றும் பல கருத்துக்கள் இடம்பெற்றிருக்கும். அம்மாதிரி இடங்களில், அது ஒரு மனநிலையில் பாடப்பெற்றது, இது ஒரு மனநிலையில் பாடப்பெற்றது என்பதைக் கருத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைக் காணலாம்.

திருப்பெருந்துறை நிகழ்ச்சியில் திருவடி தீட்சை முதலியன பெற்று, முற்றிலும் புதுமனிதராக வெளிவந்த அடிகளார், தம் பிறப்பு அறுபட்டது, தம் வினைகள் சுட்டெரிக்கப்பட்டன, இறைவன் தம்முள் புகுந்து அங்கேயே தங்கிவிட்டான் என்று பல இடங்களிலும் பாடிச்செல்வதைக் காணலாம். ஆனால், அதே அடிகளார் ‘பாவிடை ஆடு குழல்போற் கரந்து பரந்தது உள்ளம் ஆ! கெடுவேன்’ (415) என்றும் ‘செடிசேர் உடலைச் சிதையாதது எத்துக்கு எங்கள் சிவலோகா’ (497) என்றும் பாடுவது முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றவில்லையா? ஆழ்ந்து சிந்தித்தால் இவற்றிடை முரண்பாடு இல்லை என்பது தெளிவாகும்.

இறையருளில் தோய்ந்து, இறையனுபவத்தில் மூழ்கி- ‘நான், எனது’ என்பவை அற்று இருக்கும் அனுபவ நிலையிலிருந்து வெளிவந்தவுடன் பாடியவை பிறப்பு அறுபட்டுவிட்டது, வினை சுட்டெரிக்கப்பட்டது என்ற கருத்துக்களையுடைய பாடல்கள் ஆகும்.

இந்த ஒரு நிலை அவ்வப்பொழுது வந்துபோகிறதே தவிர, அடிகளார் விரும்பும்பொழுதெல்லாம், விரும்பிய முறையிலெல்லாம் அந்த அனுபவம் கிட்டுவதில்லை. அப்படிப்பட்ட நிலைகளில் மனம் வருந்திப் பாடியவையாகும் பின்னர்க் காட்டப்பெற்ற பாடல்கள்.

இதைப் புரிந்துகொண்டால் இங்கு முரண்பாடு என்று எதுவுமில்லை என்பது தெளிவாகும்.

இனி 'நம் சிந்தனைகளில்' காணப்பெறும் முரண் பாடுகள் சிலவற்றைப்பற்றியும் இங்குக் காணலாம். திருப்பெருந்துறை நிகழ்ச்சிக்குப் பிறகு, குருநாதர் தரிசனத்தை மீட்டும் எவ்வாறாவது பெற வேண்டும் என்று அவர் விரும்பினார். தில்லைக்குச் சென்றும் அது கிட்டவில்லை. இறுதியாக, திருக்கழுக்குன்றில் பல்வேறு காட்சிகளைக் கண்டபோது குருநாதர் காட்சியையும் அடியார் கூட்டக் காட்சியையும் கண்டார் என்றும் எழுதியுள்ளேன்.

ஆனால், அதே நேரத்தில் கண்ட பத்திற்கு விளக்கம் எழுதும்போது தில்லைக்கூத்தனைக் காணச்சென்றவருக்கு, முதலில் காட்சியளித்து மறைந்தவர் குருநாதர் என்றும் எழுதியுள்ளேன். இவை முன்னுக்குப் பின் முரண்போலத் தோன்றலாம். ஆழ்ந்து சிந்தித்தால் தில்லையிற் கண்ட குருநாதர் காட்சி, இவருடைய மனத்தில் தோன்றிய பேரவாவின் பிரதிபலிப்பே (mental projection)என்பது நன்கு விளங்கும். அகத் துறைபற்றிப் பேசும் தொல்காப்பிய இலக்கணம் 'நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்ற ஒரு துறையைக் களவியலில் ஒன்பதாம் சூத்திரமாக வகுத்துள்ளது. காதலிபற்றி முழுநேரமும், முழுமனத்தாலும் சிந்திக்கும் தலைவனுக்கு, எதைப் பார்த்தாலும் காதலியின் பல்வேறு உறுப்புக்கள் போலவே காட்சியளிக்கும். அடிகளார் 'அணிகொள் தில்லை கண்டேனே' என்று பாடும் பகுதியில் அவர் குருநாதரைக் கண்டார் என்று நான் எழுதியமை இந்த அடிப்படையிலேயே ஆகும்.

'திருவாசகம்: சில சிந்தனைகள்' முதற் பகுதியின் முன்னுரையிலேயே யான் மேற்கொண்ட வழியைப்பற்றி ஓரளவு கூறியுள்ளேன். பதவுரை, பொழிப்புரை கூறுவது என்னுடைய நோக்கமன்று. அதற்குப் பதிலாக ஒரு

பாடலைப் படித்து முடித்தவுடன் என்ன எண்ணத்தை அது தோற்றுவிக்கிறது என்பதையே அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளேன். இந்த அடிப்படையில் சென்றாலும் பாடலின் ஒவ்வோர் அடிக்கும் பொருள்கூற வேண்டிய சூழ்நிலை, பல பாடல்களைப் பொறுத்து ஏற்பட்டுள்ளது. கூறப்பட்ட பொருள் பாடலிலுள்ள சொற்களுக்கு நேர் சொற்பொருளாக அமையாமலும் இருக்கலாம். காரணம், அந்தச் சொற்கள் தோற்றுவிக்கும் எண்ணத்தையே அந்த அடியின்மேல் ஏற்றியுள்ளேன். அதனால் இவ்வாறு பொருள்கொள்வதற்குப் பாடலில் அமைந்துள்ள சொற்கள் இடம் தரா என்று தமிழறிஞர்கள் குறைகூற வாய்ப்புண்டு. அப்பெருமக்கள் சொல்லுதற்குமுன் நானே அதனை உணர்ந்துள்ளேன். என்றாலும், திருவாசகம் முழுவதையும் மனத்துட்கொண்டு, குறிப்பிட்ட பதிகத்தையும் மனத்துட்கொண்டு பாடலிற் காணப்படும் தொடருக்கு வாலாயமாகப் பொருள்கூறும் முறையிலல்லாமல் பொருள் கூறியுள்ளேன். இதில் கருத்து வேற்றுமைக்கு நிரம்ப இடமுண்டு என்பதையும் நான் அறிவேன்.

திருவாசகத்தில் ஈடுபாடுகொண்ட அன்பர்கள் யான் கூறியவற்றை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவர்கள் மேலும் சிந்திப்பதற்கு இது உதவுமேயானால் அதுவே என் பணிக்குக் கிடைத்த பேறு என்று எண்ணி மகிழ்வேன்.

முற்றும்

சிவமயம்

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பாட்டு எண் |
|---|---|
| **அ** | |
| அங்கணன் | 598 |
| அட்டமூர்த்தி | 580 |
| அடியார் | 608 |
| அணிமுடி | 591 |
| அறையோ | 621 |
| **ஆ** | |
| ஆர்க்கோ | 618 |
| **இ** | |
| இடக்கும் | 566 |
| இப்பிறப்பினில் | 575 |
| இருந்தென்னை | 626 |
| இனபம் | 627 |
| **உ** | |
| உரியேன் | 600 |
| உள்ளமல | 629 |
| **ஊ** | |
| ஊசலாட்டு | 576 |
| **எ** | |
| என்புள் உரு | 561 |
| என்பே | 601 |
| என்னணி | 638 |
| எண்ணல் | 644 |
| **ஏ** | |
| ஏய்ந்த | 570 |
| **ஒ** | |
| ஒன்றினொடு | 636 |
| **ஓ** | |
| ஓடும் | 559 |
| **க** | |
| கண்கள் | 635 |
| **கா** | |
| காட்டகத்து | 630 |
| காணும் | 633 |
| காணும்அது | 603 |
| **கு** | |
| குறியும் நெறி | 562 |
| **கெ** | |
| கெடுவேன் | 646 |
| **கொ** | |
| கொம்பில் | 564 |
| கொம்மை | 568 |

கோ
கோவே 648

ச
சங்கு 642

சா
சாதல் 657

சீ
சீலமின்றி 645

செ
சித்தமும் 584
செம்மை 658
செய்தபிழை 619
செறியும்இப் 578

சே
சேரக்கருதி 613

சொ
சொல்லிய 641

ஞா
ஞானவாள் 615

தா
தாமே 607
தாயாய் 647

து
துடியேர்இடு 560

தூ
தூவெள்ளை 597

தே
தேவதேவன் 579

தை
தையலார் 656

தொ
தொண்டர்காள் 616

ந
நங்கைமீர்எனை 581
நடித்து 571
நண்ணிப் 632
நரியை 649

நா
நாதமுடைய 595

நி
நிற்பார் 611

நெ
நெறியல்லா 651

ப
பஞ்சாயஅடி 654
பண்டாய 628
பத்தர்சூழப் 582
பத்திலனே 602
பந்தவிகார 637

பா
பாருருவாய 599
பாழ்ச்செய் 567

பாற்றிரு 604

பி

பித்தென்னை 622
பிறவிஎன்னும் 585

பு

புகவேவேண்டா 606
புகழ்மின் 610
புரள்வார் 614
புழுவினாற் 586

பூ

பூவலர் 596
பூவார் 605

பெ

பெருமான் 612

பே

பேசும் 634
பேருங்குணமும் 563

பொ

பொச்சை 577
பொய்யெல்லாம் 652
பொருந்து 572
பொன்னிய 640

ம

மண்ணதனிற் 653
மண்ணினில் 639
மதிக்கும் 565

மா

மாடுஞ்சுற்றமு 573
மாதிவர் 589
மாயவாழ்க்கை 583

மாலயன் 590

மி

மின்னேரனைய 643

மு

முத்தனை 588
முத்திநெறி 650
முன்னைவினை 620

மூ

மூவருர் 625

மை

மையலாய 569

யா

யாவர்க்கும் 624

வ

வணங்கும் 574
வந்திமை 593
வம்பனாய்த் 587

வா

வாராவழி 623
வாழ்ந்தார் 631

வி


விடுமின் 609

வெ

வெந்துவிழும் 655
வெய்யவினை 617

வே

வேடுருவாகி 592
வேவ 594


பக்மவாசன்